ஹாரி பாட்டரும்

பாதாள அறை ரகசியங்களும்

ஜே. கே. ரோலிங்

தமிழில்: PSV குமாரசாமி

Tamil translation of the international bestseller
HARRY POTTER AND THE CHAMBER OF SECRETS

Scanned by CamScanner

ஹாரி பாட்டரும்

பாதாள அறை ரகசியங்களும்

ஜே. கே. ரோலிங்

தமிழில்: PSV குமாரசாமி

MANJUL

மஞ்சுள் பப்ளிஷிங் ஹவுஸ்

Scanned by CamScanner

எனக்குப் பிரச்சனைகள் இருக்கும்போதெல்லாம்
ஓடி வந்து உதவி செய்கின்ற,
இக்கட்டுகளில் இருந்து சரியான சமயங்களில்
என்னைக் காப்பாற்றுகின்ற
என் நண்பர் ஷான் பி. எஃப். ஹாரிஸுக்கு
இப்புத்தகம் சமர்ப்பணம்

Scanned by CamScanner

அத்தியாயம் ஒன்று

படுமட்டமான ஒரு பிறந்தநாள்

அன்று பிரைவிட் தெருவின் நான்காம் எண் வீட்டில் காலை உணவின்போது வெடித்துக் கிளம்பிய விவாதம் ஒன்றும் புதிதல்ல. அன்று அதிகாலையில், வெர்னன் டர்ஸ்லீயை, அவர்களது வீட்டில் வசித்து வந்த, அவரது மனைவியின் சகோதரியின் மகனான ஹாரியின் அறையிலிருந்து வந்த ஒரு பெரிய அலறல் சத்தம் தூக்கத்திலிருந்து எழுப்பியிருந்தது.

"இந்த வாரத்தில் இப்படி நடைபெறுவது இது மூன்றாவது முறை," என்று சாப்பாட்டு மேசையின் மறுபுறம் இருந்து வெர்னன் கர்ஜித்தார். "ஹாரி, உன்னால் அந்த ஆந்தையைக் கட்டுப்படுத்த முடியாவிட்டால், அது இனியும் இங்கு இருக்கக்கூடாது!"

ஹாரி மீண்டும் ஒருமுறை நிலைமையை எடுத்துரைக்க முயன்றான்.

"அந்த ஆந்தைக்குச் சலிப்பாக இருக்கிறது," என்று அவன் கூறினான். "எப்போதும் வெளியே பறந்து திரிந்துதான் அதற்குப் பழக்கம். இரவு வேளையில் மட்டுமாவது நான் அதை வெளியே பறக்கவிட நீங்கள் அனுமதித்தால் . . ."

"உனக்கு என்னைப் பார்த்தால் மடையன்போலத் தோன்றுகிறதா?" என்று வெர்னன் சீறினார். காட்டுத்தனமாக வளர்ந்திருந்த அவரது மீசையில், பொரித்த முட்டை கொஞ்சம் ஒட்டிக் கொண்டிருந்தது. "அந்த ஆந்தையை வெளியே விட்டால் என்ன நடக்கும் என்று எனக்கு நன்றாகவே தெரியும்."

பிறகு அவர் திரும்பித் தன் மனைவி பெட்டூனியாவை அர்த்தத்துடன் பார்த்தார்.

ஹாரி அதற்கு பதிலளிக்க முனைந்தான். ஆனால் அப்போது வெர்னனின் மகன் டட்லீ விட்ட நீண்ட, சத்தமான ஏப்பத்தின் ஒலியில் ஹாரி கூறிய வார்த்தைகள் யாருடைய காதுகளையும் எட்டவில்லை.

"எனக்கு இன்னும் கொஞ்சம் இறைச்சி வேண்டும்," என்று டட்லீ கூறினான்.

"கண்ணா, உள்ளே அடுப்படியில் வேண்டிய மட்டும் இருக்கிறது," என்று கூறிய பெரியம்மா பெட்டூனியா, பளபளத்தத் தன் கண்களை,

Scanned by CamScanner

நன்றாகத் தின்று கொழுத்துப் போயிருந்த தன் மகனை நோக்கித் திருப்பினார். "சந்தர்ப்பம் கிடைக்கும்போது உனக்கு நாங்கள் நன்றாகச் சாப்பாடு போட்டாக வேண்டும் . . . உன் பள்ளி விடுதி உணவை நினைத்தாலே எனக்கு ஏதோ செய்கிறது. . ."

"பெட்டூனியா, உனக்கு எல்லாம் தெரிந்த மாதிரி எதையாவது உளராதே. டட்லீ படித்துக் கொண்டிருக்கும் அதே ஸ்மெல்டிங்ஸ் பள்ளியில் நான் படித்தபோது ஒருநாள்கூட நான் பட்டினி கிடந்ததில்லை," என்று வெர்னன் திருப்தியுடன் கூறினார். "டட்லீ, அங்கு உனக்குத் தேவையான அளவுக்குச் சாப்பாடு கிடைக்கிறது, இல்லையா?"

டட்லீ படுகுண்டாக இருந்தான். அவன் உட்கார்ந்திருந்த நாற்காலியின் இருபுறமும் அவனது சதை பிதுங்கி வழிந்து கொண்டிருந்தது. அவன் பல்லிளித்துக் கொண்டே ஹாரியை நோக்கித் திரும்பினான்.

"அந்த இறைச்சிப் பாத்திரத்தை எடுத்து எனக்குத் தா."

"உனக்கு அந்த மாயாஜால வார்த்தை மறந்துவிட்டது," என்று ஹாரி எரிச்சலுடன் கூறினான்.

மிகச் சாதாரணமான அந்த வாக்கியம் அக்குடும்பத்தினரிடம் ஏற்படுத்திய தாக்கம் நம்ப முடியாத அளவுக்கு இருந்தது. டட்லீ மூச்சு வாங்க மறந்து தடாலென்று தன் நாற்காலியில் இருந்து கீழே விழுந்தான். அந்த அறையே அதிர்ந்தது. பெரியம்மா பெட்டூனியா 'வீல்' என்று கத்திவிட்டுத் தன் கைகளால் தன் வாயைப் பொத்திக் கொண்டார். வெர்னன் தன் நெற்றி நரம்புகள் புடைக்கத் துள்ளி எழுந்தார்.

"'தயவு செய்து' என்ற வார்த்தையை உபயோகி என்றுதான் நான் கூற வந்தேன்," என்று ஹாரி அவசர அவசரமாகக் கூறினான். "நான் ஒன்றும் . . ."

"நான் உன்னிடம் என்ன கூறியிருந்தேன்?" என்று வெர்னன் உறுமினார். அவரது வாயிலிருந்து மேசை முழுக்க எச்சில் தெரித்தது. **"'மாயாஜாலம்' என்ற வார்த்தையை எங்கள் வீட்டில் பயன்படுத்தக்கூடாது என்று நான் கூறியிருந்தது உனக்கு மறந்து போய்விட்டதா?"**

"இல்லை. நான் வந்து . . ."

"இது குறித்து நான் ஏற்கனவே உன்னை எச்சரித்திருந்தேன், இல்லையா? நீ ஒரு விசித்திரப் பிறவியாக இருப்பதை இந்த வீட்டில் காட்டிக் கொள்ள முனைந்தால் நான் அதை ஒருக்காலும் பொறுத்துக் கொள்ள மாட்டேன்!"

முகம் சிவந்து போய் நின்று கொண்டிருந்த தன் பெரியப்பாவையும், முகம் வெளுத்துப் போய் உட்கார்ந்திருந்த தன் பெரியம்மாவையும் ஹாரி உற்றுப் பார்த்தான். பெரியம்மா பெட்டூனியா, கீழே விழுந்து கிடந்த டட்லீ எழுந்து உட்கார்வதற்கு அவனுக்கு உதவிக் கொண்டிருந்தார்.

Scanned by CamScanner

"சரி, சரி. இனிமேல் நான் அந்த வார்த்தையைப் பயன்படுத்த மாட்டேன்," என்று ஹாரி கூறினான்.

பெரியப்பா வெர்னன் மீண்டும் தன் இருக்கையில் உட்கார்ந்தார். பயங்கரமாக ஓடிக் களைத்துப் போயிருக்கும் ஒரு காண்டாமிருகத்திற்கு மூச்சிறைப்பதுபோல அவருக்கு மூச்சு வாங்கியது. அவர் ஹாரியைத் தன் ஓரக் கண்களால் உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

ஹாரி தன் கோடை விடுமுறைக்காக டர்ஸ்லீயின் வீட்டிற்குத் திரும்பி வந்ததிலிருந்தே, அவன் எந்த நேரத்திலும் வெடித்துவிடக்கூடிய ஒரு குண்டு என்பதுபோல அவர் அவனை நடத்தி வந்தார். ஏனெனில் ஹாரி சாதாரணமான ஒரு சிறுவன் அல்ல.

ஹாரி பாட்டர் ஒரு மந்திரவாதி. ஹாக்வார்ட்ஸ் மந்திர தந்திர மாயாஜாலப் பள்ளியில் முதல் வருடப் படிப்பை முடித்துவிட்டுக் கோடை விடுமுறைக்காக வீட்டிற்கு வந்திருந்த ஒரு மந்திரவாதிச் சிறுவன். அவன் தங்களிடம் திரும்பி வந்தது குறித்து டர்ஸ்லீ குடும்பத்தினர் மகிழ்ச்சியற்று இருந்தனர் என்றாலும், ஹாரி அது குறித்து அடைந்திருந்த மனவேதனையை அதோடு ஒப்பிடவே முடியாது.

ஹாக்வார்ட்ஸ் பள்ளியை விட்டுவிட்டு வந்த பிரிவுத் துயர் அவனை வாட்டியதில் அவனுக்கு வயிற்று வலியே வந்துவிட்டது. ஹாக்வார்ட்ஸ் பள்ளிக் கோட்டை, அதன் ரகசியப் பாதைகள், அங்கிருந்த ஆவிகள், அங்கு கற்றுக் கொடுக்கப்பட்டப் பாடங்கள் (மாயத்திரவ ஆசிரியர் ஸ்னேப்பை இங்கு கணக்கில் சேர்த்துக் கொள்ள முடியாது), ஆந்தைகள் கொண்டு வந்த கடிதங்கள், பேரரங்கில் நடைபெற்ற விருந்துகள், கோட்டைக் கோபுரத்தில் இருந்த பொதுப் படுக்கையறையில் இருந்த தனது படுக்கை, மாணவர்கள் செல்லத் தடை செய்யபட்டிருந்த காட்டின் ஓரம் வசித்து வந்த கோட்டைப் பாதுகாவலர் ஹாக்ரிட், எல்லாவற்றுக்கும் மேலாக, மந்திர தந்திர உலகில் மிகப் பிரபலமாக விளங்கிய குவிடிச் விளையாட்டு (உயரமான ஆறு கோல்போஸ்ட்டுகளுடனும் நான்கு பறக்கும் பந்துகளுடனும் மந்திரத் துடங்களில் பறந்தபடி விளையாடப்படுகின்ற, பதினான்கு வீரர்கள் அடங்கிய ஒரு விளையாட்டு) ஆகியவற்றை மறக்க முடியாமல் ஹாரி தவித்தான்.

வீட்டிற்குள் ஹாரி அடியெடுத்து வைத்த உடனேயே, ஹாரியின் மந்திர தந்திரப் புத்தகங்கள், அவனது மந்திரக்கோல், அங்கிகள், கொப்பரை, அதிநவீன மந்திரத் துடப்பமான நிம்பஸ் 2000 ஆகிய அனைத்தையும், அவனது பெரியப்பா வெர்னன், மாடிப்படிக்குக் கீழே இருந்த சிறிய அறைக்குள் போட்டுப் பூட்டி வைத்துவிட்டார். கோடை விடுமுறை முழுவதும் குவிடிச் விளையாட்டை விளையாடிப் பயிற்சி செய்யாததால் ஹாரி தனது கிரிஃபின்டார் அணியின் குவிடிச் குழுவில் சேர்க்கப்படாமல் விட்டுவிடப்பட்டால், டர்ஸ்லீ

Scanned by CamScanner

குடும்பத்தினருக்கு அதைப் பற்றி என்ன அக்கறை? வீட்டுப் பாடங்கள் எதையும் செய்து முடிக்காமல் அவன் ஹாக்வார்ட்ஸுக்குத் திரும்பிச் சென்றால், பிரச்சனை அவனுக்குத்தானே? மந்திரவாதிகள் டர்ஸ்லீ போன்றோரை மகுள்கள் (தங்களது உடலில் ஒரு துளிகூட மந்திரஜால ரத்தம் இல்லாதவர்கள்) என்று அழைத்தனர். டர்ஸ்லீயைப் போன்ற மகுள்கள் தங்கள் வீட்டில் ஒரு மந்திரவாதியை வைத்திருப்பதை மிகப் பெரிய அவமானமாகக் கருதினர். ஹாரியின் ஆந்தையான ஹெட்விக், மந்திர தந்திர உலகில் இருந்த மற்ற எவரொருவருக்கும் தகவல்களை எடுத்துச் செல்லக்கூடாது என்பதற்காக, வெர்னன் அதை அதன் கூண்டிற்குள் வைத்துப் பூட்டிவிட்டிருந்தார்.

ஹாரி அக்குடும்பத்தில் இருந்த மற்ற எவரொருவரையும்போல இருக்கவில்லை. பெரியப்பா வெர்னன் பூதாகாரமாக இருந்தார். அவருக்குக் கழுத்து இருந்ததே வெளியே தெரியவில்லை. அவர் கருப்பான, மிகப் பெரிய மீசை ஒன்றை வைத்திருந்தார். குதிரை மூஞ்சியுடன் இருந்த பெரியம்மா பெட்டூனியா எலும்பும் தோலுமாக இருந்தார். பன்றியைப்போல நன்றாகக் கொழுத்திருந்த அவர்களது மகன் டட்லீ, இளஞ்சிவப்பு நிறத்தில் தங்க நிறத் தலைமுடியுடன் இருந்தான். ஆனால் ஹாரியோ, சிறிய உருவத்தைக் கொண்டிருந்ததோடு மெலிந்தும் காணப்பட்டான். அவனது கண்கள் பச்சை நிறத்தில் ஜொலித்துக் கொண்டிருந்தன. அவனது கருநிறத் தலைமுடி எப்போதும் வணங்காமுடியாகவே இருந்து வந்தது. அவன் வட்ட வடிவ மூக்குக்கண்ணாடி ஒன்றை அணிந்திருந்தான். அவனது நெற்றியில் மின்னல் கீற்று வடிவில் ஒரு மெல்லிய தழும்பு இருந்தது.

அந்தத் தழும்புதான் அவனை வித்தியாசமானவனாகக் காட்டியது. மந்திரவாதிகளின் உலகில்கூட அத்தழும்பு அவனை மற்றவர்களிடம் இருந்து வெகுவாகப் பிரித்துக் காட்டியது. ஹாரியின் மர்மமான கடந்தகாலத்தின் ஒரே ஓர் அடையாளமாக அத்தழும்பு விளங்கியது. பதினோரு வருடங்களுக்கு முன்பு டர்ஸ்லீ குடும்பத்தினரின் வீட்டு வாசலில் அவன் விடப்பட்டதற்கும் அதுதான் காரணமாக இருந்தது.

ஹாரிக்கு ஒரு வயதாக இருந்தபோது, தீய மந்திரவாதிகளில் தலைசிறந்தவனாகக் கருதப்பட்ட வோல்டமார்ட்டின் மந்திரத் தாக்குதலில் இருந்து எப்படியோ அவன் தப்பியிருந்தான். இன்றுகூட வோல்டமார்ட்டின் பெயரைச் சொல்வதற்குப் பல மந்திரவாதிகளும் மந்திரவாதினிகளும் பயப்படுகின்றனர். வோல்டமார்ட்டின் தாக்குதலில் ஹாரியின் பெற்றோர் இறந்துவிட்டிருந்தனர். ஆனால் ஹாரி, அந்த மின்னல் கீற்று வடிவத் தழும்புடன் தப்பியிருந்தான் – ஏன் என்று யாருக்கும் தெரியவில்லை . . . ஹாரியைக் கொல்ல முடியாமல் போன அதே கணத்தில், வோல்டமார்ட்டின் ஒட்டுமொத்த சக்தியும் வோர்டமார்ட்டைவிட்டு மாயமாய் மறைந்துவிட்டிருந்தது.

Scanned by CamScanner

அதனால், ஹாரியை, இறந்து போன அவனது தாயாரின் சகோதரியான பெரியம்மா பெட்டூனியாவும் அவரது கணவரான வெர்னனும் வளர்த்து வந்தனர். தன் நெற்றியில் இருந்த தழும்பு தனது பெற்றோரைப் பலி வாங்கிய கார் விபத்தில் தனக்கு ஏற்பட்டது என்று டர்ஸ்லீ தம்பதியினர் கூறியதை நம்பிக் கொண்டும், தன்னை அறியாமலேயே தன்னைச் சுற்றிப் பல வினோதமான விஷயங்களைத் தான் ஏன் நிகழ்த்திக் கொண்டிருந்தோம் என்பதைப் புரிந்து கொள்ள முடியாமலும், ஹாரி பாட்டர், டர்ஸ்லீ குடும்பத்தினருடன் பத்து வருடங்களைக் கழித்து வந்திருந்தான்.

பிறகு, சரியாக ஒரு வருடத்திற்கு முன்பு, ஹாக்வார்ட்ஸ் பள்ளி, தங்கள் பள்ளியில் பயில ஹாரி தேர்ந்தெடுக்கப்பட்டிருந்ததாகத் தெரிவித்து அழைப்புக் கடிதம் ஒற்றை அனுப்பியபோது, மொத்தக் கதையும் வெளியே வந்தது. ஹாரி அந்த மந்திர தந்திர மாயாஜாலப் பள்ளிக்குப் படிக்கச் சென்றான். அங்கு அவனைப்போலவே அவனது தழும்பும் பிரபலமாக விளங்கியது . . . ஆனால் கோடை விடுமுறைக்காகப் பள்ளி மூடப்பட்டதால், ஹாரி இப்போது மீண்டும் டர்ஸ்லீ குடும்பத்தாருடன் வசிப்பதற்காக வந்திருந்தான். அவர்கள் அவனைச் சாக்கடையில் புரண்டு வந்திருந்த ஒரு நாயைப்போல நடத்துவதும் தொடர்ந்தது.

இன்று ஹாரிக்குப் பன்னிரண்டாவது பிறந்தநாள் என்பதுகூட டர்ஸ்லீ குடும்பத்தினருக்கு நினவில் இருக்கவில்லை. ஹாரியும் பெரிதாக எதையும் அவர்களிடமிருந்து எதிர்பார்த்திருக்கவில்லை. அவர்கள் அவனது பிறந்தநாளின்போது சொல்லிக் கொள்ளும்படியான எந்தவொரு பரிசையும் ஒருபோதும் கொடுத்திருக்கவில்லை. கேக் வெட்டுவதைப் பற்றி அவனால் நினைத்துக்கூட பார்க்க முடியாது. ஆனால் அவர்கள் அவனது பிறந்தாளை ஒட்டுமொத்தமாக மறந்துவிட்டதைப் பற்றி என்ன சொல்ல?

அந்தக் கணத்தில் பெரியப்பா வெர்னன் தன் தொண்டையைச் செருமிக் கொண்டதன் மூலம் தனக்குத் தானே முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டு, "நாம் எல்லோரும் ஏற்கனவே அறிந்துள்ளதைப்போல, இன்றைய தினம் ஒரு முக்கியமான நாள்," என்று கூறினார்.

ஹாரி நிமிர்ந்து பார்த்தான். அவனுக்குத் தான் கேட்டதை நம்பத் துணிவு பிறக்கவில்லை.

"என் வாழ்நாளிலேயே நான் நடத்தப் போகும் மிகப் பெரிய வியாபாரப் பரிவர்த்தனை இன்றுதான் நடக்கப் போகிறது," என்று வெர்னன் கூறினார்.

ஹாரி ஏமாற்றத்துடன் மீண்டும் தன் சாப்பாட்டில் கவனம் செலுத்தினான். இதைத் தான் எதிர்பார்த்திருக்க வேண்டும் என்று அவன் நினைத்துக் கொண்டான். உருப்படாத இரவு விருந்தைப்

Scanned by CamScanner

பற்றித்தான் பெரியப்பா வெர்னன் பேசிக் கொண்டிருந்தார். கடந்த இரண்டு வாரங்களாக இதைத் தவிர வேறு எதையும் அவர் பேசியிருக்கவில்லை. கட்டிடத் தொழிலில் இருந்த ஒரு பணக்காரரும் அவரது மனைவியும் இன்று இரவு விருந்திற்கு வரவிருந்தனர். பெரியப்பா வெர்னன் அவர்களிடமிருந்து பெரிய தொகைக்கான ஆர்டர் ஒன்றைப் பெற்றுவிடலாம் என்று கனவு கண்டு கொண்டிருந்தார் (பெரியப்பா வெர்னனின் நிறுவனம் துளையிடும் கருவிகளை உற்பத்தி செய்து வந்தது).

"இன்றிரவு நாம் வரிசைக்கிரமமாகச் செய்ய வேண்டியவற்றை மீண்டும் ஒருமுறை சரி பார்க்கலாம் என்று நான் நினைக்கிறேன்," என்று வெர்னன் கூறினார். "நாம் எல்லோரும் இரவு எட்டு மணிக்கு அவரவர் இடத்தில் தயாராக இருக்க வேண்டும். பெட்டூனியா, நீ எங்கே இருப்பாய்?"

"வருபவர்களை இங்கிதமாக வரவேற்பதற்காக நான் வரவேற்பறையில் காத்திருப்பேன்," என்று பெட்டூனியா உடனடியாகக் கூறினார்.

"சபாஷ்! டட்லீ, நீ?"

"நான் கதவைத் திறப்பதற்காக அதனருகே காத்திருப்பேன்," என்று கூறிய டட்லீ, ஓர் அசட்டுச் சிரிப்பைத் தன் முகத்தில் தவழவிட்டவாறே தொடர்ந்தான். "நான் அவர்களிடம், 'மேசன் தம்பதியரே, நான் உங்களுடைய கோட்டுகளை எடுத்துக் கொள்ளலாமா?' என்று கேட்பேன்."

பெட்டூனியா தன் குரலில் பேரானந்தம் கூத்தாட, "அவர்கள் டட்லீயைக் கொண்டாடப் போகிறார்கள்," என்று உற்சாகமாகக் கத்தினார்.

"பிரமாதம், டட்லீ," என்று கூறிய வெர்னன், ஹாரியை நோக்கித் தன் தாக்குதலைத் துவக்கினார். "ஹாரி, நீ?"

"நான் என் படுக்கையறையில் எந்தவிதமான சத்தமும் ஏற்படுத்தாமல், நான் இந்த வீட்டிலேயே இல்லாததுபோல பாவித்துக் கொண்டு அமைதியாக இருப்பேன்," என்று ஹாரி சுரத்தே இல்லாமல் கூறினான்.

"மிகச் சரியாகச் சொன்னாய், ஹாரி," என்று வெர்னன் வஞ்சகமாகக் கூறினார். பிறகு அவர் பெட்டூனியாவை நோக்கித் திரும்பி, "நான் அவர்களை வாசலில் வரவேற்று அழைத்து வந்து வரவேற்பறைக்குள் நுழைந்தவுடன் உன்னை அவர்களுக்கு அறிமுகப்படுத்துவேன். பிறகு அவர்களுக்கு மது வகைகளை ஊற்றிக் கொடுப்பேன். எட்டு மணி பதினைந்து நிமிடங்களுக்கு . . ."

"சாப்பாடு தயாராகிவிட்டதாக நான் கூறுவேன்," என்று பெட்டூனியா கூறினார்.

"டட்லீ, நீ என்ன சொல்வாய்?"

"நான் அவர்களிடம், 'திருமதி மேசன் அவர்களே, நான் உங்களைச் சாப்பாட்டு அறைக்கு அழைத்துச் செல்லலாமா?' என்று

Scanned by CamScanner

கேட்பேன்," என்று கூறிய டட்லீ, அப்போது அங்கு ஒரு பெண்மணி இருந்ததாகக் கற்பனை செய்து கொண்டு தன் பருத்தக் கரங்களை நீட்டினான்.

"என் செல்லமே, என் கண்ணே பட்டுவிடும்போல இருக்கிறதே!" என்று பெட்டூனியா புளகாங்கிதத்துடன் கூறினார்.

ஹாரியை நோக்கித் திரும்பிய வெர்னன், விஷமத்தனமாக அவனிடம், "ஹாரி, நீ?" என்று கேட்டார்.

"நான் என் படுக்கையறையில் எந்தவிதமான சத்தமும் ஏற்படுத்தாமல், நான் இந்த வீட்டிலேயே இல்லாததுபோல பாவித்துக் கொண்டு அமைதியாக இருப்பேன்," என்று ஹாரி மீண்டும் ஒப்பித்தான்.

"பிரமாதம்! நாம் இப்பொழுது விருந்தின்போது அவர்களைப் புகழ்ந்து ஒருசில வார்த்தைகளை எப்படிக் கூறலாம் என்று பார்க்கலாம். பெட்டூனியா, உனக்கு ஏதாவது தோன்றுகிறதா?"

"திரு மேசன் அவர்களே, நீங்கள் அபாரமாக கோல்ஃப் விளையாடுவீர்கள் என்று வெர்னன் கூறினார் . . . திருமதி மேசன் அவர்களே, உங்கள் உடையலங்காரம் பிரமாதமாக இருக்கிறது. நீங்கள் உங்கள் ஆடைகளை எங்கு வாங்குகிறீர்கள்? . . ."

"சபாஷ்! டட்லீ, நீ?"

"இப்படிக் கூறினால் எப்படி இருக்கும்? 'எங்கள் பள்ளியில் எங்களுக்குப் பிடித்தக் கதாநாயகர்களைப் பற்றி எழுத வேண்டும் என்று கூறியிருந்தார்கள். திரு மேசன் அவர்களே, நான் உங்களைப் பற்றி எழுதினேன்.'"

பெட்டூனியாவிற்குப் பெருமை தாங்க முடியவில்லை. அவர் கண்ணீர் மல்கத் தன் மகனைக் கட்டியணைத்துக் கொண்டார். ஹாரிக்கு அது கொஞ்சம் அதிகப்படியாக இருந்ததாகத் தோன்றியது. தனக்குள் பொங்கி எழுந்த அடக்க முடியாத சிரிப்பை அவர்கள் பார்த்துவிடக்கூடாது என்பதற்காக ஹாரி மேசைக்குக் கீழே குனிந்து கொண்டான்.

"ஹாரி, நீ?"

மேசையிலிருந்து தலையைத் தூக்கிய ஹாரி தன் சிரிப்பை அடக்கிக் கொண்டு சாதாரணமாகத் தோற்றமளிக்கப் பிரயத்தனப்பட்டான்.

"நான் என் படுக்கையறையில் எந்தவிதமான சத்தமும் ஏற்படுத்தாமல், நான் இந்த வீட்டிலேயே இல்லாததுபோல பாவித்துக் கொண்டு அமைதியாக இருப்பேன்," என்ற பழைய பல்லவியை ஹாரி மீண்டும் பாடினான்.

"சொல்வதுபோல நடந்து கொள்," என்று வெர்னன் கறாராகக் கூறினார். "ஹாரி, மேசன் தம்பதியினருக்கு உன்னைப் பற்றி எதுவும் தெரியாது. அது அப்படியே நீடிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். பெட்டூனியா, அவர்கள் சாப்பிட்டு முடித்தவுடன்,

Scanned by CamScanner

காபி குடிப்பதற்காகத் திருமதி மேசனை மீண்டும் வரவேற்பறைக்கு அழைத்துச் செல். நான் என் பேச்சை மீண்டும் துளையிடும் கருவிகள் பக்கமாகத் திருப்ப முயல்வேன். நம் பக்கம் கொஞ்சம் அதிர்ஷ்டம் இருந்தால், இரவு பத்து மணித் தொலைக்காட்சிச் செய்திக்கு முன்பாகவே, நான் விரும்புகிற ஒப்பந்தம் கையெழுத்தாகிவிட்டிருக்கும். நாளை இதே நேரம் மஜோர்க்காவில் விடுமுறை இல்லம் ஒன்றை வாங்கும் முயற்சியில் நாம் இறங்கலாம்."

இது குறித்து ஹாரி பெரிதாகப் பரவசம் அடையவில்லை. ஏனெனில் இங்கு பிரைவிட் தெரு வீட்டில் அவர்கள் தன்னை நடத்துவதைவிட மேலாக ஒன்றும் மஜோர்க்காவில் அவர்கள் தன்னை நடத்திவிடப் போவதில்லை என்று அவன் நினைத்தான்.

"சரி, நான் எனக்கும் டட்லீக்கும் இரவு விருந்திற்காக அணியும் கோட்டுகளை வாங்கி வருவதற்காக நகரத்திற்குப் போகப் போகிறேன்," என்று கூறிய வெர்னன் ஹாரியிடம் உறுமினார். "ஏய், உன் பெரியம்மா இப்போது வீட்டைச் சுத்தம் செய்யும்போது அவரைத் தொந்தரவு செய்யாதே!"

வீட்டின் பின்வாசல் வழியாக ஹாரி வெளியேறினான். அன்று வானிலை அற்புதமாக இருந்தது. அவன் நேர்த்தியாக வெட்டப்பட்டிருந்த புற்களின் ஊடாகச் சென்று, அங்கிருந்த ஒரு பெஞ்சில் சரிந்தான். "ஹாரி, உனக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்!" என்று தனக்குத் தானே கூறிக் கொண்டான்.

பிறந்தநாள் வாழ்த்து அட்டைகள் இல்லை, பிறந்தநாள் பரிசுகள் இல்லை. எல்லாவற்றிற்கும் மேலாக, இன்று மாலை தான் இல்லாததுபோல பாவித்துக் கொள்ளவும் வேண்டும். அவன் புதர்ப் பக்கம் பரிதாபமாகப் பார்த்தான். அவன் ஒருபோதும் இவ்வளவு தனிமையாக உணர்ந்ததில்லை. ஹாக்வார்ட்ஸில் சேர்ந்த பிறகு அவனுக்குப் பழக்கமான அவனது அருமை நண்பர்கள் ரானையும் ஹெர்மயனியையும் அவனுக்கு அப்போது வெகுவாகத் தேடியது. ஆனால் அவர்கள் இருவருக்கும் தன்னைத் தேடியதுபோல அவனுக்குத் தோன்றவில்லை. கோடை விடுமுறையின்போது தன் வீட்டிற்கு வந்து தன்னுடன் தங்குமாறு ஹாரியை அழைக்கப் போவதாக ரான் அவனிடம் கூறியிருந்த போதிலும், இக்கோடை விடுமுறை முழுவதும் ரானிடமிருந்து ஹாரிக்கு ஒரு கடிதம்கூட வந்திருக்கவில்லை. ஹெர்மயனியிடமிருந்தும் ஹாரிக்கு எந்தக் கடிதமும் வந்திருக்கவில்லை.

ஹெட்விக்கின் கூண்டைத் தன் மந்திர சக்தியால் திறந்து ரானுக்கும் ஹெர்மயனிக்கும் அதன் மூலம் கடிதம் அனுப்பலாம் என்று ஹாரி எண்ணற்ற முறை யோசித்துக் கிட்டத்தட்ட அதைச் செயல்படுத்த முனைந்தபோதும், அது, தேவையில்லாமல் ஆபத்தை விலை கொடுத்து வாங்குவதற்கு ஒப்பானது என்று கருதி அவன் அந்த எண்ணத்தைக் கைவிட்டுவிட்டான். பள்ளியில் படித்துக்

Scanned by CamScanner

கொண்டிருந்த மந்திரவாதிகளுக்குத் தங்கள் பள்ளிக்கு வெளியே மந்திர சக்தியைப் பயன்படுத்த அனுமதி கிடையாது. இக்கட்டுப்பாடு குறித்து டர்ஸ்லீ தம்பதியினருக்கு எதுவும் தெரியாது. தான் தனது மந்திர சக்தியை உபயோகித்துத் தங்களைக் குப்பைமேட்டு வண்டுகளாக மாற்றிவிடக்கூடும் என்று அவர்கள் பயந்து போயிருந்த காரணத்தால்தான், தனது பொருட்களோடு சேர்த்துத் தன்னையும் அவர்கள் அந்த மாடிப்படிக்குக் கீழே இருந்த சிற்றறைக்குள் அடைத்து வைக்கவில்லை என்பதை ஹாரி அறிந்திருந்தான். ஒருசில வாரங்களுக்கு முன்புவரை, ஹாரி, டட்லீயை நோக்கி அர்த்தமற்ற வார்த்தைகளை உச்சரித்து அவன் தலைதெறிக்க ஓட்டம் எடுத்ததைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தான். ஆனால் ரானிடம் இருந்தும் ஹெர்மயனியிடம் இருந்தும் தகவல்கள் ஏதும் வராததால் மாயாஜால உலகில் இருந்து தான் முழுவதுமாகக் கத்தரித்துவிடப்பட்டு இருந்ததுபோல அவன் உணர்ந்தான். அதனால் டட்லீயைச் சீண்டும் செயல்களும் ஹாரிக்கு சுவாரசியம் ஏற்படுத்தத் தவறின. ஆனால் இப்பொழுது ரானும் ஹெர்மயனியும் அவனது பிறந்தநாளையே மறந்து போயிருந்தனர்.

ஹாக்வார்ட்ஸில் இருந்து இப்போது அவனுக்கு ஏதேனும் ஒரு தகவல் கிடைக்கக்கூடும் என்றால் அவன் அதற்கு எந்த விலை வேண்டுமானாலும் கொடுக்கத் துணிவான். அல்லது ஏதாவது ஒரு மந்திரவாதியிடம் இருந்தோ அல்லது மந்திரவாதினியிடம் இருந்தோ ஒரு தகவல் வந்தால்கூட அவனுக்கு அது போதுமானதாக இருக்கும். தனக்கு நடந்தவை எல்லாம் வெறும் கனவு அல்ல என்பதை நிரூபிக்கும் என்றால், தனது பரம எதிரியான டிராகோ மால்ஃபாயைச் சந்தித்தால்கூட ஹாரி மகிழ்ச்சியடைவான்.

அதற்காக அவன் ஹாக்வார்ட்ஸில் கழித்த மொத்த வருடமும் வேடிக்கையும் விளையாட்டுமாக இருந்தது என்று அர்த்தமாகிவிடாது. பள்ளியின் கடைசிப் பருவத்தின்போது அவன் சாட்சாத் வோல்டமார்ட்டையே நேருக்கு நேர் சந்திக்க நேர்ந்திருந்தது. வோல்டமார்ட் தன் சக்திகள் அனைத்தையும் இழந்து பரிதாபமான நிலையில் இருந்தபோதிலும், இன்னும் பயங்கரமானவனாகவே தோற்றமளித்தான்; அவனது குள்ளநரித்தனம் அப்படியே இருந்தது; இழந்த சக்தியையும் அதிகாரத்தையும் மீண்டும் கைப்பற்ற வேண்டும் என்ற வெறி அவனிடமிருந்து மறைந்திருக்கவில்லை. ஹாரி இரண்டாவது முறையாக வோல்டமார்ட்டின் பிடியிலிருந்து மயிரிழையில் உயிர் தப்பியிருந்தான். அது நடந்து பல வாரங்கள் கழித்து இப்போதுகூட, வோல்டமார்ட்டின் வெளிறிய முகமும், அகன்ற, கோபம் கொப்பளித்தக் கண்களும் தத்ரூபமாக நினைவுக்கு வர, அவன் இப்போது எங்கிருப்பானோ என்று பயந்தபடி, ஹாரி அடிக்கடி நடு இரவில் வியர்வையில் தொப்பலாக நனைந்து கண்விழித்துக் கொண்டிருந்தான்.

Scanned by CamScanner

ஹாரி அந்த பெஞ்சிலிருந்து சடாரென்று நிமிர்ந்து உட்கார்ந்தான். அவன் குருட்டாம்போக்காகச் சற்றுத் தள்ளி இருந்த புதர்களை வெறித்துக் கொண்டிருந்தான். ஆனால் அப்புதரும் பதிலுக்கு அவனை வெறித்துப் பார்த்தது. அதன் இலைகளில் இரண்டு மிகப் பெரிய பச்சை நிறக் கண்கள் தோன்றின.

ஹாரி அந்த பெஞ்சிலிருந்து கீழே குதித்த அக்கணத்தில், ஏளனம் பொங்கி வழிந்த ஒரு குரல் புல்தரையின் மறுபக்கத்தில் இருந்து வந்தது.

அவனை நோக்கி வந்து கொண்டிருந்த டட்லீ அவனிடம், "இன்று என்ன நாள் என்று எனக்குத் தெரியும்," என்று கூறினான்.

புதர்களுக்கிடையே காணப்பட்ட அந்தப் பெரிய கண்கள் ஒருமுறை இமைத்துவிட்டு மறைந்தன.

ஹாரி அக்கண்கள் இருந்த இடத்தைவிட்டுத் தன் பார்வையை அகற்றாமல், "என்ன கூறுகிறாய்?" என்று டட்லீயிடம் கேட்டான்.

ஹாரியை நோக்கி நேராக வந்த டட்லீ, "இன்று என்ன நாள் என்று எனக்குத் தெரியும்," என்று மறுபடியும் கூறினான்.

"சபாஷ்! அப்படியானால் வாரத்தின் நாட்கள் எவையெவை என்பதை ஒருவழியாக நீ கற்றுக் கொண்டுவிட்டாய் என்று நினைக்கிறேன்," என்று ஹாரி கூறினான்.

"இன்று உன் **பிறந்தநாள்**," என்று இகழ்ச்சித் ததும்ப டட்லீ கூறினான். "உனக்கு ஏன் வாழ்த்து அட்டைகள் ஏதும் வரவில்லை? அந்த விசித்திரமான இடத்தில் உனக்கு ஒரு நண்பன்கூடக் கிடைக்கவில்லையா?"

"நீ என் பள்ளிக்கூடத்தைப் பற்றிப் பேசுவது உன் பெற்றோர் காதுகளில் விழாமல் இருந்தால் உனக்கு நல்லது," என்று ஹாரி அலட்சியமாகக் கூறினான்.

தனது பருத்த உடலிலிருந்து கீழே இறங்கிக் கொண்டிருந்த தனது காற்சட்டையை டட்லீ தூக்கிவிட்டுக் கொண்டான்.

பிறகு, "நீ ஏன் அந்தப் புதர்ச்செடியையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறாய்?" என்று சந்தேகமாகக் கேட்டான்.

"அதை எரியச் செய்வதற்கு எது சரியான மந்திரம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்," என்று ஹாரி கூறினான்.

தன் கொழுத்த மூஞ்சியில் கிலி சூழ்ந்து கொள்ள, டட்லீ தட்டுத்தடுமாறி உடனடியாக அங்கிருந்து பின்வாங்கத் துவங்கினான்.

"அது உன்னால் முடியாது. இந்த வீட்டில் இருக்கும்வரை மாயாஜாலம் எதையும் நீ செய்யக்கூடாது என்று அப்பா கூறியிருக்கிறார். அப்படி ஏதாவது நடந்தால், அவர் உன்னை இந்த வீட்டைவிட்டுத் துரத்திவிடுவார். உனக்கு வேறு போக்கிடம் எதுவும் கிடையாது. உன்னை உடன் வைத்துக் கொள்ள உனக்கு நண்பர்களும் கிடையாது!"

"ஜிக்கரி போக்கரி!" என்று கடுமையான தொனியில் ஹாரி கூறினான். "ஹோகஸ் போகஸ் . . . ஸ்குயிக்லி விக்லி . . ."

Scanned by CamScanner

"அம்மா!" என்று அலறிக் கொண்டே டட்லீ தன் வீட்டை நோக்கி ஓடினான். போகிற வழியில் கீழே விழுந்து தட்டுத்தடுமாறி எழுந்து, "அம்மா, அவன் என்ன பண்ணிக் கொண்டிருக்கிறான் என்று பாரேன்!" என்று கூச்சல் போட்டான்.

அந்தக் கணநேர வேடிக்கைக்கு ஹாரி ஒரு பெரிய விலையைக் கொடுக்க வேண்டியதாயிற்று. டட்லீயோ அல்லது அந்தப் புதரோ எவ்வித பாதிப்பும் அடைந்திருக்கவில்லை என்பதால், ஹாரி எந்தவித மாயாஜாலத்தையும் பயன்படுத்தவில்லை என்பதைப் பெட்டூனியா அறிந்து கொண்டார். ஆனாலும், சோப்பு நுரையில் குளித்துக் கொண்டிருந்த வாணலிச் சட்டியை அவர் அவனை நோக்கி வீசியபோது ஹாரி தன் தலையைக் குனிந்து கொள்ள வேண்டியிருந்தது. பிறகு அவர் அவனுக்கு நிறைய வீட்டு வேலைகளைக் கொடுத்தார். அதைச் செய்து முடிக்கும்வரை அவனுக்குச் சாப்பாடு கிடையாது என்றும் அவர் அவனிடம் கூறினார்.

டட்லீ ஹாரியைக் கண்காணித்துக் கொண்டும் சோம்பலாகத் திரிந்து கொண்டும் ஐஸ்கிரீமைத் தின்று கொண்டும் இருந்தான். ஹாரி சன்னல்களைத் துடைத்தான், காரைக் கழுவினான், புல்தரையைச் சீராக்கினான், பூந்தோட்டத்தில் இருந்த பூச்செடிகளை நேர்த்தியாக வெட்டினான், ரோஜாச் செடிகளின் தேவையற்றக் கிளைகளை வெட்டி அச்செடிகளுக்கு நீர் வார்த்தான், தோட்டத்தில் இருந்த பெஞ்சிற்கு மீண்டும் வண்ணம் தீட்டினான். உச்சி வெயில் அவனை வாட்டியெடுத்தது. சுள்ளென்று அடித்த வெயிலில் அவனது கழுத்து எரிந்தது. டட்லீயின் தூண்டிலில் தான் வலியப் போய் மாட்டியிருக்கக்கூடாது என்று ஹாரி நினைத்தான். ஆனால் எந்த விஷயம் அவனது மனத்தை அரித்துக் கொண்டிருந்ததோ, சரியாக அதையே டட்லீ கூறியிருந்தான் . . . ஒருவேளை தனக்கு ஹாக்வார்ட்ஸில் நண்பர்கள் இல்லை என்பது உண்மையாக இருக்கக்கூடுமோ? . . .

அவன் பூச்செடிகளுக்கு உரமிட்டுக் கொண்டே, "இவர்கள் மட்டும் இப்போது 'ஹாக்வார்ட்ஸில் பிரபலமாக இருக்கும் ஹாரி பாட்டரை'ப் பார்த்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்," என்று நினைத்தான். அவனுக்கு முதுகு கடுமையாக வலித்தது. அவனது முகத்தில் வியர்வை வெள்ளமாக ஓடியது.

மாலை ஏழரை மணிக்கு, முற்றிலும் களைத்துத் துவண்டு போயிருந்த ஹாரியை அவனது பெரியம்மா பெட்டூனியா கூப்பிட்டார்.

"இங்கே வா! இந்தச் செய்தித்தாள்களின்மீது நடந்து வா!"

பளபளப்பாக மின்னிக் கொண்டிருந்த சமையலறையினுள் ஹாரி மகிழ்ச்சியாக நுழைந்தான். ஃபிரிட்ஜின் மேல் அன்றைய இரவு விருந்தின்போது பரிமாறப்படவிருந்த மிகப் பெரிய கேக் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அடுப்பில் இறைச்சி வெந்து கொண்டிருந்தது.

Scanned by CamScanner

சமையலறை மேசை மேல் இருந்த இரண்டு துண்டுகள் ரொட்டியையும் ஒரு சீஸ் கட்டியையும் ஹாரிக்குச் சுட்டிக்காட்டியவாறு, "சீக்கிரமாகச் சாப்பிடு! மேசன் தம்பதியினர் எந்த நேரத்திலும் வந்துவிடுவர்," என்று பெட்டூனியா படபடத்தார். இளஞ்சிவப்பு நிறத்தில் இருந்த, இரவு விருந்திற்கான உடைக்கு அவர் ஏற்கனவே மாறியிருந்தார்.

ஹாரி தன் கைகளைக் கழுவிவிட்டு அந்தப் பரிதாபமான இரவு உணவை உண்டு முடித்தான். அவன் சாப்பிட்டு முடித்த மறுகணம் பெட்டூனியா அவனது தட்டைப் பிடுங்கிக் கொண்டு, "மாடிக்கு வேகமாகப் போ," என்று விரட்டினார்.

ஹாரி வரவேற்பறையைக் கடந்து சென்றபோது, கோட்டுகள் மற்றும் 'டை'கள் அணிந்திருந்த வெர்னனும் டட்லீயும் அவனது பார்வையில் பட்டனர். அவன் மாடிப்படியின் உச்சியை அடைந்திருந்தபோது வாசல் மணி ஒலித்தது. பெரியப்பா வெர்னனின் சீற்றமான முகம் மாடிப்படியின் கீழ்ப்படியில் தோன்றியது.

"ஏய் ஹாரி, இதை ஞாபகம் வைத்துக் கொள்! ஏதாவது சத்தம் வந்தது என்றால் . . ."

ஹாரி மெதுவாக அடிமேல் அடியெடுத்து வைத்துத் தன் படுக்கையறைக்குள் நுழைந்து, கதவைச் சாத்திவிட்டுப் படுக்கையில் விழுவதற்காகத் திரும்பினான்.

ஆனால் அங்கு ஏற்கனவே ஓர் உருவம் அமர்ந்திருந்தது.

Scanned by CamScanner

அத்தியாயம் இரண்டு

டாபியின் எச்சரிக்கை

ஹாரி கிட்டத்தட்டப் பெருங்கூச்சல் போட்டிருந்திருப்பான், ஆனால் எப்படியோ தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான். அவனது படுக்கையில் இருந்த அந்த விசித்திரப் பிராணிக்கு வௌவால்போலப் பெரிய காதுகளும், டென்னிஸ் பந்து அளவுக்குப் புடைத்துக் கொண்டிருந்த பச்சை நிறக் கண்களும் இருந்தன. அன்று காலையில் தோட்டத்தில் இருந்த புதர்ச்செடியில் இருந்து தன்னைக் கண்காணித்துக் கொண்டிருந்தது இதுதான் என்பதை ஹாரி உடனடியாகப் புரிந்து கொண்டான்.

ஹாரி அதையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். அதுவும் அவனை வைத்தக் கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தது. அப்போது கீழே ஹாலில் டட்லீயின் குரல் ஒலித்தது.

"மேசன் தம்பதியரே, நான் உங்களுடைய கோட்டுகளை எடுத்துக் கொள்ளலாமா?"

படுக்கையில் உட்கார்ந்திருந்த அந்த விசித்திரப் பிராணி கீழே இறங்கி, தனது நீண்ட மெல்லிய மூக்கு அங்கு போடப்பட்டிருந்த தரைவிரிப்பைத் தொடுமளவுக்குக் குனிந்து வணங்கியது. தலையணை உறை போன்ற ஒன்றில் கைகளையும் கால்களையும் நுழைப்பதற்காக ஓட்டைகள் போட்டுவிட்டு அதை அந்த விசித்திரப் பிராணி அணிந்திருந்ததுபோல ஹாரிக்குத் தோன்றியது.

"உம் . . . ஹலோ!" என்று ஹாரி பதற்றத்துடன் கூறினான்.

"ஹாரி பாட்டர்," என்று அந்த விசித்திரப் பிராணி கூறியது. அதன் குரல் உச்சஸ்தாயியில் இருந்தது. அது கண்டிப்பாகக் கீழேவரை கேட்டிருக்கும் என்று ஹாரி பயந்தான். அந்த விசித்திரப் பிராணி மேலும் இவ்வாறு கூறியது: "சார், உங்களைச் சந்திக்க இந்த டாபி வெகுகாலமாக ஆசைப்பட்டுக் கொண்டிருந்தது . . . உங்களைச் சந்தித்ததை நான் எனக்குக் கிடைத்தப் பெரிய கௌரவமாகக் கருதுகிறேன் . . ."

"உம் . . . நன்றி," என்று ஹாரி கூறினான். அவன் மெதுவாகச் சுவரோரமாக நகர்ந்து சென்று அங்கிருந்த ஒரு நாற்காலியில் அமர்ந்தான். அருகே இருந்த பறவைக் கூண்டிற்குள் ஹெட்விக் தூங்கிக் கொண்டிருந்தது. ஹாரி அந்த விசித்திரப் பிராணியிடம்

Scanned by CamScanner

"ஏய், விசித்திரப் பிராணியே, நீ யார்?" என்றுதான் முதலில் கேட்க நினைத்தான். ஆனால் அப்படிக் கேட்பது நாகரீகமாக இருக்காது என்று கருதிவிட்டு வெறுமனே, "நீ யார்?" என்று கேட்டான்.

"டாபி. வெறும் டாபி. வீட்டு வேலை செய்யும் எல்ஃப்," என்று அது பதிலளித்தது.

"அப்படியா?" என்று கேட்டுவிட்டு ஹாரி தொடர்ந்தான்: "உம் . . . நான் உன்னை அவமதிப்பதாக நீ எடுத்துக் கொள்ளக்கூடாது. ஆனால் வீட்டு வேலை செய்யும் எல்ஃப் ஒன்றை என் படுக்கையறையில் சந்திப்பதற்கு இது சரியான தருணமில்லை என்று நான் நினைக்கிறேன்."

அந்த எல்ஃப் தன் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டது. பெரியம்மா பெட்டூனியாவின் உயர்ந்தொலித்தப் போலியான சிரிப்பு, கீழே வரவேற்பறையில் இருந்து கேட்டது.

"நான் உன்னைச் சந்தித்ததில் மகிழ்ச்சியடையவில்லை என்று அர்த்தப்படுத்திக் கொள்ளாதே," என்று ஹாரி அவசர அவசரமாகக் கூறிவிட்டு, "ஆனால் நீ இப்போது இங்கு வந்ததற்கு ஏதாவது குறிப்பிடத்தக்கக் காரணம் இருக்கிறதா?" என்று கேட்டான்.

"ஆமாம் சார், இருக்கிறது," என்று டாபி ஆர்வமாகக் கூறியது. "டாபி இதைச் சொல்வதற்காகத்தான் இங்கு வந்தது . . . சார், ஆனால் அது கொஞ்சம் சிக்கலானது . . . எங்கு ஆரம்பிப்பது என்று டாபிக்குத் தெரியவில்லை . . ."

மரியாதையுடன் தன் கட்டிலைச் சுட்டிக்காட்டிக் கொண்டே, "இதில் உட்கார்," என்று ஹாரி கூறினான்.

அவனுக்கு அதிர்ச்சி ஏற்படும் விதத்தில், அந்த விசித்திரப் பிராணி, உரத்தக் குரலெடுத்து அழுதது.

"உட்கார்!" என்று கூறி அது ஒப்பாரி வைத்தது. **"இதுவரை ஒருபோதும் . . . ஒருபோதும் . . ."**

கீழே ஏதோ சத்தம் கேட்டதுபோல ஹாரிக்குத் தோன்றியது.

"என்னை மன்னித்துவிடு," என்று ஹாரி கிசுகிசுத்தான். "நான் உன்னைப் புண்படுத்துவதற்காக அப்படிக் கூறவில்லை."

"டாபியைப் புண்படுத்துவதா?" அந்த எல்ஃபுக்கு மூச்சுத் திணறியது. "டாபியை இதுவரை எந்தவொரு மந்திரவாதியும் உட்காரும்படிக் கேட்டுக் கொண்டதே இல்லை . . . **அவர்களுக்குச் சரிநிகர்ச் சமானமானவன்போல!"**

ஹாரி "உஷ்" என்று கூற முயற்சித்த அதே வேளையில், டாபிக்கு ஆறுதல் அளிக்கும் விதமாக அதை மீண்டும் படுக்கைக்கு அழைத்துச் சென்று அதில் உட்கார வைத்தான். அது அதில் உட்கார்ந்து விம்மத் துவங்கியது. அப்போது அது அருவருப்பான ஒரு பெரிய பொம்மையைப்போலத் தோற்றமளித்தது. ஒருவழியாக அது தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு, பிரமிப்புக் கலந்த பார்வையுடன் தன் பெரிய கண்களால் ஹாரியையே கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தது.

Scanned by CamScanner

"நீ நாகரீகமான மந்திரவாதிகளை அவ்வளவாகச் சந்தித்திருக்கவில்லைபோலத் தெரிகிறது," என்று கூறி, ஹாரி அதைக் குஷிப்படுத்த முனைந்தான்.

இல்லை என்பதுபோல டாபி தன் தலையை அசைத்தது. பிறகு திடீரென்று எவ்வித எச்சரிக்கையுமின்றித் துள்ளிக் குதித்து, சன்னலில் தன் தலையை முரட்டுத்தனமாக மோதிக் கொண்டே, **"மோசமான டாபி, மோசமான டாபி!"** என்று கத்தத் துவங்கியது.

ஹாரி வேகமாகத் துள்ளியெழுந்து பாய்ந்து சென்று, அதை மீண்டும் படுக்கைக்குக் கொண்டு வந்து, "ஏய், நிறுத்து, நீ என்ன காரியம் பண்ணிக் கொண்டிருக்கிறாய்!" என்று கிசுகிசுத்தான். ஹெட்விக் ஆந்தை பலத்த அலறலுடன் கண் விழித்தது. அது தன் இறக்கைகளைத் தனது கூண்டுக் கம்பிகளின்மீது படபடவென அடிக்கத் துவங்கியது.

"சார், டாபி தனக்குத் தானே தண்டனை கொடுத்துக் கொள்ள வேண்டும்," என்று அந்த எல்ஃப் கூறியது. அதன் கண்கள் கொஞ்சம் மேலே செருகத் துவங்கின. "சார், டாபி கிட்டத்தட்டத் தன் குடும்பத்தாரைப் பற்றி மோசமாகப் பேசிவிட்டது . . ."

"உன் குடும்பத்தாரைப் பற்றியா?"

"சார், டாபி சேவகம் புரிந்து வரும் மந்திரவாதியின் குடும்பத்தாரைப் பற்றி . . . வீட்டு வேலைகளைச் செய்யும் ஒரு எல்ஃப் இந்த டாபி . . . எல்ஃபுகளாகிய நாங்கள் ஒவ்வொருவரும் காலாகாலத்திற்கும் ஒரே ஒரு குடும்பத்தாருக்கு மட்டுமே சேவை செய்து வர வேண்டும் . . ."

"நீ இங்கு வந்திருப்பது அவர்களுக்குத் தெரியுமா?" என்று ஹாரி ஆர்வத்துடன் கேட்டான்.

டாபிக்கு உடல் வெலவெலத்தது.

"இல்லை சார், இல்லை . . . சார், உங்களைப் பார்க்க வந்ததற்காக டாபி தன்னைக் கடுமையாகத் தண்டித்துக் கொள்ள வேண்டும். டாபி இதற்காகத் தன் காதைச் சூடான அடுப்பின்மீது வைத்துக் கொள்ள வேண்டும். சார், அவர்களுக்கு மட்டும் இது தெரிந்துவிட்டால் . . ."

"நீ உன் காதை அடுப்பின்மீது வைத்துவிட்டால் அவர்கள் கண்டுபிடித்துவிட மாட்டார்களா?"

"டாபி அப்படி நினைக்கவில்லை . . . சார், டாபி எப்போதும் ஏதாவது ஒன்றிற்காகத் தன்னைத் தண்டித்துக் கொண்டே இருக்கும். சார், டாபி அப்படிச் செய்வதை அவர்கள் தடுப்பதில்லை . . . சில சமயம், கூடுதலான தண்டனையை மேற்கொள்ளுமாறு அவர்கள் எனக்கு நினைவுபடுத்துவதும் உண்டு."

"அப்படியானால், நீ அங்கிருந்து சென்றுவிட வேண்டியதுதானே? நீ தப்பி ஓடிவிடலாமே?"

"சார், வீட்டு வேலைகள் செய்யும் எல்ஃபுகள் தாங்கள் சேவகம் செய்கின்ற குடும்பத்தாரால் விடுவிக்கப்பட்டாலொழிய அது

Scanned by CamScanner

சாத்தியமில்லை. ஆனால் அந்தக் குடும்பத்தார் என்னை ஒருபோதும் விடுவிக்க மாட்டார்கள் . . . சார், டாபி சாகும்வரை அவர்களுக்காக மாடுபோல உழைத்துக் கொண்டே இருந்தாக வேண்டும் . . .”

ஹாரி வெறித்துப் பார்த்தான்.

“பள்ளி திறக்கும்வரை நான் இன்னும் நான்கு வாரங்களுக்கு இந்த வீட்டிலேயே அடைந்து கிடக்க வேண்டும் என்பது நியாயமல்ல என்று நான் நினைத்திருந்தேன். ஆனால் உன் கதை, டர்ஸ்லீ குடும்பத்தினரே மேல் என்பதுபோலத் தோன்றச் செய்கிறது. ஆமாம், உனக்கு யாராலேனும் உதவி செய்ய முடியுமா? என்னால் உனக்கு உதவ முடியுமா?” என்று ஹாரி கேட்டான்.

ஹாரி அதைக் கூறி முடித்த அடுத்தக் கணமே, தான் அதைக் கூறாமல் இருந்திருக்கலாம் என்று நினைத்தான். ஏனெனில், டாபி மீண்டும் நன்றி மழையில் விம்மத் துவங்கியது.

“தயவு செய்து நிறுத்து!” என்று ஹாரி படபடப்புடன் கிசுகிசுத்தான். “தயவு செய்து நிறுத்து! ஏதேனும் சத்தம் டர்ஸ்லீ குடும்பத்தினரின் காதுகளில் விழுந்துவிட்டால் . . . நீ இங்கிருப்பது மட்டும் அவர்களுக்குத் தெரிந்துவிட்டால் . . .”

“டாபிக்குத் தன்னால் உதவ முடியுமா என்று ஹாரி பாட்டரே கேட்கிறார் . . . சார், உங்களது மகத்துவம் பற்றி டாபி கேள்விப்பட்டுள்ளது . . . அதை நேரில் உணரும் பாக்கியம் இப்போதுதான் எனக்குக் கிட்டியுள்ளது.”

வெட்கத்தால் முகம் சிவந்து போன ஹாரி, “என் மகத்துவம் பற்றி நீ கேள்விப்பட்டுள்ள அனைத்தும் கதைக்கு உதவாதவை. ஹாக்வார்ட்ஸில் நான் என் வகுப்பில் முதல் மாணவன்கூட இல்லை. ஹெர்மயனிக்குத்தான் முதலிடம் . . . “

அவன் அவசர அவசரமாக அதோடு நிறுத்திக் கொண்டான். ஹெர்மயனியைப் பற்றிய நினைப்பே அவனுக்கு வலியேற்படுத்துவதாக இருந்தது.

“ஹாரி பாட்டர் எளிமையின் உருவம், அடக்கத்தின் வடிவம்,” என்று டாபி பயம் கலந்த மரியாதையுடன் கூறிக் கொண்டது. அதன் பெரிய கண்கள் பிரகாசித்தன. “பெயர் சொல்லப்படக்கூடாதவனை வெற்றி கொண்டதைப் பற்றி ஹாரி பாட்டர் கூற மாட்டார், இல்லையா?”

“வோல்டமார்ட்?”

டாபி தன் வௌவால் காதுகளுக்கு அருகே தன் கைகளை பலமாகத் தட்டியபடியே, “ஐயோ, அவனுடைய பெயரைச் சொல்லாதீர்கள், தயவுசெய்து அவன் பெயரை மட்டும் சொல்லாதீர்கள்!” என்று முனகியது.

“மன்னித்துக் கொள்,” என்று ஹாரி அவசர அவசரமாகக் கூறினான். “நிறையப் பேருக்கு இது பிடிக்காது என்று எனக்குத் தெரியும். என் நண்பன் ரான்கூட . . .”

Scanned by CamScanner

ஹாரி தன் பேச்சை மீண்டும் பாதியிலேயே நிறுத்திக் கொண்டான். ரானைப் பற்றிய நினைப்புக்கூட அவனுக்கு வலி ஏற்படுத்துவதாக இருந்தது.

டாபி ஹாரியை நோக்கிச் சாய்ந்தது. அதன் கண்கள் இரண்டும் காரின் முகப்பு விளக்குகளைப்போல ஒளிர்ந்தன.

"டாபி இவ்வாறு கேள்விப்பட்டது," என்று அது கரகரப்பான குரலில் கூறியது. "ஒருசில வாரங்களுக்கு முன்னால், ஹாரி பாட்டர் அந்தத் தீய மந்திரவாதியை இரண்டாவது முறையாக நேருக்கு நேர் எதிர்கொண்டார் என்றும், இம்முறையும் ஹாரி உயிரோடு தப்பிவிட்டார் என்றும் கேள்விப்பட்டது."

ஹாரி தன் தலையசைத்து அதை ஆமோதித்தான். டாபியின் கண்களில் இருந்து திடீரென்று தாரை தாரையாக நீர் கொட்டியது.

டாபி தான் அணிந்திருந்த தலையணை போன்ற அந்த முரட்டு ஆடையின் ஓரத்தில் தன் முகத்தை ஒற்றிக் கொண்டே, "ஓ, சார்," என்று கூறிப் பெருமூச்செறிந்தது. "ஹாரி பாட்டர் தைரியமும் மன உறுதியும் கொண்டவர்! அவர் இவ்வளவு சிறிய வயதிற்குள் இவ்வளவு அதிக ஆபத்துக்களைத் துணிச்சலுடன் எதிர்கொண்டு வெற்றி பெற்றுவிட்டார். ஆனால் டாபி ஹாரி பாட்டரைப் பாதுகாக்க வந்துள்ளது, அவரை எச்சரிக்க வந்துள்ளது, தான் பின்னர் அடுப்பில் தன் காதுகளைப் பொசுக்கிக் கொள்ள வேண்டியிருந்தாலும்கூட . . . **ஹாரி பாட்டர் கண்டிப்பாக ஹாக்வார்ட்ஸுக்கு மீண்டும் திரும்பிப் போகக்கூடாது.**"

அங்கு நிலவிய மௌனத்தை, கீழ்த்தளத்தில் இருந்து வந்த, கத்திகளும் முட்கரண்டிகளும் தட்டுக்களின்மீது உராய்ந்த சத்தமும் பெரியப்பா வெர்னனின் குரலொலியும் கூறு போட்டன.

"நீ என்ன உளறுகிறாய்?" ஹாரி தடுமாறினான். "நான் கண்டிப்பாக அங்கு மீண்டும் போயாக வேண்டும். செப்டம்பர் முதல் தேதியன்று வகுப்புகள் ஆரம்பமாகின்றன. அந்த எண்ணம்தான் என்னை இயக்கிக் கொண்டிருக்கிறது. இங்கு என் நிலைமை எப்படி என்பது உனக்குத் தெரிய வாய்ப்பில்லை. இது எனக்குப் பொருத்தமான இடமில்லை. நீ சார்ந்துள்ள உலகம்தான் – ஹாக்வார்ட்ஸ்தான் – எனக்குப் பொருத்தமான இடம்."

"வேண்டாம், வேண்டாம், வேண்டாம்," என்று டாபி கிறீச்சிட்டது. அது தன் தலையை ஆட்டிய வேகத்தில் அதன் காதுகள் படபடவென்று அடித்துக் கொண்டன. "ஹாரி பாட்டர் எந்த இடத்தில் இருந்தால் அவருக்குப் பாதுகாப்போ அந்த இடத்தில்தான் அவர் இருக்க வேண்டும். அவர் மிகவும் மேன்மையானவராகவும் மிகச் சிறப்பானவராகவும் இருப்பதால் அவரை இழக்க முடியாது. ஹாரி பாட்டர் மீண்டும் ஹாக்வார்ட்ஸுக்குத் திரும்பிச் சென்றால், அவரது உயிருக்கு அது ஆபத்தாக முடியக்கூடும்."

ஹாரி மிகுந்த ஆச்சரியத்துடன், "ஏன்?" என்று கேட்டான்.

Scanned by CamScanner

"சார், ஒரு சதித் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இவ்வருடம் ஹாக்வார்ட்ஸ் மந்திர தந்திர மாயாஜாலப் பள்ளியில் படுபயங்கரமான நிகழ்வுகளை நிகழ்த்தத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது," என்று கிசுகிசுத்த டாபியின் உடல் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை நடுங்கியது. "சார், டாபிக்கு இது பல மாதங்களாகவே தெரியும். ஹாரி பாட்டர் தன்னைப் பெரும் ஆபத்திற்கு ஆட்படுத்திக் கொள்ளக்கூடாது. சார், அவர் மிகமிக முக்கியமானவர்."

ஹாரி உடனடியாக, "எந்த மாதிரியான பயங்கரமான விஷயங்கள்?" என்று கேட்டான். "யார் அந்தச் சதித் திட்டத்தைத் தீட்டியுள்ளனர்?"

டாபி வினோதமான மூச்சுத் திணறல் ஒலி ஒன்றை ஏற்படுத்திவிட்டு, தன் தலையைச் சுவரின்மீது முரட்டுத்தனமாக மோதத் துவங்கியது.

"சரி, சரி," என்று ஹாரி கத்திவிட்டு, அந்த எல்ஃபின் கையைப் பிடித்தான். "சரி, உன்னால் சொல்ல முடியாது. எனக்குப் புரிகிறது. ஆனால் நீ ஏன் என்னை எச்சரிக்க வேண்டும்?" வெறுப்பை ஏற்படுத்திய ஓர் எண்ணம் திடீரென்று அவனுக்குத் தோன்றியது. "ஒரு நிமிடம் பொறு! ஆமாம், இது வோல்ட . . . மன்னித்துக் கொள்! பெயர் சொல்லப்படக்கூடாதவனுக்கும் இதற்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதா?" டாபியின் தலை மீண்டும் சுவரை நோக்கிச் சாய்வதைக் கவலையுடன் கவனித்த ஹாரி, வேகவேகமாக, "ஆமாம் அல்லது இல்லை என்று நீ தலையசைத்தால் மட்டும் போதும்," என்று கூறினான்.

இல்லை என்பதுபோல டாபி மெதுவாகத் தன் தலையை அசைத்தது.

"இல்லை, இல்லை. சார், **பெயர் சொல்லப்படக்கூடாதவனுக்கு** இதில் எந்தத் தொடர்பும் இல்லை."

ஆனால் டாபியின் கண்கள் அகலமாக விரிந்திருந்தன. அது ஹாரிக்கு ஏதோ ஒரு தகவலைத் தெரிவிக்க முயன்றதுபோலத் தோன்றியது. ஆனால் ஹாரி குழப்பத்தில் தத்தளித்துக் கொண்டிருந்தான்.

"அவனுக்குச் சகோதரர்கள் யாரும் இல்லை, சரிதானே?"

இல்லையென்று டாபி தலையசைத்தது. ஆனால் அதன் கண்கள் இன்னும் அகலமாக விரிந்தன.

"சரி, போகட்டும். ஆனால் ஹாக்வார்ட்ஸில் படுபயங்கர விஷயங்களை நிகழ்த்தக்கூடிய வேறு யாரும் என் நினைவுக்கு வரவில்லை," என்று ஹாரி கூறினான். "டம்பிள்டோர் இருக்கிறார். ஆமாம், உனக்கு டம்பிள்டோர் யாரென்று தெரியும்தானே?"

ஆமாம் என்று டாபி தலையாட்டியது.

"ஆல்பஸ் டம்பிள்டோர் ஹாக்வார்ட்ஸின் வரலாற்றிலேயே மிகச் சிறந்த தலைமை ஆசிரியர். சார், அது டாபிக்கு நன்றாகவே தெரியும். பெயர் சொல்லப்படக்கூடாதவன் முழு ஆற்றலுடன் விளங்கியபோது

Scanned by CamScanner

அவனுக்கு நிகரான சக்தி படைத்தவராக அவர் இருந்திருக்கிறார் என்று டாபி கேள்விப்பட்டிருக்கிறது. சார், ஆனால் . . .” பின் டாபி தன் குரலை அவசர அவசரமாக ஒரு கிசுகிசுப்பான தொனிக்கு மாற்றிக் கொண்டது. “டம்பிள்டோரிடம் இல்லாத சில சக்திகள் . . . எந்தவொரு பண்பார்ந்த மந்திரவாதியிடமும் இல்லாத . . .”

ஹாரி டாபியைத் தடுத்து நிறுத்துவதற்குள், அது படுக்கையிலிருந்து தாவிக் குதித்து, ஹாரியின் மேசை விளக்கை எடுத்து, காதைத் துளைக்கும் படுபயங்கரக் கூச்சலுடன் தன் தலையில் கடுமையாக அடித்துக் கொள்ளத் துவங்கியது.

கீழ்தளத்தில் திடீரென்று மயான அமைதி நிலவியது. இரண்டு வினாடிகளுக்குப் பிறகு பெரியப்பா வெர்னன் ஹாலுக்குள் நுழைந்த சத்தம் கேட்டது. அவர், “டட்லீ தன் தொலைக்காட்சியை அணைக்காமல் வந்துவிட்டான் என்று நினைக்கிறேன். சரியான வாண்டுப் பயல்!” என்று தன் விருந்தினர்களிடம் கூறினார்.

“சீக்கிரமாக அந்த பீரோவுக்குள் ஒளிந்து கொள்,” என்று ஹாரி கிசுகிசுத்துவிட்டு, டாபியை அதனுள் தள்ளி, கதவை வெறுமனே சாத்திவிட்டுப் படுக்கையில் தாவிக் குதித்தான். அடுத்தக் கணம் அவனது அறைக் கதவு திறந்தது.

“இங்கு – என்ன – ரகளை – பண்ணிக் – கொண்டு – இருக்கிறாய்?” என்று பெரியப்பா வெர்னன் தன் பல்லைக் கடித்துக் கொண்டு இரைந்தார். அவரது முகம் ஹாரியின் முகத்திற்கு வெகு அருகே இருந்தது. “ஜப்பானிய கோல்ஃப் ஆட்டக்காரர் ஒருவரைப் பற்றிய நகைச்சுவை ஒன்றை நான் சொல்லி முடிக்கும் தருவாயில் இருந்தேன். அதை நீ கெடுத்துவிட்டாய் . . . அடுத்து ஏதாவது சத்தம் வந்தால் தொலைத்துவிடுவேன், தொலைத்து! ஏய்! நாம் ஏனடா பிறந்து தொலைத்தோம் என்று நீ ஒப்பாரி வைக்கும் நிலைக்குப் போய்விடுவாய்!”

தரையில் தாம்தூம் என்று சத்தம் ஏற்படுத்தியவாறு அவர் அங்கிருந்து அகன்றார்.

ஹாரி நடுங்கியவாறே பீரோவின் கதவைத் திறந்து டாபி வெளியே வர அனுமதித்தான்.

“இங்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று நீ இப்போது பார்த்துவிட்டாய் அல்லவா? நான் ஏன் ஹாக்வார்ட்ஸ் போகத் துடித்துக் கொண்டிருக்கிறேன் என்று உனக்குப் புரிகிறதா? எனக்கு இருக்கும் ஒரே இடம் அதுதான் – அங்கு எனக்கு நண்பர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள் என்று நினைக்கிறேன்.”

“ஹாரி பாட்டருக்குக் கடிதம்கூட எழுதாத நண்பர்களா?” என்று டாபி கேட்டது.

“அவர்கள் வேறு ஏதாவது வேலையில் மும்முரமாக இருந்திருக்க . . .” என்று துவங்கிய ஹாரி, “இரு, இரு! ஆமாம் என் நண்பர்கள் எனக்குக் கடிதம் எழுதவில்லை என்று உனக்கு எப்படித் தெரியும்?” என்று கேட்டான்.

Scanned by CamScanner

டாபி நிலை கொள்ளாமல் தவித்தது.

"ஹாரி பாட்டர் டாபிமீது கோபப்படக்கூடாது . . . நல்லது செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில்தான் டாபி . . ."

"அப்படியானால் நீதான் என் கடிதங்களைத் தடுத்து நிறுத்திக் கொண்டிருந்தாயா?"

"சார், டாபி அவற்றை இங்குதான் வைத்திருக்கிறது," என்று அது கூறியது. ஹாரியின் பிடியில் அகப்படாமல் துள்ளிக் குதித்தவாறு, தான் அணிந்திருந்த தலையணை உறைக்குள் கையைவிட்டு ஒரு குத்துக் கடிதங்களை அது வெளியே எடுத்தது. ஹெர்மயனியின் அழகான கையெழுத்தையும், ரானின் கோழிக் கிறுக்கல் கையெழுத்தையும், ஹாக்வார்ட்ஸின் கோட்டைப் பாதுகாவலர் ஹாக்ரிட்டின் கன்னாபின்னாவென்று இருந்த கையெழுத்தையும் ஹாரியால் நன்றாகவே அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது.

டாபி ஹாரியை ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தது.

"ஹாரி பாட்டர் கோபப்படக்கூடாது . . . தன் நண்பர்கள் தன்னை மறந்துவிட்டார்கள் என்று ஹாரி பாட்டர் நினைத்தால் . . . அவர் மீண்டும் ஹாக்வார்ட்ஸுக்குச் செல்ல விரும்ப மாட்டார் என்று டாபி நம்பியது சார் . . ."

அது கூறியதை ஹாரி கேட்டுக் கொண்டிருக்கவில்லை. அவன் தனக்கான கடிதங்களை அதன் கைகளில் இருந்து பிடுங்குவதற்காகத் தாவினான். டாபி அவனது பிடிக்குள் அகப்படாமல் துள்ளிக் குதித்தது.

"ஹாரி பாட்டருக்கு இக்கடிதங்கள் கிடைக்கும் . . . தான் மீண்டும் ஹாக்வார்ட்ஸுக்குத் திரும்பிப் போகப் போவதில்லை என்று அவர் டாபிக்கு வாக்குக் கொடுத்தால் . . . சார், நீங்கள் இந்த ஆபத்தை எதிர்கொள்ளத் தேவையில்லை . . . சார், நீங்கள் மீண்டும் அங்கு போகப் போவதில்லை என்று கூறுங்கள்!"

"முடியாது!" என்று ஹாரி கூறினான். "என் நண்பர்களின் கடிதங்களை என்னிடம் கொடுத்துவிடு!"

"அப்படியானால், டாபிக்கு இதைத் தவிர வேறு வழி கிடையாது," என்று டாபி வருத்தத்துடன் கூறியது.

ஹாரி நகர்வதற்குள், டாபி அந்த அறைக் கதவை நோக்கி ஓடி, அதைத் திறந்து, மாடிப்படிகளில் தலைதெறிக்கக் கீழே ஓடியது.

ஹாரிக்கு வாய் உலர்ந்து போய்விட்டது. அவனுக்கு வயிற்றைப் புரட்டிக் கொண்டு வந்தது. ஆனாலும் ஹாரி டாபியைப் பின்தொடர்ந்து ஓடினான். சத்தம் ஏதும் ஏற்படுத்திவிடாமல் இருக்க அவன் பெருமுயற்சி எடுத்துக் கொண்டான். கடைசி ஆறு படிகளை ஒரே தாவலில் தாவிக் குதித்தான். கீழே பூனைபோலச் சத்தமில்லாமல் தரையில் குதித்த அவன் டாபியைத் தேடினான். சாப்பாட்டு அறையிலிருந்து பெரியப்பா வெர்னனின் குரல் ஒலித்தது அவனுக்குக் கேட்டது. அவர், ". . . மேசன் அவர்களே, பெட்டூனியாவிற்கு அந்த

Scanned by CamScanner

அமெரிக்கப் பிளம்பர்களைப் பற்றிய வேடிக்கையான கதையைச் சொல்லுங்களேன் . . . அதைக் கேட்க அவள் வெகு ஆவலாகக் காத்துக் கொண்டிருக்கிறாள் . . ." என்று கூறிக் கொண்டிருந்தார்.

ஹாரி ஹாலைக் கடந்து சமையலறைக்குள் நுழைந்தான். தனது வயிறு அப்படியே காணாமல் போய்விட்டிருந்ததுபோல அவனுக்குத் தோன்றியது.

பெரியம்மா பெட்டூனியாவின் அன்றைய கைவரிசையின் மகுடமாகத் திகழ்ந்த கேக், உத்தரத்தின் பக்கத்தில் அந்தரத்தில் ஊசலாடிக் கொண்டிருந்தது. டாபி சமையலறையின் மூலையில் இருந்த அலமாரியில் பதுங்கியிருந்தது.

"வேண்டாம்." ஹாரிக்குத் தொண்டை அடைத்தது. "தயவு செய்து அதை ஒன்றும் செய்துவிடாதே . . . அவர்கள் என்னைக் கொன்று போட்டுவிடுவார்கள் . . ."

"அப்படியானால், மீண்டும் அந்தப் பள்ளிக்குத் திரும்பிச் செல்லப் போவதில்லை என்று ஹாரி பாட்டர் கூற வேண்டும் . . ."

"டாபி . . . தயவு செய்து . . ."

"அப்படியானால், போக மாட்டேன் என்று சொல்லுங்கள், சார்!"

"என்னால் முடியாது!"

டாபி அவனைத் துயரத்துடன் நோக்கியது.

"அப்படியானால், ஹாரி பாட்டருடைய நன்மைக்காக டாபி இதைச் செய்தாக வேண்டும் சார்!"

இதயத்தையே நிறுத்தி வைக்கக்கூடிய பெரும் சத்தத்துடன் அந்தப் பெரிய கேக் தரையில் விழுந்து சிதறியது. கேக் வைக்கப்பட்டிருந்த கண்ணாடிப் பாத்திரம் விழுந்து நொறுங்கியதில் அதிலிருந்த கிரீம், சுவர்களையும் சன்னல்களையும் அபிஷேகம் செய்தது. சொடுக்குப் போட்டாற்போல டாபி மாயமாக மறைந்தது.

சாப்பாட்டு அறையிலிருந்து கூச்சல்கள் எழுந்தன. பெரியப்பா வெர்னன் சமையலறைக்குள் புயலென நுழைந்தார். உச்சி முதல் உள்ளங்கால் வரை கேக்கின் கிரீமில் குளித்திருந்த ஹாரி அதிர்ச்சியில் உறைந்து போய் அங்கு நின்று கொண்டிருந்ததை அவர் கவனித்தார்.

முதலில் பெரியப்பா வெர்னன் அச்சூழ்நிலையைத் தன் வாய்ச் சாமர்த்தியத்தால் சமாளித்துவிடுவார் என்று ஹாரிக்குத் தோன்றியது ("ஓ! இதுவா? இது எங்களுடைய உறவினர் பையன் . . . அவனுக்குக் கொஞ்சம் மனநிலை சரியில்லை . . . அன்னியர்களைக் கண்டால் அவனுக்கு அறவே பிடிக்காது . . . அதனால்தான் நாங்கள் அவனை மாடியில் பூட்டி வைத்திருந்தோம் . . .") அதிர்ச்சியில் இருந்து இன்னும் மீளாதிருந்த மேசன் தம்பதியினரை மீண்டும் சாப்பாட்டு அறைக்குள் ஒருவழியாக விரட்டிவிட்டு, அவர்கள் இருவரும் வீட்டைவிட்டுப் போனதும் ஹாரியை ஒரு கை பார்த்துவிடுவதாக அவனை மிரட்டிவிட்டு, ஹாரியின் கையில் ஒரு துடப்பத்தைக் கொடுத்துவிட்டு டர்ஸ்லீ அங்கிருந்து அகன்றார். ஹாரியின் பெரியம்மா, குளிர்பதனப்

Scanned by CamScanner

பெட்டியில் இருந்த ஐஸ்கிரீமை வழித்தெடுத்து அதைத் தன் விருந்தினர்களுக்கு எடுத்துச் சென்றார். இன்னும் நடுங்கிக் கொண்டிருந்த ஹாரி, சமையலறையைச் சுத்தம் செய்யும் வேலையில் இறங்கினான்.

பெரியப்பா தான் திட்டமிட்டிருந்தபடி ஒப்பந்தத்தை நிறைவேற்றியிருந்திருப்பார் – அந்த ஆந்தை மட்டும் குறுக்கிடாமல் இருந்திருந்தால்!

சாப்பிட்டு முடித்தவுடன் சுவைப்பதற்கான புதினா மிட்டாய்களைப் பெரியம்மா பெட்டூனியா எல்லோருக்கும் வழங்கிக் கொண்டிருந்தபோது, பெரிய கூகை வகை ஆந்தை ஒன்று சாப்பாட்டு அறையின் சன்னல் வழியாகப் பறந்து வந்து திருமதி மேசனின் மடிமீது ஒரு கடிதத்தைப் போட்டுவிட்டு மீண்டும் வெளியே பறந்து போனது. திருமதி மேசன் பேய்போல அலறிவிட்டு, பைத்தியக்காரர்களைப் பற்றி ஏதோ கூப்பாடு போட்டுக் கொண்டே வீட்டைவிட்டு வெளியே ஓடினார். தன் மனைவிக்குப் பறவைகள் என்றாலே – அவை எந்த அளவில் இருந்தாலும் சரி, எந்த வடிவில் இருந்தாலும் சரி – குலை நடுக்கம் என்று கூறிவிட்டு, அப்போது நடந்த நிகழ்ச்சி டர்ஸ்லீ குடும்பத்தினருக்கு வேடிக்கையாகத் தோன்றியதா என்று கேட்டுவிட்டுத் திரு மேசன் கோபமாக அவ்விடத்தைவிட்டு அகன்றார்.

தனது இடுங்கிய கண்களில் அரக்க வெறித் தாண்டவமாடத் தன்னை நோக்கி வந்து கொண்டிருந்த பெரியப்பா வெர்னனை எதிர்கொள்வதற்காக, ஹாரி, துடப்பத்தைத் தன் ஆதரவுக்காகத் தாங்கிப் பிடித்தபடி அந்தச் சமையலறையில் நின்று கொண்டிருந்தான்.

அந்த ஆந்தை கொண்டு வந்து போட்டிருந்த கடிதத்தை அவனுக்கு முன்னால் ஆட்டியபடி, வெர்னன் அவனிடம், "இதைப் படி!" என்று சீறினார். "போ, போய்ப் படி!"

ஹாரி அதை வாங்கினான். அதில் பிறந்தநாள் வாழ்த்துக்கள் எதுவும் இடம்பெற்றிருக்கவில்லை.

அன்புள்ள ஹாரி பாட்டருக்கு,

இன்று இரவு ஒன்பது மணி பன்னிரண்டு நிமிடங்கள் ஆகியிருந்தபோது உன் வீட்டில் பொருட்களை அந்தரத்தில் ஊசலாட வைக்கும் 'மிதவை மந்திரம்' பயன்படுத்தப்பட்டதாக எங்களுக்கு உறுதியான தகவல்கள் கிடைத்துள்ளன.

வயது முதிராத இளம் மந்திரவாதிகளுக்குப் பள்ளிக்கு வெளியே மாய மந்திரங்களைப் பயன்படுத்துவதற்கு அனுமதி கிடையாது என்பது உனக்குத் தெரிந்த விஷயம்தான். இனியும் தொடர்ந்து மாய மந்திரங்களை நீ பயன்படுத்தினால், பள்ளியிலிருந்து நீ நீக்கப்படுவாய் (இளம் வயது மந்திரவாதிகளின் மந்திரவித்தைப் பயன்பாடுகளின் நியாயமான கட்டுப்பாடுகள் சட்டம், 1875, மூன்றாம் பத்தி).

Scanned by CamScanner

சர்வதேச மகா மந்திரவாதிகள் கூட்டமைப்பின் ரகசிய விதிகள், பிரிவு 13ன் கீழ், மந்திரவாதிகளின் சமூகத்தைச் சாராதவர்கள் (மகுள்கள்) கண்டுபிடித்துவிடக்கூடிய விதத்தில் மேற்கொள்ளப்படும் மந்திரவித்தைகள் குற்றச் செயல்களாகும் என்பதை நீ நினைவில் வைத்திருக்க வேண்டும் என்றும் நாங்கள் உன்னை மேலும் கேட்டுக் கொள்கிறோம்.

உன் விடுமுறையை உல்லாசமாகக் கழிக்க வாழ்த்துக்கள்!

உண்மையுடன்,
மஃபல்டா ஹாப்கர்க்
மந்திரவித்தைத் துஷ்பிரயோக அலுவலகம்
மந்திரஜால அமைச்சகம்

ஹாரி அக்கடிதத்திலிருந்து தன் தலையை நிமிர்த்தி மென்று விழுங்கினான்.

"பள்ளிக்கு வெளியே மந்திரவித்தைகளைப் பயன்படுத்த உனக்கு அனுமதி இல்லை என்பதை நீ எங்களிடம் கூறியிருக்கவில்லை," என்று பெரியப்பா வெர்னன் கூறினார். அவரது கண்களில் ஒரு பைத்தியக்கார வெறி தாண்டவமாடிக் கொண்டிருந்தது. "'சொல்ல மறந்து விட்டேன் . . . எனக்குத் தோன்றவே இல்லை,' என்று கூற உனக்குத் துணிச்சல் இருக்கிறதா?"

அவர் தன் அனைத்துப் பற்களும் வெளியே தெரியும் விதத்தில் ஒரு பெரிய வேட்டை நாயைப்போல ஹாரியை நோக்கிப் பாய்ந்து வந்து, "இதை நீ கவனமாகக் கேட்டுக் கொள் . . . நான் உன்னை உன் அறைக்குள் வைத்துப் பூட்டப் போகிறேன் . . . இனி நீ அப்பள்ளிக்குத் திரும்பிச் செல்லப் போவதில்லை . . . மீண்டும் ஒருபோதும் நீ அங்கு செல்லப் போவதில்லை . . . நீ உன் மந்திர வித்தைகளை உபயோகித்து வெளியே வந்தால், அவர்களே உன்னை வெளியேற்றிவிடுவார்கள்!" என்று உறுமினார்.

வெறி கொண்டவரைப்போலச் சிரித்துக் கொண்டே அவர் ஹாரியைத் தரதரவென்று மாடியை நோக்கி இழுத்துச் சென்றார்.

பெரியப்பா வெர்னன் தான் கூறியபடியே நடந்து கொண்டார். அடுத்த நாள் காலையில் ஹாரியினுடைய அறையின் சன்னலின் குறுக்காக இரும்புக் கம்பிகளைப் பொருத்த அவர் ஒருவரை ஏற்பாடு செய்தார். வீட்டில் வளர்க்கப்படும் பூனைகள் வெளியே போவதற்கும், மீண்டும் உள்ளே வருவதற்கும் வசதியாக அறைக் கதவுகளின் கீழ்ப்புறம் போடப்படும் சிறு துவாரம் போன்ற ஒன்றை, அவனுக்குத் தினமும் மூன்று வேளையும் உணவை உள்ளே தள்ள வசதியாக இருக்கும் விதத்தில் அவனது அறைக் கதவில் அவரே தன் கைப்படப் போட்டார். காலையிலும் மாலையிலும் குளியலறையை உபயோகிக்க அவன் அனுமதிக்கப்பட்டான். அது தவிர, நாள் முழுவதும் அவன் அந்த அறையில் பூட்டி வைக்கப்பட்டான்.

Scanned by CamScanner

மூன்று நாட்கள் கடந்த பிறகும் டர்ஸ்லீ தம்பதியினர் மசிவதாக இல்லை. தனது இக்கட்டான சூழ்நிலையிலிருந்து தப்பிக்க ஹாரிக்கு எந்த வழியும் தோன்றவில்லை. அவன் தன் படுக்கையில் படுத்துக் கொண்டு சன்னலின் குறுக்காகப் பொருத்தப்பட்டிருந்த கம்பிகளின் வழியாகச் சூரியன் கீழிறங்கிக் கொண்டிருந்ததைப் பார்த்துக் கொண்டு, தனக்கு என்ன நிகழப் போகிறதோ என்று கழிவிரக்கத்தோடு கவலைப்பட்டுக் கொண்டிருந்தான்.

அவன் தனது மந்திர வித்தையை உபயோகித்துத் தன் அறையில் இருந்து தப்பித்து வெளியேறும் பட்சத்தில் ஹாக்வார்ட்ஸே அவனைப் பள்ளியில் இருந்து நீக்கிவிடும் என்றிருந்தபோது, அதனால் என்ன பிரயோஜனம்? ஆனால் பிரைவிட் தெருவில் வாழ்க்கை இந்த அளவு ஒருபோதும் மோசமாக இருந்ததில்லை. காலையில் எழுந்திருக்கும்போது பழந்தின்னி வௌவால்களாகத் தாங்கள் மாறியிருக்கப் போவதில்லை என்பதை டர்ஸ்லீ குடும்பத்தினர் இப்போது அறிந்து கொண்டிருந்ததால், ஹாரி தன் கைவசம் வைத்திருந்த ஒரே ஓர் ஆயுதத்தையும் இழந்துவிட்டிருந்தான். தன்னை ஹாக்வார்ட்ஸுக்குப் போகவிடாமல் தடுத்ததன் மூலம், அங்கு நிகழவிருந்த படுபயங்கரமான சம்பவங்களிலிருந்து டாபி தன்னைக் காப்பாற்றி இருக்கக்கூடும் என்றாலும், நிலைமை இப்படிப் போனால், தான் எப்படியும் பட்டினியில் இறந்து போகக்கூடும் என்று ஹாரி நினைத்தான்.

அவனது அறைக் கதவில் இருந்த துவாரத்தில் ஒரு சத்தம் கேட்டது. பெரியம்மா பெட்டூனியாவின் கை ஒன்று அங்கு தோன்றியது. ஒரு கோப்பை சூப் அந்த துவாரத்தின் வழியாக உள்ளே தள்ளப்பட்டது. பசியால் துடித்துக் கொண்டிருந்த ஹாரி துள்ளிக் குதித்து அதைக் கையில் எடுத்துக் கொண்டான். அது ஆறிக் குளிர்ந்து போயிருந்தாலும், ஹாரி அதில் பாதியை ஒரே மடக்கில் குடித்து முடித்தான். பின் அறையின் மறு மூலையில் இருந்த ஹெட்விக்கின் கூண்டிற்கு அருகே சென்று, அதனுள் காலியாக இருந்த அதன் உணவுப் பாத்திரத்தில், சூப்பின் அடியில் கிடந்த காய்கறித் துண்டுகளை எடுத்துப் போட்டான். ஹெட்விக் தன் இறக்கைகளை லேசாகச் சிலுப்பிவிட்டுக் கொண்டு அவனைக் கடும் வெறுப்புடன் பார்த்தது.

"இதைப் பார்த்து முகம் சுளிப்பதால் எந்தப் பிரயோஜனமும் இல்லை. இப்போதைக்கு நம் கைவசம் உள்ளது இது மட்டும்தான்," என்று ஹாரி கண்டிப்புடன் கூறினான்.

அவன் அந்தக் காலிக் கோப்பையைத் தனது அறைக் கதவிலிருந்த துவாரத்தின் அருகே வைத்துவிட்டு, படுக்கையில் மல்லாந்து படுத்தான். சூப் குடித்தப் பிறகு முன்பிருந்ததைவிடப் பசி அதிகரித்திருந்ததைப்போல அவனுக்குத் தோன்றியது.

அவன் நான்கு வாரங்களுக்குப் பிறகும் உயிருடன் இருக்கப் போவதாக வைத்துக் கொண்டாலும், அவன் ஹாக்வார்ட்ஸுக்குத்

Scanned by CamScanner

திரும்பாவிட்டால் என்ன நடக்கும்? அவன் ஏன் பள்ளிக்குத் திரும்பி வரவில்லை என்று பார்த்து வருவதற்காக இங்கு யாராவது அனுப்பி வைக்கப்படுவார்களா? அப்படி வருகின்றவர்களால், டர்ஸ்லீ தம்பதியினரை மீறித் தன்னை ஹாக்வார்ட்ஸுக்கு அழைத்துச் செல்ல முடியுமா?

அறையில் மெதுவாக இருள் சூழத் துவங்கியது. சோர்ந்து போயிருந்த, பசியால் துவண்டு போயிருந்த, பதில் கிடைக்காத கேள்விகளால் மனம் குழம்பிப் போயிருந்த ஹாரி, சஞ்சலமான தூக்கத்திற்குள் தஞ்சம் புகுந்தான்.

தான் ஒரு விலங்குக் காட்சிச்சாலையில் அடைக்கப்பட்டு இருந்ததுபோலவும், தனது கூண்டின் வெளியே 'வயது முதிராத மந்திரவாதி' என்ற பெயர்ப் பலகை தொங்கியதுபோலவும் அவன் ஒரு கனவு கண்டான். ஒரு வைக்கோல் படுக்கையில் பசியோடும் பலவீனமாகவும் படுத்துக் கிடந்த அவனை மக்கள் வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தனர். கூட்டத்தில் அவனுக்கு டாபியின் முகம் தெரிந்தது. அவன் உதவி கேட்டுக் கத்தினான். ஆனால் டாபி, "சார், ஹாரி பாட்டர் இங்கு பாதுகாப்பாக இருக்கிறார்," என்று கூறிவிட்டு மறைந்துவிட்டது. பின் டர்ஸ்லீ குடும்பத்தினர் தோன்றினர். டட்லீ அக்கூண்டின் கம்பிகளைப் பிடித்துக் கடுமையாக ஆட்டிக் கொண்டே ஹாரியைப் பார்த்துச் சிரித்தான்.

"நிறுத்து," என்று ஹாரி முணுமுணுத்தான். கம்பிகள் ஆட்டப்பட்டுக் கொண்டிருந்த சத்தம், கனத்துப் போயிருந்த அவனது தலைக்குள் எதிரொலித்துக் கொண்டிருந்தது. "என்னைத் தனியாக விட்டுவிடுங்கள் . . . நிறுத்துங்கள் . . . நான் தூங்க வேண்டும் . . ."

அவன் தன் கண்களைத் திறந்தான். சன்னலின் தடுப்புக் கம்பிகளின் வழியாக நிலவொளி பாய்ந்து கொண்டிருந்தது. அக்கம்பிகளின் வழியாக யாரோ ஒருவன் அவனை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனது முகத்தில் புள்ளிகள் நிறைந்திருந்தன. அவனது தலைமுடி செம்பட்டையாக இருந்தது. அவனது மூக்கு நீண்டிருந்தது.

ஹாரியின் சன்னலுக்கு வெளியே ரான் வீஸ்லீ இருந்தான்.

Scanned by CamScanner

அத்தியாயம் மூன்று

ரானின் வீட்டில்

"ரான்!" என்று கூறி ஹாரி ஆசுவாசப் பெருமூச்சுவிட்டான். சன்னலருகே ஊர்ந்து சென்று, அதில் பொருத்தப்பட்டிருந்த கம்பிகளின் வழியாகப் பேசுவதற்கு ஏதுவாக, ஹாரி அந்த சன்னலின் கதவை மேலே தூக்கிவிட்டான். "ரான், உனக்கு எப்படி . . . அட, இது என்ன?"

தான் எதைப் பார்த்துக் கொண்டிருந்தோம் என்பது ஹாரியின் புத்திக்கு உறைத்ததும் அவன் வாயைப் பிளந்தான். நீல வண்ணத்தில் இருந்த ஒரு பழைய காரின் பின்னிருக்கையின் சன்னல் வழியாக ரான் தன் தலையை வெளியே நீட்டிக் கொண்டிருந்தான். அந்தக் கார் அந்தரத்தில் நின்று கொண்டிருந்தது. அதன் முன்னிருக்கைகளில் இருந்து ரானின் மூத்த இரட்டைச் சகோதரர்களான ஃபிரெட்டும் ஜார்ஜும் தங்கள் பற்கள் முழுவதையும் காட்டிச் சிரித்துக் கொண்டிருந்தனர்.

"ஹாரி, நன்றாக இருக்கிறாயா?"

"இங்கே என்ன நடந்து கொண்டிருக்கிறது?" என்று ரான் கேட்டான். "நீ ஏன் என் கடிதங்களுக்கு பதில் போடவில்லை? என்னுடன் வந்து தங்குமாறு நான் பன்னிரண்டு முறை உனக்கு எழுதியிருப்பேன். பிறகு, நீ மகுள்களுக்குத் தெரியும் விதத்தில் மந்திரவித்தையைப் பயன்படுத்தியதற்காக உனக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்ததாக என் அப்பா தெரிவித்தார்."

"அப்படிச் செய்தது நானல்ல . . . ஆமாம், உன் அப்பாவுக்கு இது எப்படித் தெரியும்?"

"அவர் மந்திரஜால அமைச்சகத்தில் வேலை பார்க்கிறார்," என்று ரான் கூறினான். "பள்ளிக்கு வெளியே நாம் மந்திர வித்தைகளைப் பயன்படுத்தக்கூடாது என்பது உனக்குத் தெரியும்தானே? –"

அந்தரத்தில் மிதந்து கொண்டிருந்த அந்தக் காரின்மீது தன் கண்களை ஓட்டியபடி, ஹாரி, "நீ இப்படிக் கூறுவது வேடிக்கையாக இருக்கிறது," என்றான்.

"ஓ! இதுவா? இது கணக்கில் வராது. நாங்கள் இந்தக் காரை வெறுமனே இரவல் வாங்கியிருக்கிறோம். இது எங்கள் அப்பாவுடையது. நாங்கள் இதை மந்திரசக்தியால் உருவாக்கவில்லை.

Scanned by CamScanner

ஆனால், உடன் தங்கியிருக்கும் மகுள்களின் கண்களுக்கு முன்னால் மந்திர வித்தையைப் பயன்படுத்துவது என்பது . . ."

"நான் அதைச் செய்யவில்லை என்று ஏற்கனவே கூறினேன் இல்லையா? ஆனால் அதைப் பற்றி விலாவாரியாக எடுத்துரைக்கக் கொஞ்ச நேரம் ஆகும். ரான், இங்கு டர்ஸ்லீ தம்பதியினர் என்னை அடைத்து வைத்துள்ளனர் என்றும் நான் ஹாக்வார்ட்ஸுக்குத் திரும்பி வர என்னை அனுமதிக்க மாட்டார்கள் என்றும் ஹாக்வார்ட்ஸில் உள்ளவர்களிடம் உன்னால் கூற முடியுமா? என்னால் மந்திர வித்தையைப் பயன்படுத்த முடியாது என்பது உனக்குத் தெரியும். அப்படிச் செய்தால் நான் மூன்று நாட்களுக்குள் இரண்டாவது முறையாக மந்திர வித்தையைப் பயன்படுத்திவிட்டேன் என்று மந்திரஜால அமைச்சகம் என்மீது பாய்ந்துவிடும். அதனால் –"

"ஹாரி, முதலில் உளறிக் கொண்டிருப்பதை நிறுத்து!" என்று ரான் கூறினான். "நாங்கள் இங்கு வந்ததே உன்னை எங்களுடன் கூட்டிச் செல்வதற்காகத்தான்."

"ஆனால் என்னை வெளிக் கொண்டுவர நீயும் மந்திர வித்தையை பயன்படுத்தக்கூடாதே –"

"அதற்குத் தேவையில்லை," என்று கூறிய ரான், தன் தலையை முன்னிருக்கையை நோக்கித் திருப்பிப் பெரிதாகப் புன்னகைத்தான். "நான் யாருடன் வந்திருக்கிறேன் என்பதை நீ மறந்துவிட்டதுபோலத் தோன்றுகிறது."

ஃபிரெட் வீஸ்லீ ஹாரியை நோக்கி ஒரு கயிற்றின் முனையை எறிந்தவாறு, "இதை உன் சன்னல் கம்பிகளைச் சுற்றிக் கட்டு," என்றான்.

"டர்ஸ்லீ குடும்பத்தினர் விழித்துவிட்டால் நான் காலி," என்று கூறிவிட்டு, ஹாரி அக்கயிற்றின் ஒரு முனையை ஒரு கம்பியின்மீது இறுக்கிக் கட்டியதும் ஃபிரெட் தன் காரின் ஆக்ஸிலரேட்டரை அழுத்தத் துவங்கினான்.

"ஹாரி, கவலைப்படாதே," என்று ஃபிரெட் கூறினான். "பின்னால் தள்ளி நின்று கொள்."

ஹாரி பின்னால் நகர்ந்து சென்று ஹெட்விக்கின் அருகே நின்று கொண்டான். நடந்து கொண்டிருந்த விஷயம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை அறிந்திருந்ததுபோல ஹெட்விக் அசைவின்றியும் அமைதியாகவும் நின்று கொண்டிருந்தது. கார் எஞ்சினின் வேகம் அதிகரிக்க அதிகரிக்க, சத்தமும் கூடியது. திடீரென்று ஏதோ நொறுங்கியது போன்ற ஒரு சத்தத்துடன், சன்னலில் அடிக்கப்பட்டிருந்த கம்பிகள் ஒட்டுமொத்தமாக அதிலிருந்து பிய்த்துக் கொண்டு வந்தன. ஃபிரெட் தன் காரை நேரே மேலே ஓட்டினான். ஹாரி வேகமாக சன்னருகே ஓடி வந்து பார்த்தான். சன்னலின் கம்பிச்சட்டம் தரையிலிருந்து ஒருசில அடிகளுக்கு மேலே தொங்கிக் கொண்டிருந்தது. மூச்சு வாங்கியபடியே

Scanned by CamScanner

ரான் அதைக் காருக்குள் இழுத்துக் கொண்டிருந்தான். ஹாரி பதற்றத்துடன் காதுகொடுத்துக் கேட்டான். டர்ஸ்லீ தம்பதியரின் படுக்கையறையிலிருந்து எந்தச் சத்தமும் எழவில்லை.

அந்தக் கம்பிச்சட்டம் காரின் பின்னிருக்கையைப் பாதுகாப்பாக அடைந்தவுடன், ஃபிரெட் காரைப் பின்னால் நகர்த்தி, அதை ஹாரியின் சன்னலுக்கு எவ்வளவு அருகாமையில் கொண்டுவர முடியுமோ அவ்வளவு அருகே கொண்டு வந்தான்.

"காரில் ஏறு," என்று ரான் கூறினான்.

"ஆனால் என்னுடைய ஹாக்வார்ட்ஸ் சாமான்கள்? என் மந்திரக் கோல்? என் மந்திரத் துடப்பம்?"

"அவை எங்கே இருக்கின்றன?"

"மாடிப்படிக்கு கீழே இருக்கும் சிற்றறையில் அவை பூட்டி வைக்கப்பட்டுள்ளன. ஆனால் என்னால் இந்த அறையைவிட்டு வெளியே போக முடியாது."

"அது ஒன்றும் பெரிய பிரச்சனை இல்லை," என்று காரின் முன்னிருக்கையில் இருந்த ஜார்ஜ் கூறினான். "ஹாரி, நீ கொஞ்சம் விலகிக் கொள்."

ஃபிரெட்டும் ஜார்ஜும் கவனமாகக் காரின் சன்னல் வழியாக வெளியேறி ஹாரியின் அறைக்குள் வந்தனர். ஜார்ஜ் ஒரு சாதாரணக் கொண்டை ஊசியைக் கையில் எடுத்து, அதை வைத்து ஹாரியின் அறைக் கதவில் இருந்த பூட்டைத் திறக்க முயன்றான். அவர்களிடம் இருந்த இது போன்ற திறமைகளைத் தன்னால் மெச்சாமல் இருக்க முடியாது என்று ஹாரி நினைத்துக் கொண்டான்.

"மகுள்களின் சில தந்திரங்களைத் தெரிந்து வைத்திருப்பது வெட்டி வேலை என்று பல மந்திரவாதிகள் கருதுகின்றனர்," என்று ஃபிரெட் கூறினான். "ஆனால் அவற்றைக் கற்று வைத்திருப்பது இக்கட்டான நேரங்களில் உதவும் என்று நாங்கள் நினைக்கிறோம் – அவற்றுக்கு வேகம் போதாது என்றாலும்கூட."

'கிளிக்' என்று ஒரு சிறு சத்தம் கேட்டது. உடனே கதவு திறந்து கொண்டது.

"நாங்கள் போய் உன் டிரங்க் பெட்டியை எடுத்து வருகிறோம். நீ அதற்குள் உன் அறையிலிருந்து உனக்குத் தேவைப்படும் பொருட்களை எடுத்து ரானிடம் கொடு," என்று ஜார்ஜ் கிசுகிசுத்தான்.

அந்த இரட்டையர் ஹாரியின் அறையைவிட்டு வெளியே இருட்டாக இருந்த பகுதிக்குள் நுழைந்தபோது, "மாடிப்படியின் கீழ்ப்படிக்கட்டில் பார்த்து இறங்குங்கள். அது 'கிறீச்' என்று சத்தம் போடும்," என்று ஹாரி கிசுகிசுப்பாகக் கூறினான்.

ஹாரி தன் அறைக்குள் அங்குமிங்கும் வேகமாக ஓடித் தனக்குத் தேவைப்பட்டப் பொருட்களை எடுத்து ரானிடம் ஒவ்வொன்றாகக் கொடுத்தான். பின் தனது கனமான டிரங்க் பெட்டியைக் கஷ்டப்பட்டுத் தூக்கி வந்து கொண்டிருந்த ஃபிரெட்டுக்கும்

Scanned by CamScanner

ஜார்ஜுக்கும் அவன் கை கொடுத்து உதவினான். பெரியப்பா வெர்னன் இருமிய சத்தம் ஹாரிக்குக் கேட்டது.

ஒருவழியாக அவர்கள் மாடிப்படியை ஏறிக் கடந்தனர். பின் அப்பெட்டியை ஹாரியின் அறைக்குள் தூக்கிச் சென்று, சன்னலின்மீது அதை வைத்தனர். காரில் இருந்த ரானுடன் சேர்ந்து அப்பெட்டியைக் காருக்குள் இழுப்பதற்காக ஃபிரெட் மீண்டும் காருக்குள் நுழைந்தான். ஜார்ஜும் ஹாரியும் அதை அந்த அறைக்குள் இருந்து அங்குலம் அங்குலமாக வெளியே தள்ளினர். அப்பெட்டி சன்னல் வழியாக மெதுவாக வெளியே சென்று கொண்டிருந்தது.

பெரியப்பா வெர்னன் மீண்டும் ஒரு முறை இருமினார்.

காருக்குள் இருந்து அப்பெட்டியை இழுத்துக் கொண்டிருந்த ஃபிரெட், "இன்னும் கொஞ்சம் தள்ளுங்கள்," என்று கூறினான். "ஒரே ஒரு முறை பலமாகத் தள்ளுங்கள்!"

ஹாரியும் ஜார்ஜும் அப்பெட்டியைத் தங்கள் தோள்களைக் கொண்டு பலமாகத் தள்ளினர். அது வழுக்கிக் கொண்டு சென்று காரின் பின்னிருக்கையில் விழுந்தது.

"சரி, நாம் கிளம்பலாம்," என்று ஜார்ஜ் கிசுகிசுத்தான்.

ஹாரி சன்னலின்மீது ஏறிக் கொண்டிருந்தபோது அவனுக்குப் பின்னால் இருந்து பயங்கரமான கிறீச்சொலி ஒன்று எழுந்தது. அதைத் தொடர்ந்து பெரியப்பா வெர்னனின் இடிமுழக்கக் குரல் கேட்டது.

"அந்தப் பாழாய்ப் போன ஆந்தை!" என்று வெர்னன் டர்ஸ்லீ கத்தினார்.

"ஐயோ, நான் ஹெட்விக்கை மறந்தே போய்விட்டேன்!" என்று ஹாரி முணுமுணுத்தான்.

மாடிப்படிக்குக் கீழே இருந்த மின்விளக்குப் போடப்படும் சத்தம் கேட்ட அதே கணத்தில், ஹாரி தனது அறையின் குறுக்காகப் பாய்ந்தான். ஹெட்விக்கின் கூண்டைத் தாவி எடுத்துக் கொண்டு, சன்னலருகே விரைந்து சென்று அதை ரானிடம் கொடுத்தான். சன்னலின்மீது ஏற அவன் போராடிக் கொண்டிருந்தபோது, பெரியப்பா வெர்னன் அவனது அறைக் கதவில் மோதினார் – பூட்டப்படாதிருந்த அக்கதவு டமாலென்று திறந்தது.

ஒரு கணம், பெரியப்பா வெர்னன், நிலைப்படியில் ஆணியடித்தாற்போல நின்று கொண்டிருந்தார். பின் உடனடியாக சுதாரித்துக் கொண்டு, எருதுபோல முக்காரமிட்டுக் கொண்டே ஹாரியை நோக்கிப் பாய்ந்து சென்று அவனது கணுக்காலைப் பிடித்துக் கொண்டார்.

ஹாரியின் கைகளைப் பிடித்துக் கொண்ட ரானும் ஃபிரெட்டும் ஜார்ஜும் அவனைத் தங்களால் முடிந்த அளவுக்கு பலமாகத் தங்கள் பக்கம் இழுக்கத் துவங்கினர்.

"பெட்டூனியா!" என்று வெர்னன் கர்ஜித்தார். **"அவன் தப்பித்துக் கொண்டிருக்கிறான்!** அவன் தப்பித்துக் கொண்டிருக்கிறான்!"

Scanned by CamScanner

வீஸ்லீ சகோதரர்கள் முழுப் பலத்துடன் படுவேகமாக ஓர் இழுப்பு இழுத்தனர். ஹாரியின் கால் வெர்னனின் பிடியிலிருந்து நழுவியது. ஹாரி காருக்குள் வந்து காரின் கதவைச் சாத்தியவுடன், "ஃபிரெட், முடிந்த அளவு பலமாக ஆக்ஸிலரேட்டரை அழுத்து!" என்று ரான் கத்தினான். கார் நிலாவை நோக்கிப் பறந்தது.

ஹாரியால் நம்பவே முடியவில்லை. அவன் இப்போது ஒரு சுதந்திரப் பறவை. காரின் கண்ணாடி சன்னலை அவன் கீழிறக்கினான். இரவுக் காற்று அவனது தலைமுடியை பலமாகத் தாக்கியது. அவன் பின்னால் திரும்பிப் பார்த்தான். பிரைவிட் தெருவில் இருந்த வீடுகளின் மொட்டைமாடிகள் சிறிதாகிக் கொண்டிருந்தன. பெரியப்பா வெர்னன், பெரியம்மா பெட்டூனியா, டட்லீ ஆகிய மூவரும் திறந்த வாய் மூடாமல், ஹாரியின் அறையின் சன்னலுக்கு வெளியே தொங்கிக் கொண்டிருந்தனர்.

"மீண்டும் அடுத்தக் கோடை விடுமுறையின்போது பார்க்கலாம்!" என்று ஹாரி கத்தினான்.

வீஸ்லீ சகோதரர்கள் வயிறு குலுங்கச் சிரித்தனர். ஹாரி பின்னிருக்கையில் வசதியாக உட்கார்ந்து கொண்டு வாயெல்லாம் பல்லாகச் சிரித்தான்.

அவன் ரானிடம், "ஹெட்விக்கைத் திறந்துவிடு. அது நம் காருக்குப் பின்னால் பறந்து வரட்டும். அது தன் இறக்கையை விரித்து மாமாங்கம் இருக்கும்!" என்று கூறினான்.

ஜார்ஜ் தன்னிடமிருந்த கொண்டை ஊசியை ரானிடம் கொடுத்தான். ஒருசில கணங்களுக்குப் பிறகு ஹெட்விக் ஆனந்தமாக சன்னல் வழியாகப் பறந்து சென்று காரின் அருகே மிதந்து வந்தது.

"ஹாரி, அப்புறம் கதை எப்படிப் போகிறது?" என்று ரான் பொறுமையிழந்து கேட்டான். "என்னதான் நடந்து கொண்டிருக்கிறது?"

டாபியைப் பற்றியும், அது தனக்குக் கொடுத்த எச்சரிக்கையைப் பற்றியும், கடைசியாகக் கேக் களேபரத்தைப் பற்றியும் ஹாரி அவர்களிடம் விலாவாரியாக எடுத்துரைத்தான். அவன் சொல்லி முடித்து வெகு நேரமாகியும் அங்கு ஓர் அதிர்ச்சி கலந்த மௌனம் நிலவியது.

கடைசியில் ஃபிரெட், "எங்கோ உதைக்கிறது," என்றான்.

"ஆமாம், ஏதோ இடறுகிறது," என்று ஜார்ஜும் ஒத்துக் கொண்டான். "இந்தச் சதித் திட்டத்தை யார் தீட்டியது என்பதை டாபி கூற மறுத்துவிட்டது, அப்படித்தானே?"

"டாபியால் கூற முடிந்திருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை," என்று ஹாரி கூறினான். "நான் ஏற்கனவே கூறியிருந்ததுபோல, அது வாய் தவறி எதையாவது சொல்ல வந்தபோதெல்லாம் அது தன் தலையைச் சுவரின்மீது முட்டிக் கொண்டது."

Scanned by CamScanner

ஃபிரெட்டும் ஜார்ஜும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டதை ஹாரி கவனித்தான்.

"அது என்னிடம் பொய் சொல்லியிருக்கிறது என்று நீங்கள் நினைக்கிறீர்களா?" என்று ஹாரி கேட்டான்.

"சரி, நான் அதை இப்படிப் பார்க்கிறேன். வீட்டில் வேலை செய்யும் எல்ஃபுகளுக்குச் சொந்தமாக ஒருசில மந்திரசக்திகள் உண்டு. ஆனால் அவை பொதுவாக அவற்றைத் தங்களுடைய எஜமானர்களின் அனுமதியில்லாமல் பயன்படுத்துவதில்லை. நீ ஹாக்வார்ட்ஸுக்கு மீண்டும் வருவதைத் தடுக்கும் நோக்கத்துடன்தான் டாபி அனுப்பப்பட்டதாக நான் கருதுகிறேன். யாரோ இதை விளையாட்டாகக் கருதியிருக்கிறார்கள். ஆமாம், நம் பள்ளியில் உன்மீது காழ்ப்புணர்ச்சிக் கொண்டுள்ளவர்கள் யாராவது உன் நினைவுக்கு வருகிறார்களா?"

"ஆமாம்," என்று ஹாரியும் ரானும் ஒருசேரக் குரல் கொடுத்தனர்.

"டிராகோ மால்ஃபாய்," என்று ஹாரி கூறினான். "அவன் என்னை வெறுக்கிறான்."

ஜார்ஜ் அவர்களை நோக்கித் திரும்பி, "டிராகோ மால்ஃபாயா?" என்று கேட்டான். "லூசியஸ் மால்ஃபாயின் பையனா?"

"அப்படித்தான் இருக்க வேண்டும். இது ஒன்றும் அவ்வளவு சாதாரணமான பெயர் இல்லையே?" என்று ஹாரி கூறினான். "ஏன் கேட்கிறாய்?"

"என் அப்பா அவரைப் பற்றிப் பேசி நான் கேட்டிருக்கிறேன்," என்று ஜார்ஜ் கூறினான். "பெயர் சொல்லப்படக்கூடாதவனுக்குப் பெரும் ஆதரவாளராக இருந்தவர் அவர்."

ஃபிரெட் தன் கழுத்தை வளைத்துத் திரும்பி ஹாரியைப் பார்த்து, "பெயர் சொல்லப்படக்கூடாதவன் மாயமாக மறைந்துவிட்டதும், லூசியஸ் மால்ஃபாய், தான் அதில் தீவிரமாக ஈடுபடவில்லை என்று கூறி நம் பக்கம் திரும்பி வந்துவிட்டார். அவரது கூற்று முழுக்க முழுக்க அபத்தமானது. பெயர் சொல்லப்படக்கூடாதவன் தன்னைச் சுற்றி அமைத்திருந்த நெருக்கமான ஆதரவாளர்களின் குழுவில் அவரும் இடம்பெற்றிருந்தார் என்று என் அப்பா கருதுகிறார்," என்று கூறினான்.

மால்ஃபாய் குடும்பத்தைப் பற்றிய இப்படிப்பட்ட வதந்திகளை ஹாரி முன்பே கேள்விப்பட்டிருந்ததால் இது அவனை அவ்வளவாக ஆச்சரியப்படுத்தவில்லை. மால்ஃபாய் தன் நடவடிக்கைகள் மூலம், டட்லீ ஓர் அன்பான, அறிவார்ந்த, அடுத்தவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கின்ற ஒருவன் என்பதுபோலத் தோன்றச் செய்துவிட்டான்.

"மால்ஃபாய் குடும்பத்தினரிடம் வீட்டு வேலை செய்யும் எல்ஃப் இருக்கிறதா என்று எனக்குத் தெரியவில்லை," என்று ஹாரி கூறினான்.

"யார் அதற்கு உரிமையாளர்களோ அவர்கள் கண்டிப்பாக மந்திரவாதிகளின் குடும்பம் ஒன்றைச் சேர்ந்தவர்களாகத்தான் இருக்க வேண்டும். அதோடு அவர்கள் பெரும் பணக்காரர்களாகவும் இருக்க வேண்டும்."

Scanned by CamScanner

"வீட்டுத் துணிமணிகளை இஸ்திரி போட்டுத் தருவதற்கு வீட்டோடு ஒரு எல்ஃப் இருந்தால் நன்றாக இருக்கும் என்று என் அம்மா எப்போதும் ஆசைப்பட்டுக் கொண்டிருக்கிறார்," என்று ஜார்ஜ் கூறினான். "ஆனால் எங்களுக்குக் கிடைத்ததெல்லாம் பரணில் பதுங்கி இருக்கும் ஓர் உருப்படாத, வயதான, கோரைப் பல் ராட்சஸப் பேயும், எங்கள் தோட்டமெங்கும் வியாபித்திருக்கும் தோட்டப் பேய்களும்தான். பெரிய கோட்டைக் கொத்தளங்களுடன் வரும் மாளிகை வீடுகளில்தான் எல்ஃபுகள் இருக்கும். எங்கள் வீட்டில் உன்னால் அதைப் பார்க்க முடியாது . . ."

ஹாரி அமைதியாக இருந்தான். மால்ஃபாயிடம் எப்போதும் எல்லாவற்றிலும் சிறந்தவையே இருந்தன. அவனது குடும்பத்தாரிடம் மந்திர உலகத் தங்கத்திற்குப் பஞ்சமே இருக்கவில்லை. ஒரு பெரிய மாடமாளிகையில் பெருமிதத்துடன் மால்ஃபாய் நடந்து திரிந்து கொண்டிருந்ததை ஹாரியால் தன் மனக்கண்ணில் எளிதாகப் பார்க்க முடிந்தது. தன்னை ஹாக்வார்ட்ஸுக்கு வரவிடாமல் தடுக்கத் தன் வீட்டு எல்ஃபை அனுப்பத் துணியும் செயல், கச்சிதமாக மால்ஃபாய் செய்யத் துணியும் ஒரு செயல்போலவே தோன்றியது. டாபி கூறியதை உண்மை என்று தான் நம்பியது மடத்தனம்தானோ என்று ஹாரிக்கு ஒரு சந்தேகம் வந்தது.

"ஆனால் உன்னைக் கூட்டிச் செல்ல நாங்கள் வந்தது எனக்கு மகிழ்ச்சியே," என்று ரான் கூறினான். "என்னுடைய கடிதம் ஒன்றுக்குக்கூட நீ பதில் அனுப்பாமல் இருந்தது உண்மையிலேயே எனக்குப் பெருங்கவலை அளிக்கத் துவங்கியது. நான் முதலில் அது எரோலின் தவறு என்றுதான் நினைத்தேன் –"

"எரோல்?"

"எங்களுடைய ஆந்தை. அது படுகிழமாகிவிட்டது. கடிதத்தைப் பட்டுவாடா செய்யும்போது அது மயங்கி விழுவது ஏற்கனவே நடந்திருக்கிறது. அதனால் நான் ஹெர்ம்ஸைக் கடன் வாங்க முயன்றேன் –"

"யாரை?"

"பெர்சி மாணவ அணித் தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும் என் அம்மாவும் அப்பாவும் அவனுக்காக வாங்கிக் கொடுத்த ஆந்தை அது," என்று முன்னிருக்கையில் இருந்த ஃபிரெட் கூறினான்.

"ஆனால் பெர்சி அதை எனக்குத் தர மறுத்துவிட்டான்," என்று ரான் கூறினான். "தனக்கு அது தேவை என்று கூறிவிட்டான்."

"பெர்சி இக்கோடை விடுமுறை முழுவதும் கொஞ்சம் விநோதமாக நடந்து கொண்டு வருகிறான்," என்று ஜார்ஜ் சிரிப்புடன் கூறினான். "அவன் ஏராளமான கடிதங்களையும் அனுப்பிக் கொண்டிருக்கிறான். தன் அறைக்குள் புகுந்து கதவைப் பூட்டிக் கொண்டு நிறைய நேரத்தையும் செலவழித்து வருகிறான். . . ஒரு பேட்ஜுக்கு எவ்வளவு முறைதான் ஒருவனால் பாலிஷ் போட முடியும்? . . . ஃபிரெட், நீ மேற்கு நோக்கி அதிகமாகப் போகிறாய்,"

Scanned by CamScanner

என்று ஜார்ஜ் டாஷ்போர்டில் இருந்த திசைகாட்டியைச் சுட்டிக்காட்டியபடியே கூறினான்.

"ஆமாம், உங்கள் அப்பாவிற்கு நீங்கள் இந்தக் காரை எடுத்து வந்திருப்பது தெரியுமா?" என்று ஹாரி, அவர்கள் என்ன பதில் கூறவிருந்தார்கள் என்பதை ஊகித்தவாறே கேட்டான்.

"இல்லை. அவருக்குத் தெரியாது," என்று ரான் கூறினான். "அவருக்கு இன்றிரவு வேலை இருக்கிறது. வண்டியை நிறுத்தி வைக்கும் அறைக்குள் இதை நாம் அம்மாவிற்குத் தெரியாமல் கொண்டுபோய் நிறுத்திவிட்டால் அவருக்குத் தெரிய வாய்ப்பில்லை."

"ஆமாம், மந்திரஜால அமைச்சகத்தில் உன் அப்பா என்ன வேலை பார்க்கிறார்?" என்று ஹாரி கேட்டான்.

"இருப்பதிலேயே சுவாரசியமற்ற ஓர் அலுவலகத்தில் அவர் வேலை பார்க்கிறார்," என்று ரான் கூறினான். "மகுள் கலைப்பொருட்களின் துஷ்பிரயோக அலுவலகம்தான் அது."

"எந்த அலுவலகமென்று கூறினாய்?"

"மந்திரசக்தி ஏற்றப்பட்ட மகுள் பொருட்கள் தவறுதலாக மகுள்களின் கடைகளையோ அல்லது வீடுகளையோ சென்றடையாமல் பார்த்துக் கொள்ளும் அலுவலகம் அது. கடந்த வருடம் ஒரு வயதான மந்திரவாதினி இறந்து போனபோது, அவரது தேநீர்க் கோப்பைகள், கலைப்பொருட்களை விற்பனை செய்த ஒரு கடைக்குப் போய்விட்டன. அவற்றை வாங்கிய ஒரு மகுள் பெண்மணி அவற்றைத் தன் வீட்டிற்குக் கொண்டு சென்று, தன் விருந்தினர்களுக்கு அவற்றில் தேநீர் ஊற்றிக் கொடுக்க முயற்சித்தார். உடனே அங்கு பெரும் அமளி துமளி ஏற்பட்டது. அதனால் எங்கள் அப்பா தன் அலுவலகத்தில் பல வாரங்களாக இது குறித்துத் தன் மண்டையை உடைக்க வேண்டியதாயிற்று."

"பிறகு என்ன நடந்தது?"

"அந்தத் தேநீர்க் கோப்பைகள் தாறுமாறாக அங்குமிங்கும் ஆடிக் குதிக்கத் துவங்கின. அவற்றில் படுசூடாக இருந்த தேநீர் அந்த அறையெங்கும் கொட்டியது. சர்க்கரைக் கட்டிகளை எடுக்கப் பயன்படுத்தும் சிறிய இடுக்கி ஒருவரின் மூக்கை இறுகப் பற்றிக் கொண்டதால் அவரை மருத்துவமனையில் அனுமதிக்க நேர்ந்தது. அப்போது எங்கள் அப்பா பைத்தியம் பிடித்தவர்போல நடந்து கொண்டார். அவரது அலுவலகத்தில் அவரும் ஒரு பழைய மந்திரவாதியான பெர்கின்ஸ் என்பவரும் மட்டும்தான் இருக்கின்றனர். அதனால், விஷயங்களை மூடி மறைக்க, மக்கள்மீது ஞாபக மறதி மந்திரத்தைப் பயன்படுத்துவது போன்ற செயல்களில் அவர்கள் இருவரும்தான் ஈடுபட்டாக வேண்டும் . . ."

"அப்படியானால் உங்கள் அப்பா . . . இந்தக் கார் . . ."

ஃபிரெட் சிரித்தான். "ஆமாம். மகுள்கள் சம்பந்தப்பட்ட அனைத்து விஷயங்கள்மீதும் எங்கள் அப்பா அதிக ஆர்வம் கொண்டவர். எங்கள் வீட்டிலுள்ள 'கார் நிறுத்தும் இடம்' முழுவதும்

Scanned by CamScanner

மகுள்கள் பயன்படுத்தும் பொருட்களால் நிரம்பியுள்ளது. அவர் அப்பொருட்களை அக்குவேறு ஆணிவேறாகக் கழற்றி, அவற்றில் மந்திரத்தை ஏற்றி, பின்னர் முன்பிருந்த மாதிரியே அவற்றைப் பொருத்திவிடுவார். அவர் எங்கள் வீட்டைச் சோதனையிட்டால், அவர் தன்னையே கைது செய்து கொள்ள நேரிடும். இது அம்மாவுக்குப் பைத்தியம் பிடிக்கச் செய்துவிடுகிறது."

ஜார்ஜ் காரின் முன் கண்ணாடி வழியாகக் கீழே எட்டிப் பார்த்து, "அதுதான் முக்கியச் சாலை," என்று கூறினான். "பத்து நிமிடங்களில் நாம் அங்கிருக்கலாம் . . . வானமும் வெளுத்துக் கொண்டிருக்கிறது."

கிழக்கில் லேசான இளஞ்சிவப்பு நிற வெளிச்சம் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது.

ஃபிரெட் காரைப் படிபடியாகக் கீழே கொண்டுவந்து கொண்டிருந்தான். வயல்களும் மரங்களும் அடங்கிய நிலப்பகுதியை ஹாரியால் பார்க்க முடிந்தது.

"நாம் இப்போது எங்களுடைய கிராமத்திற்குச் சற்று வெளியே இருக்கிறோம்," என்று ஜார்ஜ் கூறினான். "இதன் பெயர் ஆட்டரி செயின்ட் கேச்போல் . . ."

அந்தப் பறக்கும் கார் தொடர்ந்து கீழே இறங்கிக் கொண்டிருந்தது. பிரகாசமான சிவப்புச் சூரியனின் விளிம்பு மரங்களின் ஊடாகக் கண்ணாமூச்சி விளையாடிக் கொண்டிருந்தது.

"தரையைத் தொடுகிறோம்!" என்று ஃபிரெட் கத்திய அதே தருணத்தில் ஒரு லேசான மோதலுடன் அவர்கள் தரையிறங்கினர். ஒரு சிறிய முற்றத்தில், சிதிலமடைந்த நிலையில் இருந்த ஒரு 'கார் நிறுத்தும்' இடத்தருகே அவர்கள் இறங்கியிருந்தனர். ஹாரி முதன்முறையாக ரானின் வீட்டைப் பார்த்தான்.

அது ஒரு காலத்தில் மிகப் பெரிய பன்றிக்கூடமாக இருந்திருக்கும் என்பதுபோலத் தோன்றியது. ஆனால் அவ்வப்போது அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கூடுதலாகக் கட்டப்பட்ட அறைகளால் அதன் உயரம் அதிகரித்து, பல மாடிகள் உயரம் கொண்ட ஒரு கட்டிடமாக அது மாறியிருந்தது. மாயாஜாலம்தான் அதைக் கீழே விழுந்துவிடாமல் தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்க வேண்டும் என்று ஹாரி நினைத்தான். சிவப்பு நிறத்தில் இருந்த அதன் கூரையின்மேல் நான்கைந்து புகைபோக்கிகள் வெளியே நீட்டிக் கொண்டிருந்தன. தரையில் நடப்பட்டிருந்த அறிவிப்புப் பலகை தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருந்தது. அதில் 'த பர்ரோ' என்று எழுதப்பட்டிருந்தது. முன்வாசல் கதவையொட்டி வெல்லிங்டன் காலணிகள் குவியலாகக் கிடந்தன. துருப்பிடித்தக் கொப்பரை ஒன்றும் அதனருகே கிடந்தது. நன்றாகத் தின்று கொழுத்திருந்த பழுப்பு நிறக் கோழிகள் அந்த முற்றத்தில் மேய்ந்து கொண்டிருந்தன.

"இங்கு பெரிதாக ஒன்றும் கிடையாது," என்று ரான் கூறினான்.

பிரைவிட் தெருவை நினைத்துக் கொண்ட ஹாரி, **"இது அற்புதமாக இருக்கிறது,"** என்று மகிழ்ச்சியாகக் கூறினான்.

Scanned by CamScanner

அவர்கள் அனைவரும் காரில் இருந்து இறங்கினர்.

"நாம் இப்போது சத்தமில்லாமல் மாடிக்குச் செல்ல வேண்டும்," என்று ஃபிரெட் கூறினான். "பின்னர் அம்மா நம்மைக் காலை உணவிற்காகக் கூப்பிடும்வரை காத்திருக்க வேண்டும். ரான், நீ அப்போது மாடிப்படிகளில் தாவிக் குதித்து வந்து, 'அம்மா, நேற்றிரவு நம் வீட்டிற்கு யார் வந்தார்கள் என்று பாரேன்!' என்று கத்த வேண்டும். அம்மாவும் ஹாரியைப் பார்த்தவுடன் மகிழ்ச்சி அடைவார். நாம் காரை எடுத்துக் கொண்டு பறந்தோம் என்பது யாருக்கும் தெரிய வேண்டிய அவசியம் கிடையாது."

"சரி," என்று ரான் கூறினான். "ஹாரி, வா, நான் என்னுடைய –"

ரானின் முகம் பச்சை நிறத்திற்கு மாறியது. அவனது கண்கள் அவர்களது வீட்டின்மீது நிலைகுத்தி நின்றன. மற்ற மூவரும் அத்திசை நோக்கித் திரும்பினர்.

வீஸ்லீ சகோதரர்களின் அம்மாவான மோலி அந்த முற்றத்தின் மறுமுனையிலிருந்து பீடுநடை போட்டு வந்து கொண்டிருந்தார். மேய்ந்து கொண்டிருந்த கோழிகள் திசைக்கொன்றாக ஓடின. அன்பான முகத்தையும், குள்ளமான, குண்டான உருவத்தையும் கொண்டிருந்த ஒரு பெண்மணியால் எப்படிக் கோரைப் பற்களுடன்கூடிய ஒரு புலியைப்போலக் காட்சியளிக்க முடியும் என்பது ஆச்சரியமாக இருந்தது.

"ஓ!" என்று ஃபிரெட் நடுங்கினான்.

"ஐயோ!" என்று ஜார்ஜ் அலறினான்.

மோலி அவர்கள் முன் வந்து நின்றார். தன் இடுப்பில் இரண்டு கைகளையும் தூக்கி வைத்துக் கொண்டு, குற்ற உணர்வு பொங்கி வழிந்து கொண்டிருந்த அந்த முகங்களை ஒவ்வொன்றாகத் தன் பார்வையால் அளந்தார். அவர் அணிந்திருந்த ஆடையின் பாக்கெட்டில் ஒரு மந்திரக்கோல் தன் தலையை நீட்டிக் கொண்டிருந்தது.

"அப்புறம்?" என்று அவர் கர்ஜித்தார்.

மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் வெளிப்படுத்தியதாகத் தான் நம்பிய ஒரு குரலில், ஜார்ஜ், "அம்மா, காலை வணக்கம்!" என்று கூறினான்.

கனத்த அமைதியுடன் இருந்த ஒரு குரலில், மோலி, "நான் எவ்வளவு தூரம் கவலைப்பட்டிருப்பேன் என்று உங்களுக்கு ஏதாவது அக்கறை இருக்கிறதா?" என்று கேட்டார்.

"அம்மா, மன்னித்துவிடுங்கள்! ஆனால் நாங்கள் இவனை -"

மோலியின் பையன்கள் மூன்று பேரும் அவரைவிட உயரமாக வளர்ந்திருந்தனர். ஆனால் குமுறி வெடித்துக் கொண்டிருந்த அவரது கோபத்திற்கு முன்னால் அவர்கள் தலைகுனிந்து நின்றனர்.

"படுக்கைகள் காலியாக இருக்கின்றன . . . எந்தத் துண்டுச் சீட்டும் இல்லை . . . காரைக் காணவில்லை . . . அது எங்காவது

Scanned by CamScanner

மோதி இருக்கலாம் . . . கவலையில் என் மனம் துடித்துக் கொண்டிருந்தது . . . உங்களுக்கு அம்மாவின் மேல் ஒரு துளியாவது அக்கறை இருக்கிறதா? . . . நான் உயிரோடு இருக்கும்வரை இது இனியொரு முறை நடக்கக்கூடாது . . . அப்பா வரட்டும்! பில்லோ, சார்லியோ அல்லது பெர்சியோ ஒருபோதும் எங்களுக்கு இது போன்ற தொல்லைகளைக் கொடுத்ததில்லை . . ."

"கச்சிதமான பெர்சி!" என்று ஃபிரெட் முணுமுணுத்தான்.

ஃபிரெட்டின் நெஞ்சில் தன் கைகளை வைத்து, **"உனக்கு வாய்தான் கிழிகிறது. நீ அவனிடமிருந்து கொஞ்சமாவது கற்றுக் கொண்டால் நன்றாக இருக்கும்!"** என்று மோலி காட்டுக்கூச்சல் போட்டார். "நீ செத்துப் போயிருக்கக்கூடும், யார் கண்ணிலாவது பட்டிருக்கக்கூடும், அல்லது உன் அப்பாவுடைய வேலைக்கு உலை வைத்திருக்கக்கூடும் –"

அவரது வசைமழை தொடர்ந்து பல மணிநேரம் நீடித்துக் கொண்டிருந்ததுபோலத் தோன்றியது. மோலி அவர்களைத் திட்டித் தீர்த்ததும் அவருக்குத் தொண்டை கட்டிக் கொண்டது. பின்னர் அவர் ஹாரியை நோக்கித் தன் பார்வையைத் திருப்பினார். ஹாரி உடனடியாகப் பின்வாங்கினான்.

"ஹாரி, உன்னைப் பார்த்ததில் எனக்குப் பெருமகிழ்ச்சி," என்று அவர் கூறினார். "உள்ளே வா, சாப்பிடலாம்."

அவர் திரும்பி வீட்டை நோக்கி நடக்கத் துவங்கினார். ஹாரி ரானை நடுக்கத்துடன் ஓரக் கண்ணால் பார்த்தான். ரான் அவனை ஊக்குவிக்கும் விதமாகத் தலையை அசைத்ததும், ஹாரி ரானின் தாயாரைப் பின்தொடர்ந்து சென்றான்.

சமையலறை சிறியதாகவும் குறுகலாகவும் இருந்தது. அறையின் நடுவே, நன்றாகத் தேய்ந்து போயிருந்த ஒரு சாப்பாட்டு மேசையும் ஒருசில நாற்காலிகளும் இருந்தன. ஒரு நாற்காலியின் முனையோரமாக ஹாரி உட்கார்ந்து கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தான். அவன் அதற்கு முன்பு ஒருபோதும் ஒரு மந்திரவாதியின் வீட்டிற்குள் சென்றதில்லை.

அவனுக்கு எதிரே இருந்த சுவரில் இருந்த கடிகாரத்தில் ஒரே ஒரு முள்தான் இருந்தது. அதில் எண்கள் எதுவும் இடம்பெற்றிருக்கவில்லை. அதன் ஓரங்களில், 'தேநீர்த் தயாரிப்பிற்கான நேரம்,' 'கோழிகளுக்கு உணவளிப்பதற்கான நேரம்,' மற்றும் 'நீ தாமதமாக வந்திருக்கிறாய்' போன்ற வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன. மாடச்சுவரில் மூன்று வரிசைகளில் புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவற்றில், **'உங்கள் சீஸை வசியப்படுத்துங்கள்,' 'பேக்கிங்கில் மாயாஜாலம்,'** மற்றும் **'ஒரு நிமிட விருந்துகள் – இது ஒரு மாயாஜாலம்!'** போன்ற புத்தகங்கள் இடம்பெற்றிருந்தன. பாத்திரங்கள் கழுவும் தொட்டிக்கு அருகே வைக்கப்பட்டிருந்த பழைய காலத்து வானொலி ஒன்று, "அடுத்து வரவிருப்பது 'மாயாஜால நேரம்.' அதில் உங்களை மகிழ்விக்க வருகிறார் பிரபல மந்திரவாதினிப் பாடலரசி செலஸ்டீனா வார்பெக்," என்று அறிவித்தது ஹாரியின் காதுகளில் விழுந்தது.

Scanned by CamScanner

மோலி தனக்குத் தானே பேசிக் கொண்டே காலை உணவைத் தாறுமாறாகத் தயாரித்துக் கொண்டிருந்தார். சாசேஜ்களை இருப்புச் சட்டியில் தூக்கி எறிந்து கொண்டே, தன் மகன்களை நோக்கி ஒரு கடுமையான பார்வையை வீசிக் கொண்டிருந்தார். அவ்வப்போது, "உங்கள் மனத்தில் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை," என்றோ, "இப்படி நடக்கும் என்று நான் ஒருபோதும் நம்பியதில்லை," என்றோ புலம்பிக் கொண்டிருந்தார்.

ஹாரிக்கு ஆறுதல் அளிக்கும் விதமாக, அவனைப் பார்த்து, "தம்பி, நான் உன்னைக் குற்றம் சொல்ல மாட்டேன்," என்று அவர் கூறினார். அப்படியே ஹாரியின் தட்டில் ஏழெட்டு சாசேஜ்களைப் போட்டார். "நானும் ரானின் அப்பாவும் உன்னைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தோம். வருகிற வெள்ளிக்கிழமைக்குள் நீ ரானின் கடிதங்களுக்கு பதில் போடாவிட்டால், நாங்களே வந்து உன்னைக் கூட்டிக் கொண்டு வரலாம் என்று நேற்று இரவுகூட நாங்கள் பேசிக் கொண்டிருந்தோம்." இப்போது ஹாரியின் தட்டில் மூன்று வறுத்த முட்டைகளைப் போட்டவாறே, மேலும் தொடர்ந்து, "ஆனால் சட்டத்திற்குப் புறம்பான ஒரு காரை நாட்டின் பாதி தூரம் ஓட்டிக் கொண்டு சென்றதைப் பற்றி என்ன சொல்ல? யாராவது உங்களைப் பார்த்திருந்தால் என்னவாகியிருக்கும்?"

அவர் சர்வசாதாரணமாகத் தன் மந்திரக்கோலை எடுத்து, பாத்திரம் கழுவும் இடத்தை நோக்கிச் சொடுக்கினார். அங்கிருந்த பாத்திரங்கள் தம்மைத் தாமே கழுவிக் கொள்ளத் துவங்கின. அவை ஒன்றையொன்று லேசாக இடித்துக் கொண்ட ஒலி பின்னணி இசைபோல ஒலித்துக் கொண்டிருந்தது.

"அம்மா, நேற்று மேகமூட்டமாக இருந்தது," என்று ஃபிரெட் கூறினான்.

"சாப்பிடும்போது நீ வாயை மூடிக் கொண்டிரு," என்று மோலி வெடுக்கென்று கூறினார்.

"அம்மா, அவர்கள் ஹாரியைப் பட்டினி போட்டுள்ளனர்," என்று ஜார்ஜ் கூறினான்.

மோலி ஹாரிக்கு ஒரு முழு ரொட்டியைத் துண்டு துண்டாக வெட்டி அவற்றின்மீது வெண்ணெயைத் தடவிக் கொண்டே, "நீயும் வாயை மூடு!" என்று ஜார்ஜைப் பார்த்துக் கூறினார். ஆனால் அது அவர் முன்பு கூறிய அளவுக்குக் காட்டமாக இருக்கவில்லை.

அக்கணத்தில், நீண்ட இரவு அங்கி ஒன்றை அணிந்திருந்த, செந்தலையுடன்கூடிய ஒரு சிறிய உருவம் சமையலறையில் தோன்றியதால் அவர்களது கவனம் சற்றுச் சிதறியது. அந்த உருவம் 'வீல்' என்று கத்திவிட்டு அங்கிருந்து ஓடிவிட்டது.

ஓர் அடங்கிய குரலில், ரான், "ஜின்னி," என்று ஹாரியிடம் கூறினான். "என் தங்கை. கோடை விடுமுறை முழுவதும் அவள் எப்போதும் உன்னைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தாள்."

Scanned by CamScanner

"ஆமாம் ஹாரி, உன் கையெழுத்து வேண்டும் என்று அவள் கேட்டுக் கொண்டிருந்தாள்," என்று பற்கள் தெரியச் சிரித்தபடி ஃபிரெட் கூறினான். ஆனால் அவனது கண்கள் அவனது அம்மாவின் கண்களைச் சந்தித்ததும், அவன் அதற்குப் பிறகு ஒரு வார்த்தைகூடப் பேசாமல் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு சாப்பாட்டில் கவனம் செலுத்தினான்.

அந்த நான்கு தட்டுகளும் காலியாகும்வரை அங்கு யாரும் எதுவும் பேசவில்லை. ஆனால் தட்டுகள் காலியாவதற்குச் சொற்ப நேரமே பிடித்தது.

ஃபிரெட் கொட்டாவி விட்டபடியே, "எனக்கு மிகவும் களைப்பாக இருக்கிறது," என்று கூறினான். அவன் ஒருவழியாகத் தன் கத்தியையும் முட்கரண்டியையும் கீழே வைத்துவிட்டு, "நான் தூங்கப் போகலாம் என்று நினைக்கிறேன் . . ." என்று கூறினான்.

"நீ தூங்கக்கூடாது," என்று மோலி கண்டிப்பாகக் கூறினார். "இரவு முழுவதும் கண்விழித்தது உன் தவறு. தோட்டத்தில் மறுபடியும் தோட்டப் பேய்களின் அட்டகாசம் தாங்க முடியவில்லை. நீ அவற்றை ஒழிக்கும் வேலையில் இறங்கு."

"அம்மா, ஆனால் –"

மோலி ரானையும் ஜார்ஜையும் பார்த்து, "ஏய், நீங்கள் இரண்டு பேரும் ஃபிரெட்டோடு சேர்ந்து கொள்ளுங்கள்," என்று கூறினார். பின் அவர் ஹாரியின் பக்கம் திரும்பி, "தம்பி, நீ போய்ப் படுத்துத் தூங்கு! அந்தப் பாழாய்ப் போன பறக்கும் காரில் உன்னைக் கூட்டி வர வேண்டும் என்று நீ அவர்களைக் கேட்கவில்லை" என்றார்.

சுத்தமாகத் தூக்கம் வராத நிலையில் இருந்த ஹாரி, வேகவேகமாக, "நானும் ரானுக்கு உதவுகிறேன். நான் ஒருபோதும் தோட்டப் பேய்களை விரட்டியடித்ததில்லை," என்று கூறினான்.

"நீயாக முன்வந்து உதவ முனைவதைப் பார்க்க மகிழ்ச்சியாக இருக்கிறது. ஆனால் அது ஒன்றும் அவ்வளவு சுவாரசியமான வேலை இல்லை," என்று மோலி கூறினார். "இது குறித்து லாக்ஹார்ட் என்ன கூறுகிறார் என்று இப்போது நாம் பார்க்கலாம்."

பின் அவர் அங்கு அடுக்கி வைக்கப்பட்டிருந்த புத்தகங்களில் இருந்து ஒரு கனமான புத்தகத்தை எடுத்தார். ஜார்ஜ் முனகினான்.

"தோட்டப் பேய்களை எப்படி விரட்டியடிக்க வேண்டும் என்பது எங்களுக்குத் தெரியும்," என்று அவன் கூறினான்.

மோலி தன் கையில் எந்தப் புத்தகத்தை வைத்திருந்தார் என்று ஹாரி எட்டிப் பார்த்தான். **'வீடுகளில் இருக்கும் தொல்லை தரும் பூச்சிகளை ஒழித்துக் கட்டுவதற்கான கில்டராய் லாக்ஹார்ட்டின் கையேடு'** என்று பொன்னெழுத்துக்களில் அதில் பொறிக்கப்பட்டு இருந்தது. பிரகாசமான நீலநிறக் கண்களுடனும், சுருளான தங்கநிறத் தலைமுடியுடனும் மிக அழகாகத் தோற்றமளித்த ஒரு மந்திரவாதி அதன் அட்டையில் இடம்பெற்றிருந்தார். மந்திர உலகில் வழக்கமாக

Scanned by CamScanner

நடைபெறுவதுபோல அதிலிருந்த படமும் இயங்கிக் கொண்டிருந்தது. அது கில்டராய் லாக்ஹார்ட்டாக இருக்க வேண்டும் என்று ஹாரி ஊகித்தான். அவர் அவர்கள் அனைவரையும் பார்த்து விஷமத்தனமாகக் கண்சிமிட்டிக் கொண்டிருந்தார். மோலி அவரைப் பார்த்துப் பிரகாசமாகப் புன்னகைத்தார்.

"ஓ! அவர் அற்புதமானவர்," என்று மோலி கூறினார். "வீட்டுப் பூச்சிகள் பற்றி அவருக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது. இது ஓர்அருமையான புத்தகம் . . ."

"அம்மாவுக்கு அவர்மீது ஒரு கண் உண்டு," என்று ஃபிரெட் கொஞ்சம் சத்தமாகவே முணுமுணுத்தான்.

மோலி தன் கன்னம் சிவக்க, "முட்டாள்தனமாகப் பேசாதே!" என்று கூறினார். "சரி, உங்களுக்கு லாக்ஹார்ட்டைவிட அதிகமாகத் தெரியும் என்று நீங்கள் நினைத்தால், நீங்கள் வெளியே போய் வேலையை விரைவாகச் செய்து முடியுங்கள். நான் வெளியே வந்து சோதிக்கும்போது என் கண்ணில் ஒரு தோட்டப் பேய் தென்பட்டால்கூட நீங்கள் தொலைந்தீர்கள். என்ன, புரிகிறதா?"

சோம்பல் முறித்தவாறும் கொட்டாவி விட்டவாறும் வீஸ்லீ கும்பல் ஹாரி பின்தொடர வெளியே சென்றது. அத்தோட்டம் மிகப் பெரியதாக இருந்தது. ஹாரியின் கண்ணோட்டத்தில் ஒரு தோட்டம் எந்த அளவில் இருக்க வேண்டுமோ அந்த அளவுக்கு அது பெரியதாக இருந்தது. டர்ஸ்லீ தம்பதியினர் இத்தோட்டத்தை விரும்ப மாட்டார்கள். ஏனெனில், அதில் ஏகப்பட்டக் களைகள் இருந்தன, புற்கள் வெட்டப்படாமல் இருந்தன. வேலிச் சுவரோரமாக பெரிய முடிச்சுகளுடன்கூடிய மரங்கள் இருந்தன. ஹாரி அதுவரை ஒருபோதும் பார்த்திராத பல தாவரங்கள் அங்கு நிரம்பி வழிந்தன. தவளைகளால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த பெரிய பச்சை நிறக் குளம் ஒன்றும் அங்கு இருந்தது.

அவர்கள் அந்தப் புல்தரையைக் கடந்து சென்று கொண்டிருந்தபோது, ஹாரி ரானிடம், "மகுள்களின் தோட்டத்தில்கூடத் தோட்டப் பேய்கள் உண்டு என்பது உனக்குத் தெரியுமா?" என்று கேட்டான்.

"மகுள்கள் தோட்டப் பேய்கள் என்று கருதுபவற்றை நான் பார்த்திருக்கிறேன்," என்று பதிலளித்த ரான், ஒரு புதர்ச்செடி அருகே கீழே குனிந்தான். "மீன் பிடிப்பதற்கான தூண்டில்களைக் கைகளில் பிடித்தபடி இருக்கும் குள்ளமான, குண்டான கிறிஸ்துமஸ் தாத்தாக்களைப்போல . . ."

திடீரென்று அங்கு பலமாக எதுவோ ஆட்டப்பட்டச் சத்தம் கேட்டது. அந்தப் புதர்ச்செடி குலுங்கி ஆடியது. ரான் நிமிர்ந்தான். "இதுதான் தோட்டப் பேய்!" என்று அவன் சுரத்தின்றிக் கூறினான்.

"என்னை விட்டுவிடு! என்னை விட்டுவிடு!" என்று அந்தத் தோட்டப் பேய் கீச்சிட்டது.

Scanned by CamScanner

அது கண்டிப்பாகக் கிறிஸ்துமஸ் தாத்தாவைப்போல இருக்கவில்லை என்பது நிஜம். அது சிறியதாக, வழுவழுப்பாக இருந்தது. அதன் தலை அப்படியே ஓர் உருளைக்கிழங்குபோல உருண்டையாகவும் வழுக்கையாகவும் இருந்தது. அது தன்னுடைய உறுதியான சிறிய கால்களைக் கொண்டு ரானை எட்டி உதைக்க முயன்றபோது, ரான் அதன் கணுக்கால்களைப் பிடித்து அதைத் தலைகீழாகத் தொங்கவிட்டான்.

"ஹாரி, நீ செய்ய வேண்டியது இதுதான்," என்று அவன் கூறினான். அவன் அந்தத் தோட்டப் பேயைத் தன் தலைக்கு மேலாகத் தூக்கிப் பிடித்து ('என்னை விட்டுவிடு!' என்று அது கத்தியது) வேகமாக வட்டமாகச் சுழற்றினான். ஹாரியின் முகத்தில் தோன்றிய அதிர்ச்சியைப் பார்த்த ரான், "இது இவற்றைக் காயப்படுத்தாது. நீ சுழற்றும் வேகத்தில் அவற்றிற்குத் தலைச்சுற்றல் ஏற்படும் என்பதால், மீண்டும் தமது பதுங்குக் குழிகளுக்குத் திரும்பி வர அவற்றுக்கு வழி தெரியாமல் போய்விடும்," என்று தெரிவித்தான்.

அந்தத் தோட்டப் பேயின் கணுக்காலைப் பற்றியிருந்த தன் பிடியை அவன் திடீரென்று விட்டுவிட்டான். அது வானத்தில் இருபது அடிகள் பறந்து வேலிக்கு வெளியே இருந்த மைதானத்தில் போய் விழுந்தது.

"அற்ப தூரம்," என்று ஃபிரெட் கூறினான். "என்னால் தொலை தூரத்தில் இருக்கும் அந்தக் குச்சிவரை எறிய முடியும்."

அத்தோட்டப் பேய்கள்மீது இரக்கம் கொள்ளத் தேவையில்லை என்பதை ஹாரி விரைவில் கண்டு கொண்டான். புதரோரம் தான் முதன்முதலாகக் கண்டுபிடித்த ஒரு தோட்டப் பேயைத் தூக்கி எறிய அவன் முடிவு செய்தான். ஆனால் அவனது பலவீனத்தைக் கண்டுகொண்ட அந்தத் தோட்டப் பேய், தனது கூர்மையான பற்களால் ஹாரியின் கைகளை நன்றாகப் பதம் பார்த்துவிட்டது. அதை உதறுவதற்குள் ஹாரிக்குப் போதும் போதும் என்றாகிவிட்டது. பின் அதை அவன் சுழற்றி எறிந்தான்.

"வாவ்! ஹாரி – அது ஐம்பதடி தூரம் இருக்கும்."

வெகு விரைவில், அந்த வானம், பறந்து கொண்டிருந்த தோட்டப் பேய்களால் நிறைந்தது.

ஜார்ஜ் ஐந்தாறு தோட்டப் பேய்களை ஒன்றாகப் பிடித்து எறிந்தவாறே, "ஹாரி, பார்த்தாயா? அவை ஒன்றும் அவ்வளவு புத்திக்கூர்மை கொண்டவை அல்ல," என்று கூறினான். "நாம் அவற்றை ஒழித்துக்கட்டப் புறப்பட்டுவிட்டோம் என்பது தெரிந்த உடனேயே அவை கூட்டமாக வெளியே வந்து வேடிக்கைப் பார்க்கும். எப்படி நம்மிடம் இருந்து தப்பிப்பது என்பதை இந்நேரத்திற்குள் அவை கற்றுக் கொண்டிருக்கும் என்று நீ நினைக்கிறாய், இல்லையா?"

விரைவில் அவை ஒரு கூட்டமாகத் தம்முடைய தோள்களைத் தொங்கப் போட்டுக் கொண்டு ஒரு நீண்ட வரிசையில் வெளியே செல்லத் துவங்கின.

Scanned by CamScanner

அவை வேலியின் மறுபுறம் இருந்த மைதானத்தைச் சென்றடைந்ததை அவர்கள் பார்த்துக் கொண்டிருந்தபோது, ரான், "அவை விரைவில் மீண்டும் திரும்பி வந்துவிடும்," என்று கூறினான். "அவற்றிற்கு இந்த இடம் மிகவும் பிடிக்கும். அப்பா அவற்றிடம் கடுமையாக நடந்து கொள்வதில்லை. அவையும் குடும்ப உறுப்பினர்கள் என்று அவர் நினைக்கிறார் . . ."

அக்கணத்தில் முன்வாசல் கதவு பலமாகத் தட்டப்பட்டது.

"அவர் வந்துவிட்டார்," என்று ஜார்ஜ் கத்தினான். "அப்பா வீட்டுக்கு வந்துவிட்டார்!"

அவர்கள் தோட்டத்தின் ஊடாக ஓடி வீட்டிற்குள் சென்றனர்.

ஆர்தர் வீஸ்லீ சமையலறை நாற்காலியில் சோர்ந்து போய் அமர்ந்திருந்தார். அவர் தனது மூக்குக்கண்ணாடியைக் கழற்றிவிட்டிருந்தார். அவரது கண்கள் மூடியிருந்தன. ஒல்லியாக இருந்த அவரது தலை வழுக்கையாக இருந்தது. கொஞ்சநஞ்சம் இருந்த முடியும் அவரது குழந்தைகளின் முடியைப்போலச் சிவப்பு நிறத்தில் இருந்தது. பச்சை நிறத்தில் இருந்த நீண்ட அங்கி ஒன்றை அவர் அணிந்திருந்தார். அது பயணத்தால் கசங்கியும் அழுக்காகவும் இருந்தது.

"எப்படிப்பட்ட ஓர் இரவு," என்று அவர் முணுமுணுத்தார். அவரது கைகள் தேநீர்க் கோப்பையைத் துழாவிக் கொண்டிருந்தபோது, அவர்கள் அனைவரும் அவரைச் சுற்றி உட்கார்ந்தார்கள். "ஒன்பது திடீர்ச் சோதனைகள்! ஒன்பது! நான் அவனுக்கு முதுகு காட்டி நின்று கொண்டிருந்தபோது அந்தக் கிழம் முன்டுங்கஸ் ஃபிளெட்சர் என்மீது மந்திரம் ஒன்றை ஏவிவிட்டது . . ."

ஆர்தர் தனது தேநீர்க் கோப்பையில் இருந்து ஒரு பெரிய மடக்குத் தேநீரைக் குடித்துவிட்டுப் பெருமூச்செறிந்தார்.

"ஏதாவது கிடைத்ததா?" என்று ஃபிரெட் ஆவலுடன் கேட்டான்.

"எனக்குக் கிடைத்ததெல்லாம் சுருங்கிக் கொண்டிருந்த ஒருசில திறவுகோல்களும், கடிக்கும் ஒரு கெண்டியும் மட்டும்தான்," என்று கூறி அவர் கொட்டாவி விட்டார். "ஒருசில பயங்கரமான விஷயங்களும் அங்கிருந்தன, ஆனால் அவை என் அலுவலகத்தைச் சார்ந்தவை அல்ல. மிகமிக வினோதமான முயலினம் ஒன்றைப் பற்றிய விசாரணைக்காக மோர்ட்லேக் அழைத்துச் செல்லப்பட்டார். நல்லவேளை, அவ்விஷயம், 'பரிசோதனை நிலையில் இருக்கும் மந்திர தந்திரங்களுக்கான குழு'வின் பொறுப்பில் உள்ளது. . ."

"ஆமாம், சுருங்கும் திறவுகோல்களை எதற்காக ஒருவர் தயாரிக்க வேண்டும்?" என்று ஜார்ஜ் கேட்டான்.

"மகுள்களைக் கவர்வதற்காக," என்று கூறி அவர் மீண்டும் பெருமூச்செறிந்தார். "சுருங்கிக் கொண்டே இருக்கும் ஒரு திறவுகோலை அவர்களிடம் விற்றுவிட்டால், அது கடைசியில் மிகவும் சுருங்கிப் போய்க் காணாமல் போய்விடும். அவர்களுக்குத் தேவைப்படும்போது அவர்களுக்கு அத்திறவுகோல் கிடைக்காது . . .

Scanned by CamScanner

பிரச்சனை என்னவென்றால் இதில் யார்மீதும் குற்றம் சாட்ட முடியாது. ஏனெனில் சுருங்கிக் கொண்டிருக்கும் ஒரு திறவுகோல் தன்னிடம் இருக்கிறது என்று எந்தவொரு மகுளும் ஒப்புக் கொள்ள மாட்டார். தனது திறவுகோல் தொடர்ந்து தொலைந்து போய்க் கொண்டிருப்பதாகத்தான் அவர் கூறிக் கொண்டிருப்பார். கடவுள் அவர்களைக் காப்பாற்றுவாராக! மாயாஜாலங்கள் அவர்கள் கண்முன்னே நர்த்தனம் ஆடிக் கொண்டிருந்தால்கூட அவர்கள் அதை உதாசீனப்படுத்த எதை வேண்டுமானாலும் செய்வார்கள். ஆனால் நம்மவர்கள் மந்திர வித்தையை எவ்வளவு தூரம் எடுத்துச் செல்வார்கள் என்பதை நீங்கள் அறிந்தால், அதை நீங்கள் நம்ப மாட்டீர்கள்–"

"கார்களை இதற்கு உதாரணமாகக் கூறலாமா?"

மோலி அங்கு தோன்றினார். அடுப்பில் வாட்டும் கம்பி ஒன்று அவரது கையில் இருந்தது. அதை அவர் ஒரு வாள்போல நீட்டிப் பிடித்திருந்தார். ஆர்தரின் கண்கள் சடாரென்று விரியத் திறந்து கொண்டன. அவர் குற்ற மனப்பான்மையுடன் தன் மனைவியைப் பார்த்தார்.

"மோலி, நீ ஏன் திடீரென்று கார்களைப் பற்றிப் பேசுகிறாய்?"

சுட்டெரிக்கும் கண்களுடன் மோலி, "ஆர்தர், நான் ஒரு குறிப்பிட்டக் காரைப் பற்றி பேசுகிறேன்," என்று கூறினார். "ஒரு மந்திரவாதி ஒரு துருப்பிடித்தக் காரை வாங்கி, அது எப்படி வேலை செய்கிறது என்று பார்ப்பதற்காக அதை அக்குவேறு ஆணிவேறாகக் கழற்றிப் பார்க்கப் போவதாகத் தன் மனைவியிடம் கூறுவதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். ஆனால் அதைத் தன் மந்திரசக்தி மூலம் பறக்க வைப்பதுதான் அவரது நோக்கமாக இருந்திருக்கிறது."

ஆர்தர் வீஸ்லீ திருதிருவென முழித்தார்.

"அன்பே, அவர் அப்படிச் செய்திருந்தால் அதில் சட்ட மீறல்கள் எதுவும் இருந்திருக்காது என்று நீ நம்பலாம் . . . ஆனால் உண்மையை அவர் தன் மனைவியிடம் கூறியிருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும் . . . சட்டத்தில் ஓர் ஓட்டை இருக்கிறது . . . அந்தக் காரால் பறக்க முடியும் என்றாலும், பறப்பதற்கு அவர் அதை உபயோகிக்காமல் இருக்கும்வரை –"

"ஆர்தர், நீங்கள் அந்தச் சட்ட விதியை எழுதியபோது அப்படிப்பட்ட ஓர் ஓட்டை இருக்குமாறு பார்த்துக் கொண்டீர்கள்!" என்று மோலி கத்தினார். "மகுள்களின் குப்பைகளைக் கொண்டுவந்து உங்களுடைய கார் நிறுத்துமிடத்தில் வைத்து நோண்டிக் கொண்டிருக்கலாம் என்பதற்காக நீங்கள் அப்படிச் செய்திருக்கிறீர்கள். உங்களுக்காக ஒரு தகவல் – நீங்கள் பறக்க உபயோகிக்கத் திட்டமிடாமல் இருந்த அந்தக் காரில்தான் இன்று காலை ஹாரி இங்கு வந்து இறங்கினான்!"

"ஹாரியா, எந்த ஹாரி?" என்று ஆர்தர் கேட்டார்.

Scanned by CamScanner

அவர் சுற்றுமுற்றும் பார்த்தார். அங்கு ஹாரியைப் பார்த்ததும் அவர் துள்ளினார்.

"அடக் கடவுளே! இது ஹாரி பாட்டரா? உன்னைச் சந்தித்ததில் எனக்குப் பெருமகிழ்ச்சி! ரான் உன்னைப் பற்றி நிறையச் சொல்லியிருக்கிறான் –"

"நேற்றிரவு உங்களுடைய பையன்கள் அந்தக் காரில் பறந்து சென்று ஹாரியை அதில் கூட்டி வந்துள்ளனர்!" என்று மோலி இரைந்தார். "அதைப் பற்றி இப்போது என்ன சொல்லப் போகிறீர்கள்?"

"உண்மையிலேயே அப்படிச் செய்தீர்களா?" என்று ஆர்தர் தன் மகன்களிடம் ஆர்வமாகக் கேட்டார். "அது சரியாகப் பறந்ததா? நான் என்ன சொல்ல வந்தேன் என்றால் –" அவர் தடுமாறினார். மோலியின் கண்கள் அனலைக் கக்கிக் கொண்டிருந்ததைக் கவனித்த அவர், "பசங்களா, அது தவறு, பெருந்தவறு . . ." என்று இழுத்தார்.

மோலி காட்டுத் தவளைபோலக் கத்தத் துவங்கியதைக் கண்ட ரான், ஹாரியிடம், "இனி இது அவர்கள் பாடு. நாம் இதிலிருந்து கழன்று கொள்ளலாம்," என்று முணுமுணுத்தான். "வா, நான் உனக்கு என் படுக்கையறையைக் காட்டுகிறேன்."

அவர்கள் சமையலறையைவிட்டு வெளியேறி ஒரு குறுகிய தாழ்வாரத்தின் வழியாகச் சென்று, தாறுமாறாக அமைக்கப்பட்டிருந்த ஒரு மாடிப்படியில் ஏறினர். அது அந்த வீட்டின் ஊடாக வளைந்து நெளிந்து சென்றது. மூன்றாவது மாடியில் ஓர் அறைக் கதவு திறந்திருந்தது. அது வேகமாக மூடிக் கொள்வதற்குள் தன்னை வெறித்துக் கொண்டிருந்த ஒரு ஜோடிப் பழுப்பு நிறக் கண்களை ஹாரி கண்டான்.

"அது ஜின்னி," என்று ரான் கூறினான். "அவள் இவ்வளவு வெட்கப்பட்டு நான் இதுவரை பார்த்ததில்லை. பொதுவாக அவள் தன் அறைக் கதவை மூடுவதில்லை -"

அவர்கள் மேலும் இரண்டு மாடிகள் ஏறி, வண்ணப்பூச்சு உரிந்து கொண்டிருந்த ஒரு கதவை அடைந்தனர். அதில் 'ரொனால்டின் அறை' என்று எழுதப்பட்டிருந்த ஒரு பலகை மாட்டப்பட்டிருந்தது.

ஹாரி அந்த அறைக்குள் நுழைந்தான். சரிவாக வடிவமைக்கப்பட்டிருந்த கூரைச் சுவர் அவனது தலையைத் தொட்டுக் கொண்டிருந்தது. ஹாரி ஓர் உலைக்குள் நுழைந்ததுபோலச் சூடாக உணர்ந்தான். படுக்கை விரிப்புகள், சுவர்கள், கூரைச் சுவர் ஆகியவை உட்பட, அந்த அறையில் இருந்த அனைத்துமே பளிச்சென்ற ஆரஞ்சு நிறத்தில் இருந்தன. அந்த அறையில் இருந்த அழுக்கான வால்பேப்பரின் ஒவ்வோர் அங்குலத்தையும் மறைப்பதற்காக, ஆரஞ்சு அங்கிகள் அணிந்திருந்த, கைகளில் மந்திரத் துடப்பங்களை வைத்திருந்த ஏழு மந்திரவாதிகள் மற்றும் மந்திரவாதினிகளின் படங்களை ரான் எல்லா இடங்களிலும் ஒட்டியிருந்தான் என்பதை

Scanned by CamScanner

ஹாரி உடனடியாகப் புரிந்து கொண்டான். அந்த விளையாட்டு வீரர்கள் அனைவரும் உற்சாகமாகத் தங்கள் கைகளை அசைத்துக் கொண்டிருந்தனர்.

"இவர்கள் உன்னுடைய குவிடிச் குழுவினரா?" என்று ஹாரி கேட்டான்.

கட்டிலின்மீது கிடந்த ஆரஞ்சு நிறப் படுக்கை விரிப்பை ஹாரிக்குச் சுட்டிக்காட்டி, ரான், "ஆமாம்! சட்லி கேனன்ஸ்!" என்று கூறினான். அந்தப் படுக்கை விரிப்பில் 'ச.கே' என்று பெரிய எழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருந்தது. அதோடு, வேகமாகப் பறந்து கொண்டிருந்த ஒரு பீரங்கிக் குண்டின் படமும் அதில் வரையப்பட்டிருந்தது. "லீக் போட்டிகளில் இவர்கள் ஒன்பதாவது இடத்தைப் பிடித்துள்ளனர்."

ரானின் பள்ளிக்கூட வசியப் புத்தகங்கள் ஒரு மூலையில் தாறுமாறாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அதையடுத்து, நிறைய காமிக்ஸ் புத்தகங்கள் இருந்தன. அவை எல்லாவற்றிலும் '**த அட்வென்சர்ஸ் ஆஃப் மார்ட்டின் மிக்ஸ், த மேட் மகுள்**' கதை இடம்பெற்றிருந்தது. சன்னல் மாடத்தில் தவளை முட்டைகளால் நிறைந்திருந்த ஒரு மீன் தொட்டியின் மேல் ரானின் மந்திரக்கோல் கிடந்தது. அதற்கு அருகில், அறைக்குள் வந்து கொண்டிருந்த சூரிய ஒளியில் ரானின் செல்ல எலி ஸ்கேபர்ஸ் சோம்பலாகப் படுத்துக் கொண்டிருந்தது.

தரையில் கிடந்த, தானாகவே கலைத்துக் கொள்ளும் சீட்டுக்கட்டுகளைத் தாண்டிச் சென்ற ஹாரி, அந்த அறையில் இருந்த சிறிய சன்னலின் வழியாக வெளியே எட்டிப் பார்த்தான். வெகுகீழே இருந்த தோட்டத்தில், தோட்டப் பேய்களின் கும்பல் ஒன்று அவர்களது வேலிப் புதர்கள் வழியாக அணிவகுத்துத் திருட்டுத்தனமாக மீண்டும் உட்புகுந்து கொண்டிருந்தன. பின் ஹாரி ரானைத் திரும்பிப் பார்த்தபோது, தனது அபிப்பிராயத்தை எதிர்பார்த்துப் பதற்றத்துடன் ரான் தன்னையே பார்த்துக் கொண்டிருந்ததை அவன் கவனித்தான்.

"இந்த அறை கொஞ்சம் சிறியதுதான்," என்று ரான் இழுத்தான். "உன் அறைபோல இது இல்லைதான். மேலே பரணில் வசித்து வரும் கோரைப் பல் ராட்சஸப் பேய்க்கு நேர்க் கீழே நான் இருக்கிறேன். அது எப்போதும் குழாய்களைத் தட்டிச் சத்தம் ஏற்படுத்திக் கொண்டும் முனகிக் கொண்டும் இருக்கும்."

ஆனால் ஹாரி வாயெல்லாம் பல்லாக, "நான் இதுவரை நுழைந்துள்ளதிலேயே மிகச் சிறந்த வீடு இதுதான்," என்று கூறினான்.

ரானின் காதுகள் சிவந்தன.

Scanned by CamScanner

அத்தியாயம் நான்கு

புத்தக வெளியீட்டு விழா

ரானின் வீட்டில் நிலவி வந்த வாழ்க்கைமுறை, பிரைவிட் தெருவில் டர்ஸ்லீ வீட்டில் நிலவிய வாழ்க்கைமுறையிலிருந்து முற்றிலும் வித்தியாசமானதாக இருந்தது. எல்லாம் ஒழுங்குடனும் நேர்த்தியுடனும் இருந்ததை டர்ஸ்லீ தம்பதியினர் விரும்பினர். வீஸ்லீ குடும்பத்தினரின் வீட்டில் எதிர்பாராதவையும் வினோதமானவையும் நீக்கமற நிறைந்திருந்தன. சமையலறையில் இருந்த முகம் பார்க்கும் கண்ணாடியில் ஹாரி முதன்முறையாகப் பார்த்தபோது, அது, **"ஏய்! கழிசடை! உன் சட்டையைக் காற்சட்டைக்குள் செருகிக் கொள்!"** என்று கத்தியபோது அவன் அதிர்ச்சி அடைந்தான். வீடு கொஞ்சம் அமைதி அடைந்திருந்தால், பரணில் இருந்த கோரைப் பல் ராட்சஸப் பேய் ஊளையிட்டது அல்லது குழாய்களைத் தூக்கிக் கீழே போட்டு பலத்தச் சத்தத்தை உண்டு பண்ணியது. ஃபிரெட் மற்றும் ஜார்ஜின் படுக்கையறையிலிருந்து வந்த வெடிச் சத்தங்கள் எந்தவிதமான சலசலப்பையும் ஏற்படுத்தவில்லை. ஆனால் ரானின் வீட்டில் ஹாரிக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது பேசும் கண்ணாடியோ, சத்தம் ஏற்படுத்திக் கொண்டிருந்த கோரைப் பல் ராட்சஸப் பேயோ அல்ல. மாறாக, அங்கிருந்த அனைவரும் தன்னை விரும்பினர் என்பதுதான் அவனைப் பெரும் ஆச்சரியத்திற்கு உள்ளாக்கியது.

மோலி அவனது காலுறைகள் இருந்த நிலைமையைப் பற்றி அலுத்துக் கொண்டார். அவன் சாப்பிட உட்கார்ந்த ஒவ்வொரு தடவையும் அவர் அவனுக்கு நான்கு முறை பரிமாறினார். இரவு உணவின்போது ஹாரி தன்னருகே உட்கார்ந்து கொள்ள வேண்டும் என்று ஆர்தர் விரும்பினார். ஏனெனில் மகுள்களின் அஞ்சல் சேவை எப்படி இயங்கியது என்பதைப் பற்றியும், மின்சார பிளக் எப்படி வேலை செய்தது என்பதைப் பற்றியும் அவனைக் கேள்விக் கணைகளால் துளைத்தெடுத்து அவற்றைப் பற்றித் தெரிந்து கொள்ள அது அவருக்கு வசதியாக இருந்தது.

எடுத்துக்காட்டாக, தொலைபேசி எவ்வாறு இயங்கியது என்பதைப் பற்றி ஹாரி விலாவாரியாக எடுத்துரைத்தபோது, **"பிரமாதம்!"** என்று அவர் உற்சாகமாகக் கூச்சலிட்டுவிட்டு, "மகுள்கள் மாயாஜாலங்கள் இல்லாமலேயே வாழ்க்கை நடத்த எத்தனை

Scanned by CamScanner

வழிகளைக் கண்டுபிடித்து வைத்துள்ளார்கள். அவர்கள் சாமர்த்தியசாலிகள்தான்!" என்று பிரமித்தார்.

ரானின் வீட்டிற்கு வந்த ஒரு வாரம் கழித்து, ஹாக்வார்ட்ஸில் இருந்து ஹாரிக்குத் தகவல் வந்தது. ஹாரியும் ரானும் காலை உணவிற்காகச் சமையலறைக்குள் நுழைந்தபோது ஆர்தரும் மோலியும் ஜின்னியும் அங்கிருந்த மேசையில் ஏற்கனவே அமர்ந்திருந்ததைக் கண்டனர். ஹாரியைப் பார்த்த அடுத்தக் கணத்தில் ஜின்னி தனது கஞ்சிக் கோப்பையைத் தவறுதலாகக் கீழே தள்ளிவிட்டாள். அது பெரும் சத்தத்தை ஏற்படுத்தியது. ஹாரி அவள் இருந்த அறைக்குள் நுழைந்தபோதெல்லாம் ஏதாவது ஒன்றைக் கை தவறவிடுவதை அவள் வழக்கமாக்கிக் கொண்டிருந்தாள். கீழே விழுந்து கிடந்த கோப்பையை எடுப்பதற்காக அவள் மேசைக்கு அடியில் குனிந்தாள். அவள் நிமிர்ந்தபோது அவளது முகம் அந்திச் சூரியனைப்போலச் சிவந்திருந்தது. அதைக் கவனிக்காததுபோலக் காட்டிக் கொண்ட ஹாரி, நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு மோலி கொடுத்த ரொட்டியை வாங்கிக் கொண்டான்.

"பள்ளியில் இருந்து கடிதங்கள் வந்திருக்கின்றன," என்று கூறிய மோலி, ஹாரியிடமும் ரானிடம், ஒரே மாதிரித் தோன்றிய இரண்டு கடிதங்களைக் கொடுத்தார். மஞ்சள் நிறத் தோல் காகிதத்தால் உருவாக்கப்பட்டிருந்த அந்த அஞ்சலுறைகளில் பச்சை நிற மையினால் அவர்களது முகவரி எழுதப்பட்டிருந்தது. "ஹாரி, நீ இங்கு இருப்பது டம்பிள்டோருக்கு ஏற்கனவே தெரிந்திருக்கிறது. அவரது பார்வையிலிருந்து எதுவும் தப்ப முடியாது போலும்!" என்று கூறிய ரான், இரவு அணிந்திருந்த அதே பைஜாமாவுடன் ஃபிரெட்டும் ஜார்ஜும் அங்கு ஆடி அசைந்து வந்தபோது, "உங்களுக்கும் கடிதங்கள் வந்திருக்கின்றன," என்று அவர்களிடம் கூறினான்.

அவர்கள் அனைவரும் தங்கள் கடிதங்களைப் படித்துக் கொண்டிருந்ததால் சிறிது நேரத்திற்கு அங்கு அமைதி நிலவியது. வழக்கம்போல, செப்டம்பர் மாதம் ஒன்றாம் தேதியன்று 'கிங்ஸ் கிராஸ்' ரயில் நிலையத்திலிருந்து புறப்பட்ட ஹாக்வார்ட்ஸ் எக்ஸ்பிரஸை ஹாரி பிடித்தாக வேண்டும் என்று அவனது கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. வரும் வருடத்திற்கு அவனுக்குத் தேவைப்பட்டப் புத்தகங்களின் பட்டியலும் அத்துடன் இணைக்கப்பட்டிருந்தது.

இரண்டாம் வருட மாணவர்களுக்குத் தேவைப்படும் புத்தகங்கள்:

மிரான்டா கோஷாக் எழுதிய 'அடிப்படை மாய மந்திரப் புத்தகம்' (இரண்டாம் வருடம்)
கில்டராய் லாக்ஹார்ட் எழுதிய 'பன்ஷி மோகினிப் பிசாசிடம் இருந்து விடுதலை'
கில்டராய் லாக்ஹார்ட் எழுதிய 'கோரைப் பல் ராட்சஸப் பேய்க்குச் சாவு மணி அடித்தல்'

Scanned by CamScanner

கில்டராய் லாக்ஹார்ட் எழுதிய 'யட்சினிப் பிசாசுகளுடன் ஓர் உல்லாசப் பயணம்'
கில்டராய் லாக்ஹார்ட் எழுதிய 'அரக்கப் பேயுடன் ஒரு பிரயாணம்'
கில்டராய் லாக்ஹார்ட் எழுதிய 'ரத்தக் காட்டேரியுடன் ஒரு கடற்பயணம்'
கில்டராய் லாக்ஹார்ட் எழுதிய 'ஓநாய் மனிதர்களுடன் ஓர் உலா'
கில்டராய் லாக்ஹார்ட் எழுதிய 'பனி அரக்கனுடன் ஒரு வருடம்'

தன்னுடைய பட்டியலைப் படித்துப் பார்த்த ஃபிரெட், ஹாரியின் பட்டியலை எட்டிப் பார்த்தான்.

"லாக்ஹார்ட்டின் அனைத்துப் புத்தகங்களும் வாங்கப்பட வேண்டும் என்று உனக்கும் எழுதப்பட்டுள்ளதா?" என்று அவன் ஹாரியிடம் கேட்டான். "'தீய மந்திர சக்திகளுக்கு எதிரான பாதுகாப்பு' என்ற பாடத்தை எடுக்கவிருக்கின்ற புதிய ஆசிரியர் லாக்ஹார்ட்டின் ரசிகராக இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். அவர் கண்டிப்பாக ஒரு மந்திரவாதினியாகத்தான் இருக்க வேண்டும் என்று நான் பந்தயம் கட்டத் தயார்."

அக்கட்டத்தில் ஃபிரெட் தன் தாயாரின் கண்களை நோக்கினான். உடனே தன் தட்டில் இருந்த உணவில் கவனம் செலுத்தத் துவங்கினான்.

ஜார்ஜ் தன் பெற்றோரை ஒரு கணம் பார்த்துவிட்டு, "அவை எல்லாவற்றையும் ஒருசேர வாங்க வேண்டும் என்றால் விலை படுபயங்கரமாக இருக்கும்," என்று கூறினான். "லாக்ஹார்ட்டின் புத்தகங்களின் விலை பொதுவாகவே அதிகம்தான் . . ."

"கவலைப்படாதீர்கள், எப்படியும் சமாளித்துவிடலாம்," என்று மோலி தெரிவித்தார். ஆனால் அவரது முகத்தில் கவலை ரேகைகள் ஓடத் துவங்கியிருந்தன. "ஜின்னிக்கு இந்த வருடப் படிப்பிற்கு, பிறர் பயன்படுத்திய புத்தகங்களை வாங்கிக் கொடுக்கலாம் என்று நினைக்கிறேன்."

"ஓ, நீ இந்த வருடம் ஹாக்வார்ட்ஸில் சேரப் போகிறாயா?" என்று ஹாரி ஜின்னியைப் பார்த்துக் கேட்டான்.

அவள் அதை ஆமோதித்துத் தலையை அசைத்தாள். அவளது முகத்தில் மின்னிய வெட்கச் சிவப்பு அவளது தலையின் செம்பட்டை நிறத்தைத் தூக்கியடித்தது. பரிமாறப்படுவதற்காக வைக்கப்பட்டிருந்த வெண்ணெய்ப் பதார்த்தம் ஒன்றில் அவள் தனது முழங்கையைத் தவறுதலாக விட்டுவிட்டாள். அதிர்ஷ்டவசமாக, இதை ஹாரியைத் தவிர வேறு யாரும் பார்க்கவில்லை. ஏனெனில் சரியாக அச்சமயத்தில்தான் அவளது மூத்த அண்ணன் பெர்சி உள்ளே நுழைந்தான். அவன் ஏற்கனவே புறப்படத் தயாராக உடையணிந்திருந்தான். மாணவ அணித் தலைவன் பதக்கம் அவனது மேற்சட்டையை அலங்கரித்துக் கொண்டிருந்தது.

Scanned by CamScanner

"எல்லோருக்கும் காலை வணக்கம்!" என்று அவன் கூறினான். "இன்றைய நாள் மிக அருமையாக இருக்கிறது."

அங்கு மீதமிருந்த ஒரே நாற்காலியில் அவன் அமர்ந்தான். ஆனால் அடுத்தக் கணமே துள்ளி எழுந்தான். அவனுக்கு அடியில் சாம்பல் வண்ண இறகுகளால் ஆன துடைப்பான் ஒன்று இருந்தது – ஹாரி அப்படித்தான் நினைத்தான் – அது மூச்சுவிடத் துவங்கியவரை!

ரான், "எரோல்!" என்று கத்தினான். பேச்சு மூச்சின்றிக் கிடந்த அந்த ஆந்தையைப் பொர்சியிடம் இருந்து வாங்கி, அதன் சிறகின் அடியிலிருந்து அவன் ஒரு கடிதத்தை எடுத்தான். "ஆஹா! ஒருவழியாக இந்த ஆந்தை ஹெர்மயனியிடமிருந்து பதிலை வாங்கி வந்துவிட்டது. நாங்கள் டர்ஸ்லீ கும்பலிடம் இருந்து உன்னை மீட்டெடுக்க முயலப் போவதாக அவளுக்கு எழுதியிருந்தேன்."

அவன் எரோலைத் தூக்கிச் சென்று பின்வாசல் கதவுக்கு அருகே இருந்த ஒரு மாடத்தில் நிற்க வைக்க முயன்றான். ஆனால் அது உடனேயே சரிந்து விழுந்தது. அதனால் பாத்திரம் கழுவும் இடத்தருகே அதை மெதுவாக வைத்துவிட்டு, ரான், "ஐயோ பாவம்!" என்று முனகினான். பின் அவன் ஹெர்மயனியின் கடிதத்தைப் பிரித்து, வாய்விட்டுச் சத்தமாகப் படிக்கத் துவங்கினான்.

அன்புள்ள ரானுக்கும் ஹாரிக்கும் (நீ அங்கிருக்கும் பட்சத்தில்),

அனைத்தும் திட்டமிட்டபடி நடந்திருக்கும் என்றும், ஹாரியும் நன்றாக இருப்பான் என்றும் நான் நம்புகிறேன். அதோடு, அவனைக் காப்பாற்றும் முயற்சியில் சட்டத்திற்குப் புறம்பாக நீ எதையும் செய்திருக்க மாட்டாய் என்றும் நான் நம்ப விழைகிறேன். ஏனெனில் அது ஹாரியையும் பிரச்சனைக்குள் மாட்டிவிட்டுவிடும். நான் வெகுவாகக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறேன். ஹாரி நன்றாக இருக்கிறான் என்றால் உடனடியாக எனக்குத் தெரியப்படுத்துவாயா? ஆனால் நீ வேறு ஓர் ஆந்தையை அனுப்பினால் நல்லது. ஏனெனில் இன்னும் ஒரு முறை இதே ஆந்தையை நீ பயன்படுத்தினால், அது பரலோகம் சென்றுவிடும்.

நான் பள்ளி வேலைகளில் மூழ்கியிருக்கிறேன் - "எப்படி அவளால் இப்படி இருக்க முடிகிறது? நாம் விடுமுறையில் இருக்கிறோம்!" என்று ரான் கத்தினான் - நாங்கள் அடுத்த புதன்கிழமை என்னுடைய புதுப் புத்தகங்களை வாங்குவதற்காக லண்டனுக்குப் போகப் போகிறோம். நாம் டயகான் சந்தில் சந்திக்கலாமா?

அங்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக எனக்குத் தகவல் அனுப்பு.

அன்புடன்,
ஹெர்மயனி

Scanned by CamScanner

சாப்பாட்டு மேசையில் இருந்தவற்றை அப்புறப்படுத்திக் கொண்டே, மோலி, "ரொம்பவும் வசதியாகப் போய்விட்டது. நாமும் அதே புதன்கிழமை அங்கு போய் உங்களுக்குத் தேவையானவற்றை வாங்கி வரலாம்," என்று கூறினார். "ஆமாம், நீங்களெல்லாம் இன்று என்ன செய்யப் போவதாகத் திட்டமிட்டிருக்கிறீர்கள்?"

ஹாரி, ரான், ஃபிரெட், ஜார்ஜ் ஆகிய நால்வரும் அருகிலிருந்த குன்று ஒன்றில் வீஸ்லீ குடும்பத்தினருக்குச் சொந்தமாக இருந்த, குதிரைகளை மேய்க்கும் தோட்டம் ஒன்றிற்குச் செல்ல முடிவு செய்திருந்தனர். அத்தோட்டத்தைச் சுற்றி இருந்த மரங்கள், கீழே இருந்த கிராமத்தின் பார்வையிலிருந்து அதை மறைத்ததால், அவர்கள் மிக உயரமாகப் பறக்காதவரை, அங்கு அவர்களால் குவிடிச் விளையாட்டுப் பயிற்சியை மேற்கொள் முடியும். ஆனால் அவர்களால் நிஜமான குவிடிச் பந்தை உபயோகிக்க முடியாது. ஏனெனில் அது பறந்து சென்று கிராமத்திற்குப் போய்விட்டால், அதை மூடி மறைப்பது கடினமாகிவிடும். அதனால் அவர்கள் அதற்குப் பதிலாக, ஒருவருக்கு ஒருவர் எறிந்து விளையாடுவதற்கு ஆப்பிள்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது. இருப்பதிலேயே மிகச் சிறந்த மந்திரத் துடப்பமான ஹாரியின் நிம்பஸ் 2000ஐ அவர்கள் ஒருவர் பின் ஒருவராகப் பயன்படுத்திக் கொள்ளத் திட்டமிட்டனர். ரானின் மிகப் பழைய 'ஷூட்டிங் ஸ்டார்' மந்திரத் துடப்பம், சமயங்களில் அங்கு திரிந்து கொண்டிருந்த வண்ணத்துப்பூச்சிகள்கூட அதை முந்திச் செல்லும் வேகத்தில் பறக்கும் நிலைமையில்தான் இருந்தது.

ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு, தங்கள் தோள்களில் மந்திரத் துடப்பங்களைச் சுமந்தபடி அவர்கள் அக்குன்றை நோக்கி நடையைக் கட்டினர். தங்களுடன் வர விருப்பமா என்று பெர்சியிடம் அவர்கள் கேட்டனர். ஆனால் தான் வேறு வேலையில் மும்முரமாக இருந்ததால் தன்னால் வர இயலாது என்று அவன் கூறிவிட்டான். சாப்பாட்டு நேரங்களில் மட்டும்தான் ஹாரி பெர்சியைப் பார்த்தான். மற்ற நேரங்களில் பெர்சி தனது அறைக்குள்ளேயே அடைந்து கிடந்தான்.

ஃபிரெட் தன் முகத்தைச் சுளித்தவாறே, "அவன் என்ன செய்கிறான் என்று ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்," என்று கூறினான். "நீ வருவதற்கு முந்தைய தினம்தான் தேர்வு முடிவுகள் வெளிவந்தன. ஐந்தாம் வருட இறுதித் தேர்வில் அவன் பன்னிரண்டு பாடங்களில் தேர்ச்சி பெற்றுள்ளான். ஆனால் அது குறித்து அவன் துளிகூடத் தம்பட்டம் அடித்துக் கொள்ளவில்லை."

ஹாரியின் முகத்தில் தோன்றிய ஆச்சரிய ரேகைகளைக் கண்ட ஜார்ஜ், "அத்தேர்வில் தேறுவதே கடினம். அதிலும் பன்னிரண்டு பாடங்களில்! பில்லும் இதேபோலப் பன்னிரண்டு பாடங்களில் தேர்ச்சி பெற்றான். நாம் கொஞ்சம் ஜாக்கிரதையாக இல்லாவிட்டால், இவனும் ஒரு பள்ளித் தலைவனாக ஆவதை யாராலும் தடுக்க முடியாது. அப்படி ஒரு நிலை ஏற்பட்டால், என்னால் அந்த

Scanned by CamScanner

அவமானத்தைத் தாங்கிக் கொள்ள முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை," என்று கூறினான்.

வீஸ்லீ சகோதரர்களில் பில்தான் மூத்தவன். அவனுக்கு அடுத்தவன் சார்லி. அவர்கள் இருவரும் ஏற்கனவே ஹாக்வார்ட்ஸில் படிப்பை முடித்துவிட்டிருந்தனர். ஹாரி அவர்களை ஒருபோதும் சந்தித்ததில்லை என்றாலும், சார்லி ருமேனியாவில் டிராகன்களைப் பற்றிப் படித்துக் கொண்டிருந்தான் என்பதையும், பில் எகிப்தில் மந்திரவாதிகளின் வங்கியான கிரிங்காட்ஸில் வேலை பார்த்துக் கொண்டிருந்தான் என்பதையும் அறிந்திருந்தான்.

ஜார்ஜ் சிறிது நேரம் கழித்து, "அம்மாவும் அப்பாவும் எங்கள் எல்லாருடைய பள்ளிக் கட்டணத்தையும் எவ்வாறு கட்டப் போகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை," என்று கூறினான். "லாக்ஹார்ட் புத்தகங்கள் மட்டுமே ஐந்து பிரதிகள் வாங்க வேண்டியுள்ளது. அதோடு, ஜின்னிக்கு அங்கிகள், மந்திரக்கோல் போன்றவற்றையும் வாங்க வேண்டும் . . ."

ஹாரி ஒன்றுமே கூறவில்லை. அவன் கொஞ்சம் அசௌகரியமாக உணர்ந்தான். அவனது பெற்றோர்கள் அவனுக்கு விட்டுச் சென்ற ஒரு பெரிய புதையல் லண்டனில் பூமிக்குக் கீழே இருந்த கிரிங்காட்ஸ் வங்கியின் பாதாளப் பெட்டகத்தில் தூங்கிக் கொண்டிருந்தது. அங்கு இருந்த பணம் மந்திரவாதிகளின் உலகில் மட்டுமே செல்லுபடியாகும் என்பது உண்மைதான். கேல்லியன்கள், சிக்கிள்கள், மற்றும் நுட்டுகளை மகுள்களின் கடைகளில் உபயோகிக்க முடியாது. அவன் தன்னுடைய கிரிங்காட்ஸ் வங்கிக் கணக்கைப் பற்றி டர்ஸ்லீ குடும்பத்தினரிடம் வாயைத் திறந்ததே கிடையாது. ஏனெனில், மாயாஜால உலகின் மந்திர தந்திரங்கள் குறித்து அவர்கள் பெரும் கிலி கொண்டிருந்தபோதிலும், தனது பாதுகாப்புப் பெட்டகத்தில் பத்திரமாக இருந்த தங்க நாணயங்கள்மீது அவர்களுக்கு எந்த பயமும் இருக்காது என்று ஹாரி நினைத்தான்.

* * *

அடுத்து வந்த புதன்கிழமையன்று மோலி அவர்கள் அனைவரையும் அதிகாலையிலேயே எழுப்பிவிட்டார். அவர்கள் ஆளுக்கு அரை டஜன் இறைச்சி சான்ட்விச்சுகளை அவசர அவசரமாக விழுங்கிவிட்டு, தங்கள் மேலங்கிகளைப் போட்டுக் கொண்டிருந்தபோது, மோலி சமையலறை மாடத்தில் இருந்த ஒரு பூந்தொட்டியை எடுத்து அதனுள்ளே உற்றுப் பார்த்தார்.

"ஆர்தர், நம்மிடம் மிகக் குறைவாகவே உள்ளது," என்று கூறி மோலி பெருமூச்செறிந்தார். "நாம் இன்று இன்னும் கொஞ்சம் வாங்க வேண்டும் . . . சரி, முதலிடம் விருந்தாளிக்குத்தான்! ஹாரி, முதலில் நீதான்!"

மோலி ஹாரியிடம் அந்தப் பூந்தொட்டியை நீட்டினார்.

அவர்கள் அனைவரும் தன்னையே பார்த்துக் கொண்டிருந்ததை ஹாரி கண்டான்.

Scanned by CamScanner

"நான் என்ன செய்ய வேண்டும்?" என்று ஹாரி தட்டுத்தடுமாறிக் கேட்டான்.

"அவன் இதற்கு முன்பு ஒருபோதும் ஃபுளூ பொடியை உபயோகித்துப் பயணம் செய்ததில்லை," என்று ரான் திடீரென்று கூறினான். "மன்னித்துக் கொள், ஹாரி. எனக்கு மறந்துவிட்டது."

"என்ன, நீ ஒருபோதும் இப்படிப் பயணித்ததில்லையா?" என்று மோலி கேட்டார். "அப்படியானால், கடந்த வருடம் உன் பள்ளிக்கு வேண்டிய பொருட்களை வாங்க நீ எப்படி டயகான் சந்திற்குச் சென்றாய்?"

"நான் பாதாள ரயில் பாதை வழியாகச் சென்றேன் –"

"உண்மையாகவா?" என்று ஆர்தர் ஆர்வமாகக் கேட்டார். "அங்கு தானியங்கிப் படிக்கட்டுகள் இருந்தனவா? எப்படி நீ –"

"ஆர்தர், இப்போது ஆரம்பிக்காதீர்கள்," என்று மோலி தன் கணவரைச் செல்லமாகக் கடிந்து கொண்டார். "ஹாரி, படுவேகமாகச் செல்வதற்கு ஃபுளூ பொடி உதவும். ஆனால், நீ இதை இதற்கு முன்பு ஒருபோதும் உபயோகித்து இருக்கவில்லை என்றால் –"

"அவன் சமாளித்துக் கொள்வான்," என்று ஃபிரெட் கூறினான். "ஹாரி, முதலில் நாங்கள் என்ன செய்கிறோம் என்று கவனி."

அவன் அந்தப் பூந்தொட்டியில் இருந்த பளபளப்பான பொடியிலிருந்து ஒரு சிட்டிகைப் பொடியை எடுத்து, குளிர்காய உபயோகிக்கும் கணப்படுப்பை நோக்கி நடந்து சென்று, அப்பொடியை அந்த அடுப்பில் எரிந்து கொண்டிருந்த நெருப்பினுள் வீசினான்.

கர்ஜனையுடன் அந்தத் தீநாக்கு ஒரு மரகதப் பச்சை நிறத்திற்கு மாறி, ஃபிரெட்டைவிட உயரமாக உயர்ந்தது. ஃபிரெட் நேராக அந்த நெருப்பினுள் நுழைந்து, "டயகான் சந்து!" என்று கத்தினான். உடனே அவன் மாயமாக மறைந்து போனான்.

ஜார்ஜ் அந்தப் பூந்தொட்டியினுள் தன் கையை விட்டுக் கொண்டிருந்தபோது, மோலி ஹாரியைப் பார்த்து, "நீ தெளிவாகப் பேச வேண்டும்," என்று கூறினார். "நீ சரியான கணப்படுப்பிலிருந்து வெளியே வருவதை உறுதி செய்து கொள்ள வேண்டும் . . ."

"என்ன கூறினீர்கள், சரியான கணப்படுப்பா?" என்று ஹாரி படபடப்புடன் கேட்டான். அப்போது தீநாக்கு ஓர் உறுமலுடன் மேலுயர்ந்து ஜார்ஜைக் கபளீகரம் செய்தது.

"வெளியே வருவதற்கு நீ தேர்ந்தெடுப்பதற்கு ஏகபட்டக் கணப்படுப்புகள் இருக்கின்றன. நீ தெளிவாக உச்சரித்தால் ஒன்றும் பிரச்சனையில்லை –"

தானும் ஒரு சிட்டிகை ஃபுளூ பொடியை எடுத்துக் கொண்ட ஆர்தர், "மோலி, அவனுக்கு ஒன்றும் ஆகாது! நீ அதிகமாக அலட்டிக் கொள்ளாதே," என்று கூறினார்.

"அவன் ஒருவேளை வழி தவறிவிட்டான் என்றால், அவனுடைய பெரியம்மாவிற்கும் பெரியப்பாவிற்கும் யார் பதில் சொல்வது?"

Scanned by CamScanner

"அவர்கள் துளிகூடக் கவலைப்பட மாட்டார்கள்," என்று ஹாரி அவருக்கு உறுதியளித்தான். "நான் ஒரு கணப்படுப்பில் காணாமல் போய்விட்டேன் என்று அறிந்தால், அது என்னவோர் அபாரமான பொய் என்றுதான் அவர்கள் நினைப்பார்கள். நீங்கள் ஒன்றும் கவலைப்பட வேண்டாம்."

"அப்படியானால் சரி! . . . ஆர்தருக்கு அடுத்து . . . நீ போ," என்று மோலி கூறினார். "நெருப்பிற்குள் நுழைந்ததும், நீ எங்கே போக வேண்டும் என்று கூறு –"

"உன் முழங்கைகளை ஒடுக்கி வைத்துக் கொள்," என்று ரான் அறிவுரை கூறினான்.

"நீ உன் கண்களை மூடிக் கொள்ள வேண்டும்," என்று மோலி தெரிவித்தார். "அந்தக் கரி –"

"பதற்றப்பட்டுவிடாதே," என்று ரான் கூறினான். "இல்லையென்றால் நீ தவறான கணப்பில் போய் விழுந்து விடுவாய் –"

"அதே சமயம், பதறிப் போய் அவசரமாகவும் வெளியே வந்துவிடாதே. ஃபிரெட்டும் ஜார்ஜும் உன் பார்வையில் படும்வரை காத்திரு."

ஹாரி இவை எல்லாவற்றையும் நினைவில் வைத்திருக்கக் கடுமையாக முயன்று கொண்டே, ஒரு சிட்டிகை ஃபுளூ பொடியைக் கையில் எடுத்துக் கொண்டு கணப்படுப்பை நோக்கி நடந்தான். ஒரு முறை ஆழமாக மூச்சிழுத்துவிட்டு, தன் கையில் இருந்த பொடியை, எரிந்து கொண்டிருந்த நெருப்பின்மீது தூவினான். பின் அதனுள் நுழைந்தான். இளஞ்சூடான காற்று தன்மீது அடித்ததுபோல அவன் உணர்ந்தான். அவன் தனது வாயைத் திறந்தவுடன் சூடான சாம்பல் எக்கச்சக்கமாக அவனது வாய்க்குள் போனது.

"ட–ய–கான் சந்து," என்று அவன் இருமிக் கொண்டே கூறினான்.

ஒரு மாபெரும் குழிக்குள் உறிஞ்சப்பட்டதுபோல அவன் உணர்ந்தான். அவன் வேகவேகமாகச் சுழன்று கொண்டிருந்ததுபோலவும் தோன்றியது . . . அவனது காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்த பேரிரைச்சல் அவனது காதுகளைச் செவிடாக்கிவிடும்போல இருந்தது . . . அவன் தன் கண்களைத் திறந்து வைத்துக் கொள்ள முயன்றான். ஆனால் சுழன்றடித்துக் கொண்டிருந்த பச்சை நிற ஜ்வாலைகள் அவனுக்குக் குமட்டலை ஏற்படுத்தின . . . அவனது முழங்கையை எதுவோ இடித்தது. அவன் அதைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். ஆனாலும் சுழற்சி நிற்கவேயில்லை . . . ஆனால் இப்போது குளிரான கரங்கள் அவனது முகத்தில் அறைந்து கொண்டிருந்ததுபோல இருந்தது . . . அவன் தன் மூக்குக்கண்ணாடி வழியாகக் கண்களை இடுக்கிக் கொண்டு பார்த்தான் . . . ஏகப்பட்டக் கணப்படுப்புகள் வேகமாகப் போய்க் கொண்டிருந்தது அவனுக்கு மங்கலாகத் தெரிந்தது. அவற்றுக்கு

Scanned by CamScanner

அப்பால் பல அறைகளும் தெரிந்தன . . . காலையில் அவன் சாப்பிட்டிருந்த இறைச்சி சான்ட்விச்சுகள் வயிற்றுக்குள் ருத்ர தாண்டவம் ஆடிக் கொண்டிருந்தன . . . அவன் தன் கண்களை மூடிக் கொண்டு, இது முடிந்து போனால் நன்றாக இருக்கும் என்று நினைத்தான். உடனடியாக அவன் ஒரு குளிரான கல்லின்மீது முகம் குப்புறக் கீழே விழுந்தான். தனது மூக்குக்கண்ணாடி உடைந்து நொறுங்கியதை அவன் உணர்ந்தான்.

ஏகப்பட்டச் சிராய்ப்புகளுடனும் உடல் முழுக்கக் கரியுடனும் தலைச்சுற்றலுடனும், உடைந்து போயிருந்த தன் மூக்குக்கண்ணாடியைத் தன் கண்களுக்கு நேராகப் பிடித்தபடி, ஹாரி தட்டுத் தடுமாறி எழுந்து நின்றான். அவன் தன்னந்தனியாக இருந்தான். தான் எங்கிருந்தோம் என்பதும் அவனுக்குத் தெரியவில்லை. தான் ஒரு குளிரான கணப்படுப்பினுள் நின்று கொண்டிருந்தது மட்டும்தான் அவனுக்குத் தெரிந்தது. அது மங்கலான ஒளியுடன் இருந்த ஒரு மந்திரஜாலக் கடைபோல அவனுக்குத் தோன்றியது – ஆனால் அங்கிருந்த எதுவும் ஹாக்வார்ட்ஸ் பள்ளிப் பட்டியலில் இடம்பெற்றிருப்பதற்கான வாய்ப்பே இருக்கவில்லை.

அவனுக்கு அருகில் இருந்த ஒரு கண்ணாடிப் பெட்டியில், வாடி வதங்கிப் போயிருந்த ஒரு கை, ஒரு சிறு மெத்தையில் வைக்கப்பட்டிருந்தது. ரத்தம் தோய்ந்திருந்த ஒரு சீட்டுக் கட்டும், முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு கண்ணாடிக் கண்ணும் அதனருகே இருந்தன. கொடூரமாகக் காட்சியளித்த முகமூடிகள் சுவர்களிலிருந்து வெறித்துக் கொண்டிருந்தன; ஒரு மேடைமீது பலதரப்பட்ட மனித எலும்புகள் கிடந்தன; துருப்பிடித்தக் கூரான உபகரணங்கள் உத்தரத்தில் இருந்து தொங்கிக் கொண்டிருந்தன. அதைவிட மோசமான விஷயம், தூசு படிந்திருந்த அக்கடையின் கண்ணாடி சன்னல் வழியாக அவன் பார்த்தபோது வெளியே தெரிந்த சந்து கண்டிப்பாக டயகான் சந்து அல்ல.

அவன் அங்கிருந்து எவ்வளவு விரைவாக வெளியேறினானோ, அவனுக்கு அவ்வளவு நல்லது. தான் அந்தக் கணப்படுப்பின் தரையில் வந்து விழுந்தபோது அடிபட்டத் தனது மூக்கு ஏற்படுத்திக் கொண்டிருந்த எரிச்சலைப் பொறுத்துக் கொண்டு, ஹாரி வேகமாகவும் சத்தமில்லாமலும் வாசற்கதவை நோக்கி விரைந்தான். ஆனால் அவன் பாதி தூரம் சென்றடைவதற்குள் அந்தக் கண்ணாடியின் மறுபுறம் இரண்டு பேர் தோன்றினர். உடைந்த மூக்குக்கண்ணாடியுடனும், தலைமுதல் பாதம் வரை கரியால் அபிஷேகம் செய்யப்பட்டிருந்த கோலத்துடனும், வழி தெரியாமல் ஹாரி தவித்துக் கொண்டிருந்தபோது, அவன் கண்டிப்பாகச் சந்திக்க விரும்பாத ஒருவன் அவர்களில் இருந்தான். டிராகோ மால்ஃபாய்தான் அவன்.

Scanned by CamScanner

ஹாரி வேகமாகச் சுற்றுமுற்றும் பார்த்தான். தனது இடதுபுறத்தில் கருப்பு நிறத்தில் ஒரு பெரிய அலமாரி இருந்ததை அவன் கவனித்தான். அவன் படுவேகமாக அதற்குள் பாய்ந்து, வெளியே என்ன நடந்தது என்பதைப் பார்ப்பதற்கு வசதியாக ஒரு சிறு இடைவெளியை மட்டும் விட்டுவிட்டு, அதன் கதவைச் சாத்திக் கொண்டான். ஒருசில கணங்களுக்குப் பிறகு, வாசற்கதவில் தொங்கவிடப்பட்டு இருந்த மணி ஒலித்தது; மால்ஃபாய் உள்ளே நுழைந்தான்.

அவனுடன் வந்தது அவனது அப்பாவைத் தவிர வேறு யாராகவும் இருக்க முடியாது. அவரது முகம் நீண்டு வெளுத்துப் போயிருந்தது; அவரது கண்கள் மால்ஃபாயின் உயிரற்ற, சாம்பல் நிறக் கண்களை அப்படியே ஒத்திருந்தன.

மால்ஃபாயின் அப்பா அந்தக் கடையின் குறுக்காக நடந்து சென்று, அங்கு பார்வைக்காக வைக்கப்பட்டிருந்த பொருட்களை ஈடுபாடின்றிப் பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு அங்கிருந்த கல்லாவின்மீதிருந்த மணியை அழுத்தினார். பின் தன் மகனிடம் திரும்பி, "டிராகோ, இங்கிருக்கும் எந்தப் பொருளையும் தொடாதே!" என்று எச்சரித்தார்.

அங்கிருந்த கண்ணாடிக் கண்ணை அணுகிய மால்ஃபாய், "நீங்கள் இங்கு எனக்கு ஒரு பரிசு வாங்கிக் கொடுக்கப் போகிறீர்கள் என்று நான் நினைத்தேன்," என்று கூறினான்.

அந்தக் கல்லாவில் தன் விரல்களால் தாளமிட்டபடியே, "நான் உனக்கு ஒரு பந்தயத் துடப்பம் வாங்கிக் கொடுக்கிறேன் என்றுதான் கூறியிருந்தேன்," என்று மால்ஃபாயின் அப்பா கூறினார்.

"நான் குவிடிச் விளையாட்டு அணியில் இடம்பெறாமல் இருக்கும்போது அதனால் என்ன பிரயோஜனம்?" என்று மால்ஃபாய் கேட்டான். அவன் பொருமிக் கொண்டும் மோசமான மனநிலையிலும் இருந்தான். "கடந்த வருடம் ஹாரி பாட்டருக்கு நிம்பஸ் 2000 மந்திரத் துடப்பம் கிடைத்தது. அவன் கிரிஃபின்டார் அணியில் விளையாடுவதற்கு ஏதுவாக டம்பிள்டோர் அவனுக்குச் சிறப்பு அனுமதி கொடுத்திருந்தார். அவன் அந்த அளவுக்குச் சிறப்பாக விளையாடுகிறவனும் அல்ல. அவன் **பிரபலமாக** இருந்ததுதான் அவனுக்கு அந்த அனுமதி கிடைத்ததற்குக் காரணம் . . . அவனும் **அவனது நெற்றியில் இருந்த ஓர் உருப்படாத தழும்பும்** . . ."

மண்டையோடுகளால் நிறைந்திருந்த ஓர் அலமாரியை ஆராய்வதற்காக மால்ஃபாய் குனிந்தான்.

". . . அவன் புத்திசாலி, அற்புதமானவன் என்று எல்லோரும் நினைக்கின்றனர் . . . விசித்திரமான நெற்றித் தழும்புடனும் அவனது மந்திரத் துடப்பத்துடனும் ஹாரி . . ."

மால்ஃபாயின் அப்பா மால்ஃபாய்மீது ஒரு சுட்டெரிக்கும் பார்வையை வீசியவாறே, "இதை நீ ஏற்கனவே ஓராயிரம் தடவை என்னிடம் புலம்பிவிட்டாய்," என்று கூறினார். "நான் உனக்கு இதை

Scanned by CamScanner

மீண்டும் ஞாபகப்படுத்துகிறேன் – குறிப்பாக, வோல்டமார்ட்டை மறையச் செய்துவிட்ட ஒரு கதாநாயகனாக நமது மக்கள் ஹாரி பாட்டரைப் பார்க்கும்போது, நீ அவனிடம் முறைத்துக் கொண்டிருப்பது அவ்வளவு புத்திசாலித்தனமான காரியமாக எனக்குப் படவில்லை – ஓ, போர்ஜின்!"

எண்ணெய் வடிந்து கொண்டிருந்த தலைமுடியைத் தன் முகத்தின்மீதிருந்து விலக்கியவாறே, கூன் விழுந்த முதுகுடன் காணப்பட்ட ஒரு நபர் அந்தக் கல்லாப்பெட்டியின் பின்புறம் தோன்றினார்.

"லூசியஸ் மால்ஃபாய் அவர்களே, உங்களை மீண்டும் சந்திப்பதில் எனக்கு மிகவும் சந்தோஷம்," எஃறு போர்ஜின் கூறினார். அவரது குரலும் அவரது தலைமுடியைப்போலவே வழுவழுப்பாக இருந்தது. "கூடவே மகனையும் கூட்டி வந்திருக்கிறீர்களா? பிரமாதம்! உங்களுக்கு என்னால் எவ்வாறு உதவ முடியும்? மிகவும் மலிவான விலையில் இன்றுதான் நம் கடையில் வந்து இறங்கியுள்ள ஒன்றை நான் உங்களுக்குக் காட்டியாக வேண்டும் –"

"இன்று நான் வாங்குவதற்காக வரவில்லை," என்று மால்ஃபாயின் அப்பா கூறினார். "விற்பதற்காக வந்திருக்கிறேன்."

"விற்பதற்காகவா?" என்று கேட்ட போர்ஜினின் புன்னகை கொஞ்சம் மங்கியது.

"மந்திரஜால அமைச்சகம் தடாலடிச் சோதனைகள் நடத்தி வருகின்றது என்பது நீங்கள் அறியாத ஒன்றல்ல," என்று மால்ஃபாயின் அப்பா கூறினார். தனது உட்சட்டைப் பாக்கெட்டிலிருந்து தோல் காகிதம் ஒன்றை எடுத்து, அதை போர்ஜின் படிப்பதற்கு வசதியாக விரித்தவாறே, "ஒருவேளை மந்திரஜால அமைச்சகம் என் வீட்டில் அதிரடிச் சோதனை நடத்த வந்தால், என்னை தர்மசங்கடத்திற்கு உள்ளாக்கும் ஒருசில பொருட்களை அவர்கள் கண்டுபிடிக்கக்கூடும் . . ." என்று கூறினார்.

போர்ஜின் தன் மூக்குக்கண்ணாடியை எடுத்து அணிந்து கொண்டு அதில் இடம்பெற்றிருந்த பட்டியலைப் படித்தார்.

"சார், மந்திரஜால அமைச்சகம் கண்டிப்பாக உங்கள்மீது கை வைக்கத் துணியும் என்று நான் நினைக்கவில்லை."

"அவர்கள் இன்னும் என் வீட்டிற்கு வரவில்லை. மால்ஃபாய் என்ற என் குடும்பப் பெயர் இன்றும் மதிக்கப்படுகிறது என்பது உண்மைதான் என்றாலும், மந்திரஜால அமைச்சகத்தின் தலையீடு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது. ஒரு புதிய மகுள்கள் பாதுகாப்புச் சட்டம் கொண்டுவரப்படும் என்று பலமாக ஒரு வதந்தி நிலவுகிறது – சந்தேகத்திற்கு இடமில்லாமல் மகுள்களை நேசிக்கின்ற, சொறி முகத்திற்குச் சொந்தக்காரரான அந்த ஆர்தர் வீஸ்லீ என்ற முட்டாள்தான் இதன் பின்னணியில் இருக்க வேண்டும் –"

Scanned by CamScanner

ஹாரிக்குக் கோபம் தலைக்கேறிக் கொண்டிருந்தது.

"– இந்தப் பட்டியலில் இடம் பெற்றிருக்கும் நஞ்சுகளில் சில, சோதனை நடத்தப்பட்டால் எனக்குச் சிக்கல் ஏற்படுத்தக்கூடும் –"

"சார், எனக்குப் புரிகிறது," என்று போர்ஜின் கூறினார். "நான் இதைப் பார்க்கலாமா?"

அவர்களது உரையாடலை இடைமறித்து, அந்தக் கண்ணாடிப் பெட்டிக்குள் இருந்த வாடி வதங்கிப் போயிருந்த கையைச் சுட்டிக்காட்டியவாறே, மால்ஃபாய், "நான் அதை எடுத்துக் கொள்ளலாமா?" என்று கேட்டான்.

"ஓ, அதுவா? அதற்குப் 'புகழின் கை' என்று பெயர்," என்று தெரிவித்த போர்ஜின், மால்ஃபாயின் அப்பா காட்டிக் கொண்டிருந்த பட்டியலை அப்படியே போட்டுவிட்டு, மால்ஃபாயை நோக்கி விரைந்தார். "அதனுள் ஒரு மெழுகுவர்த்தியைச் செருகினால், அது அதைப் பிடித்திருப்பவருக்கு மட்டும் வெளிச்சம் தரும்! திருடர்களுக்கும் கொள்ளைக்காரர்களுக்கும் சிறந்த நண்பன் இது! சார், உங்கள் பையனுக்கு நல்ல ரசனை இருக்கிறது."

"என் பையன் திருடர்களையும் கொள்ளைக்காரர்களையும்விட மேலானவனாக வருவான் என்று நான் நம்புகிறேன்," என்று மால்ஃபாயின் அப்பா கடுமையாகக் கூறினார். போர்ஜின் அவசர அவசரமாக, "மன்னித்துக் கொள்ளுங்கள்! நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை –" என்றார்.

"அவனது பள்ளி மதிப்பெண்கள் அதிகரிக்காவிட்டால், அவன் இதற்குத்தான் சரிப்பட்டு வருவான் என்று நான் நினைக்கிறேன்," என்று இன்னும் தனது கடுமை மாறாத குரலில் அவர் கூறினார்.

"அது என் தவறல்ல," என்று மால்ஃபாய் பதிலுக்குச் சீறினான். "ஆசிரியர்கள் பாகுபாடு காட்டுகின்றனர். அந்த ஹெர்மயனி கிரேஞ்சர் –"

"மந்திரவாதிக் குடும்பத்தைச் சேராத ஒரு பெண்பிள்ளை ஒவ்வொரு தேர்விலும் உன்னை முந்தியிருப்பது உனக்கு அவமானமாக இல்லையா?" என்று மால்ஃபாயின் அப்பா வெடித்தார்.

மால்ஃபாய் கோபத்தாலும் அவமானத்தாலும் கூசிக்குறுகி நின்றதைப் பார்த்து மகிழ்ந்த ஹாரி, "அப்படிப் போடு!" என்று தனக்குள் கூறிக் கொண்டான்.

"எல்லா இடங்களிலும் இப்போது இப்படித்தான் நடக்கிறது," என்று போர்ஜின் தன் குழைச்சலான குரலில் கூறினார். "மந்திரவாதிகளின் பரம்பரைக்கு மதிப்புக் குறைந்து கொண்டே வருகிறது –"

மால்ஃபாயின் அப்பா தன் நீண்ட மூக்குச் சிவக்க, "நான் அதைப் பொறுத்துக் கொள்வதில்லை," என்று கூறினார்.

போர்ஜின் ஒரு பெரிய சலாம் போட்டுக் கொண்டே, "சார், நானும் அப்படித்தான்," என்று கூறினார்.

Scanned by CamScanner

"அப்படியானால் நாம் இப்போது என்னுடைய பட்டியலுக்கு வரலாமா?" என்று மால்ஃபாயின் அப்பா கேட்டார். "நான் கொஞ்சம் அவசரத்தில் இருக்கிறேன். போர்ஜின், எனக்கு வேறு ஒரு முக்கியமான வேலை இருக்கிறது."

அவர்கள் பேரம் பேசுவதில் ஈடுபட்டனர். அங்கு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பொருட்களை ஒவ்வொன்றாகப் பார்வையிட்டுக் கொண்டே வந்த மால்ஃபாய், தன் மறைவிடத்தை நெருங்கிக் கொண்டிருந்ததை ஹாரி படபடப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான். நீண்ட தூக்குக்கயிறு ஒன்றை மால்ஃபாய் ஆய்வு செய்து கொண்டிருந்தான். பின்னர் வைடூரியக் கற்களால் செய்யப்பட்டிருந்த நெக்லஸ் ஒன்றில் இணைக்கப்பட்டிருந்த ஒரு குறிப்பு அட்டையில், **'எச்சரிக்கை: தொடாதீர்கள். சபிக்கப்பட்டது – இது இதுவரை பத்தொன்பது மகுள்களின் உயிரைப் பலி வாங்கியுள்ளது'** என்று எழுதப்பட்டிருந்ததைப் பார்த்து ஏளனப் புன்னகை ஒன்றை அவன் தன் உதடுகளில் படரவிட்டான்.

பின்னர் மால்ஃபாய் அங்கிருந்து திரும்பி, தனக்கு எதிரே இருந்த அலமாரியைப் பார்த்தான். நேராக அதை நோக்கி நடந்து வந்து அதன் கைப்பிடியை நோக்கி அவன் தன் கையை நீட்டினான் . . .

அப்போது கல்லாவின் அருகே நின்று கொண்டிருந்த மால்ஃபாயின் அப்பா, "டிராகோ, வேலை முடிந்துவிட்டது. வா, கிளம்பலாம்," என்று கூறினார்.

மால்ஃபாய் அங்கிருந்து விலகியதும், ஹாரி தன் நெற்றி வியர்வையைத் தன் சட்டைக் கையில் துடைத்துக் கொண்டான்.

"போர்ஜின், இன்றைய தினம் உங்களுக்கு ஒரு சிறப்பான நாளாக அமைய வாழ்த்துக்கள்! பொருட்களை வந்து பெற்றுக் கொள்ள நான் நாளை உங்களை என்னுடைய மாளிகையில் எதிர்பார்க்கிறேன்."

வாயிற்கதவு மூடிய அக்கணத்திலேயே, போர்ஜின் தனது குழைச்சலான பேச்சைக் கைவிட்டார்.

"லூசியஸ் மால்ஃபாய் அவர்களே, உங்களுக்கும் இன்றைய தினம் மிகச் சிறப்பாக இருக்க என் வாழ்த்துக்கள்! நாட்டில் உலவும் கதைகள் உண்மையாக இருக்கும் பட்சத்தில், நீங்கள் உங்கள் மாளிகையில் இருக்கும் பொருட்களில் பாதியளவுகூட என்னிடம் விற்றிருக்கவில்லை . . ."

பிறகு, போர்ஜின் தனக்குத் தானே முணுமுணுத்துக் கொண்டு பின்வாசற்கதவு வழியாக வெளியேறினார். அவர் ஒருவேளை மறுபடியும் திரும்பி வந்துவிடக்கூடும் என்று பயந்த ஹாரி, மேலும் ஒரு நிமிடம் காத்திருந்துவிட்டு, பின்னர் தன்னால் முடிந்த மட்டும் சத்தமில்லாமல் அந்த அலமாரியைவிட்டு வெளியே வந்து, அங்கிருந்த கண்ணாடிப் பெட்டியைக் கடந்து அந்தக் கடையைவிட்டு வெளியேறினான்.

உடைந்து போயிருந்த தனது மூக்குக்கண்ணாடியைத் தன் முகத்திற்கு நேராகப் பிடித்தபடி அவன் சுற்றுமுற்றும் பார்த்தான்.

Scanned by CamScanner

அவன் வெளியே வந்திருந்த அச்சந்து தீய மந்திரசக்திகளுக்காக அர்ப்பணிக்கப்பட்டிருந்த கடைகளை மட்டுமே உள்ளடக்கி இருந்ததைப்போலத் தோன்றியது. அவன் தற்போது வெளியே வந்திருந்த 'போர்ஜின் & பர்க்ஸ்' கடைதான் அங்கு இருந்ததிலேயே பெரிய கடைபோலத் தோன்றியது. அதற்கு எதிரே இருந்த கடையின் சன்னலில், சுருங்க வைக்கப்பட்டிருந்த தலைகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. அதற்கு இரண்டு கடைகள் தள்ளி இருந்த ஒரு கடையில், ஒரு பெரிய கூண்டில், உயிரோடு இருந்த பிரம்மாண்டமான கருப்புச் சிலந்திகள் வைக்கப்பட்டிருந்தன. அலங்கோலமாகத் தோற்றமளித்த இரண்டு மந்திரவாதிகள் ஒரு வாயிற்கதவின் நிழலில் நின்று கொண்டு ஹாரியைச் சுட்டிக்காட்டித் தங்களுக்குள் பேசிக் கொண்டனர். வெலவெலத்துப் போன ஹாரி தன் மூக்குக்கண்ணாடியை முடிந்த மட்டும் நேராக வைத்துக் கொண்டு, அங்கிருந்து எப்படி வெளியேறுவது என்று தன் கையைப் பிசைந்து கொண்டிருந்தான்.

நச்சு மெழுகுவர்த்திகளை விற்றுக் கொண்டிருந்த ஒரு கடைக்கு மேலே தொங்கிக் கொண்டிருந்த ஒரு பழைய மர அறிவிப்புப் பலகை, அவன் 'நாக்டர்ன்' சந்தில் இருந்ததை அறிவித்தது. ஆனால் அதனால் எந்தப் பிரயோஜனமும் இருக்கவில்லை. எனெனில் அவன் அந்த இடத்தைப் பற்றி ஒருபோதும் கேள்விப்பட்டிருக்கவே இல்லை. வீஸ்லீ குடும்பத்தினரின் கணப்படுப்பு நெருப்பில் தான் நுழைந்தபோது, தன் வாயில் ஏராளமாகச் சாம்பல் புகுந்துவிட்டிருந்ததால், டயகான் சந்தின் பெயரைத் தான் சரியாக உச்சரித்திருக்காமல் போயிருக்கக்கூடும் என்று அவன் சந்தேகித்தான். அமைதியாக இருக்க முயற்சித்துக் கொண்டே, அடுத்து என்ன செய்யலாம் என்று அவன் யோசித்தான்.

"என்ன தம்பி, வழி தவறிவிட்டாயா?" என்று ஒரு குரல் அவனது காதுகளுக்கு அருகே கேட்டதும் அவன் துள்ளிக் குதித்தான்.

அவன் முன்னால் மிக வயதான ஒரு மந்திரவாதினி நின்று கொண்டிருந்தாள். அவள் வைத்திருந்த ஒரு தாம்பாளத்தில் இருந்தவை முழுமையான மனிதக் கை நகங்கள்போலத் தோன்றின. அவள் ஹாரியை வஞ்ச நோக்குடன் பார்த்தாள். பாசி படிந்திருந்த அவளது பற்கள் இளித்தன. ஹாரி பயந்து பின்வாங்கினான்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை. கேட்டதற்கு நன்றி," என்று அவன் கூறினான். "நான் வந்து –"

"ஹாரி! நீ இங்கே என்ன பண்ணிக் கொண்டிருக்கிறாய்?"

ஹாரியின் இதயம் துள்ளிக் குதித்தது. அது அந்த மந்திரவாதினியையும் திடுக்கிடச் செய்தது. ஒரு குத்துக் கை நகங்கள் அவளது காலடியில் விழுந்து சிதறின. அப்போது, மிகப் பெரிய உருவத்தைக் கொண்டிருந்த, ஹாக்வார்ட்ஸ் கோட்டைப் பாதுகாவலரான ஹாக்ரிட், தனது கரடுமுரடான முகத்தின் முக்கால்

Scanned by CamScanner

பகுதியை மறைக்கும் விதத்தில் வளர்ந்திருந்த தன் தாடிக்குள் இருந்து எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த தன் கருவண்டுக் கண்கள் பிரகாசமாக மினுமினுக்கத் தங்களை நோக்கி அசைந்து வந்ததைப் பார்த்த அந்த மந்திரவாதினி தனக்குத் தானே முனகிக் கொண்டாள்.

"ஹாக்ரிட்," என்று ஹாரி நிம்மதியுடன் கூக்குரலிட்டான். "நான் வழி தவறிவிட்டேன் . . . ஃபுஃளூ பொடி . . ."

ஹாக்ரிட் ஹாரியின் பின்கழுத்தைத் தன் கையால் பிடித்துத் தூக்கித் தன்னை நோக்கி இழுத்தார். இந்தக் களேபரேத்தில் அந்த மந்திரவாதினியின் கையில் இருந்த தாம்பாளம் எகிறியது. அவளது கிறீச்சென்ற கத்தல், வளைந்து நெளிந்து சென்று கொண்டிருந்த அந்தச் சந்து நெடுகிலும் அவர்களைத் தொடர்ந்து வந்தது. அவர்கள் பிரகாசமான சூரிய வெளிச்சத்திற்குள் வந்ததும் தூரத்தில் பளிங்கு வெள்ளை நிறத்தில் இருந்த, அவனுக்குப் பரிச்சயமான ஒரு கட்டிடம் ஹாரியின் கண்முன் தோன்றியது. அது கிரிங்காட்ஸ் வங்கி. ஹாக்ரிட் அவனை நேராக டயகான் சந்திற்குள் அழைத்து வந்துவிட்டிருந்தார்.

"நீ என்ன இப்படி அலங்கோலமாக இருக்கிறாய்?" என்று கரகரத்தக் குரலில் கூறிய ஹாக்ரிட், அவன்மீது படிந்திருந்த சாம்பலைத் தட்டினார். அவர் தட்டிய வேகத்தில் 'அப்போத்தக்கரி' கடைக்கு வெளியே இருந்த, துர்நாற்றம் வீசிக் கொண்டிருந்த டிராகன் எரு இருந்த பீப்பாய்களின் மேல் போய் ஹாரி விழவிருந்தான். "ஹாரி, போயும் போயும் நாக்டர்ன் சந்தில் போய் அலைந்து கொண்டிருந்தாயே! எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. அது ஒரு பயங்கரமான இடம் – அந்த இடத்தில் வைத்து உன்னை யாரும் பார்க்காமல் இருப்பது உனக்கு நல்லது –"

மீண்டும் அவன்மீது படிந்திருந்த சாம்பலைத் தட்ட எத்தனித்த ஹாக்ரிட்டின் கையில் சிக்காமல் குனிந்து கொண்ட ஹாரி, "எனக்கும் அது புரிந்துவிட்டது," என்று கூறினான். "நான் வழி தவறிவிட்டேன் என்று ஏற்கனவே கூறினேன் இல்லையா? அது போகட்டும், நீங்கள் அங்கு என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?"

"நான் 'மாமிசம் தின்னும் நத்தை விரட்டி'யை வாங்குவதற்காக வந்தேன்," என்று ஹாக்ரிட் முனகினார். "அவை நம் பள்ளிக்கூடத்தின் முட்டைக்கோஸ் தோட்டங்களை நாசம் செய்து கொண்டிருக்கின்றன. ஆமாம், நீ தனியாகவா வந்தாய்?"

"நான் வீஸ்லீ குடும்பத்தினருடன் தங்கியிருக்கிறேன். ஆனால் நாங்கள் எப்படியோ பிரிந்துவிட்டோம்," என்று ஹாரி விவரித்தான். "நான் போய் அவர்களைக் கண்டுபிடிக்க வேண்டும்."

அவர்கள் இருவரும் சேர்ந்து அந்தத் தெருவில் நடந்தனர்.

"நீ ஏன் என் கடிதங்களுக்கு ஒருபோதும் பதிலே போடவில்லை?" என்று ஹாக்ரிட் கேட்டார். ஹாரி அவருடன் ஓட்டமும் நடையுமாக வந்து கொண்டிருந்தான் (ஹாக்ரிட் தன் பெரிய கால்களால் ஓர் எட்டு வைத்தால், ஹாரி அதற்கு ஈடு கொடுத்து நடக்க மூன்று

Scanned by CamScanner

எட்டுகள் எடுத்து வைக்க வேண்டி இருந்தது). டாபி மற்றும் டர்ஸ்லீ குடும்பத்தைப் பற்றிய எல்லாவற்றையும் ஹாரி ஹாக்ரிட்டிடம் எடுத்துரைத்தான்.

"மடத்தனமான மகுள்கள்!" என்று ஹாக்ரிட் உறுமினார். "எனக்கு மட்டும் இது தெரிந்திருந்தால் –"

"ஹாரி, ஹாரி, இங்கே பார்!"

ஹாரி அண்ணாந்து பார்த்தான். கிரிங்காட்ஸ் வங்கிக்கு இட்டுச் சென்ற படிக்கட்டுகளின் உச்சியில் ஹெர்மயனி நின்று கொண்டிருந்தாள். புதர்போல வளர்ந்திருந்த தனது கூந்தல் காற்றில் பறக்க, அவள் அவர்களை நோக்கிப் படிகளில் வேகமாக இறங்கி ஓடி வந்தாள்.

"ஆமாம், உன் கண்ணாடிக்கு என்ன ஆயிற்று? ஹலோ ஹாக்ரிட்! . . . உங்கள் இரண்டு பேரையும் மீண்டும் ஒருசேரப் பார்க்க மிகவும் சந்தோஷமாக இருக்கிறது . . . ஹாரி, நீ கிரிங்காட்ஸ் வங்கிக்குள் வரப் போகிறாயா?"

"முதலில் நான் வீஸ்லீ குடும்பத்தினரைக் கண்டுபிடிக்க வேண்டும்," என்று ஹாரி கூறினான்.

"அதற்கு நீ அதிக நேரம் காத்திருக்க வேண்டியிருக்காது," என்று கூறிய ஹாக்ரிட், வாயெல்லாம் பல்லாகச் சிரித்தார்.

ஹாரியும் ஹெர்மயனியும் தங்களைச் சுற்றிப் பார்த்தனர். கூட்டமாக இருந்த அத்தெருவிலிருந்து ரான், ஃபிரெட், ஜார்ஜ், பெர்சி, ஆர்தர் ஆகியோர் அவர்களை நோக்கி அம்பெனப் பாய்ந்து ஓடி வந்து கொண்டிருந்தனர்.

"ஹாரி," என்றழைத்த ஆர்தருக்கு மூச்சு வாங்கியது. "நீ ஒரே ஒரு கணப்படுப்பு மட்டுமே தள்ளிச் சென்றிருப்பாய் என்று நாங்கள் நம்பிக் கொண்டிருந்தோம் . . ." வியர்வையில் பளபளத்துக் கொண்டிருந்த தன் வழுக்கைத் தலையைத் துடைத்தவாறே, அவர், "மோலிதான் கவலையில் கலங்கிப் போயிருக்கிறாள் – அவள் இப்போது வந்துவிடுவாள்," என்று கூறினார்.

"நீ எங்கே வெளியே வந்தாய்?" என்று ரான் கேட்டான்.

"நாக்டர்ன் சந்து," என்று ஹாக்ரிட் கவலையுடன் கூறினார்.

ஃபிரெட்டும் ஜார்ஜும் **"அபாரம்!"** என்று ஒருசேரக் கத்தினர்.

"நாங்கள் ஒருபோதும் அங்கு அனுமதிக்கப்பட்டது இல்லை," என்று ரான் பொறாமையுடன் கூறினான்.

மோலி பாய்ந்து ஓடி வந்து கொண்டிருந்தார். அவரது ஒரு கையில் அவரது கைப்பை வேகமாக ஆடிக் கொண்டிருந்தது. மற்றொரு கையைப் பிடித்துக் கொண்டு ஜின்னி தொங்கிக் கொண்டிருந்தாள்.

"ஓ, ஹாரி – நீ எங்காவது தொலைந்து போயிருக்கக்கூடும் –"

மேல்மூச்சுக் கீழ்மூச்சு வாங்கியபடியே அவர் தன் பைக்குள்ளிருந்து ஒரு துணியை வெளியே எடுத்து, ஹாக்ரிட்டின் துடைத்தலுக்குத் தப்பியிருந்த அவனது சாம்பலைத் துடைத்தார்.

Scanned by CamScanner

ஆர்தர் ஹாரியின் மூக்குக்கண்ணாடியை எடுத்து அதன்மீது தன் மந்திரக்கோலால் ஒரு சிறு தட்டுத் தட்டி அவனிடம் திருப்பிக் கொடுத்தார். அது புத்தம் புதியதுபோல ஆகியிருந்தது.

"சரி, எனக்கு வேறு வேலை இருக்கிறது, நான் வருகிறேன்," என்று ஹாக்ரிட் கூறினார். அவரது கரங்களை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டிருந்த மோலி, "நாக்டர்ன் சந்து! நல்ல வேளை ஹாக்ரிட், நீங்கள் மட்டும் ஹாரியைக் கண்டுபிடிக்காமல் இருந்திருந்தால்!" என்று கூறினார். "சரி, நாம் ஹாக்வார்ட்ஸில் சந்திக்கலாம்!" என்று அவர்கள் அனைவரையும் பார்த்துக் கூறிவிட்டு, ஹாக்ரிட் திரும்பி நடந்தார். கூட்டத்தால் நிரம்பி வழிந்து கொண்டிருந்த அத்தெருவில் அவரது தோள்களும் தலையும் எல்லோரையும்விட உயரமாகத் தெரிந்தன.

அவர்கள் அனைவரும் கிரிங்காட்ஸ் வங்கியின் படிக்கட்டுகளில் ஏறிக் கொண்டிருந்தபோது, ஹாரி ரானிடமும் ஹெர்மயனியிடமும், "போர்ஜின் & பர்க்ஸ் கடையில் நான் யாரைப் பார்த்தேன் தெரியுமா?" என்று கேட்டான். "மால்ஃபாயையும் அவனது அப்பாவையும்."

அவனுக்குப் பின்னால் இருந்த ஆர்தர் டக்கென்று, "லூசியஸ் மால்ஃபாய் அங்கு ஏதாவது வாங்கினாரா?" என்று கேட்டார்.

"இல்லை. அவர் விற்றுக் கொண்டிருந்தார்."

"அப்படியானால் கவலை அவரைப் பிடித்து ஆட்டிக் கொண்டிருக்கிறது என்று அர்த்தம்," என்று ஆர்தர் வீஸ்லீ குரூரத் திருப்தியுடன் கூறினார். "எதிலாவது லூசியஸ் மால்ஃபாய் என்னிடம் மாட்டிக் கொண்டால் நன்றாக இருக்கும் . . ."

அந்த வங்கியின் வாசலில் இருந்த விசித்திரக்குள்ளன் அவர்களுக்கு வணக்கம் கூறி அவர்களை உள்ளே அனுமதித்தபோது, "ஆர்தர், நீங்கள் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருப்பது நல்லது," என்று மோலி கூறினார். "அக்குடும்பம் வம்பு தும்புகளுக்குப் பேர் போனது. தேவையில்லாமல் அகலக் கால் வைத்துவிடாதீர்கள்."

"அப்படியானால், அவர்களைச் சரிக்குச் சமானமாக எதிர்த்து நிற்கக்கூடியவனாக என்னை நீ கருதவில்லை, அப்படித்தானே?" என்று ஆர்தர் எரிச்சலுடன் கேட்டார். அப்போது அவர்கள் நுழைந்திருந்த பளிங்கால் ஆன பிரம்மாண்டமான அறையில் இருந்த நீண்ட கவுன்டருக்கு அருகே, ஹெர்மயனியின் பெற்றோர், ஹெர்மயனியால் தங்களிடம் அறிமுகப்படுத்தப்படுவதற்காகப் பதற்றத்துடன் காத்திருந்ததைப் பார்த்த ஆர்தரின் கவனம் தடைப்பட்டது.

ஆர்தர் ஹெர்மயனியின் பெற்றோரைப் பார்த்து, **"ஓ, நீங்கள் மகுள்கள் என்பது எனக்கு மறந்துவிட்டது!"** என்று மகிழ்ச்சியுடன் கூறினார். "அப்படியானால், நாம் இதைக் கொண்டாட வேண்டும். இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? ஓ, மகுள்களின் பணத்தை மாற்றிக் கொண்டிருக்கிறீர்களா?" ஹெர்மயனியின் தந்தையின் கையிலிருந்த ஒரு பத்துப் பவுன்டு நோட்டை ஆர்தர் ஆரவாரத்துடன் சுட்டிக்காட்டி, "மோலி, இதைப் பார்!" என்று கூறினார்.

Scanned by CamScanner

வேறு ஒரு விசித்திரக்குள்ளன் வீஸ்லீ குடும்பத்தினரையும் ஹாரியையும் அவர்களுடைய பாதாள அறைப் பாதுகாப்புப் பெட்டகங்களுக்குக் கூட்டிச் செல்வதற்காக அங்கு வந்தபோது, ரான் ஹெர்மயனியிடம், "சிறிது நேரத்தில் உன்னை மீண்டும் இங்கேயே சந்திக்கிறேன்," என்று கூறினான்.

வங்கியினுள் பூமிக்குக் கீழே இருந்த சுரங்கப் பாதையில் போடப்பட்டிருந்த குட்டி ரயில் தண்டவாளங்களில் விசித்திரக்குள்ளர்கள் வேகமாக ஓட்டிக் கொண்டிருந்த சிறிய வண்டிகளில் வீஸ்லீ குடும்பத்தினரும் ஹாரியும் ஏறிக் கொண்டனர். தாங்கள் வீஸ்லீ குடும்பத்தினரின் பாதுகாப்புப் பெட்டகத்தைத் தலைதெறிக்கும் வேகத்தில் சென்றடைந்த பயணத்தை ஹாரி வெகுவாக ரசித்தான். ஆனால் வீஸ்லீ குடும்பத்தினரின் பாதுகாப்புப் பெட்டகம் திறக்கப்பட்டவுடன், அவன் நாக்டர்ன் சந்தில் அடைந்ததைவிட அதிக அதிர்ச்சி அடைந்தான். அங்கு ஒரு சிறு குவியல் வெள்ளி சிக்கிள் நாணயங்களும் ஒரே ஒரு தங்க கேல்லியன் நாணயமும் மட்டுமே இருந்தன. மோலி உள்ளே நுழைந்து அங்கிருந்த நாணயங்கள் அனைத்தையும் துடைத்தெடுத்துத் தன் பையில் போட்டுக் கொண்டபோது மனமுடைந்து போனார். ஆனால் அவர்கள் அனைவரும் ஹாரியின் பெட்டகத்திற்குச் சென்றபோது ஹாரி மிகவும் சங்கடமாக உணர்ந்தான். அவன் அவசர அவசரமாக அங்கிருந்த நாணங்களில் சிலவற்றைத் தன் தோல் பையில் அள்ளிப் போட்டுக் கொண்டிருந்தபோது, அந்த நாணயக் குவியல்களை அவர்களது பார்வையில் இருந்து மறைக்க முயற்சித்தான்.

வங்கியைவிட்டு வெளியே வந்ததும் அவர்கள் ஆளுக்கொரு திசையாகச் சென்றனர். பெர்சி தனக்கு ஒரு புதிய இறகுப் பேனா வேண்டும் என்று முனகிக் கொண்டே சென்றான். ஃபிரெட்டும் ஜார்ஜும் தங்களுடைய ஹாக்வார்ட்ஸ் நண்பனான லீ ஜோர்டன் அங்கு இருந்ததைக் கண்டனர். மோலியும் ஜின்னியும் பழைய அங்கிகளை விற்பனை செய்த கடைக்குச் செல்லவிருந்தனர். ஹெர்மயனியின் குடும்பத்தினரை 'த லீக்கி கால்ட்ரன்' மதுவகத்திற்கு அழைத்துச் செல்வதில் ஆர்தர் குறியாக இருந்தார்.

மோலி எல்லோரையும் பார்த்து, "உங்களுடைய பள்ளிப் பாடப் புத்தகங்களை வாங்குவதற்காக நாம் இன்னும் ஒரு மணி நேரத்தில் 'ஃப்ளரிஷ் & பிளாட்ஸ்' கடையில் சந்திக்கலாம்," என்று கூறிவிட்டு, ஜின்னியுடன் நடையைக் கட்டினார். ஃபிரெட்டும் ஜார்ஜும் அங்கிருந்து அகன்று கொண்டிருந்தபோது, மோலி, "யாரும் எக்காரணம் கொண்டும் நாக்டர்ன் சந்திற்குள் அடியெடுத்து வைக்கக்கூடாது," என்று சத்தமாகக் கூறினார்.

கற்கள் பதிக்கப்பட்டிருந்த, நீண்டு வளைந்து சென்ற அத்தெருவில், ஹாரி, ரான், ஹெர்மயனி ஆகிய மூவரும் காலாற நடந்து சென்றனர். ஹாரியின் பையில் தங்கம், வெள்ளி, மற்றும் வெண்கல நாணயங்கள்,

Scanned by CamScanner

'எங்களைச் செலவு செய்' என்று கூறி ஆனந்தக் கூத்தாடிக் கொண்டிருந்ததால் அவன் தங்கள் மூவருக்கும் மூன்று பெரிய ஸ்டிராபெர்ரி ஐஸ்கிரீம்களை வாங்கினான். அவர்கள் மூவரும் சத்தமாகத் தங்கள் ஐஸ்கிரீம்களை உறிஞ்சிக் கொண்டே அத்தெருவில் இருந்த பிரமிக்க வைக்கும் கடைகளின் சன்னல்களை வேடிக்கை பார்த்தபடி நடந்தனர். தோல் காகிதங்களும் பேனா மையும் வாங்குவதற்காக அடுத்திருந்த ஒரு கடைக்கு ஹெர்மயனி ஹாரியையும் ரானையும் இழுத்துக் கொண்டு செல்லும்வரை, 'குவாலிட்டி குவிடிச் சப்ளைஸ்' என்ற கடையின் சன்னலில் தெரிந்த 'சட்லி கேனன்' அங்கிகளை ரான் ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான். 'காம்போல் & ஜேப்ஸ்' கடையில் **'ஃபிலிபஸ்டர்' வாணவெடிகளை** வாங்கி அடுக்கிக் கொண்டிருந்த ஃபிரெட், ஜார்ஜ், மற்றும் லீ ஜோர்டனை அவர்கள் சந்தித்தனர். உடைந்து போயிருந்த மந்திரக்கோல்கள், ஒழுங்காக நிற்க மறுத்தப் பித்தளை எடைக் கருவிகள், மாயத் திரவங்களின் கறைகளால் அலங்கோலப்படுத்தப்பட்டு இருந்த அங்கிகள் போன்ற உருப்படாத பொருட்களை விற்ற ஒரு காயலான் கடையில் அவர்கள் பெர்சியைச் சந்தித்தனர். அங்கு, முற்றிலும் சுவாரசியமற்று இருந்த, **'பெரும் சக்தியை வசப்படுத்திய மாணவ அணித் தலைவர்கள்'** என்ற சிறிய புத்தகத்திற்குள் அவன் மூழ்கிப் போயிருந்தான்.

பெர்சி படித்துக் கொண்டிருந்த புத்தகத்தின் பின்னட்டையில் எழுதப்பட்டிருந்த **'ஹாக்வார்ட்ஸ் மாணவ அணித் தலைவர்களும் அவர்கள் பின்னாளில் பார்த்த வேலைகளும்'** என்ற வார்த்தைகளை ரான் உரக்கப் படித்தான். "இது படுசுவாரசியமாக இருக்கிறதே!"

"இங்கிருந்து உடனே போய்விடு," என்று பெர்சி ரானைப் பார்த்துக் கத்தினான்.

பெர்சி அந்தப் புத்தகத்தைப் படிக்கட்டும் என்று விட்டுவிட்டு ரான் அங்கிருந்து அகன்றபோது, அவன் ஹாரியிடமும் ஹெர்மயனியிடமும், "பெர்சி தன் வருங்காலம் குறித்துப் பெரிதாகக் கனவு கண்டு கொண்டிருக்கிறான். அதற்கான திட்டமும் அவன் கைவசம் இருக்கிறது . . . அவன் மந்திரஜால அமைச்சராக ஆக விரும்புகிறான் . . ." என்று தெரிவித்தான்.

ஒருமணி நேரம் கழித்து அவர்கள் 'ஃப்ளரிஷ் & பிளாட்ஸ்' புத்தகக் கடையை அடைந்தனர். ஆனால் அவர்கள் மட்டும் அந்தப் புத்தகக் கடைக்கு வந்திருக்கவில்லை. அவர்கள் அங்கு சென்றபோது அக்கடைக்குள் நுழைய ஒரு பெரிய கூட்டம் முண்டியடித்துக் கொண்டிருந்ததைக் கண்டு அவர்களுக்குப் பெரும் ஆச்சரியம் ஏற்பட்டது. அதற்கான காரணத்தை அக்கடையின் மேல் சன்னலில் தொங்கிக் கொண்டிருந்த ஒரு பெரிய விளம்பரத் திரைச்சீலை பறையறிவித்துக் கொண்டிருந்தது:

Scanned by CamScanner

இன்று மதியம் 12.30 மணியிலிருந்து மாலை 4.30 மணி வரை

கில்டராய் லாக்ஹார்ட்

தனது சுயசரிதையான 'மாயாஜாலமான நான்' புத்தகத்தில் கையெழுத்து இட்டுத் தருவார்

"நிஜமாகவே நம்மால் அவரை நேரில் பார்க்க முடியுமா?" என்று ஹெர்மயனி கீச்சிட்டாள். "இந்த வருடம் நமக்குத் தேவையான புத்தகங்களில் பெரும்பாலானவற்றை அவர்தான் எழுதியிருக்கிறார்."

அந்தக் கூட்டத்தில் இருந்தவர்களில் பெரும்பாலானோர் மோலியின் வயதையொத்த மந்திரவாதினிகளே. கடை வாசலில் நின்று கொண்டிருந்த மக்களின் தொல்லைக்கு ஆளாகியிருந்த ஒரு மந்திரவாதினிச் சிப்பந்தி, "பெண்மணிகளே அமைதியாக இருங்கள் . . . தயவு செய்து தள்ளாதீர்கள் . . . புத்தகங்கள் ஜாக்கிரதை!" என்று கூறிக் கொண்டிருந்தார்.

ஹாரி, ரான், ஹெர்மயனி ஆகிய மூவரும் நெருக்கியடித்துக் கொண்டு உள்ளே புகுந்தனர். கில்டராய் லாக்ஹார்ட் தன் புத்தகங்களில் கையெழுத்திட்டுக் கொடுத்துக் கொண்டிருந்த கடையின் பின்பகுதிவரை வால்போல ஒரு பெரிய வரிசையில் மக்கள் நின்று கொண்டிருந்தனர். ஹாரியும் ஹெர்மயனியும் ரானும் 'பன்ஷி மோகினிப் பிசாசிடம் இருந்து விடுதலை' என்ற புத்தகத்தின் பிரதியை ஆளுக்கொன்றாக எடுத்துக் கொண்டு, வரிசையில் தங்கள் குடும்பத்தினர் நின்று கொண்டிருந்த இடத்தில் புகுந்து கொண்டனர்.

"நல்ல வேளை, நீங்களும் வந்துவிட்டீர்கள்," என்று மோலி அவர்களைப் பார்த்துக் கூறினார். அவருக்கு மூச்சிறைத்துக் கொண்டிருந்தது. அவர் தன் தலைமுடியைத் தொடர்ந்து கோதிவிட்டுக் கொண்டே இருந்தார். "இன்னும் ஒருசில நிமிடங்களில் கில்டராயை நாம் பார்த்துவிடலாம்."

விரைவில் கில்டராய் லாக்ஹார்ட் பார்வையில் பட்டார். தனது புகைப்படங்கள் சூழ்ந்த ஒரு மேசையில் அவர் அமர்ந்திருந்தார். அப்புகைப்படங்களில் இருந்த அவரது முகங்கள் கூட்டத்தினரை நோக்கித் தமது முத்துப் பற்களைக் காட்டிக் கவர்ச்சியாக புன்னகைத்துக் கொண்டும் கண் சிமிட்டிக் கொண்டும் இருந்தன. அவர் தனது கண்களின் அதே நீல நிறத்தில் ஓர் அங்கியை அணிந்திருந்தார். தனது சுருண்ட தலைமுடியின்மீது மந்திரவாதிகளின் கூம்புத் தொப்பி ஒன்றை நளினமான ஒரு கோணத்தில் அவர் அணிந்திருந்தார்.

ஒரு குள்ளமான, எரிச்சலூட்டும் தோற்றத்துடன் இருந்த ஒரு நபர், தன் கையில் ஒரு பெரிய கருப்புநிறக் கேமராவுடன் அங்குமிங்கும் ஓடியாடிப் புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்தார். அக்கேமராவின்

Scanned by CamScanner

ஃபிளாஷ் கண்களைக் குருடாக்கும் விதத்தில் ஒளியை அள்ளி வீசிக் கொண்டிருந்தது. ஒவ்வொரு முறை ஃபிளாஷ் அடிக்கப்பட்டபோதும் அது ஊதா நிறப் புகையை உமிழ்ந்தது.

நல்ல கோணம் ஒன்றிற்காக முயன்று கொண்டிருந்த அப்புகைப்படக்காரர், "இங்கிருந்து நகர்ந்து கொள்," என்று ரானிடம் எரிந்து விழுந்தார். "நான் **'த டெய்லி புராஃபெட்'** பத்திரிகைக்காகப் படம் எடுத்துக் கொண்டிருக்கிறேன்."

அவர் தன் காலில் மிதித்திருந்த இடத்தைத் தடவிவிட்டுக் கொண்டே, ரான், "பயங்கர அலட்டல்!" என்று முனகினான்.

அவன் கூறியது கில்டராய் லாக்ஹார்ட்டின் காதுகளிலும் விழுந்தது. அவர் நிமிர்ந்து ரானைப் பார்த்தார். பின் ரானின் பக்கத்தில் இருந்த ஹாரியின்மீது அவரது பார்வை நிலை கொண்டது. உடனே அவர் தன் இருக்கையிலிருந்து துள்ளிக் குதித்து எழுந்தார். **"இது உண்மையிலேயே ஹாரி பாட்டரா?"** என்று உற்சாகமாகக் கத்தினார்.

கூட்டம் ஆரவாரத்துடன் முணுமுணுத்துக் கொண்டே வழிவிட்டது. லாக்ஹார்ட் முன்னே பாய்ந்து வந்து ஹாரியின் கையைப் பிடித்து அவனை முன்னால் இழுத்துச் சென்றார். கூட்டம் பலமாகக் கை தட்டியது. லாக்ஹார்ட் புகைப்படக்காரருக்காக ஹாரியின் கையைப் பிடித்துக் குலுக்கியபோது, ஹாரியின் முகம் ஃபிளாஷின் வெளிச்சத்தில் வெளிறிப் போனது. அந்தப் புகைப்படக்காரரோ கண்மூடித்தனமாகப் புகைப்படம் மேல் புகைப்படமாக எடுத்துத் தள்ளிக் கொண்டிருந்தார். அவரது கேமராவில் இருந்து வந்த ஊதா நிறப் புகை வீஸ்லீ குடும்பத்தினரை அப்படியே மூடியது.

லாக்ஹார்ட் தன் முத்துப் பற்களை நன்றாகக் காட்டிக் கொண்டே, "ஹாரி, உன் அசத்தலான புன்னகையை அள்ளி வீசு," என்று கூறினார். "நாம் இருவரும் சேர்ந்து இருக்கும் புகைப்படத்தைப் பத்திரிகைகள் முகப்புப் பக்கத்தில் போடப் போட்டிப் போடும்."

அவர் ஒருவழியாக அவனை விடுவித்தபோது, ஹாரியின் கைவிரல்கள் மரத்துப் போயிருந்தன. அவன் வீஸ்லீ குடும்பத்தினர் இருந்த இடத்தை நோக்கிப் பக்கவாட்டில் நகர முயன்றபோது, லாக்ஹார்ட் தனது கையை ஹாரியின் தோள்களைச் சுற்றிப் போட்டுக் கொண்டு அவனை இறுக்கமாகத் தன் பக்கம் அணைத்துக் கொண்டார்.

கூட்டத்தினர் அமைதி காக்க வேண்டும் என்று உணர்த்தும் விதத்தில் தன் கையை அசைத்துக் கொண்டே, லாக்ஹார்ட, "சீமாட்டிகளே, சீமான்களே," என்று சத்தமாகத் துவக்கினார். "என்னவோர் அற்புதமான கணம் இது! ஒரு சிறிய அறிவிப்பை வெளியிடுவதற்கான கச்சிதமான வேளை இதுதான். இந்த அறிவிப்பை வெளியிடுவதற்கு நான் நீண்ட நாட்களாகக் காத்து வந்திருக்கிறேன்."

Scanned by CamScanner

"இந்த இளம்புயல் ஹாரி இந்த 'ஃப்ளரிஷ் & பிளாட்ஸ்' புத்தகக் கடைக்குள் நுழைந்தபோது அவன் என் சுயசரிதையை வாங்க மட்டுமே வந்தான் – நான் அவனுக்கு அதன் ஒரு பிரதியை இலவசமாக அளிப்பதில் பேருவகை கொள்கிறேன்" – கூட்டம் மறுபடியும் கைதட்டியது. லாக்ஹார்ட் ஹாரியை ஓர் ஆட்டு ஆட்டினார். அவனது மூக்குக்கண்ணாடி நழுவி அவனது மூக்கு நுனிக்கு வந்தது. பின் அவர் தொடர்ந்தார்: "ஆனால் வெகு விரைவில், 'மாயாஜாலமான நான்' என்ற எனது புத்தகத்தைவிட இன்னும் அதிகமானவற்றைத் தான் பெறவிருக்கிறோம் என்பது அவனுக்கு தெரியாது. அவனும் அவனது பள்ளித் தோழர்களும் மாயாஜாலமான என்னை நிஜமாகவே பெறவிருக்கின்றனர். ஆமாம், சீமாட்டிகளே, சீமான்களே! வரும் செப்டம்பர் மாதத்திலிருந்து, ஹாக்வார்ட்ஸ் மந்திர தந்திர மாயாஜாலப் பள்ளியில் 'தீய மந்திர சக்திகளுக்கு எதிரான பாதுகாப்பு' என்ற பாடத்தைக் கற்றுக் கொடுக்கும் பேராசிரியராக நான் சேரவிருக்கிறேன் என்பதை நான் இங்கு உங்களுக்கு மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் தெரிவித்துக் கொள்கிறேன்."

கூட்டம் கரகோஷித்தது, கைதட்டி ஆர்ப்பரித்தது. லாக்ஹார்ட் தான் எழுதியிருந்த எல்லாப் புத்தகங்களின் பிரதிகளையும் ஹாரிக்குப் பரிசளித்தார். அவன் அதைச் சுமக்க முடியாமல் சுமந்து கொண்டு, மேடை வெளிச்சத்தில் இருந்து வெளியேறி ஒருவழியாக அந்த அறையின் ஒரு மூலையைச் சென்றடைந்தான். அங்கு ஜின்னி தனது புதிய கொப்பரையுடன் நின்று கொண்டிருந்தாள்.

ஹாரி தன் கையிலிருந்த புத்தகங்களை அவளிடமிருந்த கொப்பரைக்குள் கொட்டியவாறு, "நீ இவற்றை வைத்துக் கொள்," என்று முணுமுணுத்தான். "நான் என்னுடைய புத்தகங்களை விலை கொடுத்து வாங்கிக் கொள்கிறேன் –"

அவனது பேச்சை இடைமறித்து, "நீ அதை வெகுவாக விரும்பினாய், இல்லையா ஹாரி?" என்று ஹாரிக்குப் பின்னால் இருந்து ஒரு குரல் கேட்டது. அது யாருடைய குரல் என்று ஹாரியால் கண்டுபிடிக்க முடியவில்லை. அவன் நிமிர்ந்து பார்த்தபோது அவனுக்கு வெகு அருகே டிராகோ மால்ஃபாய் நின்று கொண்டிருந்தான். அவனது முகத்தில் வழக்கமான ஏளனப் புன்னகை தவழ்ந்து கொண்டிருந்தது.

"ஹாரி பாட்டர் எங்கு போனாலும் அவனுக்கு முன்னால் அவனது புகழ் அங்கு போய் நின்று கொண்டிருக்கிறது!" என்று மால்ஃபாய் கூறினான். "பத்திரிகை முகப்புச் செய்தியில் இடம்பெறாமல் அவனால் ஒரு புத்தகக் கடைக்குக்கூடப் போக முடியாது."

"அவனைத் தேவையில்லாமல் சீண்டாதே. அவனுக்கு இதெல்லாம் தேவையே இல்லை," என்று ஜின்னி கூறினாள். ஹாரியின் முன்னிலையில் அவள் வாய் திறந்தது அதுதான் முதல் தடவை. அவள் மால்ஃபாயை முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

Scanned by CamScanner

"ஹாரி பாட்டர், உனக்கு ஒரு தோழி கிடைத்துவிட்டாளா?" என்று மால்ஃபாய் நீட்டி முழக்கிப் பேசினான். ஜின்னியின் முகம் குங்குமமாய்ச் சிவந்தது. அப்போது ரானும் ஹெர்மயனியும் லாக்ஹார்ட்டின் புத்தக மூட்டைகளைச் சுமக்க முடியாமல் சுமந்து கொண்டு அக்கூட்டத்தில் கஷ்டப்பட்டு வழியேற்படுத்திக் கொண்டு அங்கு வந்து சேர்ந்தனர்.

ரான் தன் செருப்பின் அடியில் ஒட்டியிருந்த ஏதோ ஓர் அருவருப்பான பொருளைப் பார்ப்பதுபோல மால்ஃபாயைப் பார்த்து, "ஓ, நீயா?" என்று கேட்டான். "இங்கு ஹாரியைப் பார்த்தது உனக்கு அதிர்ச்சியாக இருக்கிறது, இல்லையா?"

"ரான், உன்னை ஒரு கடைக்குள் பார்த்ததைவிட இது ஒன்றும் அதிர்ச்சியாக இல்லை," என்று மால்ஃபாய் பதிலடி கொடுத்தான். "இவ்வளவு புத்தகங்களை வாங்கியிருக்கிறாயே? உன் பெற்றோர் இதற்காக ஒரு மாதம் பட்டினி கிடக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன்."

ஜின்னியின் முகம் அளவுக்கு ரானின் முகமும் சிவந்தது. அவனும் தன் புத்தகங்களை ஜின்னியின் கொப்பரைக்குள் போட்டுவிட்டு, மால்ஃபாயை நோக்கி அடியெடுத்து வைத்தான். ஆனால் ஹாரியும் ஹெர்மயனியும் அவனது சட்டைக் காலரைப் பிடித்துக் கொண்டனர்.

அப்போது, ஃபிரெட் மற்றும் ஜார்ஜ் சகிதமாகக் கஷ்டப்பட்டு அங்கு வந்து சேர்ந்த ஆர்தர், "ரான், இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறாய்? இங்கு நின்றால் பைத்தியம் பிடித்துவிடும்போல இருக்கிறது. நாம் வெளியே போகலாம்," என்று கூறினார்.

"ஆகா! சாட்சாத் ஆர்தர் வீஸ்லீ!"

அது லூசியஸ் மால்ஃபாய். அவர் தன் ஒரு கையை மால்ஃபாயின் தோளின்மீது வைத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தார். அவரது முகத்தில் மால்ஃபாயின் முகத்தில் இருந்த அதே பரிகாசப் புன்னகை தவழ்ந்து கொண்டிருந்தது.

"ஓ, லூசியஸா?" என்று ஆர்தர் விட்டேத்தியாக வினவினார்.

"மந்திரஜால அமைச்சகத்தில் நீங்கள் கலக்கிக் கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டேனே!" என்று லூசியஸ் மால்ஃபாய் கூறினார். "எங்கு பார்த்தாலும் அதிரடிச் சோதனைகள் . . . ஆமாம், இதற்கெல்லாம் உங்களுக்குக் கூடுதல் சம்பளம் கொடுக்கிறார்களா?"

லூசியஸ் மால்ஃபாய் ஜின்னியின் கொப்பரைக்குள் கையைவிட்டு அங்கிருந்த பளபளப்பான பல புத்தகங்களுக்கு நடுவே இருந்த, நைந்து போன ஒரு பழைய **'உருவ மாற்றம் குறித்த ஆரம்பக் கையேடு'** புத்தகப் பிரதியை உருவி எடுத்தார்.

"இதைப் பார்த்தால், உங்களுக்குக் கூடுதலாக ஒன்றும் கிடைப்பதுபோலத் தெரியவில்லையே," என்று லூசியஸ் கூறினார். "அப்படி இருக்கும்போது, எதற்காக மந்திரவாதிச் சமூகத்திற்கே களங்கம் ஏற்படுத்தும் வேலைகளில் நீங்கள் இறங்க வேண்டும்?"

Scanned by CamScanner

ஆர்தரின் முகம் ரான், ஜின்னி ஆகிய இருவரையும்விட மோசமாகச் சிவந்தது.

"லூசியஸ், ஒரு மந்திரவாதிக்கு எது களங்கம் விளைவிக்கிறது என்பது குறித்து எங்களுக்கு வேறு ஓர் அளவுகோல் உள்ளது," என்று ஆர்தர் கூறினார்.

அவர்கள் இருவரையும் பார்த்து நெளிந்து கொண்டிருந்த ஹெர்மயனி கிரேஞ்சரின் பெற்றோரைத் தனது வெளிறிய கண்களால் நோட்டம் விட்ட லூசியஸ் மால்ஃபாய், "ஆர்தர், உங்கள் அளவுகோல் எது என்பது தெளிவாகத் தெரிகிறது. நீங்கள் யாருடன் நட்புப் பாராட்டுகிறீர்கள் என்பதைப் பார்த்தால் . . . இதைவிடக் கீழாக உங்களால் போக முடியாது என்று நான் முன்பு நினைத்து இருந்தேன் –" என்று ஆரம்பித்தார்.

ஜின்னியின் கொப்பரை அவளது கைகளில் இருந்து எகிறியது. ஆர்தர் லூசியஸ் மால்ஃபாயின்மீது பாய்ந்து அவரை ஒரு புத்தக அலமாரியின்மீது தள்ளினார். மிகக் கனமான ஒரு டஜன் மந்திரஜாலப் புத்தகங்கள் அவர்கள் எல்லோர்மீதும் இடியென இறங்கின. ஃபிரெட்டும் ஜார்ஜும், "அப்பா, அவரை ஒருகை பார்த்துவிடுங்கள்!" என்று இரைந்தனர். மோலி, "வேண்டாம் ஆர்தர், வேண்டாம்," என்று கீச்சிட்டார். கூட்டம் பதற்றப்பட்டுப் பின்னால் சாய்ந்ததில் மேலும் பல புத்தக அலமாரிகள் சரிந்தன. "சீமான்களே, தயவு செய்து – தயவுசெய்து!" என்று கடை ஊழியர் கத்திக் கொண்டிருந்தார். பிறகு எல்லாவற்றையும்விட அதிகச் சத்தமாக, "சீமான்களே, விலகுங்கள்!" என்று ஒரு குரல் கூறியது.

இறைந்து கிடந்த அப்புத்தகக் கடலைத் தாண்டிச் சிரமப்பட்டு ஹாக்ரிட் அங்கு வந்து கொண்டிருந்தார். ஒரே கணத்தில் அவர் ஆர்தரையும் லூசியஸையும் இழுத்துப் பிடித்து விலக்கினார். ஆர்தரின் உதடு கிழிந்து போயிருந்தது. **'தேரைமலங்கள் குறித்தக் கலைக்களஞ்சியம்'** என்ற புத்தகம் லூசியஸ் மால்ஃபாயின் கண்களைத் தாக்கியிருந்தது. அவரது கையில் இன்னும் ஜின்னியின் பழைய புத்தகம் இருந்தது. அவர் அதை அவளது கைகளில் திணித்தார். அவரது கண்களில் குரோதம் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது.

"இந்தா பெண்ணே, இதைப் பிடித்துக் கொள்! உன் தகப்பனால் இதைவிடச் சிறப்பான ஒன்றை வாங்கிக் கொடுக்க முடியாது –"

ஹாக்ரிட்டின் இரும்புப் பிடியிலிருந்து திமிறித் தன்னை விடுவித்துக் கொண்டு, தன்னைப் பின்தொடருமாறு டிராகோ மால்ஃபாய்க்குச் சைகை செய்துவிட்டு, லூசியஸ் அந்த இடத்தைக் காலி செய்தார்.

ஆர்தரைத் தரையிலிருந்து தூக்கியவாறே, ஹாக்ரிட், "ஆர்தர், நீங்கள் அவரை உதாசீனம் செய்திருக்க வேண்டும்," என்று கூறினார். ஆர்தர் தன் அங்கியைச் சரி செய்து கொண்டார். ஹாக்ரிட் மேலும் தொடர்ந்தார்: "கேடு கெட்டக் குடும்பம். அந்த ஒட்டுமொத்தக்

Scanned by CamScanner

குடும்பமும் அப்படித்தான். இது எல்லோருக்குமே தெரிந்த விஷயம்தான். அவர்கள் பேசுவதை நீங்கள் காதுகொடுத்துக் கேட்கும் அளவுக்கு அவர்கள் தகுதி உடையவர்கள் கிடையாது. அவர்கள் உடலில் சாக்கடை ரத்தம் ஓடுகிறது. வாருங்கள், நாம் முதலில் இங்கிருந்து வெளியே போகலாம்."

அக்கடை ஊழியர் அவர்களைத் தடுத்து நிறுத்த விரும்பியதுபோலக் காணப்பட்டார். ஆனால் அவர் ஹாக்ரிட்டின் இடுப்புவரைகூட வரவில்லை என்பதால் தன் நினைப்பை மாற்றிக் கொண்டதுபோலத் தோன்றியது. அவர்கள் அனைவரும் தெருவில் இறங்கி விரைந்தனர். ஹெர்மயனியின் பெற்றோர் பயத்தில் நடுங்கிக் கொண்டிருந்தனர். மோலி கோபத்தில் கொந்தளித்துக் கொண்டிருந்தார்.

"நீங்கள் உங்கள் குழந்தைகளுக்கு **நல்லதொரு முன்னுதாரணத்தைக்** காட்டியிருக்கிறீர்கள் . . . பொது இடங்களில் எப்படிக் கைகலப்பில் ஈடுபடலாம் என்பதை விளக்கியிருக்கிறீர்கள் . . . கில்டராய் லாக்ஹார்ட் நம்மைப் பற்றி என்ன நினைத்து இருப்பார் . . ."

"உண்மையில் அவருக்குப் பரம சந்தோஷம்," என்று ஃபிரெட் கூறினான். "நாம் வெளியேறிக் கொண்டிருந்தபோது அவர் கூறியதை நீங்கள் கேட்கவில்லையா? இந்தக் கைகலப்பைப் பத்திரிகைச் செய்தியில் சேர்க்க முடியுமா என்று அவர் அந்த புகைப்படக்காரரைக் கேட்டுக் கொண்டிருந்தார் – எல்லாமே இலவச விளம்பரம்தான்!"

ஆனால் அவர்கள் சுரத்தேயின்றி 'த லீக்கி கால்ட்ரனை' வந்தடைந்தனர். அங்கிருந்து ஹாரியும் வீஸ்லீ குடும்பத்தினரும் தாங்கள் வாங்கியிருந்த அத்தனைச் சாமான்களுடன் தங்களது வீட்டை வந்தடைய ஃபுளூ பொடி அவர்களுக்கு உதவியது. ஹெர்மயனியின் குடும்பத்தினர் அந்த மதுவகத்தின் மறுபக்கத்தில் இருந்த மகுள் தெருவிலிருந்து பேருந்து பிடித்துச் செல்வதற்காக அவர்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்டனர். பேருந்து நிறுத்தங்கள் எவ்வாறு இயங்கின என்று அவர்களிடம் கேட்க ஆர்தர் எத்தனித்தபோது, மோலி பார்த்தப் பார்வையைக் கண்டதும் பாதியிலேயே தன் வாயை மூடிக் கொண்டார்.

ஹாரி ஃபுளூ பொடியைக் கையில் எடுப்பதற்கு முன்பு, முன்ஜாக்கிரதையாகத் தன் மூக்குக்கண்ணாடியைக் கழற்றித் தன் பையில் வைத்துக் கொண்டான். அது கண்டிப்பாக அவனுக்குப் பிடித்தப் பயண முறை அல்ல.

Scanned by CamScanner

அத்தியாயம் ஐந்து

நையப் புடைக்கும் விந்தை மரம்

ஹாரிக்கு ஏமாற்றமளிக்கும் விதத்தில் அவனுடைய விடுமுறை வெகு சீக்கிரமே முடிந்துவிட்டிருந்தது. அவன் ஹாக்வார்ட்ஸுக்குத் திரும்பிச் செல்லத் துடித்துக் கொண்டிருந்தபோதிலும், அவன் ரானின் வீட்டில் கழித்த ஒரு மாதம் அவனுடைய வாழ்க்கையிலேயே மிகமிக மகிழ்ச்சியான காலகட்டமாக விளங்கியது. அவன் டர்ஸ்லீயை நினைத்தபோதும், அடுத்த முறை அவர்களுடைய வீட்டிற்குத் திரும்பிப் போகும்போது தனக்குக் கிடைக்கவிருந்த வரவேற்பு எப்படி இருக்கும் என்று கற்பனை செய்தபோதும், ரானைக் கண்டு அவனால் பொறாமைப்படாமல் இருக்க முடியவில்லை.

அவன் அங்கு கழித்தக் கடைசி இரவன்று மோலி மிகப் பிரமாதமான அறுசுவை விருந்தொன்றைத் தயாரித்திருந்தார். அதில் ஹாரிக்குப் பிடித்த அனைத்துப் பதார்த்தங்களும் இடம்பெற்றிருந்தன. அவ்விருந்து வெல்லப் பாயசத்தோடு நிறைவடைந்தது. ஃபிரெட்டும் ஜார்ஜும் அமர்க்களமாக ஃபிலிபஸ்டர் வாணவெடிகளோடு அந்த இரவை நிறைவு செய்தனர்; சுமார் அரை மணி நேரத்திற்கும் மேலாகச் சமையலறையின் உத்தரத்திற்கும் சுவருக்குமாகக் குதித்துக் கொண்டிருந்த நீலம் மற்றும் சிவப்பு நிற நட்சத்திரங்களால் அவர்கள் அந்த அறையை அலங்கரித்தனர். அவர்கள் படுக்கப் போவதற்கு முன்பாக மீண்டும் ஒரு முறை சூடான சாக்லேட் பானம் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

அடுத்த நாள் அவர்கள் அனைவரும் புறப்படுவதற்கு வெகுநேரம் பிடித்தது. கோழி கூவுவதற்கு முன்பாகவே அவர்கள் எழுந்து கொண்டிருந்தபோதிலும், செய்து முடிப்பதற்கு இன்னும் ஏகப்பட்ட வேலைகள் இருந்ததுபோலத் தோன்றியது. உபரிக் காலுறைகளையும் மெத்தைகளையும் தேடிக் கொண்டிருந்த மோலி கொஞ்சம் மோசமான மனநிலையில் இருந்தார்; அங்கிருந்தவர்கள் அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்தபோது மாடிப்படிகளில் ஒருவரோடு ஒருவர் இடித்துக் கொண்டனர்; அவர்கள் அரைகுறை ஆடைகளுடனும் கையில் ரொட்டித் துண்டுகளுடனும் திரிந்து கொண்டிருந்தனர். ஆர்தர், ஜின்னியின் டிரங்குப் பெட்டியைத் தன் காரில் வைப்பதற்காகத் தூக்கிச் சென்றபோது, முற்றத்தில் ஒரு கோழி

Scanned by CamScanner

அவருக்குக் குறுக்கே வந்ததால் கீழே விழுந்து கிட்டத்தட்டத் தன் கழுத்தை முறித்துக் கொண்டார்.

எட்டுப் பேருக்கும், ஆறு பெரிய டிரங்குப் பெட்டிகள், இரண்டு ஆந்தைகள், ஓர் எலி ஆகியவற்றிற்கும் எப்படி ஒரு சிறிய ஃபோர்டு ஏஞ்சலியா காரில் இடமிருக்கும் என்று ஹாரி மண்டையைப் பிய்த்துக் கொண்டிருந்தான். சிறப்பு அம்சம் எதையேனும் ஆர்தர் அதில் இணைத்திருக்கக்கூடும் என்று அவன் கணக்குப் போட்டான்.

ஆர்தர் தன் காரின் டிக்கியைத் திறந்து ஹாரிக்குக் காட்டிவிட்டு, "மோலியிடம் இது பற்றி மூச்சுவிட்டுவிடாதே," என்று கிசுகிசுத்தார். எல்லா டிரங்குப் பெட்டிகளையும் மிக எளிதாகத் தன்னுள் அடக்கிக் கொள்ளும் விதத்தில் மந்திரவித்தை மூலம் அதை அவர் விசாலமாக்கியிருந்தார்.

கடைசியில் அவர்கள் எல்லோரும் ஒருவழியாகக் காரில் ஏறி அமர்ந்ததும், மோலி பின்னிருக்கையை எட்டிப் பார்த்து, அங்கு ஹாரி, ரான், ஃபிரெட், ஜார்ஜ், பெர்சி ஆகியோர் அருகருகே மிகவும் சௌகரியமாக உட்கார்ந்திருந்ததைக் கண்டதும், "இந்த மகுள்கள் நாம் நினைப்பதைவிட அதிகப் புத்திசாலித்தனம் மிக்கவர்கள், இல்லையா?" என்று கேட்டார். அவரும் ஜின்னியும் காரில் ஏறி முன்னிருக்கையில் அமர்ந்தனர். அந்த இருக்கையும் நீளமாக இழுக்கப்பட்டிருந்ததால், அது பூங்காவிலுள்ள பெஞ்சுபோலத் தோற்றமளித்தது. "வெளியிலிருந்து பார்க்கும்போது உள்ளே இவ்வளவு விசாலமாக இருக்கும் என்று தெரியவே இல்லையே?"

ஆர்தர் காரை இயக்கினார். அது முற்றத்தில் மெதுவாக உருண்டு வந்தபோது, ஹாரி, பின்னால் திரும்பி அந்த வீட்டைக் கடைசியாக ஒருமுறை பார்த்தான். அடுத்து இதைத் தான் மீண்டும் எப்போது பார்க்கப் போகிறோம் என்று அவன் வியந்து கொண்டிருந்தபோது, கார் மீண்டும் அங்கேயே திரும்பி வந்தது. ஜார்ஜ் தன்னுடைய வாணவெடிகளை மறந்துவிட்டிருந்தான். ஐந்து நிமிடங்கள் கழித்து அவர்களுடைய கார் மீண்டும் ஒரு முறை அந்த முற்றத்திற்குள் வந்தது. இம்முறை ஃபிரெட் தன் மந்திரத் துடப்பத்தை எடுக்க மறந்திருந்தான். அவர்கள் கிட்டத்தட்ட நெடுஞ்சாலையை நெருங்கிக் கொண்டிருந்தபோது, திடீரென்று, ஜின்னி தன் நாட்குறிப்பை எடுக்க மறந்துவிட்டிருந்ததாகக் கிறீச்சிட்டாள். அவள் அதை எடுத்துக் கொண்டு மீண்டும் வந்து காரில் ஏறியபோது மிகவும் தாமதமாகிவிட்டிருந்தது. அங்கு பதற்றமான ஒரு சூழல் நிலவியது.

ஆர்தர் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்துவிட்டுத் தன் மனைவியைத் திரும்பிப் பார்த்தார்.

"மோலி –"

"ஆர்தர், வேண்டாம்!"

"யாருக்கும் எதுவும் தெரியாது. இதோ இங்கு இருக்கும் இந்தச் சிறிய பொத்தான்தான் நான் பொருத்தியுள்ள 'மறைய வைக்கும் முடுக்கி' – அது நம்மை வானத்தில் தூக்கி விட்டுவிடும் – பின்னர்

Scanned by CamScanner

நாம் மேகங்களுக்கு மேலேதான் பறப்போம். பத்து நிமிடங்களுக்குள் நாம் அங்கு சென்றடைந்துவிடலாம். யாராலும் இதைக் கண்டுபிடிக்க முடியாது –"

"ஆர்தர், வேண்டாம் என்று நான் கூறியது உங்கள் காதுகளில் விழவில்லையா? அதுவும் இந்தப் பட்டப்பகலில்!"

அவர்கள் கிங்ஸ் கிராஸ் ரயில் நிலையத்தை வந்தடைந்தபோது மணி பத்தே முக்கால் ஆகியிருந்தது. காரில் இருந்த டிரங்குப் பெட்டிகளை எடுத்துச் செல்வதற்காகத் தள்ளுவண்டிகளை எடுத்து வர ஆர்தர் சாலையின் குறுக்காகப் பாய்ந்து சென்றார். அவர்கள் அனைவரும் வேகவேகமாக ரயில் நிலையத்திற்குள் விரைந்தனர்.

ஹாரி கடந்த வருடம் ஹாக்வார்ட்ஸ் எக்ஸ்பிரஸில் பயணம் செய்திருந்தான். மகுள்களின் கண்களுக்குப் படாமல் மறைந்திருந்த ஒன்பதே முக்கால் எண் பிளாட்பாரத்திற்கு எப்படிச் செல்வது என்பது அப்போது அவனுக்குச் சிக்கலான ஒரு விஷயமாக இருந்தது. நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், ஒன்பதாவது மற்றும் பத்தாவது பிளாட்பாரங்களுக்கு இடையே இருந்த உறுதியான தடுப்புச் சுவரின் ஊடாக நடந்து செல்ல வேண்டும், அவ்வளவுதான். ஆனால் அதை ஜாக்கிரதையாகச் செய்ய வேண்டும் – ஏனெனில் அங்கிருக்கும் மகுள்கள் எவரும் நீங்கள் திடீரென்று மாயமாய் மறைந்துவிட்டதை அறியக்கூடாது.

"பெர்சி முதலில் போகட்டும்," என்று மோலி கூறினார். அவர் தன் தலைக்கு மேலாக இருந்த கடிகாரத்தைப் பதற்றத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார். ஏனெனில் அவர்கள் அந்தத் தடுப்புச் சுவரின் ஊடாகச் சென்று மறைவதற்கு அவர்களுக்கு வெறும் ஐந்து நிமிடங்களே இருந்ததாக அது காட்டிக் கொண்டிருந்தது.

பெர்சி சுறுசுறுப்பாகவும் வேகமாகவும் நடந்து சென்று மறைந்தான். அடுத்து ஆர்தர் சென்றார். பின்னர் ஃபிரெட்டும் ஜார்ஜும் சென்றனர்.

மோலி ஹாரியிடமும் ரானிடமும், "நான் ஜின்னியைக் கூட்டிக் கொண்டு செல்கிறேன். நீங்கள் இரண்டு பேரும் என் பின்னால் வாருங்கள்," என்று கூறிவிட்டு ஜின்னியின் கையைப் பிடித்துக் கொண்டு அங்கிருந்து அகன்றார். கண்களை மூடித் திறப்பதற்குள் அவர்களைக் காணவில்லை.

ரான் ஹாரியிடம், "நாம் இரண்டு பேரும் சேர்ந்தே போகலாம். இன்னும் ஒரு நிமிடம் மட்டுமே இருக்கிறது," என்று கூறினான்.

ஹெட்விக்கின் கூண்டு தனது டிரங்குப் பெட்டியின்மீது பத்திரமாக இருந்ததை உறுதி செய்து கொண்டு, ஹாரி தனது தள்ளுவண்டியைத் தள்ளிக் கொண்டு அந்தத் தடுப்புச் சுவரை அடைந்தான். அவன் முழு தைரியத்துடன் இருந்தான். இது ஃபுளூ பொடியை உபயோகிக்கும் அளவுக்கு அசௌகரியமாக இருக்கவில்லை. அவர்கள் இருவரும் தங்களுடைய தள்ளுவண்டிகளின் கைப்பிடிகளை நோக்கித் தங்களுடைய தலைகளைக் கவிழ்த்துக்

Scanned by CamScanner

கொண்டு, தீர்மானமாக அந்தத் தடுப்புச் சுவரை நோக்கி நடந்தனர். அதை நெருங்க நெருங்கத் தங்களுடைய நடையின் வேகத்தைக் கூட்டினர். அதற்கு ஒருசில அடிகள் இருந்தபோது அவர்களது நடை ஓட்டமாக மாறியது. அடுத்து –

டமால்!

இரண்டு தள்ளுவண்டிகளும் அந்தத் தடுப்புச் சுவரில் மோதிப் பின்னால் எகிறின. ரானின் டிரங்குப் பெட்டி பலத்தச் சத்தத்துடன் கீழே விழுந்தது. ஹாரி நிலை தடுமாறிக் கீழே விழுந்தான். ஹெட்விக்கின் கூண்டு வழுவழுப்பான தரையில் விழுந்து மோதியது. கோபத்தில் கிறீச்சென்று கத்தியபடியே ஹெட்விக் தன் கூண்டோடு உருண்டு கொண்டிருந்தது. அவர்களைச் சுற்றியிருந்த மக்கள் அவர்களை வெறித்துப் பார்த்தனர். அருகே இருந்த ரயில்வே பாதுகாவலர் ஒருவர், "உங்கள் மனத்தில் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று இரைந்தார்.

"தள்ளுவண்டி நிலை தடுமாறிவிட்டது," என்று கூறிய ஹாரிக்கு மூச்சு வாங்கியது. அவன் தன் விலாவைப் பிடித்தவாறே எழுந்து நின்றான். பெரும் அமளி துமளி செய்து கொண்டிருந்த ஹெட்விக்கை ரான் ஓடிச் சென்று எடுத்துக் கொண்டான். சுற்றிலும் இருந்த மக்கட்கூட்டம் விலங்குகளைச் சித்திரவதைப்படுத்துவது குறித்து ஏதோ முனகிக் கொண்டிருந்தது.

"நம்மால் ஏன் போக முடியவில்லை?" என்று ஹாரி ரானிடம் கிசுகிசுத்தான்.

"எனக்குத் தெரியவில்லை –"

ரான் சுற்றுமுற்றும் பார்த்தான். ஒரு டஜன் மக்கள் இன்னும் அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

"நாம் நம் ரயிலைத் தவறவிடப் போகிறோம்," என்று ரான் கிசுகிசுத்தான். "நாம் போக வேண்டிய வழி ஏன் தானாகவே அடைத்துவிட்டது என்று தெரியவில்லை . . ."

ஹாரி அந்தப் பிரம்மாண்டமான கடிகாரத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கு வயிற்றைப் புரட்டிக் கொண்டு வந்தது. பத்து விநாடிகள் . . . ஒன்பது விநாடிகள் . . .

அவன் கவனமாகத் தனது தள்ளுவண்டியை எச்சரிக்கையுடன் அந்தத் தடுப்புச் சுவர் அருகே கொண்டு சென்றான். தள்ளுவண்டியைத் தனது முழு பலத்துடன் தள்ளினான். ஆனால் அது துளிகூட நகரவில்லை.

மூன்று விநாடிகள் . . . இரண்டு விநாடிகள் . . . ஒரு விநாடி . . .

"ரயில் போய்விட்டது," என்று ரான் அதிர்ச்சியுடன் கூறினான். "ரயில் கிளம்பிப் போய்விட்டது. அம்மாவும் அப்பாவும் மீண்டும் நம்மை வந்தடைய முடியாவிட்டால் என்ன செய்வது? உன்னிடம் மகுள்களின் பணம் ஏதாவது இருக்கிறதா?"

Scanned by CamScanner

ஹாரி வெறுமையாகச் சிரித்தான். "டர்ஸ்லீ தம்பதியினர் சுமார் ஆறு வருடங்களாக என் கைச் செலவுக்குப் பணம் கொடுத்ததே இல்லை."

ரான் அந்தக் குளிரான தடுப்புச் சுவரில் தன் காதை வைத்து அழுத்தினான்.

"எந்தச் சத்தமும் கேட்கவில்லை," என்று அவன் பதற்றமாகக் கூறினான். "நாம் இப்போது என்ன செய்வது? நம்மை வந்தடைய அம்மாவிற்கும் அப்பாவிற்கும் எவ்வளவு நேரம் ஆகும் என்று தெரியவில்லையே?"

அவன் தன்னைச் சுற்றி நோட்டம் விட்டான். இன்னும் ஒருசில மக்கள் அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தனர். ஹெட்விக் தொடர்ந்து கிறீச்சிட்டுக் கொண்டிருந்ததுதான் அதற்கு முக்கியக் காரணம்.

"நாம் வெளியே சென்று காரில் காத்திருப்பது நல்லது," என்று ஹாரி கூறினான். "நாம் தேவையில்லாமல் நம்மீது அதிகப்படியான கவனத்தை ஈர்த்துக் கொண்டிருக்கிறோம் –"

"ஹாரி," என்று ரான் சந்தோஷத்துடன் கூவினான். அவனது கண்கள் மின்னின. "அந்தக் கார்!"

"அதற்கென்ன இப்போது?"

"நம்மால் அதில் ஹாக்வார்ட்ஸுக்குப் பறக்க முடியும்!"

"ஆனால் அது மந்திர –"

"நாம் இப்போது சிக்கலில் மாட்டிக் கொண்டிருக்கிறோம். ஆனால் பள்ளிக்குச் சென்றாக வேண்டும், இல்லையா? உண்மையான நெருக்கடி என்றால் வயது முதிராத மந்திரவாதிகளுக்குக்கூட மந்திரவித்தைகளைப் பயன்படுத்த அனுமதி இருக்கிறது. தடுப்புச் சட்டம் பிரிவு பத்தொன்பதோ, என்ன இழவோ . . ."

ஹாரியின் பதற்றம் இப்போது பரவசமாக மாறிவிட்டிருந்தது.

"உன்னால் அதைப் பறக்க வைக்க முடியுமா?"

"முடியும். அது ஒரு பிரச்சனையே அல்ல," என்று தெரிவித்த ரான், ரயில்வே நிலையத்திலிருந்து வெளியே செல்வதற்கான வழியை நோக்கித் தன் தள்ளுவண்டியைத் திருப்பினான். "ஹாரி! வா, போகலாம். வேகமாகச் சென்றால் ஹாக்வார்ட்ஸ் எக்ஸ்பிரஸை நம்மால் பின்தொடர முடியும்."

தங்களை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்த மகுள்களை விலக்கிக் கொண்டு அவர்கள் ரயில் நிலையத்தைவிட்டு வெளியே வந்து தங்களது பழைய ஃபோர்டு ஏஞ்சலியா கார் நிறுத்தப்பட்டிருந்த பக்கத்துத் தெருவை வந்தடைந்தனர்.

ரான் தன் மந்திரக்கோலால் தொடர்ந்து ஆங்காங்கே தட்டி அந்தக் காரின் பிரம்மாண்டமான டிக்கியைத் திறந்தான். அவர்கள் தங்களுடைய டிரங்குப் பெட்டிகளைத் தூக்க முடியாமல் தூக்கி அதில் வைத்தனர். பின்னர் ஹெட்விக்கைப் பின்னிருக்கையில் வைத்துவிட்டு முன்னிருக்கைகளில் ஏறிக் கொண்டனர்.

Scanned by CamScanner

"நம்மை யாரும் கவனிக்கிறார்களா என்று பார்," என்று கூறிய ரான், தன் மந்திரக்கோலால் ஒரு தட்டுத் தட்டிக் காரை இயக்கினான். ஹாரி சன்னல் வழியாகத் தன் தலையை வெளியே நீட்டினான். முன்னால் இருந்த முக்கியச் சாலையில் போக்குவரத்து ஏராளமாக இருந்தாலும், அவர்கள் இருந்த தெரு காலியாக இருந்தது.

"சரி, புறப்படு," என்று ஹாரி கூறினான்.

ரான் காரின் டேஷ்போர்டில் இருந்த ஒரு வெள்ளிப் பொத்தானை அழுத்தினான். அந்தக் கார் பார்வையிலிருந்து மறைந்தது. அதேபோல அவர்களும் மறைந்தனர். தன் இருக்கைக்குக் கீழே ஏற்பட்ட அதிர்வை ஹாரியால் உணர முடிந்தது; காரின் எஞ்சின் சத்தத்தை அவனால் கேட்க முடிந்தது; தனது முழங்காலின்மீது இருந்த தனது கையையும் மூக்கின்மீது இருந்த தனது மூக்குக் கண்ணாடியையும் அவனால் உணர முடிந்தது; அழுக்கான ஒரு தெருவில் நிறுத்தப்பட்டிருந்த கார்களுக்கு ஒருசில அடிகள் மேலே தாங்கள் மிதந்து கொண்டிருந்தது அவனுக்குத் தெரிந்தது.

"சரி, நாம் போகலாம்," என்று ரானின் குரல் அருகிலிருந்து கேட்டது.

அவர்களது கார் மேலே எழும்பத் துவங்கியதும் பூமியும் காருக்கு இருபுறம் இருந்த அழுக்கடைந்திருந்த கட்டிடங்களும் பார்வையிலிருந்து மறையத் துவங்கின. ஒருசில நிமிடங்களில், புகையால் சூழப்பட்டிருந்த லண்டன் மாநகரம் அவர்களுக்குக் கீழே தெரிந்தது.

பிறகு டப்பென்று ஒரு சத்தம் கேட்டது. காரும் அவர்களும் மீண்டும் பார்வைக்குப் புலப்பட்டனர்.

"ஐயையோ," என்று ரான் கத்தினான். அவன் அந்த 'மறைய வைக்கும் முடுக்கியை' ஓங்கிக் குத்தினான். "இது சரியாக வேலை செய்யவில்லை என்பதுபோலத் தெரிகிறது."

அவர்கள் இருவரும் அதை மீண்டும் பலமாகக் குத்தினர். கார் மீண்டும் பார்வையிலிருந்து மறைந்தது. பின்னர் அது மீண்டும் பார்வைக்குத் தென்பட்டது.

"ஹாரி, இறுக்கமாகப் பிடித்துக் கொள்," என்று கூறிய ரான், ஆக்ஸிலரேட்டரை நன்றாக அழுத்தினான். பஞ்சுப் பொதிகள்போலத் தோன்றிய மேகங்களின் ஊடாக அவர்கள் விர்ரெனப் பறந்தனர். அவர்களைச் சுற்றி இருந்த எல்லாம் மங்கலாக மாறியது.

நாற்புறமும் தங்களைச் சூழ்ந்து கொண்ட மேகப் பஞ்சுப் பொதிக் கூட்டங்களைப் பார்த்தவாறே, "அடுத்து நாம் என்ன செய்யப் போகிறோம்?" என்று ஹாரி கேட்டான்.

"நாம் எந்தத் திசையில் போக வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ள நாம் நமது ரயிலைப் பார்த்தாக வேண்டும்," என்று ரான் கூறினான்.

"அப்படியானால் காரைச் சற்றுக் கீழே இறக்கு – வேகமாக –"

Scanned by CamScanner

அவர்கள் மேகக் கூட்டங்களுக்குக் கீழே இறங்கினர். கண்களைச் சுருக்கிக் கொண்டு தங்கள் இருக்கைகளில் இருந்து எட்டிக் கீழே பார்த்தனர்.

"ஆ, ரயிலை என்னால் பார்க்க முடிகிறது," என்று ஹாரி கத்தினான். **"அதோ! அங்கே!"**

அவர்களுக்கு வெகு கீழே ஹாக்வார்ட்ஸ் எக்ஸ்பிரஸ் ஒரு சிவப்பு நிறப் பாம்புபோலச் சிறியதாக ஊர்ந்து சென்று கொண்டிருந்தது.

டாஷ்போர்டில் இருந்த திசைகாட்டியைச் சோதித்தபடி, ரான், "நேராக வடக்குப் பக்கம் போக வேண்டும்," என்று கூறினான். "சரி, நாம் இனி அரை மணிநேரத்திற்கு ஒருமுறை இதைச் சரிபார்த்துக் கொள்ள வேண்டும். ஹாரி, நன்றாகப் பிடித்துக் கொள் . . ." அவர்கள் இப்போது மேகங்களைக் கிழித்துக் கொண்டு மேலே ஏறினர். ஒரு நிமிடத்திற்குப் பிறகு அவர்கள் பிரகாசமான சூரிய ஒளியில் குளித்துக் கொண்டிருந்தனர்.

அது ஒரு வித்தியாசமான உலகமாக இருந்தது. அவர்களது காரின் சக்கரங்கள் கடல்போல வியாபித்திருந்த மேகப் பொதிகளை வருடிச் சென்றன. தகதகத்துக் கொண்டிருந்த வெண் சூரியனுக்குக் கீழே வானம் பிரகாசமான நீல நிறத்தில் எல்லையற்றுப் பரந்து கிடந்தது.

"நாம் இப்போது கவலைப்பட வேண்டியது விமானங்களைப் பற்றி மட்டும்தான்," என்று ரான் கூறினான்.

அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரிக்கத் துவங்கினர். வெகு நேரத்திற்கு அவர்களால் தங்கள் சிரிப்பை நிறுத்த முடியவில்லை.

அவர்கள் ஓர் அதிஅற்புதமான கனவில் மூழ்கியிருந்ததுபோலத் தோன்றியது. பனிக் கோபுரங்கள் போலவும் சுழல்கள் போலவும் காட்சியளித்த வெண்மேகக் கூட்டங்களை வேகமாகக் கடந்து கொண்டு, பிரகாசமான சூரிய ஒளியில் குளித்துக் கொண்டிருந்த ஒரு காரில், கை நிறைய மிட்டாய்களோடு உட்கார்ந்து கொண்டு, ஹாக்வார்ட்ஸ் கோட்டையின் முன்னால் பச்சைக் கம்பளம்போல விரிந்து பரந்திருந்த புல்வெளியில் தங்கள் காரில் வெண்ணெய்போல வழுக்கிக் கொண்டு பிரமிக்கத்தக்க விதத்தில் தாங்கள் இறங்கும்போது, ஃபிரெட் மற்றும் ஜார்ஜின் பொறாமை வெடித்துக் கிளம்பும் முகத்தைக் காணும் வாய்ப்போடு, பயணம் செய்தால் இப்படிப்பட்ட ஒரு வழியில்தான் பயணம் செய்தாக வேண்டும் என்று ஹாரி நினைத்தான்.

அவர்கள் மேலும் மேலும் வடக்குத் திசையை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தனர். கீழே ரயில் சென்று கொண்டிருந்ததா என்பதையும் அவர்கள் அவ்வப்போது கண்காணித்துக் கொண்டனர். அவ்வாறு கண்காணிப்பதற்காக அவர்கள் தங்கள் காரை மேகங்களுக்குக் கீழே கொண்டு சென்ற ஒவ்வொரு முறையும் அவர்களுக்குத் தென்பட்டக் காட்சி மாறிக் கொண்டே இருந்தது. லண்டன் மாநகரம் வெகுவிரைவில் விடைபெற்றுக் கொண்டது.

Scanned by CamScanner

அதன் இடத்தை, நேர்த்தியாகத் தோற்றமளித்தப் பசுமையான வயல்கள் எடுத்துக் கொண்டன. பின்னர் ஊதா வண்ணத்தில் நீண்டு படர்ந்திருந்த தரிசு நிலங்கள், சிறு பொம்மைகள்போலத் தோன்றிய தேவாலங்களுடன்கூடிய சிறிய கிராமங்கள், பல நிறங்களில் இருந்த எறும்புகள்போல ஊர்ந்து கொண்டிருந்த கார்களால் நிரம்பி வழிந்த பெருநகரங்கள் என்று வெவ்வேறு காட்சிகள் மாறி மாறித் தோன்றின.

சுவாரசியமான வேறு நிகழ்வுகள் எதுவும் நடைபெறாமல் பல மணிநேரம் கடந்த பிறகு, முதலில் இருந்த குதூகலம் மறையத் துவங்கியிருந்ததை ஹாரி ஒப்புக் கொண்டாக வேண்டியிருந்தது. அவர்கள் விழுங்கியிருந்த ஏராளமான மிட்டாய்கள் அவர்களுக்குத் தாகத்தைத் ஏற்படுத்தின. ஆனால் பருகுவதற்கு அவர்களிடம் எதுவும் இருக்கவில்லை. அவர்கள் தங்களது மேலங்கிகளைக் கழற்றிவிட்டிருந்தனர். ஹாரியின் சட்டை அவனது இருக்கையோடு ஒட்டிக் கொண்டிருந்தது. வியர்வையில் குளித்திருந்த அவனது மூக்கிலிருந்து அவனது மூக்குக்கண்ணாடி நழுவிக் கொண்டே இருந்தது. அற்புதமான வடிவங்களில் காட்சியளித்துக் கொண்டிருந்த மேகக் கூட்டங்களை ரசிப்பதை அவன் நிறுத்திவிட்டிருந்தான். இப்போது பல மைல்கள் கீழே ஊர்ந்து கொண்டிருந்த ரயிலுக்காக அவன் ஏங்கினான். ரயிலில் இருந்தால் ஒரு குண்டான மந்திரவாதினி தள்ளிக் கொண்டுவரும் வண்டியிலிருந்து குளிர்ந்த பூசணிப் பழரசத்தை வாங்கிப் பருகலாம். ஆனால் ஒன்பதே முக்கால் எண் கொண்ட பிளாட்பாரத்திற்குள் அவர்களால் ஏன் நுழைய முடியாமல் போனது?

சூரியன் மேகச் சுவர்களுக்குப் பின்னால் கீழிறங்கி அதை இளஞ்சிவப்பு நிறத்தில் மூழ்கடித்த நேரத்தில், "சீக்கிரம் போய்ச் சேர்ந்துவிடுவோம், இல்லையா?" என்று ரான் முனகினான். "ரயில் இப்போது எங்கே போய்க் கொண்டிருக்கிறது என்று இன்னொரு முறை பார்க்கலாமா?"

ரயில் இன்னும் அவர்களுக்கு நேர்க் கீழேதான் ஊர்ந்து கொண்டிருந்தது. பனி போர்த்தியிருந்த ஒரு மலையைச் சுற்றி அது இப்போது வேகமாகப் போய்க் கொண்டிருந்தது. மேகக் குடைகளுக்குக் கீழே இருள் கவிழத் துவங்கியிருந்தது.

ரான் ஆக்ஸிலரேட்டரில் காலை வைத்து நன்றாக அழுத்திக் காரை மீண்டும் மேலே ஓட்டினான். அவன் அப்படிச் செய்தபோது கார் முனகத் துவங்கியது.

ஹாரியும் ரானும் பதற்றத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்தனர்.

"கார் சோர்வுற்றிருக்கக்கூடும்," என்று ரான் கூறினான். "இதற்கு முன்பு இது இவ்வளவு தூரம் வந்ததில்லை . . ."

வானம் மேலும் மேலும் இருளத் துவங்கியபோது, காரின் முனகல் மேலும் மேலும் சத்தமாகிக் கொண்டு வந்ததைத் தாங்கள் கவனிக்காமல் இருந்ததுபோல அவர்கள் பாவனை செய்தனர்.

Scanned by CamScanner

இருண்ட வானில் தாரகைகள் முளைவிடத் துவங்கின. காரின் முன்கண்ணாடியில் இருந்த துடைப்பான்கள் தமது எதிர்ப்பைத் தெரிவிப்பதுபோலச் சுரத்தின்றி ஆடிக் கொண்டிருந்ததை அலட்சியம் செய்தவாறு ஹாரி தன் மேலங்கியை எடுத்து அணிந்து கொண்டான்.

"இன்னும் சிறிது தூரம்தான்," என்று ரான் கூறினான். அவன் கூறியதைப் பார்த்தபோது, அவன் அதை ஹாரியிடம் கூறாமல் அந்தக் காரிடம் கூறியதுபோலத் தோன்றியது. "இதோ வந்துவிட்டது," என்று கூறி அவன் டேஷ்போர்டின்மீது பதற்றத்துடன் தட்டினான்.

அதற்குச் சிறிது நேரத்திற்குப் பிறகு அவர்கள் கொஞ்சம் கீழே இறங்கியபோது, தங்களால் எளிதில் அடையாளம் கண்டுகொள்ளத்தக்க இடங்கள் ஏதேனும் இருந்தனவா என்று பார்ப்பதற்காகத் தங்கள் கண்களை மிகவும் சுருக்கிக் கொண்டு பார்க்க வேண்டியிருந்தது.

திடீரென்று ஹாரி, **"அதோ, அங்கே!"** என்று போட்டக் கூப்பாடு ரானையும் ஹெட்விக்கையும் துள்ளிக் குதிக்க வைத்தது. "நமக்கு நேராக இருக்கிறது."

இருண்ட தொடுவானத்திற்கு முன்னால் தன் கோபுரங்களுடனும் உயரமான மதில்களுடனும் செங்குத்தான பாறை ஒன்றில் மிக உயரத்தில் ஹாக்வார்ட்ஸ் கோட்டை மிகவும் கம்பீரமாக வீற்றிருந்தது.

கார் அப்போது வேகமாக ஆடிக் குலுங்கியது. அதன் வேகம் குறையத் துவங்கியது.

"இதோ, வந்துவிட்டோம்!" என்று ரான் ஸ்டியரிங் வீலை ஆட்டித் தனது காரைத் தாஜா செய்ய முயன்றான். "கிட்டத்தட்ட வந்துவிட்டோம், இதோ இறங்கிவிடலாம் –"

எஞ்சின் சத்தமாக முனகியது. காரின் 'பானட்'டிற்கு அடியிலிருந்து நீராவி பீய்ச்சியடித்துக் கொண்டிருந்தது. அவர்கள் ஏரியை நோக்கிப் பறந்து கொண்டிருந்தபோது ஹாரி தன்னை அறியாமலேயே தன் இருக்கையின் முனைகளை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டான்.

கார் பேயாட்டம் ஆடியது. ஹாரி சன்னல் வழியாக வெளியே எட்டிப் பார்த்தான். ஒரு மைல் கீழே கருப்பு நிறத்தில் வழவழப்பாகக் கண்ணாடிபோலத் தெரிந்த நீரை அவனால் பார்க்க முடிந்தது. ஸ்டியரிங் வீலைப் பிடித்திருந்த ரானின் கைவிரல் கணுக்கள் வெளிறிப் போயிருந்தன. கார் மீண்டும் பயங்கரமாகக் குலுங்கியது.

"இன்னும் கொஞ்ச தூரம்தான்!" என்று ரான் முணுமுணுத்தான்.

அவர்கள் ஏரியின் மேலே பறந்து கொண்டிருந்தனர் . . . அவர்களுக்கு நேரெதிரே ஹாக்வார்ட்ஸ் கோட்டை இருந்தது . . . ரான் தன் காலால் ஆக்ஸிலரேட்டரை அழுத்தினான்.

ஒரு பெரிய சத்தம் கேட்டது. ஏதோ வெடித்ததுபோலத் தோன்றியது. எஞ்சின் தன் இயக்கத்தைச் சுத்தமாக நிறுத்திக் கொண்டது.

Scanned by CamScanner

"ஐயோ, கடவுளே!" என்று கூறிய ரான் மௌனத்தில் மூழ்கினான். கார் முன்னோக்கிச் சரிந்தது. அவர்கள் தங்கள் காரோடு கீழே விழத் துவங்கியிருந்தனர். அவர்களது வேகம் அதிகரித்தது. அவர்கள் நேராகக் கோட்டை மதிற்சுவரை நோக்கிப் பறந்து கொண்டிருந்தனர்.

ரான், "ஐயோ!" என்று கத்திக் கொண்டே ஸ்டியரிங் வீலைத் திருப்பினான். அந்தக் கார் ஓர் அரை வட்டம் அடித்தது. அப்போது அது கோட்டைச் சுவரிலிருந்து ஓர் அங்குல இடைவெளியில் விலகிச் சென்றது. பிறகு, இருண்ட பசுமைக் குடில்களுக்கும் காய்கறித் தோட்டங்களுக்கும் இருண்ட புல்வெளிகளுக்கும் மேலாகப் பறந்தது. அதே சமயம், அது தொடர்ந்து தாழ்ந்து கொண்டே வந்தது.

ரான் தான் பிடித்திருந்த ஸ்டியரிங் வீலை முழுவதுமாக விட்டுவிட்டுத் தன் பையில் இருந்து தனது மந்திரக்கோலைக் கையில் எடுத்தான்.

அந்த மந்திரக்கோலைக் கொண்டு டேஷ்போர்டிலும் முன்கண்ணாடியிலும் தட்டி, **"நில்! நில்!"** என்று கத்தினான். ஆனால் அவர்கள் படுவேகமாகக் கீழ்நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். பூமி அவர்களை விழுங்குவதற்காக வேகமாக அவர்களை நோக்கிப் பறந்து வந்து கொண்டிருந்தது.

"ரான், அங்கே பார்! குறுக்காக ஒரு மரம் நின்று கொண்டிருக்கிறது!" என்று ஹாரி கத்திக் கொண்டு, ஸ்டியரிங் வீலைப் பிடித்துத் திருப்ப முயன்றான். ஆனால் நேரம் அதற்குள் கடந்துவிட்டிருந்தது –

டமால்!

காதைச் செவிடாக்கும் ஒலியுடன் கனமான அந்த மரத்தில் அவர்களது கார் மோதியதில் அவர்கள் இருவரும் அந்தக் காரோடு சேர்ந்து பலத்த அதிர்ச்சியுடன் தரையில் விழுந்தனர். நசுங்கிப் போயிருந்த காரின் பானட்டிலிருந்து நீரூற்றுப்போல நீராவி பீய்ச்சியடித்துக் கொண்டிருந்தது. ஹெட்விக் பயத்தில் பயங்கரமாக அலறியது. ஹாரி காரின் முன்கண்ணாடியில் மோதியதில் அவனது நெற்றியில் கோல்ஃப் பந்தின் அளவில் ஒரு புடைப்பு ஏற்பட்டது. அவனுக்கு வலது பக்கத்தில் ரான் வேதனையுடன் முனகிக் கொண்டிருந்தான்.

"ரான், உனக்கொன்றும் பலமாக அடிபடவில்லையே?" என்று ஹாரி அவசர அவசரமாகக் கேட்டான்.

நடுங்கிய குரலில் ரான், "என் மந்திரக்கோல்," என்று கூறினான். "என் மந்திரக்கோலின் கதியைப் பார்!"

அது கிட்டத்தட்ட இரண்டு துண்டுகளாக உடைந்து போயிருந்தது: முன்பாதி ஒடிந்து ஆடிக் கொண்டிருந்தது.

பள்ளியில் அவர்களால் அதைக் கண்டிப்பாக ஒட்ட வைத்துவிட முடியும் என்று கூற ஹாரி எத்தனித்தான். ஆனால் அவனுக்கு அதற்கு வாய்ப்பே இருக்கவில்லை. ஏனெனில், சரியாக அக்கணத்தில், முழு வேகத்துடன் துரத்தி வரும் ஒரு முரட்டுக் காளையின் வேகத்தில்,

Scanned by CamScanner

ஏதோ ஒன்று, காரில் அவனிருந்த பக்கத்தைத் தாக்கியது. அவன் வேகமாக ரானின் பக்கமாகச் சாய்ந்தான். அதே அளவு வேகத்துடன் காரின் கூரையிலும் பேரிடி ஒன்று இறங்கியது.

"என்ன நடக்கிறது –"

முன்கண்ணாடி வழியாகப் பார்த்த ரானுக்கு மூச்சே நின்றுவிடும்போல இருந்தது. ஹாரியும் முன்னோக்கித் திரும்பினான். ஒரு பெரிய மலைப்பாம்பின் அளவில் இருந்த மரக்கிளை ஒன்று முன்கண்ணாடியை அடித்து நொறுக்கியதை அவன் கண்டான். அவர்கள் மோதியிருந்த மரம் அவர்களைத் தாக்கத் துவங்கியிருந்தது. அந்த மரம் பயங்கரமாக வளைந்திருந்தது. கணுக்களுடன் இருந்த அதன் கிளைகள், தம்மால் தொட முடிந்த காரின் ஒவ்வோர் அங்குலத்தையும் போட்டு அடித்துத் துவம்சம் செய்து கொண்டிருந்தன.

இன்னொரு கிளை ரான் இருந்த பக்கத்தின் கதவில் அடித்து அதில் ஒரு பெரிய பள்ளத்தை ஏற்படுத்தியபோது, "ஐயோ!" என்று அவன் அலறினான். முன்கண்ணாடியைச் சிறிய கொப்புகள் விடாமல் அடித்துக் கொண்டிருந்ததில் அது லேசாக ஆடத் துவங்கியிருந்தது. கோட்டைக் கதவுகளை உடைக்க உபயோகிக்கப்படும் பெரிய உருளைக்கட்டை அளவில் இருந்த ஒரு கிளை, கோபத்துடன் காரின் கூரையை இடைவிடாமல் தாக்கியதில், கூரை உள்நோக்கிக் கவிழத் துவங்கியிருந்ததுபோலத் தோன்றியது –

"ஹாரி, வேகமாக ஓடிவிடு!" என்று கூறிவிட்டு, ரான் தன் முழு பலத்தையும் உபயோகித்துக் காரின் கதவைத் திறக்க முயன்றான். ஆனால் அடுத்தக் கணம், மரத்தின் இன்னொரு கிளை அடித்தக் காட்டடியில் பின்னால் துள்ளி அவன் ஹாரியின் மடியில் வந்து விழுந்தான்.

காரின் கூரை உள்நோக்கி அமுங்கத் துவங்கியதும், ரான், "நம் கதை முடிந்துவிட்டது!" என்று புலம்பினான். திடீரென்று காரின் தரையில் அதிர்வு ஏற்பட்டது – காரின் எஞ்சின் மீண்டும் இயங்கத் துவங்கியிருந்தது.

"பின்னால் போ!" என்று ஹாரி கூச்சல் போட்டான். உடனே அந்தக் கார் பின்னோக்கி அம்பெனப் பாய்ந்தது. அந்த மரம் அவர்களைத் தாக்க இன்னும் முயன்று கொண்டிருந்தது. அவர்கள் அதன் கைக்கு எட்டாமல் நகர்ந்தபோதும் அது அவர்களைத் தாக்கத் துணிந்ததில் அதன் வேர்கள் கிட்டத்தட்டப் பிய்த்துக் கொண்டு வந்துவிட்டச் சத்தம் அவர்களுக்குக் கேட்டது.

"நாம் சாவின் விளிம்புவரை சென்று வந்துவிட்டோம்," என்று ரான் மேல்மூச்சுக் கீழ்மூச்சு வாங்கக் கூறினான். "நன்றி காரே! சரியான சமயத்தில் காப்பாற்றினாய்!"

ஆனால் அந்தக் காருக்கு 'இதோடு போதுமடா சாமி' என்று தோன்றிவிட்டது போலும். ஒரு சிறிய சத்தத்துடன் அது தன்

Scanned by CamScanner

கதவுகளை விரியத் திறந்தது. தன் இருக்கையானது பக்கவாட்டில் கிழிந்ததுபோல ஹாரிக்குத் தோன்றியது. அடுத்தக் கணம், அவன் தன் கை கால்களை அகலப் பரப்பிக் கொண்டு ஈரமான தரையில் கிடந்தான். அடுத்துக் கேட்ட ஒரு பெரிய சத்தம் அக்கார் தனது டிக்கியைத் திறந்து தங்களது சாமான்களை வெளியே தூக்கி வீசும் ஓசைதான் என்பதை அவன் ஊகித்துக் கொண்டான். ஹெட்விக்கின் கூண்டு வானத்தில் பறந்தது. நடுவானில் அதன் கூண்டுக் கதவு திறந்து கொண்டதும், அது அதனுள்ளிருந்து வெளியே பறந்து கோபத்தில் சத்தமாக அலறியது. பிறகு அது திரும்பிக்கூடப் பார்க்காமல் நேராகக் கோட்டையை நோக்கிப் பறந்தது. உடல் நெடுகிலும் கீறல்களுடன் நெளிந்து போய் விழுந்து கிடந்த அந்தக் கார், நீராவிப் புகையை வெளிவிட்டுக் கொண்டே இருட்டில் முன்னோக்கி உருண்டோடியது. அதன் பின்புற விளக்குகள் கோபமாக முறைத்துக் கொண்டிருந்தன.

உடைந்து போயிருந்த தன் மந்திரக்கோலை ஆட்டியவாறே அந்தக் காரைப் பார்த்து, ரான், "திரும்பி வந்துவிடு," என்று கூப்பாடு போட்டான். "என் அப்பா என்னைக் கொன்று போட்டுவிடுவார்!"

ஆனால் அந்தக் கார் கடைசியாக ஒரு முறை புகையைக் கக்கிவிட்டுப் பார்வையில் இருந்து மறைந்து போனது.

கீழே குனிந்து தன் செல்ல எலியான ஸ்கேபர்ஸைக் கையில் எடுத்துக் கொண்டே, ரான், "நம் அதிர்ஷ்டம் இவ்வளவுதானா?" என்று பரிதாபமாகக் கேட்டான். "இருக்கும் எல்லா மரங்களையும் விட்டுவிட்டு, திருப்பித் தாக்கும் மரத்தின்மீதுதானா நாம் மோத வேண்டும்?"

அவன் தன் தோளைத் திருப்பி அந்த மரத்தைப் பார்த்தான். அது இன்னும் அச்சுறுத்தும் விதமாகத் தன் கிளைகளை ஆக்ரோஷமாக ஆட்டிக் கொண்டிருந்தது.

ஓய்ந்து போயிருந்த ஹாரி, "வா, நாம் பள்ளிக்குப் போய்ச் சேரலாம்," என்று கூறினான்.

அவர்கள் கற்பனை செய்து வைத்திருந்த வெற்றிகரமான வருகையாக அது இருக்கவில்லை. காயப்பட்டும் குளிரால் வாடிக் கொண்டும் இருந்த அவர்கள் இருவரும் தங்கள் டிரங்குப் பெட்டிகளை அந்தப் புல்தரையில் மேல் நோக்கி இழுத்துக் கொண்டு கோட்டையின் பெரிய கருவாலி மரக் கதவை நோக்கி நகர்ந்தனர்.

"விருந்து ஏற்கனவே துவங்கிவிட்டது என்று நான் நினைக்கிறேன்," என்று கூறியவாறே, ரான், கோட்டையின் படிக்கட்டில் தனது டிரங்குப் பெட்டியைப் போட்டுவிட்டு, சத்தமில்லாமல் நடந்து சென்று, பிரகாசமாக ஒளிவீசிக் கொண்டிருந்த ஒரு சன்னலின் வழியாக எட்டிப் பார்த்தான். "ஹாரி, இங்கே வந்து பாரேன் – வகை பிரிக்கும் விழா நடந்து கொண்டிருக்கிறது."

ஹாரி வேகமாக ஓடி வந்தான். அவர்கள் இருவரும் பேரரங்கினுள் எட்டிப் பார்த்தனர்.

Scanned by CamScanner

அங்கிருந்த நான்கு நீண்ட உணவு மேசைகளுக்கு மேலே அந்தரத்தில் மிதந்து கொண்டிருந்த எண்ணற்ற மெழுகுவர்த்திகள், அந்த மேசையில் இருந்த தங்கத் தட்டுகளையும் கோப்பைகளையும் தகதகக்கச் செய்தன. அங்கிருந்த கூரை எப்போதும் வெளியே இருக்கும் வானத்தைப் பிரதிபலிக்கும் விதத்தில் மாயாஜாலமாக அமைக்கப்பட்டிருந்ததால், அது நட்சத்திரங்களால் ஜொலித்துக் கொண்டிருந்தது.

கருமை நிற ஹாக்வார்ட்ஸ் கும்புத் தொப்பிகளின் ஊடாக, அப்பேரரங்கில் கிலியுடன் நின்று கொண்டிருந்த முதல் வருட மாணவர்களின் நீண்ட வரிசையை ஹாரி பார்த்தான். ஜின்னியும் அங்கு நின்று கொண்டிருந்தாள். வீஸ்லீ குடும்பத்தின் பரம்பரைச் சொத்தான சிவப்பு நிறத் தலைமுடியின் காரணமாக அவனால் அவளை எளிதாக அடையாளம் காண முடிந்தது. இதற்கிடையே, தன் கூந்தலைக் கொண்டையாக அள்ளி முடிந்திருந்த, மூக்குக்கண்ணாடி அணிந்திருந்த மந்திரவாதினியான பேராசிரியர் மினர்வா மெக்கானகல், அப்புதிய மாணவர்களின் முன்பு வைக்கப்பட்டிருந்த ஒரு முக்காலியில், ஹாக்வார்ட்ஸின் பிரபலமான வகை பிரிக்கும் தொப்பியை எடுத்து வைத்துக் கொண்டிருந்தார்.

மிகப் பழைய, அழுக்கான, நைந்து போய் ஆங்காங்கே ஒட்டுப் போடப்பட்டிருந்த அந்தத் தொப்பி, ஒவ்வொரு வருடமும் புதிய மாணவர்களை, கிரிஃபின்டார், ஹஃபில்பஃப், ரேவன்கிளா, ஸ்லிதரின் ஆகிய நான்கு ஹாக்வார்ட்ஸ் அணிகளுக்குள் வகை பிரித்தது. சரியாக ஒரு வருடத்திற்கு முன்பு அதைத் தன் தலையில் போட்டுக் கொண்டு, அது தன் முடிவைத் தனது காதுகளில் அறிவிப்பதற்காக உறைந்து போய்த் தான் காத்துக் கொண்டிருந்ததை ஹாரி நினைவுகூர்ந்தான். அந்தத் தொப்பி, ஏராளமான தீய மந்திரவாதிகளையும் மந்திரவாதினிகளையும் உருவாக்கியிருந்த ஸ்லிதரின் அணியில் தன்னைப் போட்டுவிடுமோ என்று அவன் ஒருசில கணங்கள் பயந்து போயிருந்தான். ஆனால், ரான், ஹெர்மயனி, மற்றும் பிற வீஸ்லீ சகோதரர்களுடன் சேர்த்து கிரிஃப்ன்டார் அணியில் அவன் போடப்பட்டான். கடந்த முறை, அணிகளுக்கு இடையேயான பள்ளிக் கோப்பையை கிரிஃபின்டார் அணி வென்றெடுக்க ஹாரியும் ரானும் உதவியிருந்தனர். அப்படிச் செய்ததன் மூலம் அவர்களுடைய அணி ஏழு வருடங்களில் முதன்முறையாக ஸ்லிதரின் அணியினரிடம் இருந்து வெற்றிக் கோப்பையைப் பறித்திருந்தது.

சிறிய உருவத்துடனும் மங்கலான பழுப்பு நிறத் தலைமுடியுடனும் இருந்த ஒரு சிறுவன், வகை பிரிக்கும் தொப்பியைத் தன் தலையில் வைத்துக் கொள்ள அழைக்கப்பட்டான். ஹாரியின் கண்கள் அச்சிறுவனுக்குப் பின்னால் ஆசிரியர்களின் மேசையில் அமர்ந்திருந்த, ஹாக்வார்ட்ஸ் பள்ளித் தலைமையாசிரியரான பேராசிரியர் ஆல்பஸ் டம்பிள்டோரின்மீது நிலைத்தன. வகை பிரிக்கும் விழாவை அவர் பார்வையிட்டுக் கொண்டிருந்தார். அவரது நீண்ட வெண்தாடியும்

Scanned by CamScanner

அரைவட்ட வடிவிலான மூக்குக்கண்ணாடியும் மெழுகுவர்த்திகளின் வெளிச்சத்தில் மின்னிக் கொண்டிருந்தன. அவருக்குக் கொஞ்சம் தள்ளி, நீல நிற அங்கியில் கில்டராய் லாக்ஹார்ட் உட்கார்ந்திருந்ததை ஹாரி பார்த்தான். கடைசியில், பெரிய உருவத்துடனும் அடர்ந்த முடியுடனும் ஹாக்ரிட் உட்கார்ந்திருந்தார். அவர் தனது கோப்பையிலிருந்து தாராளமாகக் குடித்துக் கொண்டிருந்தார்.

"ரான், ஆசிரியர்கள் வரிசையில் ஓர் இருக்கை மட்டும் காலியாக இருக்கிறதே!" என்று ஹாரி ரானிடம் கேட்டான். "ஆமாம், ஸ்னேப்பை எங்கே காணோம்?"

பேராசிரியர் செவரஸ் ஸ்னேப்பை ஹாரிக்குப் பிடிக்காது. அதேபோல அவருக்கும் ஹாரியைப் பிடிக்காது. அவரது அணியான ஸ்லிதரின் அணியைச் சேர்ந்த மாணவர்களைத் தவிர வேறு யாருக்கும் பிடிக்காத, குரூரமான, சுடுசொற்களை அள்ளி வீசிய ஒரு நபர் அவர். மாயத் திரவ வகுப்புகளை அவர்தான் நடத்தி வந்தார்.

"ஒருவேளை அவருக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்திருக்கலாம்," என்று ரான் நம்பிக்கையோடு கூறினான்.

"தான் பெரிதும் விரும்பி வந்திருந்த, 'தீய மந்திர சக்திகளுக்கு எதிரான பாதுகாப்பு' வகுப்பை எடுப்பதற்குத் தனக்குக் கிடைத்த வாய்ப்பு இரண்டாவது முறையாகப் பறி போனதால், ஒருவேளை அவர் வேலையைவிட்டே போயிருக்கலாம்," என்று ஹாரி கூறினான்.

"அல்லது அவரை வீட்டுக்கு அனுப்பியிருப்பார்கள்," என்று ரான் ஆர்வமாகக் கூறினான். "நான் என்ன கூற வருகிறேன் என்றால், எல்லோருமே அவரை வெறுக்கின்றனர் –"

"அல்லது நீங்கள் இரண்டு பேரும் ஏன் பள்ளி ரயிலில் வந்து சேரவில்லை என்று உங்களைக் கேட்பதற்காக அவர் காத்துக் கொண்டிருக்கலாம்," என்று ஒரு கடுமையான குரல் அவர்களின் முதுகிற்குப் பின்னாலிருந்து கேட்டது.

ஹாரி வேகமாகத் திரும்பினான். தனது கருப்பு அங்கி அங்கு வீசிய குளிர்க்காற்றில் படபடத்துக் கொண்டிருக்க, பேராசிரியர் ஸ்னேப் அங்கு நின்று கொண்டிருந்தார். அவர் மெல்லிய உடல்வாகுடனும் நோய்த்தன்மையைக் குறிக்கும் வெளிறிய மஞ்சள் நிறத் தோலுடனும் காணப்பட்டார். அவரது மூக்கானது கொக்கிபோல வளைந்திருந்தது. தோள்வரை வளர்ந்திருந்த அவரது தலைமுடி எண்ணெயில் குளித்திருந்தது. அப்போது அவர் அவர்களைப் பார்த்து 'வசமாக மாட்டிக் கொண்டீர்களா' என்று கேட்பதைப்போலப் புன்முறுவல் பூத்துக் கொண்டிருந்தார்.

"என்னைப் பின்தொடர்ந்து வாருங்கள்," என்று ஸ்னேப் கூறினார்.

ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளக்கூட பயந்து போய் ஹாரியும் ரானும் அவரைத் தொடர்ந்து படியேறி, தீப்பந்தங்களால் ஒளியூட்டப்பட்டிருந்த அந்தப் பெரிய வரவேற்பறைக்குள் நுழைந்தனர். அடுத்துப் பரிமாறப்படவிருந்த விருந்தின் மணம் பேரரங்கிலிருந்து வந்து மூக்கைத் துளைத்தது. ஆனால் பேராசிரியர் ஸ்னேப் அவர்கள்

Scanned by CamScanner

இருவரையும் அங்கு அழைத்துச் செல்லாமல் ஒரு குறுகிய கற்படிக்கட்டின் வழியாகக் கீழே நிலவறைகள் இருந்த இடத்திற்கு அழைத்துச் சென்றார்.

ஸ்னேப், கடும் குளிராக இருந்த தாழ்வாரத்தின் மத்தியில் இருந்த ஓர் அறையைத் திறந்து அதைச் சுட்டிக்காட்டி, "உள்ளே செல்லுங்கள்," என்று கூறினார்.

அவர்கள் குளிரில் நடுங்கிக் கொண்டே ஸ்னேப்பின் அறைக்குள் நுழைந்தனர். வெளிச்சமற்று இருந்த அறைச் சுவர்களின் ஓரமாகப் பல பெரிய கண்ணாடி ஜாடிகள் வைக்கப்பட்டிருந்தன. பார்த்தாலே குமட்ட வைக்கும் பல பொருட்கள் அவற்றில் மிதந்து கொண்டிருந்தன. ஹாரி அச்சமயத்தில் அவற்றில் என்ன இருந்தது என்பதைத் தெரிந்து கொள்ளக் கண்டிப்பாக விரும்பவில்லை. கணப்பு அடுப்புக் காலியாகவும் இருட்டாகவும் இருந்தது. ஸ்னேப் அந்த அறைக் கதவை மூடிவிட்டுத் திரும்பி அவர்களைப் பார்த்தார்.

அவர் மெதுவாக, "ஆக, கதாநாயகன் ஹாரி பாட்டருக்கும் அவனது அடிவருடித் தோழன் வீஸ்லீக்கும் ரயில் வசதிப்படவில்லை. **அதனால் ஹாக்வார்ட்ஸையே கலக்கும் விதத்தில் வந்திறங்க முயன்றீர்கள், அப்படித்தானே?"** என்று கேட்டார்.

"இல்லை சார், கிங்ஸ் கிராஸ் நிலையத்தில் இருந்த தடுப்புச் சுவரை எங்களால் கடந்து வர முடியவில்லை –"

"வாயை மூடுங்கள்!" என்று அவர் இரைந்தார். "ஆமாம், அந்தக் காரை என்ன செய்தீர்கள்?"

ரான் மென்று விழுங்கினான். ஸ்னேப்பால் அடுத்தவர்களுடைய மனத்தில் இருந்ததைப் படிக்க முடியும் என்று ஹாரிக்குத் தோன்றியது அது முதன்முறையல்ல. ஆனால் அவர் அன்றைய தினத்தின் **'த ஈவினிங் புராஃபெட்'** பத்திரிகையை விரித்ததும் அவனுக்கு விஷயம் விளங்கியது.

அவர் அப்பத்திரிகையின் முதற்பக்கச் செய்தியைச் சுட்டிக்காட்டியபடி, "உங்களைப் பிறர் பார்த்துவிட்டிருக்கின்றனர்!" என்று சீறினார். **பறக்கும் ஃபோர்டு ஏஞ்சலியா கார் மகுள்களை மருள வைத்திருந்தது**. அவர் அதை வாய்விட்டுப் படிக்கத் துவங்கினார். "லண்டனில் இருக்கும் இரண்டு மகுள்கள் தபால் அலுவலகக் கோபுரத்திற்கு மேலே ஒரு பழைய கார் பறந்ததைத் தாங்கள் பார்த்ததாகச் சத்தியம் செய்துள்ளனர் . . . நார்ஃபோக்கில் இன்று மதியம் திருமதி பேலிஸ் தனது துணிகளை வெளியே உலர்த்திக் கொண்டிருந்தபோது அந்தக் காரைப் பார்த்திருக்கிறார். . . பீபில்ஸைச் சேர்ந்த திரு ஆங்கஸ் ஃபிளீட் இது குறித்துக் காவல் நிலையத்தில் புகார் செய்துள்ளார் . . . மொத்தத்தில் ஆறேழு பேர் அந்தப் பறக்கும் காரைப் பார்த்திருக்கின்றனர்." அவர் ரானைப் பார்த்து இன்னும் வஞ்சகமாகப் புன்னகைத்தபடி, "உன் அப்பா 'மகுள் கலைப்பொருட்கள் துஷ்பிரயோக அலுவலகத்'தில் வேலை

Scanned by CamScanner

பார்க்கிறார் என்று நான் நினைக்கிறேன். அவருடைய கடைக்குட்டிப் பையன், அடடா . . ." என்றார்.

முன்பு தங்களைத் தாக்கிய அந்தப் பைத்தியக்கார மரத்தின் பெரிய கிளை ஒன்று தனது வயிற்றில் மீண்டும் பலமாகத் தாக்கியதுபோல ஹாரி உணர்ந்தான். ஆர்தர் தன் காரை மந்திர சக்தியைப் பயன்படுத்தி மாற்றியிருந்தார் என்பது யாருக்காவது தெரிய வந்தால் . . . அவனுக்கு ஏன் இது முன்பே தோன்றியிருக்கவில்லை?

"வெளியே தோட்டத்தை அலசியதில், அங்கிருக்கும் மிக மதிப்பு வாய்ந்த 'நையப் புடைக்கும் விந்தை வில்லோ மரத்'திற்குக் கடுமையான சேதம் விளைவிக்கப்பட்டுள்ளதை நான் காண நேர்ந்தது," என்று ஸ்னேப் கூறினார்.

"அந்த மரத்திற்கு நாங்கள் விளைவித்தச் சேதத்தைவிட அது எங்களுக்கு விளைவித்தச் சேதம் மிக அதிகம்," என்று ரான் தட்டுத் தடுமாறிக் கூறினான்.

"வாயை மூடுங்கள்!" என்று ஸ்னேப் மீண்டும் இரைந்தார். "துரதிர்ஷ்டவசமாக, நீங்கள் என்னுடைய அணியில் இல்லை. அதனால் உங்களைப் பள்ளியில் இருந்தே வெளியேற்ற வேண்டும் என்ற தீர்மானத்தை என்னால் எடுக்க முடியாது. அந்த அதிகாரம் இருக்கும் நபர்களை நான் இங்கு கூட்டிக் கொண்டு வரப் போகிறேன். அதுவரை இங்கேயே இருங்கள்."

ஹாரியும் ரானும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். அவர்களது முகங்கள் வெளிறிப் போயிருந்தன. ஹாரிக்குப் பசி சுத்தமாகப் பறந்து போய்விட்டிருந்தது. திடீரென்று தனது உடல்நிலை மிக மோசமாக ஆகியிருந்ததைப்போல அவனுக்குத் தோன்றியது. ஸ்னேப்பின் மேசைக்குப் பின்னால் இருந்த அலமாரியில் ஒரு பச்சைத் திரவத்தில் பெரிதாகக் கொழகொழவென்று ஏதோ ஒன்று மிதந்து கொண்டிருந்ததைப் பார்க்காமல் இருக்க அவன் மிகவும் பிரயத்தனம் செய்ய வேண்டியிருந்தது. ஸ்னேப் அவர்களுடைய கிரிஃபின்டார் அணித் தலைவரான பேராசிரியர் மெக்கானகல்லைக் கூட்டிவரப் போயிருந்தார் என்றால், நிலைமை ஒன்றும் மேம்படப் போவதில்லை என்பது உறுதி. அவர் ஸ்னேப்பைவிட நியாயமாக நடந்து கொள்வார் என்றாலும் அவரும் கண்டிப்பானவரே.

பத்து நிமிடங்கள் கழித்து ஸ்னேப் திரும்பி வந்தார். ஹாரி எதிர்பார்த்திருந்தபடி அவர் கூட்டி வந்திருந்தது பேராசிரியர் மெக்கானகல்லைத்தான். பேராசிரியர் மெக்கானகல் பல தருணங்களில் கோபப்பட்டு அவன் பார்த்திருந்தான். ஆனால், ஒன்று, அவரது உதடுகளால் எவ்வளவு தூரம் இறுகிப் போக முடியும் என்பது அவனுக்கு மறந்து போயிருக்க வேண்டும் அல்லது அவர் இவ்வளவு தூரம் கோபப்பட்டு அவன் இதுவரை பார்த்திராமல் இருந்திருக்க வேண்டும். உள்ளே நுழைந்த அடுத்தக் கணமே பேராசிரியர் மெக்கானகல் தன் மந்திரக்கோலை உயர்த்தினார். ஆனால் அங்கு

Scanned by CamScanner

காலியாக இருந்த கணப்பு அடுப்பை நோக்கி அவர் அதை நீட்டினார். அதில் உடனடியாக நெருப்புப் பற்றிக் கொண்டது.

"உட்காருங்கள்," என்று அவர் கூறினார். அவர்கள் இருவரும் நெருப்பருகே இருந்த நாற்காலிகளில் சாய்ந்தனர்.

"என்ன நடந்தது என்று விவரியுங்கள்," என்று அவர் கூறினார். அவரது மூக்குக்கண்ணாடி அச்சுறுத்தும் விதத்தில் மின்னிக் கொண்டிருந்தது.

ரயில் நிலையத்தில் தங்களை உள்ளேவிட மறுத்தத் தடுப்புச் சுவரில் இருந்து ரான் கதையைத் துவக்கினான்.

". . . பேராசிரியரே, ரயிலில் ஏற முடியாமல் போனதால் எங்களுக்கு வேறு வழியே இருக்கவில்லை."

"நீ ஏன் எங்களுக்கு ஆந்தை மூலம் கடிதம் அனுப்பவில்லை? உன்னிடம் ஓர் ஆந்தை உள்ளது என்று நான் நம்புகிறேன்," என்று பேராசிரியர் மெக்கானகல் ஹாரியிடம் கடுமையாகக் கேட்டார்.

ஹாரி வாயைப் பிளந்து கொண்டு அவரைப் பார்த்தான். அவர் கூறிய பிறகுதான் தாங்கள் அதைத்தான் முதலில் செய்திருக்க வேண்டும் என்பது அவனுக்கு உறைத்தது.

"நான் . . . எனக்குத் தோன்றவில்லை –"

"அதுதான் வெளிப்படையாகத் தெரிகிறதே," என்று பேராசிரியர் மெக்கானகல் கூறினார்.

அந்த அறைக் கதவை யாரோ தட்டிய சத்தம் கேட்டது. முன் எப்போதையும்விட அதிக சந்தோஷமாகத் தோன்றிய ஸ்னேப் அக்கதவைத் திறந்தார். அங்கு பேராசிரியர் டம்பிள்டோர் நின்று கொண்டிருந்தார்.

ஹாரியின் மொத்த உடலும் மறத்துப் போனது. டம்பிள்டோர் வழக்கத்திற்கு மாறாகத் தீவிரமாகக் காணப்பட்டார். சற்றுக் கோணலான தனது மூக்கின் நுனி வழியாக அவர் அவர்களைப் பார்த்தார். நையப் புடைக்கும் விந்தை மரம் தங்களை இன்னும் அடித்துக் கொண்டிருந்தால் இதைவிட நன்றாக இருந்திருக்கும் என்று ஹாரி நினைத்தான்.

அங்கு நீண்ட நேரம் மௌனம் நிலவியது. பிறகு டம்பிளடோர், "என்ன நடந்தது என்று தயவு செய்து விவரியுங்கள்," என்று கூறினார்.

அவர் கத்தியிருந்தால் இதைவிட நன்றாக இருந்திருக்கும். அவரது குரலில் தொனித்த ஏமாற்றத்தை ஹாரியால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஏதோ ஒரு காரணத்தால் அவனால் டம்பிள்டோரின் கண்களை நேருக்கு நேராகப் பார்த்துப் பேச முடியவில்லை. அதனால் அவரது கால் மூட்டுக்களைப் பார்த்து அவன் பேசினான். வசியப்படுத்தப்பட்டிருந்த ஒரு கார் ஆர்தரிடம் இருந்தது என்பதைத் தவிர மற்ற எல்லாவற்றையும் அவன் டம்பிள்டோரிடம் கூறினான். ரயில் நிலையத்தைவிட்டு அவர்கள் வெளியே வந்ததும் அங்கு நின்று கொண்டிருந்த ஒரு பறக்கும் காரைத் தற்செயலாக அவர்கள் கண்டுபிடித்திருந்ததுபோல இருந்தது அவனது பேச்சு. டம்பிள்டோர்

Scanned by CamScanner

தங்களது கதையில் இருந்த அந்த ஓட்டையை உடனடியாகக் கண்டுபிடித்துவிடுவார் என்பதை அவன் அறிந்திருந்தான். ஆனால் டம்பிள்டோர் அந்தக் காரைப் பற்றி எதுவும் கேட்கவில்லை. ஹாரி பேசி முடித்ததும் அவர் வெறுமனே தன் மூக்குக்கண்ணாடி வழியாக அவனை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"நாங்கள் போய் எங்களுடைய அறையிலிருந்து சாமான்களை எடுத்துக் கொள்கிறோம்," என்று ரான் நம்பிக்கையற்றக் குரலில் கூறினான்.

"என்ன உளறுகிறாய்?" என்று பேராசிரியர் மெக்கானகல் இரைந்தார்.

"நீங்கள் எங்களைப் பள்ளிக்கூடத்தில் இருந்து வெளியேற்றப் போகிறீர்கள் இல்லையா?" என்று ரான் கேட்டான்.

"இன்று இல்லை, ரான்," என்று டம்பிள்டோர் கூறினார். "ஆனால் நீங்கள் செய்த காரியம் எவ்வளவு தீவிரமானது என்பதை நீங்கள் உணர வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இன்றிரவு நான் உங்களுடைய குடும்பத்தினருக்குக் கடிதம் எழுதப் போகிறேன். நீங்கள் இதுபோல வேறு எதையாவது இனியொரு முறை செய்தால் உங்களைப் பள்ளியைவிட்டு வெளியேற்றுவதைத் தவிர எனக்கு வேறு வழியிருக்காது என்று உங்களை நான் எச்சரிக்கிறேன்."

ஸ்னேப், கிறிஸ்துமஸ் தினமே ரத்து செய்யப்பட்டுவிட்டதுபோலக் காணப்பட்டார். அவர் தன் தொண்டையைச் செருமிக் கொண்டு, "பேராசிரியர் டம்பிள்டோர் அவர்களே, வயதிற்கு வராத மந்திரவாதிகளுக்கான கட்டுப்பாட்டு விதிகளை இவர்கள் இருவரும் மீறிவிட்டிருக்கின்றனர். ஒரு வயதான, மதிப்புமிக்க ஒரு மரத்திற்குச் சேதம் விளைவித்திருக்கின்றனர் . . . இம்மாதிரிச் செயல்களுக்கு . . ." என்றார்.

"ஸ்னேப், இவர்களுக்கு என்ன தண்டனை கொடுக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு பேராசிரியர் மெக்கானகல்லுடையது," என்று டம்பிளடோர் அமைதியாகக் கூறினார். "அவர்கள் அவருடைய அணியில் இருக்கின்றனர் என்பதால் அது அவருடைய பொறுப்பு." அவர் பேராசிரியர் மெக்கானகல்லை நோக்கித் திரும்பினார். "பேராசிரியர் மெக்கானகல் அவர்களே, நான் மீண்டும் விருந்து நடக்கும் இடத்திற்குச் சென்றாக வேண்டும். நான் ஒருசில அறிவிப்புகளை வெளியிட வேண்டியுள்ளது. ஸ்னேப், வாருங்கள் போகலாம். மிகவும் ருசிகரமாகத் தோன்றுகின்ற நெய்யப்பம் அங்கு இருக்கிறது. அதை நான் ருசித்துப் பார்க்க விரும்புகிறேன்."

ஸ்னேப் அவர்களைத் தனியாகப் பேராசிரியர் மெக்கானகல்லுடன் விட்டுவிட்டுத் தன் அலுவலகத்தைவிட்டு வெளியே செல்லும் முன்பாக, அவர்களை நோக்கி வீசிய பார்வையில் விஷம் கொப்பளித்துக் கொண்டிருந்தது. பேராசிரியர் மெக்கானகல் அவர்களை இன்னும் சீற்றம் கொண்டிருந்த கழுகுபோலப் பார்த்துக் கொண்டிருந்தார்.

Scanned by CamScanner

"ரான், நீ விரைவாக மருத்துவமனைக்குச் செல், ரத்தம் ஒழுகிக் கொண்டிருக்கிறது."

ரான் அவசர அவசரமாகத் தன் சட்டைக் கையை வைத்துத் தன் கண்ணில் இருந்த வெட்டுக் காயத்தைத் துடைத்துவிட்டுக் கொண்டே, "பெரிதாக ஒன்றும் அடிபடவில்லை," என்று கூறினான். "பேராசிரியரே, அணி பிரிக்கும்போது என் தங்கையை –"

"வகை பிரிக்கும் விழா நிறைவடைந்துவிட்டது," என்று பேராசிரியர் மெக்கானகல் கூறினார். "உன் தங்கையும் கிரிஃபின்டார் அணியில்தான் இருக்கிறாள்."

"சந்தோஷம்," என்று ரான் கூறினான்.

"கிரிஃபின்டார் அணியைப் பற்றி நீங்கள் பேச்செடுத்ததால் –" என்று பேராசிரியர் மெக்கானகல் துவக்கியபோது, ஹாரி அவரை இடைமறித்து, "பேராசிரியரே, நாங்கள் காரை எடுத்தபோது இவ்வருடப் படிப்பு இன்னும் துவங்கியிருக்கவில்லை என்பதால், கிரிஃபின்டார் அணியிலிருந்து புள்ளிகள் எதையும் நீங்கள் கழித்துவிட மாட்டீர்கள், இல்லையா?" என்று அவரைக் கவலையுடன் பார்த்துக் கொண்டே கேட்டான்.

பேராசிரியர் மெக்கானகல் அவனை எரித்துவிடுவதுபோலப் பார்த்தார். ஆனால் அவர் கிட்டத்தட்டப் புன்னகை புரிந்திருந்தார் என்று ஹாரி உறுதியாக நம்பினான். அவரது வாயின் இறுக்கம் கண்டிப்பாகக் குறைந்துதான் இருந்தது.

"நான் கிரிஃபின்டார் அணியிலிருந்து புள்ளிகள் எதையும் பிடுங்கிக் கொள்ளப் போவதில்லை," என்று அவர் கூறினார். ஹாரியின் மனம் லேசானது. "ஆனால் உங்கள் இருவர்மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்."

ஆனால் அது ஹாரி எதிர்பார்த்திருந்த தண்டனையைவிடக் குறைவாகவே இருந்தது. டம்பிள்டோர் டர்ஸ்லீ தம்பதியருக்கு எழுதுவதைப் பற்றி அவன் துளிகூடக் கவைலப்படவில்லை. நையப் புடைக்கும் விந்தை மரம் அவனை அப்படியே நசுக்கி இருக்காதது குறித்து அவர்கள் ஏமாற்றம் அடைந்திருப்பார்கள் என்பதை ஹாரி நன்றாகவே அறிவான்.

பேராசிரியர் மெக்கானகல் தன் மந்திரக்கோலை மீண்டும் உயர்த்தி ஸ்னேப்பின் மேசையை நோக்கிப் பிடித்தார். ஒரு பெரிய தட்டு நிறைய சான்ட்விச்சுகள், இரண்டு வெள்ளிக் கோப்பைகள், ஒரு கூஜா நிறையக் குளிர்ந்த பரங்கிச் சாறு ஆகியவை 'டப்' என்ற சிறு சத்தத்துடன் அந்த மேசையில் தோன்றின.

"நீங்கள் இங்கேயே சாப்பிட்டுவிட்டு, நேராக உங்களுடைய படுக்கையறைக்குச் சென்றுவிடுங்கள்," என்று பேராசிரியர் மெக்கானகல் கூறினார். "நானும் மீண்டும் விருந்திற்குச் சென்றாக வேண்டும்."

பேராசிரியர் மெக்கானகல் வெளியேறிய பின் கதவு சாத்தப்பட்டதும் ரான் ஒரு நீண்ட விசிலடித்தான்.

Scanned by CamScanner

அவன் ஒரு சான்ட்விச்சை எடுத்துக் கொண்டே, "நம் கதை முடிந்துவிட்டது என்றுதான் நான் நினைத்திருந்தேன்," என்று கூறினான்.

ஹாரியும் தன் பங்கிற்கு ஒன்றை எடுத்துக் கொண்டு, "நானும் அப்படித்தான் நினைத்தேன்," என்றான்.

ரான் இறைச்சியையும் கோழியையும் தன் வாயில் அடைத்துக் கொண்டு, "ஆனால் நம்முடைய அதிர்ஷ்டத்தை உன்னால் நம்ப முடிகிறதா?" என்று கேட்டான். "ஃபிரெட்டும் ஜார்ஜும் அந்தக் காரை எடுத்துக் கொண்டு ஐந்தாறு முறை பறந்திருப்பார்கள். அப்போது எந்த மகுளும் அதைப் பார்க்கவில்லை." அவன் தன் வாயில் இருந்ததை விழுங்கிவிட்டு, மீண்டும் ஒரு பெரிய துண்டைக் கடித்தான். "ஆமாம், நம்மால் ஏன் அந்தத் தடுப்புச் சுவரைக் கடந்து செல்ல முடியவில்லை?"

ஹாரி தன் தோள்களைக் குலுக்கினான். "நாம் இனி எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடியையும் மிகவும் ஜாக்கிரதையாக எடுத்து வைக்க வேண்டும்," என்று கூறிக் கொண்டே ஒரு பெரிய மடக்குப் பரங்கிச் சாறைக் குடித்தான். "நாமும் விருந்தில் கலந்து கொண்டிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்."

"நாம் தம்பட்டம் அடித்துக் கொள்வதைப் பேராசிரியர் மெக்கானகல் விரும்பவில்லை," என்று ரான் ஒரு ஞானியைப்போலப் பேசினான். "பறக்கும் காரில் வந்து இறங்குவது புத்திசாலித்தனமானது என்ற யோசனையை மற்றவர்களுக்குக் கொடுக்க அவர் விரும்பவில்லை."

தங்களால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு சான்ட்விச்சுகளை அவர்கள் சாப்பிட்டு முடித்ததும் (சான்ட்விச்சுகள் காலியாகக் காலியாக, அவை இருந்த தட்டுத் தானாகவே மீண்டும் மீண்டும் நிரம்பிக் கொண்டிருந்தது), அந்த அலுவலகத்தைவிட்டு வெளியேறி, தங்களுக்கு நன்கு பழக்கமாகிவிட்டிருந்த பாதை வழியாகத் தங்களுடைய கிரிஃபின்டார் கோபுரத்திற்கு அவர்கள் சாவகாசமாக நடந்து சென்றனர். கோட்டை நிசப்தமாக இருந்தது. விருந்து முடிந்துவிட்டிருந்ததுபோலத் தோன்றியது. முணுமுணுத்துக் கொண்டிருந்த ஓவியங்கள், கிரீச்சொலி எழுப்பிக் கொண்டிருந்த மெய்காப்புக் கவசங்களை அணிந்திருந்த சிலைகள் ஆகியவற்றைக் கடந்து சென்று, கற்களால் ஆன, குறுகலான மாடிப்படிகளின் வழியாக ஏறிச் சென்று, கிரிஃபின்டார் கோபுரத்தின் நுழைவு வழியை மறைத்துக் கொண்டிருந்த ஓர் ஓவியத்தை அவர்கள் அடைந்தனர்.

அவர்கள் அந்த ஓவியத்தை அணுகியதும், அதில் இளஞ்சிவப்பு நிறப் பட்டாடையில் ஜொலித்துக் கொண்டிருந்த ஒரு குண்டுப் பெண்மணி அவர்களிடம், "உள்ளே நுழைவதற்கான ரகசிய வார்த்தை?" என்று கேட்டாள்.

"என்ன? ரகசிய வார்த்தையா?" என்று ஹாரி கேட்டான்.

Scanned by CamScanner

அவர்கள் இன்னும் கிரிஃபின்டார் மாணவ அணித் தலைவனைப் பார்த்திருக்காததால், இப்புதிய வருடத்திற்கான ரகசிய நுழைவு வார்த்தை அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. ஆனால் உதவி அவர்களுக்கு உடனடியாக வந்தது. அவர்களுக்குப் பின்னால் யாரோ அவசரமாக நடந்து வந்த சத்தம் கேட்டது. அவர்கள் திரும்பிப் பார்த்தபோது, ஹெர்மயனி அவர்களை நோக்கி ஓடி வந்து கொண்டிருந்தாள்.

"**நீங்கள் இங்கேதான் இருக்கிறீர்களா?** ஆமாம், இவ்வளவு நேரம் நீங்கள் எங்கே போயிருந்தீர்கள்? **இங்கு கேலிக்கிடமான ஒரு வதந்தி உலவிக் கொண்டிருக்கிறது** – நீங்கள் இருவரும் ஒரு பறக்கும் காரை ஓட்டியதற்காகப் பள்ளியிலிருந்து தூக்கியெறியப்பட்டுவிட்டீர்கள் என்று யாரோ கூறினார்கள்."

"இல்லை, நாங்கள் பள்ளியிலிருந்து வெளியேற்றப்படவில்லை," என்று ஹாரி அவளுக்கு உறுதியளித்தான்.

"அப்படியானால் நீங்கள் இருவரும் இங்கே பறந்துதான் வந்தீர்கள் என்று கூற வருகிறீர்களா?" என்று அவள் கேட்டாள். அவளது குரலின் தொனி பேராசிரியர் மெக்கானகல்லின் குரலைப்போலவே கடுமையாக இருந்தது.

"அம்மா, தாயே, நீ உன் அறிவுரையைக் கொஞ்சம் நிறுத்திக் கொள்கிறாயா?" என்று ரான் பொறுமையிழந்து கூறினான். "புதிய ரகசிய நுழைவு வார்த்தை என்னவென்று கூறு."

"கொண்டைப் பறவை," என்று ஹெர்மயனி பொறுமையிழந்து கூறினாள். "ஆனால் நான் கேட்க வந்தது –"

ஆனால் அந்த ஓவியம் விலகிக் கொண்டதும் உள்ளே இருந்து கேட்ட பயங்கரக் கரகோஷ ஒலி, அவள் கேட்க வந்ததைப் பாதியிலேயே மூழ்கடித்துவிட்டிருந்தது. கிரிஃபின்டார் அணி மொத்தமும் தூங்காமல் அவர்களுக்காகக் காத்திருந்ததுபோலத் தோன்றியது. அந்த வட்ட வடிவப் பொது அறையில் இருந்த சரிவான மேசைகள், குழைவான நாற்காலிகள் ஆகியவற்றில் ஏறிக் கொண்டும், அறை முழுவதும் நெருக்கியடித்துக் கொண்டும் இவர்களின் வருகைக்காக அவர்கள் அனைவரும் காத்துக் கொண்டிருந்தனர். ஓவியத்திற்குப் பின்னால் இருந்த அந்தத் துவாரத்தின் வழியாக பல கைகள் வெளிப்பட்டு ஹாரியையும் ரானையும் உள்ளே இழுத்துக் கொண்டன. அவர்களுக்குப் பின்னால் ஹெர்மயனி தட்டுத் தடுமாறி உள்ளே சென்றாள்.

"பிரமாதம்!" என்று லீ ஜோர்டன் குதூகலித்தான். "எங்களுக்கு உத்வேகம் ஊட்டியுள்ளீர்கள்! ஆஹா! பறக்கும் காரில் பறந்து வந்தது என்னவோர் அபாரமான நுழைவு! நேராக நையப் புடைக்கும் மரத்தில் மோதியது! இதைப் பற்றி மக்கள் இன்னும் பல வருடங்களுக்குக் கண்டிப்பாகப் பேசிக் கொண்டிருக்கப் போகிறார்கள்!"

Scanned by CamScanner

"சூப்பராகப் பண்ணினாய்!" என்று, ஹாரி இதுவரை பேசியிராத ஐந்தாவது வருட மாணவன் ஒருவன் அவனிடம் கூறினான். மற்றொருவன், ஹாரி ஏதோ ஒரு பெரிய நெடுந்தூர ஓட்டப் பந்தயத்தில் வென்றுவிட்டு வந்திருந்ததுபோல அவனது முதுகில் ஒரு செல்லத்தட்டுத் தட்டிவிட்டுச் சென்றான். ஃபிரெட்டும் ஜார்ஜும் கூட்டத்தில் முண்டியடித்துக் கொண்டு முன்னால் வந்து, ஒருசேர, "நீங்கள் எங்களையும் கூப்பிட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும்!" என்று கூறினர். ரானின் முகம் ரத்தச் சிவப்பாக ஆகியிருந்தது. அவன் சங்கடத்துடன் நெளிந்து கொண்டே வாயெல்லாம் பல்லாகச் சிரித்தான். ஆனால் அக்கூட்டத்தில் ஒரே ஒருவன் மட்டும் கொஞ்சம்கூட மகிழ்ச்சியாக இல்லாததை ஹாரி கவனித்தான். அது பெர்சி. பெரிதும் உற்சாகம் அடைந்திருந்த முதல் வருட மாணவர்கள் சிலருக்குப் பின்னால் அவனது தலை தெரிந்தது. அவர்களை அந்த இடத்தைக் காலி செய்யுமாறு கேட்டுக் கொள்ள அவன் முயற்சித்துக் கொண்டிருந்ததுபோலத் தோன்றியது. ஹாரி ரானின் விலாவில் இடித்து, பெர்சி இருந்த திசையை நோக்கித் தன் தலையை ஆட்டினான். ரான் சூட்டிகையுடன் நிலைமையைப் புரிந்து கொண்டான்.

அவன் உடனடியாகக் கூட்டத்தினரை நோக்கி, "மிகவும் களைப்பாக இருக்கிறது – படுக்கப் போக வேண்டும், வழி விடுங்கள்," என்று கூறினான். அவர்கள் இருவரும் கூட்டத்தினரை விலக்கிக் கொண்டு, அறையின் மறுபக்கத்திலிருந்த, சுழல் படிக்கட்டிற்கும் தங்களது படுக்கையறைக்கும் இட்டுச் சென்ற கதவை நோக்கிச் செல்லத் துவங்கினர்.

ஹாரி ஹெர்மயனியைப் பார்த்து, "காலையில் பார்க்கலாம்," என்று கூறினான். அவளும் பெர்சியைப்போலவே முகஞ்சுளித்துக் கொண்டிருந்தாள்.

முதுகில் இடைவிடாமல் விழுந்து கொண்டிருந்த அன்புத் தட்டல்களின் ஊடாக அறையின் மறுமுனையில் இருந்த கதவை அவர்கள் அடைந்து, அமைதியாக இருந்த படிக்கட்டுகளில் ஏறத் துவங்கினர். அவர்கள் வேகமாக அதன் உச்சியை அடைந்து தங்களுடைய பழைய பொதுப் படுக்கையறையை அடைந்தனர். அதன் கதவில் இப்போது 'இரண்டாம் வருட மாணவர்கள்' என்ற அறிவிப்புத் தொங்கியது. தங்களுக்கு நன்கு பரிச்சயமான, வட்ட வடிவில் அமைந்திருந்த அந்த அறைக்குள் அவர்கள் நுழைந்தனர். அந்த உயரமான அறையில், வழக்கம்போல, சிவப்பு வெல்வெட்டால் அலங்கரிக்கப்பட்டிருந்த ஐந்து பெரிய கட்டில்கள் போடப்பட்டிருந்தன. அவர்களுடையை டிரங்குப் பெட்டிகள் எடுத்து வரப்பட்டு அவர்களுடைய கட்டில்களின் ஒரு முனையில் வைக்கப்பட்டிருந்தன.

ரான் ஹாரியை நோக்கி வாயெல்லாம் பல்லாகச் சிரித்தான்.

Scanned by CamScanner

"நம்முடைய அணியினர் நமக்கு அளித்தத் தடபுடலான வரவேற்புக் குறித்து நான் அவ்வளவு தூரம் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியிருக்கக்கூடாது என்பது புரிகிறது. ஆனால் –"

அவர்களுடைய பொதுப் படுக்கையறையின் கதவு வேகமாகத் திறந்தது. மற்றபிற இரண்டாம் வருட கிரிஃபின்டார் மாணவர்களான சீமஸ் ஃபின்னிகன், டீன் தாமஸ், நெவில் லாங்பாட்டம் ஆகியோர் உள்ளே நுழைந்தனர்.

"நம்பவே முடியவில்லை!" என்று கூறி சீமஸ் பெரிதாகப் புன்னகைத்தான்.

"அமர்க்களம் பண்ணிவிட்டீர்கள்!" என்று டீன் கூறினான்.

"அற்புதம்!" என்று நெவில் பிரமிப்புடன் கூறினான்.

ஹாரியால் தன்னைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அவனும் பெரிதாகப் புன்னகைத்தான்.

Scanned by CamScanner

அத்தியாயம் ஆறு

கில்டராய் லாக்ஹார்ட்

ஆனால் அதற்கடுத்த நாள் ஹாரியால் மருந்துக்குக்கூடப் புன்னகை புரிய முடியவில்லை. பேரரங்கில் நடைபெற்றக் காலைச் சிற்றுண்டியிலிருந்தே எல்லாம் கீழ்முகமாகச் செல்லத் துவங்கியது. அந்தப் பேரரங்கின் மாயாஜாலமாக அலங்கரிக்கப்பட்டிருந்த கூரையின்கீழ் (இன்று அது மங்கலான சாம்பல் நிறத்தில் இருந்தது) நான்கு அணிகளின் உணவு மேசைகளிலும் கணக்கு வழக்கற்றப் பாயசக் கும்பாக்கள், தட்டுத் தட்டுகளாகக் கடல்மீன்கள், மலையெனக் குவித்து வைக்கப்பட்டிருந்த ரொட்டிகள், இறைச்சி மற்றும் முட்டைக் கறிகள் ஆகியவை பரப்பப்பட்டிருந்தன. ஹாரியும் ரானும் கிரிஃபின்டார் அணியின் உணவு மேசையில் ஹெர்மயனிக்கு அருகில் சென்று அமர்ந்தனர். அவள் தன்னுடைய **'ரத்தக் காட்டேரியுடன் ஒரு கடற்பயணம்'** புத்தகத்தை விரித்த நிலையில் பால் கூஜா ஒன்றின்மீது சாய்த்து வைத்திருந்தாள். காலை வணக்கம் கூறிய அவளது குரல் இன்னும் கொஞ்சம் முறுக்காகவே இருந்தது. முந்தைய நாள் தாங்கள் பள்ளிக்கு வந்து சேர்ந்திருந்த விதத்திற்கு அவள் இன்னும் மறுப்புத் தெரிவித்துக் கொண்டிருந்தாள் என்பதை அது ஹாரிக்கு உணர்த்துவதாக இருந்தது. அதே சமயம், நெவில் அவர்களைப் படுஉற்சாகத்துடன் வரவேற்றான். வட்ட வடிவ முகத்தைக் கொண்டிருந்த நெவில் அடிக்கடி விபத்திற்கு ஆளாகி வந்தான். ஹாரி இதுவரை சந்தித்திருந்த நபர்களில் இவன் அளவுக்கு வேறு எவருக்கும் ஞாபகமறதி இருந்ததில்லை.

"எந்த நிமிடமும் அஞ்சல் வந்துவிடும். வீட்டில் நான் மறந்து வைத்துவிட்டு வந்திருந்ததை என் பாட்டி இன்று எனக்கு அனுப்புவார் என்று நினைக்கிறேன்."

ஹாரி அப்போதுதான் பாயசத்தை ருசி பார்க்கத் துவங்கியிருந்தான். அக்கணத்தில் அப்பேரரங்கில் நூற்றுக்கணக்கான ஆந்தைகள் 'விர்' என்று பறந்து வந்து தலைக்கு மேலே வட்டமிட்டு, கீழே அரட்டையடித்துக் கொண்டிருந்த மாணவர்களின்மீது கடிதங்களையும் பொட்டலங்களையும் போட்டன. ஒரு பெரிய கனமான பொட்டலம் நெவிலின் தலைமேல் பட்டுக் கீழே விழுந்தது. அதையடுத்து, சாம்பல் நிறத்தில் பெரிதாக இருந்த ஏதோ ஒன்று

Scanned by CamScanner

ஹெர்மயனியின் கூஜாவிற்குள் விழுந்து அவர்கள் அனைவரையும் பாலாலும் இறகுகளாலும் குளிப்பாட்டியது.

"எரோல்!" என்று ரான் கத்தினான். சகதியில் குளித்திருந்ததுபோலத் தோற்றமளித்த ஓர் ஆந்தையை அதன் கால்களைப் பிடித்து அவன் வெளியே இழுத்தான். அது அந்த மேசையில் நினைவிழந்து சரிந்தது. அதன் கால்கள் வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்ததன. அதன் அலகில் ஒரு கடிதம் இருந்தது.

"ஐயோ!" என்று ரான் அலறினான்.

ஹெர்மயனி அந்த ஆந்தையைத் தன் கைகளால் மெதுவாகத் தட்டிக் கொண்ட, "கவலைப்படாதே, அது இன்னும் உயிருடன்தான் இருக்கிறது," என்று கூறினாள்.

"நான் அதைப் பற்றிக் கூறவில்லை – இதைப் பற்றித்தான் கூறுகிறேன்," என்று ரான் கூறினான்.

ரான் தனக்கு வந்திருந்த சிவப்பு நிறக் கடிதத்தைச் சுட்டிக்காட்டிக் கொண்டிருந்தான். அது மிகச் சாதாரணமாக இருந்ததாக ஹாரிக்குப் பட்டது. ஆனால் அது எந்த நிமிடமும் வெடித்துவிடக்கூடும் என்று தாங்கள் எதிர்பார்த்ததுபோல ரானும் நெவிலும் அதைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

"ரான், உனக்கு என்னவாயிற்று?" என்று ஹாரி கேட்டான்.

"என் அம்மா . . . எனக்கு 'அலறல் கடிதம்' ஒன்றை அனுப்பியிருக்கிறார்," என்று ரான் சுரத்தே இல்லாமல் கூறினான்.

நெவில் ரானிடம் தைரியமற்றக் கிசுகிசுப்பான குரலில், "நீ அதைத் திறந்து படித்துவிடுவது நல்லது," என்று கூறினான். "என் பாட்டி எனக்கு ஒரு முறை 'அலறல் கடிதம்' ஒன்றை அனுப்பினார். நான் அதை அலட்சியம் செய்தேன். ஆனால் –" என்று கூறி விழுங்கிவிட்டு, "அது நிலைமையைப் படுமோசமாக்கிவிட்டது," என்று முடித்தான்.

இறுகிப் போயிருந்த அவர்களது முகங்களிலிருந்து ஹாரி தன் பார்வையைத் திருப்பி அந்தச் சிவப்பு நிறக் கடிதத்தின்மீது மேயவிட்டான்.

"அலறல் கடிதம் என்றால் என்ன?" என்று அவன் கேட்டான்.

ஆனால் ரானின் மொத்தக் கவனமும் அக்கடிதத்தின்மீதே லயித்திருந்தது. அதன் முனைகளில் இருந்து இப்போது லேசாகப் புகை வெளிவரத் துவங்கியிருந்தது.

"அதைத் திறந்து படி," என்று நெவில் வற்புறுத்தினான். "ஒருசில நிமிடங்களில் அது முடிந்துவிடும் . . . "

நடுங்கிக் கொண்டிருந்த தன் கையை நீட்டி, எரோலின் அலகில் இருந்து ரான் அக்கடிதத்தை விடுவித்து, அதன் ஓரத்தைக் கிழித்துத் திறந்தான். நெவில் தன் கை விரல்களைத் தன் காதுகளுக்குள் செருகிக் கொண்டான். அவன் ஏன் அப்படிச் செய்தான் என்பது அடுத்தக் கணமே ஹாரிக்குப் புரிந்தது. முதலில் அது வெடித்துவிட்டதாகவே அவன் நினைத்தான். அப்பேரரங்கை ஒரு பெரிய சத்தம் நிறைத்தது. அது போட்டச் சத்தத்தில் உத்தரத்திலிருந்து தூசுகள் கீழே வந்து விழுந்தன.

Scanned by CamScanner

". . . காரைத் திருடியதற்காக நீ பள்ளியிலிருந்து தூக்கியெறியப்பட்டு இருந்தாலும் நான் ஆச்சரியப்பட்டிருக்க மாட்டேன். நீ என் கையில் அகப்படும்போது உன்னை நான் என்ன செய்யப் போகிறேன் என்று பார்! ரயில் நிலையத்தைவிட்டு நாங்கள் வெளியே வந்தபோது கார் காணாமல் போயிருந்ததைக் கண்டதும் நாங்கள் என்ன பாடுபட்டிருப்போம் என்பதை நீ ஒருகணம்கூட யோசிக்கத் தவறிவிட்டாய் . . ."

மோலியின் காட்டுக் கத்தல் அவரது வழக்கமான குரலைவிட நூறு மடங்கு அதிகச் சத்தமாக ஒலித்தது. அதன் அதிர்வில் உணவு மேசையில் இருந்த தட்டுகளும் கரண்டிகளும் கிலுகிலுத்தன. காதுகளைச் செவிடாக்கும் விதத்தில் அவரது கூச்சல் அந்த அறையின் கற்சுவர்களில் பட்டு எதிரொலித்தது. அந்த அரங்கில் அமர்ந்திருந்த அத்தனைப் பேரும் தங்கள் தலைகளைத் திருப்பி யாருக்கு 'அலறல் கடிதம்' வந்திருந்தது என்று பார்த்தனர். ரான் தன் நாற்காலியில் தொடர்ந்து தாழ்ந்து கொண்டே சென்றதில் கடைசியில் அவனது செந்நிறத் தலைமுடி மட்டுமே வெளியே தெரிந்தது.

". . . டம்பிள்டோரிடமிருந்து நேற்றிரவு எங்களுக்குக் கடிதம் வந்தபோது, எனக்கும் உன் அப்பாவிற்கும் ஏற்பட்ட அவமானத்தில், நாங்கள் கூனிக் குறுகிப் போனோம். இது மாதிரி நடந்து கொள்வதற்காக நாங்கள் உன்னை வளர்க்கவில்லை. நீயும் ஹாரியும் செத்துப் போயிருக்கக்கூடும் . . ."

தன் பெயர் எப்போது வெடித்துக் கிளம்புமோ என்று ஹாரி யோசித்துக் கொண்டிருந்தான். தனது காதுச் சவ்வுகள் கிழிந்துவிடக்கூடிய அளவுக்கு உச்சஸ்தாயியில் ஒலித்துக் கொண்டிருந்த அக்குரல் தனக்குக் கேட்கவேயில்லை என்பதுபோல அவன் பாவித்துக் கொண்டிருந்தான்.

". . . எனக்கு உன்னை நினைத்தால் கடும் வெறுப்பாக இருக்கிறது. உன் அப்பாவின் அலுவலகம் அவர்மீது ஒரு விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது. இது முழுக்க முழுக்க உன் தவறு. அடுத்த முறை இது மாதிரி ஏதாவது நடந்தால், நானே அங்கு வந்து உன்னை வீட்டிற்குக் கூட்டி வந்துவிடுவேன்."

அதைத் தொடர்ந்து ஒரு மயான அமைதி நிலவியது. ரானின் கையில் இருந்து கீழே விழுந்த அந்தச் சிவப்பு நிறக் கடிதம் தீப்பற்றி எரிந்து சாம்பலாகச் சுருண்டது. பேரலை ஒன்று தங்களைக் கீழே தள்ளிச் சாய்த்துவிட்டதைப்போல ஹாரியும் ரானும் அப்படியே இடிந்து போய் உட்கார்ந்தனர். ஒருசிலர் சிரித்தனர். பின்னர் கூட்டத்தினரின் பிதற்றல் பேச்சுக்கள் மெதுவாக மீண்டும் துவங்கின.

ஹெர்மயனி தான் விரித்து வைத்திருந்த 'ரத்தக் காட்டேரியுடன் ஒரு கடற்பயணம்' புத்தகத்தை மூடிவிட்டு, நாற்காலியின் மேலே லேசாகத் தெரிந்து கொண்டிருந்த ரானின் தலை உச்சியைப் பார்த்தாள்.

Scanned by CamScanner

"ரான், நீ என்ன எதிர்பார்த்தாய் என்று எனக்குத் தெரியாது, ஆனால் –"

"எனக்கு இது தேவைதான் என்று கூறாதே," என்று ரான் வெடித்தான்.

ஹாரி தன் பாயசக் கிண்ணத்தைத் தள்ளி வைத்தான். அவன் குற்ற உணர்வால் கொந்தளித்துக் கொண்டிருந்தான். இக்கோடை விடுமுறையில் ரானின் அப்பாவும் அம்மாவும் அவனுக்குச் செய்தவற்றுக்கு . . .

ஆனால் அது குறித்து மருகிக் கொண்டிருக்க அவனுக்கு நேரமிருக்கவில்லை. பேராசிரியர் மெக்கானகல் கிரிஃபின்டார் அணியின் உணவு மேசையருகே வந்து அவர்களுக்கான வகுப்புக் கால அட்டவணையை ஒவ்வொருவருக்கும் வினியோகித்துக் கொண்டிருந்தார். தங்களுக்கு முதலில் ஹஃபில்பஃப் அணியோடு சேர்த்துத் தொடர்ச்சியாக இரண்டு மூலிகையியல் வகுப்புகள் இருந்ததை அதிலிருந்து ஹாரி தெரிந்து கொண்டான்.

ஹாரி, ரான், ஹெர்மயனி ஆகிய மூவரும் கோட்டையைவிட்டு ஒன்றாக வெளியே வந்து, காய்கறித் தோட்டத்தைக் கடந்து சென்று, மாயாஜாலத் தாவரங்கள் வளர்க்கப்பட்டு வந்த பசுமைக் குடிலுக்குச் சென்றனர். அலறல் கடிதத்தால் குறைந்தபட்சம் ஒரே ஒரு நன்மை விளைந்திருந்தது. அவர்கள் போதுமான அளவு தண்டிக்கப்பட்டிருந்ததாக ஹெர்மயனி நம்பியதால், அவள் அவர்களுடன் மீண்டும் சுமூகமான நட்பைத் தொடர்ந்தாள்.

பசுமைக் குடிலை நெருங்கியதும் அதன் வாசலில் தங்கள் வகுப்பு மாணவர்கள் அனைவரும் பேராசிரியர் ஸ்புரவுட்டிற்காகக் காத்துக் கொண்டிருந்ததை அவர்கள் கண்டனர். அவர்கள் மூவரும் பிற மாணவர்களை நெருங்கியதும், பேராசிரியர் ஸ்புரவுட் அப்புல்வெளியின் குறுக்காகத் தங்களை நோக்கி நடந்து வந்ததைக் கண்டனர். அவருடன் கில்டராய் லாக்ஹார்ட்டும் வந்து கொண்டிருந்தார். பேராசிரியர் ஸ்புரவுட்டின் கைகள் முழுவதும் கட்டுக்கள் போடப்பட்டிருந்தன. தொலைவில் இருந்த அந்த நையப் புடைக்கும் விந்தை மரத்தின் பல கிளைகளுக்கும் கட்டுக்கள் போடப்பட்டிருந்ததைக் கண்ட ஹாரிக்குக் குற்ற உணர்வு மேலும் பெருக்கெடுத்தது.

பேராசிரியர் ஸ்புரவுட் ஒரு குண்டான, குள்ளமான மந்திரவாதினி. அவரது முடி எப்போதும் அலங்கோலமாகக் காற்றில் பறந்து கொண்டிருக்கும். அவர் எப்போதும் ஒட்டுப் போடப்பட்ட ஒரு தொப்பியை அணிந்திருந்தார். அவரது ஆடையில் தவறாமல் ஏகப்பட்ட மண் ஒட்டியிருக்கும். அவரது கைவிரல் நகங்களைப் பார்த்தால் பெட்டூனியா பெரியம்மா மயக்கம் போட்டு விழுந்துவிடுவார். ஆனால் அவருக்கு நேர்மாறாக, கில்டராய் லாக்ஹார்ட், தரையில் புரண்டு கொண்டிருந்த தனது நீலநிற அங்கியில் மிக நேர்த்தியாக இருந்தார். துல்லியமான கோணத்தில்

Scanned by CamScanner

அவரது தலைமீது சாய்த்து வைக்கப்பட்டிருந்த, தங்க ஓரங்களைக் கொண்டிருந்த அவரது நீல நிறத் தொப்பிக்குள்ளிருந்து அவரது பொன்னிறத் தலைமுடி பளபளப்பாக எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது.

அங்கு கூடியிருந்த மாணவர்களைப் பார்த்துத் தன் உதடுகளில் மலர்ச்சியான புன்னகையைப் படரவிட்ட லாக்ஹார்ட், "ஓ, வந்துவிட்டீர்களா?" என்றார். "காயப்பட்டுள்ள நையப் புடைக்கும் விந்தை மரத்திற்கு முறைப்படி எவ்வாறு சிகிச்சை அளிக்க வேண்டும் என்று பேராசிரியர் ஸ்புரவுட்டிற்கு நான் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தேன். ஆனால் மூலிகையியலில் பேராசிரியர் ஸ்புரவுட்டைவிட நான் சிறந்தவன் என்று நீங்கள் எண்ணிவிடக்கூடாது. இது போன்ற பல விந்தையான தாவரங்களை என்னுடைய பயணங்களின்போது அதிகமாகக் காண எனக்கு வாய்ப்புக் கிட்டியிருந்தது, அவ்வளவுதான்."

"இன்று மூன்றாம் பசுமைக் குடிலுக்குச் செல்லலாம்," என்று பேராசிரியர் ஸ்புரவுட் கூறினார். ஆனால் அவரது வழக்கமான குதூகலம் அவரிடம் இன்று காணப்படவில்லை. அவர் சுரத்தின்றிக் காணப்பட்டார்.

அங்கு உடனே சுவாரசிய முணுமுணுப்புகள் தோன்றின. அவர்கள் இதுவரை முதலாம் பசுமைக் குடிலில் மட்டுமே வேலை செய்து வந்திருந்தனர். மூன்றாம் பசுமைக் குடிலில் அதிக சுவாரசியமான, அதிக ஆபத்தான தாவரங்கள் இடம்பெற்றிருந்தன. பேராசிரியர் தன்னுடைய பெல்ட்டில் இருந்து ஒரு பெரிய சாவியை எடுத்துக் கதவைத் திறந்தார். உடனே உள்ளேயிருந்து ஈர மண்ணின் வாசமும் உரங்களின் நெடியும் வந்து தன்னைத் தாக்கியதை ஹாரி உணர்ந்தான். அதோடு, கூரையிலிருந்து தொங்கிக் கொண்டிருந்த மிகப் பெரிய மலர்களின் நறுமணமும் சேர்ந்து வந்தது. ரானையும் ஹெர்மயனியையும் தொடர்ந்து ஹாரி உள்ளே நுழைய முனைந்தபோது, லாக்ஹார்ட்டின் கை அவனைத் தடுத்தது.

"ஹாரி, நான் உன்னுடன் கொஞ்சம் பேச வேண்டும்," என்று கூறிய லாக்ஹார்ட், பேராசிரியர் ஸ்புரவுட்டை நோக்கி, "பேராசிரியரே, ஹாரி ஒருசில நிமிடங்கள் தாமதமாக வந்தால் உங்களுக்கு ஒன்றும் பிரச்சனை இல்லையே?" என்று கேட்டார்.

பேராசிரியரின் முகம் போன போக்கைப் பார்த்தபோது அவருக்கு அதில் உடன்பாடு இருக்கவில்லை என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. ஆனாலும், லாக்ஹார்ட், "நன்றி, பேராசிரியரே," என்று கூறிவிட்டு, பேராசிரியர் ஸ்புரவுட்டின் முகத்தில் அறைந்தாற்போலக் கதவைச் சாத்தினார்.

"ஹாரி," என்று லாக்ஹார்ட் அழைத்தார். சூரிய ஒளியில் அவரது முத்துப் பற்கள் தகதகத்தன. அவர் தன் தலையை ஆட்டிக் கொண்டே, "ஹாரி, ஹாரி," என்று அவனது பெயரைக் கூறிக் கொண்டே இருந்தார்.

Scanned by CamScanner

திகைத்துப் போயிருந்த ஹாரி வாயே திறக்கவில்லை.

"நான் கேள்விப்பட்ட விஷயம் – அது கண்டிப்பாக என் தவறுதான். எனக்கே நான் ஓர் உதை விட்டிருக்க வேண்டும்."

அவர் எதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார் என்று ஹாரிக்குச் சுத்தமாகத் தெரியவில்லை. அவன் அதைச் சொல்ல எத்தனித்தபோது அவர் மேலும் தொடர்ந்து பேசினார். "நான் இதற்கு முன்பு இந்த அளவுக்கு அதிர்ச்சி அடைந்ததில்லை. ஹாக்வார்ட்ஸுக்கு ஒரு காரில் பறந்து வந்ததை என்னவென்று சொல்ல! ஹாரி, நீ ஒரு தனிப்பிறவி."

அவர் பேசிக் கொண்டிராதபோதுகூட அவரால் எப்படித் தன்னுடைய வெண்முத்துப் பற்களை வெளியே காட்டிக் கொண்டிருக்க முடிந்தது என்பது அதிசயிக்கத்தக்கதாக இருந்தது.

"நான் உனக்கு விளம்பர ருசியை அறிமுகப்படுத்திவிட்டேன், அப்படித்தானே?" என்று லாக்ஹார்ட் கேட்டார். "உன்னை விளம்பர மோகம் பிடித்துக் கொண்டுவிட்டது. பத்திரிகையின் முதல் பக்கத்தை நீ என்னுடன் சேர்ந்து அலங்கரித்தாய். அதை உடனே மறுபடியும் செய்யத் துடித்துவிட்டாய், இல்லையா?"

"ஓ, அப்படியெல்லாம் இல்லை. பேராசிரியரே, நான் –"

ஹாரியின் தோள்களை எட்டிப் பிடித்த லாக்ஹார்ட், மறுபடியும், "ஹாரி, ஹாரி, ஹாரி," என்று கூறினார். **"எனக்குப் புரிகிறது ஹாரி.** எதையும் முதன்முதலாக ஒருமுறை ருசித்துவிட்டால், அதை மீண்டும் விரும்புவது இயல்பானதுதான். ஆனால் அதற்கு நான் என்னைத்தான் நொந்து கொள்ள வேண்டும். என் மூலமாகத்தான் அது உன் தலைக்குள் ஏறியிருக்க வேண்டும். ஆனால் இளைஞனே, உன்னைப் **பிறர் கவனிக்க வேண்டும் என்பதற்காகக் கார்களைப் பறக்க வைக்கக்கூடாது**. உன்னைக் கொஞ்சம் ஆசுவாசப்படுத்திக் கொள். நீ வளர்ந்த பின் இதற்கு நிறைய நேரம் இருக்கும். இப்போது நீ என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய் என்று எனக்குப் புரிகிறது. 'அவர் பாட்டுக்குச் சொல்லிக் கொண்டு போவார். அவருக்கென்ன! அவர் ஏற்கனவே சர்வதேசப் புகழ்பெற்ற ஒரு மந்திரவாதி!' ஆனால் எனக்குப் பன்னிரண்டு வயதாக இருந்தபோது, நீ இப்போது எப்படிச் சாதாரணமாக இருக்கிறாயோ, அப்படித்தான் நானும் இருந்தேன். இன்னும் சொல்லப் போனால், நான் உன் அளவுக்குக்கூடப் பிரபலமாக இருக்கவில்லை. 'பெயர் சொல்லப்படக்கூடாதவன்' விவகாரத்தினால் இப்போது உன்னை ஒருசிலருக்காவது தெரிந்திருக்கும், இல்லையா?" மின்னல்கீற்று வடிவில் இருந்த அவனது நெற்றித் தழும்பை அவர் உற்று நோக்கினார். "இது **'மந்திரவாதினி வாராந்திர'ப்** பத்திரிக்கையில் தொடர்ந்து ஐந்து வாரங்களுக்குப் 'புன்னகை மன்னன்' பட்டத்தை வெல்வது போன்றதில்லை என்பது எனக்குத் தெரியும். நான் அப்பட்டத்தை வாங்கியிருக்கிறேன். ஆனால், ஹாரி, அது ஒரு தொடக்கம். அது ஒரு தொடக்கம் மட்டும்தான்!"

அவர் ஹாரியைப் பார்த்து மகிழ்ச்சியுடன் கண்ணடித்துவிட்டு அங்கிருந்து அகன்றார். ஹாரி ஒருசில நிமிடங்களுக்கு அதிர்ச்சியில்

Scanned by CamScanner

உறைந்து போய் அங்கேயே நின்றான். பின், தான் இப்போது பசுமைக் குடிலின் உள்ளே இருந்தாக வேண்டும் என்பது நினைவிற்கு வந்தவனாக, கதவைத் திறந்து உள்ளே நுழைந்தான்.

பேராசிரியர் ஸ்புரவுட் பசுமைக் குடிலின் நடுப்பகுதியில் போடப்பட்டிருந்த ஒரு தற்காலிகமான பெஞ்சிற்குப் பின்னால் நின்று பேசிக் கொண்டிருந்தார். பல்வேறுபட்ட நிறங்களில் சுமார் இருபது ஜோடிக் காதுறைகள் அந்த பெஞ்சின்மீது கிடந்தன. ரானுக்கும் ஹெர்மயனிக்கும் இடையில் ஹாரி தன்னை நுழைத்துக் கொண்டதும், பேராசிரியர் ஸ்புரவுட், "நாம் இன்று மன்ட்ரேக் செடியைப் பிடுங்கி மீண்டும் நடப் போகிறோம். மன்ட்ரேக் செடியின் குணாதிசயங்கள் பற்றி உங்களில் யாருக்காவது தெரியுமா?" என்று கேட்டார்.

ஹெர்மயனியின் கை முதலில் உயர்ந்தபோது அது யாருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தவில்லை.

ஹெர்மயனி வழக்கம்போல அப்புத்தகத்தை ஏற்கனவே கரைத்துக் குடித்துவிட்டிருந்ததுபோலத் தோன்றிய ஒரு தொனியில், "மன்ட்ரேக் அல்லது மன்ட்ரகோரா என்றழைக்கப்படும் இத்தாவரம் ஓர் ஆற்றல்மிக்கப் புத்துயிரூட்டி," என்று கூறினாள். "உருவ மாறுபாடு அடைந்துள்ள அல்லது சபிக்கப்பட்டுள்ள நபர்கள் மீண்டும் தங்களது சொந்த உருவத்தை அடைய இது பயன்படுத்தப்படுகிறது."

"அபாரம். கிரிஃபின்டார் அணிக்குப் பத்துப் புள்ளிகள்," என்று பேராசிரியர் ஸ்புரவுட் கூறினார். "பெரும்பாலான முறிமருந்துகளின் ஓர் அங்கமாக மன்ட்ரேக் விளங்குகின்ற போதிலும் அது ஆபத்தானது. அது ஏன் என்று உங்களில் யாருக்காவது தெரியுமா?"

ஹெர்மயனியின் கை மீண்டும் வேகமாக உயர்ந்தபோது, ஹாரியின் மூக்குக்கண்ணாடி மயிரிழையில் தப்பித்தது.

"மன்ட்ரேக்கின் கத்தலைக் கேட்கும் நபருக்கு மரணம் நிச்சயம்," என்று அவள் உடனடியாகக் கூறினாள்.

"மிகச் சரியான விடை. கிரிஃபின்டார் அணிக்கு மீண்டும் ஒரு பத்துப் புள்ளிகள்," என்று பேராசிரியர் ஸ்புரவுட் கூறினார். "இங்கு நம்மிடம் இருக்கும் மன்ட்ரேக் செடிகள் இளம் நாற்றுகள்தான்."

தான் பேசிக் கொண்டிருந்தபோதே குழிவாக இருந்த தாம்பாளங்களில் வைக்கப்பட்டிருந்த ஒரு வரிசையை அவர் சுட்டிக்காட்டினார். எல்லோரும் அதை நன்றாகப் பார்ப்பதற்காக முண்டியடித்துக் கொண்டு முன்னே சென்றனர். பச்சை கலந்த செவ்வூதா நிறத்தில் அடர்த்தியாக இருந்த சுமார் நூறு செடிகள் அதில் வரிசை வரிசையாக இருந்தன. அவை வெகு சாதாரணமாக இருந்ததாக ஹாரிக்குப் பட்டது. 'மன்ட்ரேக்கின் கத்தல்' என்று ஹெர்மயனி கூறியபோது அவள் எதைக் குறிப்பிட்டாள் என்று அவனுக்குத் துளிகூட யோசனை இருக்கவில்லை.

"எல்லோரும் ஆளுக்கொரு ஜோடிக் காதுறைகளை எடுத்துக் கொள்ளுங்கள்," என்று பேராசிரியர் ஸ்புரவுட் கூறினார்.

Scanned by CamScanner

இளஞ்சிவப்பு நிறத்தில் இல்லாத, புசுபுசுவென்று இல்லாத காதுறைகளைத் தேர்ந்தெடுக்க அவர்கள் ஒவ்வொருவரும் முண்டியடித்தபோது ஒரு சிறு சலசலப்பு ஏற்பட்டது.

"காதுறைகளைப் போட்டுக் கொள்ளுங்கள் என்று நான் கூறும்போது அவை உங்கள் காதுகளை நன்றாக மூடியிருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்," என்று பேராசிரியர் ஸ்புரவுட் கூறினார். "காதுறைகளைக் கழற்றினால் பிரச்சனை ஒன்றும் வராது என்ற நேரம் வரும்போது நான் என் பெருவிரலை உயர்த்திக் காட்டுவேன். அப்போதுதான் நீங்கள் அவற்றைக் கழற்ற வேண்டும். எல்லோரும் தயாரா? இப்போது காதுறைகளை மாட்டிக் கொள்ளுங்கள்!"

ஹாரி பட்டென்று தன் காதுறைகளைத் தன் காதுகளின்மீது மாட்டினான். வெளிச் சத்தம் சுத்தமாக நின்றுவிட்டிருந்தது. பேராசிரியர் ஸ்புரவுட், இளஞ்சிவப்பு நிறத்தில் புசுபுசுவென்று இருந்த காதுறைகளைத் தன் காதுகளின்மேல் போட்டுக் கொண்டு, தன்னுடைய அங்கியின் கைகளைச் சுருட்டிவிட்டுக் கொண்டு, ஒரு செடியை இறுக்கமாகப் பற்றி, அதை பலமாகப் பிடுங்கினார்.

ஹாரி ஆச்சரியத்தில் அதிகச் சத்தமின்றிப் பெருமூச்செறிந்தான்.

வேர்களுக்குப் பதிலாக ஒரு சிறிய, சகதியில் குளித்திருந்த, மிக மிக அருவருப்பான ஒரு குழந்தை பூமியில் இருந்து வெளியே வந்தது. இலைகள் அதன் தலையிலிருந்து முளைத்திருந்தன. தோலில் பலவண்ணப் புள்ளிகளுடனும் வெளிறிய பச்சை நிறத்திலும் காட்சியளித்த அது பெருங்குரலெடுத்துக் கத்திக் கொண்டிருந்தது.

பேராசிரியர் ஸ்புரவுட், மேசைக்கு அடியில் இருந்து ஒரு பெரிய தொட்டியை எடுத்து, அந்த மன்ட்ரேக் செடியை அதில் போட்டு, கருப்பாக இருந்த ஈரமான உரத்தை அதன் இலைகள் மட்டும் வெளியே தெரியும் வண்ணம் அதன்மீது கொட்டி நிரப்பினார். பின் அவர் தன் கையைத் தட்டி மண்ணை உதறிவிட்டு, அவர்களுக்குத் தன் கைப் பெருவிரலைத் தூக்கிக் காட்டினார். பிறகு அவர் தனது காதுறைகளைக் கழற்றினார்.

"இப்போது நாம் பார்த்த மன்ட்ரேக்குகள் இளம் நாற்றுகளாக இருப்பதால் அவற்றின் கத்தலால் நாம் செத்துவிட மாட்டோம்," என்று, அப்போதுதான் தான் ஒரு பூச்செடிக்குத் தண்ணீர் ஊற்றி முடித்திருந்ததுபோல அவர் அமைதியாகக் கூறினார். "ஆனால் அவற்றின் சத்தம் உங்களைப் பல மணிநேரம் செயலிழக்க வைக்கும். நீங்கள் உங்களுடைய முதல் நாள் வகுப்பைத் தவறவிட விரும்ப மாட்டீர்கள் என்று நினைக்கிறேன். எனவே, நீங்கள் இதில் வேலை செய்து கொண்டிருக்கும்போது, உங்கள் காதுகளைக் காதுறைகளைக் கொண்டு நன்றாக மூடிக் கொள்ள மறந்துவிடாதீர்கள். இங்கிருந்து கிளம்ப வேண்டிய நேரம் வரும்போது, நான் உங்களுக்குச் சைகை செய்கிறேன்.

"ஒரு தாம்பாளத்திற்கு நான்கு பேர் என்ற கணக்கில் நின்று கொள்ளுங்கள் – இங்கு ஏராளமான தொட்டிகள் இருக்கின்றன –

Scanned by CamScanner

உர மூட்டைகள் அங்கே இருக்கின்றன – கடும் நஞ்சுடைய 'டென்டாகுலா' செடியிடம் எச்சரிக்கையாக இருங்கள் – அதற்குப் பற்கள் முளைத்துக் கொண்டிருக்கின்றன."

பேராசிரியர் ஸ்புரவுட், தன் தோளின்மீது திருட்டுத்தனமாகப் படர முயன்று கொண்டிருந்த, முட்கள் நிறைந்த சிவப்புச் செடியின்மீது பளாரென்று ஓர் அறை விட்டதில் அது தன் உணர்விகளைச் சுருட்டிக் கொண்டது.

ஹாரி, ரான், ஹெர்மயனி ஆகிய மூவரும் ஹஃபில்பஃப் அணியைச் சேர்ந்த ஒரு மாணவனுடன் சேர்ந்து கொண்டனர். ஹாரிக்கு அவனைத் தெரியும் என்றாலும்கூட ஹாரி அதுவரை அவனுடன் பேசியிருக்கவில்லை.

அவன் ஹாரியின் கையைப் பிடித்துக் குலுக்கியவாறு, "என் பெயர் ஜஸ்டின் ஃபின்ச் ஃபிளெட்ச்லீ," என்று உற்சாகமாகக் கூறினான். "நீ யாரென்று தெரியாமல் இருக்க வாய்ப்பில்லை – பிரபலமான ஹாரி பாட்டர் . . . ஹெர்மயனி, உன்னையும் எனக்குத் தெரியும் – எப்போதுமே எல்லாவற்றிலும் முதலிடம் (அவளது கையைப் பிடித்து அவன் குலுக்கியபோது, ஹெர்மயனிக்குப் பெருமை தாங்க முடியவில்லை) – ரான் வீஸ்லீ, ஆமாம் அந்தப் பறக்கும் கார் உன்னுடையதா?"

ரான் பதிலுக்குப் புன்னகைக்கவில்லை. அலறல் கடிதம் இன்னும் அவன் மண்டையைவிட்டு அகலாமல் இருந்தது வெளிப்படையாகத் தெரிந்தது.

அவர்கள் தங்களுடைய தொட்டிகளை டிராகன் எரு உரத்தினால் நிரப்பிக் கொண்டிருந்தபோது, ஜஸ்டின், "அந்த லாக்ஹார்ட் கொஞ்சம் வித்தியாசமான பேர்வழிதான், இல்லையா?" என்று மகிழ்ச்சியுடன் கேட்டான். "உண்மையில் மகா தைரியசாலி. அவரது புத்தகங்களை நீ படித்திருக்கிறாயா? ஓர் ஓநாய்மனிதன் என்னை ஒரு தொலைபேசி பூத்தில் வைத்து நெருக்கியிருந்தால், நான் பயத்திலேயே செத்துப் போயிருப்பேன். ஆனால் லாக்ஹார்ட் பதற்றப்படாமல் அந்த ஓநாய்மனிதனிடமிருந்து தப்பித்துவிட்டார் – பிரமாதம்!

"பிரபலமான ஈட்டன் பள்ளிதான் முதலில் என்னைத் தேர்ந்தெடுத்தது. ஆனால் இங்கு வந்தது குறித்து நான் எவ்வளவு தூரம் மகிழ்ச்சி அடைந்துள்ளேன் என்பதை என்னால் வார்த்தைகளால் விவரிக்க முடியாது. இங்கு வர நான் முடிவு செய்தது குறித்து என் அம்மாவுக்குக் கொஞ்சம் வருத்தம்தான். ஆனால் நான் என் அம்மாவை லாக்ஹார்ட்டின் புத்தகங்களைப் படிக்க வைத்தப் பிறகு, நன்றாகப் பயிற்றுவிக்கப்பட்ட ஒரு மந்திரவாதி எங்கள் குடும்பத்தில் இருப்பது எவ்வளவு உபயோகமாக இருக்கும் என்பது அவருக்கு புரியத் துவங்கியிருப்பதாக நான் நினைக்கிறேன் . . ."

தொடர்ந்து பேசுவதற்கு அதன் பிறகு அவர்களுக்கு அவ்வளவு வாய்ப்புக் கிடைக்கவில்லை. அவர்கள் தங்கள் காதுறைகளை மாட்டிக் கொண்டிருந்ததோடு, மன்ட்ரேக்குகள்மீது ஒருமித்தக் கவனம்

Scanned by CamScanner

செலுத்தவும் வேண்டியிருந்தது. பேராசிரியர் ஸ்புரவுட் அது மிக எளிதான ஒரு விஷயம் என்பதுபோலக் காட்டியிருந்தார். ஆனால் அது அப்படி இருக்கவில்லை. மன்ட்ரேக் செடிகள் நிலத்திலிருந்து வெளியே வருவதற்கு மட்டும் அடம் பிடிக்கவில்லை, மீண்டும் உள்ளே போவதற்கும் பாடாய்ப் படுத்தின. அவை முகம் சுளித்தன, உதைத்தன, கூராக இருந்த தமது குட்டிக் கைகளால் பிராண்டின, பற்களால் கடித்தன. ஓரளவு குண்டாக இருந்த ஒரு மன்ட்ரேக் செடியைத் தொட்டிக்குள் போடுவதற்கு ஹாரி சுமார் பத்து நிமிடங்கள் போராட வேண்டியிருந்தது.

அந்த வகுப்பு முடிவடைந்தபோது, அங்கிருந்த பிற மாணவர்களைப்போலவே ஹாரியும் தொப்பலாக நனைந்திருந்தான்; மண்ணால் அபிஷேகம் செய்யப்பட்டிருந்தான்; அவனுக்கு உடம்பெல்லாம் வலித்தது. கோட்டையை நோக்கி அவர்கள் சாவகாசமாக நடந்து சென்று, ஓர் அவசரக் குளியல் போட்டனர். பின்னர் கிரிஃபின்டார் அணியினர் அவசர அவசரமாக உருவ மாற்ற வகுப்பிற்குச் சென்றனர்.

பேராசிரியர் மெக்கானகல்லின் வகுப்புகள் எப்போதுமே சிரமமானவையாக இருந்து வந்தபோதிலும், குறிப்பாக இன்று மிகவும் கடினமாக இருந்தது. கடந்த வருடம் தான் கற்றிருந்த அனைத்தும் கோடை விடுமுறையின்போது தனது மூளையிலிருந்து ஒழுகி ஓடிவிட்டதுபோல ஹாரிக்குத் தோன்றியது. அவன் ஒரு வண்டை ஒரு பொத்தானாக மாற்ற வேண்டியிருந்தது. ஆனால் அந்த வண்டு அவனுடைய மந்திரக்கோலுக்கு அகப்படாமல் அவனது மேசைமீது அங்குமிங்கும் வேகமாக ஓடிக் கொண்டிருந்ததால், அவன் செய்ததெல்லாம், அந்த வண்டுக்குச் சிறந்த உடற்பயிற்சி அளித்தது மட்டுமே.

ரானின் பிரச்சனை அதைவிட மோசமாக இருந்தது. தான் இரவல் வாங்கிய ஸ்பெல்லோடேப்பைக் கொண்டு அவன் தன் மந்திரக்கோலை ஒட்டியிருந்தான். ஆனால் அது பழுது பார்க்கும் நிலையைத் தாண்டிவிட்டிருந்ததுபோலத் தோன்றியது. எதிர்பார்க்காத தருணங்களில் வெடிப்பதும் சீறுவதுமாக அது இருந்தது. அவன் தனது வண்டை உருவ மாற்றம் செய்ய முனைந்தபோதெல்லாம், அது அவனைச் சுற்றிக் கருப்பான, அடர்த்தியான, அழுகிய முட்டை நாற்றத்துடன்கூடிய ஒரு புகை மண்டலத்தை உருவாக்கியது. அப்புகை அவனது கண்களை மறைத்ததால், அவன் அவ்வப்போது அந்த வண்டைத் தன் முழங்கையால் நசுக்கிவிட்டுப் புதிதாக வேறு வண்டைக் கேட்டுக் கொண்டிருந்தான். பேராசிரியர் மெக்கானகல் அதை ரசிக்கவில்லை.

மதியச் சாப்பாட்டு மணி அடித்ததைக் கேட்டு ஹாரி நிம்மதியடைந்தான். அவனது மூளையானது அழுத்திப் பிழியப்பட்டிருந்த ஒரு ஸ்பாஞ்சைப்போல இருந்தது. ரானையும்

Scanned by CamScanner

ஹாரியையும் தவிர மற்றவர்கள் எல்லோரும் வகுப்பறையைவிட்டு வெளியேறியிருந்தனர். ரான் தன் மந்திரக்கோலைத் தன் மேசையின்மீது கோபத்துடன் தட்டிக் கொண்டிருந்தான்.

"உதவாக்கரை . . . உருப்படாதது . . ."

ரானின் மந்திரக்கோல் சரமாரியாகப் பேரொலியை எழுப்பிக் கொண்டிருந்தபோது, ஹாரி அவனிடம், "வேறு ஒரு மந்திரக்கோல் வேண்டும் என்று கேட்டு உன் வீட்டிற்குக் கடிதம் எழுது," என்று ஆலோசனை கூறினான்.

இப்போது சீற்றொலி எழுப்பிக் கொண்டிருந்த தனது மந்திரக்கோலைத் தன் பைக்குள் போட்டவாறே, ரான், "ஆமாம், ஆமாம்! ஒரு கடிதம் எழுதி அனுப்பி இன்னோர் அலறல் கடிதத்தைப் பரிசாகப் பெறுவதற்கா?" என்று கேட்டான். **"உன் மந்திரக்கோல் உடைந்ததற்கு முழுக்க முழுக்க நீதான் காரணம் . . ."**

அவர்கள் மதியச் சாப்பாட்டிற்குச் சென்றனர். அங்கு ஹெர்மயனி உருவ மாற்ற வகுப்பில் தான் உருவாக்கியிருந்த நேர்த்தியான கோட் பொத்தான்களை அவர்களிடம் காட்டியபோது, ரானின் மனநிலை இன்னும் மோசமானது.

பேச்சை மாற்றுவதற்காக ஹாரி அவசர அவசரமாக, "இன்று மதியம் நமக்கு என்ன வகுப்பு இருக்கிறது?" என்று கேட்டான்.

ஹெர்மயனி உடனடியாக, " தீய மந்திர சக்திகளுக்கு எதிரான பாதுகாப்பு," என்று கூறினாள்.

ரான் அவளது கால அட்டவணையை வெடுக்கென்று பிடுங்கி, "நீ ஏன் லாக்ஹார்ட்டின் வகுப்புகளைச் சுற்றி இதயங்களை வரைந்து வைத்துள்ளாய்," என்று கேட்டான்.

ஹெர்மயனி அதிகமாக வெட்கப்பட்டுக் கொண்டே அவனது கையிலிருந்து தனது அட்டவணையைப் பிடுங்கினாள்.

அவர்கள் சாப்பிட்டு முடித்தவுடன் மேகமூட்டத்துடன் காணப்பட்ட முற்றத்திற்குச் சென்றனர். ஹெர்மயனி அங்கிருந்த கற்படிக்கட்டில் உட்கார்ந்து கொண்டு மீண்டும் **'ரத்தக் காட்டேரியுடன் ஒரு கடற்பயணம்'** புத்தகத்திற்குள் மூழ்கிப் போனாள். ஹாரியும் ரானும் பல நிமிடங்கள் குவிடிச் விளையாட்டைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். அப்போது, தான் உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டுக் கொண்டிருந்தோம் என்ற உணர்வு ஹாரிக்குத் திடீரென்று எழுந்தது. அவன் நிமிர்ந்து பார்த்தபோது, கடந்த இரவில் வகை பிரிக்கும் தொப்பியை அணிய முயன்று கொண்டிருந்த, சிறிய உருவத்துடனும் மங்கலான பழுப்பு நிறத் தலைமுடியுடனும் இருந்த அதே சிறுவன் தன்னைக் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்ததைக் கண்டான். அச்சிறுவனின் கையில் மகுள்களின் சாதாரணமான கேமரா ஒன்று இருந்தது. ஹாரி அவனைப் பார்த்த அடுத்தக் கணமே அச்சிறுவனின் முகம் ரத்தச் சிவப்பாக ஆனது.

அச்சிறுவன் தயக்கத்துடன் ஓரடி முன்னால் எடுத்து வைத்து, "ஓ, ஹாரி, நான் – என் பெயர் காலின் கிரீவி," என்று மூச்சு வாங்கக்

Scanned by CamScanner

கூறினான். "நானும் கிரிஃபின்டார் அணியில்தான் இருக்கிறேன். நீ தப்பாக நினைக்கவில்லை என்றால், நான் உன்னை ஒரு புகைப்படம் எடுத்துக் கொள்ளலாமா?"

"என்னது, புகைப்படமா?" என்று ஹாரி உணர்ச்சியில்லாமல் கேட்டான்.

அச்சிறுவன் ஹாரியை நோக்கி மேலும் நகர்ந்தவாறே, "நான் உன்னைச் சந்தித்திருக்கிறேன் என்று நிரூபிப்பதற்காக," என்று ஆர்வத்துடன் கூறினான். "உன்னைப் பற்றிய சகல விஷயங்களும் எனக்குத் தெரியும். எல்லோருமே என்னிடம் கூறியிருக்கிறார்கள். 'பெயர் சொல்லப்படக்கூடாதவன்' உன்னைக் கொல்ல முயன்றபோது நீ எப்படித் தப்பினாய், அவன் எப்படி மாயமாய் மறைந்தான், உன் நெற்றியில் இன்னும் எப்படி மின்னல் கீற்று வடிவத் தழும்பு இருக்கிறது (அவனது கண்கள் ஹாரியின் நெற்றியில் மேய்ந்தன) போன்ற எல்லா விஷயங்களும் எனக்கு அத்துப்படி. என்னுடைய பொதுப் படுக்கையறையில் இருக்கும் ஒரு பையன், மாயத் திரவத்தைச் சரியான விகிதத்தில் கலந்து இப்புகைப்படத்தைக் கழுவினால் இதிலுள்ள உருவங்கள் உயிர்த்தெழும் என்று கூறினான்." காலின் கிரீவி உற்சாகப் பெருமூச்செறிந்து மேலும் தொடர்ந்தான். "இங்கு மிகவும் அற்புதமாக இருக்கிறது, இல்லையா? ஹாக்வார்ட்ஸிலிருந்து எனக்கு அழைப்பு வரும்வரை, வீட்டில் நான் செய்து கொண்டிருந்த வினோதமான விஷயங்கள் அனைத்தும் மந்திரஜாலங்கள் என்பதை ஒருபோதும் நான் அறியவில்லை. என் தந்தை ஒரு பால்காரர். அவராலும் அதை நம்பவே முடியவில்லை. அதனால் நான் வீட்டிற்கு அனுப்புவதற்காக ஏகப்பட்டப் புகைப்படங்களை எடுத்துத் தள்ளிக் கொண்டிருக்கிறேன். அதில் உன் படமும் இருந்தால் நன்றாக இருக்கும்." பின் அவன் ஹாரியைக் கெஞ்சுவதுபோலப் பார்த்துக் கொண்டு, "உன் நண்பன் இப்புகைப்படத்தை எடுத்தால் இன்னும் நன்றாக இருக்கும். அப்படிச் செய்தால் நானும் உன்னுடன் சேர்ந்து நிற்பதுபோலப் புகைப்படம் எடுத்துக் கொள்ளலாம். பிறகு எனக்கு அதில் நீ கையெழுத்திட்டுத் தரலாம்," என்று கூறினான்.

"கையெழுத்திட்டப் புகைப்படங்களா? ஹாரி, நீ புகைப்படங்களில் கையெழுத்திட்டுக் கொடுக்கப் போகிறாயா?"

பெரிதாகவும் மனத்தைப் புண்படுத்தும் விதமாகவும் சத்தமாக ஒலித்த மால்ஃபாயின் குரல் அந்த முற்றமெங்கும் எதிரொலித்தது. அவன் நேராகக் காலினுக்குப் பின்னால் வந்து நின்றான். ஹாக்வார்ட்ஸில் மால்ஃபாய் எங்கு சென்றாலும் அவனுடன் ஒட்டிக் கொண்ட இரண்டு பெரிய முரடர்களான கிராபும் காயலும் அவனது இரு பக்கங்களிலும் இருந்தனர்.

"எல்லோரும் வரிசையாக நில்லுங்கள். ஹாரி பாட்டர் தான் கையெழுத்திட்டப் புகைப்படங்களைக் கொடுக்கப் போகிறான்," என்று மால்ஃபாய் அங்கு கூடியிருந்தவர்களைப் பார்த்து இரைந்தான்.

Scanned by CamScanner

ஹாரி தன் கை முஷ்டியை மடக்கிக் கொண்டு, "நான் அப்படி எதையும் கொடுக்கப் போவதில்லை," என்று கோபத்துடன் கூறினான். "மால்ஃபாய், நீ வாயை மூடு!"

"உனக்குப் பொறாமை," என்று காலின் கீச்சுக் குரலில் கூறினான். அவனது மொத்த உடம்பும் கிராபின் கழுத்தின் தடிமன் அளவுதான் இருந்தது.

"பொறாமையா? எனக்கா?" என்று மால்ஃபாய் கேட்டான். முற்றத்தில் இருந்தவர்களில் பாதிப் பேர் அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்ததால், இப்போது அவன் கத்திப் பேச வேண்டிய தேவை இல்லாமல் போய்விட்டிருந்தது. "நான் எதற்காகப் பொறாமைப்பட வேண்டும்? எனக்கு ஒன்றும் என் நெற்றியில் ஓர் அசிங்கமான தழும்பு தேவையில்லை. என்னைப் பொறுத்தவரை, மண்டை பிளந்துவிட்ட ஒரே காரணத்தால் ஒருவன் பிரபலமாக ஆகிவிட முடியாது."

கிராபும் காயலும் அடங்கிய குரலில் முட்டாள்தனமாகச் சிரித்துக் கொண்டிருந்தனர்.

"மால்ஃபாய், போய் நத்தையை விழுங்கு," என்று ரான் கோபமாகக் கூறினான். கிராப் தன் சிரிப்பை நிறுத்திவிட்டு, அச்சுறுத்தும் விதத்தில் தன் உள்ளங்கைகளைத் தேய்க்கத் துவங்கினான்.

மால்ஃபாய் ரானை இகழ்ச்சியாகப் பார்த்தபடி, "ரான், ஜாக்கிரதை!" என்று கூறினான். "மேலும் பிரச்சனைகளை உருவாக்கிக் கொள்ள நீ விரும்ப மாட்டாய் என்று நான் நினைக்கிறேன். இல்லையெனில் உன் செல்ல அம்மா வந்து உன்னைப் பள்ளியிலிருந்து நிரந்தரமாகக் கூட்டிச் சென்றுவிடுவார்." பிறகு, உச்சஸ்தாயியில் ஒலித்த, துளைத்தெடுக்கும் ஒரு குரலில், "அடுத்த முறை இதுமாதிரி ஏதாவது நடந்ததோ . . ." என்று ரானின் அம்மாவைப்போல அவன் பேசி நடித்தான்.

இதைக் கேட்டு அங்கு கூடியிருந்த ஐந்தாவது வருட மாணவர்கள் பலமாகச் சிரித்தனர்.

"ஹாரி, ரானுக்கும் உன் கையெழுத்திட்ட ஒரு புகைப்படத்தைக் கொடு," என்று மால்ஃபாய் ஏளனமாகக் கூறினான். "அது அவனுடைய வீட்டின் மொத்த மதிப்பைவிட அதிகமாக இருக்கும்."

ஒட்டுப் போடப்பட்டிருந்த தன்னுடைய மந்திரக்கோலை ரான் கோபமாக உருவினான். ஆனால் அருகிலிருந்த ஹெர்மயனி தான் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை அறைந்து மூடிவிட்டு, "அங்கே பார்!" என்று கிசுகிசுத்தாள்.

"இங்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது? இங்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது?" என்று கேட்டவாறு, தனது நீலநிற அங்கி காற்றில் படபடக்க, கில்டராய் லாக்ஹார்ட், அவர்களை நோக்கி நடையை எட்டிப் போட்டு வந்து கொண்டிருந்தார். "கையெழுத்திட்டப் புகைப்படத்தை யார் கொடுக்கப் போகிறார்கள்?"

Scanned by CamScanner

ஹாரி பேச வாயைத் திறந்தான். அதற்குள் லாக்ஹார்ட் அவனது தோளைச் சுற்றித் தன் கையைப் போட்டுக் கொண்டு, களிப்பான குரலில், "என்னவொரு சந்தர்ப்பம்! ஹாரி, நாம் மீண்டும் சந்திக்கிறோம்!" என்று அவனிடம் கூறினார்.

லாக்ஹார்ட்டின் அரவணைப்பில் மாட்டிக் கொண்டு அவமானத்தால் கொதித்துக் கொண்டிருந்த ஹாரி, மால்ஃபாய் இகழ்ச்சிப் புன்முறுவலுடன் கூட்டத்தினரை நோக்கிச் சென்று கொண்டிருந்ததைக் கண்டான்.

லாக்ஹார்ட் காலினை நோக்கி அட்டகாசமாகப் புன்னகைத்துக் கொண்டே, "வா, காலின், இன்று உனக்கு இரட்டை அதிர்ஷ்டம். நாங்கள் இரண்டு பேருமே புகைப்படத்தில் கையெழுத்திட்டுத் தருகிறோம்," என்று கூறினார்.

காலின் தன் கேமராவுடன் தட்டுத் தடுமாறி அவர்களைப் படம் எடுத்து முடித்தபோது, மதிய வகுப்புகள் துவங்கவிருந்ததை அறிவித்துப் பள்ளி மணி அவர்களுக்குப் பின்னால் ஒலித்தது.

லாக்ஹார்ட் கூட்டத்தினரைப் பார்த்தபடி, "சரி, சரி, எல்லோரும் கிளம்புங்கள்!" என்று கூறிவிட்டு, ஹாரியோடு கோட்டையை நோக்கி நடந்தார். இன்னும் அவரது அன்புப் பிடியில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த ஹாரி, தான் மாயமாக மறைவதற்கு ஒரு நல்ல மந்திரம் தனக்குத் தெரிந்திருந்தால் நன்றாக இருக்கும் என்று எண்ணினான்.

அவர்கள் பக்கவாட்டுக் கதவு ஒன்றின் வழியாகக் கோட்டையினுள் நுழைந்து கொண்டிருந்தபோது, லாக்ஹார்ட், "நான் உனக்கு ஒரு நல்ல அறிவுரையைக் கூறுகிறேன், கேட்டுக் கொள்," என்று ஒரு தந்தையின் தொனியில் கூறினார். "நீ வெளியே காலினுடன் இருந்தபோது நான் உன்னைக் காப்பாற்றினேன். நீ என்னுடன் சேர்ந்து புகைப்படம் எடுத்துக் கொண்டால், உன் சகாக்கள், நீ விளம்பரத்திற்காக ஆலாய்ப் பறப்பதாக நினைக்க மாட்டார்கள் . . ."

ஹாரியின் முணுமுணுப்புகளைக் காதில் வாங்கிக் கொள்ளாமலேயே, ஒரு தாழ்வாரத்தில் வரிசையாக நின்று கொண்டு தங்களையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த மாணவர்களைக் கடந்து, மாடிப்படி வழியாக அவர் ஹாரியைத் தள்ளிக் கொண்டு சென்றார்.

"உன் வாழ்வின் இக்கட்டத்தில், கையெழுத்திட்டப் புகைப்படங்களை விளியோகிப்பது புத்திசாலித்தனமல்ல என்பதை நான் உனக்குக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஹாரி, அது உன்னைக் கொஞ்சம் தலைக்கனம் பிடித்தவனாகக் காட்டும். என் வாழ்வில் நடப்பதுபோல உன் வாழ்விலும் ஒரு கட்டம் வரும். அப்போது நீ எங்கு சென்றாலும், உன் கையெழுத்திடப்பட்டப் புகைப்படங்களைக் கற்றைக் கற்றையாக உன் கைவசம் வைத்திருப்பது நல்லது. ஆனால் –" அவர் மென்மையாகச் சிரித்தவாறே, "நீ அந்தக் கட்டத்தை அடைந்துவிட்டதாக எனக்குத் தோன்றவில்லை," என்று கூறினார்.

Scanned by CamScanner

அவர்கள் லாக்ஹார்ட்டின் வகுப்பறையை அடைந்துவிட்டிருந்தனர். அவர் ஒருவழியாக அவனை விடுவித்தார். ஹாரி தன் அங்கியை வெடுக்கென இழுத்துச் சரி செய்து கொண்டே வகுப்பினுள் நுழைந்து நேராகக் கடைசி வரிசையில் போய் அமர்ந்தான். அவன் அங்கு உட்கார்ந்து கொண்டதும், லாக்ஹார்ட்டை நேரில் பார்ப்பதைத் தவிர்ப்பதற்காக அவரது புத்தகங்கள் அனைத்தையும் வெளியே எடுத்துத் தன் முன்னால் குவித்து வைத்துக் கொண்டான்.

மற்ற மாணவர்கள் அரட்டையடித்தபடி வகுப்பினுள் நுழைந்தனர். ரானும் ஹெர்மயனியும் வந்து ஹாரியின் அருகில் ஆளுக்கொரு பக்கமாக அமர்ந்தனர்.

ரான் ஹாரியிடம், "உன் முகம் என்ன இப்படிக் குங்குமச் சிவப்பாய்ச் சிவந்து போயிருக்கிறது?" என்று கேட்டான். "காலினும் ஜின்னியும் ஒருவரை ஒருவர் சந்திக்காமல் இருக்க வேண்டும் என்று வேண்டிக் கொள். இல்லையெனில் அவர்கள் இருவரும் சேர்ந்து 'ஹாரி பாட்டர் ரசிகர் மன்றம்' ஒன்றைத் துவக்கிவிடுவர்."

"நீ கொஞ்சம் வாயை மூடிக் கொண்டிருக்கிறாயா?" என்று ஹாரி எரிந்து விழுந்தான். 'ஹாரி பாட்டர் ரசிகர் மன்றம்' என்ற வார்த்தை மட்டும் லாக்ஹார்ட்டின் காதுகளில் விழுந்துவிட்டால் தான் தொலைந்தோம் என்று அவன் நினைத்தான்.

எல்லா மாணவர்களும் அவரவர் இருக்கையில் வந்து அமர்ந்ததும் லாக்ஹார்ட் லேசாகச் செருமினார். மொத்த வகுப்பும் மௌனமானது. அவர் சிறிது முன்னால் குனிந்து நெவிலின் முன்னே இருந்த 'அரக்கப் பேயுடன் ஒரு பிரயாணம்' என்ற புத்தகப் பிரதியை எடுத்துத் தூக்கிக் காட்டினார். அதில் அவரது சொந்தப் படம் கண் சிமிட்டிக் கொண்டிருந்தது.

அவர் கண்ணடித்தவாறே அதைச் சுட்டிக்காட்டி, "இது நான்தான்!" என்று கூறினார். "கில்டராய் லாக்ஹார்ட், மூன்றாம் நிலை மெர்லின் பதக்கம், தீய மந்திர சக்திகள் பாதுகாப்புச் சங்கத்தில் கௌரவ உறுப்பினர், 'மந்திரவாதினி வாராந்திர'ப் பத்திரிகையில் தொடர்ந்து ஐந்து வாரங்களுக்குப் 'புன்னகை மன்னன்' பட்டம் – ஆனால் நான் அதைப் பற்றிப் பேசுவதில்லை. ஏனெனில், நான் 'பன்ஷி மோகினிப் பிசாசை' என் புன்னகையால் வீழ்த்தியிருக்கவில்லை."

அவர்கள் சிரிப்பதற்காக அவர் கொஞ்சம் நிறுத்தினார். ஒருசிலர் மட்டும் ஒரு பலவீனமான புன்னகையை வீசினர்.

"நீங்கள் எல்லோரும் என்னுடைய புத்தகங்கள் அனைத்தையும் வாங்கிவிட்டிருப்பதை நான் பார்க்கிறேன். நல்லது. நாம் இன்று ஒரு சிறு வினாடி–வினாவுடன் துவக்கலாம் என்று நினைக்கிறேன். பெரிதாகக் கவலைப்பட வேண்டாம். நீங்கள் எவ்வளவு தூரம் படித்திருக்கிறீர்கள், படித்தவற்றை எவ்வளவு தூரம் உள்வாங்கி

Scanned by CamScanner

இருக்கிறீர்கள் என்பதற்கான ஒரு சிறு சோதனை இது. அவ்வளவுதான்."

அவர் கேள்வித்தாள்களை விநியோகித்துவிட்டு, வகுப்பின் முன்வரிசைக்குச் சென்று, "நீங்கள் இக்கேள்விகளுக்கு விடையளிக்க முப்பது நிமிடங்களை எடுத்துக் கொள்ளலாம். உங்களுடைய நேரம் இப்போது துவங்குகிறது!" என்று அறிவித்தார்.

ஹாரி தன் கேள்வித்தாளைக் கையில் எடுத்துப் படித்தான்.

1. கில்டராய் லாக்ஹார்ட்டிற்குப் பிடித்த நிறம் எது?

2. கில்டராய் லாக்ஹார்ட்டின் ரகசிய லட்சியம் எது?

3. கில்டராய் லாக்ஹார்ட்டின் மிகச் சிறந்த சாதனை எது என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

இவை போன்ற கேள்விகள் மூன்று பக்கங்களுக்கு நீண்டன. கடைசியில் –

54. கில்டராய் லாக்ஹார்ட்டின் பிறந்தநாள் எப்போது? அவருக்குக் கொடுக்கக்கூடிய பொருத்தமான பரிசு எது?

அரைமணி நேரம் கழித்து அவர் அவர்களது விடைத்தாள்களைச் சேகரித்து, அவர்களுக்கு முன்னாலேயே அவற்றைப் புரட்டிப் பார்த்தார்.

"அடடா, எனக்குப் பிடித்தமான நிறம் இளம் ஊதா என்பதை நீங்கள் எவரும் நினைவில் வைத்திருக்கவில்லை. **'பனி அரக்கனுடன் ஒரு வருடம்'** என்ற புத்தகத்தில் அதை நான் குறிப்பிட்டுள்ளேன். உங்களில் சிலர் **'ஓநாய்மனிதனுடன் ஒரு யாத்திரை'** புத்தகத்தை இன்னும் கவனமாகப் படிக்க வேண்டும் – அப்புத்தகத்தின் பன்னிரண்டாவது அத்தியாயத்தில், மாயாஜால மக்களுக்கும் சாதாரண மக்களுக்கும் இடையே நிலவும் இணக்கம்தான் எனக்குப் பொருத்தமான பிறந்தநாள் பரிசாக இருக்க முடியும் என்று கூறியிருந்தேன் – ஆனால் ஒரு பெரிய 'ஆக்டென் ஓல்டு ஃபயர் விஸ்கி' பாட்டில் கொடுத்தால் நான் வேண்டாம் என்று சொல்ல மாட்டேன்!"

அவர் இன்னொரு முறை போக்கிரித்தனமாகக் கண்ணடித்தார். ரான் இப்போது அவரைத் திகைப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான். முன்னால் உட்கார்ந்திருந்த டீனும் சீமஸும் வாயைப் பொத்திக் கொண்டு குலுங்கக் குலுங்கச் சிரித்துக் கொண்டிருந்தனர். ஆனால் ஹெர்மயனியோ லாக்ஹார்ட் பேசுவதை மெய்மறந்து கேட்டுக் கொண்டிருந்தாள். அவர் அவளது பெயரைக் குறிப்பிட்டவுடன் அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

". . . ஆனால், தீய மந்திர சக்திகளை உலகிலிருந்து ஒழித்துக் கட்ட வேண்டும், விதவிதமான தலைமுடிச் சாய மாயத் திரவங்களை நானே சொந்தமாகத் தயாரித்து விற்பனை செய்ய வேண்டும் என்பது என் ரகசிய லட்சியம் என்பதை ஹெர்மயனி கிரேஞ்சர்

Scanned by CamScanner

அறிந்திருக்கிறாள். உண்மையில் –" அவர் அவளது விடைத்தாளைப் புரட்டிப் பார்த்துவிட்டு, "முழு மதிப்பெண்கள்! ஹெர்மயனி எங்கே இருக்கிறாள்?" என்று கேட்டார்.

ஹெர்மயனி நடுங்கிக் கொண்டிருந்த தன் கையைத் தூக்கினாள்.

லாக்ஹார்ட், "பிரமாதம்!" என்று கூறித் தன் மொத்தப் பற்களும் தெரியச் சிரித்தார். "உண்மையிலேயே பிரமாதம்! இதற்காக கிரிஃபின்டார் அணிக்குப் பத்துப் புள்ளிகள். இப்போது நாம் நமது பாடத்திற்கு வரலாம் . . ."

அவர் தனது மேசைக்குப் பின்னால் குனிந்து, முழுவதும் துணியால் மூடப்பட்டிருந்த பெரிய கூண்டு ஒன்றை எடுத்து மேசையின்மீது வைத்தார்.

"இப்போதே நன்றாகக் கேட்டுக் கொள்ளுங்கள் – நான் உங்களைச் சரியாக எச்சரிக்கவில்லை என்று பின்னால் நீங்கள் என்னைக் குறை கூறக்கூடாது. மந்திரவாதிகளின் உலகத்திலேயே மிகவும் பயங்கரமான உயிரினங்களைக் கையாள்வதற்கு உங்களைத் தயார்படுத்துவதுதான் என்னுடைய வேலை. நீங்கள் உங்கள் வாழ்நாளிலேயே இவ்வளவு தூரம் பயந்திருக்க மாட்டீர்கள். நான் இங்கிருக்கும்வரை உங்களுக்கு எந்த ஆபத்தும் ஏற்படாது என்பதை மனத்தில் இருத்திக் கொள்ளுங்கள். நான் உங்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், நீங்கள் அமைதி காக்க வேண்டும் என்பது மட்டும்தான்."

அந்தக் கூண்டைச் சரியாகப் பார்க்க வேண்டும் என்பதற்காக ஹாரி தன்னை அறியாமலேயே தன் புத்தக மூட்டையின்மேல் சாய்ந்து முன்னால் எட்டிப் பார்த்தான். லாக்ஹார்ட் தனது ஒரு கையை அக்கூண்டின்மீது வைத்தார். தாமஸும் சீமஸும் சிரிப்பதை நிறுத்திவிட்டிருந்தனர். முன்வரிசை இருக்கையில் இருந்த நெவில் பயத்தில் நடுங்கி ஒடுங்கி உட்கார்ந்திருந்தான்.

லாக்ஹார்ட் தன் குரலைத் தாழ்த்திக் கொண்டு, "நீங்கள் கூச்சலிடக்கூடாது என்று நான் உங்களை மீண்டும் கேட்டுக் கொள்கிறன்," என்று கூறினார். "இது உங்களை அப்படிச் செய்யத் தூண்டும்."

மொத்த வகுப்பும் மூச்சைப் பிடித்துக் கொண்டிருக்க, அக்கூண்டை மூடியிருந்த துணியை லாக்ஹார்ட் வெடுக்கென்று உருவினார்.

"உங்கள் முன்னால் இருப்பது புதிதாகப் பிடிக்கப்பட்டக் 'கார்னிஷ் பிக்ஸி'கள்," என்று அவர் சற்று மிகைப்படுத்தி அறிவித்தார்.

சீமஸால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. இகழ்ச்சித் தொக்கிக் கொண்டிருந்த சிரிப்பொன்றை அவன் உதிர்த்தான். அது பயத்தால் எழுந்த ஒன்றல்ல என்பதை லாக்ஹார்ட்டால் கண்டுகொள்ள முடிந்தது.

அவர் சீமஸை நோக்கிப் புன்னகைத்தபடி, "என்ன?" என்று கேட்டார்.

Scanned by CamScanner

"இல்லை. இவை – இவை – பார்ப்பதற்கு ஒன்றும் – அவ்வளவு அபாயகரமானவையாகத் தோன்றவில்லை, இல்லையா?" என்று அவன் திக்கித் திணறிக் கேட்டு முடித்தான்.

எரிச்சலூட்டும் விதத்தில் லாக்ஹார்ட் அவனை நோக்கித் தன் விரலை ஆட்டிக் கொண்டே, "அவசரமாக அப்படி ஒரு முடிவுக்கு வந்துவிடாதே," என்று கூறினார். "அவை வெறுக்கத்தக்க, தந்திரமான குட்டிப் பிசாசுகளாக இருக்கக்கூடும்."

அந்தப் பிக்ஸிகள் பிரகாசமான நீல வண்ணத்தில் இருந்தன. சுமார் எட்டு அங்குல உயரம் இருந்த அவற்றின் முகங்கள் கூராக இருந்தன. 'கிறீச்' என்றிருந்த அவற்றின் குரல் ஏராளமான குட்டிக் கிளிகள் தமக்குள் விவாதித்துக் கொள்வதைக் கேட்பதுபோல இருந்தது. அந்தக் கூண்டை மூடியிருந்த திரை விலக்கப்பட்டதும் அவை ராக்கெட்டுகள்போலக் கூண்டுக்குள் அங்குமிங்கும் பறந்தன, அலறின, கூண்டுக் கம்பிகளைப் பிடித்துக் குலுக்கின, தமக்கு அருகே இருந்தவர்களை நோக்கித் தமது முகங்களை அஷ்டகோணலாக்கின.

"சரி, இவற்றைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று இப்போது பார்ப்போம்!" என்று லாக்ஹார்ட் சத்தமாகக் கூறினார். பிறகு கூண்டின் கதவை அவர் திறந்துவிட்டார்.

அங்கு பெரும் அமளி துமளி ஏற்பட்டது. பிக்ஸிகள் ராக்கெட்டுகள்போல எல்லாத் திசைகளிலும் பாய்ந்தன. அவற்றில் இரண்டு நெவிலின் காதுகளைப் பிடித்து அவனை அலாக்காகத் தூக்கின. பல பிக்ஸிகள் கண்ணாடி சன்னல்கள் வழியாகப் பாய்ந்து வெளியேறியதில் பின் வரிசை முழுவதும் உடைந்த கண்ணாடிகள் சிதறின. மீதியிருந்த பிக்ஸிகள், வகுப்பில் ஒரு காண்டாமிருகம் புகுந்து அட்டகாசம் செய்தால் எவ்வளவு சேதம் விளையுமோ அதைவிட அதிகமான சேதத்தை விளைவித்தன. அவை பேனா மை பாட்டில்களைப் பிடுங்கி வகுப்பறை முழுவதும் தெளித்தன. புத்தகங்களையும் காகிதங்களையும் கிழித்தன. சுவரில் இருந்த படங்களைப் பிய்த்து எறிந்தன. குப்பைக்கூடைகளைக் கொட்டிக் கவிழ்த்தன. புத்தகங்களையும் பைகளையும் பிடுங்கி, உடைந்திருந்த சன்னல்கள் வழியாக வீசி எறிந்தன. ஒருசில நிமிடங்களுக்குள் பாதி மாணவர்கள் பெஞ்சுகளுக்கு அடியில் அடைக்கலம் புகுந்திருந்தனர். வகுப்பின் கூரையில் தொங்கவிடப்பட்டிருந்த சரவிளக்கில் நெவில் தொங்கிக் கொண்டிருந்தான்.

"வாருங்கள், வாருங்கள், அவற்றைப் பிடியுங்கள்! அவை வெறும் பிக்ஸிகள்தான் . . ." என்று லாக்ஹார்ட் கத்திக் கொண்டிருந்தார்.

அவர் தன் சட்டைக் கைகளை மடக்கிவிட்டுக் கொண்டு, தன் மந்திரக்கோலை வெளியே எடுத்து, 'பெஸ்கிபிக்ஸி பெஸ்டர்நோமி!' என்று முழங்கினார்.

அதனால் எந்தப் பயனும் விளையவில்லை. ஒரு பிக்ஸி அவரது மந்திரக்கோலைப் பிடுங்கி சன்னல் வழியாக வெளியே எறிந்தது.

Scanned by CamScanner

லாக்ஹார்ட் எச்சிலை விழுங்கியவாறு மேசைக்கடியில் பாய்ந்தார். அடுத்தக் கணம், கூரையில் தொங்கிக் கொண்டிருந்த சரவிளக்கு அறுந்து அவரது மேசைமேல் வந்து விழுந்தது. அதோடு சேர்ந்து விழுந்த நெவிலிடமிருந்து மயிரிழையில் அவர் தப்பினார்.

பள்ளி மணி ஒலித்தது. வெளிவாசல் கதவை நோக்கி எல்லோரும் அலறிப் புடைத்துக் கொண்டு ஓடினர். அதைத் தொடர்ந்து நிலவிய அமைதியில், லாக்ஹார்ட் தன்னைச் சுதாரித்துக் கொண்டு எழுந்து நின்றபோது, ஹாரி, ரான், ஹெர்மயனி ஆகிய மூவரும் கிட்டத்தட்ட வாசல் கதவை அடைந்திருந்ததைக் கண்டார். அவர் அவர்களைப் பார்த்து, "நீங்கள் மூவரும் மீதியிருக்கும் பிக்ஸிகளைக் கூண்டில் அடைத்துவிடுங்கள்!" என்று கூறிவிட்டு, அவர்களைக் கடந்து வேகமாகச் சென்றுவிட்டார். தான் வெளியேறியபோது வகுப்பின் வாசற்கதவைத் தன் பின்னால் சாத்திவிட்டுச் சென்றார்.

மீதியிருந்த பிக்ஸிகளில் ஒன்று ரானின் காதைப் பலமாகக் கடித்தபோது, அவன், "அவர் என்ன இப்படிச் சொல்லிவிட்டுப் போகிறார்?" என்று இரைந்தான்.

"நமக்கு நேரடி அனுபவம் கிடைக்க வேண்டும் என்று அவர் விரும்பியிருக்கலாம்," என்று ஹெர்மயனி கூறினாள். அவள் புத்திசாலித்தனமான 'உறைய வைக்கும் மந்திரத்தை' உபயோகித்து ஒரே சமயத்தில் இரண்டு பிக்ஸிகளைச் செயலிழக்கச் செய்து அவற்றைக் கூண்டிற்குள் அடைத்தாள்.

தன் கையில் அகப்படாமல் தன் நாக்கை வெளியே துருத்திக் கொண்டிருந்த ஒரு பிக்ஸியைத் துரத்திக் கொண்டே, ஹாரி, **"நேரடி அனுபவமா?"** என்று கேட்டான். "ஹெர்மயனி, தான் என்ன செய்து கொண்டிருந்தோம் என்பது அவருக்குத் துளிகூடத் தெரியவில்லை."

ஹெர்மயனி, "உளறாதே!" என்று கூறினாள். "அவரது புத்தகங்களை நீ படித்திருக்கிறாய் அல்லவா? அவர் செய்துள்ள அபாரமான காரியங்களைப் பார் . . ."

"அவை அனைத்தும், தான் செய்துள்ளதாக அவர் கூறிக் கொள்ளும் காரியங்களே!" என்று ரான் கூறினான்.

Scanned by CamScanner

அத்தியாயம் ஏழு

ஈன ரத்தப் பரம்பரை

அடுத்த சில நாட்களாக, தாழ்வாரங்களில் லாக்ஹார்ட் தனக்கு எதிரே வந்து கொண்டிருந்ததைத் தான் கண்டபோதெல்லாம், ஹாரி, அவரது பார்வையில் படாமல் தப்பிக்க நிறைய நேரத்தைச் செலவழித்தான். ஆனால் காலினை அவனால் தவிர்க்க முடியவில்லை. காலின் ஹாரியின் வகுப்பு அட்டவணையை மனப்பாடம் செய்து வைத்திருந்ததுபோலத் தோன்றியது. ஒவ்வொரு நாளும் ஏழெட்டு முறையாவது அவன் ஹாரியைப் பார்த்து, "ஹலோ ஹாரி," என்று கூறிவிட்டு, பதிலுக்கு ஹாரி, "ஹலோ, காலின்," என்று கூறுவதைக் கேட்பதைவிடப் பெரிய குதூகலம் அவனுக்கு வேறு எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை – ஹாரியின் குரல் எவ்வளவு சுரத்தின்றி ஒலித்தபோதிலும்கூட!

பெரும் அசம்பாவிதத்தில் முடிந்த கார் பயணம் குறித்து ஹாரியின்மீது ஹெட்விக்கிற்கு இருந்த கோபம் இன்னும் தணிந்திருக்கவில்லை. ரானின் மந்திரக்கோல் இன்னும் தகராறு பண்ணிக் கொண்டிருந்தது. அதன் உச்சகட்டமாக, வெள்ளிக்கிழமையன்று நடைபெற்ற வசிய வகுப்பின்போது, அவனது மந்திரக்கோல் அவனது கையைவிட்டு எகிறி, சிறிய உருவத்தைக் கொண்டிருந்த, வயதான பேராசிரியரான ஃபிளிட்விக்கின் புருவ மத்தியில் போய் நேராகத் தாக்கியது. அது தாக்கிய இடத்தில், அவருக்குப் பச்சை நிறத்தில் ஒரு பெரிய புடைப்பு ஏற்பட்டது. இப்படி ஒன்று மாற்றி ஒன்றாக நடந்து கொண்டிருந்ததால், வார இறுதி விரைவாக வந்தது குறித்து ஹாரி சந்தோஷமடைந்தான். அவனும் ரானும் ஹெர்மயனியும் சனிக்கிழமை காலையில் ஹாக்ரிட்டைச் சந்திக்கத் திட்டமிட்டிருந்தனர். ஆனால் அன்று காலையில் ஹாரி எழுந்து கொள்ள விரும்பிய நேரத்திற்குப் பல மணிநேரத்திற்கு முன்பாகவே, கிரிஃபின்டார் குவிடிச் அணித் தலைவனான ஆலிவர் உட் அவனை உலுக்கி எழுப்பினான்.

"என்ன விஷயம்?" என்று ஹாரி தூக்கக் கலக்கத்துடன் கேட்டான்.

"குவிடிச் பயிற்சி," என்று உட் கூறினான். "எழுந்து வா!"

Scanned by CamScanner

ஹாரி பாதிக் கண்களைத் திறந்து சன்னல் வழியாக வெளியே பார்த்தான். பொன்னிற வானத்தை மூடுபனி போர்த்தியிருந்தது. இப்போது அவனுக்கு நன்றாக விழிப்பு வந்திருந்தது. பறவைகள் போட்டுக் கொண்டிருந்த பலத்தக் கூச்சல்களுக்கு இடையே தான் எப்படி இப்படித் தூங்கிக் கொண்டிருந்தோம் என்று அவன் வியந்தான்.

"உட், இன்னும் விடியவே இல்லை," என்று ஹாரி கூறினான்.

"நீ கூறுவது சரிதான்," என்று உட் தெரிவித்தான். உயரமாகவும் வாட்டசாட்டமாகவும் இருந்த ஆறாவது வருட மாணவனான அவனது கண்கள் அளப்பரிய ஆர்வத்தால் ஜொலித்துக் கொண்டிருந்தன. "நம்முடைய புதிய பயிற்சித் திட்டத்தின் ஓர் அங்கம் இது. உன் மந்திரத் துடப்பத்தை எடுத்துக் கொள், கிளம்பலாம். மற்ற அணிகள் எதுவும் இன்னும் பயிற்சியைத் துவக்கியிருக்கவில்லை. இவ்வருடம் நாம்தான் முதலில் பயிற்சியைத் துவக்கப் போகிறோம்."

குளிரில் லேசாக நடுங்கிக் கொண்டும் கொட்டாவி விட்டுக் கொண்டும் ஹாரி தன் படுக்கையிலிருந்து இறங்கித் தன் குவிடிச் அங்கியைத் தேடத் துவங்கினான்.

"ஹாரி, இன்னும் பதினைந்து நிமிடங்களில் விளையாட்டு மைதானத்தில் நான் உன்னைச் சந்திக்கிறேன்," என்று உட் கூறினான்.

ஹாரி தன்னுடைய ரத்தச் சிவப்பு அங்கியைத் தேடி எடுத்து அணிந்து கொண்டு, தான் செல்லவிருந்த இடத்தை விவரித்து ரானுக்கு ஒரு குறிப்பு எழுதி வைத்துவிட்டு, தனது நிம்பஸ் 2000 மந்திரத் துடப்பம் தோளில் தொங்க, சுழல் படிக்கட்டுகள் வழியாக இறங்கிப் பொது அறைக்கு விரைந்தான். அவன் அந்த ஓவியத் துவாரத்தை நெருங்கிக் கொண்டிருந்தபோது பின்னால் ஒரு சலசலப்புச் சத்தம் கேட்டது. தன் கழுத்தில் கேமராவைத் தொங்கப் போட்டுக் கொண்டு காலின் சுழல் படிக்கட்டில் இருந்து வேகமாக ஓடி வந்து கொண்டிருந்தான். தனது கையில் அவன் எதையோ இறுகப் பற்றியிருந்தான்.

"யாரோ உன்னுடைய பெயரைச் சொல்லிக் கூப்பிட்டதை நான் கேட்டேன். ஹாரி, என் கையில் என்ன இருக்கிறது என்று பார்! நான் இதை உன்னிடம் காட்ட விரும்புகிறேன் –"

காலின் தன் மூக்கிற்கு அருகே ஆட்டிக் கொண்டிருந்த புகைப்படத்தை ஹாரி திகைப்புடன் பார்த்தான்.

அந்தக் கருப்பு–வெள்ளைப் புகைப்படத்தில், லாக்ஹார்ட் ஏதோ ஒரு கையைப் பிடித்துக் கொண்டு அங்குமிங்கும் நகர்ந்து கொண்டிருந்தார். அது தன்னுடைய கைதான் என்பதை ஹாரி எளிதாகக் கண்டுகொண்டான். புகைப்படத்தில் இருந்த ஹாரி, பிறரது பார்வைக்கு வராமல் இருக்கத் தனது முழு பலத்தையும் பிரயோகித்துக் கொண்டிருந்ததை நிஜத்தில் இருந்த ஹாரி வெகுவாக ரசித்தான். அவன் பார்த்துக் கொண்டிருந்தபோதே, லாக்ஹார்ட் தன்

Scanned by CamScanner

முயற்சியைக் கைவிட்டுவிட்டு, மூச்சு வாங்க, சோர்ந்து போய்ப் புகைப்படத்தின் ஓரத்தில் சரிந்தார்.

"இதில் நீ கையெழுத்துப் போடுகிறாயா?" என்று காலின் ஆர்வத்துடன் கேட்டான்.

அந்த அறையில் வேறு யாரும் இல்லை என்பதை உறுதி செய்து கொண்டு, "முடியாது," என்று ஹாரி தீர்மானமாகக் கூறினான். "காலின், என்னை மன்னித்துக் கொள். நான் அவசரத்தில் இருக்கிறேன். நான் குவிடிச் பயிற்சிக்குப் போய்க் கொண்டிருக்கிறேன்."

ஹாரி அந்த ஓவியத் துவாரத்தின் வழியாக ஏறினான்.

"என்ன சொன்னாய்? குவிடிச் பயிற்சிக்கா? ஆகா! நான் இதுவரை குவிடிச் விளையாட்டைப் பார்த்ததே கிடையாது. ஒரு நிமிடம் பொறு. நானும் வருகிறேன்."

காலின் தட்டுத் தடுமாறி ஹாரியைப் பின்தொடர்ந்து அத்துவாரத்தின் வழியாக வெளியே வந்தான்.

"இதுவொன்றும் அவ்வளவு சுவாரசியமாக இருக்காது." என்று ஹாரி அவசர அவசரமாகக் கூறினான். ஆனால் காலின் அதைக் காதில் வாங்கிக் கொள்ளவே இல்லை. அவனது முகம் உற்சாகமான எதிர்பார்ப்பால் ஜொலித்துக் கொண்டிருந்தது.

காலின் அவனுடன் துள்ளல் நடை போட்டு வந்து கொண்டே, "ஹாரி, கடந்த நூறு வருடங்களில், இந்த விளையாட்டில் கலந்து கொண்ட வீரர்களிலேயே நீதான் மிகவும் வயது குறைந்தவனா? அப்படியானால் நீ இந்த விளையாட்டில் மிகச் சிறந்தவனாக இருக்க வேண்டும். நான் இதுவரை பறந்ததே இல்லை. அது சுலபமானதா? இது என்ன? உன்னுடைய மந்திரத் துடப்பமா? இதுதான் இருப்பதிலேயே சிறந்ததா?" என்று அடுக்கடுக்காகப் பல கேள்விகளை அள்ளி வீசினான்.

அவனிடமிருந்து எப்படித் தப்பிப்பது என்று ஹாரிக்குத் தெரியவில்லை. தொடர்ந்து தொணதொணத்துக் கொண்டே வந்த ஒரு நிழல்போல அவன் இருந்தான்.

காலின் கீரீவி மூச்சு வாங்கிக் கொண்டே, "எனக்குக் குவிடிச் விளையாட்டுப் புரிபடவே இல்லை," என்று கூறினான். "இதில் நான்கு பந்துகள் உண்டு என்பது உண்மைதானா? அவற்றில் இரண்டு பந்துகள் பறந்து சென்று விளையாட்டு வீரர்களைத் தாக்குமாமே!"

"ஆமாம்," என்று கூறிய ஹாரி, கடைசியில் வேறு வழியின்றி, குவிடிச் விளையாட்டின் சிக்கலான விதிகளைப் பற்றி விவரிக்கத் துவங்கினான். "அவற்றின் பெயர் பிளட்ஜர்கள். ஒவ்வோர் அணியிலும் இரண்டு 'அடிப்பவர்கள்' உண்டு. பிளட்ஜர்கள் தங்கள் அணிப் பக்கம் வராமல் பார்த்துக் கொள்வதற்காகத் தங்கள் கைகளில் இருக்கும் மட்டைகளைக் கொண்டு அவர்கள் அவற்றை அடிப்பர். ஃபிரெட்டும் ஜார்ஜும் கிரிஃபின்டார் அணியில் உள்ள 'அடிப்பவர்கள்.'"

Scanned by CamScanner

காலின் திறந்த வாய் மூடாமல் ஹாரி கூறியதைக் கேட்டுக் கொண்டும் அவனையே பார்த்துக் கொண்டும் வந்ததால், ஒருசில படிகளில் தடுமாறிக் கொண்டே, "மீதிப் பந்துகள் எதற்காக?" என்று கேட்டான்.

"இருப்பதிலேயே பெரிய பந்தான சிவப்புப் பந்தின் பெயர் குவாஃபில். அதைக் கொண்டுதான் கோல் போட வேண்டும். ஒவ்வோர் அணியிலும் மூன்று 'துரத்துபவர்கள்' இருப்பர். அவர்கள் தங்களுக்கிடையே குவாஃபிலை எறிந்து கொண்டே போய், மைதானத்தின் முனையில் இருக்கும் மூன்று வளையங்களில் ஏதாவது ஒன்றில் அதைப் போட வேண்டும் –"

"அந்த நான்காவது பந்து?"

"அதன் பெயர் தங்க ஸ்னிச்," என்று ஹாரி கூறினான். "அது மிகவும் சிறியது. அது வேகமாகப் பறக்கும். அதைப் பிடிப்பது மிகவும் சிரமம். ஆனால் 'தேடுபவர்கள்' அதற்காகத்தான் இருக்கிறார்கள். ஏனெனில் அதைப் பிடிக்காதவரை குவிடிச் விளையாட்டு முடிவடையாது. எந்த அணியின் தேடுபவன் அதைப் பிடிக்கிறானோ, அந்த அணிக்குக் கூடுதலாக நூற்றைம்பது புள்ளிகள் கிடைக்கும்."

காலின் பிரமிப்புடன், "நீதான் கிரிஃபின்டார் அணியின் தேடுபவன், அப்படித்தானே?" என்று கேட்டான்.

கோட்டையைவிட்டு வெளியே வந்து, பனி மூடியிருந்த புல்தரையின் ஊடாக அவர்கள் நடந்து கொண்டிருந்தபோது, "ஆமாம்," என்று ஹாரி கூறினான். "அப்புறம், 'பிடிப்பவன்' என்று ஒருவன் உண்டு. அவன் கோல்போஸ்ட்டுகளைப் பாதுகாப்பான். இந்த விளையாட்டு மொத்தத்தில் அவ்வளவுதான்."

ஆனால் அந்தச் சரிவான புல்தரையிலிருந்து அவர்கள் குவிடிச் மைதானத்தை அடையும்வரை காலின் தன் கேள்விக் கணைகளை நிறுத்தவே இல்லை. உடை மாற்றும் அறையருகே வந்தபோதுதான் ஹாரியால் அவனிடமிருந்து கழன்று கொள்ள முடிந்தது. அவன் ஹாரியிடம், "ஹாரி, நான் போய் ஒரு நல்ல இடமாகப் பார்த்து உட்கார்ந்து கொள்கிறேன்," என்று ஹாரிக்குப் பின்னால் சங்கீதக் குரலில் கூறிவிட்டுப் பார்வையாளர்கள் ஸ்டான்டை நோக்கி வேகமாக நடையைக் கட்டினான்.

மற்ற ஆட்டக்காரர்கள் உடை மாற்றும் அறைக்கு ஏற்கனவே வந்துவிட்டிருந்தனர். உட் மட்டும்தான் நன்றாகத் தூக்கம் கலைந்தவன்போலத் தெரிந்தான். ஃபிரெட்டும் ஜார்ஜும் உப்பிய கண்களும் பரட்டைத் தலையுமாக அங்கு உட்கார்ந்திருந்தனர். அவர்களை அடுத்திருந்த நான்காவது வருட மாணவியான அலிசியா ஸ்பின்னெட், தனக்குப் பின்னால் இருந்த சுவரில் சாய்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். அவளுக்கு எதிரே அடுத்தடுத்து உட்கார்ந்திருந்த அவளுடைய சக துரத்துபவர்களான கேட்டி பெல்லும் ஏஞ்சலினா ஜான்சனும் கொட்டாவி விட்டுக் கொண்டிருந்தனர்.

Scanned by CamScanner

"ஹாரி, ஒருவழியாக வந்துவிட்டாயா? ஏன் இவ்வளவு நேரம்?" என்று உட் சுறுசுறுப்பாகக் கேட்டான். "நாம் மைதானத்திற்குள் நுழைவதற்கு முன்பாக நான் உங்கள் அனைவரிடமும் கொஞ்சம் பேச வேண்டியிருக்கிறது. ஏனெனில் நான் இந்தக் கோடை விடுமுறை மொத்தத்தையும் செலவழித்து ஒரு புதிய பயிற்சித் திட்டத்தைத் தயாரித்துள்ளேன். இது நமது வெற்றி வாய்ப்பைக் கணிசமாக உயர்த்தும் என்று நான் உண்மையிலேயே நம்புகிறேன் . . ."

உட்டின் கையில் குவிடிச் மைதானத்தின் பெரிய வரைபடம் ஒன்று இருந்தது. அதில் பல வண்ணங்களில் கோடுகள், அம்புக்குறிகள், கூட்டல் குறிகள் ஆகியவை இடம்பெற்றிருந்தன. அவன் தன் மந்திரக்கோலை எடுத்து அந்த வரைபடத்தின்மீது தட்டினான். உடனே அந்த அம்புக்குறிகள் அந்த வரைபடத்தின்மீது கம்பளிப் பூச்சிகள்போல ஊரத் துவங்கின. உட் தனது புதிய உத்திகளை விவரித்துக் கொண்டிருந்தபோது, ஃபிரெட்டின் தலை அலிசியாவின் தோளில் சாய்ந்தது. அவன் குறட்டைவிடத் துவங்கினான்.

முதல் வரைபடத்தை விவரிக்க உட்டிற்கு இருபது நிமிடங்கள் ஆனது. அதற்கு அடியில் இன்னொரு வரைபடமும், அதற்குக் கீழே மூன்றாவது வரைபடமும் இருந்தன. உட் தன் பேச்சை வளர்த்துக் கொண்டே போனபோது ஹாரி கிறங்கத் துவங்கினான்.

"அப்படியானால்," என்று உட் ஒருவழியாக முடித்தபோது, ஹாரி திடுக்கிட்டு விழித்தான். அவன் அப்போது கோட்டையில் காலை உணவிற்கு என்ன பரிமாறிக் கொண்டிருப்பார்கள் என்று கற்பனை செய்து கொண்டிருந்தான். "எல்லோருக்கும் எல்லாம் புரிந்ததா? ஏதாவது கேள்விகள் உள்ளனவா?"

திடுக்கிட்டு விழித்த ஜார்ஜ், "உட், எனக்கு ஒரு சந்தேகம்," என்றான். "நேற்று நாங்கள் எல்லோரும் நன்றாக விழித்துக் கொண்டிருந்தபோது இதை ஏன் நீ எங்களிடம் கூறவில்லை?"

உட் அதை ரசிக்கவில்லை.

உட் அவர்களை நோக்கிக் கோபத்துடன், "எல்லோரும் இதைக் கேட்டுக் கொள்ளுங்கள்," என்று ஆரம்பித்தான். "குவிடிச் கோப்பையை நாம் கடந்த வருடம் வென்றிருக்க வேண்டும். நாம்தான் இருப்பதிலேயே சிறந்த அணியாக இருந்தோம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக, நம்முடைய கட்டுப்பாட்டில் இல்லாத சில சந்தர்ப்பச் சூழ்நிலைகளால் –"

ஹாரி குற்ற உணர்வுடன் தன் இருக்கையில் நெளிந்தான். கடந்த வருடத்தின் இறுதிப் போட்டியின்போது அவன் மருத்துவமனையில் நினைவில்லாமல் படுத்திருந்தான். அதனால் ஏழு பேருடன் விளையாட வேண்டிய ஒரு விளையாட்டை அவர்கள் ஆறு பேருடன் விளையாட நேர்ந்தது. அதற்கு முன்பு முந்நூறு வருடங்களில் ஏற்பட்டிராத தோல்வியை அவர்களது அணி தழுவ நேர்ந்தது.

Scanned by CamScanner

தன்னைச் சுதாரித்துக் கொள்ள உட்டிற்கு ஒரு நிமிடத்திற்கும் மேல் ஆனது. அந்தத் தோல்வி அவனை இன்னும் வாட்டிக் கொண்டிருந்ததுபோலும்.

"அதனால் இவ்வருடம், முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு நாம் அதிகக் கடுமையாகப் பயிற்சி செய்ய வேண்டும் . . . சரி, இப்போது நாம் மைதானத்திற்குள் நுழைந்து, நாம் வகுத்துள்ள புதிய உத்திகளைச் செயல்படுத்தலாம்!" என்று உட் முழங்கினான். பின் அவன் தன்னுடைய மந்திரத் துடப்பத்தை எடுத்துக் கொண்டு அவர்களை வழிநடத்தி, உடை மாற்றும் அறையிலிருந்து வெளியே வந்தான். கொட்டாவி விட்டுக் கொண்டும் மரத்துப் போயிருந்த கால்களுடனும் அவனது குழு அவனைப் பின்தொடர்ந்தது.

உடை மாற்றும் அறையில் அவர்கள் வெகுநேரம் இருந்துவிட்டிருந்ததால் சூரியன் இப்போது முழுவதுமாக உதயமாகியிருந்தது. ஆனாலும் பனியின் மிச்சசொச்சங்கள் விளையாட்டரங்கின் புல்தரையின்மீது மேலோட்டமாகப் பரவியிருந்தன. ஹாரி மைதானத்திற்குள் நுழைந்தபோது, பார்வையாளர்கள் ஸ்டான்டில் ரானும் ஹெர்மயனியும் அமர்ந்திருந்ததைப் பார்த்தான்.

"அட! இவ்வளவு சீக்கிரம் முடித்துவிட்டீர்களே, பரவாயில்லை!" என்று ரான் கிண்டல் செய்தான்.

"உண்மையில் நாங்கள் இன்னும் துவக்கவேயில்லை," என்று கூறிய ஹாரி, ரானும் ஹெர்யமனியும் பேரரங்கில் இருந்து எடுத்து வந்திருந்த ரொட்டியையும் வெண்ணெயையும் பொறாமையுடன் பார்த்தான். "உட் எங்களுக்குப் புதிய உத்திகளைச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தான்."

அவன் தன் மந்திரத் துடப்பத்தில் ஏறி, நிலத்தை உதைத்து வானில் பறக்கத் துவங்கினான். குளிராக இருந்த காலைக் காற்று அவனது முகத்தின்மீது சாட்டையெனத் தாக்கியது. உட்டின் நீண்ட சொற்பொழிவைவிடத் திறமையாக அது அவனை விழிக்க வைத்தது. தான் மீண்டும் குவிடிச் மைதானத்தில் இருந்தது குறித்து ஹாரி சந்தோஷமாக உணர்ந்தான். அவன் ஃபிரெட்டையும் ஜார்ஜையும் துரத்திக் கொண்டு படுவேகமாக அந்த விளையாட்டரங்கைச் சுற்றி வந்தான்.

அவர்கள் ஒரு முனையில் திரும்பிக் கொண்டிருந்தபோது, "வினோதமான, சொடுக்குப் போடுவது போன்ற ஒரு சத்தம் தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருக்கிறது. அது என்னவாக இருக்கும்?" என்று ஃபிரெட் கேட்டான்.

ஹாரி பார்வையாளர்கள் ஸ்டான்டை உற்றுப் பார்த்தான். அங்கு இருந்ததிலேயே உயரமான இருக்கை ஒன்றில் காலின் அமர்ந்து கொண்டு, புகைப்படம் மேல் புகைப்படமாக எடுத்துத் தள்ளிக் கொண்டிருந்தான். ஆளரவமற்று இருந்த விளையாட்டரங்கு,

Scanned by CamScanner

கேமராவின் 'கிளிக்' ஒலியைப் பல மடங்காகப் பெருக்கி எதிரொலித்துக் கொண்டிருந்தது.

"இங்கே பார், ஹாரி, என்னைப் பார்!" என்று கீச்சுக் குரலில் அவன் கத்திக் கொண்டிருந்தான்.

"அது யார்?" என்று ஃபிரெட் கேட்டான்.

"எனக்குத் தெரியாது," என்று ஹாரி பொய் சொன்னான். பிறகு உடனடியாக, காலினிடம் இருந்து எவ்வளவு தூரம் தள்ளிச் செல்ல முடியுமோ அவ்வளவு தூரம் அவன் வேகமாகச் சென்றான்.

அவர்களை நோக்கி வேகமாக வழுக்கிக் கொண்டு வந்த உட், சிடுசிடுப்புடன், "இங்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது?" என்று கேட்டான். "அந்த முதல் வருட மாணவன் ஏன் புகைப்படங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறான்? எனக்கு அது கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை. நம்முடைய புதிய உத்திகளையும் அசைவுகளையும் தெரிந்து கொள்வதற்காக ஸ்லிதரின் அணி அனுப்பிய உளவாளியாக அவன் இருக்கலாம்."

"அவன் கிரிஃபின்டார் அணியில் இருக்கிறான்," என்று ஹாரி அவசர அவசரமாகக் கூறினான்.

"உட், ஸ்லிதரின் அணியினருக்கு உளவாளிகள் தேவையில்லை," என்று ஜார்ஜ் கூறினான்.

பொறுமையிழந்த உட், "நீ எதனால் அப்படிக் கூறுகிறாய்?" என்று கேட்டான்.

கீழே கை காட்டிக் கொண்டே, "ஏனெனில் அவர்கள் இங்கு நேரிலேயே வந்திருக்கின்றனர்," என்று ஜார்ஜ் கூறினான்.

பச்சை நிற அங்கிகளுடனும், கையில் மந்திரத் துடப்பங்களுடனும் பலர் மைதானத்திற்குள் வந்து கொண்டிருந்தனர்.

"இதை என்னால் நம்பவே முடியவில்லை," என்று உட் கோபத்தில் கொதித்தான். "நான் இந்த மைதானத்தை நமக்காக இன்று பதிவு செய்து வைத்துள்ளேன்! இது என்னவென்று பார்த்துவிடலாம்."

உட் படுவேகமாகக் கீழ் நோக்கிப் பறந்தான். தனக்கு ஏற்பட்டக் கோபத்தில் அவன் தான் நினைத்திருந்ததைவிட அதிக வேகமாகத் தரையிறங்கியதால் தன் மந்திரத் துடப்பத்திலிருந்து கொஞ்சம் தள்ளாடியபடியே இறங்கினான். ஹாரி, ஃபிரெட், ஜார்ஜ் ஆகிய மூவரும் அவனைத் தொடர்ந்து தரையிறங்கினர்.

ஸ்லிதரின் அணித் தலைவனை நோக்கி, உட், "மார்க்கஸ்!" என்று தன் அடித் தொண்டையில் கத்தினான். "இது எங்களுடைய பயிற்சி நேரம். இதற்காகவே நாங்கள் இங்கு வந்திருக்கிறோம். நீ இந்த இடத்தைக் காலி செய்!"

மார்க்கஸ், உட்டைவிட உருவத்தில் மிகப் பெரியவனாக இருந்தான். அவன் பதிலளித்தபோது, அவனது முகத்தில் அரக்கத்தனமான குள்ளநரித்தனம் தாண்டவமாடியது. "உட், இங்கு நம் எல்லோருக்கும் போதுமான இடம் இருக்கிறது."

Scanned by CamScanner

ஏஞ்சலினா, அலிசியா, கேட்டி ஆகியோரும் கீழிறங்கி வந்தனர். ஸ்லிதரின் அணியில் மாணவிகளே கிடையாது. அந்த அணியினர் இவர்கள் மூவரின் அருகே நெருங்கி வந்து அவர்களை ஓரக்கண்ணால் பார்த்தனர்.

"நான் இந்த மைதானத்தை எங்கள் அணிக்காக முன்பே பதிவு செய்து வைத்தேன்!" என்று உட் கோபத்தில் வெடித்துக் கொண்டிருந்தான்.

"ஆனால், பேராசிரியர் ஸ்னேப் தன் கைப்பட எழுதிக் கொடுத்தக் குறிப்பு என்னிடம் உள்ளது," என்று மார்க்கஸ் கூறினான். **"பேராசிரியர் ஸ்னேப்பாகிய நான், இன்று ஸ்லிதரின் அணியினர் குவிடிச் மைதானத்தில் விளையாடுவதற்குச் சிறப்பு அனுமதி அளிக்கிறேன். அவர்கள் ஒரு புதிய 'தேடுபவ'னுக்குப் பயிற்சி அளிக்க வேண்டியிருக்கிறது."**

"என்ன, உங்களுக்கு ஒரு புதிய தேடுபவன் கிடைத்திருக்கிறானா?" என்று உட் கேட்டான். "அவன் எங்கே இருக்கிறான்?"

அங்கு நின்று கொண்டிருந்த ஆறு பெரிய உருவங்களுக்குப் பின்னாலிருந்து சிறிய உருவத்துடன் இருந்த ஏழாமவன் முன்னே வந்தான். வெளுத்துப் போயிருந்த அவனது முகத்தில் இகழ்ச்சிப் புன்னகை நடனமாடிக் கொண்டிருந்தது. அது டிராகோ மால்ஃபாய்!

ஃபிரெட், மால்ஃபாயை வெறுப்புடன் பார்த்துக் கொண்டே, "நீ லூசியஸ் மால்ஃபாயின் பையன்தானே?" என்று கேட்டான்.

"நீ மால்ஃபாயின் அப்பாவைப் பற்றிப் பேசுவது வேடிக்கையாக இருக்கிறது," என்று மார்க்கஸ் கூறினான். அவனது ஒட்டுமொத்தக் குழுவினரும் இன்னும் பெரிதாகப் புன்னகைத்தனர். "அவர் ஸ்லிதரின் அணிக்கு அளித்துள்ள தாராளமான நன்கொடையை நான் உனக்குக் காட்டுகிறேன்."

அந்த ஏழு பேரும் தங்களுடைய மந்திரத் துடப்பங்களைத் தங்கள் முன்னால் நீட்டினர். பளபளவென்றிருந்த, புத்தம் புதிய ஏழு மந்திரத் துடப்பங்கள், நிம்பஸ் 2001 என்ற பொன்னெழுத்துக்களுடன் கிரிஃபின்டார் அணியினரின் முகத்திற்கு நேரே சூரிய ஒளியில் ஜொலித்துக் கொண்டிருந்தன.

மார்க்கஸ் தன்னுடைய மந்திரத் துடப்பத்தில் ஒட்டியிருந்த ஒரு சிறு தூசியைத் தட்டிவிட்டபடி, "இது மிகச் சமீபத்திய வடிவமைப்பு. போன மாதம்தான் இது விற்பனைக்கு வந்தது," என்று அலட்சியமாகக் கூறினான். ஃபிரெட் மற்றும் ஜார்ஜின் கைகளில் இருந்த 'கிளீன்ஸ்வீப்ஸ்' மந்திரத் துடப்பங்களை ஏளனமாகப் பார்த்தபடி, "இந்தப் புதிய வடிவமைப்பு இதற்கு முந்தைய வடிவமைப்பான நிம்பஸ் 2000ஐவிடப் பல மடங்கு மேலானது. மிகப் பழைய வடிவமைப்பான 'கிளீன்ஸ்வீப்ஸ்' இதன் தூசுக்குச் சமானம்," என்று கூறி இகழ்ச்சிப் புன்னகை ஒன்றை அவன் உதிர்த்தான்.

Scanned by CamScanner

இதற்கு என்ன பதிலளிப்பது என்று கிரிஃபின்டார் அணியிலிருந்த எவருக்கும் ஒரு கணம் எதுவும் தெரியவில்லை. மால்ஃபாயின் ஏளனப் புன்னகை அகலமாக விரிந்ததில் அவனது உணர்ச்சியற்றக் கண்கள் சுருங்கி ஒரு சிறு கீற்றுப்போலக் காட்சியளித்தன.

"அங்கே பாருங்கள்!" என்று மார்க்கஸ் கூறினான். "மைதானத்திற்குள் படையெடுப்பு."

இரு அணியினருக்கும் இடையே என்ன நடந்து கொண்டிருந்தது என்று பார்ப்பதற்காக ரானும் ஹெர்மயனியும் புல்வெளியின் குறுக்காக நடந்து வந்து கொண்டிருந்தனர்.

"என்ன நடந்து கொண்டிருக்கிறது?" என்று ரான் ஹாரியிடம் கேட்டான். "நீங்கள் ஏன் விளையாடவில்லை?" பின் அவன் ஸ்லிதரின் அணியின் குவிடிச் சீருடையில் இருந்த மால்ஃபாயை அளந்து கொண்டே, "ஆமாம், இவன் இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறான்?" என்று கேட்டான்.

"ரான், நான் ஸ்லிதரின் அணியின் புதிய தேடுபவன்," என்று மால்ஃபாய் அற்பத்தனமான பெருமிதத்துடன் கூறினான். "இங்குள்ள ஒவ்வொருவரும் என் அப்பா எங்கள் அணிக்காக வாங்கிக் கொடுத்துள்ள மந்திரத் துடப்பங்களை ரசித்துக் கொண்டிருக்கின்றனர்."

ரான் தன் முன்னால் இருந்த ஏழு அற்புதமான மந்திரத் துடப்பங்களைப் பார்த்துத் திறந்த வாய் மூடாமல் நின்றான்.

"இவை மிக அருமையாக இருக்கின்றன, இல்லையா?" என்று மால்ஃபாய் தேனொழுகக் கேட்டான். "ஒருவேளை கிரிஃபின்டார் அணியும் கொஞ்சம் பணத்தை ஏற்பாடு செய்து புதிய மந்திரத் துடப்பங்களை வாங்கிக் கொள்ளுமோ? இந்த 'கிளீன்ஸ்வீப் ஃபைவ்ஸை' ஏலம் விட்டால் ஏதாவது ஓர் அருங்காட்சியகம் அவற்றை வாங்கிக் கொள்ளக்கூடும்."

இதைக் கேட்டு ஸ்லிதரின் அணி கொக்கரித்தது.

"ஆனால் கிரிஃபின்டார் அணியில் இருப்பவர்கள் எவருக்கும் தங்கள் இடத்தைக் காசு கொடுத்து வாங்க வேண்டிய தேவை இருக்கவில்லை," என்று ஹெர்மயனி சரியான பதிலடி கொடுத்தாள். "அவர்கள் அனைவரும் தங்கள் திறமையின் அடிப்படையில் அணியில் இடம்பெற்றுள்ளனர்."

மால்ஃபாயின் முகத்தில் ஈயாடவில்லை.

"**கழிசடையான ஈன ரத்தமே**, இங்கு யாரும் உன் அபிப்பிராயத்திற்காக அலைந்து கொண்டிருக்கவில்லை," என்று மால்ஃபாய் வெறுப்பை உமிழ்ந்தான்.

மிகமிக மட்டமான ஒன்றை மால்ஃபாய் கூறிவிட்டிருந்தான் என்பதை ஹாரி அடுத்தக் கணமே புரிந்து கொண்டான். ஏனெனில் அந்த வார்த்தைகள் அவனது வாயிலிருந்து வெளிவந்தவுடன் உடனடியாகப் பெரும் ஆர்ப்பரிப்பு அங்கு எழுந்தது. மால்ஃபாயின்மீது

Scanned by CamScanner

பாய்ந்த ஃபிரெட்டையும் ஜார்ஜையும் தடுக்க மார்க்கஸ் மால்ஃபாயின் முன் பாய வேண்டியிருந்தது. **"என்ன தைரியம் உனக்கு!"** என்று அலிசியா கூப்பாடு போட்டாள். ரான் தன் அங்கிக்குள் கையைவிட்டுத் தன் மந்திரக்கோலை வெளியே எடுத்து, அதை மார்க்கஸின் கைகளின் ஊடாக மால்ஃபாயை நோக்கி நீட்டி, "மால்ஃபாய், நீ கண்டிப்பாக இதன் விளைவைச் சந்தித்தாக வேண்டும்," என்று கோபமாகக் கூச்சலிட்டான்.

ஒரு பெரும் சத்தம் அந்த விளையாட்டரங்கு முழுவதும் எதிரொலித்தது. ரானின் மந்திரக்கோலின் தவறான முனையிலிருந்து பச்சை நிற ஒளிக்கற்றை ஒன்று பாய்ந்து வந்து, ரானின் வயிற்றைப் பலமாகத் தாக்கியது. அவன் பின்னால் எகிறிப் புல்லின்மீது போய் விழுந்தான்.

"ரான்! ரான்! உனக்கு ஒன்றும் ஆகவில்லையே!" என்று ஹெர்மயனி கீச்சிட்டாள்.

ரான் பேசுவதற்காக வாயைத் திறந்தான். ஆனால் அவன் வாயிலிருந்து சத்தம் ஏதும் வரவில்லை. அதற்குப் பதிலாக, படுபயங்கர ஏப்பம் ஒன்று வந்தது. கொழகொழவென்றிருந்த, கூடில்லா நத்தைகள் பல அவன் வாயிலிருந்து ஒழுகி வெளியே வந்து அவன் மடியில் விழுந்தன.

ஸ்லிதரின் அணியினரால் சிரிப்பை அடக்கவே முடியவில்லை. மார்க்கஸ் தான் கீழே விழுந்துவிடாமல் இருக்கத் தன்னுடைய புதிய மந்திரத் துடப்பத்தைப் பிடித்துக் கொண்டான். மால்ஃபாய் வெறித்தனமாகச் சிரித்தபடியே தரையில் உட்கார்ந்து கொண்டு தன் முஷ்டியால் மண்ணைக் குத்திக் கொண்டிருந்தான். கிரிஃபின்டார் அணியினர் ரானைச் சுற்றிக் குழுமினர். ரான் மேலும் பெரிய கூடில்லா நத்தைகளை வாந்தி எடுத்துக் கொண்டிருந்தான். யாரும் அவனைத் தொட விரும்பியதுபோலத் தெரியவில்லை.

"நாம் அவனை உடனடியாக ஹாக்ரிட்டிடம் அழைத்துச் செல்லலாம். அவருடைய குடில்தான் பக்கத்தில் இருக்கிறது," என்று ஹாரி கூறினான். ஹெர்மயனியும் தைரியத்துடன் தலையை அசைத்தாள். அவர்கள் இருவரும் ரானின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு சென்றனர்.

அவர்கள் மைதானத்தைவிட்டு வெளியேறிக் கொண்டிருந்தபோது, காலின் தான் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து இறங்கி ஓடி வந்து அவர்கள் முன்னே நாட்டியமாடிக் கொண்டிருந்தான். "ஹாரி, என்னவாயிற்று? என்னவாயிற்று, ஹாரி? அவனுக்கு உடம்பு சரியில்லையா? அவனை உன்னால் குணப்படுத்த முடியும், இல்லையா?" என்று அவன் மீண்டும் கேள்வி மேல் கேள்விகளாகக் கேட்டான். அப்போது ரான் ஒரு பெரிய ஏப்பம் விட்டான். மேலும் பல நத்தைகள் வெளியே வந்து விழுந்தன.

Scanned by CamScanner

அதனால் கவரப்பட்டக் காலின் "உய்!" என்று கத்தினான். பின் தன் கேமராவைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு, "ஹாரி, உன்னால் அவனை ஒரு நிமிடம் அசையாமல் பிடித்துக் கொள்ள முடியுமா?" என்று கேட்டான்.

ஹாரி கோபமாக, "வழியை விடு, காலின்," என்று கத்தினான். ஹாரியும் ஹெர்மயனியும் ரானைக் கைத்தாங்கலாகப் பிடித்துக் கொண்டு, விளையாட்டரங்கில் இருந்து வெளியேறி, மைதானத்தைக் கடந்து, காட்டின் எல்லையருகே இருந்த ஹாக்ரிட்டின் குடிலுக்கு கூட்டிச் சென்றனர்.

கோட்டைப் பாதுகாவலரின் குடில் கண்களுக்குத் தென்பட்டதும், ஹெர்மயனி, "ரான், இதோ வந்துவிட்டது," என்று கூறினாள். "கொஞ்சம் பொறுத்துக் கொள். உடனே சரி செய்துவிடலாம்."

அவர்கள் ஹாக்ரிட்டின் குடிலிலிருந்து இருபதடி தூரத்தில் இருந்தபோது, அக்குடிலின் கதவு திறந்தது. ஆனால் வெளியே வந்தது ஹாக்ரிட் அல்ல. வெளிறிய ஊதா நிற அங்கி ஒன்றை அணிந்திருந்த கில்டராய் லாக்ஹார்ட்தான் அதிலிருந்து வெளியே வந்தார்.

அருகிலிருந்த ஒரு புதருக்குள் ரானை இழுத்தவாறே, "ஹெர்மயனி, சீக்கிரம் இங்கே வா!" என்று ஹாரி கிசுகிசுத்தான். ஓரளவு தயக்கத்துடன் ஹெர்மயனியும் அவனைப் பின்தொடர்ந்தாள்.

"நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரியும்பட்சத்தில் இது மிகவும் சுலபமான ஒன்று," என்று லாக்ஹார்ட் ஹாக்ரிட்டிடம் சத்தமாகக் கூறிக் கொண்டிருந்தார். "உங்களுக்கு உதவி தேவை என்றால், நான் எங்கிருப்பேன் என்று உங்களுக்குத் தெரியும்தானே! நான் என்னுடைய புத்தகத்தின் ஒரு பிரதியை உங்களுக்குத் தருகிறேன் – உங்களிடம் அது ஏற்கனவே இல்லை என்பது எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது. நான் என் புத்தகத்தில் கையெழுத்திட்டு அதை உங்களுக்கு அனுப்பி வைக்கிறேன். பிறகு சந்திக்கலாம்!" என்று கூறிவிட்டுக் கோட்டையை நோக்கி அவர் வேகமாக நடந்தார்.

லாக்ஹார்ட் பார்வையில் இருந்து மறையும்வரை காத்திருந்துவிட்டு, ஹாரி ரானை அப்புதரிலிருந்து வெளியே இழுத்து, ஹாக்ரிட்டின் குடிலின் அருகே கூட்டிச் சென்றான். அவர்கள் அவசர அவசரமாக அதன் கதவைத் தட்டினர்.

ஹாக்ரிட் உடனடியாக வாசலுக்கு வந்தார். எரிச்சலுடன் காணப்பட்ட அவரது முகம், வந்திருந்தது யார் என்று தெரிந்ததும் பிரகாசமடைந்தது.

"நீங்கள் எப்போது என்னைப் பார்க்கப் வரப் போகிறீர்கள் என்று நான் யோசித்துக் கொண்டிருந்தேன். உள்ளே வாருங்கள்! உள்ளே வாருங்கள்! பேராசிரியர் லாக்ஹார்ட்தான் மீண்டும் வந்துவிட்டாரோ என்று நான் நினைத்தேன்."

Scanned by CamScanner

ஹாரியும் ஹெர்மயனியும் ரானைக் கைத்தாங்கலாக வாசற்படி வழியாக அந்த ஒற்றை அறைக் குடிலுக்குள் அழைத்துச் சென்றனர். அதன் ஒருபுறத்தில் மிகப் பெரிய படுக்கை ஒன்று இருந்தது. மறுபுறம் கணப்படுப்பில் நெருப்பு ஆனந்தமாக எரிந்து கொண்டிருந்தது. ரானை அங்கிருந்த நாற்காலியில் சாய்த்துக் கொண்டே, ஹாரி, நடந்தவற்றை அவசர அவசரமாக ஹாக்ரிட்டிடம் எடுத்துரைத்தான். ஆனால் ஹாக்ரிட் அந்த கூடில்லா நத்தைப் பிரச்சனை குறித்துச் சிறிதும் கலவரம் அடையவில்லை.

"அவை உள்ளே இருப்பதைவிட வெளியே இருப்பது நல்லது," என்று கூறிக் கொண்டே, ஒரு பெரிய செப்புச் சட்டியைத் தூக்கி ரானின் முன்னால் அவர் போட்டார். "ரான், எல்லாவற்றையும் வெளியே கொண்டு வந்துவிடு!"

ரான் அந்தச் சட்டியை நோக்கிக் குனிந்ததைப் பார்த்துக் கொண்டே, ஹெர்மயனி, "அதுவாகவே நிற்கும்வரை நாம் எதுவும் செய்வதற்கில்லை என்று நான் நினைக்கிறேன்," என்று கவலையுடன் கூறினாள். "நல்ல நாளிலேயே அந்த மந்திரத்தை வேலை செய்ய வைப்பது சிரமம். அதுவும், உடைந்து போன மந்திரக்கோலை வைத்துக் கொண்டு . . ."

ஹாக்ரிட் தடபுடலாக அவர்களுக்குத் தேநீர் தயாரித்துக் கொண்டிருந்தார். அவரது நாயான ஃபேங், ஹாரியின்மீது கோழை வடித்துக் கொண்டிருந்தது.

ஹாரி ஃபேங்கின் காதுகளைச் சொறிந்துவிட்டுக் கொண்டே, "ஹாக்ரிட், லாக்ஹார்ட்டுக்கு உங்களிடம் இருந்து என்ன வேண்டுமாம்?" என்று கேட்டான்.

"கிணற்றில் இருந்து கெல்ப்பிக்களை எவ்வாறு வெளியே எடுப்பது என்று அவர் எனக்கு அறிவுரை கூறிக் கொண்டிருந்தார்," என்று ஹாக்ரிட் உறுமினார். பாதி உரிக்கப்பட்டிருந்த சேவற்கோழியைத் தன் மேசையிலிருந்து அப்புறப்படுத்திவிட்டு, அவர் அந்த மேசையைத் துடைத்தார். பின் தேநீர்க் கெண்டியை அதன்மீது வைத்தார். "அது என்னவோ எனக்குத் தெரியாத ஒன்று என்பதுபோல அவர் பேசினார். தான் வெற்றி கொண்டிருந்த பன்ஷி மோகினிப் பிசாசைப் பற்றி அளந்து கொண்டிருந்தார். அவர் கூறியிருந்ததில் ஒரு வார்த்தை உண்மையாக இருந்தால்கூட நான் இந்தக் கெண்டியை அப்படியே தின்றுவிடுகிறேன்."

ஒரு ஹாக்வார்ட்ஸ் பேராசிரியரை ஹாக்ரிட் திட்டி ஹாரி பார்த்ததில்லை. அதனால் அவன் அவரை ஆச்சரியமாகப் பார்த்தான். ஆனால் ஹெர்மயனி வழக்கத்திற்கு மாறாகத் தனது குரலை உயர்த்திக் கொண்டு, "நீங்கள் நியாயமாக நடந்து கொள்வதாக எனக்குப் படவில்லை. பேராசிரியர் டம்பிள்டோர் இவ்வேலைக்கு இவர்தான் மிகவும் பொருத்தமானவர் என்று –" என்று துவக்கினாள்.

ஹாக்ரிட் வெல்ல மிட்டாய்த் தட்டு ஒன்றை அவர்களிடம் நீட்டிக் கொண்டே "அவர் ஒருவர்தான் இந்த வேலைக்கு

Scanned by CamScanner

விண்ணப்பித்திருந்தார்," என்று கூறினார். ரான் வயிற்றைப் புரட்டி அந்தச் சட்டிக்குள் இருமினான். "நான் என்ன கூறுகிறேன் என்றால், அவர் ஒரே ஒருவர் மட்டும்தான் இந்த வேலைக்கு விண்ணப்பித்திருந்தார். தீய மந்திர சக்திகளுக்கு எதிரான பாதுகாப்பு வேலைக்கு ஆள் கிடைப்பது குதிரைக் கொம்பாக இருக்கிறது. அந்த வேலை குறித்து மக்கள் அவ்வளவு ஆர்வம் காட்டுவதில்லை. வந்தவர்களும் சொல்லிக் கொள்ளும்படியான காலம் நிலைத்து இருந்ததும் இல்லை," என்று ஹாக்ரிட் தெரிவித்தார். அவர் ரானை நோக்கித் தன் தலையை ஆட்டியவாறே, "ஆமாம், அவன் யார்மீது சாபம்விட முயன்றான்?" என்று கேட்டார்.

"ஹெர்மயனியை மால்ஃபாய் ஏதோ ஒரு பெயர் சொல்லி அழைத்தான். அது உண்மையிலேயே மிகமிக மோசமான ஒரு வார்த்தையாக இருந்திருக்க வேண்டும். எல்லோருமே பெருங்கோபம் கொண்டனர்," என்று ஹாரி கூறினான்.

வெளிறிப் போயும் வியர்த்துப் போயும் இருந்த ரான் அந்த மேசையிலிருந்து தன் தலையைத் தூக்கி, "ஆமாம், அது மிகமிக மோசமான வார்த்தைதான்!" என்று கரகரப்பான குரலில் கூறினான். "ஹாக்ரிட், மால்ஃபாய் அவளை 'ஈன ரத்தம்' என்றழைத்தான் –"

அடுத்தச் சுற்று நத்தைகள் அலையெனத் தலைதூக்கியதும் அவன் மீண்டும் தன் தலையைக் கவிழ்த்துக் கொண்டான். ஹாக்ரிட் ருத்ர தாண்டவம் ஆடினார்.

"அவன் அந்த வார்த்தையை உபயோகித்திருக்க மாட்டான்!" என்று ஹாக்ரிட் உறுமினார்.

"இல்லை, அவன் அப்படித்தான் கூறினான்," என்று ஹெர்மயனி தெரிவித்தாள். "ஆனால் அதற்கு என்ன அர்த்தம் என்று எனக்குத் தெரியாது. அது மிகவும் அநாகரீகமான ஒன்றாக இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன் . . ."

மீண்டும் நிமிர்ந்த ரான், "இருப்பதிலேயே மிகவும் மட்டமான, அவமதிப்பான வார்த்தை அது," என்று மூச்சு வாங்கக் கூறினான். "மகுள்களுக்குப் பிறந்த ஒருவரைப் பற்றிக் கூறும் வசைச் சொல் அது. மால்ஃபாயின் குடும்பத்தைப் போன்ற ஒருசில மந்திரவாதிக் குடும்பங்கள், தாங்கள் மற்ற எல்லோரையும்விட உயர்ந்தவர்கள் என்று தங்களைக் கருதிக் கொள்கின்றனர். ஏனெனில் தாங்கள் தூய ரத்தப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்று அவர்களுக்கு நினைப்பு." ரான் ஒரு சிறு ஏப்பம் விட்டான். ஒரே ஒரு நத்தை மட்டும் துள்ளி, நீட்டிக் கொண்டிருந்த அவனது கையில் வந்து விழுந்தது. அவன் அதை அந்தச் சட்டியில் தூக்கி எறிந்துவிட்டுத் தொடர்ந்தான். "அது எந்த வித்தியாசத்தையும் ஏற்படுத்துவதில்லை என்பது மற்ற எல்லோருக்கும் தெரியும். நெவில் லாங்பாட்டத்தை எடுத்துக் கொள்வோம். அவன் தூய ரத்தப் பரம்பரையைச் சேர்ந்தவன்தான். ஆனால் அவனால் ஒரு கொப்பரையை நேராக நிமிர்த்தி வைக்கக்கூட முடியாது."

Scanned by CamScanner

"நம் ஹெர்மயனியால் பயன்படுத்த முடியாத ஒரு மந்திரத்தை அவர்கள் இன்னும் கண்டுபிடிக்கவில்லை," என்று ஹாக்ரிட் பெருமையாகக் கூறினார். ஹெர்மயனியின் முகம் அந்திச் சூரியனாய்ச் சிவந்தது.

ரான், நடுங்கிக் கொண்டிருந்த தன் கையால் வியர்வை வழிந்து கொண்டிருந்த தன் புருவங்களைத் துடைத்தபடி, "ஒருவரை ஈன ரத்தம் என்று அழைப்பது மகா கேவலம். அது பைத்தியக்காரத்தனம். எப்படிப் பார்த்தாலும், இன்றுள்ள பெரும்பாலான மந்திரவாதிகள் அரை ரத்தப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள்தான். நாம் மகுள்களோடு திருமண பந்தம் ஏற்படுத்திக் கொள்ளாமல் இருந்திருந்தால், என்றோ நமது இனம் அழிந்திருக்கும்," என்றான்.

அவன் ஏப்பம் விட்டுவிட்டு மீண்டும் அச்சட்டியை நோக்கிக் குனிந்தான்.

மேலும் அதிகமான நத்தைகள் அந்தச் சட்டிக்குள் விழுந்து கொண்டிருந்த சத்தத்தையும் மீறி, ஹாக்ரிட், "ரான், நீ அவனுக்குச் சாபமிட முயன்றது குறித்து நான் உன்னைக் குற்றம் சொல்ல மாட்டேன்," என்று கூறினார். "உன் மந்திரக்கோல் பின்னால் வெடித்ததும் நல்லதுக்குத்தான். நீ மட்டும் மால்ஃபாய்க்குச் சாபம் இட்டிருந்தாயோ, லூசியஸ் மால்ஃபாய் மடையன் நேராக இங்கு புறப்பட்டு வந்திருப்பான். நல்லவேளை நீ பிரச்சனையில் மாட்டிக் கொள்ளவில்லை."

ஹாரி ஏதோ சொல்ல வாயெடுத்தான். ஆனால் ஹாக்ரிட்டின் மிட்டாய்கள் அவனது தாடைகளை ஒன்றோடொன்று ஒட்டிக் கொள்ளச் செய்திருந்ததால் அவனால் பேச முடியவில்லை.

ஹாக்ரிட் திடீரென்று ஏதோ ஒன்று நினைவுக்கு வந்தவராக, "ஹாரி, உன்னிடம் சண்டை போடலாம் என்று இருக்கிறேன். ஊருக்கெல்லாம் உன் கையெழுத்திட்டப் புகைப்படங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறாயாமே! என்னை மட்டும் மறந்துவிட்டாய்," என்று கூறினார்.

கோபத்தில் ஹாரி கொதித்தெழுந்ததில், ஒட்டிக் கொண்டிருந்த அவனது பற்கள் விடுதலை அடைந்தன.

"நான் ஒன்றும் என் கையெழுத்திட்டப் புகைப்படங்களை வினியோகித்துக் கொண்டு திரியவில்லை," என்று ஹாரி வெடித்தான். "லாக்ஹார்ட் என்னைப் பற்றி அப்படிக் கூறிக் கொண்டு திரிந்து கொண்டிருந்தார் என்றால் –"

ஹாக்ரிட் சிரித்துக் கொண்டிருந்ததை அப்போதுதான் ஹாரி பார்த்தான்.

"நான் விளையாட்டுக்காக அப்படிக் கூறினேன்," என்று கூறிய ஹாக்ரிட், ஹாரியின் முதுகில் மென்மையாகத் தட்டினார். அவன் மேசைமேல் மூக்கடிக்க விழுந்தான். "நீ அப்படிப் பண்ணவில்லை என்று எனக்குத் தெரியும். உனக்கு அது தேவையில்லை என்று

Scanned by CamScanner

லாக்ஹார்ட்டிடம் நான் கூறினேன். நீ மெனக்கெடாமலேயே அவரைவிடப் பிரபலமாகத்தான் இருக்கிறாய்."

ஹாரி நிமிர்ந்து உட்கார்ந்து தன் முகவாயைத் தடவிக் கொண்டே, "ஆனால் அவருக்கு அது பிடிக்கவில்லை," என்று கூறினான்.

"அவருக்குப் பிடித்திருந்தது என்று நானும் நம்பவில்லை," என்று ஹாக்ரிட் தன் கண்கள் மினுமினுக்கக் கூறினார். "பின் நான் அவரிடம் அவரது புத்தகங்கள் ஒன்றைக்கூடப் படித்ததில்லை என்று கூறினேன். உடனே அவர் இங்கிருந்து கிளம்பிவிட்டார்." ரான் தன் தலையை மீண்டும் நிமிர்த்தியதும் ஹாக்ரிட் அவனிடம், " ரான், உனக்கு மிட்டாய்கள் வேண்டுமா?" என்று கேட்டார்.

"நன்றி! ஆனால் வேண்டாம்," என்று அவன் பலவீனமான குரலில் கூறினான். "நான் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருப்பது நல்லது."

ஹாரியும் ஹெர்மயனியும் தங்களது தேநீரைக் குடித்து முடிந்ததும், "வாருங்கள்! நான் தோட்டத்தில் என்ன வளர்த்துக் கொண்டிருக்கிறேன் என்று உங்களுக்குக் காட்டுகிறேன்!" என்று ஹாக்ரிட் கூறினார்.

அவரது குடிலுக்குப் பின்னால் இருந்த ஒரு சிறிய தோட்டத்தில், மிகப் பிரம்மாண்டமான ஒரு டஜன் பூசணிக்காய்கள் காய்த்திருந்தன. ஹாரி அவ்வளவு பெரிய பூசணிக்காய்களை அதற்கு முன்பு ஒருபோதும் பார்த்திருக்கவில்லை. அவை ஒவ்வொன்றும் ஒரு பெரிய பாறாங்கல் அளவுக்கு இருந்தன.

"நன்றாக வளர்ந்து கொண்டிருக்கின்றன, இல்லையா?" என்று ஹாக்ரிட் மகிழ்ச்சிக் கொப்பளிக்கக் கேட்டார். "ஹாலோவீன் விருந்திற்காக நான் இவற்றை வளர்த்து வருகிறேன் . . . இவை அதற்குள் இன்னும் பெரிதாக வளர்ந்துவிடும்."

"அவற்றிற்கு என்ன போடுகிறீர்கள்?" என்று ஹாரி கேட்டான்.

தங்களை யாரும் கண்காணித்துக் கொண்டிருக்கவில்லை என்பதை உறுதி செய்து கொள்ள ஹாக்ரிட் தன் தோளின் பின்புறமாகத் தலையைத் திருப்பிப் பார்த்தார்.

"அவை நன்றாக வளர்வதற்கு நான் கொஞ்சம் உதவி செய்து வருகிறேன் – நான் கூறுவது உனக்குப் புரியும் என்று நினைக்கிறேன்."

ஹாக்ரிட்டின் பூக்கள் போடப்பட்டிருந்த இளஞ்சிவப்பு நிறக் குடை அவரது குடிலின் பின் சுவரில் தொங்கவிடப்பட்டிருந்ததை ஹாரி கவனித்தான். அந்தக் குடை, பார்ப்பதற்குச் சாதாரணமாகத் தோன்றினாலும், அது சாதாரணமான ஒன்றல்ல என்று ஹாரி கருதியதற்குக் காரணங்கள் பல இருந்தன. ஹாக்ரிட் பள்ளியில் படித்தக் காலத்தில் உபயோகித்த மந்திரக்கோல் அதனுள் மறைத்து வைக்கப்பட்டிருக்கக்கூடும் என்று ஹாரி உறுதியாக நம்பினான். மந்திரஜாலங்களை நிகழ்ந்த ஹாக்ரிட்டுக்கு அனுமதி கிடையாது. அவர் ஹாக்வார்ட்ஸில் மூன்றாவது வருடம் படித்துக்

Scanned by CamScanner

கொண்டிருந்தபோது பள்ளியிலிருந்து நீக்கப்பட்டிருந்தார். ஆனால் அவர் ஏன் நீக்கப்பட்டார் என்பதை அவனால் ஒருபோதும் கண்டுபிடிக்க முடியவில்லை. இதைப் பற்றி எப்போது பேச்செடுத்தாலும் அவர் தன் தொண்டையை பலமாகச் செருமிக் கொண்டு, பேச்சு வேறு திசைக்கு மாறும்வரை திடீரென்று தனக்குக் காது கேட்காததுபோல இருந்துவிடுவார்.

"நீங்கள் 'பெருவீக்க மந்திர'த்தை உபயோகித்திருக்கிறீர்கள் என்று நான் நினைக்கிறேன், சரியா?" என்று ஹெர்மயனி, சந்தோஷத்திற்கும் ஒப்புதலின்மைக்கும் இடைப்பட்ட ஒரு தொனியில் கேட்டாள். "ஆனால் நீங்கள் அதைப் பிரமாதமாகச் செய்திருக்கிறீர்கள்."

ஹாக்ரிட் ரானைப் பார்த்து, "இதையேதான் உன் தங்கையும் சொன்னாள்," என்று கூறினார். "நேற்று நான் அவளைச் சந்தித்தேன்." அவர் தன் தாடியைத் தடவிவிட்டுக் கொண்டு ஹாரியை ஓரக் கண்ணால் பார்த்தபடி, "தான் மைதானத்தைப் பார்க்க வந்ததாக அவள் என்னிடம் கூறினாள். ஆனால் என் வீட்டில் வேறு யாரையோ சந்திக்கலாம் என்ற நம்பிக்கையில் அவள் வந்திருக்கக்கூடும் என்பது என் ஊகம்," என்று கூறினார். பின் ஹாரியைப் பார்த்துக் கண்ணடித்துக் கொண்டே, "என்னைக் கேட்டால், கையெழுத்திடப்பட்ட ஒரு புகைப்படத்தை அவள் வேண்டாம் என்று கூற மாட்டாள் –" என்று இழுத்தார்.

"ஹாக்ரிட், கொஞ்சம் வாயை மூடிக் கொள்கிறீர்களா?" என்று ஹாரி சீறினான். ரான் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தான். நிலமெங்கும் நத்தைகள் தெறித்தன.

"ஏய்! ஜாக்கிரதை!" என்று ஹாக்ரிட் கத்திவிட்டுத் தனது பொக்கிஷப் பூசணிக்காய்களின் பக்கத்திலிருந்து அவனை இழுத்தார்.

அப்போது மதிய உணவிற்கான நேரம் வந்துவிட்டிருந்தது. ஹாரி காலையில் எழுந்ததிலிருந்து ஒரே ஒரு வெல்ல மிட்டாயைத் தவிர வேறு எதையும் சாப்பிட்டிருக்கவில்லை என்பதால், பள்ளிக்குத் திரும்பிச் சென்று சாப்பிட வேண்டும் என்பதில் குறியாக இருந்தான். அவர்கள் அனைவரும் ஹாக்ரிட்டிடம் இருந்து விடைபெற்றுக் கொண்டு, கோட்டையை நோக்கி நடந்தபோது ரானுக்கு அவ்வப்போது விக்கல் வந்து கொண்டிருந்தாலும், ஓரிரு மிகச் சிறிய நத்தைகள் மட்டுமே இப்போது அவன் வாயிலிருந்து வெளியே வந்தன.

அவர்கள் வரவேற்பறையினுள் காலை எடுத்துக்கூட வைத்திருக்க மாட்டார்கள், அப்போது ஒரு குரல் அவர்களை நோக்கிப் பாய்ந்தது. "ஹாரி, ரான்! நீங்கள் இரண்டு பேரும் இங்குதான் இருக்கிறீர்களா?" என்று கேட்டபடியே பேராசிரியர் மெக்கானகல் அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தார். அவரது முகத்தில் கடுமை தென்பட்டது. "உங்களுக்கு வழங்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைத் தண்டனை இன்று மாலை துவங்குகிறது."

ரான் தன் ஏப்பத்தை அடக்கிக் கொண்டே, பதற்றத்துடன், "பேராசிரியரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டான்.

Scanned by CamScanner

"ரான், நீ ஃபில்ச்சுடன் சேர்ந்து வெற்றிக் கோப்பைகள் அறையிலுள்ள வெள்ளிக் கோப்பைகளைப் பளிச்சூட்ட வேண்டும்," என்று பேராசிரியர் மெக்கானகல் கூறினார். "இதற்கு நீ மந்திரங்களை உபயோகிக்கக்கூடாது, உன் கைகளை உபயோகிக்க வேண்டும்."

ரான் மென்று விழுங்கினான். கண்காணிப்பாளர் ஆர்கஸ் ஃபில்ச்சுடன் சேர்ந்து வேலை செய்வதா! பள்ளியிலுள்ள ஒவ்வொரு மாணவனும் அவரை வெறுத்தனர்.

"ஹாரி, பேராசிரியர் லாக்ஹார்ட்டுக்கு வந்துள்ள ரசிகர் கடிதங்களுக்கு பதில் போட நீ அவருக்கு உதவ வேண்டும்," என்று பேராசிரியர் மெக்கானகல் கூறினார்.

"ஐயோ! வேண்டாம்! நானும் கோப்பைகளைப் பளிச்சூட்டப் போகிறேனே," என்று ஹாரி பரிதாபமாகக் கெஞ்சிக் கேட்டான்.

பேராசிரியர் மெக்கானகல் தன் புருவங்களை நெறித்தபடி, "கண்டிப்பாக முடியாது," என்று கூறினார். "தனக்கு உதவுவதற்கு நீதான் வேண்டும் என்று பேராசிரியர் லாக்ஹார்ட் குறிப்பாகக் கேட்டுள்ளார். இரவு சரியாக எட்டு மணிக்கு நீங்கள் இருவரும் தயாராக இருக்க வேண்டும் என்பது நினைவிருக்கட்டும்."

ஹாரியும் ரானும் மிகவும் மனமுடைந்த நிலையில் தங்கள் தலைகளைத் தொங்கப் போட்டுக் கொண்டு அப்பேரரங்கினுள் நுழைந்தனர். 'நீங்கள் பள்ளி விதியை மீறினீர்கள் – இப்போது அனுபவியுங்கள்' என்பது போன்ற முகபாவத்தோடு அவர்களுக்குப் பின்னால் ஹெர்மயனி வந்தாள். ஹாரியால் தான் நினைத்த அளவுக்கு 'ஆட்டிறைச்சிப் பணியார'த்தை ருசிக்க முடியவில்லை. அவர்கள் இருவரும் தங்களுக்கு மிக மோசமான தண்டனை வழங்கப்பட்டிருந்ததாகப் பொருமிக் கொண்டிருந்தனர்.

"ஃபில்ச் என்னை இரவு முழுவதும் அங்கேயே வைத்திருக்கப் போகிறார்," என்று ரான் புலம்பினான். "மந்திர வித்தையையும் உபயோகிக்கக்கூடாதாம்! அந்த அறையில் குறைந்தது நூறு கோப்பைகளாவது இருக்கும். இந்த மகுள்தனமான வேலை நமக்குச் சரிப்பட்டு வராது."

ஹாரி வெறுமையாகப் பார்த்துக் கொண்டே, "முடியுமானால், நான் சந்தோஷமாக என் இடத்தை உனக்குக் கொடுத்துவிட்டு உன் இடத்தை எடுத்துக் கொள்வேன்," என்று கூறினான். "டர்ஸ்லீ தம்பதியரின் வீட்டில் எனக்கு இதில் நல்ல அனுபவம் இருக்கிறது. லாக்ஹார்ட்டின் ரசிகர்களின் கடிதங்களுக்கு பதில் எழுதுவது . . . ! நான் தொலைந்தேன்!"

சனிக்கிழமை மதியம் வேகமாகக் கரைந்து போனது. திரும்பிப் பார்ப்பதற்குள் ஏழு மணி ஐம்பத்தைந்து நிமிடங்கள் ஆகிவிட்டிருந்தது. ஹாரி இரண்டாவது தளத்தின் தாழ்வாரத்தில் இருந்த லாக்ஹார்ட்டின் அலுவலகத்திற்கு வேண்டா வெறுப்பாகச் சென்றான். தன் பற்களைக் கடித்துக் கொண்டு கதவைத் தட்டினான்.

Scanned by CamScanner

உடனே கதவு விரியத் திறந்து கொண்டது. லாக்ஹார்ட் அவனை நோக்கிப் புன்னகையை அள்ளி வீசியபடி அங்கு நின்று கொண்டிருந்தார்.

"வாடா, செல்ல ராஸ்கல்! வந்து உள்ளே உட்கார்!" என்று அவர் கூறினார்.

அந்த அறையின் சுவர்களில் மாட்டப்பட்டிருந்த லாக்ஹார்ட்டின் சட்டமிடப்பட்டிருந்த எண்ணற்றப் புகைப்படங்கள், அங்கு ஏற்றப்பட்டிருந்த பல மெழுகுவர்த்திகளின் ஒளியில் பிரகாசமாக மினுமினுத்துக் கொண்டிருந்தன. அவற்றில் சிலவற்றில் அவர் கையெழுத்தும் இட்டிருந்தார். அவரது மேசைமீது அவரது புகைப்படங்களின் இன்னொரு குவியல் கிடந்தது.

அது ஏதோ அருட்பெரும் பாக்கியம் என்பதுபோல, "ஹாரி, நீ இந்த அஞ்சலுறைகளில் முகவரிகளை எழுதலாம்," என்று கூறினார். "இந்த முதலாவது கடிதத்தை கிளேடிஸ் குட்ஜானுக்கு அனுப்ப வேண்டும். கடவுள் அவளை ஆசிர்வதிப்பாராக! அவள் என்னுடைய பரம ரசிகை."

பத்து நிமிடங்கள் நத்தைபோல ஊர்ந்தன. லாக்ஹார்ட்டின் தொடர்ச்சியான பேச்சை வெறுமனே சகித்துக் கொண்டு, எப்போதாவது, "உம்," என்றோ, "ஆமாம்," என்றோ, அல்லது "சரி, சரி," என்றோ ஹாரி பிரக்ஞையின்றிக் கூறிக் கொண்டிருந்தான். அவ்வப்போது அவர், "புகழ் என்பது நிலையற்றது," அல்லது "பிரபலமானவற்றைச் செய்பவன்தான் பிரபலமானவன்," என்று முத்துக்களை உதிர்த்துக் கொண்டிருந்தபோது மட்டும் அவன் கவனித்தான்.

மெழுகுவர்த்திகளின் உயரம் குறைந்து கொண்டே வந்தபோது, அவற்றின் ஒளி, புகைப்படங்களில் இருந்து அவனைக் கவனித்துக் கொண்டிருந்த லாக்ஹார்ட்டின் முகங்களின்மீது கண்ணாமூச்சி விளையாட்டு விளையாடியது. ஹாரி விண்ணென்று தெறித்துக் கொண்டிருந்த தனது விரல்களைக் கொண்டு, ஆயிரமாவது கடிதம்போலத் தோன்றிய அஞ்சலுறையின்மீது வெரோனிகா ஸ்மெத்லீயின் முகவரியை எழுதினான். தான் அங்கிருந்து கிளம்புவதற்கான நேரம் சீக்கிரமாக வந்துவிட்டால் நன்றாக இருக்கும் என்று அவன் நினைத்தான்.

பின் திடீரென்று அவனுக்கு ஏதோ சத்தம் கேட்டது. அது மெழுகுவர்த்திகள் 'டப்'பென்று அணைந்த சத்தமோ அல்லது தனது ரசிகர்கள் குறித்த லாக்ஹார்ட்டின் பிதற்றலோ அல்ல.

அது ஒரு குரல்! எலும்பு மஜ்ஜையை உறைய வைக்கும் ஒரு குரல்! அசர வைக்கின்ற, ஆனால் அதே சமயம் நஞ்சில் தோய்த்தெடுக்கப்பட்டிருந்ததைப் போன்ற ஒரு குரல்!

"வா! . . . என்னருகே வா! . . . நான் உன்னைக் குதறப் போகிறேன் . . . நான் உன்னைக் குத்திக் கிழிக்கப் போகிறேன் . . . நான் உன்னைக் கொல்லப் போகிறேன் . . ."

Scanned by CamScanner

ஹாரி துள்ளிக் குதித்தான். வெரோனிகா ஸ்மெத்லீயின் முகவரியின்மீது இளம் ஊதா நிறப் பேனா மை கொட்டியது.

"என்ன?" என்று அவன் சத்தமாகக் கேட்டான்.

"அதுவா? அதிகமாக விற்பனையாகும் புத்தகங்களின் பட்டியலில் அது ஆறுமாத காலம் தொடர்ந்து இடம்பெற்றது. அது அதற்கு முந்தைய எல்லாச் சாதனைகளையும் முறியடித்தது," என்று லாக்ஹார்ட் கூறினார்.

ஹாரி பெரும் பதற்றத்துடன், "நான் அதைக் கேட்கவில்லை," என்று கூறினான். "அந்தக் குரல்!"

"ஹாரி, மன்னிக்க வேண்டும். எந்தக் குரல்?" என்று லாக்ஹார்ட் கேட்டார்.

"இப்போது ஒரு குரல் கேட்டதே – அது உங்களுக்குக் கேட்கவில்லையா?"

லாக்ஹார்ட் ஹாரியைப் பெரும் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

"ஹாரி, நீ என்ன உளறிக் கொண்டிருக்கிறாய்? உனக்கு நன்றாகத் தூக்கம் வந்துவிட்டது என்று நினைக்கிறேன். . . அடக் கடவுளே! கடிகாரத்தைப் பார்! நாம் இங்கு நான்கு மணி நேரமாக உட்கார்ந்திருக்கிறோம். என்னால் நம்பவே முடியவில்லை. நேரம் பறந்துவிட்டது. இல்லையா, ஹாரி?"

ஹாரி அதற்கு பதிலளிக்கவில்லை. அவன் அக்குரலை மீண்டும் கேட்கத் தனது காதுகளைத் தீட்டிக் கொண்டான். ஆனால், "உன்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் ஒவ்வொரு முறையும் இது மாதிரி அற்புதமான, ஆனந்தமான சந்தர்ப்பம் உனக்குக் கிடைக்கும் என்று நீ எதிர்பார்க்கக்கூடாது," என்று லாக்ஹார்ட் கூறிக் கொண்டிருந்ததைத் தவிர வேறு எந்தச் சத்தமும் அவனுக்குக் கேட்கவில்லை. திகைப்பில் இருந்து விடுபடாதவனாய் ஹாரி அங்கிருந்து கிளம்பினான்.

அவன் மிகவும் தாமதமாக வந்திருந்ததால், கிரிஃபின்டார் பொது அறை கிட்டத்தட்டக் காலியாக இருந்தது. ஹாரி நேராகத் தன் படுக்கைக்குச் சென்றான். ரான் இன்னும் வந்திருக்கவில்லை. ஹாரி பைஜாமாவுக்கு மாறிவிட்டுத் தன் படுக்கையில் ஏறிப் படுத்துக் கொண்டு ரானுக்காகக் காத்திருக்கத் துவங்கினான். அரைமணி நேரம் கழித்து தன் கையைத் நீவிவிட்டுக் கொண்டு, வலுவான பளிச்சூட்டல் திரவ வாடையைத் துணைக்கழைத்துக் கொண்டு ரான் அந்த இருண்ட அறைக்குள் நுழைந்தான்.

ரான் தன் படுக்கையில் ஏறிப் படுத்துக் கொண்டே, "என் தசைகள் பிடித்துக் கொண்டுள்ளன," என்று முனகினான். "நான் அந்தக் குவிடிச் கோப்பையைப் பதினான்கு முறை பளிச்சூட்டிய பிறகுதான் அவருக்குத் திருப்தி ஏற்பட்டது. பள்ளிக்குச் சேவை புரிந்ததற்காக வழங்கப்படும் சிறப்பான சேவைக்கான கோப்பை

Scanned by CamScanner

ஒன்றின்மீது நான் வாந்தி எடுத்தேன். அதைக் கழுவித் துடைப்பதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது. ஆமாம், லாக்ஹார்ட்டுடன் உன் பொழுது எப்படிப் போனது?"

பக்கத்துப் படுக்கைகளில் படுத்துக் கிடந்த நெவில், டீன், மற்றும் சீமஸை எழுப்பிவிடக்கூடாது என்பதற்காக ஹாரி தன் குரலைத் தாழ்த்திக் கொண்டு, லாக்ஹார்ட்டின் அறையில் தனக்கு மட்டுமே கேட்டக் குரலைப் பற்றி ரானிடம் அப்படியே எடுத்துரைத்தான்.

"ஆனால் லாக்ஹார்ட் அக்குரல் தனக்குக் கேட்கவில்லை என்று கூறினார், அப்படித்தானே?" என்று ரான் கேட்டான். நிலா வெளிச்சத்தில் ரான் தன் நெற்றியைச் சுருக்கிக் கொண்டதை ஹாரி பார்த்தான். "அவர் பொய் கூறியிருந்ததாக நீ நினைக்கிறாயா? ஆனால் எனக்கு ஒரு விஷயம் மட்டும் புரிபடவில்லை. ஒருவர் மற்றவர்களின் பார்வைக்குப் படாமல் இருந்தாலும்கூட, அறைக்குள் வரும்போது எப்படியும் கதவைத் திறந்துதானே உள்ளே வர வேண்டும்?"

"நீ கூறுவது சரிதான்," என்று கூறிய ஹாரி தன் படுக்கையில் மல்லாந்து படுத்துக் கொண்டு மேற்கூரையை வெறித்துக் கொண்டிருந்தான். "அதுதான் எனக்கும் புரியவில்லை."

Scanned by CamScanner

அத்தியாயம் எட்டு

இறந்தநாள் விழா

அக்டோபர் மாதம் பிறந்தவுடன் மைதானத்திலும் கோட்டைக்குள்ளும் ஈரப்பதத்துடன்கூடிய குளிர் பரவத் துவங்கியது. அதனால் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடையே சளிக் காய்ச்சல் பரவத் துவங்கியதால், மருத்துவமனையின் பொறுப்பாளரான மேடம் பாம்ஃபிரே பம்பரமாகச் சுழன்று கொண்டிருந்தார். அவர் கொடுத்தக் குறுமிளகுக் கஷாயம், அதைக் குடித்தவர்களின் காதுகளிலிருந்து பல மணிநேரத்திற்குப் புகையை வரவழைத்தாலும் உடனடியாக வேலை செய்தது. ஒட்டடைக்குச்சிபோல மெலிந்து போயிருந்த ஜின்னியை, அந்த மாயத் திரவத்தைக் குடிக்குமாறு பெர்சி எப்படியோ மசிய வைத்திருந்தான். அவளது செந்நிறத் தலைமுடிக்குள்ளிருந்து தொடர்ந்து வந்து கொண்டிருந்த புகை அவளது தலையில் நெருப்புப் பற்றியிருந்தது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தியது.

துப்பாக்கிக் குண்டுகளின் அளவில் இருந்த மழைத்துளிகள் நாள் முழுவதும் இடைவிடாது கோட்டையின் சன்னல்களின்மீது மோதி பலத்தச் சத்தத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தன; ஏரியில் தண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது; பூந்தோட்டங்கள் சகதிக்காடாய்க் காட்சியளித்தன; ஹாக்ரிட்டின் பூசணிக்காய்கள், தோட்டத்தில் போடப்பட்டிருந்த கொட்டகையின் அளவுக்குப் பெரிதாக வளர்ந்திருந்தன. ஆனால் தொடர்ந்து குவிடிச் விளையாட்டுப் பயிற்சி எடுக்க வேண்டும் என்ற உட்டின் தணியாத தாகத்தை மட்டும் அந்த வானிலையால் தணிக்க முடியவில்லை. அதனால்தான் ஹாலோவீன் தினத்திற்கு ஒருசில நாட்களுக்கு முந்தைய ஒரு சனிக்கிழமை மதியத்தில், சேற்றால் அபிஷேகம் செய்யப்பட்டுத் தொப்பலாக நனைந்திருந்த நிலையில், ஹாரி, கிரிஃபின்டார் கோபுரத்திற்குத் திரும்பி வந்து கொண்டிருந்தான்.

அன்றைய பயிற்சி அவ்வளவு மகிழ்ச்சிகரமானதாக இல்லாமல் போனதற்கு அன்று பெய்த அடைமழையும், வீசிய பலமான காற்றும் மட்டுமே காரணமல்ல. ஸ்லிதரின் குழுவினரை வேவு பார்த்து வந்த ஃபிரெட்டுக்கும் ஜார்ஜுக்கும் அந்தப் புதிய நிம்பஸ் 2001 மந்திரத் துடப்பத்தின் வேகத்தைத் தங்கள் கண்களால் பார்ப்பதற்கான ஒரு வாய்ப்புக் கிடைத்திருந்தது. செங்குத்தாக மேலே ஏறவும் கீழே

Scanned by CamScanner

இறங்கவும்கூடிய ஜெட் விமானத்தைப்போல ஸ்லிதரின் அணியினர் வேகமாகப் பறந்து கொண்டிருந்தபோது, ஏழு பச்சை நிறப் புள்ளிகளாக மட்டுமே அவர்கள் தெரிந்ததாக ஃபிரெட்டும் ஜார்ஜும் தெரிவித்தனர்.

தன்மீதிருந்து கொட்டிக் கொண்டிருந்த நீர், தரையில் தெறித்தச் சத்தத்தின் ஊடாக, ஆளரவமற்று இருந்த தாழ்வாரத்தில் ஹாரி நடந்து சென்று கொண்டிருந்தபோது, அவனைப்போலவே யோசனையில் மூழ்கிப் போயிருந்த வேறொன்றை அவன் சந்தித்தான். அது கிரிஃபின்டார் கோபுரத்தின் ஆவியான 'கிட்டத்தட்டத் தலையில்லாத நிக்.' அந்த ஆவி வாட்டமான முகத்தோடு சன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டு, "அடிப்படைத் தகுதி எனக்கில்லை . . . அரை அங்குலம்தான் . . . அது மட்டும் . . ." என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டிருந்தது.

"ஹலோ, நிக்!" என்று ஹாரி கூறினான்.

"ஹலோ, ஹலோ," என்று கூறிய நிக் பின்னால் திரும்பிப் பார்த்தது. கண்ணைக் கவரும் விதத்தில் இருந்த, அழகிய குஞ்சத்துடன்கூடிய ஒரு தொப்பியை அது தனது நீண்ட, சுருண்ட தலைமுடியின்மீது அணிந்திருந்தது. அது அணிந்திருந்த காலருடன்கூடிய அங்கி, கிட்டத்தட்டத் துண்டிக்கப்பட்டிருந்த அதன் கழுத்தை முற்றிலுமாக மறைத்திருந்தது. அந்த ஆவி வெண்புகைபோல வெளுத்திருந்தது. வெளியே தெரிந்த இருண்ட வானத்தையும் பலத்த மழையையும் ஹாரியால் அதன் உடலின் வழியாகப் பார்க்க முடிந்தது.

"ஹாரி பாட்டர், ஏன் மனக்கலக்கத்துடன் இருக்கிறாய்?" என்று கேட்டுவிட்டு, அந்த ஆவி தன் கையில் வைத்திருந்த, ஒளி ஊடுருவக்கூடிய விதத்தில் அமைந்திருந்த ஒரு கடிதத்தை மடித்துத் தன் கோட் பாக்கெட்டுக்குள் போட்டுக் கொண்டது.

"நீயும் அப்படிதான் இருக்கிறாய்," என்று ஹாரி பதிலளித்தான்.

"ஆ!" என்று கூறிய நிக், 'ஒன்றுமில்லை' என்பதுபோல நளினமாகக் கையசைத்துவிட்டு, "இது காசு பெறாத விஷயம் . . . நான் உண்மையிலேயே அதில் சேர விரும்புகிறேன் என்று அர்த்தமில்லை . . . விண்ணப்பித்தாவது வைக்கலாம் என்று நினைத்தேன் . . . ஆனால் எனக்கு அதற்குத் தகுதி இல்லை என்பதுபோலத் தெரிகிறது," என்று புலம்பியது.

அது விட்டேத்தியாகப் பேசியதுபோலத் தோன்றினாலும் அதன் முகத்தில் கசப்புத் தொக்கி நின்றது.

அது திடீரென்று துள்ளிக் குதித்துத் தன் பாக்கெட்டில் இருந்து அக்கடிதத்தை வெளியே எடுத்து, "கூர்மையில்லாத ஒரு கோடாலியால் கழுத்தில் நாற்பத்தைந்து முறை வெட்டப்பட்ட ஒரு நபர், 'ஹெட்லெஸ் ஹன்ட்' அமைப்பில் சேரத் தகுதி வாய்ந்தவர்தானே?" என்று கேட்டது.

ஒத்துக் கொள்வதைத் தவிர ஹாரிக்கு வேறு வழி இருக்கவில்லை. அதனால், "ஆமாம்! இதிலென்ன சந்தேகம்?" என்றான்.

Scanned by CamScanner

"என் கழுத்து ஒழுங்காகவும் விரைவாகவும் வெட்டப்பட்டு, என் தலை முழுவதுமாகத் துண்டிக்கப்பட்டிருந்தால், மற்ற எல்லோரையும்விட நான்தான் அதிக மகிழ்ச்சி அடைந்திருப்பேன். தேவையில்லாமல் கடுமையான வலியை நான் அனுபவித்திருக்க வேண்டாம். அதோடு, தேவையற்றப் பரிகாசத்திற்கும் நான் ஆளாகி இருந்திருக்க மாட்டேன். ஆனாலும் . . ." அது தன் கடிதத்தைப் பிரித்துச் சீற்றத்துடன் படிக்கத் துவங்கியது.

"தங்கள் உடலிலிருந்து தலை முழுவதுமாகத் துண்டிக்கப்பட்டுள்ளவர்களை மட்டுமே உறுப்பினர்களாக எங்களால் ஏற்றுக் கொள்ள முடியும். இல்லையெனில், 'குதிரைகளில் இருந்தபடியே தலைகளைப் பந்தாடுதல்,' 'தலையுருட்டும் போலோ' ஆகிய சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவது எங்கள் உறுப்பினர்களுக்கு இயலாத காரியமாகிவிடும் என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என்று நினைக்கிறோம். அதனால் நீங்கள் எங்களுடைய சங்கத்தில் உறுப்பினராவதற்குத் தகுதி பெறவில்லை என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். வாழ்த்துக்களுடன், சர் பேட்ரிக் டிலன்சி–பாட்மோர்."

நிக் தன் மனத்திற்குள் புகைந்து கொண்டே அக்கடிதத்தை மீண்டும் மடித்து உள்ளே வைத்தது.

"ஹாரி, வெறும் அரை அங்குலத் தசை நாரும் தோலும் மட்டுமே என் கழுத்தை என் தலையோடு ஒட்டிப் பிடித்து வைத்துள்ளன. பெரும்பாலானவர்கள் என்னை முண்டம் என்று சொல்லத் தயங்க மாட்டார்கள். ஆனால் இந்த சர் பேட்ரிக் டிலன்சி–பாட்மோருக்கு அது பத்தாதாம்!"

பின், நிக் ஆழமாக மூச்சிழுத்துத் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு, கொஞ்சம் அமைதி அடைந்த குரலில், " ஆமாம், உனக்கு என்ன பிரச்சனை? என்னால் உனக்கு ஏதாவது உதவ முடியுமா?" என்று கேட்டது.

"முடியாது," என்று ஹாரி கூறினான். "ஸ்லிதரின் அணிக்கு எதிரான போட்டியில் விளையாடும்போது எங்களுக்கு ஏழு நிம்பஸ் 2001 மந்திரத் துடப்பங்களை உன்னால் ஏற்பாடு செய்து கொடுக்க முடியாதவரை –"

ஹாரியின் மீதி வார்த்தைகள், அவனது கணுக்கால்களுக்கு அருகே எங்கோ இருந்து வந்த, மிகவும் உச்சஸ்தாயியில் ஒலித்த ஒரு பூனைச் சத்தத்தில் மூழ்கின. அவன் கீழே குனிந்தபோது, விளக்குப்போல ஒளிர்ந்து கொண்டிருந்த ஒரு ஜோடி மஞ்சள் நிறக் கண்களை அங்கு அவன் சந்தித்தான். அது நாரிஸ் பூனை. சாம்பல் நிறத்தில் இருந்த அப்பூனையைக் கண்காணிப்பாளர் ஃபில்ச், மாணவர்களுக்கு எதிரான தன்னுடைய யுத்தத்தில் தனது வலது கரமாகப் பயன்படுத்தி வந்தார்.

"ஹாரி, நீ சீக்கிரமாக இந்த இடத்தைக் காலி செய்துவிடுவது நல்லது," என்று நிக் அவசர அவசரமாகக் கூறியது. "ஃபில்ச் இன்று

Scanned by CamScanner

சரியான மனநிலையில் இல்லை. அவருக்குக் சளிக் காய்ச்சல். அதோடு, ஐந்தாம் எண் நிலவறையின் உத்தரத்தில், மூன்றாம் வருட மாணவர்கள் சிலர் எதிர்பாராதவிதமாகத் தவளை மூளைகளை இறைத்துவிட்டனர்; காலைநேரம் முழுவதும் ஃபில்ச் அதைச் சுத்தம் செய்து கொண்டிருந்தார். நீ இப்போது எல்லா இடங்களிலும் சேற்றையும் சகதியையும் கொட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்தால் . . ."

"சரி, நான் போகிறேன்," என்று கூறிய ஹாரி, தன்னைக் குற்றம் சாட்டும் விதத்தில் முறைத்துக் கொண்டிருந்த நாரிஸ் பூனையின் பார்வையிலிருந்து விலகிப் பின்வாங்கினான். ஆனால் அதற்குள் நேரம் கடந்துவிட்டிருந்தது. தன்னுடைய கேடுகெட்டப் பூனையோடு ஓர் இனம் புரியாத தொடர்பு வைத்திருந்த ஃபில்ச், மூச்சிறைக்க, ஹாரியின் வலப்புறத்தில் இருந்த ஓர் ஓவியத் திரையிலிருந்து திடீரென்று வெளிவந்தார். பள்ளி விதியை மீறியிருந்த அவனை அவர் கோபமாகப் பார்த்துக் கொண்டிருந்தார். வண்ணக் கோடுகள் போடப்பட்டிருந்த கம்பளிச் சால்வையை அவர் தன் தலையைச் சுற்றிக் கட்டியிருந்தார். அவரது மூக்கு, வழக்கத்திற்கு மாறாக ஊதா வண்ணத்தில் இருந்தது.

ஃபில்ச், துடித்துக் கொண்டிருந்த தன் தாடை எலும்புகளுடனும், ஆபத்தான விதத்தில் வெளியே துருத்திக் கொண்டிருந்த கண்களுடனும் ஹாரியின் குவிடிச் அங்கியிலிருந்து சொட்டிக் கொண்டிருந்த சேற்றுக் குட்டையைச் சுட்டிக்காட்டி, "இந்த இடத்தை நாசம் பண்ணிவிட்டாய்!" என்று கூப்பாடு போட்டார். "எங்கு பார்த்தாலும் சேறும் சகதியுமாக இருக்கிறது. இதற்கு மேல் தாங்காது. ஹாரி பாட்டர், என் பின்னால் வா!"

ஹாரி நிக்கை நோக்கிச் சுரத்தே இல்லாமல் 'போய் வருகிறேன்' என்று கையை ஆட்டிவிட்டு, ஃபில்ச்சின் பின்னால் மீண்டும் கீழ்த்தளத்திற்குப் போனான். வந்த வழியே அவன் திரும்பிப் போனபோது தன் சகதிக் காலடித் தடங்களை இரட்டிப்பாக்கிக் கொண்டே சென்றான்.

ஹாரி இதற்கு முன்பு ஒருபோதும் ஃபில்ச்சின் அலுவலகத்திற்குள் நுழைந்திருந்ததில்லை. அந்த இடத்தைப் பெரும்பாலான மாணவர்கள் தவிர்த்து வந்தனர். சன்னல்கள் எதுவும் இல்லாத அந்த அறை இருட்டாகவும் அழுக்காகவும் இருந்தது. அதன் தாழ்வான கூரையிலிருந்து ஒரே ஓர் எண்ணெய் விளக்கு மட்டும் தொங்கிக் கொண்டிருந்தது. வறுத்த மீனின் வாசம் அங்கு சுற்றிக் கொண்டிருந்தது. அறைச் சுவர்களைச் சுற்றிலும் மரத்தினாலான ஆவண அலமாரிகள் இருந்தன. அவற்றின்மீது ஒட்டப்பட்டிருந்த பெயர்க் குறிப்புகளைப் பார்த்தபோது, ஃபில்ச்சால் தண்டிக்கப்பட்ட மாணவர்கள் எல்லோரையும் பற்றிய தகவல்கள் அவற்றில் இடம்பெற்றிருந்ததை ஹாரியால் கண்டுகொள்ள முடிந்தது. ஃபிரெட்டுக்கும் ஜார்ஜுக்கும் ஒரு மொத்த இழுப்பறையே

Scanned by CamScanner

ஒதுக்கப்பட்டிருந்தது. ஃபில்ச்சின் மேசைக்குப் பின்னால் இருந்த சுவரில், பளபளவென்று பளிச்சூட்டப்பட்டிருந்த பிரம்பு சங்கிலிகளும் கைவிலங்குகளும் தொங்கவிடப்பட்டிருந்தன. மாணவர்களின் கணுக்கால்களைக் கட்டி உத்தரத்திலிருந்து அவர்களைத் தலைகீழாகத் தொங்கவிடுவதற்குத் தன்னை அனுமதிக்குமாறு அவர் டம்பிள்டோரை நச்சரித்துக் கொண்டிருந்தது எல்லோரும் அறிந்த விஷயமே.

ஃபில்ச் தனது மேசையின்மீது இருந்த ஒரு கலயத்திலிருந்து ஒரு இறகுப் பேனாவை எடுத்துக் கொண்டு, தோல் காகிதம் ஒன்றிற்காகத் தட்டழிந்து கொண்டிருந்தார்.

"சாணி," என்று அவர் கோபமாகக் கத்தினார். "சூடாகச் சீறிக் கொண்டிருக்கும் டிராகன் மூக்குச் சளி . . . தவளை மூளைகள் . . . எலிக் குடல்கள் . . . கருமம், கருமம் . . . நல்ல முன்னுதாரணம் . . . படிவம் எங்கே? . . . ஆ, இதோ இருக்கிறது!"

அவர் ஒரு பெரிய தோல் காகிதத்தைத் தனது மேசை இழுப்பறையில் இருந்து வெளியே எடுத்து, அதைத் தன் முன்னால் நீட்டிப் பிடித்து, இறகுப் பேனாவை மையில் முக்கினார்.

"பெயர்? . . . ஹாரி பாட்டர் . . . குற்றம்? . . ."

"கொஞ்சம் சகதி!" என்று ஹாரி கூறினான்.

"உனக்கு வேண்டுமானால் அது கொஞ்சம் சகதியாக இருக்கலாம். ஆனால் என்னைப் பொறுத்தவரை, ஒரு மணிநேரம் செலவழித்துக் கழுவிவிட வேண்டிய அதிகப்படியான வேலை!" என்று ஃபில்ச் இரைந்தார். "குற்றம்? . . . கோட்டையில் துர்நாற்றத்தை ஏற்படுத்தியது . . . பரிந்துரைக்கப்படும் தண்டனை? . . ."

ஒழுகிக் கொண்டிருந்த தனது மூக்கைத் துடைத்தவாறு, ஃபில்ச் தன் கண்களைக் குறுக்கிக் கொண்டு ஹாரியைப் பார்த்தார். ஹாரி தனக்கு என்ன தண்டனை கிடைக்கப் போகிறதோ என்று பயத்துடன் தன் மூச்சை அடக்கிக் கொண்டு காத்திருந்தான்.

ஃபில்ச் அவனுக்கான தண்டனையை எழுதுவதற்காகக் குனிந்தபோது, அந்த அறையின் மேற்கூரையில் 'டமால்' என்று ஒரு பெரிய சத்தம் கேட்டது. அதனால் அங்கிருந்த எண்ணெய் விளக்குக் கடகடவென ஆடியது.

ஃபில்ச் பெருங்கோபத்துடன் தன் கையிலிருந்த இறகுப் பேனாவைத் தூக்கி எறிந்துவிட்டு, "பீவ்ஸ்!" என்று காட்டுக் கூச்சல் போட்டார். "இம்முறை நான் உன்னை விடப் போவதில்லை. நீ என்னிடம் வசமாக மாட்டிக் கொள்ளப் போகிறாய்!"

பின் ஹாரியைத் திரும்பிக்கூடப் பார்க்காமல், தன் சப்பைக் கால்களை இழுத்துக் கொண்டு தன் அலுவலகத்திலிருந்து வேகமாக வெளியே ஓடினார். அவரது நாரிஸ் பூனையும் மின்னலெனப் பாய்ந்து அவருடன் ஓடியது.

வழக்கமாகப் பெரும் சத்தத்தை ஏற்படுத்திக் கொண்டும், பொருட்களைக் கன்னாபின்னாவென்று தூக்கி எறிந்து கொண்டும்

Scanned by CamScanner

இருந்த ஆவிதான் பீவ்ஸ். அது எப்போதும் பல்லைக் காட்டிக் கொண்டு காற்றில் அலைந்தபடி, பேரழிவையும் இடர்பாடுகளையும் ஏற்படுத்திக் கொண்டிருந்தது. ஹாரிக்குப் பீவ்ஸை அவ்வளவாகப் பிடிக்காது. ஆனால் இம்முறை அது ரகளை செய்யத் தேர்ந்தெடுத்த நேரம் குறித்து அவன் நன்றியுடையவனாக இருந்தான். பீவ்ஸ் என்ன ரகளை செய்ததோ தெரியாது, ஆனால் ஃபில்ச்சிடம் இருந்து தன்மீதான கவனத்தைத் திருப்ப அது போதுமானதாக இருக்கும் என்று ஹாரி நம்பினான். இம்முறை பீவ்ஸ் மிகப் பெரிதாக எதையோ நாசம் செய்திருக்க வேண்டும் என்று ஹாரிக்குத் தோன்றியது.

ஃபில்ச் வரும்வரை தான் காத்திருப்பது நல்லது என்று ஹாரி முடிவு செய்துவிட்டு, அவரது மேசைக்குப் பக்கத்தில் இருந்த, அந்துப்பூச்சிகள் அரித்திருந்த ஒரு நாற்காலியில் தொப்பென விழுந்தான். அவரது மேசையின்மீது, பாதி நிரப்பப்பட்டிருந்த தனது படிவத்தைத் தவிர இன்னும் ஒன்றே ஒன்று மட்டும் இருந்தது. ஒரு பெரிய, பளபளவென்றிருந்த, ஊதா நிற அஞ்சலுறைதான் அது. அதன் முகப்பில் வெள்ளி எழுத்துக்களில் ஏதோ எழுதப்பட்டிருந்தது. ஃபில்ச் திரும்பி வந்து கொண்டிருக்கவில்லை என்பதை உறுதி செய்து கொள்ள வாசலை நோட்டம் விட்டுவிட்டு, ஹாரி அந்த அஞ்சலுறையை எடுத்துப் படித்தான். அதில் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது:

குவிக்ஸ்பெல்

துவக்க நிலை மாயாஜாலத்திற்கான
அஞ்சல் வழிக் கல்வி

அது ஹாரியின் ஆவலைத் தூண்டியதால், அவன் அந்த அஞ்சலுறையைப் பிரித்து அதனுள் இருந்த ஒரு கட்டுத் தோல் காகிதங்களை வெளியே எடுத்தான். முதல் பக்கத்தில் அழகான வெள்ளி எழுத்துக்களில் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது:

நவீன மாயாஜால உலகில் நீங்கள் சரியாகப் பொருந்தவில்லையா? வெகு சாதாரண மந்திர வசியங்களைக்கூட உங்களால் செய்ய முடியவில்லையா? உங்களுடைய மந்திரக்கோலை நீங்கள் இயக்கும் விதத்தை உங்களாலேயே சகித்துக் கொள்ள முடியவில்லையா?

இதோ அதற்கான தீர்வு!

புத்தம் புதிய, தோல்விக்கான சாத்தியமே இல்லாத, உடனடிப் பலன் தருகின்ற, நீங்கள் மிக எளிதாகக் கற்றுக் கொள்ளக்கூடிய பயிற்சித் திட்டம்தான் 'குவிக்ஸ்பெல்.' எங்களுடைய இந்தப் பயிற்சித் திட்டத்தின் மூலம் நூற்றுக்கணக்கான மந்திரவாதிகளும் மந்திரவாதினிகளும் பயனடைந்துள்ளனர்.

Scanned by CamScanner

டாப்ஷேமைச் சேர்ந்த மேடம் நெட்டில்ஸ் இப்பயிற்சித் திட்டம் குறித்து இவ்வாறு தெரிவிக்கிறார்:

"மந்திரங்களை உருத்தட்டுவது எனக்குச் சரிப்பட்டு வரவில்லை. நான் கலக்கும் மாயத் திரவங்களைப் பார்த்து என் குடும்ப உறுப்பினர்களே எள்ளி நகையாடுவர். ஆனால் 'குவிக்ஸ்பெல்' பயிற்சித் திட்டத்திற்குப் பிறகு, நான் கலந்து கொள்ளும் கேளிக்கை விருந்துகளில் எல்லோருடைய கவனமும் இப்போது என் பக்கம்தான் இருக்கின்றது. என்னுடைய 'ஸின்டிலேஷன் ஸொல்யூஷன்' மாயத் திரவத்தை எப்படித் தயாரிப்பது என்று கேட்டு என் நண்பர்கள் என்னைத் துளைத்தெடுத்து வருகிறார்கள்."

டிட்ஸ்பரியைச் சேர்ந்த வார்லாக் டி. ஜே. புரோட் இவ்வாறு கூறுகிறார்:

"என்னுடைய பலவீனமான மந்திரதந்திரங்களைப் பார்த்து என் மனைவிக்கு இளக்காரமாக இருக்கும். ஆனால் நான் உங்களுடைய 'குவிக்ஸ்பெல்' பயிற்சித் திட்டத்தில் சேர்ந்த ஒரு மாதத்திற்கு உள்ளாகவே, நான் என்னுடைய மனைவியை 'யாக்' எருதாக மாற்றிவிட்டேன். 'குவிக்ஸ்பெல்,' உனக்கு என் மனமார்ந்த நன்றிகள்!"

ஆச்சரியமும் திகைப்பும் அடைந்த ஹாரி அதன் மீதிப் பக்கங்களையும் புரட்டினான். ஃபில்ச், போயும் போயும் எதற்காகக் 'குவிக்ஸ்பெல்' பயிற்சியில் சேர வேண்டும்? அப்படியானால் அவர் ஒரு முழுமையான மந்திரவாதி இல்லையா? 'பாடம் ஒன்று: உங்களுடைய மந்திரக்கோலைப் பிடிக்கும் முறை (சில உபயோகமான தகவல்கள்)' என்ற வரிகளை ஹாரி படித்துக் கொண்டிருந்தபோது, அந்த அறைக்கு வெளியே, ஃபில்ச் வந்து கொண்டிருந்ததை அறிவித்துக் காலடி ஓசை கேட்டது. ஹாரி அந்தத் தோல் காகிதங்களை அந்த அஞ்சலுறைக்குள் திணித்து, அதை அவரது மேசையின்மீது தூக்கி எறியவும் வாசற்கதவு திறக்கவும் சரியாக இருந்தது.

ஃபில்ச் வெற்றி வீரன்போலக் காட்சியளித்தார்.

"மறையக்கூடிய அந்த அலமாரி மிகவும் மதிப்பு வாய்ந்தது," என்று அவர் தன் பூனையிடம் களிப்புடன் கூறிக் கொண்டிருந்தார். "என் செல்லமே, இம்முறை நாம் பீவ்ஸை வெளியே தூக்கி எறிந்துவிடலாம்."

அவரது பார்வை முதலில் ஹாரியின்மீதும் பின் அந்த 'குவிக்ஸ்பெல்' அஞ்சலுறையின்மீதும் படிந்தது. ஆனால் அந்த அஞ்சலுறை முதலில் இருந்த இடத்தைவிட்டு இரண்டடி தள்ளிக் கிடந்ததை ஹாரி அப்போதுதான் கவனித்தான். ஆனால் அதற்குள் காலம் கடந்துவிட்டிருந்தது.

சோகையால் வீங்கிப் போயிருந்த ஃபில்ச்சின் முகம் ரத்தச் சிவப்பாக மாறியது. அடுத்து அலையென வரவிருந்த கோபத் தாக்குதல்களுக்கு ஹாரி தன்னைத் தயார்படுத்திக் கொண்டான். ஃபில்ச் கெந்திக் கெந்தி நடந்து தன் மேசை அருகே சென்று, அந்த

Scanned by CamScanner

அஞ்சலுறையைப் படாரென்று எடுத்து மேசையின் இழுப்பறையினுள் தூக்கி எறிந்தார்.

"நீ அதைப் படித்தாயா? –" அவர் தடுமாறினார்.

"இல்லை," என்று ஹாரி அவசர அவசரமாகப் பொய் சொன்னான்.

முடிச்சுக்கள் விழுந்திருந்த ஃபில்ச்சின் கைகள் திருகிக் கொண்டன.

"எனக்கு வந்தத் தனிப்பட்ட கடிதத்தை மட்டும் நீ படித்திருந்ததாக எனக்குத் தோன்றினால் . . . முதலில் அது என்னுடைய கடிதமே அல்ல . . . அது என் நண்பர் ஒருவருடையது . . . ஆனால் . . ."

ஹாரி அச்சத்துடன் அவரையே பார்த்துக் கொண்டிருந்தான். ஃபில்ச் இவ்வளவு வெறி கொண்டு அவன் அதுவரை பார்த்திருக்கவில்லை. அவரது கண்கள் வெளியே புடைத்துக் கொண்டிருந்தன. உப்பிப் போயிருந்த அவரது கன்னங்களில் ஒன்று துடித்துக் கொண்டிருந்தது. அவர் தன் தலையில் கட்டியிருந்த வண்ணச் சால்வையும் பயமுறுத்துவதாகவே இருந்தது.

"சரி, இங்கிருந்து ஓடிப் போய்விடு! . . . இது பற்றி யாரிடமும் மூச்சுவிட்டுவிடாதே! . . . அது ஒன்றும் அவ்வளவு முக்கிய . . . நீ அதைப் படிக்கவில்லை எனும் பட்சத்தில் இந்த இடத்தை உடனே காலி செய்துவிடு . . . நான் பீவ்ஸ் பற்றிய அறிக்கையை எழுத வேண்டும் . . . ஓடிப் போ! . . ."

ஹாரி தன் அதிர்ஷ்டத்தை வாழ்த்திக் கொண்டே அந்த அலுவலகத்திலிருந்து ஓட்டமெடுத்தான். முதலில் தாழ்வாரத்திற்கு வந்து, பின் அங்கிருந்து மாடிக்கு விரைந்தான். ஃபில்ச்சின் அலுவலகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு, பின் தண்டனை எதுவும் கிடைக்காமல் தப்பியது பள்ளியில் ஒரு பெரிய சாதனையாக இருக்க வேண்டும்.

"ஹாரி! ஹாரி! என் தந்திரம் வேலை செய்ததா?"

நிக் ஒரு வகுப்பறையிலிருந்து வழுக்கிக் கொண்டு வந்தது. பீவ்ஸுக்குப் பின்னால் கருப்பு மற்றும் தங்க நிறத்தில் இருந்த ஒரு பெரிய அலமாரி உடைந்து சிதறிக் கிடந்ததை ஹாரி கண்டான். அது பெரும் உயரத்திலிருந்து கீழே தூக்கிப் போடப்பட்டு இருந்ததுபோலத் தோன்றியது.

"ஃபில்ச்சின் அறைக்கு நேர்மேலே இருந்த அறையில் அந்த அலமாரியைத் தூக்கிப் போட்டு உடைக்க நான் பீவ்ஸை இணங்க வைத்தேன்," என்று நிக் ஆவலாகக் கூறியது. "அது அவரது கவனத்தைத் திசை திருப்பும் என்று நான் நினைத்தேன் –"

"ஆஹா, அது உன் வேலைதானா?" என்று ஹாரி நன்றிப்பெருக்குடன் கேட்டான். "ஆமாம், அது நன்றாகவே வேலை செய்தது. எனக்கு ஒழுங்கு நடவடிக்கைத் தண்டனைகூடக் கொடுக்கப்படவில்லை. நன்றி, நிக்."

Scanned by CamScanner

அவர்கள் அந்தத் தாழ்வாரத்தில் சேர்ந்தே நடந்தார்கள். நிக் இன்னும் சர் பேட்ரிக்கின் மறுப்புக் கடிதத்தைத் தன் கையில் வைத்திருந்ததை ஹாரி கவனித்தான்.

"உன்னுடைய 'ஹெட்லெஸ் ஹன்ட்' விஷயமாக என்னால் ஏதாவது செய்ய முடிந்தால் நன்றாக இருக்கும்," என்று அவன் கூறினான்.

அடுத்தக் கணம், நிக், தான் நின்ற இடத்திலேயே ஆணி அடித்தாற்போல நின்றது. ஹாரி அதன் உடலினுள் புகுந்து மறுபக்கமாக வெளியேறினான். தான் அவ்வாறு செய்யாமல் இருந்திருக்கலாமோ என்று பிறகு அவனுக்குத் தோன்றியது. ஏனெனில், கடுங்குளிரான நீரில் முழுக்குப் போட்டதுபோல இருந்தது அது.

"உன்னால் எனக்கு ஒரு காரியத்தைச் செய்ய முடியும்," என்று நிக் பரவசமாகக் கூறியது. "ஹாரி – ஆனால் நான் எனது விருப்பத்தை உன்னிடம் கூறினால், அது உன்னிடம் அளவுக்திகமாகக் கேட்பதுபோல இருக்குமோ என்று நினைக்கிறேன் . . . வேண்டாம் . . . நீ அதை விரும்ப மாட்டாய் . . ."

"பரவாயில்லை, சொல்," என்று ஹாரி கூறினான்.

நிக் தன்னை மதிப்புவாய்ந்ததாகக் காட்டிக் கொள்ளும் விதத்தில் தன்னைச் சரி செய்து கொண்டு, "வரும் ஹாலோவீன் தினம் எனது ஐநூறாவது இறந்தநாள்," என்று கூறியது.

"ஓ, அப்படியா?" என்று ஹாரி கேட்டான். அதற்காக வருத்தப்பட வேண்டுமா அல்லது சந்தோஷப்பட வேண்டுமா என்று அவனுக்கு உறுதியாகத் தெரியவில்லை. "சரி."

"அதற்காக நான் கீழே உள்ள பெரிய நிலவறை ஒன்றில் ஒரு விருந்து கொடுக்கவிருக்கிறேன். அதற்கு நாடு முழுவதிலும் இருந்து என் நண்பர்களை அழைத்திருக்கிறேன். நீயும் அதில் கலந்து கொண்டால், நான் அதை மிகப் பெரிய கௌரவமாகக் கருதுவேன். ரானும் ஹெர்மயனியும் உன்னுடன் வந்தால் இன்னும் சந்தோஷப்படுவேன் – ஆனால் நீ பள்ளியில் நடக்கவிருக்கும் ஹாலோவீன் தின விருந்திற்குப் போகத்தான் விரும்புவாய் என்று எனக்குத் தோன்றுகிறது." ஹாரி என்ன பதில் கூறப் போகிறான் என்று அது பதற்றத்துடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தது.

"இல்லை, இல்லை," என்று ஹாரி அவசர அவசரமாகக் கூறினான். "நான் வருகிறேன் –"

"ஆ பரம சந்தோஷம்! என் இறந்தநாள் விருந்தில் ஹாரி பாட்டர் கலந்து கொள்ளப் போகிறான்!" என்று கூறிய நிக், கொஞ்சம் தயங்கி, "நான் மிகவும் பயங்கரமாகவும் கொடூரமாகவும் தோற்றமளிப்பதாக உன்னால் சர் பேட்ரிக்கிடம் கூற முடியுமா என்று நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்," என்று சொல்லி முடித்தது.

"கண்டிப்பாக," என்று ஹாரி கூறினான்.

கிட்டத்தட்டத் தலையில்லாத நிக் அவனைப் பார்த்து வாயெல்லாம் பல்லாகச் சிரித்தது.

* * *

Scanned by CamScanner

ஹாரி ஒருவழியாக உடை மாற்றிக் கொண்டு, பொது அறையில் இருந்த ஹெர்மயனியோடும் ரானோடும் போய்ச் சேர்ந்து கொண்டான். "என்ன, இறந்தநாள் விழாவா?" என்று ஹெர்மயனி ஆர்வத்துடன் கேட்டாள். "உயிரோடு இருக்கும் எவரும் இதற்கு முன்பு இப்படிப்பட்ட ஒரு விருந்தில் கலந்து கொண்டிருக்க மாட்டார்கள் என்று நான் பந்தயம் கட்டத் தயார் – அது பயங்கர ஜாலியாக இருக்கும்!"

மாயத் திரவ வீட்டுப்பாடத்தில் பாதியை மட்டும் முடிந்திருந்த ரான், "ஒருவர் எதற்காகத் தன்னுடைய இறந்தநாளைக் கொண்டாட வேண்டும்?" என்று எரிச்சலுடன் கேட்டான். "எனக்கு அது மிகவும் அலுப்பூட்டும் ஒன்றாகத் தோன்றுகிறது –"

வெளியே மழை வெளுத்து வாங்கிக் கொண்டிருந்தது. ஆனால் உள்ளே அனைத்தும் பிரகாசமாகவும் சந்தோஷக் களிப்புடனும் இருந்தன. கணப்படுப்பிலிருந்து வந்த வெளிச்சம் அந்த அறையில் போடப்பட்டிருந்த எண்ணற்ற மென்மையான நாற்காலிகளில் பட்டு மின்னியது. அதில் உட்கார்ந்திருந்த மாணவர்கள் படித்துக் கொண்டும் பேசிக் கொண்டும் வீட்டுப்பாடங்களைச் செய்து கொண்டும் இருந்தனர். அங்கிருந்த ஃபிரெட்டும் ஜார்ஜும் ஃபிலிபஸ்டர் வாணவெடிகளை 'சலமேன்டர்' பல்லிக்கு ஊட்டினால் என்ன நடக்கும் என்பதைக் கண்டுபிடிக்க முனைந்து கொண்டிருந்தனர். 'மாயாஜாலப் பிராணிகளைப் பாதுகாத்தல்' வகுப்பிலிருந்து, ஃபிரெட், நெருப்பில் வசிக்கும் ஓர் ஆரஞ்சு நிற 'சலமேன்டர்' பல்லியைக் 'காப்பாற்றி' இருந்தான். அது இப்போது ஒரு மேசையின்மீது நீறு பூத்த நெருப்பாக இளைப்பாறிக் கொண்டிருந்தது. அதைச் சுற்றி, ஆர்வத்துடன் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு கூட்டம் குழுமியிருந்தது.

ஃபில்ச்சைப் பற்றியும் அந்தக் குவிக்ஸ்பெல் பயிற்சித் திட்டத்தைப் பற்றியும் ரானிடமும் ஹெர்மயனியிடமும் ஹாரி விவரிக்கவிருந்த நேரத்தில், திடீரென்று, அந்த 'சலமேன்டர்' பல்லி வானத்தில் சீறிட்டுக் கிளம்பியது. அது அந்த அறையைச் சுற்றிச் சுற்றி வந்தபோது வெடிகளையும் மத்தாப்புக்களையும் உமிழ்ந்து கொண்டே சென்றது. அதைக் கண்ட பெர்சி, ஃபிரெட்டையும் ஜார்ஜையும் கரகரப்பான குரலில் வசைபாடிக் கொண்டிருந்ததும், சலமேன்டரின் வாயிலிருந்து கண்களைக் கவரும் விதத்தில் பிரகாசமான ஆரஞ்சு வண்ண நட்சத்திரங்கள் வெளிவந்ததும், பிறகு அது கணப்படுப்பின் நெருப்பிற்குள் பாய்ந்ததும், அதைத் தொடர்ந்து அந்த நெருப்பினுள் ஏற்பட்ட வெடிச் சத்தங்களும் ஃபில்ச்சையும் குவிக்ஸ்பெல் அஞ்சலுறையையும் ஹாரியின் மனத்திலிருந்து தூக்கி எறிந்துவிட்டிருந்தன.

* * *

ஹாலோவீன் தினம் வந்தபோது, இறந்தநாள் விழாவிற்கு வருவதாகத் தான் அவசரப்பட்டு வாக்குக் கொடுத்துவிட்டிருந்ததை

Scanned by CamScanner

நினைத்து ஹாரி பொருமிக் கொண்டிருந்தான். அவனைத் தவிர, பள்ளியில் இருந்த மற்ற மாணவர்கள் அனைவரும் ஹாலோவீன் தின விருந்தை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். பேரரங்கு வழக்கம்போல நிஜ வௌவால்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஹாக்ரிட்டின் பிரம்மாண்டமான பூசணிக்காய்கள் பெரிய விளக்குகளின் வடிவத்தில் செதுக்கப்பட்டிருந்தன. அவை ஒவ்வொன்றினுள்ளும் மூன்று பேர் ஏறி அமரக்கூடிய அளவுக்கு அவை பெரிதாக இருந்தன. ஹாலோவீன் தினத்தன்று கேளிக்கைக்காக, நாட்டியமாடும் எலும்புக்கூடுகள் குழுவொன்றை டம்பிள்டோர் ஏற்பாடு செய்திருந்ததாக ஒரு வதந்தி உலா வந்து கொண்டிருந்தது.

"கொடுத்த வாக்கு, கொடுத்ததுதான்," என்று அதிகாரத் தொனியில் ஹெர்மயனி ஹாரிக்கு நினைவுபடுத்திக் கொண்டிருந்தாள். "இறந்தநாள் விழாவிற்கு வருவதாக நீ வாக்குக் கொடுத்துவிட்டிருக்கிறாய்."

அதனால் அன்றிரவு ஏழு மணிக்கு, ஹாரி, ரான், ஹெர்மயனி ஆகிய மூவரும், கூட்டம் அலைமோதிய பேரரங்கின் வாசலைக் கடந்து சென்று கொண்டிருந்தனர். அரங்கினுள்ளே ஜொலித்துக் கொண்டிருந்த தங்கத் தட்டுகளும் மெழுகுவர்த்திகளும் 'உள்ளே வாருங்கள், உள்ளே வாருங்கள்' என்று அவர்களுக்கு அழைப்பு விடுத்துக் கொண்டிருந்தன. ஆனால் அவர்கள் அந்த அரங்கைக் கடந்து நிலவறையை நோக்கி நடந்தனர்.

நிக்கின் விழாவிற்கு இட்டுச் சென்ற பாதையெங்கும் மெழுகுவர்த்திகள் அணிவகுத்து நின்றன என்றாலும், அவை குதூகலத்தைப் பிரதிபலிக்கவில்லை. நீண்ட, ஒல்லியான, அண்டங்காக்கை நிறத்தில் இருந்த அந்த மெழுகுவர்த்திகள், நீலநிறத்தில் இருந்த மங்கலான அமானுஷ ஒளியை அவர்கள்மீது உமிழ்ந்து கொண்டிருந்தன. அவர்கள் ஒவ்வொரு படியாக இறங்க இறங்க, வெப்பநிலையும் இறங்கிக் கொண்டே வந்தது. ஹாரி குளிரில் நடுங்கிக் கொண்டே தன்னுடைய அங்கியைத் தன்னைச் சுற்றி இறுக்கமாகச் சுற்றிக் கொண்டபோது, ஒரு பெரிய கரும்பலகையில் ஒரே நேரத்தில் ஆயிரம் விரல் நகங்களால் பிராண்டியது போன்ற ஒரு சத்தம் அவனது காதுகளில் விழுந்தது.

"இதன் பெயர்தான் இசையா?" என்று ரான் கிசுகிசுத்தான். அவர்கள் ஒரு திருப்பத்தில் திரும்பியபோது, கருப்பு நிற வெல்வெட் திரைச்சீலைகள் தொங்கவிடப்பட்டிருந்த ஒரு கதவருகே நிக் நின்று கொண்டிருந்ததைக் கண்டனர்.

துக்கம் தூக்கலாக இருந்த ஒரு குரலில், "என்னருமை நண்பர்களே! வருக, வருக," என்று நிக் அவர்களை வரவேற்றது. "நீங்கள் வந்தது குறித்து எனக்கு மிக்க மகிழ்ச்சி."

நிக், அழகிய குஞ்சத்துடன்கூடிய தனது தொப்பியைக் கழற்றி, அவர்களுக்குக் குனிந்து வணக்கம் தெரிவித்து அவர்களை உள்ளே அழைத்துச் சென்றது.

Scanned by CamScanner

உள்ளே இருந்த காட்சி, விவரணத்திற்கு அப்பாற்பட்டு இருந்தது. அந்த நிலவறை முழுவதும், வெண்முத்து நிறத்தில், ஒளி ஊடுருவிச் செல்லக்கூடிய நூற்றுக்கணக்கான உருவங்கள் நிறைந்திருந்தன. அவற்றில் பெரும்பாலானவை நடனத் தளத்தில் நெருக்கியடித்து மிதந்து கொண்டு, கருப்புத் திரைச் சீலைகளால் உருவாக்கப்பட்டிருந்த மேடையிலிருந்த இசைக் குழுவினரின் முப்பது சங்கீத ரம்பங்களிலிருந்து வந்த கோரமான அதிர்விசைக்கு ஏற்பச் சுழல் நடனம் ஆடிக் கொண்டிருந்தன. மேலே தொங்கிக் கொண்டிருந்த சரவிளக்கு இன்னும் ஓராயிரம் கருப்பு மெழுகுவர்த்திகளால் அந்த அறையை நடுநிசி நீலநிறத்தில் குளிப்பாட்டிக் கொண்டிருந்தது. அவர்கள் மூவரின் மூச்சுக்காற்றும் பனிப்புகைபோல வெளிவந்து கொண்டிருந்தது. தாங்கள் திடீரென்று உறைபதனப் பெட்டி ஒன்றிற்குள் இறங்கியிருந்ததுபோல அவர்களுக்குத் தோன்றியது.

ஹாரி தன் உடலைச் சூடேற்றிக் கொள்ளும் பொருட்டு, "நாம் இந்த இடத்தைச் சுற்றிப் பார்க்கலாமா?" என்று கேட்டான்.

"ஜாக்கிரதை! யாருக்கு ஊடாகவும் புகுந்துவிடாதீர்கள்," என்று ரான் நடுக்கத்துடன் கூறினான். அவர்கள் அந்த நடனத் தளத்தைச் சுற்றி ஓரமாக நடக்கத் துவங்கினர். பொலிவின்றி இருந்த கன்னிகாஸ்திரிகளின் கும்பல் ஒன்றையும், சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்த ஒரு முரட்டு மனிதனையும், தன் நெற்றியைத் துளைத்திருந்த அம்புடன் இருந்த ஒரு போர் வீரனுடன் பேசிக் கொண்டிருந்த, ஹஃபில்பஃப் அணியைச் சேர்ந்த, எப்போதுமே சந்தோஷமாக இருந்த குண்டு ஃபிரையர் ஆவியையும் அவர்கள் கடந்து சென்றனர். ஒட்டி உலர்ந்து போயிருந்த முகத்துடனும், வெள்ளி ரத்தக் கறைகளுடனும் இருந்த ஸ்லிதரின் அணியைச் சேர்ந்த கொலைகார நவாப் ஆவிக்கு மற்றபிற ஆவிகள் முக்கியத்துவம் கொடுத்துப் பேசிக் கொண்டிருந்ததைக் கண்டு ஹாரி ஆச்சரியப்படவில்லை.

திடீரென்று அப்படியே நின்றுவிட்ட ஹெர்மயனி, "ஐயோ!" என்று அலறினாள். "திரும்புங்கள், திரும்புங்கள்! முனகல் மர்ட்டிலுடன் பேச நான் விரும்பவில்லை."

அவர்கள் தாங்கள் வந்த வழியே கொஞ்ச தூரம் வேகமாகப் பின்னால் வந்த பிறகு, ஹாரி, "யார் அது?" என்று கேட்டான்.

"முதல் மாடியிலிருக்கும் மாணவியரின் குளியலறையில் வாசம் புரியும் ஆவி அது," என்று ஹெர்மயனி கூறினாள்.

"குளியலறை ஆவியா?"

"ஆமாம். அந்த ஆவி பெரும் ரகளை செய்து அந்த இடத்தை வெள்ளக்காடாக ஆக்கிவிட்டிருந்ததால், கடந்த வருடம் முழுவதும் அந்தக் குளியலறை மூடப்பட்டிருந்தது. நான் ஒருபோதும் அங்கு சென்றதில்லை. அது அங்கே காத்துக் கொண்டிருக்கும்போது அங்கே போவதைப் பற்றி நினைத்துக்கூட பார்க்க முடியாது –"

"அங்கே பார்," என்று ரான் கத்தினான். "சாப்பாடு!"

Scanned by CamScanner

அந்தப் பாதாள அறையின் மற்றொரு மூலையில் ஒரு நீண்ட மேசை போடப்பட்டிருந்தது. அதுவும் கருப்பு வெல்வெட் துணியால் மூடப்பட்டிருந்தது. அவர்கள் அதை நோக்கி ஆவலாகச் சென்றனர். ஆனால் அடுத்த நிமிடம் அவர்கள் நிலைகுலைந்து அந்த இடத்திலேயே ஆணி அடித்தாற்போல நின்றுவிட்டனர். அங்கிருந்து கிளம்பிய துர்நாற்றம் குடலைப் பிடுங்கியது. நேர்த்தியான வெள்ளித் தட்டுகளில் அழுகிய மீன்கள் வைக்கப்பட்டிருந்தன. மரக்கரிபோலக் கருக்கப்பட்டிருந்த கேக்குகள் பல தாம்பாளங்களில் குவித்து வைக்கப்பட்டிருந்தன. சிறப்பான புழுக் கொத்திறைச்சியும், பச்சை நிறப் பூஞ்சை பிடித்திருந்த ஒரு பெரிய சீஸ் கட்டியும் அங்கிருந்தன. எல்லாவற்றிற்கும் மகுடம் வைத்தாற்போல, மத்தியில் கல்லறைக் கல்லின் வடிவில் பிரம்மாண்டமான சாம்பல் நிற கேக் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. தார்போலத் தோற்றமளித்த ஒன்றினால் அதில் இந்த எழுத்துக்கள் எழுதப்பட்டிருந்தன:

சர் நிக்கோலஸ் டே மிம்ஸி பார்ப்பிங்டன்
இறந்த நாள்: 31 அக்டோபர் 1492

படு குண்டாக இருந்த ஆவி ஒன்று, அந்த மேசையின் அருகே வந்து குனிந்து தன் வாயைத் திறந்தவாறே, அதில் வைக்கப்பட்டிருந்த ஒரு நாற்றமடித்த சால்மன் மீனின் ஊடாக அதைக் கடந்து சென்றதை ஹாரி பிரமிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

"அதன் ஊடாக நடக்கும்போது உன்னால் அதைச் சுவைக்க முடியுமா?" என்று ஹாரி அதனிடம் கேட்டான்.

"கிட்டத்தட்ட," என்று சோகமாகக் கூறிவிட்டு அது அங்கிருந்து மிதந்து சென்றது.

ஹெர்மயனி தன் மூக்கை இறுக்கிப் பிடித்துக் கொண்டே அந்தப் புழுக் கொத்திறைச்சிக்கு அருகே குனிந்து அதை உற்றுப் பார்த்துவிட்டு, "அதன் நெடி தூக்கலாக இருக்க வேண்டும் என்பதற்காக, தேவைக்கு அதிகமாக அவர்கள் அதை அழுகவிட்டுள்ளனர்," என்று விஷயம் தெரிந்தவள்போலக் கூறினாள்.

"எனக்கு வயிற்றைப் புரட்டிக் கொண்டு வருகிறது. நாம் கிளம்பலாமா?" என்று ரான் கேட்டான்.

அவர்கள் முழுவதுமாகத் திரும்பிக்கூட இருக்க மாட்டார்கள். அப்போது ஒரு சிறிய உருவம் மேசைக்கு அடியிலிருந்து வெளிப்பட்டு அந்தரத்தில் அவர்கள் முன் வந்து நின்றது.

"ஹலோ, பீவ்ஸ்," என்று ஹாரி எச்சரிக்கையுடன் கூறினான்.

எப்போதும் சத்தங்களை ஏற்படுத்திய, சாமான்களைத் தூக்கிப் போட்டு உடைப்பதை வழக்கமாகக் கொண்டிருந்த பீவ்ஸ் ஆவி, அவர்களைச் சுற்றியிருந்த மற்றபிற ஆவிகளைப் போலன்றி, வெளுத்தும் ஒளிபுகுமாறும் காணப்படவில்லை. மாறாக, அது பிரகாசமான ஆரஞ்சு நிறத் தொப்பி ஒன்றையும் ஒரு சுழல் டையையும் அணிந்திருந்தது. தனது கொடூரமான முகத்தில் குள்ளநரித்தனமான ஒரு பெரிய புன்னகையையும் அது படரவிட்டிருந்தது.

Scanned by CamScanner

"கொறிக்க ஏதாவது வேண்டுமா?" என்று கேட்டுவிட்டு, பூஞ்சை படர்ந்திருந்த நிலக்கடலைக் கிண்ணம் ஒன்றை அது அவர்களிடம் நீட்டியது.

"கொடுத்ததற்கு நன்றி! ஆனால் வேண்டாம்," என்று ஹெர்மயனி கூறினாள்.

"நீ அந்த அப்பாவி மர்ட்டிலைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தது என் காதில் விழுந்தது," என்று பீவ்ஸ் கூறியது. அதன் கண்களில் குறும்புக் கொப்பளித்துக் கொண்டிருந்தது. "ஆனால் நீ மர்ட்டிலைப் பற்றிப் பேசியது மரியாதையற்ற முறையில் இருந்தது." பின் அது ஆழமாக மூச்சிழுத்துக் கொண்டு, அடிக்குரலில், "ஓ! மர்ட்டில்!" என்று கத்தியது.

"ஓ, பீவ்ஸ், தயவு செய்து நான் கூறியதை மர்ட்டிலிடம் சொல்லிவிடாதே. அது அதற்கு மனவேதனையை ஏற்படுத்தும்," என்று ஹெர்மயனி கிசுகிசுப்பான குரலில் மன்றாடினாள். "நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை – **ஹலோ மர்ட்டில்!**"

ஒரு சிறுமியைப்போல இருந்த அந்த ஆவி அவர்கள் அருகே மிதந்து வந்தது. அது ஹாரி அதுவரை பார்த்திருந்ததிலேயே மிகவும் சோகமான ஒரு முகத்தைக் கொண்டிருந்தது. பாதிப் படிந்து கிடந்த முடியின் பின்னாலும், வெள்ளை வெளேரென்று இருந்த ஒரு தடிமனான மூக்குக்கண்ணாடியின் பின்னாலும் அதன் முகம் மறைந்திருந்தது.

"என்ன?" என்று அந்த ஆவி வேண்டா வெறுப்பாகக் கேட்டது.

ஹெர்மயனி போலியாகத் தன் குரலில் உற்சாகத்தை வரவழைத்துக் கொண்டு, "சௌக்கியமா, மர்ட்டில்?" என்று கேட்டாள். "உன்னைக் குளியலறைக்கு வெளியே பார்த்ததில் சந்தோஷம்!"

சூழ்ச்சித் தொக்கி நின்ற ஒரு குரலில், "ஹெர்மயனி இப்போதுதான் உன்னைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தாள்," என்று பீவ்ஸ் மர்ட்டிலின் காதில் கூறியது.

ஹெர்மயனி பீவ்ஸை முறைத்துக் கொண்டே, "நான் – நான் – இன்றிரவு நீ மிகவும் அழகாகத் தோன்றுவதாக நான் கூறிக் கொண்டிருந்தேன்," என்று மர்ட்டிலிடம் கூறினாள்.

மர்ட்டில் ஆவி ஹெர்மயனியை சந்தேகக் கண்ணோடு பார்த்தது.

"நீ என்னைப் பரிகசிக்கிறாய்," என்று மர்ட்டில் கூறியது. ஒளிபுகக்கூடிய விதத்தில் இருந்த அதன் சின்னஞ்சிறு கண்களிலிருந்து வெள்ளிக் கண்ணீர் வடிந்தது.

"இல்லையில்லை – உண்மையில் நான் உன்னைப் பரிகசிக்கவில்லை – மர்ட்டில் மிகவும் அழகாகத் தோன்றுவதாகத்தானே நான் கூறினேன்?" என்று கூறிவிட்டு, ஹெர்மயனி, ஹாரி மற்றும் ரானின் விலா எலும்புகளில் வலிக்கும்படி இடித்தாள்.

"ஆமாம், இவள் . . ."

"அது உண்மைதான்! . . ."

Scanned by CamScanner

"என்னிடம் பொய் சொல்லாதே," என்று மர்ட்டில் தேம்பியது. அதன் முகத்திலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் கொட்டியது. அதன் தோளுக்குப் பின்னால் இருந்து பீவ்ஸ் சந்தோஷமாக இளித்துக் கொண்டிருந்தது. "மக்கள் என்னைப் பற்றி என் முதுகிற்குப் பின்னால் என்ன கூறிக் கொண்டிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாதென்று நீ நினைக்கிறாயா? குண்டு மர்ட்டில்! அவலட்சணமான மர்ட்டில்! பரிதாபமான மர்ட்டில்! எடுபிடி மர்ட்டில்! முனகல் மர்ட்டில்!

பீவ்ஸ் அதன் காதில், "நீ ஒன்றை விட்டுவிட்டாய்! புள்ளிமுகக்காரி மர்ட்டில்!" என்று கத்தியது.

முனகல் மர்ட்டில் வேதனையுடன் தேம்பித் தேம்பி அழுது கொண்டே அந்த நிலவறையைவிட்டு ஓடியது. பூஞ்சை படர்ந்திருந்த நிலக்கடலையை மர்ட்டில்மீது தூக்கி எறிந்து கொண்டே, "புள்ளிமுகக்காரி மர்ட்டில்! புள்ளிமுகக்காரி மர்ட்டில்!" என்று கத்தியபடி, பீவ்ஸ் ஆவி அவள் பின்னால் ஓடியது.

"ஐயோ பாவம்!" என்று ஹெர்மயனி கூறினாள்.

நிக் ஆவி அக்கூட்டத்திலிருந்து அவர்களை நோக்கி மீண்டும் வந்தது.

"எப்படிப் போய்க் கொண்டிருக்கிறது?"

"நன்றாகவே போகிறது," என்று அவர்கள் பொய் கூறினர்.

நிக் பெருமையுடன், "நிறையப் பேர் வந்திருக்கிறார்கள்," என்று கூறியது. "இதற்காக 'ஒப்பாரி விதவை' கென்ட்டிலிருந்து வந்திருக்கிறது . . . என் சொற்பொழிவிற்கான வேளை வந்துவிட்டது. நான் போய் இசைக் குழுவின் காதில் ஒரு வார்த்தை போட்டுவிட்டு வருகிறேன் . . ."

ஆனால் சரியாக அக்கணத்தில் இசைக்குழு தன் கச்சேரியை நிறுத்தியது. அவர்களும் அந்த நிலவறையில் இருந்த மற்றவர்களும் மௌனமானார்கள். வேட்டைக் கொம்பொலி கேட்டதும் எல்லோரும் பரவசமடைந்தனர்.

"ஐயோடா சாமி!" என்று நிக் கசப்புடன் கூறியது.

அந்த நிலவறைச் சுவர்களின் ஊடாக ஒரு டஜன் குதிரை ஆவிகள் தாவிக் குதித்தன. ஒவ்வொரு குதிரையின்மீதும் தலையற்ற ஒரு குதிரைவீரனின் ஆவி அமர்ந்திருந்தது. கூடியிருந்த ஆவிகள் காட்டுத்தனமாகக் கைதட்டின. ஹாரியும் கைதட்டத் துவங்கினான். ஆனால் நிக்கின் முகத்தைப் பார்த்ததும் அவன் தன் கைதட்டலைப் பாதியிலேயே நிறுத்திக் கொண்டான்.

அக்குதிரைகள் பேய்ப் பாய்ச்சல் பாய்ந்து அந்த அறையின் மத்தியில் வந்து நின்றன. முன்னால், தாடியுடன் இருந்த தன் தலையைத் தன் கையில் பிடித்திருந்த ஒரு பெரிய ஆவி, கொம்பொலி எழுப்பிக் கொண்டே, குதிரையிலிருந்து கீழே குதித்து, கூட்டத்திலிருந்த எல்லோரையும் பார்ப்பதற்கு வசதியாகத் தன் தலையை உயர்த்திப் பிடித்தது (எல்லோரும் சிரித்தனர்). பின் அது நிக்கை நோக்கி வந்து, தன் தலையைத் தன் கழுத்தில் அமுக்கித் திணித்துக் கொண்டது.

Scanned by CamScanner

"நிக்! எப்படி இருக்கிறாய்? தலை இன்னும் கழுத்தில் ஒட்டிக் கொண்டுதான் இருக்கிறதா?"

அது வெடிச் சிரிப்பு ஒன்றை உதிர்த்துவிட்டு நிக்கின் தோளில் தட்டியது.

"பேட்ரிக், உங்கள் வரவு நல்வரவாகட்டும்," என்று நிக் இறுக்கமாகக் கூறியது.

ஹாரி, ரான், ஹெர்மயனி ஆகியோரைப் பார்த்துவிட்டு, பேட்ரிக் ஆவி, "அட, உயிருள்ள மனிதர்கள்!" என்று கூவியது. பின் தன் தலை மீண்டும் கீழே விழுவதற்காக, வியப்பால் துள்ளிக் குதிப்பதுபோல பாவனை செய்தது. கூட்டம் மீண்டும் கொக்கரித்தது.

"நல்ல வேடிக்கை!" என்று நிக் இறுகிய முகத்துடன் கூறியது.

தரையில் கிடந்த பேட்ரிக்கின் தலை, "கவலைப்படாதே நிக்!" என்று கூறியது. பிறகு மற்றவர்களைப் பார்த்து, "நாங்கள் நிக்கை எங்களுடைய 'ஹெட்லெஸ் ஹன்ட்'டில் சேர்த்துக் கொள்ள மறுப்பது குறித்து நிக்கிற்குப் பெரும் மனவருத்தம். ஆனால் நிக்கைப் பார் –" என்று ஆரம்பித்தது.

தன்னை அர்த்தத்துடன் பார்த்துக் கொண்டிருந்த நிக் ஆவியால் தூண்டப்பட்ட ஹாரி, அவசர அவசரமாக, "நிக் பயங்கரமாக பயமுறுத்தும் ஆவியாக இருப்பதாக நான் நினைக்கிறேன். மேலும் –" என்று கூறத் துவங்கினான்.

"ஹா!" என்று பேட்ரிக் கத்தியது. "உன்னை அப்படிக் கூறுமாறு நிக் உன்னிடம் சொல்லியிருக்கும், அப்படித்தானே?"

நிக் மேடையை நோக்கி விறுவிறுப்புடன் நடந்து சென்று, அங்கு வீசிக் கொண்டிருந்த நீல ஒளியில் நனைந்து கொண்டு, "அமைதி! அமைதி! எல்லோரும் தயார் என்றால், நான் என் பேச்சைத் துவங்குகிறேன்," என்று சத்தமாகக் கூறியது.

"காலமாகிவிட்ட என்னுடைய துக்ககரமான பிரபுக்கள், சீமாட்டிகள், மற்றும் சீமான்களே, நான் மிகுந்த மன வருத்தத்துடன் . . ."

அதற்கு மேல் அது பேசியதை யாரும் கேட்கவில்லை. பேட்ரிக் ஆவியும் 'ஹெட்லெஸ் ஹன்ட்'டைச் சேர்ந்த பிற உறுப்பினர்களும் 'தலையுருட்டும் ஹாக்கி' விளையாட்டைத் துவக்கியிருந்தனர். அங்கிருந்தவர்கள் அவர்கள் விளையாடுவதைப் பார்க்கத் திரும்பினர். பார்வையாளர்களைத் தன் பக்கம் இழுக்க நிக் ஆவி வீணாக முயற்சித்தது. ஆனால் பேட்ரிக்கின் தலை பலத்தக் கரகோஷத்தின் பின்னணியில் தன்னைத் தாண்டிப் பறந்தவுடன், நிக் ஆவி அந்த முயற்சியைக் கைவிட்டது.

ஹாரிக்கு இப்போது பயங்கரமாகக் குளிரெடுக்கத் துவங்கியிருந்தது. பசியைப் பற்றிச் சொல்லவே வேண்டியிருக்கவில்லை.

"இதற்கு மேல் நமக்குத் தாங்காது," என்று ரான் முனகினான். இசைக்குழு தன் கச்சேரியை மீண்டும் துவக்கியது. அங்கிருந்த ஆவிகள் மீண்டும் நடனத் தளத்திற்குத் திரும்பின.

Scanned by CamScanner

"நாம் இங்கிருந்து கிளம்பலாம்," என்று ஹாரியும் ஒப்புக் கொண்டான்.

தங்களைப் பார்த்தவர்கள் அனைவருக்கும் தலையசைப்பையும் புன்முறுவலையையும் தெரிவித்துக் கொண்டே அவர்கள் மூவரும் கதவை நோக்கி நகர்ந்தனர். அடுத்த நிமிடம், கருப்பு மெழுகுவர்த்திகள் எரிந்து கொண்டிருந்த தாழ்வாரத்தில் அவர்கள் வேகமாகப் போய்க் கொண்டிருந்தனர்.

பேரரங்கிற்கு இட்டுச் சென்ற படிக்கட்டுகளில் மூவருக்கும் முன்னால் வேகமாகத் தாவி ஏறிக் கொண்டிருந்த ஹாரி, "பாயசமாவது மிச்சமிருக்கும் என்று நினைக்கிறேன்," என்று நம்பிக்கையோடு கூறினான்.

அப்போது அவன் காதுகளுக்கு அது கேட்டது.

". . . கிழி . . . குதறு . . . கொல் . . ."

அதே குரல். லாக்ஹார்ட்டின் அலுவலகத்தில் அவன் கேட்ட, ரத்தத்தை உறைய வைத்த அதே கொலைகாரக் குரல்.

அவன் தட்டுத் தடுமாறி அந்தக் கற்சுவரைப் பிடித்து நின்று கொண்டு, மங்கலாக இருந்த அத்தாழ்வாரத்தில் மேலும் கீழுமாகத் தன் கண்களைச் சுருக்கிக் கொண்டு பார்த்தபடி, அக்குரலைத் தன்னால் முடிந்த அளவு உன்னிப்பாகக் கேட்க முயன்றான்.

"ஹாரி, நீ என்ன செய்து கொண்டிருக் –"

"அதே குரல் – கொஞ்சம் சத்தம் போடாதே! –"

". . . படு பயங்கரப் பசி . . . வெகு நாட்களாக . . ."

"கவனமாகக் கேளுங்கள்!" என்று ஹாரி அவசர அவசரமாகக் கூறினான். ரானும் ஹெர்மயனியும் உறைந்து போய் அவனையே பார்த்துக் கொண்டு நின்றனர்.

". . . கொல் . . . இது கொல்வதற்கான வேளை . . ."

அக்குரல் பலவீனமடைந்து கொண்டிருந்தது. அது அங்கிருந்து விலகிப் போய்க் கொண்டிருந்தது என்பது ஹாரிக்கு உறுதியாகத் தெரிந்தது. அக்குரல் அங்கிருந்து மேல் நோக்கிச் சென்றதுபோல அவனுக்குத் தோன்றியது! பயமும் பரவசமும் ஒரே நேரத்தில் அவனை ஆட்கொண்டன. அங்கிருந்த இருண்ட மேற்கூரையை அவன் பார்த்தான். மேல் நோக்கி அதனால் எப்படிப் போக முடியும்? கற்களால் ஆன மேற்கூரை ஒரு பொருட்டே இல்லாத மாயாவியா அது?

"இப்படிப் போகலாம்," என்று கத்திவிட்டு, ஹாரி, பேரரங்கிற்கு இட்டுச் சென்ற படிக்கட்டுகளில் ஏறி ஓடினான். ஹாலோவீன் தின விருந்தைச் சுவைத்துக் கொண்டிருந்தவர்களின் பேச்சுச் சத்தம் அங்கு பெரிதாக எதிரொலித்துக் கொண்டிருந்ததால், அங்கு அக்குரலை எதிர்பார்ப்பது முட்டாள்தனம் என்பதை உணர்ந்த ஹாரி, முதல் மாடிக்கு இட்டுச் சென்ற அந்தச் சலவைக்கல் படிக்கட்டுகளில் தாவி ஏறி ஓடினான். ரானும் ஹெர்மயனியும் அவனுக்குப் பின்னால் தடதடவென்று ஓடி வந்து கொண்டிருந்தனர்.

Scanned by CamScanner

"ஹாரி, நாம் என்ன பண்ணிக் –"

"உஷ்!"

ஹாரி தன் காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டான். அவர்கள் நின்று கொண்டிருந்த இடத்திற்கு மேலே இருந்த மாடியில் இருந்து, மேலும் தேய்ந்து கொண்டிருந்த அக்குரல் கேட்டது. **". . . எனக்கு ரத்த வாடை அடிக்கிறது . . . எனக்கு ரத்த வாடை அடிக்கிறது!"**

அவனுக்கு வயிற்றைப் புரட்டியது. "அது யாரையோ கொல்லப் போகிறது!" என்று அவன் கத்தினான். ரான், ஹெர்மயனி ஆகிய இருவரின் முகங்களில் தோன்றிய ஆச்சரிய ரேகைகளை அவன் அலட்சியம் செய்துவிட்டு, மூன்று மூன்று படிகளாகத் தாவி ஏறி அடுத்த மாடிக்கு ஓடினான். ஓடிக் கொண்டிருந்தபோதே அவன் தன் காலடி ஓசையையும்மீறி அக்குரலைக் கேட்க முயற்சித்தான்.

ஹாரி இரண்டாவது மாடியெங்கும் தடதடவென ஓடினான். அவனுக்குப் பின்னால் ரானும் ஹெர்மயனியும் மூச்சிறைக்க ஓடி வந்து கொண்டிருந்தனர். ஆளரவமற்று இருந்த கடைசித் தாழ்வாரத்தை நோக்கித் திரும்பும்வரை அவர்கள் நிற்கவே இல்லை.

ரான் தன் முகத்தில் வழிந்த வியர்வையைத் துடைத்தபடி, "ஹாரி, என்ன இதெல்லாம்?" என்று கேட்டான். "எனக்கு எதுவும் கேட்கவில்லை . . ."

ஆனால் திடீரென்று ஹெர்மயனி தாழ்வாரத்தின் கோடியைச் சுட்டிக்காட்டினாள். அதிர்ச்சியில் அவளுக்கு முதலில் பேச்சே வரவில்லை.

"அங்கே பார்!"

அவர்களுக்கு நேர் எதிரே இருந்த சுவரில் எதுவோ மின்னிக் கொண்டிருந்தது. இருட்டில் கண்களை இடுக்கிப் பார்த்துக் கொண்டே, மெதுவாக அடிமேல் அடியெடுத்து வைத்து அதை அவர்கள் அணுகினர். இரண்டு சன்னல்களுக்கு இடையே இருந்த சுவரில் ஓரடி உயர வார்த்தைகள் அலங்கோலமாக எழுதப்பட்டிருந்தன. ஆடிக் கொண்டிருந்த தீப்பந்தங்களின் ஒளியில் அந்த வார்த்தைகள் மங்கலாக மினுமினுத்துக் கொண்டிருந்தன.

ரகசியங்கள் அடங்கிய பாதாள அறை திறக்கப்பட்டுவிட்டது!
வாரிசுதாரர்களின் எதிரிகள் ஜாக்கிரதை!

"அது என்ன? அதன் கீழே எதுவோ தொங்கிக் கொண்டிருக்கிறதே, அது என்ன?" என்று ரான் தன் குரலில் நடுக்கத்தோடு கேட்டான்.

அவர்கள் அதை நெருங்கியபோது, ஹாரி கிட்டத்தட்ட வழுக்கி விழுந்துவிட்டான். அவனது காலுக்குக் கீழே தரையில் தண்ணீர் ஒரு குட்டையைப்போலத் தேங்கிக் கிடந்தது. ரானும் ஹெர்மயனியும் அவனைத் தாங்கிப் பிடித்துக் கொண்டார்கள். சுவரில் எழுதப்பட்டிருந்த அந்தச் செய்தியை அவர்கள் மெதுவாக நெருங்கிக் கொண்டிருந்தபோது அவர்களுடைய கண்கள் அதன் கீழே இருந்த

Scanned by CamScanner

கரிய நிழலின்மீது நிலை கொண்டிருந்தன. அது என்னவென்று அவர்கள் மூவருக்கும் ஒரே நேரத்தில் தெரிய வந்ததும், அவர்கள் பின்னால் துள்ளிக் குதித்தனர். தேங்கிக் கிடந்த தண்ணீர் நாலாப்பக்கமும் படீரென்று தெறித்தது.

கண்காணிப்பாளர் ஃபில்ச்சின் நாரிஸ் பூனை, சுவரில் தீப்பந்தங்கள் மாட்டி வைக்கப்படும் தாங்கியில் தலைகீழாகத் தொங்கவிடப்பட்டிருந்தது. அப்பூனையின் உடல் விறைப்பாக இருந்தது. அதன் கண்கள் அகலமாக விரிந்த நிலையில் வெறித்துக் கொண்டிருந்தன.

ஒருசில கணங்களுக்கு அவர்கள் அசையவே இல்லை. பின் ரான், "நாம் இந்த இடத்தை உடனடியாகக் காலி செய்துவிடலாம்," என்று கூறினான்.

"நாம் உதவ முயற்சித்தால் என்ன?" என்று ஹாரி தயங்கித் தயங்கிக் கேட்டான்.

"என்னை நம்பு," என்று ரான் கூறினான். "நாம் இந்த இடத்தில் இருந்தோம் என்று கண்டுபிடிக்கப்படுவது நமக்கு நல்லதல்ல."

ஆனால் அதற்குள் மிகவும் தாமதமாகிவிட்டிருந்தது. தூரத்தில் இடி இடித்தது போன்ற முழக்கம் விருந்து முடிந்துவிட்டிருந்ததை அவர்களுக்கு அறிவித்தது. தாழ்வாரத்தில் அவர்கள் நின்று கொண்டிருந்த இடத்தின் இரு பக்கங்களிலிருந்தும் மாடிப்படிகளில் ஏறி வந்து கொண்டிருந்த நூற்றுக்கணக்கான மாணவர்களின் காலடி ஓசையும், நன்றாக விருந்துண்டிருந்த மக்களின் சத்தமான, மகிழ்ச்சியான பேச்சுக் குரல்களும் கேட்டன. அடுத்தக் கணம், இருபுறத்தில் இருந்தும் மாணவர்கள் அவர்களை நெருங்கிக் கொண்டிருந்தனர்.

முன்னால் வந்து கொண்டிருந்தவர்கள் தங்களுக்கு எதிரே தொங்கிக் கொண்டிருந்த பூனையைப் பார்த்ததும், அக்கூட்டத்தின் அரட்டைகளும் பிற சத்தங்களும் அப்படியே நின்றுவிட்டன. ஹாரியும் ரானும் ஹெர்மயனியும் அந்தத் தாழ்வாரத்தின் நடுவில் தன்னந்தனியே நின்று கொண்டிருந்தனர். அந்தக் கோரக் காட்சியைப் பார்க்க அக்கூட்டம் முண்டியடித்துக் கொண்டிருந்தபோது, அங்கே அமைதி கோலோச்சியது.

பின் அந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு யாரோ கத்தினர்.

"வாரிசுதாரர்களின் எதிரிகளே ஜாக்கிரதை! அடுத்து நீங்கள்தான் ஈன ரத்தப் பிறவிகளே!"

அது மால்ஃபோய். கூட்டத்தினரை முட்டித் தள்ளிக் கொண்டு அவன் முன்னே வந்திருந்தான். ஆடாமல் அசையாமல் தொங்கிக் கொண்டிருந்த அப்பூனையைப் பார்த்து அவன் ஓர் அசட்டுச் சிரிப்பை உதிர்த்தபோது, அவனது உயிரற்றக் கண்கள் உயிர்பெற்று எழுந்திருந்தன. வழக்கமாக வெளுத்துப் போயிருந்த அவனது முகம் ரத்தச் சிவப்பாக மாறியிருந்தது.

Scanned by CamScanner

அத்தியாயம் ஒன்பது

சுவரில் எழுதப்பட்டிருந்த வாசகம்

"இங்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது?"

ஃபில்ச் கூட்டத்தை விலக்கிக் கொண்டு அங்கு வந்தார். அவர் நிச்சயமாக மால்ஃபாயின் கத்தலால் கவரப்பட்டிருக்க வேண்டும். பின் அவர் நாரிஸ் பூனையைப் பார்த்ததும், தனது முகத்தில் பீதி தாண்டவமாடப் பின்னால் போய் விழுந்தார்.

"ஐயோ, என் பூனை! நாரிஸுக்கு என்னவாயிற்று?" என்று அவர் கூப்பாடு போட்டார்.

பிதுங்கிக் கொண்டிருந்த அவரது கண்கள் ஹாரியின்மேல் நிலைத்தன.

"நீ என் பூனையைக் கொலை செய்துவிட்டாய்! நீ அதைக் கொன்றுவிட்டாய். நான் உன்னைக் கொல்லாமல் விடமாட்டேன். நான் உன்னைக் –"

"ஃபில்ச்!"

டம்பிள்டோர் அந்த இடத்திற்கு வந்து சேர்ந்திருந்தார். அவரைத் தொடர்ந்து ஏராளமான ஆசிரியர்களும் வந்தனர். அடுத்த வினாடி, அவர் ஹாரியையும் ரானையும் ஹெர்மயனியையும் கடந்து சென்று தீப்பந்த விளக்குத் தாங்கியிலிருந்து அப்பூனையை விடுவித்தார்.

அவர் ஃபில்சைப் பார்த்து, "ஃபில்ச், என்னுடன் வாருங்கள்!" என்று கூறினார். "ஹாரி, ரான், ஹெர்மயனி, நீங்களும்தான்!"

லாக்ஹார்ட் ஆவலுடன் முன்னால் வந்தார்.

"தலைமையாசிரியரே, என் அலுவலகம்தான் மிக அருகே இருக்கிறது. ஒரு மாடி மேலை போக வேண்டும், அவ்வளவுதான். அதை நீங்கள் தாராளமாக உபயோகி –"

"நன்றி, லாக்ஹார்ட்," என்று டம்பிள்டோர் கூறினார்.

அமைதியாக இருந்த கூட்டம் அவர்களுக்காகப் பிரிந்து வழிவிட்டது. முக்கியமானவராக உணர்ந்த லாக்ஹார்ட், டம்பிள்டோருக்குப் பின்னால் வேகமாகச் சென்றார். பேராசிரியர் மெக்கானகல்லும் ஸ்னேப்பும் அவரைத் தொடர்ந்தனர்.

இருளடைந்திருந்த லாக்ஹார்ட்டின் அலுவலகத்திற்குள் அவர்கள் நுழைந்தபோது, அந்த அறையின் சுவர்களில் திடீரென்று ஏகப்பட்ட விஷயங்கள் நிகழத் துவங்கின. சுவர்ப்படங்களில் இருந்த

Scanned by CamScanner

லாக்ஹார்ட்டுகள் தங்கள் தலைமுடி கன்னாபின்னாவென்று பறக்க ஓடி ஒளியத் தலைப்பட்டதை ஹாரி கண்டான். நிஜ லாக்ஹார்ட் தன் மேசையில் இருந்த மெழுகுவர்த்தியை ஏற்றிவிட்டுப் பின்னால் நகர்ந்து கொண்டார். பளபளவென்றிருந்த மேசைமேல் டம்பிள்டோர் அந்தப் பூனையைக் கிடத்தி, அதை ஆராயத் துவங்கினார். ஹாரி, ரான், ஹெர்மயனி ஆகிய மூவரும் தங்களுக்குள் இறுக்கமான பார்வையைப் பரிமாறிக் கொண்டு, அந்த மெழுகுவர்த்தியின் வெளிச்ச வட்டத்திற்கு வெளியே இருந்த நாற்காலிகளில் உட்கார்ந்து கொண்டு கவனிக்கத் துவங்கினர்.

டம்பிள்டோரின் நீண்ட கோணல் மூக்கு, அப்பூனையின் தோலுக்கு மிக மிக அருகாமையில் இருந்தது. பிறை வடிவில் இருந்த தனது மூக்குக்கண்ணாடியின் வழியாக அவர் அதைப் பார்த்தார். அவரது நீண்ட விரல்கள் மென்மையாக அந்தப் பூனையின் உடலை நீட்டிக் கொண்டும் நீவிவிட்டுக் கொண்டும் இருந்தன. பேராசிரியர் மெக்கானகல் டம்பிள்டோரைப்போலவே அப்பூனையைத் தன் கண்களை இடுக்கிக் கொண்டு மிக அருகாமையில் பார்த்துக் கொண்டிருந்தார். அதற்குப் பின்னால், பரதி இருட்டில், புன்னகைக்காமல் இருக்கப் பெருமுயற்சி எடுத்துக் கொண்டிருந்தது போன்ற ஒரு வினோதமான முகபாவத்தோடு ஸ்னேப் நின்று கொண்டிருந்தார். அவர்கள் எல்லோருக்கும் பின்னால், லாக்ஹார்ட், எட்டிப் பார்த்துக் கொண்டும் கேட்காமலேயே அவ்வப்போது ஆலோசனைகளை வழங்கிக் கொண்டும் நின்று கொண்டிருந்தார்.

"இப்பூனையைக் கொன்றது கண்டிப்பாக ஒரு சாபமாகத்தான் இருக்க வேண்டும் – இது 'உருவச்சிதைவுச் சித்திரவதை' சாபம்போலத் தோன்றுகிறது. நான் இதைப் பல முறை பார்த்திருக்கிறேன். நான் அச்சமயத்தில் அங்கு இல்லாமல் போனது துரதிர்ஷ்டம்தான்! இதற்கான எதிர்ச்சாபத்தை நான் நன்றாகவே அறிவேன். அது இப்பூனையைக் காப்பாற்றியிருக்கும் . . ." என்று லாக்ஹார்ட் கூறினார்.

ஃபில்ச்சின் வேதனையோடுகூடிய அழுகையும் தேம்பலும் லாக்ஹார்ட்டின் விமர்சனங்களுக்கு ஆங்காங்கே நிறுத்தற்குறி இடுவதுபோல அமைந்தன. ஃபில்ச் தன் பூனையை அக்கோலத்தில் பார்க்க விரும்பாததால், அருகிலிருந்த ஒரு நாற்காலியில் 'தொம்' என விழுந்து, தன் கைகளால் தன் முகத்தை மூடிக் கொண்டார். ஹாரிக்கு ஃபில்ச்சை அறவே பிடிக்காது என்றாலும், அச்சமயத்தில் அவர்மீது அவனால் பச்சாதாபம் கொள்ளாமல் இருக்க முடியவில்லை. ஆனால் அக்கணத்தில் அவன் தன்மீதுதான் அதைவிட அதிகமாகப் பச்சாதாபம் கொண்டிருந்தான். டம்பிள்டோர் மட்டும் ஃபில்ச்சை நம்பியிருந்தாரெனில், இந்நேரத்திற்கு அவன் கண்டிப்பாகப் பள்ளியைவிட்டு வெளியேற்றப்பட்டு இருப்பான்.

டம்பிள்டோர் இப்போது வினோதமான வார்த்தைகளைத் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டே, தன் மந்திரக்கோலால் அப்பூனையைத் தட்டிக் கொண்டிருந்தார். ஆனால் எதுவும்

Scanned by CamScanner

நிகழவில்லை. அப்பூனை சமீபத்தில் பதப்படுத்தப்பட்ட ஓர் உடல்போலத் தொடர்ந்து காட்சியளித்தது.

"... கிட்டத்தட்ட இதே போன்ற ஒரு சம்பவம் ஆப்பிரிக்காவில் ஒகடாகு என்ற இடத்தில் நடைபெற்றது என் நினைவிற்கு வருகிறது," என்று லாக்ஹார்ட் கூறினார். "பல தொடர்ச்சியான தாக்குதல்கள். முழு விபரமும் என் சுயசரிதையில் இருக்கிறது. அந்நகர மக்களுக்கு நான் மந்திரத் தாயத்துக்களைக் கொடுத்தேன். அது உடனடியாகப் பிரச்சனையைத் தீர்த்தது ..."

அவர் பேசப் பேச, அந்த அறைச் சுவர்களில் மாட்டப்பட்டிருந்த புகைப்படங்களில் இருந்த லாக்ஹார்ட் உருவங்களும் அதை ஆமோதிப்பதுபோலத் தமது தலைகளை அசைத்தன.

ஒருவழியாக டம்பிள்டோர் தன் தலையை நிமிர்த்தினார்.

"ஃபில்ச், உங்கள் பூனை இறக்கவில்லை," என்று அவர் மென்மையாகக் கூறினார்.

தான் தடுத்து நிறுத்தியிருந்த கொலைகளைக் கணக்கிட்டுக் கொண்டிருந்த லாக்ஹார்ட், அதைப் பாதியிலேயே நிறுத்தினார்.

ஃபில்ச் தன் பூனையின் உடலின்மீது தன் கைகளை மேவியவாறு, "என்ன, நாரிஸ் இறக்கவில்லையா?" என்று கேட்டார். அவருக்கு மூச்சுத் திணறியது. "அப்படியானால் அது ஏன் இப்படி விறைப்பாகவும் உறைந்து போனது போலவும் இருக்கிறது?"

"உங்கள் பூனை கல்லாக்கப்பட்டுள்ளது," என்று டம்பிள்டோர் கூறினார். ('ஆ! நான் அப்படித்தான் நினைத்தேன்!' என்று லாக்ஹார்ட் கூறினார்). ஆனால் எப்படி என்று என்னால் கூற முடியவில்லை ..."

ஃபில்ச், உப்பிப் போயிருந்த தனது முகத்தை ஹாரியை நோக்கித் திருப்பியவாறு, **"இவனைக் கேளுங்கள்!"** என்று இரைந்தார். அவரது கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

"இதை எந்தவோர் இரண்டாம் வருட மாணவனாலும் செய்திருக்க முடியாது," என்று டம்பிள்டோர் உறுதியாகக் கூறினார். "இதைச் செய்வதற்கு உச்சகட்டத் தீய மந்திர சக்தியைப் பயன்படுத்தத் தெரிந்திருக்க வேண்டும்."

ஃபில்ச், வீங்கிப் போயிருந்த தனது முகம் சிவக்க, "இவன்தான் செய்தான், இவன்தான் செய்தான்," என்று காரி உமிழ்ந்தார். "சுவரில் அவன் என்ன எழுதியிருந்தான் என்று நீங்கள்தான் பார்த்தீர்களே? – அவன் நான் யாரென்று ... என் அலுவலகத்தில் வைத்து ... அவன் நான் யாரென்று கண்டுபிடித்துவிட்டான். நான் – நான் –" ஃபில்ச்சின் முகம் அஷ்டகோணலாகியது. "நான் ஒரு 'ஸ்குயிப்' என்பது அவனுக்குத் தெரிந்துவிட்டது."

சுவரில் மாட்டப்பட்டிருந்த படங்களிலிருந்த லாக்ஹார்ட்டுகள் உட்பட, அங்கிருந்த அனைவரும் தன்னையே பார்த்துக் கொண்டிருந்ததால் அசௌகரியமாக உணர்ந்த ஹாரி, "நான் நாரிஸ்

Scanned by CamScanner

பூனையை ஒருபோதும் தொட்டதுகூடக் கிடையாது," என்று சத்தமாகக் கூறினான். "'ஸ்குயிப்' என்றால் என்னவென்றே எனக்குத் தெரியாது."

"உளறாதே!" என்று ஃபில்ச் உறுமினார். "என்னுடைய குவிக்ஸ்பெல் கடிதத்தை அவன் பார்த்துவிட்டான்."

"தலைமையாசிரியரே, நான் கொஞ்சம் பேசலாமா?" என்று இருட்டிலிருந்து ஸ்னேப் கேட்டார். அடுத்து வரவிருந்த செய்திகள் மோசமாகத்தான் இருக்கப் போகின்றன என்பதை ஹாரிக்கு உணர்த்திக் கொண்டிருந்த அவனது உள்ளுணர்வு இன்னும் தீவிரமடைந்தது. ஸ்னேப்பின் வாயிலிருந்து உதிரவிருந்த முத்துக்கள் எதுவும் தனக்கு நல்லது எதையும் செய்யப் போவதில்லை என்பதை அவன் உறுதியாக அறிந்திருந்தான்.

"ஹாரியும் அவனது நண்பர்களும் தவறான சமயத்தில் தவறான இடத்தில் இருந்திருக்கலாம்," என்று ஸ்னேப் கூறினார். ஆனால் அதை அவரே நம்பவில்லை என்பதுபோல அவரது உதடுகளில் ஓர் இகழ்ச்சிப் புன்னகை நெளிந்து கொண்டிருந்தது. "ஆனால் இங்கு சந்தேகத்திற்கிடமான சில சூழல்கள் இருப்பதை நாம் ஒத்துக் கொண்டுதான் ஆக வேண்டும். அவர்கள் இரண்டு கேள்விகளுக்கு விடையளித்தாக வேண்டும். முதலாவது, அவர்கள் எதற்காக மாடித் தாழ்வாரத்திற்கு வர வேண்டும்? இரண்டாவதாக, அவர்கள் ஏன் ஹாலோவீன் தின விருந்தில் பங்கேற்கவில்லை?"

ஹாரி, ரான், ஹெர்மயனி ஆகிய மூவரும் ஒருமித்தக் குரலில் இறந்தநாள் கொண்டாட்டத்தைப் பற்றிக் கூறினர். ". . . அங்கு நூற்றுக்கணக்கான ஆவிகள் வந்திருந்தன. நாங்கள் அங்கு இருந்ததை அவை உறுதி செய்யும் –"

மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் தன் கரிய நிறக் கண்கள் மினுமினுக்க, ஸ்னேப், "அது சரி. ஆனால் அதற்குப் பிறகு நீங்கள் ஏன் ஹாலோவீன் தின விருந்தில் கலந்து கொள்ளவில்லை?" என்று கேட்டார். "நீங்கள் அந்தத் தாழ்வாரத்திற்கு எதற்காகப் போக வேண்டும்?"

ரானும் ஹெர்மயனியும் ஹாரியை ஏறிட்டுப் பார்த்தனர்.

தனது இதயம் படபடக்க ஹாரி, "ஏனென்றால் – ஏனென்றால் –" என்று மென்று விழுங்கினான். தன்னைத் தவிர வேறு யாராலும் கேட்க முடியாத, உருவமற்ற ஒரு குரல்தான் தன்னை அங்கு இழுத்து வந்தது என்று கூறினால் யாரும் அதை நம்பப் போவதில்லை என்று அவனுக்குத் தோன்றியது. "ஏனென்றால் எங்களுக்கு மிகவும் களைப்பாக இருந்தது. நாங்கள் நேராகப் போய்ப் படுத்துத் தூங்க விரும்பினோம்."

வெளிறிப் போயிருந்த தனது முகத்தில் வெற்றிப் புன்னகை ஜொலிக்க, ஸ்னேப், "இரவு உணவு உண்ணாமலா?" என்று கேட்டார். "உயிருடன் இருப்பவர்கள் சாப்பிடுவதற்கு உகந்த பொருட்களை

Scanned by CamScanner

ஆவிகள் தம்முடைய விருந்துகளில் பரிமாறும் என்று நான் கேள்விப்பட்டதில்லை."

"எங்களுக்குப் பசி இருக்கவில்லை," என்று ரான் சத்தமாகக் கூறினான். அவனது வயிறு கடகடவென்று ஒலி ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

ஸ்னேப்பின் இகழ்ச்சிப் புன்முறுவல் இன்னும் அகலமானது.

"தலைமையாசிரியரே, ஹாரி பாட்டர் முழு உண்மையையும் கூறவில்லை என்று நான் சந்தேகிக்கிறேன்," என்று ஸ்னேப் கூறினார். "அவன் முழுக் கதையையும் கூற முன்வரும்வரை, அவனுக்கு வழங்கப்பட்டு வரும் சில சலுகைகளை ரத்து செய்வது நல்லதென்று எனக்குத் தோன்றுகிறது. அவன் நேர்மையாக நடந்து கொள்ளும்வரை அவனை கிரிஃபின்டார் குவிடிச் அணியிலிருந்து தற்காலிகமாக நீக்கி வைக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன்."

"எதற்காக?" என்று பேராசிரியர் மெக்கானகல் தீவிரமான குரலில் வினவினார். "அவன் குவிடிச் விளையாடக்கூடாது என்று சொல்வதற்குத் தகுந்த முகாந்திரங்கள் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஹாரி தவறு ஏதும் இழைத்துள்ளதற்கு எந்தச் சான்றும் இல்லை."

டம்பிள்டோர் ஹாரியைத் துளைத்துவிடுவதுபோலப் பார்த்தார். மின்னிக் கொண்டிருந்த அவரது நீல நிறக் கண்கள் தன்னை எக்ஸ்ரே எடுப்பதுபோல ஹாரி உணர்ந்தான்.

"நிரூபிக்கப்படும்வரை அவன் நிரபராதிதான்," என்று டம்பிள்டோர் உறுதியாகக் கூறினார்.

ஸ்னேப் பெரும் சீற்றம் அடைந்திருந்ததுபோலக் காணப்பட்டார். ஃபில்ச்சும் அதே நிலையில்தான் இருந்தார்.

"என் பூனை கல்லாக்கப்பட்டுள்ளது," என்று ஃபில்ச் கூப்பாடு போட்டார். "யாருக்காவது தண்டனை வழங்கப்பட்டே ஆக வேண்டும்."

"அப்பூனையை நாம் குணப்படுத்திவிடலாம்," என்று டம்பிள்டோர் பொறுமையாகக் கூறினார். "சமீபத்தில் பேராசிரியர் ஸ்புரவுட் சில மன்ட்ரேக் நாற்றுக்களைத் தருவித்துள்ளார். அவை முழு அளவு வளர்ந்தவுடன், நான் அதிலிருந்து ஒரு மாயத் திரவத்தைத் தயாரித்து உங்கள் பூனையை உயிர்த்தெழ வைக்கிறேன்."

"நான் அதைத் தயாரிக்கிறேன்," என்று லாக்ஹார்ட் உள்ளே புகுந்தார். "நான் அதை நூற்றுக்கணக்கான முறை தயாரித்து இருக்கிறேன். பலத்தை மீட்டுத் தரும் மாயத் திரவத்தை மன்ட்ரேக் செடியிலிருந்து தூக்கத்தில்கூட என்னால் தயாரிக்க முடியும் –"

"மன்னிக்க வேண்டும்," என்று குத்தலாக ஆரம்பித்த ஸ்னேப், "நான்தான் இப்பள்ளியின் மாயத்திரவ ஆசிரியர் என்று நினைத்திருந்தேன்!" என்று கூறினார்.

அங்கு ஒருசில கணங்கள் ஓர் அசௌகரியமான மௌனம் நிலவியது.

Scanned by CamScanner

ஹாரி, ரான், ஹெர்மயனி ஆகிய மூவரையும் பார்த்து, "நீங்கள் போகலாம்," என்று டம்பிள்டோர் கூறினார்.

ஓடாமல் எவ்வளவு விரைவாக நடக்க முடியுமோ அவ்வளவு விரைவாக அவர்கள் அந்த இடத்தைக் காலி செய்தனர். லாக்ஹார்ட்டின் அலுவலகம் இருந்த தளத்திற்கு மேலே ஒரு மாடியை அடைந்ததும், அவர்கள் மூவரும், காலியாக இருந்த ஒரு வகுப்பறைக்குள் நுழைந்து அதன் கதவைச் சத்தமில்லாமல் சாத்தினர். இருண்டு போய்க் கிடந்த தனது நண்பர்களின் முகங்களை ஹாரி தன் கண்களை இடுக்கிக் கொண்டு பார்த்தான்.

"எனக்குக் கேட்டிருந்த குரலைப் பற்றி நான் அவர்களிடம் கூறியிருக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?"

"இல்லை," என்று ரான் எவ்விதத் தயக்கமுமின்றிக் கூறினான். "ஆனால், மந்திரஜால உலகத்தில்கூட வேறு யாருக்கும் கேட்காத குரல் ஒருவனுக்கு மட்டும் கேட்பது நல்ல அறிகுறி அல்ல."

ரானின் குரலில் இருந்த ஏதோ ஒன்று, "நீ என்னை நம்பவில்லையா?" என்று ஹாரியைக் கேட்க வைத்தது.

"நான் உன்னைக் கண்டிப்பாக நம்புகிறேன்," என்று ரான் அவசர அவசரமாகக் கூறினான். "ஆனால் – அது கொஞ்சம் விநோதமாக இருக்கிறது என்பதை நீ ஒப்புக் கொண்டுதான் ஆக வேண்டும் . . ."

"அது விநோதமாக இருக்கிறது என்பதை நான் அறிவேன்," என்று ஹாரி கூறினான். "இந்த மொத்த விவகாரமே விநோதமாகத்தான் இருக்கிறது. அந்தச் சுவரில் ஏன் அப்படி எழுதப்பட்டிருந்தது? ரகசியங்கள் அடங்கிய பாதாள அறை திறக்கப்பட்டுவிட்டது! . . . அதற்கு என்ன அர்த்தம்?"

"இது எனக்கு எதையோ நினைவுபடுத்துகிறது," என்று ரான் மெதுவாகக் கூறினான். "ஹாக்வார்ட்ஸில் ரகசியங்கள் அடங்கிய பாதாள அறை ஒன்று இருப்பதாக யாரோ ஒருவர் ஒரு முறை கூறியதாக ஞாபகம். அது ஒருவேளை என் அண்ணன் பில்லாக இருக்கலாம் –"

"ஆமாம் 'ஸ்குயிப்' என்றால் என்ன இழவு?"

ரான் வாயை மூடிக் கொண்டு சிரித்தது ஹாரிக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

"இதில் நகைப்பதற்கு ஒன்றுமில்லை என்பது உண்மைதான் . . . ஆனால் இதில் ஃபில்ச் தொடர்பு கொண்டிருப்பதால் . . ." என்று ரான் இழுத்தான். "மந்திரஜாலக் குடும்பத்தில் பிறந்தும் மந்திரஜாலம் கைவரப் பெறாத ஒருவர்தான் ஸ்குயிப். இது மகுள்கள் குடும்பத்தில் பிறந்திருக்கும் மந்திரவாதிகளுக்கு நேரெதிரானது என்று வைத்துக் கொள்ளேன். ஆனால் இந்த ஸ்குயிப்கள் கொஞ்சம் வித்தியாசமானவர்கள். ஃபில்ச் குவிக்ஸ்பெல் பயிற்சி வகுப்பு மூலமாக மாயாஜாலம் கற்றுக் கொள்ள முயல்கிறார் என்றால், அவர் கண்டிப்பாக ஒரு ஸ்குயிப்பாகத்தான் இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். இப்போதுதான் பல விஷயங்கள் புரிபடுகின்றன.

Scanned by CamScanner

அதனால்தான் அவர் மாணவர்களாகிய நம்மை அவ்வளவு தூரம் வெறுக்கிறார்." ரான் ஒரு திருப்தியான புன்னகையைத் தன் உதட்டில் பரவவிட்டான். "அதனால்தான் அவர் நம்மீது அவ்வளவு கடுப்பாக இருக்கிறார்."

எங்கேயோ ஒரு கடிகாரம் ஒலித்தது.

"நடுநிசி," என்று ஹாரி கூறினான். "ஸ்னேப் வந்து வேறு ஏதாவது ஒன்றில் நம்மை மாட்டிவிடுவதற்கு முன்பு நாம் படுக்கைக்குச் சென்றுவிடுவது நல்லது."

பள்ளியில் அடுத்த சில நாட்களுக்கு, நாரிஸ் பூனைக்கு ஏற்பட்ட கதியைத் தவிர வேறு எதையும் எவரும் பேசவில்லை. தனது பூனையைத் தாக்கியவன் மீண்டும் அதே இடத்திற்கு வரக்கூடும் என்பதுபோல, ஃபில்ச் அதே இடத்தில் வளைய வந்து கொண்டிருந்ததால் அது தொடர்ந்து எல்லோருடைய மனங்களிலும் பசுமையாக இருந்து கொண்டிருந்தது. சுவரெழுத்துக்களை ஃபில்ச், அனைத்து மந்திரக் கறைகளையும் அடியோடு நீக்கக்கூடிய ஒரு பொடியைக் கொண்டு தேய்த்துக் கொண்டிருந்ததை ஹாரி பார்த்தான். ஆனால் அதனால் எந்தப் பயனும் இருக்கவில்லை. அந்த எழுத்துக்கள் அந்தக் கற்சுவரில் பிரகாசமாக ஒளிர்ந்து கொண்டிருந்தன. குற்றம் நடந்த இடத்தில் ரோந்து சுற்றிக் கொண்டிருக்காதபோது, ஃபில்ச், தன் சிவந்த கண்களுடன் தாழ்வாரங்களில் பதுங்கி நின்று கொண்டு, அப்பாவி மாணவர்களின்மீது பாய்ந்து, 'சத்தமாக மூச்சுவிட்டது' மற்றும் 'வெளிப்படையாக சந்தோஷமாகத் தெரிந்தது' போன்ற 'குற்றங்களை' அவர்கள்மீது சுமத்தி, அவர்களுக்கு ஒழுங்கு நடவடிக்கைத் தண்டனைகளை விதித்தார்.

நாரிஸ் பூனைக்கு ஏற்பட்ட கதியைப் பார்த்து ஜின்னி மிகவும் கலங்கிப் போயிருந்தாள். ரானின் கூற்றுப்படி, அவளுக்குப் பூனை என்றால் மிகவும் பிடிக்கும்.

"ஆனால் உனக்கு நாரிஸ் பூனையைப் பற்றித் தெரியாது," என்று ரான் அவளை ஊக்குவிக்கும் விதமாகக் கூறினான். "உண்மையைக் கூற வேண்டும் என்றால், அப்பூனை இல்லாமல் இருந்தாலே நன்றாக இருக்கும்." ஜின்னியின் உதடுமூகள் நடுங்கின. "ஹாக்வார்ட்ஸில் இம்மாதிரிச் சம்பவங்கள் அடிக்கடி நடப்பதில்லை." ரான் அவளுக்கு தைரியம் கொடுக்கும் விதமாகப் பேசினான். "கண்மூடித் திறப்பதற்குள் அவர்கள் அந்தப் பைத்தியக்காரனைப் பிடித்துப் பள்ளியைவிட்டுத் துரத்திவிடுவார்கள். பள்ளியைவிட்டு வெளியே தூக்கியெறியப்படுவதற்கு முன்பு, அவன் ஃபில்ச்சையும் கல்லாக்கிவிட்டால் நன்றாக இருக்கும்!" ஜின்னியின் முகம் வெளிறிவிட்டதைப் பார்த்ததும் அவன் அவசர அவசரமாக, "நான் வேடிக்கைக்காக அப்படிச் சொன்னேன்," என்று கூறினான்.

பூனைமீது மேற்கொள்ளப்பட்ட அத்தாக்குதல், ஹெர்மயனின்மீதும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. படிப்பில்

Scanned by CamScanner

வெகுநேரம் மூழ்கியிருப்பது ஹெர்மயனிக்கு வாடிக்கைதான் என்றாலும், அவள் இப்போதெல்லாம், அதைத் தவிர வேறு எதையும் செய்யவில்லை. அவள் ஏன் இப்படி இருந்தாள் என்று ஹாரியும் ரானும் அவளிடம் கேட்டபோதும் அவர்களுக்கு அவள் சரியாக பதில் சொல்லவில்லை. அதற்கடுத்த புதன்கிழமைதான் அவர்கள் அதற்கான காரணத்தைக் கண்டுபிடித்தனர்.

அன்றைய தினம், ஸ்னேப், மாணவர்களின் மேசைமேல் படிந்திருந்த குழாய்ப்புழுக்களைச் சுரண்டி எடுக்குமாறு ஹாரிக்கு உத்தரவிட்டிருந்ததால், மாயத் திரவ வகுப்பில் அவன் கூடுதலான நேரம் தங்கியிருக்க நேர்ந்தது. அந்த வேலையை முடித்துவிட்டு, பிறகு வேகவேகமாகத் தன் மதிய உணவைச் சாப்பிட்டுவிட்டு, ரானை நூலகத்தில் சந்திப்பதற்காக ஹாரி மாடிக்குச் சென்றான். அப்போது, மூலிகையியல் வகுப்பில் தான் சந்தித்த, ஹஃபில்பஃப் குழுவைச் சேர்ந்த ஜஸ்டின் தன்னை நோக்கி வந்து கொண்டிருந்ததை ஹாரி பார்த்தான். ஹாரி அவனிடம் ஹலோ சொல்வதற்கு வாயெடுத்தபோது, ஹாரியைக் கவனித்த ஜஸ்டின் திடீரென்று திரும்பி எதிர்த் திசையில் சென்றுவிட்டான்.

ஹாரி நூலகத்தினுள் நுழைந்தபோது, ரான் அதன் பின்பகுதியில் தன்னுடைய 'மந்திரஜால வரலாறு' வீட்டுப்பாடத்தை ஓர் அளவை நாடாவைக் கொண்டு அளந்து கொண்டிருந்ததைப் பார்த்தான். 'மத்தியக் காலத்திய ஐரோப்பிய மந்திரவாதிகள் கழகத்'தைப் பற்றி மூன்றடி நீளமுள்ள கட்டுரை ஒன்றை எழுதிக் கொண்டு வருமாறு பேராசிரியர் அவர்களைப் பணித்திருந்தார்.

"அடக் கடவுளே! இது எட்டு அங்குலம் குறைவாக இருக்கிறதே!" என்று சீற்றத்துடன் கூறிக் கொண்டே, தான் எழுதிக் கொண்டிருந்த தோல் காகிதத்திலிருந்து ரான் தன் கையை எடுத்தான். அது பழையபடி ஒரு குழல்போலச் சுருண்டு கொண்டது. "ஹெர்மயனி நான்கு அடி ஏழு அங்குல நீளத்திற்கு எழுதியிருக்கிறாள். இவ்வளவுக்கும் அவள் இணுக்கி இணுக்கி எழுதுவாள்."

ஹாரி தன்னுடைய வீட்டுப்பாடம் எழுதப்பட்டிருந்த தோல் காகிதத்தை விரித்து, ரானிடமிருந்து அளவை நாடாவை பிடுங்கியபடி, "ஆமாம், ஹெர்மயனி எங்கே?" என்று கேட்டான்.

ரான் நூலகத்தின் புத்தக அலமாரிகளை நோக்கிக் கையை நீட்டியவாறே, "அங்குதான் எங்கோ இருக்கிறாள்," என்று கூறினான். "அவள் வேறு ஏதோ ஒரு புத்தகத்தைத் தேடிக் கொண்டிருக்கிறாள். இந்தக் கிறிஸ்துமஸ் முடிவதற்குள் இந்த நூலகத்தில் இருக்கும் அனைத்துப் புத்தகங்களையும் கரைத்துக் குடித்துவிட அவள் முயற்சிக்கிறாள் என்று நான் நினைக்கிறேன்."

தன்னைப் பார்த்ததும் ஜஸ்டின் முகம் திருப்பிக் கொண்டு ஓடியதைப் பற்றி ஹாரி ரானிடம் கூறினான்.

தன் கட்டுரையைப் பெரிதாகக் காட்டிக் கொள்வதற்காக எதையோ கிறுக்கிக் கொண்டிருந்த ரான், "அதைப் பற்றி நீ ஏன்

Scanned by CamScanner

அலட்டிக் கொள்கிறாய்? அவனுக்குக் கொஞ்சம் கிறுக்குப் பிடித்திருக்கிறது என்று நான் நினைக்கிறேன்," என்று ரான் கூறினான். "லாக்ஹார்ட் பெரிய ஆள் என்ற உளறல்கள் –"

புத்தக அலமாரிகளுக்கு இடையே இருந்து ஹெர்மயனி வெளிப்பட்டாள். அவள் கொஞ்சம் சிடுசிடுவென்று இருந்தாள். பின் ஒருவழியாக அவர்களிடம் பேசுவதற்கு அவள் தன்னைத் தயார்படுத்திக் கொண்டதுபோலத் தோன்றியது.

ஹாரிக்கும் ரானுக்கும் அருகே வந்து உட்கார்ந்த ஹெர்மயனி, "'ஹாக்வார்ட்ஸ்: ஒரு வரலாறு' என்ற புத்தகத்தின் ஒரு பிரதிகூட இங்கு இல்லை," என்று கூறினாள். "அதை எடுப்பதற்கு நான் இன்னும் இரண்டு வாரங்கள் காத்திருக்க வேண்டுமாம். நான் என்னுடைய பிரதியை வீட்டில் விட்டுவிட்டு வராமல் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். லாக்ஹார்ட்டின் புத்தகங்களே நிறைய இருந்ததால் என்னால் அப்புத்தகத்தை என் டிரங்குப் பெட்டிக்குள் அடைக்க முடியவில்லை."

"உனக்கு அது எதற்குத் தேவை?" என்று ஹாரி கேட்டான்.

"மற்றவர்கள் அதை எதற்காகத் தேடிக் கொண்டிருக்கிறார்களோ, அதே காரணத்திற்காகத்தான்," என்று ஹெர்மயனி கூறினாள். "ரகசியங்கள் அடங்கிய பாதாள அறை பற்றிய பழங்கதைகளைப் படிப்பதற்காகத்தான் நான் அதைத் தேடிக் கொண்டிருக்கிறேன்."

"என்ன சொன்னாய்?" என்று ஹாரி அவசர அவசரமாகக் கேட்டான்.

ஹெர்மயனி தன் உதடுகளைக் கடித்துக் கொண்டே, "எனக்கு அது குறித்து வேறு எதுவும் நினைவுக்கு வரவில்லை," என்று கூறினாள். "அக்கதையைப் பற்றி வேறு எந்தப் புத்தகத்திலும் என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை."

ரான் பரிதவிப்புடன் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே, "ஹெர்மயனி, உன்னுடைய கட்டுரையைக் கொஞ்சம் கொடுக்க முடியுமா? நான் பார்த்துவிட்டுத் தந்துவிடுகிறேன்," என்று கேட்டான்.

திடீரென்று தீவிரமான ஹெர்மயனி, "முடியாது, நான் தர மாட்டேன்," என்று கூறினாள். "அதை எழுதி முடிப்பதற்கு உனக்குப் பத்து நாட்கள் அவகாசம் கொடுக்கப்பட்டிருந்தது."

"இன்னும் இரண்டு அங்குலம்தான் பாக்கி இருக்கிறது . . ."

மணி அடித்ததும் ரானும் ஹெர்மயனியும் தங்களுக்குள் வாக்குவாதம் செய்து கொண்டே முன்னால் நடந்தனர்.

மந்திரஜால வரலாறு வகுப்புதான் இருப்பதிலேயே சுவாரசியமற்றதாக இருந்தது. அவர்களுக்கு அவ்வகுப்பை நடத்திய பேராசிரியர் பின்ஸ்தான் அவர்களுடைய ஒரே ஆவிப் பேராசிரியர். அந்த வகுப்பில் இதுவரை நடைபெற்றிருந்த ஒரே சுவாரசியமான சம்பவம், அப்பேராசிரியர் ஒருமுறை தன் வகுப்பிற்கு வாசல் வழியாக வராமல் கரும்பலகை வழியாக வந்ததுதான். வாடி வதங்கிச் சுருங்கிப்

Scanned by CamScanner

போய், பழமையாகத் தோன்றிய அவர், தான் இறந்து போயிருந்ததைக்கூடக் கவனித்திருக்க மாட்டார் என்று பலர் கருதினர். ஒருநாள், பாடம் எடுப்பதற்காக அவர் தன் வகுப்பிற்கு வந்தபோது, ஆசிரியர்களுக்கான அறையில் கணப்பு அடுப்பிற்கு அருகிலிருந்த தன் நாற்காலியில் தன்னுடைய உடலை விட்டுவிட்டு வந்துவிட்டார். பிறகு அதுவே அவருக்கு வழக்கமாகிவிட்டிருந்தது.

முன்பு எப்போதையும்போல இன்றும் வகுப்பு சுவாரசியமற்றே இருந்தது. பேராசிரியர் தன்னுடைய குறிப்புகளை வெளியே எடுத்து, வகுப்பில் இருந்த எல்லோரும் ஆழ்ந்த உறக்கத்தில் மூழ்கும்வரை, வாக்கும் கிளீனரின் ரீங்காரத்தைப்போல, ஏற்ற இறக்கங்கள் இல்லாத ஒரு குரலில் படித்துக் கொண்டிருந்தார். அம்மாணவர்கள் எப்போதாவது திடுக்கிட்டு விழித்தெழுந்து ஏதாவது ஒரு பெயரையோ அல்லது ஒரு நாளையோ குறிப்பெடுத்துக் கொண்டு மறுபடியும் தூங்கினர். அவர் பேசத் துவங்கி அரை மணிநேரம் ஆகியிருந்தபோது, அந்த வகுப்பில் அதுவரை நடந்திராத காரியம் ஒன்று நடந்தது. ஹெர்மயனி தன் கையைத் தூக்கினாள்.

1289ம் வருடத்திய சர்வதேச மந்திரவாதிகள் பேரவைக் கூட்டத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்த பேராசிரியர் பின்ஸ் பிரமிப்படைந்தார்.

"உன் பெயர்? –"

"ஹெர்மயனி, சார். ரகசியங்கள் அடங்கிய பாதாள அறையைப் பற்றி உங்களால் ஏதாவது கூற முடியுமா?" என்று ஒரு தெளிவான குரலில் அவள் கேட்டாள்.

திறந்த வாயுடன் சன்னலுக்கு வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த டீன் தாமஸ், தூக்கிவாரிப் போட்டாற்போலத் தன் பகல் கனவிலிருந்து திடுக்கிட்டு எழுந்தான். லேவன்டர் பிரவுன் தனது கையில் சாய்ந்து கிடந்த தனது தலையை நிமிர்த்தினாள். நெவிலின் முழங்கை அவனது மேசையிலிருந்து நழுவியது.

பேராசிரியர் பின்ஸ் தனது கண்களைப் பல முறை படபடவென்று மூடித் திறந்தார்.

அவர் தன்னுடைய மூச்சிறைக்கும் உலர்ந்த குரலில், "நான் நடத்திக் கொண்டிருப்பது மந்திரஜால வரலாறு வகுப்பு," என்று கூறினார். "ஹெர்மயனி, நான் உண்மைத் தகவல்களை மட்டுமே கையாள்கிறேன், புனைக்கதைகளையோ அல்லது கற்பனாவாதங்களையோ அல்ல." பிறகு, ஒரு சாக்பீஸ் துண்டு உடைக்கப்பட்டது போன்ற ஒரு சத்தத்தை எழுப்பித் தன் தொண்டையைச் சரி செய்து கொண்டு, "அவ்வருடம் செப்டம்பர் மாதத்தில் சார்டீனிய மந்திரவாதிகள் அடங்கிய ஓர் உபகுழு –" என்று அவர் தன் சொற்பொழிவைத் தொடர்ந்தார்.

ஹெர்மயனியின் கை மீண்டும் மேலெழுந்தபோது அவர் திக்கித் திணறித் தன் பேச்சை நிறுத்தினார்.

"ஹெர்மயனி?"

Scanned by CamScanner

"சார், புனைக்கதைகள் எப்போதுமே ஏதேனும் ஓர் உண்மைத் தகவலின் அடிப்படையில்தானே அமைகின்றன?"

பேராசிரியர் பின்ஸ் ஹெர்மயனியை இன்னும் கூடுதலான பிரமிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார். அவரது பேச்சை இதற்கு முன்பு ஒருவரும் – உயிரோடு இருந்தவர்களும் சரி, இறந்து போயிருந்தவர்களும் சரி – இடைமறித்து இருந்திருக்க மாட்டார்கள் என்று ஹாரி உறுதியாக நம்பினான்.

"சரி," என்று பேராசிரியர் பின்ஸ் மெதுவாக இழுத்தார். "அப்படியும் விவாதிக்கலாம் என்பதை மறுப்பதற்கில்லை." தான் அதற்கு முன்பு ஒருபோதும் எந்தவொரு மாணாக்கரையும் சரியாகப் பார்த்திருக்கவில்லை என்பதுபோல அவர் ஹெர்மயனியைப் பார்த்தார். **"ஆனால், நீ குறிப்பிடுகின்ற புனைக்கதை மிகவும் பரபரப்பான ஒன்று. அது பரிகசிக்கத்தக்க ஒன்றும்கூட . . ."**

இப்போது மொத்த வகுப்பும் பேராசிரியரின் ஒவ்வொரு வார்த்தையையும் மிகவும் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தது. தன்னை நோக்கித் திரும்பியிருந்த அவர்கள் அனைவரையும் அவர் உற்சாகமின்றிப் பார்த்தார். இத்தகைய அசாதாரணமான ஈடுபாட்டைக் கண்டு அவர் அசந்து போயிருக்க வேண்டும் என்பதை ஹாரியால் பார்க்க முடிந்தது.

"சரி . . ." என்று அவர் மெதுவாகக் கூறினார். "என்ன கேட்டாய்? . . . ரகசியங்கள் அடங்கிய பாதாள அறையா? . . .

"ஹாக்வார்ட்ஸ் சுமார் ஆயிரம் வருடங்களுக்கு முன்பு துவக்கப்பட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள் என்று நான் நினைக்கிறேன். துல்லியமாக எந்தத் தேதியில் துவக்கப்பட்டது என்பது யாருக்கும் தெரியாது. அதை அக்காலகட்டத்தில் மிகச் சிறந்து விளங்கிய நான்கு மந்திரவாதிகளும் மந்திரவாதினிகளும் சேர்ந்து உருவாக்கினர். பள்ளியில் இருக்கும் நான்கு அணிகளும் அவர்களுடைய பெயர்களால்தான் அழைக்கப்படுகின்றன: கோட்ரிக் கிரிஃபின்டார், ஹெல்கா ஹஃபில்பஃப், ரோவீனா ரேவன்கிளா மற்றும் சலசார் ஸ்லிதரின். அவர்கள் நான்கு பேரும் சேர்ந்துதான் இக்கோட்டையை உருவாக்கினர். அக்காலகட்டத்தில் மந்திரஜாலங்களைக் கண்டு மகுள்கள் மிகவும் பயந்து போயிருந்ததால், அவர்கள் மந்திரவாதிகளையும் மந்திரவாதினிகளையும் மிக மோசமாக நடத்தி வந்தனர். மகுள்களின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டுத்தான் அந்த நான்கு பேரும் இக்கோட்டையைக் கட்டினர்."

அவர் இந்த இடத்தில் கொஞ்சம் நிறுத்திவிட்டு, வகுப்பு முழுவதும் தன் பார்வையை மேயவிட்டார். பிறகு தொடர்ந்து, "ஒருசில வருடங்களுக்கு இந்த நிறுவனர்கள் ஒன்றாக இணைந்து வேலை செய்தனர். மந்திரஜாலங்களை வெளிப்படுத்திய இளைஞர்களைத் தேடிக் கண்டுபிடித்து அவர்களை இக்கோட்டைக்குக் கூட்டி வந்து அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தனர். பின் அந்த நால்வருக்கும் இடையே கருத்து வேறுபாடுகள்

Scanned by CamScanner

தலைதூக்கின. ஸ்லிதரினுக்கும் மற்றவர்களுக்கும் இடையே ஒரு பிளவு வெடித்தது. ஹாக்வார்ட்ஸுக்குள் அனுமதிக்கப்பட்ட மாணவர்களை இன்னும் கவனமாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று ஸ்லிதரின் விரும்பினார். மந்திரவாதிகளின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே மந்திரஜாலங்கள் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என்பதில் அவர் குறியாக இருந்தார். மகுள்களைப் பெற்றோராகக் கொண்டவர்களை ஹாக்வார்ட்ஸில் சேர்த்துக் கொள்ள அவர் விரும்பவில்லை. அவர்கள் நம்பிக்கைக்கு உகந்தவர்கள் அல்ல என்பது அவரது கருத்தாக இருந்தது. அதற்குப் பிறகு இது குறித்து ஸ்லிதரினுக்கும் கிரிஃபென்டாருக்கும் இடையே பயங்கர விவாதம் ஏற்பட்டது. பின்னர் ஸ்லிதரின் பள்ளியைவிட்டு விலகினார்," என்றார்.

பேராசிரியர் பின்ஸ் மீண்டும் ஒருமுறை நிறுத்தினார். சுருங்கிப் போயிருந்த தோலுடன் மிக வயதான ஆமையைப்போலத் தோன்றிய அவர் தன் உதடுகளை மடித்துக் கொண்டார்.

"இது போன்ற தகவல்களை, நம்பத் தகுந்த வரலாற்று ஆதாரங்கள் தெரிவிக்கின்றன," என்று அவர் கூறினார். "ஆனால் ரகசியங்கள் அடங்கிய பாதாள அறை போன்ற ஜோடனைக் கதைகள், இப்படிப்பட்ட உண்மைத் தகவல்களை இருட்டடிப்புச் செய்து வந்துள்ளன. ரகசியங்கள் அடங்கிய பாதாள அறை ஒன்றை, ஸ்லிதரின், தன் சக நிறுவனர்களுக்குத் தெரியாமல் இக்கோட்டைக்குள் ரகசியமாகக் கட்டியிருந்தார் என்று அந்த ஜோடனைக் கதை போகிறது.

"தன்னுடைய உண்மையான வாரிசு இப்பள்ளிக்கு வந்து சேரும்வரை வேறு எவராலும் அதைத் திறக்க முடியாதபடி ஸ்லிதரின் அதை மூடிவிட்டார் என்றும் அப்புனைகதை கூறுகிறது. அந்த உண்மையான வாரிசால் மட்டுமே ரகசியங்கள் அடங்கிய அந்தப் பாதாள அறையைத் திறந்து, அதன் உள்ளே இருக்கும் படுபயங்கரக் கொடூரத்தைக் கட்டவிழ்த்துவிட்டு, மந்திரஜாலங்களைப் படிக்கத் தகுதியில்லாதவர்களை ஒழித்துக் கட்டி, இப்பள்ளியை மீண்டும் புடம்போடப்பட்டத் தங்கம்போல மாசுமருவற்றதாக ஆக்க முடியும் என்று அது கூறுகிறது."

அவர் அக்கதையைக் கூறி முடித்ததும் அங்கு மயான அமைதி நிலவியது. ஆனால் அது வழக்கமாக அவரது வகுப்பில் அவர்கள் தூங்கி வழிந்ததால் ஏற்பட்ட அமைதி அல்ல. அவர் இன்னும் அதிகமாகக் கூறுவார் என்ற எதிர்பார்ப்பில் அவர்கள் அனைவரும் தொடர்ந்து அவரையே பார்த்துக் கொண்டிருந்ததால் அந்த அறையில் ஓர் அசௌகரியமான சூழல் நிலவியது. பேராசிரியர் பின்ஸ் லேசாக எரிச்சலடைந்திருந்ததுபோலக் காணப்பட்டார்.

"ஆனால் இந்த ஒட்டுமொத்தக் கதையும் அபத்தத்திலும் மிக அபத்தம் என்பதில் சந்தேகமில்லை," என்று அவர் கூறினார். "இப்பள்ளியில் இப்படிப்பட்ட ஓர் அறை இருந்ததற்கான ஆதாரங்களை, சிறப்பாகக் கற்றறிந்த பல மந்திரவாதிகளும்

Scanned by CamScanner

மந்திரவாதினிகளும் பல முறை சல்லடை போட்டுத் தேடித் தோற்றுப் போயுள்ளனர். அப்படிப்பட்டப் பாதாள அறை எதுவும் இங்கு கிடையாது. அப்பாவிகளைப் பயமுறுத்துவதற்காக இட்டுக்கட்டப்பட்ட ஒரு கதைதான் அது."

ஹெர்மயனியின் கை மீண்டும் உயர்ந்தது.

"சார், அந்தப் பாதாள அறையினுள் இருக்கும் படுபயங்கரக் கொடூரம் என்று நீங்கள் குறிப்பிட்டதற்கு என்ன அர்த்தம்?"

"அது ஸ்லிதரினின் உண்மையான வாரிசால் மட்டுமே கட்டுப்படுத்தப்படக்கூடிய ஒரு ராட்சஸ விலங்கு என்று நம்பப்படுகிறது," என்று பேராசிரியர் உணர்ச்சியற்றக் 'கிறீச்' குரலில் கூறினார்.

பயம் நிரம்பி வழிந்த பார்வைகள் வகுப்பில் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

பேராசிரியர் பின்ஸ் தன்னுடைய குறிப்புகளைப் புரட்டியபடி, "அப்படிப்பட்ட எதுவும் கிடையாது என்று நான் உங்களுக்கு மீண்டும் கூறிக் கொள்ள விரும்புகிறேன்," என்றார். "பாதாள அறையும் கிடையாது, ராட்சஸ விலங்கும் கிடையாது."

"சார், ஆனால்," என்று சீமஸ் துவக்கினான். "அப்படிப்பட்ட ஓர் அறையை ஸ்லிதரினின் உண்மையான வாரிசால் மட்டுமே திறக்க முடியும் என்றால், இதுவரை அதை வேறு எவரும் கண்டுபிடிக்காமல் இருந்ததில் வியப்பில்லையே!"

அவர் கொதித்தெழுந்து, "அபத்தம்!" என்று கத்தினார். "ஹாக்வார்ட்டிஸில் வரிசையாகப் பதவி வகித்தப் பல தலைமையாசிரியர்களாலும் தலைமையாசிரியைகளாலுமே அதைக் கண்டுபிடிக்க முடியாமல் போயுள்ளதால் –"

"சார், ஆனால்," என்று துவக்கிய பார்வதி பாட்டீல், "அதைத் திறக்க ஒருவேளை தீய மந்திர சக்திகளைப் பயன்படுத்த வேண்டியிருக்குமோ என்னவோ? –"

"பார்வதி! ஒரு மந்திரவாதி தீய மந்திர சக்திகளைப் பயன்படுத்தாமல் இருப்பதால் அவருக்கு அதைப் பற்றித் தெரியாது என்று முடிவு கட்டிவிடக்கூடாது," என்று அவர் வெடித்தார். "நான் மீண்டும் கூறுகிறேன், பேராசிரியர் டம்பிள்டோர் போன்ற மந்திரவாதிகளால்கூட –"

"ஆனால் அந்த நபர் ஸ்லிதரினுக்கு உறவாக இருக்க வேண்டுமல்லவா? அதனால் டம்பிள்டோரால் அதைக் கண்டுபிடிக்க முடியாததில் –" என்று டீன் தாமஸ் துவங்கினான். ஆனால் அக்கட்டத்தில் பேராசிரியர் தன் பொறுமையை முழுவதுமாக இழந்திருந்தார்.

"இதோடு போதும்!" என்று அவர் உறுதியான குரலில் கூறினார். "அது ஒரு கட்டுக்கதை! அப்படிப்பட்ட ஒன்று கிடையவே கிடையாது! பாதாள அறையை விட்டுத்தள்ளுங்கள் – ஸ்லிதரின், துடப்பங்களை வைப்பதற்கான ஒரு ரகசிய அறையைக் கட்டியிருப்பதற்கான ஆதாரம்கூட இல்லை. முட்டாள்தனமான ஒரு

Scanned by CamScanner

கதையை உங்களிடம் கூறியதற்காக என்னையே நான் செருப்பால் அடித்துக் கொள்ள வேண்டும். நாம் இப்போது வரலாற்றிற்குத் திரும்பலாம். உறுதியான, நம்பத் தகுந்த, நிரூபிக்கத்தக்க உண்மைகளைப் பற்றிப் பேசலாம்!"

ஐந்து நிமிடங்களுக்குள் மொத்த வகுப்பும் பழையபடி தனது மந்த நிலைக்குள் மூழ்கியது.

* * *

"சலசார் ஸ்லிதரின் ஒரு பழைய கிறுக்கன் என்று எப்போதுமே நான் சந்தேகப்பட்டு வந்திருந்தேன்," என்று ரான் ஹாரியிடமும் ஹெர்மயனியிடமும் கூறினான். வகுப்பு முடிந்ததும், நிரம்பி வழிந்து கொண்டிருந்த தாழ்வாரங்களின் வழியாக எதிர்நீச்சல் போட்டுக் கொண்டு, இரவு உணவிற்குப் போவதற்கு முன்பாக அவர்கள் தங்கள் அறைகளில் தங்கள் பைகளை வைப்பதற்காக விரைந்து கொண்டிருந்தனர். "ஆனால் இந்தத் தூய ரத்த விவகாரத்தைத் துவக்கி வைத்தது ஸ்லிதரின்தான் என்பது எனக்குத் தெரியவே தெரியாது. ஆயிரமாயிரம் கேல்லியன்களைக் கொட்டிக் கொடுத்தாலும் நான் ஸ்லிதரின் அணியில் இருக்க மாட்டேன். வகை பிரிக்கும் தொப்பி மட்டும் என்னை ஸ்லிதரின் அணியில் போட்டிருந்தால், நான் உடனேயே என் பெட்டிப் படுக்கையைக் கட்டிக் கொண்டு வீட்டிற்குத் திரும்பிப் போயிருப்பேன் . . ." என்று ரான் கூறினான்.

ஹெர்மயனி மட்டும் உணர்ச்சிபூர்வமாகத் தலையை ஆட்டினாள். ஆனால் ஹாரி எதையும் கூறவில்லை. அவனுக்கு வயிற்றைப் புரட்டிக் கொண்டு வந்தது.

வகை பிரிக்கும் தொப்பி முதலில் தன்னை ஸ்லிதரின் அணியில் போடலாம் என்று தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தது என்பதை ஹாரி ரானிடமும் ஹெர்யனியிடமும் ஒருபோதும் கூறியிருக்கவில்லை. ஒரு வருடத்திற்கு முன்பு, வகை பிரிக்கும் தொப்பியை அவன் தன் தலையில் செருகிக் கொண்டதும் அது மெல்லிய குரலில் அவனது காதுக்குள் கூறியிருந்தது நேற்றுதான் நடந்ததுபோல அவனுக்குத் தெள்ளத் தெளிவாக நினைவில் இருந்தது.

"உன்னால் மிக மிகச் சிறந்தவனாக ஆக முடியும், தெரியுமா? எல்லாம் உன் தலையில் இருக்கிறது. நீ மகத்துவமான நிலையை அடைவதற்கு ஸ்லிதரின் அணியால் உனக்கு உதவ முடியும். அதில் எந்த சந்தேகமும் இல்லை . . ."

தீய மந்திரவாதிகளை உருவாக்கித் தள்ளிக் கொண்டிருந்த ஸ்லிதரின் அணியின் 'மகத்துவம்' பற்றி ஹாரி ஏற்கனவே கேள்விப்பட்டு இருந்ததால், அவன் பரிதவிப்புடன், "ஸ்லிதரின் வேண்டாம், ஸ்லிதரின் வேண்டாம்," என்று தன் மனத்திற்குள் சொல்லிக் கொண்டிருந்தான். அதற்கு அந்தத் தொப்பி, **"என்ன, ஸ்லிதரின் வேண்டாமா? அப்படியானால் சரி, நீ உறுதியாக இருந்தால் – நீ ஹிரிஃபின்டார் அணியில் இரு!"** என்று கூறியது.

Scanned by CamScanner

அவர்கள் கூட்டத்தில் அடித்துச் செல்லப்பட்டுக் கொண்டிருந்தபோது, காலின் அவர்களைக் கடந்து சென்றான்.

"ஹலோ, ஹாரி!"

ஹாரியும் யோசிக்காமல் பதிலுக்கு, "ஹலோ, காலின்!" என்று கூறினான்.

"ஹாரி, ஹாரி – என் வகுப்பில் உள்ள ஒரு பையன், நீ –"

ஆனால் காலின் உருவத்தில் மிகவும் சிறியவனாக இருந்ததால், பாரங்கை நோக்கிப் போய்க் கொண்டிருந்த மாணவ வெள்ளத்தில் அவன் அடித்துச் செல்லப்பட்டான். "ஹாரி, அப்புறம் சந்திக்கலாம்!" என்ற அவனது கீச்சுக் குரல் மட்டும் கேட்டது. அடுத்த நிமிடம் அவனைக் காணவில்லை.

"அவனது வகுப்பில் இருந்த பையன் உன்னைப் பற்றி என்ன சொல்லியிருப்பான்," என்று ஹெர்மயனி வியந்தாள்.

அதற்கு ஹாரி, "நான் ஸ்லிதரினின் வாரிசு என்று கூறியிருப்பான் என்று நினைக்கிறேன்," என்றான். அவனது வயிறு மேலும் புரட்டிக் கொண்டு வந்தது. மதிய உணவு இடைவேளையின்போது ஜஸ்டின் தன்னைப் பார்த்துவிட்டுப் பேயைப் பார்த்ததுபோல ஓடியது அவனுக்குத் திடீரென்று நினைவிற்கு வந்தது.

"இங்குள்ள மக்கள் எதை வேண்டுமானாலும் நம்புவார்கள்," என்று ரான் வெறுப்புடன் கூறினான்.

கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்தது. அடுத்த மாடிப்படியை அவர்களால் பிரச்சனையின்றி ஏற முடிந்தது.

ரான் ஹெர்மயனியிடம், "ரகசியங்கள் அடங்கிய பாதாள அறை ஒன்று உண்மையிலேயே இருக்கிறது என்று நீ நினைக்கிறாயா?" என்று கேட்டான்.

ஹெர்மயனி தனது நெற்றியைச் சுருக்கியவாறு, "எனக்குத் தெரியவில்லை," என்று கூறினாள். "டம்பிள்டோரால் நாரிஸ் பூனையைக் குணப்படுத்த முடியவில்லை என்பதைப் பார்க்கும்போது, அப்பூனையைத் தாக்கியது ஒரு மனிதனாக இருக்க முடியாது என்று எனக்குத் தோன்றுகிறது."

அவள் பேசிக் கொண்டிருந்தபோது, எந்த இடத்தில் அந்தச் சம்பவம் நடைபெற்றதோ தாங்கள் அதே இடத்தில் நின்று கொண்டிருந்ததை அவர்கள் கண்டனர். அவர்கள் அந்த இடத்தை மீண்டும் நிதானமாகப் பார்த்தனர். சம்பவம் நடந்த அன்று இரவில் அது எப்படி இருந்ததோ, அப்படியே இப்போதும் இருந்தது

நாரிஸ் பூனை மட்டும் தீப்பந்தத் தாங்கியில் தொங்கிக் கொண்டிருக்கவில்லை. 'ரகசியங்கள் அடங்கிய அறை திறக்கப்பட்டுவிட்டது' என்ற வாசகத்திற்குக் கீழே ஒரு காலி நாற்காலி அங்கு சுவரோரமாக இருந்தது.

"அதில் உட்கார்ந்துதான் ஃபில்ச் தர்பார் பண்ணிக் கொண்டிருக்கிறார்," என்று ரான் முணுமுணுத்தான்.

Scanned by CamScanner

அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். தாழ்வாரத்தில் ஆளரவமே இருக்கவில்லை.

"கொஞ்சம் ஆராய்ந்து பார்த்தால் ஒன்றும் கெட்டுப் போகாது," என்று கூறிய ஹாரி, தன் பையைக் கீழே போட்டுவிட்டு, ஏதாவது துப்புக் கிடைக்கிறதா என்று பார்ப்பதற்காகத் தரையைத் துழாவத் துவங்கினான்.

"பிராண்டல் குறிகள்!" என்று அவன் கூறினான். "இதோ இங்கே! ஆ இங்கேயும் ஒன்று!"

"இங்கே வந்து பாருங்கள்!" என்று ஹெர்மயனி திடீரென்று கத்தினாள். "இது விநோதமாக இருக்கிறது!"

ஹாரி தரையிலிருந்து எழுந்து, வாசகங்கள் எழுதப்பட்டிருந்த சுவருக்கு அருகே இருந்த சன்னலுக்கு விரைந்தான். ஹெர்மயனி சன்னலின் கண்ணாடிக் கதவின் மேற்பகுதியைச் சுட்டிக்காட்டிக் கொண்டிருந்தாள். அதிலிருந்த ஒரு சிறு துவாரத்தின் வழியாக வெளியே செல்லப் பத்து இருபது சிலந்திப் பூச்சிகள் தமக்குள் சண்டையிட்டுக் கொண்டிருந்தன. அங்கு வெள்ளி நிறத்தில் நீளமான நூல் ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. அந்தச் சிலந்திப் பூச்சிகள் வெளியே போகத் துடித்துக் கொண்டு அதில் ஏறிக் கொண்டிருந்ததுபோலத் தோன்றியது.

"சிலந்திப் பூச்சிகள் எப்போதாவது இவ்வாறு நடந்து கொண்டுள்ளதை நீ பார்த்திருக்கிறாயா?" என்று ஹெர்மயனி வியப்புடன் கேட்டாள்.

"நான் பார்த்தது இல்லை. ரான், நீ எப்படி?" என்று ஹாரி கேட்டான்.

பின் அவன் தன் கழுத்தை வளைத்துப் பார்த்தான். ரான் அவர்களுக்கு வெகு பின்னால், அந்த இடத்தைவிட்டு ஓடிவிட வேண்டும் என்ற தனது உள்ளுணர்வுடன் போராடிக் கொண்டிருந்தவன்போல நின்று கொண்டிருந்தான்.

"உனக்கு என்ன ஆயிற்று?" என்று ஹாரி கேட்டான்.

"எனக்கு – சிலந்திப் பூச்சிகளைக் – கண்டாலே – பிடிக்காது," என்று ரான் இறுகிப் போயிருந்த ஒரு குரலில் கூறினான்.

ஹெர்மயனி ரானை ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டே, "ரான், என்ன புதிதாகக் கரடி விடுகிறாய்?" என்று கேட்டாள். "ஆனால் இதற்கு முன்பு நீ ஏகப்பட்ட முறை மாயத் திரவ வகுப்பில் சிலந்திகளைக் கையாண்டிருக்கிறாயே?"

"அவை செத்துப் போயிருந்தால் நான் பயப்பட மாட்டேன்," என்று ரான் கூறினான். அவன் அந்த சன்னலைப் பார்ப்பதைத் தவிர்த்து மற்ற இடங்களில் தன் பார்வையை அலையவிட்டான். "அவை நகர்ந்து செல்லும் விதம் எனக்கு பிடிக்காது . . ."

ஹெர்மயனி நக்கலாகச் சிரித்தாள்.

"உனக்கு என்னைப் பார்த்தால் இளக்காரமாக இருக்கிறதா?" என்று ரான் கோபமாகக் கேட்டான். "உனக்கு அதற்கான காரணம்

Scanned by CamScanner

தெரிந்தாக வேண்டுமென்றால் கூறுகிறேன். எனக்கு மூன்று வயதாக இருந்தபோது, நான் ஃபிரெட்டின் பொம்மைத் துடப்பத்தை உடைத்துவிட்டதால், அவன் பதிலுக்கு என் கரடி பொம்மையை ஓர் அருவருப்பான பெரிய சிலந்திப் பூச்சியாக மாற்றிவிட்டான். நீ உன் கரடி பொம்மையைத் தூக்கி வைத்துக் கொஞ்சிக் கொண்டிருக்கும்போது, திடீரென்று அதற்கு ஏகப்பட்டக் கால்கள் முளைத்தால், உனக்கும்கூட அவற்றைக் கண்டால் உதறல் எடுக்கத்தான் செய்யும். அதோடு –"

உடல் நடுங்கியவாறு அவன் அத்துடன் நிறுத்திக் கொண்டான். சிரிக்காமல் இருக்க ஹெர்மயனி பெரிதும் மெனக்கெட்டுக் கொண்டிருந்தாள். பேச்சைத் திசை திருப்பினால் நன்றாக இருக்கும் என்று நினைத்த ஹாரி, "இந்த இடம் முழுவதும் தண்ணீர் கொட்டிக் கிடந்தது உங்களுக்கு நினைவிருக்கிறதா? அது எங்கிருந்து வந்திருக்கும்? இந்த இடம் பொதுவாகக் காய்ந்துதானே இருக்கும்?" என்று கேட்டான்.

தன்னை நிதானப்படுத்திக் கொண்ட ரான், ஃபில்ச்சின் நாற்காலியைக் கடந்து ஒருசில அடிகள் நடந்து சென்று ஓரிடத்தைச் சுட்டிக்காட்டி, "இங்கிருந்துதான்," என்று கூறினான். "இந்தக் கதவுகளுக்குப் பின்னால் இருந்துதான் தண்ணீர் வந்திருக்க வேண்டும்!"

அவன் அந்தக் கதவின் பித்தளைக் கைப்பிடியை நோக்கித் தன் கையைக் கொண்டு போனான். திடீரென்று அது தன்னைச் சுட்டுவிட்டதுபோல அவன் தன் கையை வெடுக்கென்று விலக்கிக் கொண்டான்.

"என்ன ஆயிற்று?" என்று ஹாரி கேட்டான்.

"நம்மால் அங்கு போக முடியாது," என்று ரான் திட்டவட்டமாகக் கூறினான். "அது மாணவியரின் குளியலறை."

ஹெர்மயனி அவர்களை நோக்கி வந்து கொண்டே, "வா, ரான், இங்கு யாரும் இருக்க மாட்டார்கள்," என்று கூறினாள். "இது முனகல் மர்ட்டிலுடையது. வா! இங்கு என்ன இருக்கிறது என்று பார்க்கலாம்."

அங்கு மாட்டப்பட்டிருந்த 'உபயோகத்தில் இல்லை' என்ற பெரிய பலகையை அலட்சியம் செய்துவிட்டு அவள் உள்ளே நுழைந்தாள்.

ஹாரி இதுவரை அதைப் போன்ற மிகவும் அருவருப்பான, மனக்கிலேசத்தை ஏற்படுத்திய ஒரு குளியலறையைப் பார்த்திருக்கவில்லை. உடைந்து போயிருந்த ஒரு பெரிய கண்ணாடிக்குக் கீழே, கற்களாலான பல கை கழுவும் தொட்டிகள் வரிசையாக இருந்தன. தரை ஈரமாக இருந்தது. மெழுகுவர்த்தித் தாங்கிகளில் மிகவும் அடியில் எரிந்து கொண்டிருந்த மெழுகுவர்த்திகளின் மெல்லிய ஒளியை அது பிரதிபலித்தது. அங்கிருந்த சிறு தடுப்புகளின் மரக் கதவுகள் பிராண்டப்பட்டும் செதில்செதிலாக உரிந்து போயும் இருந்தன. அதில் ஒரு கதவு அதன் கீலில் பாதி பிடுங்கப்பட்டிருந்த நிலையில் தொங்கிக் கொண்டிருந்தது.

Scanned by CamScanner

ஹெர்மயனி தன்னுடைய விரல்களைத் தனது உதடுகளின்மீது வைத்துக் கொண்டு, கடைசித் தடுப்பை நோக்கிச் சென்றாள். அவள் அதை அணுகியதும், "ஹலோ மர்ட்டில், நீ எப்படி இருக்கிறாய்?" என்று கேட்டாள்.

ஹாரியும் ரானும் அங்கே போய் எட்டிப் பார்த்தனர். மர்ட்டில் ஆவி அங்கிருந்த தொட்டியின்மீது மிதந்து கொண்டிருந்தது. அது தன் கன்னத்தில் எதையோ நோண்டிக் கொண்டிருந்தது.

மர்ட்டில் ஹாரியையும் ரானையும் சந்தேகக் கண்ணோடு பார்த்தபடி, "இது மாணவியரின் குளியலறை," என்று கூறியது "இவர்கள் மாணவியர் அல்லவே?"

"ஆமாம்," என்று ஹெர்மயனி ஒப்புக் கொண்டாள். அவள் அந்த அழுக்கடைந்த பழைய கண்ணாடியையும் ஈரமாக இருந்த தரையையும் சுட்டிக்காட்டியபடி, "இந்த இடம் – ம்ம் – எவ்வளவு நன்றாக இருக்கிறது என்று காட்டுவதற்காக அவர்களை நான்தான் இங்கு கூட்டி வந்தேன்."

"அது எதையாவது பார்த்ததா என்று அதனிடம் கேள்," என்று ஹாரி ஹெர்மயனியின் காதில் கிசுகிசுத்தான்.

அவனை முறைத்துப் பார்த்த மர்ட்டில், "நீ என்ன முணுமுணுத்துக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டது.

ஹாரி அவசர அவசரமாக, "ஒன்றுமில்லை," என்று கூறினான். "நாங்கள் உன்னை என்ன கேட்க வந்தோம் என்றால் –"

"மக்கள் என் முதுகிற்குப் பின்னால் பேசுவதை நிறுத்தினால் நன்றாக இருக்கும்," என்று மர்ட்டில் கம்மலான குரலில் கூறியது. அதற்கு அழுகை முட்டிக் கொண்டு வந்தது. அதன் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாகக் கொட்டியது. "நான் இறந்து போயிருக்கலாம். ஆனால் எனக்கும் உணர்ச்சிகள் இருக்கின்றன."

"மர்ட்டில், இங்கு யாரும் உனக்கு மனவருத்தம் ஏற்படுத்த முயலவில்லை. ஹாரி வந்து –"

"என்ன சொன்னாய்? இங்கு யாரும் எனக்கு மனவருத்தம் ஏற்படுத்த முயலவில்லையா? கேட்பதற்கு இது வேடிக்கையாக இருக்கிறது," என்று மர்ட்டில் ஊளையிட்டது. "இந்த இடத்தில் என் வாழ்க்கை மிக அவலமாக இருக்கிறது. இப்போது என்னடாவென்றால், மக்கள் இங்கு வந்து என் இறப்பிற்குப் பிந்தைய வாழ்வையும் கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்!"

ஹெர்மயனி அவசரமாக, "சமீபத்தில் நீ இங்கு வித்தியாசமாக எதையாவது பார்த்தாயா?" என்று கேட்டாள். "ஏனென்றால், ஹாலோவீன் தினத்தன்று ஒரு பூனை இந்த அறைக்கு வெளியே தாக்கப்பட்டிருந்தது."

"அன்றைய தினம் நீ இங்கு யாரையாவது பார்த்தாயா?" என்று ஹாரி கேட்டான்.

"அன்று நான் எதிலும் அவ்வளவாகக் கவனம் செலுத்தவில்லை," என்று மர்ட்டில் ஆவி விட்டேத்தியாகக் கூறியது. "பீவ்ஸ் என்னை

Scanned by CamScanner

மிகவும் மனவருத்தம் கொள்ளச் செய்திருந்ததால் நான் நேராக இங்கு வந்து தற்கொலை செய்து கொள்ள முனைந்தேன். அப்புறம்தான் நினைவுக்கு வந்தது – நான் – நான் –"

"ஏற்கனவே இறந்து போய்விட்டாய் என்று," என்று ரான் எடுத்துக் கொடுத்தான்.

மர்ட்டில் சோகமாகத் தேம்பியது. அது வானத்தில் எழும்பி அத்தொட்டிக்குள் குதித்தது. அதிலிருந்து தெறித்தத் தண்ணீரில் அவர்கள் மூவரும் தொப்பலாக நனைந்தனர். பின் அந்த ஆவியைக் காணவில்லை. அதன் அழுகையை வைத்து, அது அத்தொட்டியின் அடியில் இருக்கலாம் என்று அவர்கள் ஊகித்தனர்.

ஹாரியும் ரானும் வாயைப் பிளந்து கொண்டு நின்றனர். ஆனால் ஹெர்மயனி தன் தோள்களைக் குலுக்கிக் கொண்டு, "மர்ட்டிலைப் பொறுத்தவரை, இது கிட்டத்தட்ட மகிழ்ச்சியான விஷயம்தான். சரி, வா, நாம் இந்த இடத்தைக் காலி செய்யலாம்," என்று கூறினாள்.

ஹாரி அந்த அறைக் கதவை முழுவதுமாக மூடிக்கூட இருக்க மாட்டான், சத்தமாகக் கேட்ட ஒரு குரல் அவர்கள் மூன்று பேரையும் தூக்கிவாரிப் போட வைத்தது.

"ரான்!"

மாடிப்படி அருகே, பெர்சி, முகத்தில் அதிர்ச்சி உறைந்திருக்க, ஆணியடித்தாற்போல நின்று கொண்டிருந்தான். அவனது மாணவ அணித்தலைவன் முத்திரை அவனது உடையின்மீது பளபளத்துக் கொண்டிருந்தது.

"அது மாணவியரின் குளியலறை," என்று கூறிய அவனுக்கு மூச்சு வாங்கியது. "நீங்கள் அங்கு என்ன செய்து கொண்டு –"

"சும்மா பார்த்துக் கொண்டிருக்கிறோம்," என்று ரான் தோள்களைக் குலுக்கினான். "ஏதாவது துப்புக் கிடைக்குமா என்று . . ."

பெர்சி கோபத்தில் துடித்தான். ஹாரிக்கு அது ரானின் அம்மா மோலியை ஞாபகப்படுத்தியது.

பெர்சி தன் கைகளை ஆட்டிக் கொண்டு, தன் நடையை விரைவுபடுத்தி, அச்சுறுத்தும் விதத்தில் அவர்களை நோக்கி வந்து கொண்டே, "முதலில் – இங்கிருந்து – ஓடிப் – போய் – விடுங்கள்!" என்று இரைந்தான். "நீங்கள் என்ன பண்ணிக் கொண்டிருக்கிறீர்கள் என்று உங்கள் மரமண்டைகளுக்குக் கொஞ்சமாவது புரிகிறதா? கீழே எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டு இருக்கும்போது, நீங்கள் மூவரும் மீண்டும் இங்கே வந்து . . ."

ரான் பெர்சிக்கு அருகே சென்று அவனை முறைத்துப் பார்த்துக் கொண்டு, "நாங்கள் ஏன் இங்கு வரக்கூடாது?" என்று கோபமாகக் கேட்டான். "இதோ பார், எங்களுடைய சுண்டுவிரல்கூட அந்தப் பூனையின்மீது படவில்லை."

பதிலுக்குப் பெர்சியும், "ஜின்னியிடம் நானும் இதைத்தான் சொன்னேன். ஆனாலும் உன்னை இங்கிருந்து வெளியேற்றி

Scanned by CamScanner

விடுவார்கள் என்று அவள் பயந்து போயிருக்கிறாள். அவள் இவ்வளவு மனம் கலங்கி நான் பார்த்ததில்லை. அழுதழுது அவளது மூஞ்சி உப்பிப் போய் இருக்கிறது. நீ அவளைப் பற்றி நினைத்துப் பார்ப்பது நல்லது. இச்சம்பவத்தால், முதல் வருட மாணவர்கள் எல்லோரும் அளவுக்கு அதிகமாக மனக்கிலேசம் அடைந்திருக்கிறார்கள் ..." என்றான்.

"உனக்கு ஜின்னிமேல் ஒன்றும் அக்கறை கிடையாது," என்று ரான் கத்தினான். இப்போது அவனது காதுகள் ஜிவ்வென்று சிவந்து போயிருந்தன. "நீ பள்ளித் தலைமை மாணவனாக ஆவதற்கு இருக்கும் வாய்ப்பை நான் கெடுத்துவிடுவேனோ என்று நீ பயப்படுகிறாய்."

"கிரிஃபின்டார் அணியிலிருந்து ஐந்து புள்ளிகள் கழித்துக் கொள்ளப்படும்," என்று பெர்சி இறுக்கமான குரலில் கூறினான். "இது உனக்குச் சரியான பாடம் புகட்டும் என்று நான் நினைக்கிறேன்! துப்பறியும் ஜேம்ஸ்பான்ட் வேலையை நீ இதோடு நிறுத்திக் கொள்! இல்லையென்றால் நான் அம்மாவிற்குக் கடிதம் எழுதிவிடுவேன்."

பெர்சி திரும்பி நடந்தான். அவனது பின் கழுத்து, ரானின் காதுகள் அளவுக்குச் சிவந்திருந்தது.

* * *

அன்றைய இரவு கிரிஃபின்டார் பொது அறையில், ஹாரி, ரான், ஹெர்மயனி ஆகிய மூவரும், பெர்சி இருந்த இடத்திலிருந்து எவ்வளவு தள்ளி இருக்க முடியுமோ அவ்வளவு தள்ளி உட்கார்ந்து கொண்டனர். ரான் இன்னும் மிக மோசமான மனநிலையில் இருந்தான். வசிய வீட்டுப்பாடத்தில் அவன் தொடர்ந்து கறைகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தான். அந்தக் கறைகளைப் போக்குவதற்காக அவன் எட்டித் தன் மந்திரக்கோலை எடுக்க முனைந்தபோது, அது அவனது தோல் காகிதத்தைத் தீப்பற்ற வைத்துவிட்டது. தனது வீட்டுப்பாடத்தின் அளவுக்குப் புகைந்து கொண்டிருந்த ரான், தான் படித்துக் கொண்டிருந்த '**அடிப்படை மாய மந்திரப் புத்தகம் (இரண்டாம் வருடம்)**' நூலை அறைந்து மூடினான்.

ஹாரிக்கு ஆச்சரியம் ஏற்படுத்தும் வகையில் ஹெர்மயனியும் ரானைத் தொடர்ந்து தன் புத்தகத்தை மூடினாள்.

"அது யாராக இருக்கும்?" என்று ஹெர்மயனி மெல்லிய குரலில் கேட்டாள். அவள் கேட்ட விதம், அவர்கள் ஏற்கனவே ஓர் உரையாடலைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்ததுபோல இருந்தது. "ஸ்குயிப்களையும் மகுள்களுக்குப் பிறந்த மந்திரவாதிகளையும் ஹாக்வார்ட்ஸில் இருந்து துரத்தியடிக்க யார் விரும்புவார்கள்?"

"நாம் கொஞ்சம் யோசித்துப் பார்க்கலாமா?" என்று ரான் போலி வியப்புடன் கேட்டான். "நமக்குத் தெரிந்தவரை 'மகுள்களுக்குப் பிறந்தவர்கள் கழிசடைகள்' என்று யார் நினைக்கிறார்கள் என்று யோசிக்கலாம்."

அவன் ஹெர்மயனியைப் பார்த்தான். அவள் அவனது மனத்தில் இருந்ததை ஏற்றுக் கொள்ளாதவள்போல அவனைப் பார்த்தாள்.

Scanned by CamScanner

"நீ மால்ஃபாயைப் பற்றிப் பேசுகிறாய் என்றால் –"

"நான் அவனைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கிறேன்," என்று ரான் கூறினான். "அவன் என்ன சொன்னான் என்பது உனக்கு நினைவிருக்கிறதா? **'அடுத்து நீங்கள்தான் ஈன ரத்தப் பிறவிகளே!'** வஞ்சகம் பொங்கி வழியும் அவனது எலி மூஞ்சியைப் பார்த்தாலே தெரியவில்லையா, அவன்தான் இதைச் செய்திருப்பான் என்று!"

"மால்ஃபாய் – ஸ்லிதரினின் உண்மையான வாரிசு?" என்று ஹெர்மயனி இளக்காரமாகக் கேட்டாள்.

ஹாரியும் தனது புத்தகத்தை மூடிவிட்டு, "அவனது பரம்பரையைப் பார்," என்று கூறினான். "அவர்கள் அனைவரும் ஸ்லிதரின் அணியில்தான் இருந்துள்ளனர். அவன் அது குறித்துத் தம்பட்டம் அடித்துக் கொண்டு திரிந்து வருகிறான். அவர்கள் ஸ்லிதரினின் வாரிசுகளாக இருக்க நிறைய வாய்ப்பிருக்கிறது. அவனது அப்பாவிடம் போதுமான அளவு தீய மந்திர சக்தி குடி கொண்டுள்ளது."

"ரகசியங்கள் அடங்கிய பாதாள அறைக்கான திறவுகோலை அவர்களுடைய குடும்பம் பல நூற்றாண்டுகளாக, அப்பாவிடமிருந்து பிள்ளைக்கு என்று, ஒரு தலைமுறை அடுத்த தலைமுறைக்குக் கொடுத்து வந்திருக்கக்கூடும்."

"அது சாத்தியம்தான்," என்று ஹெர்மயனி அரைகுறை மனத்துடன் கூறினாள்.

"ஆனால் அதை எப்படி நிரூபிப்பது?" என்று ஹாரி கசப்புடன் கேட்டான்.

ஹெர்மயனி, பெர்சி இருந்த திசையை நோக்கித் தன் கண்களைப் படரவிட்டவாறே, தன் குரலை இன்னும் தாழ்த்திக் கொண்டு, "அதற்கு ஒரு வழி இருக்கிறது," என்று மெதுவாகக் கூறினாள். "அது கடினமாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. அது ஆபத்தானதும்கூட. மிகமிக ஆபத்தானது. நாம் குறைந்தபட்சம் ஐம்பது பள்ளி விதிமுறைகளையாவது மீற வேண்டியிருக்கும்!"

"ஒரு மாதகால அவகாசத்திற்குள் இது குறித்து எங்களிடம் நீ விவரிக்க விரும்பினால், அதை எங்களுக்குத் தெரியப்படுத்துவாயா?" என்று ரான் எரிச்சலுடன் கேட்டான்.

"சரி, சரி," என்று ஹெர்மயனி வேண்டா வெறுப்பாகக் கூறினாள். "நாம் செய்ய வேண்டியதெல்லாம், ஸ்லிதரினின் பொது அறைக்குள் புகுந்து, நாம்தான் கேட்கிறோம் என்பது வெளிப்பட்டுவிடாமல் ஒருசில கேள்விகளை அங்கு நாம் மால்ஃபாயிடம் கேட்க வேண்டும், அவ்வளவுதான்."

"அது நடக்கவே நடக்காது," என்று ஹாரி கூறினான். ரான் நகைத்தான்.

"அதுவொன்றும் முடியாத காரியமல்ல," என்று ஹெர்மயனி தெரிவித்தாள். "அதற்கு நமக்குத் தேவையெல்லாம் கொஞ்சம் 'பலகூட்டுச்சாறு மாயத் திரவம்' மட்டும்தான்."

Scanned by CamScanner

"அது என்ன 'பலகூட்டுச்சாறு மாயத் திரவம்'?" என்று ஹாரியும் ரானும் ஒருமித்தக் குரலில் கேட்டனர்.

"ஸ்னேப் தன்னுடைய வகுப்பில் ஒருசில வாரங்களுக்கு முன்பு இது குறித்து –"

"மாயத் திரவ வகுப்பில் ஸ்னேப் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டுக் கொண்டிருப்பதைத் தவிர எங்களுக்கு வேறு வேலை இல்லை என்று நீ நினைத்தாயா?" என்று ரான் முணுமுணுத்தான்.

"இது உன்னை வேறு ஒருவராக உருமாற்றிவிடும். அதைப் பற்றி யோசித்துப் பாருங்கள்! நாம் மூன்று பேரும் ஸ்லிதரின் அணியைச் சேர்ந்த மூன்று மாணவர்களாக மாறிக் கொள்ளலாம். அது நாம்தான் என்பது வேறு யாருக்கும் தெரியாது. மால்ஃபாய் எதை வேண்டுமானாலும் நம்மிடம் சொல்வான். நம்மால் மட்டும் அவன் பேசுவதைக் கேட்க முடிந்தால், அவன் இக்கணத்தில் ஸ்லிதரின் பொது அறையில் அதைப் பற்றித் தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கக்கூடும். யார் கண்டது?

ரான் முகம் சுளித்தவாறே, "இந்தப் பலகூட்டுச்சாறு சமாச்சாரம் எனக்கென்னவோ கொஞ்சம் ஏடாகூடமாகத் தெரிகிறது," என்று கூறினான். "நாம் அந்த ஸ்லிதரின் மாணவர்களின் உருவத் தோற்றத்திலிலேயே நிரந்தரமாகத் தங்கும்படி ஆகிவிட்டால்?"

ஹெர்மயனி பொறுமையிழந்து தன் கைகளை ஆட்டியபடியே "கொஞ்ச நேரத்திற்குப் பிறகு அத்திரவத்தின் வீரியம் தானாகவே குறைந்து முற்றிலுமாக விலகிவிடும்," என்று கூறினாள். "ஆனால் இந்த மாயத் திரவத்தைத் தயாரிக்கும் முறையைத் தெரிந்து கொள்வதுதான் மிகவும் சிரமமாக இருக்கிறது. அத்தயாரிப்பு முறை 'அதிவீரிய மாயத் திரவம்' என்ற புத்தகத்தில் இருந்ததாக ஸ்னேப் கூறினார். மட்டுப்படுத்தப்பட்ட நூலகப் பகுதிக்குள் கண்டிப்பாக அப்புத்தகம் இருந்தாக வேண்டும்."

மட்டுப்படுத்தப்பட்ட நூலகப் பகுதியிலிருந்து ஒரு புத்தகத்தை எடுக்க வேண்டுமானால் அதற்கு ஒரே வழி, ஓர் ஆசிரியரிடமிருந்து அவரது கையெழுத்துடன்கூடிய ஒரு குறிப்புச் சீட்டை வாங்கி வருவதுதான்.

"நாம் அந்த மாயத் திரவத்தைத் தயாரிக்கப் போவதில்லை என்றால், நமக்கு அப்புத்தகம் எதற்காகத் தேவை என்று எனக்குப் புரியவில்லை," என்று ரான் கூறினான்.

"நமக்கு அக்கோட்பாட்டில் மிகுந்த ஈடுபாட்டு இருப்பதுபோல நம்மால் காட்டிக் கொள்ள முடியுமெனில், நமக்கு அப்புத்தகம் கிடைப்பதற்கான வாய்ப்பு அதிகம் இருக்கிறது . . ."

"வீணாக அலையாதே! எந்தவோர் ஆசிரியரும் உன்னுடைய இந்த வலையில் விழப் போவதில்லை," என்று ரான் கூறினான். "அவர்களுக்கு நிஜமாகவே எருமை மாட்டுத் தோல் இருந்தாலொழிய!"

Scanned by CamScanner

அத்தியாயம் பத்து

போக்கிரி பிளட்ஜர்

பெரும் அசம்பாவிதத்தில் முடிந்த பிக்ஸி சம்பவ நிகழ்விற்குப் பிறகு, லாக்ஹார்ட் வேறு எந்த விலங்கையும் வகுப்பிற்குள் கொண்டுவரவில்லை. அதற்கு பதிலாக, அவர் தனது புத்தகங்களில் இருந்து மாணவர்களுக்குப் படித்துக் காட்டினார். சில சமயங்களில், அவற்றில் இடம்பெற்றிருந்த சுவையான சம்பவங்களை நடித்தும் காட்டினார். அப்படி நடித்துக் காட்டியபோது அவர் பெரும்பாலும் ஹாரியையே தன் உதவிக்கு அழைத்தார். அதனால் இதுவரை, பிதற்றல் வசியத்திற்கு ஆட்பட்டிருந்து பின்னர் லாக்ஹார்ட்டால் குணப்படுத்தப்பட்டிருந்த ஒரு டிரான்ஸ்சில்வேனியன் கிராமத்தானாகவும், ஜலதோஷம் பிடித்திருந்த ஒரு பனி அரக்கனாகவும், முட்டைக்கோஸ் போன்ற காய்கறிகளைத் தவிர வேறு எதையும் உண்ண முடியாதபடி லாக்ஹார்ட்டால் சபிக்கப்பட்டிருந்த ஒரு ரத்தக்காட்டேரியாகவும் நடிப்பதற்கு ஹாரி கட்டாயப்படுத்தப்பட்டிருந்தான்.

அடுத்து நடைபெற்றத் 'தீய மந்திர சக்திகளுக்கு எதிரான பாதுகாப்பு' வகுப்பில் ஹாரி மறுபடியும் வகுப்பிற்கு முன்னால் வரும்படி கேட்டுக் கொள்ளப்பட்டான். இம்முறை அவன் ஓர் ஓநாய்மனிதனாக நடிக்க வேண்டியிருந்தது. அன்று லாக்ஹார்ட்டை ஒரு நல்ல மனநிலையில் வைத்திருக்க வேண்டிய காரணம் மட்டும் அவனுக்கு இல்லாமல் இருந்திருந்தால், அவன் அப்படி நடிக்க மறுத்திருக்கக்கூடும்.

"ஹாரி, நன்றாகப் பெரிதாக ஊளையிடு – ஆம், அப்படித்தான் – சபாஷ்! – மாணவர்களே – பிறகு, நீங்கள் நம்பினால் நம்புங்கள், இப்படித்தான் நடந்தது – நான் அந்த ஓநாய்மனிதன்மீது மோதி – இப்படித்தான் மோதி – அவனைத் தரையோடு தரையாகச் சாய்த்து – இப்படி ஒற்றைக் கையினால் – எழ விடாமல் பிடித்திருந்தேன் – என்னுடைய அடுத்தக் கையைக் கொண்டு, என் மந்திரக்கோலால் அவனுடைய தொண்டையை அழுத்தினேன் – பின் நான் என்னிடம் மீதமிருந்த அனைத்து சக்திகளையும் ஒன்றுதிரட்டி மிகவும் சிக்கலான மந்திரங்களில் ஒன்றான 'ஹோமார்ஃபஸ்' மந்திரத்தைப்

Scanned by CamScanner

பிரயோகித்தேன் – அவன் பரிதாபமாக முனகினான் – ஹாரி இன்னொரு முறை ஊளையிடு – இன்னும் சத்தமாக – ஆம் அப்படித்தான் – பிரமாதம்! – அவனுடைய தோல் முடியெல்லாம் மாயமாய் மறைந்தது – அவனுடைய கோரைப் பல் சுருங்கியது – அவன் மீண்டும் ஒரு சாதாரண மனிதனாக உருவெடுத்தான். மிக எளிதான, ஆனால் அதே சமயம் மிகவும் பலனளிக்கின்ற ஒரு மந்திரம் அது – மற்றுமொரு கிராமம், ஓநாய்மனிதனின் மாதாந்திரத் தாக்குதல்களில் இருந்து தங்களது கிராமத்தைக் காப்பாற்றிக் கொடுத்த ஒரு வெற்றிக் கதாநாயகனாக என்னை நினைவில் வைத்திருக்கும்."

மணி அடித்தது. லாக்ஹார்ட் உடனடியாக எழுந்து நின்றார்.

"வீட்டுப்பாடம்: வாகா–வாகா ஓநாய்மனிதனை நான் முறியடித்தது பற்றி நீங்கள் ஒரு கவிதை எழுதி வர வேண்டும். மிகச் சிறந்த கவிதையைப் படைப்பவருக்கு நான் என் கையெழுத்திட்ட 'மாயாஜாலமான நான்' என்ற எனது புத்தகத்தின் பிரதி ஒன்றைப் பரிசாகக் கொடுப்பேன்."

மொத்த வகுப்பும் கலைந்தது. ஹாரி அந்த அறையின் பின்பகுதிக்குச் சென்றான். அங்கு ரானும் ஹெர்மயனியும் காத்துக் கொண்டிருந்தனர்.

"தயாரா?" என்று ஹாரி முணுமுணுத்தான்.

"எல்லோரும் போகட்டும்!" என்று ஹெர்மயனி பதற்றத்துடன் கூறினாள். "சரி . . ."

அவள் தன் கையில் ஒரு துண்டுக் காகிதத்தை இறுகப் பிடித்தபடி லாக்ஹார்ட்டின் மேசையை அணுகினாள். ஹாரியும் ரானும் அவளுக்குப் பின்னால் சென்றனர்.

"பேராசிரியரே, வணக்கம்!" என்று ஹெர்மயனி திக்கித் திணறிக் கூறினாள். "நான் இந்தப் புத்தகத்தை நூலகத்திலிருந்து எடுக்க விரும்புகிறேன் – வெறுமனே மேலோட்டமாகப் படிப்பதற்காகத்தான்." அவள் தன் கையில் வைத்திருந்த துண்டுக் காகிதத்தை அவரிடம் நீட்டினாள். அவளது கைகள் லேசாக நடுங்கிக் கொண்டிருந்தன. "ஆனால் இப்புத்தகம் நூலகத்தின் மட்டுப்படுத்தப்பட்டப் பகுதியில் இருக்கிறது. அதனால் அதை நூலகத்திலிருந்து கடன் வாங்குவதற்கு எனக்கு ஓர் ஆசிரியரின் கையெழுத்துத் தேவைப்படுகிறது – மெதுவாக வேலை செய்யும் விஷம் குறித்து நீங்கள் எழுதியுள்ள **'கோரைப் பல் ராட்சஸப் பேய்க்குச் சாவு மணி அடித்தல்'** புத்தகத்தைப் புரிந்து கொள்ள இது எனக்கு உதவும் என்று நான் நம்புகிறேன் . . ."

லாக்ஹார்ட் அவளுடைய கையிலிருந்த துண்டுக் காகிதத்தை வாங்கிக் கொண்டு அவளைப் பார்த்துப் பெரிதாகப் புன்னகைத்தவாறே, "என்ன சொன்னாய்? **'கோரைப் பல் ராட்சஸப் பேய்க்குச் சாவு மணி அடித்தல்'** புத்தகத்தைப் பற்றியா?" என்று கேட்டார். "அதுதான் நான் எழுதியுள்ளதிலேயே எனக்கு மிகவும் பிடித்தப் புத்தகம். அது உனக்குப் பிடித்திருந்ததா?"

Scanned by CamScanner

"ஆமாம், மிகவும் பிடித்திருந்தது," என்று ஹெர்மயனி ஆர்வமாகக் கூறினாள். "குறிப்பாக, அந்தக் கடைசிப் பேயைத் தேநீர் வடிகட்டியை வைத்து நீங்கள் பிடித்த விதம் மிகவும் புத்திசாலித்தனமான . . ."

"இவ்வருடத்தின் சிறந்த மாணவிக்கு ஒரு கூடுதல் உதவி செய்தால் யாரும் என்னை ஒன்றும் கேள்வி கேட்க மாட்டார்கள்," என்று லாக்ஹார்ட் இதமாகக் கூறிவிட்டு, மிகப் பெரிய இறகுப் பேனா ஒன்றை வெளியே எடுத்தார். ரானின் முகத்தில் தென்பட்ட வெறுப்பான பாவத்தைத் தவறாகக் கணித்த லாக்ஹார்ட், "இந்த இறகுப் பேனா கனஜோராக இருக்கிறது, இல்லையா?" என்று கேட்டார். "இதை நான் பொதுவாக என் புத்தகங்களில் கையெழுத்துப் போட்டுத் தருவதற்கு மட்டுமே உபயோகிக்கிறேன்."

வளைந்து நெளிந்திருந்த தனது கையெழுத்தைப் பெரிதாக அந்தத் துண்டுக் காகிதத்தில் இட்டு லாக்ஹார்ட் அதை ஹெர்மயனியிடம் நீட்டினார்.

நடுங்கிக் கொண்டிருந்த தனது விரல்களால் ஹெர்மயனி அதை வாங்கி மடித்துத் தன் பையில் போட்டுக் கொண்டிருந்தபோது, அவர் ஹாரியிடம், "ஹாரி, இவ்வருடத்தின் முதல் குவிடிச் போட்டி நாளை நடைபெறுகிறது என்று நினைக்கிறேன், அப்படித்தானே? கிரிஃபின்டாருக்கும் ஸ்லிதரினுக்கும் இடையேயான போட்டி அது, இல்லையா? நீயொரு சிறந்த ஆட்டக்காரன் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். நானும் ஒரு தேடுபவனாகத்தான் இருந்தேன். தேசியப் போட்டிகளில் விளையாட வருமாறு அவர்கள் என்னைக் கேட்டுக் கொண்டனர். ஆனால் தீய மந்திர சக்திகளை ஒழித்துக் கட்டுவதற்காக என் வாழ்க்கையை அர்பணித்துக் கொள்வதையே நான் விரும்பினேன். குவிடிச் விளையாட்டில் உனக்கு எப்போதாவது தனிப்பட்ட முறையில் பயிற்சி தேவைப்பட்டால் என்னை அணுகத் தயங்காதே! என்னைவிடத் திறமை குறைந்த ஆட்டக்காரர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்றால் அதை நான் எப்போதுமே சந்தோஷமாகச் செய்வேன் . . ."

ஹாரி லேசாகச் செருமிக் கொண்டு, பின் ரானையும் ஹெர்மயனியையும் பின்தொடர்ந்து ஓடினான்.

அவர்கள் மூன்று பேரும் அந்தக் காகிதக் குறிப்பில் இருந்த அவருடைய கையெழுத்தை ஆராய்ந்து கொண்டிருந்தபோது, ஹாரி, "என்னால் நம்பவே முடியவில்லை," என்று கூறினான். "நூலகத்தில் இருந்து நாம் எந்தப் புத்தகத்தை எடுக்க விரும்பினோம் என்பதை அவர் பார்க்கக்கூட இல்லை."

"ஏனென்றால் அவர் ஒரு மடையன்," என்று ரான் கூறினான். "நமக்கு அதைப் பற்றி என்ன கவலை? நமக்கு வேண்டியது கிடைத்துவிட்டது."

அவர்கள் ஓட்டமும் நடையுமாக நூலகத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது, ஹெர்மயனி, "அவர் ஒன்றும் மடையன் கிடையாது," என்று வாதிட்டாள்.

Scanned by CamScanner

"இவ்வருடத்தின் சிறந்த மாணவி நீதான் என்று அவர் உனக்கு நற்சான்றிதழ் வழங்கியிருக்கும்போது, அவரைப் பற்றி நீ வேறு எப்படிப் பேசுவாய்? . . ."

அமைதியாக இருந்த நூலகத்திற்குள் நுழைந்தவுடன் அவர்கள் தங்கள் குரல்களைத் தணித்துக் கொண்டனர்.

ஒல்லியான உருவத்தைக் கொண்டிருந்த நூலகரான மேடம் பின்ஸ் ஒரு முன்கோபி. அவரது தோற்றம், பட்டினி போடப்பட்டிருந்த ஒரு கழுகுபோல இருந்தது.

"அதிவீரிய மாயத் திரவம்?" அவர் சந்தேகத்துடன் அப்புத்தகத்தின் பெயரை மீண்டும் ஒருமுறை கூறிக் கொண்டே, ஹெர்மயனியின் கையில் இருந்த காகிதக் குறிப்பை வாங்கிக் கொள்ள முயன்றார். ஆனால் அதைக் கொடுக்க மனமில்லாமல், ஹெர்மயனி அதைத் தன் கையில் இறுகப் பற்றியிருந்தாள்.

ஹெர்மயனி உணர்ச்சிவசப்பட்டு, "நான் இதை வைத்துக் கொள்ளலாமா?" என்று கேட்டாள்.

"அதை இப்படிக் கொடு," என்று ரான் அதை அவளிடமிருந்து பிடுங்கி மேடம் பின்ஸின் கையில் திணித்தான். "ஹெர்மயனி, நாங்கள் லாக்ஹார்ட்டிடமிருந்து உனக்கு அவரது இன்னொரு கையெழுத்தை வாங்கித் தருகிறோம். எதுவொன்றும் கொஞ்ச நேரம் ஆடாமல் அசையாமல் இருந்தால், அதில் கையெழுத்துப் போட்டுக் கொடுக்க அவர் தயங்க மாட்டார்."

மேடம் பின்ஸ் அந்தக் காகிதக் குறிப்பை விளக்கு வெளிச்சத்திற்கு நேராக வைத்துப் பார்த்தார். அவர் நடந்து கொண்ட விதத்தைப் பார்த்தால், அக்குறிப்பில் இடம்பெற்றிருந்தது போலிக் கையெழுத்து என்று நிரூபிக்க அவர் தீர்மானமாக இருந்ததுபோலத் தோன்றியது. ஆனால் அக்கையெழுத்து அவரது சோதனையில் வெற்றிகரமாகத் தேறியது. அவர் பல உயரமான புத்தக அலமாரிகளின் ஊடாக விறைப்பாக நடந்து சென்று, பல நிமிடங்களுக்குப் பிறகு, பூசனம் பிடித்திருந்ததுபோலத் தோன்றிய மிகப் பெரிய புத்தகம் ஒன்றுடன் வந்தார். ஹெர்மயனி அப்புத்தகத்தைக் கவனமாகத் தன் பையில் போட்டுக் கொண்டாள். அவர்கள் மூவரும் அதிக வேகமாக நடக்காமல் இருக்கவும், அதிகமான குற்றவுணர்வு தங்கள் முகங்களில் வெளிப்பட்டுவிடாமல் இருக்கவும் பெருமுயற்சி எடுத்துக் கொண்டனர்.

ஐந்து நிமிடங்கள் கழித்து அவர்கள் மீண்டும் முனகல் மர்ட்டிலின் குளியலறையில் தஞ்சம் புகுந்தனர். மூளை ஒழுங்காக வேலை செய்து கொண்டிருக்கும் எவரும் போகக்கூடிய கடைசி இடம் அதுவாகத்தான் இருக்கும் என்பதால், தங்களை அங்கு யாரும் தொந்தரவு செய்ய மாட்டார்கள் என்று விவாதித்து, ஹெர்மயனி, ரானின் ஆட்சேபனையை ஒதுக்கித் தள்ளினாள். முனகல் மர்ட்டில் தன்னுடைய தடுப்பறையில் சத்தமாக அழுது கொண்டிருந்தது.

Scanned by CamScanner

அவர்கள் அதைக் கண்டுகொள்ளவில்லை. மர்ட்டிலும் அவர்களைச் சட்டை செய்யவில்லை.

ஹெர்மயனி கவனமாக **'அதிவீரிய மாயத் திரவம்'** புத்தகத்தைத் திறந்தாள். ஆங்காங்கே ஈரப்பதத்துடன் இருந்த அப்புத்தகத்தை நோக்கி அவர்கள் மூவரும் குனிந்தனர். அதை லேசாக நோட்டம் விட்டவுடனேயே, அது ஏன் நூலகத்தின் மட்டுப்படுத்தப்பட்டப் பகுதியில் வைக்கப்பட்டிருந்தது என்பது அவர்களுக்குப் புரிந்துவிட்டது. அதில் குறிப்பிடப்பட்டிருந்த ஒருசில மாயத் திரவங்களின் விளைவுகளை நினைத்தாலே குலை நடுங்கியது. அதைத் தவிர, அருவருக்கத்தக்கப் படங்கள் சிலவும் அதில் இடம்பெற்றிருந்தன. உடலின் உட்புறம் வெளியாகவும் வெளிப்புறம் உள்ளாகவும் மாற்றப்பட்டிருந்த ஒரு மனிதனின் படமும், ஒரு மந்திரவாதினியின் தலையிலிருந்து ஏகப்பட்டக் கைகள் முளைத்திருந்த ஒரு படமும் அவற்றில் அடங்கும்.

ஹெர்மயனி **'பலகூட்டுச்சாறு மாயத் திரவம்'** என்று தலைப்பிடப்பட்டிருந்த பக்கத்தைப் புரட்டியதும், "இதோ, இங்கே இருக்கிறது," என்று பரவசமாகக் கூறினாள். மற்றவர்களின் உருவங்களுக்கு மாறிக் கொண்டிருந்தவர்களின் படங்கள் அப்பக்கத்தை அலங்கரித்தன. உருவமாற்றச் செயல்முறை பாதி வழியில் இருக்கும்போது அவர்களது உருவங்கள் எவ்வாறு தோன்றுமோ, அவை அப்படியே தெள்ளத்தெளிவாக வரையப்பட்டிருந்தன. அவர்களது முகங்களில் தென்பட்டத் தீவிரமான வேதனை, அவற்றை வரைந்திருந்த ஓவியரின் கற்பனையாக மட்டுமே இருக்க வேண்டும் என்று ஹாரி தன் மனத்திற்குள் தன்னைத் தானே தேற்றிக் கொண்டான்.

அவர்கள் அதன் செய்முறை விளக்கத்தைப் பார்த்துக் கொண்டிருந்தபோது, ஹெர்மயனி, "நான் இதுவரை பார்த்ததிலேயே மிகவும் சிக்கலான மாயத் திரவம் இதுதான்," என்று தெரிவித்தாள். அதைத் தயாரிக்கத் தேவைப்பட்டப் பொருட்களின் பட்டியலின்மீது அவள் தன் விரலை ஓடவிட்டவாறு, "லேஸ் இறகுப் பூச்சிகள், அட்டைப் பூச்சிகள், ஃபிளக்ஸ்வீட் மூலிகை, மற்றும் முடிச்சுப் புற்கள்," என்று முணுமுணுத்தாள். "இவை அனைத்தும் சுலபமாகக் கிடைக்கும். மாணவர்கள் தாங்களாகவே எடுத்துக் கொள்ளக்கூடிய அலமாரிகளில் இவை இருக்கின்றன. நாமே போய் அவற்றை எடுத்துக் கொள்ளலாம். ஐய்யய்யோ! இரட்டைக் கொம்பு மிருகத்தின் கொம்புப் பொடி வேண்டுமாமே! அதற்கு நாம் எங்கே போவது? அடக் கருமமே! பூம்ஸ்லேங் பாம்புச் சட்டையின் பொடியும் தேவையாம் – இது கிடைப்பதும் சிரமம்தான். பிறகு, நாம் யாராக மாற இருக்கிறோமோ, அந்த நபருடைய உடலிலிருந்து ஏதேனும் ஒன்றும் தேவை."

"ஹெர்மயனி, கொஞ்சம் பொறு," என்று ரான் அவளை இடைமறித்தான். "நீ என்ன சொன்னாய்? நாம் யாராக மாற இருக்கிறோமோ, அந்த நபருடைய உடலில் இருந்து ஏதேனும் ஒன்றா?

Scanned by CamScanner

கிராபின் கால்விரல் நகங்கள் அரைத்து ஊற்றப்பட்டிருக்கும் எந்தத் திரவத்தையும் நான் குடிக்க மாட்டேன் . . ."

அவன் கூறியது தனக்குக் கேட்கவே இல்லை என்பதுபோல ஹெர்மயனி தன் பேச்சைத் தொடர்ந்து கொண்டிருந்தாள்.

"நாம் அதைப் பற்றி இப்போது கவலைப்படத் தேவையில்லை. ஏனெனில் அதை நாம் கடைசியில்தான் சேர்க்க வேண்டும் . . ."

ரான் வாயடைத்துப் போய் ஹாரியைப் பார்த்தான். ஆனால் ஹாரியின் கவலை வேறாக இருந்தது.

"ஹெர்மயனி, நாம் என்னவெல்லாம் திருட வேண்டியிருக்கும் என்பது உன் மண்டையில் உறைக்கிறதா? பூம்ஸ்லேங் பாம்புச் சட்டையின் பொடி கண்டிப்பாக மாணவர்களுக்கான அலமாரியிலிருந்து நமக்குக் கிடைக்கப் போவதில்லை. அதற்கு நாம் என்ன செய்யப் போகிறோம்? ஸ்னேப்பின் தனிப்பட்டச் சேகரிப்பில் கை வைக்கப் போகிறோமா? இத்திட்டம் வேலை செய்யும் என்று எனக்குத் தோன்றவில்லை . . ."

ஹெர்மயனி அப்புத்தகத்தை ஓங்கி அறைந்து மூடினாள்.

"முதுகெலும்பே இல்லாததுபோல நீங்கள் இருவரும் நடந்து கொள்ளப் போகிறீர்கள் என்றால் எனக்கொன்றும் பிரச்சனையில்லை," என்று அவள் கூறினாள். அவளது கன்னத்தில் ஆங்காங்கே இளஞ்சிவப்பு நிறத்தில் திட்டுக்கள் தோன்றின. அவளது கண்கள் வழக்கத்தைவிட அதிகப் பிரகாசமாக ஜொலித்தன. "விதிகளை மீறுவதில் எனக்கு மட்டும் அதிக ஆசையா என்ன! ஒரு மாயத் திரவத்தைக் காய்ச்சுவதைவிட, மகுள்களுக்குப் பிறந்தவர்களை அச்சுறுத்துவது மகாமோசம் என்று நான் நினைக்கிறேன். அது மால்ஃபாய்தானா என்று கண்டுபிடிக்க உங்களுக்கு விருப்பம் இல்லையென்றால், நான் இப்போதே நேராகச் சென்று மேடம் பின்ஸிடம் இப்புத்தகத்தைத் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன் . . ."

"விதிகளை மீற நீ எங்களை வற்புறுத்தும் நாள் ஒன்று வரும் என்று நான் கனவில்கூட நினைத்துப் பார்த்ததில்லை," என்று ரான் கூறினான். "சரி, நாம் இதில் இறங்கலாம். ஆனால் கால்விரல் நகங்கள் வேண்டாம், சரியா?"

சந்தோஷத்தை வெளிப்படுத்திய ஹெர்மயனி, புத்தகத்தை மீண்டும் திறந்து கொண்டிருந்தபோது, ஹாரி அவளிடம், "ஆமாம், இதைத் தயாரிக்க எவ்வளவு நாட்கள் ஆகும்?" என்று கேட்டான்.

"ஃபிளக்ஸ்வீட் மூலிகை பௌர்ணமி அன்றுதான் பறிக்கப்பட வேண்டும் . . . லேஸ் இறகுப் பூச்சிகளை இருபத்தியோரு நாட்கள் காய்ச்சிக் கொண்டே இருக்க வேண்டும் . . . ம்ம் . . . நாம் இதற்குத் தேவையான எல்லா இடுபொருட்களையும் உடனடியாகச் சேகரித்தால் ஒரு மாதகாலம் ஆகும் என்று நினைக்கிறேன்."

"என்ன, ஒரு மாதமா?" என்று ரான் கேட்டான். "அதற்குள், பள்ளியில் இருக்கின்ற, மகுள்களுக்குப் பிறந்த மாணவர்களில் பாதிப் பேர்மீது மால்ஃபாய் பாய்ந்திருப்பான்!" ஹெர்மயனியின் கண்கள்

Scanned by CamScanner

மீண்டும் சுருங்கின. "ஆனால் நம்மிடம் கைவசம் இருக்கும் மிகச் சிறந்த திட்டம் இதுதான் என்று எனக்குத் தோன்றுகிறது. அதனால் இதில் நாம் முழுமூச்சாக இறங்கலாம்."

அவர்கள் அந்தக் குளியலறையைவிட்டு வெளியேறுவதற்காக, தாழ்வாரம் காலியாக இருந்ததா என்று ஹெர்மயனி சோதித்துக் கொண்டிருந்தபோது, ரான் ஹாரியிடம், "நாளைக்கு நடைபெறவிருக்கும் குவிடிச் போட்டியில் நீ மால்ஃபாயை அவனது மந்திரத் துடப்பத்திலிருந்து கீழே தள்ளிவிட்டுவிட்டால் விஷயம் சுலபமாக முடிந்துவிடும். நாம் இவ்வளவு சிக்கலான விவகாரத்தில் ஈடுபட வேண்டியிருக்காது," என்று முணுமுணுத்தான்.

* * *

அந்த சனிக்கிழமையன்று ஹாரிக்கு அதிகாலையிலேயே விழிப்பு வந்துவிட்டிருந்தது. வரவிருந்த குவிடிச் போட்டியைப் பற்றி யோசித்தவாறே படுக்கையில் கொஞ்ச நேரம் அவன் புரண்டு கொண்டிருந்தான். அவன் பதற்றமாக இருந்தான். முக்கியமாக, தங்களுடைய அணி தோற்றுப் போனால் உட் என்ன சொல்வானோ என்ற பயமும், இருப்பதிலேயே மிகவும் சக்திவாய்ந்த மந்திரத் துடப்பங்களோடு விளையாடவிருந்த ஓர் அணியோடு மோத வேண்டியிருந்தது குறித்த நினைப்பும் அவனை வாட்டியெடுத்து அவனுக்குப் பதற்றத்தை ஏற்படுத்தின. ஸ்லிதரின் அணியைத் தோற்கடிக்க வேண்டும் என்ற வெறி முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு இப்போது அவனிடம் மேலோங்கி இருந்தது. இப்படி உள்ளுக்குள்ளேயே புழுங்கிக் கொண்டு ஓர் அரை மணிநேரம் படுத்துக் கிடந்த பிறகு அவன் எழுந்து ஆடை மாற்றிக் கொண்டு, சீக்கிரமாகவே காலை உணவிற்குச் சென்றான். அங்கு போடப்பட்டிருந்த நீண்ட காலியான மேசையில் மொத்த கிரிஃபின்டார் அணியும் நெருக்கமாகவும் விறைப்பாகவும் உட்கார்ந்து கொண்டிருந்தது. அவர்கள் அதிகமாகப் பேசிக் கொள்ளவில்லை.

பதினோரு மணி நெருங்கியதும் மொத்தப் பள்ளியுமே குவிடிச் மைதானத்தை நோக்கிப் படையெடுத்தது. அன்று வானிலை புழுக்கமாக இருந்தது. இடி இடிப்பதற்கான அறிகுறிகள் தென்பட்டன. உடை மாற்றும் அறைக்குள் ஹாரி நுழைந்து கொண்டிருந்தபோது, ரானும் ஹெர்மயனியும் அவசரமாக அங்கு வந்து அவனுக்கு வாழ்த்துத் தெரிவித்தனர். குழுவினர் அனைவரும் ரத்தச்சிவப்பு நிறத்தில் இருந்த கிரிஃபின்டார் சீருடைகளை அணிந்து கொண்டு, போட்டிக்கு முன்பாக உட் வழக்கமாக வழங்கிய உத்வேகப் பேச்சைக் கேட்பதற்காகத் தயாராயினர்.

"ஸ்லிதரின் அணியினரிடம் நம்மைவிட மேம்பட்ட மந்திரத் துடப்பங்கள் இருக்கின்றன," என்று அவன் தன் பேச்சைத் துவக்கினான். "அதை மறுப்பதில் அர்த்தமில்லை. ஆனால் நம்மிடம் அவர்களைவிட மிகச் சிறந்த வீரர்கள் உள்ளனர். நாம் அவர்களைவிட அதிகமாகப் பயிற்சி எடுத்துள்ளோம். நாம் எல்லாத் தட்பவெப்ப

Scanned by CamScanner

நிலையிலும் விளையாடிப் பயிற்சி எடுத்துள்ளோம் ('அதில் என்ன சந்தேகம்! ஆகஸ்ட் மாதத்திலிருந்து ஈர உடலுடன்தான் நான் திரிந்து கொண்டு இருக்கிறேன்!' என்று ஜார்ஜ் முணுமுணுத்தான்). ஸ்லிதரின் அணியில் தன்னுடைய இடத்தைக் காசு கொடுத்து வாங்கிக் கொண்டுள்ள அந்தக் குட்டிச்சாத்தான் மால்ஃபாயைத் தங்கள் அணியில் சேர்த்துக் கொண்டதற்காக அவர்கள் தங்களையே நொந்து கொள்ளும்படி நாம் செய்ய வேண்டும்."

உணர்ச்சி மிகுதியால் நெஞ்சு விம்மிப் புடைக்க, உட் ஹாரியை நோக்கித் திரும்பினான்.

"ஹாரி, இன்று வெற்றி தோல்வியை நிர்ணயிக்கப் போவது நீதான். ஒரு 'தேடுபவனுக்கு'ப் பணக்கார அப்பாவைவிடக் கூடுதலாக வேறொன்றும் தேவை என்பதை அவர்களுக்கு நீ நிரூபித்துக் காட்டு. மால்ஃபாய்க்கு முன்பாக எப்படியாவது ஸ்னிச்சை நீ கைப்பற்றிவிடு ஹாரி. அந்த முயற்சியில் இவ்வளவு சின்ன வயதில் உன் ஆயுள் முடிந்தாலும் பரவாயில்லை! ஏனெனில், ஹாரி, இன்று நாம் வெற்றி பெற்றே ஆக வேண்டும்! இன்று நாம் வெற்றி பெற்றே ஆக வேண்டும்!"

ஃபிரெட் ஹாரியை நோக்கிக் கண்ணடித்தவாறே, "பரவாயில்லை, இன்று நீ அவ்வளவாக அலட்டிக் கொள்ள வேண்டியதில்லை," என்று கூறினான்.

அவர்கள் மைதானத்திற்குள் நுழைந்தவுடன் பெரும் சத்தம் அவர்களை வரவேற்றது. அச்சத்தத்தில் பெரும்பகுதி வாழ்த்தொலிகள்தான். ரேவன்கிளா அணியினரும் ஹஃபில்பஃப் அணியினரும் ஸ்தலிரின் அணி தோற்கடிக்கப்பட வேண்டும் என்று விரும்பினர். ஆனால் கூட்டத்தில் இருந்த ஸ்லிதரின் அணியினர் அவர்களை நோக்கி வெறுப்பை உமிழ்ந்த சீற்றொலிகளை எழுப்பினர். குவிடிச் ஆசிரியரான மேடம் ஹூச், ஒருவரோடொருவர் கைகுலுக்கிக் கொள்ளுமாறு உட் மற்றும் மார்க்கஸிடம் கூறியபோது அவர்கள் இருவரும் அவ்வாறே செய்தனர். ஆனால் அப்படிச் செய்தபோது அவர்கள் பரஸ்பரம் அடுத்தவரது கையைத் தேவைக்கு அதிகமாகவே பலமாக அழுத்தினர்.

"நான் விசில் அடித்ததும் விளையாட்டுத் துவங்கும்!" என்று மேடம் ஹூச் அறிவித்தார். "மூன்று . . . இரண்டு . . . ஒன்று . . ."

கூட்டத்தினரின் விண்ணைப் பிளந்த கரகோஷத்திற்கு இடையே, அந்தப் பதினான்கு ஆட்டக்காரர்களும், கனத்துப் போயிருந்த வானத்தை நோக்கி ஜிவ்வென்று பறந்தனர். அவர்கள் எல்லோரையும்விட மிக உயரத்தில் பறந்த ஹாரி, கண்களை இடுக்கிக் கொண்டு, ஸ்னிச்சைத் தேடிச் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டிருந்தான்.

மால்ஃபாய் அவனுக்குக் கீழே படுவேகமாகப் பறந்தபடி, "நெற்றிவடுத் தலையா, நீ இங்குதான் இருக்கிறாயா?" என்று சீண்டினான். அவன் தனது மந்திரத் துடப்பத்தின் வேகத்தைத் தம்பட்டம் அடித்துக் கொண்டதைப்போல அது இருந்தது.

Scanned by CamScanner

அதற்கு பதிலளிக்க ஹாரிக்கு அவகாசமே இருக்கவில்லை. சரியாக அக்கணத்தில், ஒரு கனமான கருப்பு நிற பிளட்ஜர் அவனை நோக்கி மின்னல் வேகத்தில் வந்தது. கடைசி நிமிடத்தில் அவன் அதைத் தவிர்த்தான். தன்னைக் கடந்து போன வேகத்தில், அது தனது தலைமுடியைக் கலைத்துச் சென்றதை அவனால் உணர முடிந்தது.

பிளட்ஜரை ஸ்தலிரின் அணியினரை நோக்கி அடிப்பதற்காகக் கையில் மட்டையுடன் அவனைக் கடந்து மின்னலென விரைந்து கொண்டிருந்த ஜார்ஜ், "ஹாரி, அது உனக்கு மிக அருகில் வந்துவிட்டது, ஜாக்கிரதை!" என்று கூறிவிட்டுப் பறந்தான். ஜார்ஜ் பிளட்ஜரை ஸ்லிதரின் அணியைச் சேர்ந்த அட்ரியன் பியூசியை நோக்கி பலமாக அடித்தான். ஆனால் அந்த பிளட்ஜர், நடுவானில் தன் போக்கை மாற்றிக் கொண்டு, மீண்டும் ஹாரியை நோக்கி வேகமாக வந்தது.

அதைத் தவிர்ப்பதற்காக ஹாரி வேகமாகக் கீழிறங்கினான். ஜார்ஜ் அதை மால்ஃபாயை நோக்கி அடித்தான். மீண்டும் அந்த பிளட்ஜர் ஒரு பூமராங்போல ஹாரியின் தலையைக் குறி வைத்து வந்தது.

ஹாரி தன் வேகத்தைச் சடாரென்று அதிகரித்து மைதானத்தின் மறுமுனைக்குப் பறந்தான். அந்த பிளட்ஜர் தனக்குப் பின்னால் 'உஷ்' என்ற சத்தத்துடன் வேகமாக வந்து கொண்டிருந்ததை அவனால் கேட்க முடிந்தது. இங்கே என்ன நடந்து கொண்டிருந்தது? பிளட்ஜர்கள் பொதுவாக ஒரே ஓர் ஆட்டக்காரரை மட்டும் சுற்றி வருவதில்லை. தம்மால் எவ்வளவு பேரை மந்திரத் துடப்பங்களில் இருந்து கீழே தள்ள முடியுமோ அவ்வளவு பேரைக் கீழே தள்ள முயல்வதுதான் பிளட்ஜர்களின் வேலை. . .

அடுத்த முனையில் ஃபிரெட் பிளட்ஜருக்காகக் காத்துக் கொண்டிருந்தான். அவன் தன்னால் முடிந்த அளவுக்கு அந்த பிளட்ஜரை பலமாக அடித்தான். அது திசை மாறிப் பறந்தது.

"அது ஓடிப் போய்விட்டது," என்று ஃபிரெட் சந்தோஷமாக முழங்கினான். ஆனால் அவனது மகிழ்ச்சி ஒரு வினாடிகூட நீடிக்கவில்லை. அந்த பிளட்ஜர் காந்த சக்தியால் கவரப்பட்டதைப்போல ஹாரியை நோக்கி மறுபடியும் படுவேகமாக வந்தது. ஹாரி முழுவேகத்தில் அந்த இடத்திலிருந்து பறக்க வேண்டியதாகிவிட்டது.

அப்போது மழை பெய்யத் துவங்கியது. கனமான மழைத்துளிகள் தன் முகத்தில் விழுந்து தனது மூக்குக்கண்ணாடியின்மேல் பட்டு வேகமாகத் தெறித்ததை ஹாரி கண்டான். அன்றைய போட்டியின் வர்ணனையாளனான ஸீ ஜோர்டன், "ஸ்லிதரின் அணி அறுபது புள்ளிகளை எடுத்து முன்னணியில் இருக்கிறது. கிரிஃபின்டார் அணி புள்ளிகள் எதுவும் எடுக்கவில்லை," என்று போட்டியைப் பற்றி வர்ணித்துக் கொண்டிருந்ததைக் கேட்கும்வரை, போட்டியில் என்ன

Scanned by CamScanner

நிகழ்ந்து கொண்டிருந்தது என்பது பற்றி ஹாரிக்குத் துளிகூட யோசனை இருக்கவில்லை.

ஒருபுறம் ஸ்லிதரின் அணியினரின் மிகச் சிறப்பான மந்திரத் துடப்பங்கள் தங்கள் பங்கை ஆற்றிக் கொண்டிருக்க, கிறுக்குப் பிடித்திருந்த அந்த பிளட்ஜர் ஹாரியைக் கீழே தள்ளக் கங்கணம் கட்டிக் கொண்டிருந்தது. இப்போது ஃபிரெட்டும் ஜார்ஜும் அவனுக்கு இருபுறங்களிலும் வந்து கொண்டிருந்ததால், அங்குமிங்கும் ஆடிக் கொண்டிருந்த அவர்களுடைய கைகளைத் தவிர வேறு எதையும் அவனால் பார்க்க முடியவில்லை. இந்த நிலையில் ஸ்னிச் எங்கிருந்தது என்பதைப் பார்ப்பதற்கு அவனுக்குச் சந்தர்ப்பமே வாய்க்கவில்லை. பார்த்தால்தானே அதைப் பிடிப்பது பற்றிய கேள்வியே?

ஹாரியைத் தாக்குவதற்கு ஒரு புதிய உத்தியைக் கையாண்ட அந்த பிளட்ஜரை, ஃபிரெட், தன் பலம் கொண்ட மட்டும் அடித்துத் துரத்திவிட்டு, "யாரோ இந்தப் பிளட்ஜரில் ஏதோ தில்லுமுல்லு செய்து வைத்திருக்கின்றனர்," என்று முனகினான்.

"நமக்கு ஓர் இடைவேளை தேவை," என்று கூறிவிட்டு, ஜார்ஜ் அதை உட்டிடம் தெரிவிக்க முயன்றான். அதே சமயம், ஹாரியின் மூக்கை நோக்கி வந்து கொண்டிருந்த அந்த பிளட்ஜரையும் அவன் தடுத்து நிறுத்தினான்.

உட், ஜார்ஜின் சமிக்கையைப் புரிந்து கொண்டதுபோலத் தெரிந்தது. மேடம் ஹூச் தன் விசிலை எடுத்து ஊதினார். இன்னும் துரத்திக் கொண்டிருந்த சனியன் பிடித்த அந்த பிளட்ஜரிடம் இருந்து தப்பிக்க, ஹாரி, ஃபிரெட், ஜார்ஜ் ஆகிய மூவரும் மிக வேகமாகக் கீழே பாய்ந்தனர்.

கிரிஃபின்டார் அணியினர் அனைவரும் ஒன்றாகக் குழுமியதும், "இங்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது?" என்று உட் கேட்டான். அப்போது கூட்டத்தில் இருந்த ஸ்லிதரின் அணியினர் கரகோஷம் எழுப்பிக் கொண்டிருந்த சத்தம் அவர்களுக்குப் பின்னால் கேட்டது. "ஸ்லிதரின் அணியினர் நம்மைத் துவைத்தெடுத்துக் கொண்டிருக்கின்றனர். ஏய், ஃபிரெட்! ஜார்ஜ்! ஏஞ்சலினா கோல் போட முயன்றதை அந்த பிளட்ஜர் தடுத்து நிறுத்தியபோது நீங்கள் இருவரும் எங்கே இருந்தீர்கள்?"

"உட், நாங்கள் அவளுக்கு மேலே இருபதடி உயரத்தில் இருந்தோம். ஹாரியைக் கொல்ல முயன்று கொண்டிருந்த இன்னொரு பிளட்ஜரை நாங்கள் தடுத்துக் கொண்டிருந்தோம்," என்று ஜார்ஜ் ஆவேசமாகக் கூறினான். "அந்த பிளட்ஜரை யாரோ என்னவோ செய்திருக்கிறார்கள். இவ்வளவு நேரமும் அது ஹாரியைவிட்டு விலகாமல் பிடிவாதமாக அவனையே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தது. வேறு யாருடைய பக்கமும் அது போகவே இல்லை. ஸ்லிதரின் அணியினர் நிச்சயமாக அதில் ஏதோ குளறுபடி செய்திருக்க வேண்டும்."

Scanned by CamScanner

மேடம் ஹூச் அவர்களை நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தார். அவருடைய தோளுக்குப் பின்னால் ஸ்லிதரின் அணியினர் தன்னைச் சுட்டிக்காட்டிப் பரிகாசம் செய்து கொண்டிருந்ததை ஹாரி கண்டான்.

மேடம் ஹூச் அவர்களை நெருங்கிக் கொண்டிருந்தபோது, ஹாரி ஃபிரெட்டையும் ஜார்ஜையும் பார்த்து, "நீங்கள் இருவரும் எப்போதும் என்னைச் சுற்றிப் பறந்து கொண்டிருந்தால், ஸ்னிச் தானாகவே என் சட்டைப் பைக்குள் வந்து விழுந்தால்தான் உண்டு. நீங்கள் இரண்டு பேரும் நமது அணியின் பிற ஆட்டக்காரர்களோடு போய்ச் சேர்ந்து கொள்ளுங்கள். அந்தப் பைத்தியக்கார பிளட்ஜரை நான் ஒற்றைக்கு ஒற்றைப் பார்த்துவிடுகிறேன்," என்று கூறினான்.

"முட்டாள்தனமாகப் பேசாதே!" என்று ஃபிரெட் கூறினான். "அது உன் தலையைச் சீவிவிடும்."

உட் ஹாரியையும் வீஸ்லீ சகோதரர்களையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"உட், இது பைத்தியக்காரத்தனமாக இருக்கிறது," என்று அலிசியா ஸ்பின்னெட் கோபமாகக் கூறினாள். " ஹாரி அந்தச் சனியனைத் தனியாகச் சமாளிக்க நீ அனுமதிக்கக்கூடாது. உடனே ஒரு விசாரணை நடத்த வேண்டும் என்ற வேண்டுகோளை முன் வை."

"இப்போது நாம் விளையாட்டை நிறுத்தினால், நாம் இப்போட்டியை இழக்க நேரிடும்," என்று ஹாரி கூறினான். "ஒரு பைத்தியக்கார பிளட்ஜருக்குப் பயந்து நாம் ஸ்லிதரினிடம் தோற்றுப் போகக்கூடாது. உட், என்னைத் தனியாக விட்டுவிடுமாறு அவர்களிடம் சொல்!"

ஜார்ஜ் உட்டிடம் கோபமாக, "உட், இதற்கெல்லாம் நீதான் காரணம்," என்று கூறினான். "உடை மாற்றும் அறையில் வைத்து ஹாரியிடம் நீ என்ன சொன்னாய்? 'மால்ஃபாய்க்கு முன்பாக எப்படியாவது ஸ்னிச்சை நீ கைப்பற்றிவிடு. ஹாரி, அந்த முயற்சியில் இவ்வளவு சின்ன வயதில் உன் ஆயுள் முடிந்தாலும் பரவாயில்லை!' – என்னவோர் அபசகுனமான பேச்சு அது!"

மேடம் ஹூச் அவர்களை வந்தடைந்திருந்தார்.

அவர் உட்டிடம், "என்ன, விளையாட்டைத் துவக்கலாமா?" என்று கேட்டார்.

உட், ஹாரியின் முகத்தில் இருந்த உறுதியைப் பார்த்தான்.

பிறகு, "சரி," என்று கூறினான். "ஃபிரெட்! ஜார்ஜ்! நீங்கள் இருவரும் ஹாரி கூறியதைக் கேட்டீர்கள், இல்லையா? அந்த பிளட்ஜரை அவன் தனியாகச் சமாளித்துக் கொள்ளட்டும். அவனைத் தனியாக விட்டுவிடுங்கள்!"

இப்போது மழையின் தீவிரம் அதிகரித்திருந்தது. மேடம் ஹூச்சின் விசில் சத்தம் கேட்ட உடனேயே, ஹாரி, தரையில் வேகமாக உதைத்து விர்ரென்று மேலே கிளம்பினான். கூடவே, அவனைத் துரத்தி வந்து கொண்டிருந்த பிளட்ஜரின் 'விஷ்' என்ற

Scanned by CamScanner

சத்தமும் அவனைத் தொடர்ந்தது. ஹாரி மேலும் உயரே உயரே பறந்து சென்றான். அவன் சுழன்றான், குட்டிக்கரணம் போட்டான், குறுக்கும் நெடுக்குமாகப் பறந்தான். அவனுக்குக் கொஞ்சம் தலை சுற்றியது. ஆனாலும் தன் கண்களை அகலத் திறந்தே வைத்திருந்தான். அந்த பிளட்ஜர் அவனை முரட்டுத்தனமாகத் தாக்க வந்தபோது, அதைத் தவிர்ப்பதற்காக அவன் ஒரு பல்டி அடித்துத் தலைகீழாகப் பறந்து கொண்டிருந்தபோது, மழைநீர் அவனது மூக்குக்கண்ணாடியில் பட்டுத் தெறித்து அவனது மூக்கிற்குள் சென்றது. கீழே கூட்டத்தினர் சிரித்தது அவனுக்குக் கேட்டது. கீழே இருந்தவர்களுக்குத் தனது நடவடிக்கைகள் பைத்தியக்காரத்தனமானவையாகத் தெரிந்திருக்கும் என்பதை அவன் அறிந்துதான் இருந்தான். ஆனால் அந்த பிளட்ஜர் வெகு கனமாக இருந்ததால், அவனைப்போல அதனால் சடார் சடாரென்று திரும்ப முடியவில்லை. மைதானத்தின் ஓரமாக அவன் மேலும் கீழும் பறந்தபடி, கண்களை இடுக்கிக் கொண்டு வெள்ளி மழைத்துளிகளின் ஊடாகப் பார்த்துக் கொண்டிருந்தான். கோல்போஸ்டிற்கு அருகே அட்ரியன் பியூசி, உட்டைக் கடந்து போக முயற்சி செய்து கொண்டிருந்தான் . . .

தன் காதருகே கேட்ட 'விஷ்' என்ற சத்தம், மீண்டும் அந்த பிளட்ஜர் தன்னைத் தாக்குவதை மயிரிழையில் தவறவிட்டிருந்தது என்பதை ஹாரிக்கு அறிவித்தது. அவன் வலது பக்கமாகத் திரும்பி நேரெதிர்த் திசையில் பறந்தான்.

அந்த பிளட்ஜரைத் தவிர்ப்பதற்காக, நடுவானில், முட்டாள்தனமாகத் தோன்றிய குட்டிக்கரணம் ஒன்றை அவன் போட நேர்ந்தபோது, "என்ன ஹாரி, பாலே நடனத்திற்குப் பயிற்சி எடுத்துக் கொண்டிருக்கிறாயா?" என்று மால்ஃபாய் அவனை நக்கலாகக் கேட்டான். ஹாரி மீண்டும் வேறு திசையில் பறந்தான். அந்த பிளட்ஜரும் ஒருசில அடிகள் இடைவெளியில் அவனை விடாமல் துரத்தியது. பின் அவன் வெறுப்புடன் மால்ஃபாயைத் திரும்பிப் பார்த்தபோது, அது அவனது கண்களில் பட்டது. தங்க ஸ்னிச். அது மால்ஃபாயின் இடது காதுக்கு மேலே ஒருசில அங்குல உயரத்தில் பறந்து கொண்டிருந்தது. ஹாரியைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்த மால்ஃபாய் அதைக் கவனித்திருக்கவில்லை.

தான் மால்ஃபாயை நோக்கிப் பாய்ந்தால் அவன் ஒருவேளை ஸ்னிச்சைப் பார்த்துவிட்டால் என்ன செய்வது என்று பயந்து போய், ஹாரி, சிறிது நேரம் வேதனையை அனுபவித்துக் கொண்டு நடுவானில் அப்படியே தொங்கிக் கொண்டிருந்தான்.

டமால்!

அவன் ஒரு நொடி அதிகமாகத் தாமதித்திருந்ததால், கடைசியில் அந்த பிளட்ஜர் அவனைப் பதம் பார்த்துவிட்டிருந்தது. அந்த பிளட்ஜர் அவனது முழங்கையை பயங்கரமாகத் தாக்கியதில், தன் கை உடைந்துவிட்டிருந்ததை ஹாரி உணர்ந்தான். தனது கையில் ஏற்பட்டிருந்த தாள முடியாத வேதனையால் கொஞ்சம் நினைவிழந்த

Scanned by CamScanner

ஹாரி, மழையில் தொப்பலாக நனைந்திருந்த தனது மந்திரத் துடப்பத்திலிருந்து பக்கவாட்டில் வழுக்கிக் கொண்டிருந்தான். அவனது ஒரு கால் மூட்டு மந்திரத் துடப்பத்தைப் பற்றிக் கொண்டிருந்தது. செயலற்றுப் போயிருந்த அவனது வலது கை வெறுமனே பக்கவாட்டில் தொங்கிக் கொண்டிருந்தது. பிளட்ஜர் இரண்டாவது தாக்குதலுக்காக அவனை நோக்கி மின்னல் வேகத்தில் வந்தது. இம்முறை அது அவனது முகத்தைக் குறி வைத்து வந்தது. ஹாரி அதன் பாதையிலிருந்து சடாரென்று விலகினான். மறத்துப் போயிருந்த அவனது மூளையை ஒரே ஓர் எண்ணம்தான் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது: மால்ஃபாயை நெருங்க வேண்டும் என்பதுதான் அது!

மழை மற்றும் வலியின் ஊடாக, ஹாரி, தனக்குக் கீழே மங்கலாகத் தெரிந்த, ஏளனம் பொங்கி வழிந்து கொண்டிருந்த மால்ஃபாயின் முகத்தை நோக்கிப் பாய்ந்தான். மால்ஃபாயின் கண்கள், ஹாரி தன்னைத் தாக்க வந்து கொண்டிருந்தான் என்ற பயத்தில் அகல விரிந்தன.

"இவன் தன் மனத்தில் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறான்?" என்ற எண்ணத்துடன், மால்ஃபாய், மூச்சு வாங்கியபடி ஹாரியின் பாதையிலிருந்து வேகமாக விலகினான்.

ஹாரி நன்றாக இயங்கிக் கொண்டிருந்த தன்னுடைய அடுத்தக் கையை நீட்டி அதை எட்டிப் பிடித்தான். குளிராக இருந்த ஸ்னிச்சைத் தன் கைவிரல்கள் பற்றிக் கொண்டதை அவன் உணர்ந்தான். இப்போது அவன் தன்னுடைய மந்திரத் துடப்பத்தைத் தன் கால்களால் மட்டுமே பற்றியிருந்தான். அவன் படுவேகமாக நிலத்தை நோக்கிப் பறந்து வந்து கொண்டிருந்தபோது கூட்டத்தினரிடம் இருந்து பெரும் சத்தம் எழுந்தது. ஹாரி தன் நினைவை இழக்காமல் இருப்பதற்கு பகீரதப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தான்.

ஏதோ உடைந்து விழுந்தது போன்ற சத்தத்துடன், ஹாரி, சேறும் சகதியுமாக இருந்த தரையில் மோதித் தன்னுடைய மந்திரத் துடப்பத்திலிருந்து உருண்டான். அவனுடைய ஒரு கை வினோதமான கோணத்தில் தொங்கிக் கொண்டிருந்தது. விண்ணென்று தெறித்துக் கொண்டிருந்த வலியின் ஊடாக, எங்கோ தூரத்தில் கேட்பதுபோல, கூட்டத்தினரின் ஆரவாரக் கூச்சல்களும் விசில் சத்தங்களும் அவனுக்குக் கேட்டன. தன்னுடைய ஒழுங்கான கையில் இருந்த ஸ்னிச்சிலேயே அவனது முழுக் கவனமும் இருந்தது.

"ஆஹா! நாம் வென்றுவிட்டோம்!" என்று ஹாரி கூறினான்.

பின் அவன் மயங்கினான் .

அவன் கண்விழித்தபோது மழை அவனது முகத்தில் பெய்து கொண்டிருந்தது. அவன் இன்னும் மைதானத்தின் தரையில்தான் படுத்துக் கிடந்தான். யாரோ தனது முகத்திற்கு அருகே குனிந்திருந்ததை அவன் கண்டான். பளீரென்று இருந்த பற்களை அவன் பார்த்தான்.

Scanned by CamScanner

"ஐயோ! நீங்களா?" என்று ஹாரி முனகினான்.

"அவன் என்ன பேசுகிறான் என்பது அவனுக்கே தெரியவில்லை," என்று லாக்ஹார்ட் தங்களைச் சுற்றிக் கூடியிருந்த கிரிஃபின்டார் கூட்டத்தினரைப் பார்த்துச் சத்தமாகக் கூறினார். "ஹாரி, கவலைப்படாதே! உன் கையை நான் சரி செய்துவிடுகிறேன்."

"வேண்டாம்!" என்று ஹாரி அலறினான். "நன்றி! ஆனால் என் கை இப்படியே இருந்துவிட்டுப் போகட்டும் . . . "

அவன் எழுந்து உட்கார முயன்றான். ஆனால் வலி உயிர்போனது. தனக்கு அருகே தனக்கு மிகவும் பரிச்சயமான 'கிளிக்' ஒலி ஹாரிக்குக் கேட்டது.

"காலின்! இதுபோல ஒரு புகைப்படம் தேவையில்லை," என்று அவன் சத்தமாகக் கூறினான்.

"பின்னால் படு," என்று லாக்ஹார்ட் இதமாகக் கூறினார். "இது ஓர் எளிமையான மந்திரம். இதை நான் எண்ணற்ற முறை உபயோகித்திருக்கிறேன்."

ஹாரி தன் பற்களைக் கடித்துக் கொண்டே, "என்னை ஏன் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லவில்லை?" என்று கேட்டான்.

"பேராசிரியரே, அவன் மருத்துவமனைக்குத்தான் கொண்டு செல்லப்பட வேண்டும்," என்று உட் கூறினான். தனது அணியின் தேடுபவன் காயப்பட்டுக் கீழே விழுந்து கிடந்த நிலையிலும், உடல் முழுவதும் சேறும் சகதியுமாக இருந்த உட்டால் தன்னுடைய சந்தோஷத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. அவன் வாயெல்லாம் பல்லாக இருந்தான். "ஹாரி! அசத்திவிட்டாய்! அற்புதமான விளையாட்டு. நீ இதுவரை விளையாடியதிலேயே மிகப் பிரமாதமான விளையாட்டு இதுதான் என்று நான் சொல்வேன்!"

தன்னருகே தெரிந்த ஏகப்பட்டக் கால்களுக்கு ஊடாக, ஃபிரெட்டும் ஜார்ஜும் அந்தப் போக்கிரித்தனமான பிளட்ஜரைப் பெட்டியில் போட்டு அடைக்கப் போராடிக் கொண்டிருந்ததை ஹாரி பார்த்தான். அது இன்னும் திமிறிக் கொண்டிருந்தது.

லாக்ஹார்ட் தன்னுடைய பச்சை நிறச் சட்டையின் கைகளை மடித்துவிட்டுக் கொண்டு, கூட்டத்தினரைப் பார்த்து, "கொஞ்சம் பின்னால் விலகுங்கள்!" என்று கட்டளையிட்டார்.

"வேண்டாம், விலகாதீர்கள்!" என்று ஹாரி பலவீனமான குரலில் முனகினான். ஆனால் அதற்குள் லாக்ஹார்ட் தன்னுடைய மந்திரக்கோலை வெளியே எடுத்து ஒரு சுழற்றுச் சுழற்றி, அதை ஹாரியின் கைக்கு நேராக நீட்டினார்.

ஒரு வினோதமான, அசௌகரியமான உணர்ச்சி ஹாரியின் தோள்பட்டையில் துவங்கி, அவனது விரல்களின் நுனிவரை வந்தது. தனது கை தட்டையாக்கப்பட்டு இருந்ததுபோல அவன் உணர்ந்தான். என்ன நடந்து கொண்டிருந்தது என்பதைப் பார்க்க அவனுக்குத் துணிவு இருக்கவில்லை. அவன் தன் கண்களை இறுக மூடிக் கொண்டு, அடிபட்டிருந்த கைக்கு மறுபுறமாகத் தன் முகத்தைத்

Scanned by CamScanner

திருப்பிக் கொண்டான். ஆனால் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் 'ஆ'வென்று தங்கள் மூச்சைப் பிடித்துக் கொண்டபோது, அவனது அடிமனத்தில் உறைந்திருந்த பயம் நிஜமானது. காலின் கண்மூடித்தனமாகப் புகைப்படம் மேல் புகைப்படமாக எடுத்துத் தள்ளிக் கொண்டிருந்தான். ஹாரியின் கை இப்போது வலிக்கவில்லை. ஆனால் அது ஒரு கை என்ற உணர்வே சுத்தமாக அவனுக்கு இருக்கவில்லை.

"ஓ!" என்று லாக்ஹார்ட் கத்தினார். "சில சமயங்களில் இப்படி ஆவதுண்டு. ஆனால் இங்கு நாம் கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயம், எலும்புகள் இப்போது உடைந்த நிலையில் இல்லை. அதைத்தான் நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். ஹாரி, இப்போது எப்படியாவது தட்டுத் தடுமாறி மருத்துவமனைக்குப் போய்ச் சேர்ந்துவிடு – ஆ, ரான், நீ இங்கேதான் இருக்கிறாயா? நீயும் ஹெர்மயனியும் அவனைக் கைத்தாங்கலாக அழைத்துச் செல்கிறீர்களா? – மருத்துவமனையில் மேடம் பாம்ஃபிரே உன்னை –என்ன சொல்ல வந்தேன் என்றால் – அப்படி இப்படித் தட்டிச் சரி செய்துவிடுவார்."

ஹாரி ஒருவழியாக எழுந்து நின்றதும், வினோதமாக, தான் தலைகீழாக இருந்ததுபோல உணர்ந்தான். ஒரு முறை ஆழமாக சுவாசித்துவிட்டு அவன் தனது வலப்பக்கத்தைப் பார்த்தான். அவன் அங்கு கண்ட காட்சி அவனை மீண்டும் கிட்டத்தட்ட மூர்ச்சையாக்கிவிட்டிருந்தது.

அவனது அங்கியின் முனையில் ஒரு பெரிய, தடிமனான, சதை நிறத்தில் இருந்த ரப்பர் கையுறை ஒன்று நீட்டிக் கொண்டிருந்தது. அவன் தன் விரல்களை அசைக்க முயன்றான். ஆனால் ஒன்றும் நிகழவில்லை.

லாக்ஹார்ட், உடைந்து போயிருந்த ஹாரியின் எலும்புகளை ஒட்டியிருக்கவில்லை. மாறாக, அவர் அவற்றை அகற்றிவிட்டிருந்தார்.

* * *

மேடம் பாம்ஃபிரேக்கு கோபம் தலைக்கேறியிருந்தது.

அரை மணிநேரத்திற்கு முன்புவரை ஒழுங்காக வேலை செய்து கொண்டிருந்த ஒரு கையின் அவலமான மிச்சசொச்சத்தைத் தூக்கிப் பிடித்துக் கொண்டே, அவர், "ஹாரி, நீ நேராக என்னிடம்தான் வந்திருக்க வேண்டும்," என்று கர்ஜித்தார். "உடைந்த எலும்புகளை என்னால் ஒரு நொடியில் ஒட்டிவிட முடியும். ஆனால் அவற்றை மறுபடியும் வளர்க்க வேண்டும் என்றால்! –"

"உங்களால் முடியும், இல்லையா?" என்று ஹாரி பரிதவிப்போடு கேட்டான்.

"கண்டிப்பாக என்னால் முடியும். ஆனால் அது மிகவும் வலி மிகுந்ததாக இருக்கும்," என்று அவர் மனச்சோர்வுடன் தெரிவித்தார். அவர் ஹாரியிடம் ஒரு பைஜாமாவைத் தூக்கி எறிந்து, "இன்று இரவு நீ இங்கு தங்க வேண்டியிருக்கும்," என்று கூறினார்.

Scanned by CamScanner

ஹெர்மயனி ஹாரியின் படுக்கையைச் சுற்றி இழுத்துவிடப்பட்டிருந்த திரைச்சீலைக்கு வெளியே சென்றவுடன், ஹாரி பைஜாமாவுக்கு மாறிக் கொள்ள ரான் உதவினான். ரப்பர்போல இருந்த, அவனது எலும்பற்றக் கையை அந்தச் சட்டையின் ஒரு கைக்குள் நுழைக்கச் சிறிது நேரம் பிடித்தது.

பிறகு, தொளதொளவென்று ஆடிக் கொண்டிருந்த ஹாரியின் கைவிரல்களை அதற்குள் திணித்தபடி, திரைச்சீலைக்கு வெளியே இருந்த ஹெர்மயனியிடம், ரான், "ஆமாம், இப்போது நீ எப்படி லாக்ஹார்ட்டிற்கு வக்காலத்து வாங்கப் போகிறாய்?" என்று கேட்டான். "ஹாரி தனது எலும்புகளைத் தனது கையிலிருந்து அகற்ற விரும்பியிருந்தால் அவனே அவரைக் கேட்டிருந்திருப்பான்!"

"யார் வேண்டுமானாலும் தவறு செய்யலாம்," என்று ஹெர்மயனி கூறினாள். "ஹாரி, இப்போது உன்னுடைய கை வலி சுத்தமாகக் காணாமல் போய்விட்டதா இல்லையா?"

"அது வலிக்கவில்லை என்பது உண்மைதான்," என்று ஹாரி கூறினான். "ஆனால் அதே சமயம், அதனால் வேறு எந்தப் பிரயோஜனமும் இல்லை."

ஹாரி தனது படுக்கையில் தாவி ஏறியபோது அவனது கை கன்னாபின்னாவென்று அசைந்தாடியது.

ஹெர்மயனியும் மேடம் பாம்ஃபிரேயும் திரைச்சீலையை விலக்கிவிட்டு உள்ளே வந்தனர். மேடம் பாம்ஃபிரேயின் கையில் ஒரு பெரிய பாட்டில் இருந்தது. அதில் **'எலும்பு–விளைவிப்பி'** என்று எழுதி ஒட்டப்பட்டிருந்தது.

"இன்று இரவு உனக்கு ஒரு படுபயங்கரமான இரவாக இருக்கப் போகிறது," என்று கூறிக் கொண்டே, மேடம் பாம்ஃபிரே, பாட்டிலில் இருந்த, ஆவி பறந்து கொண்டிருந்த மாயத் திரவத்தை ஹாரியிடம் நீட்டினார். "எலும்பை மீண்டும் வளரச் செய்யும் சிகிச்சை மிகவும் கொடூரமானது."

'எலும்பு–விளைவிப்பி'யைக் குடிப்பது அதைவிட மோசமாக இருந்தது. அதை அவன் குடித்தபோது அது அவனது வாயையும் தொண்டையையும் எரித்தது. அவன் கடுமையாக இருமத் துவங்கினான். ஆபத்தான விளையாட்டுக்களைப் பற்றியும் திறமையற்ற ஆசிரியர்களைப் பற்றியும் பொரிந்து தள்ளியவாறே மேடம் பாம்ஃபிரே வெளியே சென்றார். ரானும் ஹெரிமயனியும் ஹாரி கொஞ்சம் தண்ணீர் குடிக்க உதவினர்.

"எது எப்படியோ, நாம் வெற்றி பெற்றுவிட்டோம்!" என்று ரான் கூறினான். அவனது வாயெல்லாம் பல்லாக இருந்தது. "ஹாரி, நீ எப்படித்தான் ஸ்னிச்சை அப்படிப் பிடித்தாயோ! அபாரம் ஹாரி, அபாரம்! அப்போது மால்ஃபாயின் முகம் போன போக்கை நீ பார்த்திருக்க வேண்டும். அவனது முகத்தில் கொலைவெறி தாண்டவமாடிக் கொண்டிருந்தது."

Scanned by CamScanner

ஹெர்மயனி தீவிரமான முகத்துடன், "அவன் அந்த பிளட்ஜரை எப்படி அதுபோல இயங்கச் செய்தான் என்று எனக்குத் தெரிந்தாக வேண்டும்," என்றாள்.

தன்னுடைய தலையணையில் நன்றாகச் சாய்ந்து கொண்ட ஹாரி, "நாம் 'பலகூட்டுச்சாறு மாயத் திரவத்'தைக் குடித்துவிட்டு அவனிடம் கேட்கப் போகும் கேள்விகளில் இதையும் சேர்த்துக் கொள்ளலாம்," என்றான். "அது இதைவிட ருசியாக இருந்தால் நன்றாக இருக்கும் . . ."

"அதில் ஸ்லிதரின் மாணவர்களின் உடற்துகள்கள் கலக்கப்பட்டிருக்கும்போதா? ஹா, ஹா! ஹாரி, உன்னுடைய நகைச்சுவையுணர்வை நான் பாராட்டுகிறேன்," என்று ரான் கூறினான்.

அக்கணத்தில் மருத்துவமனையின் அந்தப் பிரிவு இருந்த அறையின் கதவு படாரென்று திறந்தது. நனைந்து போயும் அழுக்காகவும் காணப்பட்ட கிரிஃபின்டார் அணியின் மீதி உறுப்பினர்கள் உள்ளே படையெடுத்தனர்.

"நீ பறந்த விதத்தை என்னால் நம்பவே முடியவில்லை," என்று ஜார்ஜ் கூறினான். "மார்க்கஸ் மால்ஃபாயைக் கடுமையாகத் திட்டிக் கொண்டிருந்ததை நான் பார்த்தேன். ஸ்னிச் மால்ஃபாயின் தலைக்கு மேலே பறந்து கொண்டிருந்தபோதும் அதை அவன் கவனிக்கவில்லை என்று மார்க்கஸ் கூப்பாடு போட்டுக் கொண்டிருந்தான். மால்ஃபாய் அதை அறவே விரும்பவில்லை."

கேக்குகள், இனிப்புகள், பாட்டில் பாட்டிலாகப் பூசணிக்காய்ச் சாறு ஆகியவற்றை அவர்கள் தங்களுடன் கொண்டு வந்திருந்தனர். ஹாரியின் படுக்கையைச் சுற்றி நின்று கொண்டு, ஒரு பிரமாதமான கொண்டாட்டமாக மாறியிருந்திருக்கக்கூடிய ஒன்றை அவர்கள் துவக்கவும் மேடம் பாம்ஃபிரே புயலென உள்ளே நுழையவும் சரியாக இருந்தது. அவர் பெருங்குரலில், "இந்தப் பையனுக்கு ஓய்வு தேவை! அவன் முப்பத்து மூன்று எலும்புகளை மீண்டும் வளர்த்தெடுக்க வேண்டும்! **எல்லோரும் வெளியே போய்விடுங்கள்! உடனடியாக இங்கிருந்து வெளியேறுங்கள்!**" என்று காட்டுக் கத்தல் கத்தினார்.

ஹாரி தனித்து விடப்பட்டான். தொளதொளவெனத் தொங்கிக் கிடந்த அவனது கையில் அதிகரித்துக் கொண்டிருந்த படுபயங்கர வலியிலிருந்து அவனது கவனத்தைத் திருப்ப அங்கு எதுவும் இருக்கவில்லை.

* * *

பல மணிநேரம் கழித்து ஹாரி திடுக்கிட்டுக் கண்விழித்தான். அவனைச் சுற்றிக் கும்மிருட்டாக இருந்தது. அவன் வலியில் முனகினான். தனது கையில் இப்போது ஏகப்பட்டக் கூரான மரத் துண்டுகள் குத்தப்பட்டிருந்தது போன்ற உணர்வு அவனுக்கு ஏற்பட்டது. ஒரு கணம், அந்த வலிதான் தன்னை

Scanned by CamScanner

எழுப்பியிருந்திருக்கும் என்று அவன் நினைத்தான். ஆனால் அந்த இருட்டில் யாரோ தனது நெற்றிக்கு ஒத்தடம் கொடுத்துக் கொண்டிருந்ததை அவன் பயங்கரத் திகிலுடன் உணர்ந்தான்.

"இங்கிருந்து ஓடிப் போ!" என்று ஹாரி உரத்தக் குரலில் கூறினான். பின்னர், **"டாபி!"** என்று கத்தினான்.

வீட்டு எல்ஃபான டாபியின் புறா முட்டைக் கண்கள் அந்த இருட்டிலும் ஹாரியை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தன. நீளமாகவும் கூர்மையாகவும் இருந்த அதனுடைய மூக்கையொட்டி ஒரே ஒரு துளிக் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது.

"ஹாரி பாட்டர் மறுபடியும் பள்ளிக்கு வந்துவிட்டார்," என்று டாபி பரிதாபமாக முணுமுணுத்தது. "இங்கு வர வேண்டாம் என்று டாபி படித்துப் படித்துச் சொன்னதே! சார், நீங்கள் ஏன் டாபியின் கூற்றுக்குச் செவி சாய்க்கவில்லை? ரயிலைத் தவறவிட்டப் பிறகு ஹாரி பாட்டர் ஏன் வீட்டிற்குத் திரும்பிச் செல்லவில்லை?"

ஹாரி தன் தலையணைகளின்மீது சாய்ந்து சற்று நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு, டாபியின் கைகளில் இருந்த ஸ்பான்ஞ்சைத் தட்டிவிட்டான்.

"நீ இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று ஹாரி கேட்டான். "ஆமாம், நான் ரயிலைத் தவறவிட்டது உனக்கு எப்படித் தெரியும்?"

டாபியின் உதடுகள் நடுங்கின. திடீரென்று ஹாரியை ஒரு பலத்த சந்தேகம் உலுக்கியது.

"இப்போதுதான் புரிகிறது! அதற்கு நீதான் காரணமாக இருந்திருக்க வேண்டும்!" என்று அவன் மெதுவாகக் கூறினான். "அந்தத் தடுப்புச் சுவரில் எங்களை நுழையவிடாமல் தடுத்தது நீதானா?"

டாபி தன் காதுகள் பறக்க, பலமாகத் தலையாட்டியபடி, "ஆமாம் சார், அது உண்மைதான்!" என்று கூறியது. "டாபி மறைந்திருந்து ஹாரியைக் கண்காணித்துக் கொண்டிருந்தது. பின் அந்தத் தடுப்புச் சுவரை மூடியது. பின்னர் அதற்காகத் தன் கையில் சூடு வைத்துக் கொண்டது." கட்டுப் போடப்பட்டிருந்த தனது நீண்ட பத்து விரல்களை அது ஹாரியிடம் நீட்டிக் காட்டியது. "ஆனால் டாபி இதைச் சட்டை செய்யவில்லை சார் – ஏன் தெரியுமா? ஹாரி பாட்டர் பத்திரமாக இருக்கிறார் என்று அது நினைத்தது. ஆனால் ஹாரி பாட்டர் வேறு ஒரு வழியில் பள்ளிக்குப் போய்ச் சேர்ந்துவிடுவார் என்று டாபி கனவில்கூட நினைக்கவில்லை!"

அது தனது அவலட்சணமான தலையை ஆட்டியவாறு முன்னும் பின்னும் ஆடிக் கொண்டிருந்தது.

"ஹாரி பாட்டர் மீண்டும் பள்ளிக்கு வந்துவிட்டார் என்பது தெரிய வந்ததும் டாபி மிகவும் அதிர்ச்சி அடைந்ததில், அது தன்னுடைய எஜமானின் இரவு உணவைத் தீய்த்துவிட்டது. அதற்காக டாபிக்குக் கிடைத்தச் சவுக்கடி இருக்கிறதே . . ."

Scanned by CamScanner

ஹாரி தன் தலையணைகளின் மீது நன்றாகச் சாய்ந்து உட்கார்ந்தான்.

"நீ பண்ணிய காரியத்தால் ரானும் நானும் பள்ளியைவிட்டே துரத்தப்பட்டிருப்போம்," என்று ஹாரி கோபமாகக் கூறினான். "என் எலும்புகள் வளர்வதற்குள் நீ இந்த இடத்தைக் காலி செய்துவிடு. இல்லையெனில் நான் உன் கழுத்தை நெறித்துவிடுவேன்."

டாபி பலவீனமாகப் புன்னகைத்தது.

"சார், மரண எச்சரிக்கைகள் டாபிக்குப் புதிதில்லை. வீட்டில் டாபி அதை ஒரு நாளைக்கு ஐந்து முறை கேட்கிறது."

அது தான் அணிந்திருந்த அழுக்கான தலையணை உறை போன்ற உடையில் தன் மூக்கைச் சிந்தியது. அது இருந்த பரிதாபமான கோலத்தைப் பார்த்ததும் ஹாரியின் கோபம் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்தது.

"ஆமாம் டாபி, நீ ஏன் இந்த மாதிரி ஆடையை அணிந்திருக்கிறாய்?" என்று ஹாரி ஆர்வத்துடன் கேட்டான்.

டாபி தன்னுடைய தலையணை உறை ஆடையைச் சுட்டிக்காட்டி, "சார், இதையா கேட்கிறீர்கள்? சார், இது வீட்டு எல்ஃப்புகளின் அடிமைத்தளைக்கான அடையாளம். டாபிக்குத் தன்னுடைய எஜமானர்கள் தாங்களாகவே ஆடைகளை எடுத்துக் கொடுத்தால்தான் அதனால் விடுதலை அடைய முடியும். எனவே, டாபிக்கு ஒரு காலுறைகூட வாங்கிக் கொடுக்காமல் அதன் குடும்பத்தார் மிகவும் கவனமாக இருந்து வருகின்றனர். அப்படி அவர்கள் வாங்கிக் கொடுத்துவிட்டால் டாபி அவர்களுடைய வீட்டைவிட்டு நிரந்தரமாக வெளியேற அதற்குச் சுதந்திரம் கிடைத்துவிடும்," என்று கூறியது.

வெளியே பிதுங்கிக் கொண்டிருந்த தனது கண்களைத் துடைத்தவாறு, டாபி திடீரென்று, "ஹாரி பாட்டர் மீண்டும் தன் வீட்டிற்குத் திரும்பிச் செல்ல வேண்டும்! ஹாரி பாட்டர் தன் வீட்டிற்குத் திரும்பிச் செல்லத் தன்னுடைய பிளட்ஜர் போதும் என்று டாபி நினைத்திருந்தது –"

"என்ன சொன்னாய், உன்னுடைய பிளட்ஜரா?" ஹாரிக்கு மீண்டும் கோபம் தலைக்கேறியது. "உன் பிளட்ஜர் என்றால் என்ன அர்த்தம்? என்னைக் கொல்வதற்காக நீதான் அந்த பிளட்ஜரைத் தயாரித்திருந்தாயா?"

"சார், உங்களைக் கொல்வதற்காக நான் அப்படிச் செய்யவில்லை! டாபி ஒருபோதும் உங்களைக் கொல்ல முயற்சிக்காது," என்று டாபி அதிர்ச்சியுடன் கூறியது. "டாபி ஹாரி பாட்டரின் உயிரைக் காப்பாற்ற நினைக்கிறது! இங்கிருப்பதைவிட, படுகாயமடைந்த நிலையில் ஹாரி பாட்டரை வீட்டிற்கு அனுப்புவது சிறந்தது என்று டாபி நினைத்தது! ஹாரி பாட்டர் வீட்டிற்கு அனுப்பப்பட வேண்டிய அளவுக்குக் காயப்பட வேண்டும் என்றுதான் டாபி விரும்பியது!"

Scanned by CamScanner

"ஓ! இவ்வளவுதானா, இல்லை இன்னும் ஏதாவது பாக்கி இருக்கிறதா?" என்று ஹாரி கோபமாகக் கேட்டான். "படுகாயத்துடன் நான் என் வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்று நீ விரும்பியதற்கான காரணத்தை நீ என்னிடம் கூற மாட்டாய், அப்படித்தானே?"

"ஹாரி பாட்டருக்கு மட்டும் தெரிந்திருந்தால்," என்று டாபி தேம்பியது. அதனுடைய கரடுமுரடான தலையணை உறை ஆடையில் மேலும் கண்ணீர்த் துளிகள் தெறித்தன. "கீழ்நிலையில் உள்ள, அடிமைத்தனை பூட்டப்பட்டுள்ள, மந்திரஜால உலகின் கசடுகளாகக் கருதப்படுகின்ற எங்களைப் போன்றவர்களுக்கு ஹாரி பாட்டர் என்றால் யார் என்பதை மட்டும் அவர் அறிந்திருந்தால்! சார், பெயர் சொல்லப்படக்கூடாதவன் தன் அதிகாரத்தின் உச்சகட்டத்தில் இருந்தபோது நிலைமை எப்படி இருந்தது என்பது டாபிக்கு நன்றாக நினைவிருக்கிறது! சார், வீட்டு எல்ஃப்புகளாகிய நாங்கள் ஒட்டுண்ணிகள்போல நடத்தப்பட்டோம்! இன்றும் டாபியின் நிலைமை அப்படியொன்றும் சொல்லிக் கொள்ளும்படியாக இல்லை என்பது வாஸ்தவம்தான்!" என்று டாபி ஒப்புக் கொண்டுவிட்டு, தன் முகத்தைத் தன் தலையணை உறை ஆடையில் துடைத்தது. "ஆனால், பெயர் சொல்லப்படக் கூடாதவனை நீங்கள் வெற்றி கொண்டதற்குப் பிறகு, எங்களைப் போன்றவர்களின் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க மேம்பாடு ஏற்பட்டுள்ளது. ஹாரி பாட்டர் பிழைத்துக் கொண்டார், ஆனால் பெயர் சொல்லப்படக்கூடாதவனின் சக்தி மறைந்துவிட்டிருந்தது. சார், அது ஒரு புதிய உதயம்! தீய சகாப்தம் ஒருபோதும் முடிவுக்கு வராது என்று எண்ணிக் கொண்டிருந்த எங்களைப் போன்றவர்களுக்கு ஹாரி பாட்டர் ஒரு நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்கிறார்! ஆனால் இப்போது ஹாக்வார்ட்ஸில் படுபயங்கரமான சம்பவங்கள் நிகழப் போகின்றன – அல்லது அவை ஏற்கனவே நிகழத் துவங்கி இருக்கலாம். கடந்தகாலத்தில் ஏற்கனவே நடந்துள்ள கொடூரமான சம்பவங்கள் மீண்டும் ஒரு முறை இங்கு அரங்கேற இருப்பதால் ஹாரி பாட்டர் இங்கே தொடர்ந்து தங்கியிருக்க டாபி அனுமதிக்காது. குறிப்பாக, ரகசியங்கள் அடங்கிய பாதாள அறை மறுபடியும் இப்போது திறக்கப்பட்டிருப்பதால் –"

டாபி அதிர்ச்சியில் அப்படியே உறைந்து போனது. அது ஹாரியின் படுக்கையின் அருகே இருந்த தண்ணீர் ஜாடியை எடுத்து, அதைத் தன் தலையில் டமாலென்று பலமாக அடித்துவிட்டு அங்கிருந்து மறைந்தது. ஒரு நொடிக்குப் பிறகு அது மீண்டும் ஹாரியின் படுக்கைக்குத் தவழ்ந்து வந்தது. கண்கள் லேசாகச் செருகிய நிலையில், "மோசமான டாபி, படுமோசமான டாபி," என்று அது முணுமுணுத்தது.

"அப்படியானால், ரகசியங்கள் அடங்கிய அறை என்று ஒன்று இருப்பது உண்மைதான்!" என்று ஹாரி கிசுகிசுத்தான். "நீ – நீ என்ன சொன்னாய்? ரகசியங்கள் அடங்கிய அறை ஏற்கனவே

Scanned by CamScanner

திறக்கப்பட்டுவிட்டது என்றா சொன்னாய்? டாபி, அதைப் பற்றி எனக்குக் கொஞ்சம் சொல்லு!"

டாபியின் கைகள் மீண்டும் அந்தத் தண்ணீர் ஜாடியை நோக்கி நகரத் துவங்கியதும், எலும்பும் தோலுமாக இருந்த அதன் மணிக்கட்டை ஹாரி பிடித்துக் கொண்டான். "நான் மகுள்களுக்குப் பிறந்தவனல்ல என்பது உனக்குத் தெரியும்தானே! பின் எப்படிப் பாதாள அறையிலிருந்து எனக்கு ஆபத்து வரும்?"

"சார், என்னிடமிருந்து இதற்கு மேல் எதையும் கேட்காதீர்கள். தயவு செய்து இந்த அப்பாவி டாபியை விட்டுவிடுங்கள்," என்று அது திக்கித் திணறிக் கூறியது. இருட்டில் அதன் பெரிய கண்கள் இன்னும் பெரிதாகத் தோன்றின. "இந்த இடத்தில் படுபயங்கரமான செயல்கள் நடத்தப்படத் திட்டமிடப்பட்டுள்ளன. அதனால் அவை நடைபெறும் சமயத்தில் ஹாரி பாட்டர் இங்கு இருக்கக்கூடாது. ஹாரி பாட்டர், உங்கள் வீட்டிற்குப் போய்விடுங்கள்! தயவு செய்து வீட்டிற்குப் போய்விடுங்கள். சார், ஹாரி பாட்டர் இதில் தன் மூக்கை நுழைக்கக்கூடாது. அது மிக மிக ஆபத்தானது –"

டாபி மீண்டும் தண்ணீர் ஜாடியை எடுத்துவிடாமல் இருக்க அதன் மணிக்கட்டை மேலும் இறுக்கமாகப் பிடித்தபடி, ஹாரி, "டாபி, யார் அது?" என்று கேட்டான். "யார் அதைத் திறந்தது? ரகசியங்கள் அடங்கிய பாதாள அறையைக் கடந்த முறை திறந்தது யார்?"

"டாபியால் சொல்ல முடியாது! டாபியால் சொல்ல முடியாது! டாபி அதைச் சொல்லக்கூடாது!" என்று அந்த எல்ஃப் கீச்சிட்டது. "வீட்டிற்குப் போய்விடுங்கள்! ஹாரி பாட்டர், தயவு செய்து வீட்டிற்குப் போய்விடுங்கள்!"

"நான் எங்கேயும் போகப் போவதில்லை," என்று ஹாரி அழுத்தந்திருத்தமாகக் கூறினான். "என்னுடைய நெருக்கமான நண்பர்களில் ஒருத்தி மகுள்களுக்குப் பிறந்தவள். ரகசியங்கள் அடங்கிய பாதாள அறை உண்மையிலேயே திறக்கப்பட்டிருந்தால், கண்டிப்பாக அவளது தலைதான் முதலில் உருளும் –"

"ஹாரி பாட்டர் தன் நண்பர்களுக்காகத் தன் இன்னுயிரையே பணயம் வைக்கத் தயாராக இருக்கிறார்!" என்று டாபி பரிதாபக் கிளர்ச்சியுடன் முனகியது. "என்னவோர் உயர்ந்த எண்ணம்! என்னவொரு பரந்த மனப்பான்மை! என்னவொரு தைரியம்! ஆனால் ஹாரி பாட்டர் தன் உயிரைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அவர் இங்கு இருக்கக்கூடாது. ஹாரி பாட்டர் இங்கு இருக்க –"

திடீரென்று டாபி உறைந்தது. அதன் வௌவால் காதுகள் நடுங்கின. ஹாரிக்கும் அது கேட்டது. வெளியே தாழ்வாரத்தில் யாரோ நடந்து வந்த காலடியோசையை அவன் செவிமடுத்தான்.

"டாபி இங்கிருந்து போய்விட வேண்டும்," என்று டாபி பயத்துடன் கூறியது. பிறகு ஒரு பலத்தச் சத்தம் கேட்டது. திடீரென்று ஹாரி தன் கை வெறுமனே காற்றைப் பிடித்திருந்ததை உணர்ந்தான். பிறகு அவன் தன் படுக்கையில் தளர்வாகச் சாய்ந்தான். அந்தக்

Scanned by CamScanner

காலடியோசை அந்த அறையின் கதவை நோக்கி வந்து கொண்டிருந்தது. இருட்டில் அவன் அந்த அறையின் கதவையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அடுத்தக் கணம், டம்பிள்டோர் தன் முதுகைக் காட்டியபடி பின்னோக்கி அங்கு வந்து கொண்டிருந்தார். அவர் ஒரு நீண்ட கம்பளி அங்கியையும் இரவில் அணிவதற்கான தொப்பி ஒன்றையும் அணிந்திருந்தார். ஒரு சிலைபோலத் தோன்றிய ஒன்றின் ஒரு முனையை அவர் பிடித்திருந்தார். ஒரு வினாடிக்குப் பிறகு, பேராசிரியர் மெக்கானகல் அங்கு தோன்றினார். அவர் அதன் கால்களைப் பிடித்திருந்தார். அவர்கள் இருவரும் சேர்ந்து அதை முக்கித் தக்கி அங்கிருந்த ஒரு படுக்கையில் தூக்கி வைத்தனர்.

"மேடம் பாம்ஃபிரேயை அழைத்து வாருங்கள்!" என்று டம்பிள்டோர் கிசுகிசுத்தார். உடனே பேராசிரியர் மெக்கானகல் வேகமாக அங்கிருந்து நகர்ந்தார். ஹாரி தூங்குவதுபோல பாவனை செய்து கொண்டு அசையாமல் படுத்துக் கிடந்தான். பரபரப்புடன் பேசிக் கொண்ட கிசுகிசுப்புக் குரல்கள் அவனுக்குக் கேட்டன. பின் பேராசிரியர் மெக்கானகல் அங்கு வந்தார். அவருக்குப் பின்னால் மேடம் பாம்ஃபிரேயும் வந்தார். அவர் கம்பளியால் ஆன மேற்சட்டை ஒன்றைத் தன் இரவு ஆடையின்மீது அணிந்திருந்தார். யாரோ ஆழமாக மூச்சிழுத்துக் கொள்ளும் சத்தம் அவனுக்குக் கேட்டது.

மேடம் பாம்ஃபிரே, படுக்கையில் இருந்த அந்தச் சிலையை நோக்கிக் குனிந்தவாறே, "ஐயோ! என்ன ஆயிற்று?" என்று டம்பிள்டோரிடம் கிசுகிசுத்தார்.

"மற்றொரு தாக்குதல்," என்று டம்பிள்டோர் கூறினார். "படிக்கட்டு அருகே மெக்கானகல் அவனைக் கண்டுபிடித்தார்."

"அவனுக்கு அருகே ஒரு கொத்துத் திராட்சை இருந்தது," என்று பேராசிரியர் மெக்கானகல் கூறினார். "அவன் ஹாரி பாட்டரைச் சந்திக்கத் திருட்டுத்தனமாக வந்திருக்கலாம் என்று நாங்கள் சந்தேகிக்கிறோம்."

ஹாரிக்கு பயங்கரமாக வயிற்றைப் புரட்டிக் கொண்டு வந்தது. படுக்கையில் வைக்கப்பட்டிருந்த சிலையைப் பார்ப்பதற்காக அவன் மெதுவாகவும் கவனமாகவும் ஒருசில அங்குலங்கள் தன்னை உயர்த்திக் கொண்டான். அவனை முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்த அந்தச் சிலையின் முகத்தில் சந்திர ஒளி படர்ந்திருந்தது.

அது காலின். அவனது கண்கள் விரியத் திறந்திருந்தன. அவனது கைகள் அவனுக்கு முன்னால் குத்திட்டு நின்றன. அவை கேமராவை இறுகப் பற்றியிருந்தன.

"கல்லாக்கப்பட்டுவிட்டானா?" என்று மேடம் பாம்ஃபிரே கிசுகிசுத்தார்.

"ஆமாம்," என்று பேராசிரியர் மெக்கானகல் கூறினார். "ஆனால் எனக்கு யோசிக்கவே பயமாக இருக்கிறது . . . டம்பிள்டோர் மட்டும்

Scanned by CamScanner

சூடான சாக்லேட் பானத்தைப் பருகுவதற்காகக் கீழே போயிருக்காவிட்டால் என்ன நடந்திருக்குமோ, யார் கண்டது . . .”

அவர்கள் மூவரும் காலினை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தனர். பின் டம்பிள்டோர் குனிந்து, விறைத்துப் போயிருந்த காலினின் கைகளில் இருந்த கேமராவைப் பிடுங்கினார்.

“தாக்க வந்த நபரை அவன் புகைப்படம் எடுத்திருப்பான் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?” என்று பேராசிரியர் மெக்கானகல் ஆர்வமாகக் கேட்டார்.

டம்பிள்டோர் பதிலேதும் சொல்லவில்லை. அவர் அந்தக் கேமராவின் பின்பகுதியை இழுத்துப் பிடித்துத் திறந்தார்.

“அடக் கடவுளே!” என்று மேடம் பாம்ஃபிரே கூறினார்.

அந்தக் கேமராவிலிருந்து நீராவி பீய்ச்சி அடித்தது. மூன்று படுக்கைகள் தள்ளி இருந்த ஹாரி, பிளாஸ்டிக் கருகிய வாசனையை நுகர்ந்தான்.

“உருகிப் போய்விட்டது,” என்று பேராசிரியர் மெக்கானகல் கூறினார். “ஒட்டுமொத்தமாக எல்லாமே உருகிப் போய்விட்டது . . .”

“பேராசிரியரே, இதற்கு என்ன அர்த்தம்?” என்று பேராசிரியர் மெக்கானகல் அவசரமாகக் கேட்டார்.

“அதாவது,” என்று டம்பிள்டோர் துவக்கினார். “ரகசியங்கள் அடங்கிய பாதாள அறை மீண்டும் உண்மையிலேயே திறக்கப்பட்டுவிட்டது என்று அர்த்தம்.”

மேடம் பாம்ஃபிரே தன் கையால் தன் வாயைப் பொத்திக் கொண்டார். பேராசிரியர் மெக்கானகல் டம்பிள்டோரைக் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

“ஆனால் . . . எப்படிப் பேராசிரியரே . . . **யார்?**”

டம்பிள்டோர் தனது கண்களைக் காலினின்மீது பதித்தவாறு, “யார் என்பது இங்கு கேள்வியல்ல, **‘எப்படி’** என்பதுதான் இங்கு கேட்கப்பட வேண்டிய கேள்வி,” என்று கூறினார்.

அரைகுறை இருட்டில் தெரிந்த பேராசிரியர் மெக்கானகல்லின் முகத்தை ஹாரி பார்த்தபோது, அதைப் பற்றி அவர் தன்னைவிட அதிகமாக ஒன்றும் தெரிந்து வைத்திருக்கவில்லை என்பது ஹாரிக்குத் தெளிவாகியது.

Scanned by CamScanner

அத்தியாயம் பதினொன்று

ஒற்றைக்கு ஒற்றைச் சண்டை

ஞாயிற்றுக்கிழமை காலையில் ஹாரி கண்விழித்தபோது, தான் படுத்திருந்த மருத்துவமனை அறை குளிர்காலச் சூரியனின் ஒளியில் குளித்துக் கொண்டிருந்ததைக் கண்டான். அவனது கையில் எலும்புகள் முழுவதுமாக வளர்ந்திருந்தாலும், அவனது கை மட்டும் கொஞ்சம் விறைப்பாகவே இருந்தது. அவன் வேகமாக எழுந்து உட்கார்ந்து, காலினின் படுக்கையை எட்டிப் பார்த்தான். ஆனால் முந்தைய இரவில் அவன் உடை மாற்றுவதற்காக அவனது கட்டிலைச் சுற்றித் தொங்கவிடப்பட்டிருந்த திரைச்சீலைகளைப்போலவே காலினின் படுக்கையைச் சுற்றியும் உயரமான திரைச்சீலைகள் போடப்பட்டிருந்தால் அவனது படுக்கை மற்றவர்களுடைய பார்வையிலிருந்து மறைந்திருந்தது. அவன் விழித்துவிட்டதைப் பார்த்த மேடம் பாம்ஃபிரே, காலை உணவு அடங்கிய ஒரு தட்டை மிகுந்த சுறுசுறுப்புடன் அவனுக்காக எடுத்து வந்தார். பிறகு அவனது கையையும் விரல்களையும் மடித்து நீட்டிவிடத் துவங்கினார்.

"ஹாரி, எல்லாம் சரியாக இருக்கிறது," என்று அவர் கூறினார். அவன் தனது இடது கையால் கஞ்சியை ஏடாகூடமாகக் குடித்தான். "நீ சாப்பிட்டு முடித்தவுடன் இங்கிருந்து போகலாம்."

ஹாரி தன்னால் முடிந்த அளவுக்கு விரைவாக உடை மாற்றிக் கொண்டு, காலினைப் பற்றியும் டாபியைப் பற்றியும் ரானிடமும் ஹெர்மயனியிடமும் கூறுவதற்காக கிரிஃபின்டார் கோபுரத்திற்கு விரைந்தான். ஆனால் அவர்கள் அங்கு இருக்கவில்லை. அவர்கள் எங்கே போயிருக்கக்கூடும் என்று வியந்து கொண்டே அவன் அவர்களைத் தேடினான். தனக்கு எலும்பு மீண்டும் வளர்ந்துவிட்டதா இல்லையா என்ற கவலையின்றி அவர்கள் இருவரும் எங்கோ போய்விட்டது அவனது மனத்தை லேசாகக் காயப்படுத்தியது.

ஹாரி நூலகத்தைக் கடந்து கொண்டிருந்தபோது, பெர்சி அங்கிருந்து வெளியேறிக் கொண்டிருந்ததைப் பார்த்தான். கடந்த முறை அவர்கள் இருவரும் சந்தித்துக் கொண்டபோது இருந்ததைவிட, பெர்சி இப்போது அதிக உற்சாகமாகக் காணப்பட்டான்.

"ஹலோ, ஹாரி!" என்று அவன் கூறினான். "நேற்று உன் ஆட்டம் அற்புதம்! உண்மையிலேயே மிக அபாரமான ஆட்டம். கிரிஃபின்டார்

Scanned by CamScanner

அணி, அணிகளுக்கு இடையேயான கோப்பையைக் கைப்பற்றுவதில் முன்னணி இடத்தில் இருக்கிறது. உனக்கு ஐம்பது புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன."

"பெர்சி, நீ ரானையும் ஹெர்மயனியையும் பார்த்தாயா?" என்று ஹாரி கேட்டான்.

"இல்லை. நான் பார்க்கவில்லை," என்று பெர்சி பதிலளித்தான். "ரான் வேறு ஏதாவது மாணவியரின் குளியலறைக்குள் புகுந்திருக்க மாட்டான் என்று நான் நம்புகிறேன் . . ."

ஹாரி வலுக்கட்டாயமாக ஒரு சிரிப்பை உதிர்த்தான். பெர்சி தன் பார்வையிலிருந்து மறைந்தவுடன், ஹாரி நேராக முனகல் மர்ட்டிலுடைய குளியலறைக்கு விரைந்தான். ரானும் ஹெர்மயனியும் அங்கு மீண்டும் எதற்காகப் போக வேண்டும் என்று அவனுக்குப் புரிபடவில்லை என்றாலும்கூட, வெளியே ஃபில்ச்சோ அல்லது வேறு ஏதேனும் மாணவ அணித் தலைவனோ இல்லை என்பதை உறுதி செய்து கொண்ட பிறகு அவன் அதன் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான். மூடப்பட்டிருந்த தடுப்பு அறை ஒன்றிலிருந்து அவர்களுடைய குரல்கள் வந்தன.

ஹாரி தனக்குப் பின்னால் கதவைச் சாத்திவிட்டு, "நான்தான்," என்று அறிவித்தான். அந்தத் தடுப்பு அறைக்குள்ளிருந்து 'கிளங்' என்று ஒரு சத்தமும், தண்ணீர் பளாரென்று கொட்டிய சத்தமும், யாரோ மூச்சுத் திணறும் சத்தமும் கேட்டது. அங்கிருந்த ஒரு துளை வழியாக ஹெர்மயனியின் கண்கள் எட்டிப் பார்த்தன.

"ஹாரி!" என்று அவள் கூச்சலிட்டாள். "நீ எங்களை நிலை குலைந்து போக வைத்துவிட்டாய். வா – உள்ளே வா! உன் கை எப்படி இருக்கிறது?"

"பரவாயில்லை," என்று கூறியவாறு ஹாரி அந்த அறைக்குள் தன்னைத் திணித்துக் கொண்டான். அங்கிருந்த தொட்டியின்மீது ஒரு பழைய கொப்பரை இருந்தது. அதன் விளிம்பிலிருந்து வெளிப்பட்டப் படபடவென்ற சத்தம் அதனடியில் நெருப்பு மூட்டப்பட்டிருந்ததை ஹாரிக்கு அறிவித்தது. தண்ணீரால் அணையாத, எந்த இடத்திற்கு வேண்டுமானாலும் எடுத்துச் செல்லப்படக்கூடிய நெருப்பை உருவாக்குவது ஹெர்மயனிக்குக் கை வந்த கலை.

ஹாரி மிகவும் சிரமப்பட்டு அந்த அறையின் கதவை மூடிக் கொண்டிருந்தபோது, "நாங்கள் உன்னைப் பார்க்க வந்தோம். அப்புறம் பலகூட்டுச்சாறு மாயத் திரவத் தயாரிப்பைத் துவக்கலாம் என்று முடிவு செய்தோம்," என்று ரான் விளக்கினான். "இருப்பதிலேயே மிகவும் பாதுகாப்பான இடம் இதுதான் என்று நாங்கள் முடிவு கட்டினோம்."

காலினைப் பற்றி ஹாரி சொல்லத் துவங்கியதும், ஹெர்மயனி அவனை இடைமறித்துப் பேசினாள். "எங்களுக்கு ஏற்கனவே தெரியும். இன்று காலையில், பேராசிரியர் மெக்கானகல், பேராசிரியர் ஃபிளிட்விக்கிடம் கூறிக் கொண்டிருந்ததை நாங்கள் கேட்டோம்.

Scanned by CamScanner

அதனால்தான் இதை உடனடியாகத் தயாரிக்க நாங்கள் முடிவு செய்தோம் –"

"நாம் மால்ஃபாயிடமிருந்து எவ்வளவு விரைவாக ஒப்புதல் வாக்குமூலத்தை வாங்குகிறோமோ அவ்வளவு நல்லது," என்று ரான் குமுறினான். "நான் என்ன நினைக்கிறேன் தெரியுமா? குவிடிச் போட்டி முடிந்தவுடன் மால்ஃபாய் பயங்கர மோசமான மனநிலையில் இருந்தான். அதைக் காலின்மீது காட்டிவிட்டான், அவ்வளவுதான்."

ஹெர்மயனி முடிச்சுப் புற்களை ஒடித்து அந்த மாயத் தீவத்தில் போட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்தவாறு, ஹாரி, "இன்னொரு விஷயமும் இருக்கிறது," என்று கூறினான். "நேற்று அர்த்த ராத்திரியில் டாபி என்னை வந்து பார்த்தது."

ரானும் ஹெர்மயனியும் ஆச்சரியத்துடன் ஏறிட்டுப் பார்த்தனர். டாபி தன்னிடம் சொன்னது சொல்லாதது எல்லாவற்றையும் ஹாரி அவர்களிடம் கூறினான். ரானும் ஹெர்மயனியும் வாயைப் பிளந்து கொண்டு அதைக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

"என்ன! ரகசியங்கள் அடங்கிய அறை இதற்கு முன்பு திறக்கப்பட்டுள்ளதா?" என்று ஹெர்மயனி கேட்டாள்.

"இப்போது எல்லாம் கனகச்சிதமாகப் பொருந்துகிறது," என்று ரான் வெற்றிக் குரலில் கூறினான். "லூசியஸ் மால்ஃபாய் இங்கு படித்துக் கொண்டிருந்தபோது அந்தப் பாதாள அறையைத் திறந்திருக்க வேண்டும். அதை எப்படிச் செய்ய வேண்டும் என்று இப்போது அவர் தன் மகனுக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார். இது வெளிப்படை. அங்கு எந்த மாதிரி ராட்சஸ விலங்கு இருக்கிறது என்று டாபி கூறியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். அந்த விலங்கு யாருடைய கண்களிலும் படாமல் எப்படி இப்பள்ளியில் வளைய வந்து கொண்டிருக்கிறது என்பதுதான் எனக்குப் புரியவில்லை."

ஹெர்மயனி, கொப்பரைக்குள் போடப்பட்டிருந்த அட்டைப் பூச்சிகளைக் கிண்டிவிட்டவாறே, "ஒருவேளை அது பிறர் கண்களுக்குப் புலப்படாதவாறு தன்னை மறைத்துக் கொண்டிருக்கக்கூடும்," என்று கூறினாள். "அல்லது தன்னை வேறு உருவத்திற்கு – ஒரு மெய்க்காப்புக் கவசச் சிலையாகவோ அல்லது வேறு ஏதாவதாகவோ – மாற்றிக் கொள்ளக்கூடிய சக்தி படைத்ததாக அது இருக்கலாம். நான் 'கோரைப்பல் ராட்சஸப் பச்சோந்திப் பேயை'ப் பற்றிப் படித்திருக்கிறேன்."

"ஹெர்மயனி, நீ கண்ட கண்டக் கன்றாவிப் புத்தகங்களையெல்லாம் படிக்கிறாய்," என்று ரான் கூறினான். அவன் கொப்பரையினுள் அட்டைப் பூச்சிகளுக்கு மேலே லேஸ் இறகுப் பூச்சிகளைக் கொட்டிவிட்டு, காலியான அந்தப் பையைக் கசக்கினான்.

பின் அவன் ஹாரியை நேருக்கு நேராகப் பார்த்தபடி, "அப்படியானால், டாபி நம்மை ரயிலில் ஏறவிடாமல் தடுத்ததுடன் உன் கையையும் முறித்திருக்கிறது. ஹாரி, நான் உன்னிடம் ஒன்று

Scanned by CamScanner

சொல்லலாமா? அந்த டாபி உன் உயிரைப் பாதுகாக்க முனைவதை நிறுத்தாவிட்டால், வெகு சீக்கிரமே உன்னைக் காலி பண்ணிவிடப் போகிறது," என்றான்.

காலின் தாக்கப்பட்டு மருத்துவமனையில் ஒரு நடைபிணமாகக் கிடந்தான் என்ற செய்தி திங்கட்கிழமை காலைக்குள் பள்ளியெங்கும் காட்டுத் தீபோலப் பரவியது. எல்லா இடங்களிலும் வதந்தியும் சந்தேகமும் தலைவிரித்தாடிக் கொண்டிருந்தன. இப்போது, முதல் வருட மாணவர்கள், தனியாகப் போனால் தாங்கள் தாக்கப்படலாம் என்று பயந்து எப்போதும் ஒரு கும்பலாகவே கோட்டைக்குள் வளைய வந்து கொண்டிருந்தனர்.

வசியப் பாட வகுப்பில் காலினுக்குப் பக்கத்தில் உட்கார்ந்த ஜின்னி மிகவும் மனமுடைந்து போயிருந்தாள். ஆனால் அவளைக் குஷிப்படுத்த முனைந்த ஃபிரெட்டும் ஜார்ஜும் அதை முட்டாளத்தனமாகச் செய்து கொண்டிருந்ததாக ஹாரி நினைத்தான். அவர்கள் இருவரும் ஒருவர் மாற்றி ஒருவராக, விலங்குகளின் தோலை அணிந்து கொண்டோ அல்லது உடம்பு முழுக்கக் கட்டிகள் வந்திருந்ததுபோல வேஷம் போட்டுக் கொண்டோ அவள் முன்னால் திடுதிடுப்பென வந்து குதித்தனர். அவர்கள் அதை நிறுத்தாவிட்டால், தங்களுடைய முட்டாள்தனமான செயல்களின் மூலம் அவர்கள் ஜின்னிக்கு துர்க்கனவுகளை ஏற்படுத்திக் கொண்டிருந்ததாகத் தங்களது தாயாருக்குத் தான் ஒரு கடிதம் எழுதப் போவதாகப் பெர்சி அவர்களை மிரட்டிய பிறகுதான் அவர்கள் அதை நிறுத்தினர்.

இதற்கிடையே, ஆசிரியர்களுக்குத் தெரியாமல், மந்திரத் தாயத்துகள், காப்புகள் போன்றவற்றின் விற்பனை ஹாக்வார்ட்ஸ் பள்ளியில் கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்தது. குடலைப் பிடுங்கும் நாற்றம் வீசிய ஒரு பெரிய பச்சை நிற வெங்காயம், கூராக இருந்த ஓர் ஊதா நிறப் படிகம், அழுகிப் போயிருந்த 'நியூட்' பல்லி வால் ஆகியவற்றை நெவில் வாங்கினான். அப்போது அவனது சக கிரிஃபின்டார் மாணவர்கள், அவன் தூய ரத்தப் பரம்பரையைச் சேர்ந்தவன் என்பதால் அவன் தாக்கப்படுவதற்கான வாய்ப்பு மிகக் குறைவு என்பதை அவனுக்குச் சுட்டிக்காட்டினர்.

"ஆனால் ஃபில்ச்தான் முதலில் குறி வைக்கப்பட்டார்," என்று நெவில் அம்மாணவர்களிடம் கூறினான். அவனது வட்ட வடிவமான முகத்தில் பயம் தாண்டவமாடிக் கொண்டிருந்தது. "நான் கிட்டத்தட்ட ஒரு ஸ்குயிப் என்பதை எல்லோரும் அறிவார்கள்."

* * *

டிசம்பர் மாதத்தின் இரண்டாவது வாரத்தில், வழக்கம்போல, பேராசிரியர் மெக்கானகல், கிறிஸ்துமஸ் விடுமுறைக்குப் பள்ளியில் யார் யார் தங்கவிருந்தார்கள் என்று கணக்கெடுத்துக் கொண்டிருந்தார். ஹாரி, ரான், ஹெர்மயனி ஆகிய மூவரும் தங்களுடைய பெயர்களைப் பதிவு செய்து கொண்டனர். மால்ஃபாயும் பள்ளியில் தங்கப் போவதாக அவர்கள் கேள்விப்பட்டிருந்தனர். அது அவர்களுக்கு

Scanned by CamScanner

சந்தேகத்தைத் தோற்றுவித்தது. ஆனால் பலகூட்டுச்சாறு மாயத் திரவத்தைப் பயன்படுத்தி மால்ஃபாயிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலத்தை வாங்குவதற்கு அந்த விடுமுறை ஓர் அருமையான சந்தர்ப்பமாக இருக்கும் என்பதை அவர்கள் உணர்ந்தனர்.

துரதிர்ஷ்டவசமாக, அந்த மாயத் திரவத்தைக் காய்ச்சும் வேலை பாதிதான் முடிந்திருந்தது. இரட்டைக் கொம்பு விலங்கின் கொம்புப் பொடியும் பூம்ஸ்லேங் பாம்புச்சட்டைப் பொடியும் அவர்களுக்கு இன்னும் கிடைத்திருக்கவில்லை. அது ஸ்னேப்பின் தனிப்பட்ட சேகரிப்பில் மட்டும்தான் இருந்தது. ஸ்னேப்பின் அலுவலகத்திலிருந்து திருடி அவரிடம் மாட்டிக் கொள்வதைவிட, ஸ்லிதரினின் ராட்சத விலங்கை எதிர்கொள்வதே மேலாக இருக்கும் என்பது ஹாரியின் தனிப்பட்ட அபிப்பிராயமாக இருந்தது.

ஒரு வியாழக்கிழமை மதியம் நடைபெற்ற இரட்டை மாயத் திரவ வகுப்பு முடிவடையும் நிலையில் இருந்தபோது, ஹெர்மயனி, "நமக்குத் தேவையெல்லாம் ஒரே ஒரு திசை திருப்பும் நிகழ்வு மாத்திரம்தான்," என்று கூறினாள். "அச்சமயத்தில் நம்மில் ஒருவர் அவரது அலுவலகத்தில் திருட்டுத்தனமாக நுழைந்து நமக்கு வேண்டியதை எடுத்துக் கொண்டுவிடலாம்."

ஹாரியும் ரானும் அவளைப் பதற்றத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஹெர்மயனி மிகச் சாதாரணமான குரலில், "திருடும் பொறுப்பை நான் எடுத்துக் கொள்கிறேன்," என்று கூறினாள். "இன்னொரு முறை ஏதாவது ஒரு பிரச்சனையில் நீங்கள் இருவரும் மாட்டிக் கொண்டால், நீங்கள் காலி. ஆனால் இதுவரை என்னுடைய செயல்பாடுகள் அப்பழுக்கற்றவையாக இருந்து வந்துள்ளன. நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், ஸ்னேப்பை ஓர் ஐந்து நிமிடம் படுகறுகறுப்பாக வைத்துக் கொள்ளக்கூடிய அளவுக்கு ஏதேனும் ஒரு ரகளையில் நீங்கள் ஈடுபட வேண்டும், அவ்வளவுதான்!"

ஹாரி பலவீனமாகப் புன்னகைத்தான். ஸ்னேப்பின் வகுப்பில் வேண்டுமென்றே ரகளை செய்வது என்பது, தூங்கும் டிராகனின் கண்களை நோண்டுவது எந்த அளவுக்குப் பாதுகாப்பானதோ அந்த அளவு பாதுகாப்பானது.

மாயத் திரவ வகுப்புகள் ஒரு பெரிய நிலவறையில் நடைபெற்று வந்தன. அந்த வியாழக்கிழமை மதியநேர வகுப்பும் வழக்கமான பாணியில்தான் சென்று கொண்டிருந்தது. கொதித்துக் கொண்டிருந்த இருபது கொப்பரைகள் மர பெஞ்சுகளுக்கு இடையே நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அந்த பெஞ்சுகளின்மீது பித்தளைத் தராசுகளும் இடுபொருட்கள் அடங்கிய ஜாடிகளும் இருந்தன. வகுப்பின் புகைமண்டலத்திற்கு நடுவே வேட்டை நாய்போல ஸ்னேப் வளைய வந்து கொண்டிருந்தார். அவ்வப்போது கிரிஃபின்டார் அணியினரின் வேலைகளைப் பற்றிச் சவுக்கடி வார்த்தைகளை அவர் அள்ளி வீசிக் கொண்டிருந்தார். அப்போதெல்லாம் ஸ்லிதரின் அணியினர் உள்ளூர்

Scanned by CamScanner

நகைத்தனர். ஸ்னேப்பிற்கு மிகவும் பிடித்தமான மாணவனான மால்ஃபாய், உப்பல் மீனின் கண்களை ரானின்மீதும் ஹாரியின்மீதும் எறிந்து கொண்டிருந்தான். ஹாரியும் ரானும் பதிலுக்கு ஏதையாவது செய்தால், 'இது நியாயமல்ல' என்ற வார்த்தைகளைக் கூறி முடிப்பதற்கு ஆகும் நேரத்தைவிடக் குறைவான நேரத்திற்குள் அவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவிடும் என்ற தைரியம்தான் மால்ஃபாயை அவ்வாறு செய்யத் தூண்டியது.

ஹாரியின் உப்பல் மாயத் திரவம் மிகவும் நீர்த்துப் போயிருந்தது. ஆனால் அவனது கவனம் அதைவிட முக்கியமான விஷயங்களில் லயித்திருந்தது. அவன் ஹெர்மயனியின் சமிக்ஞைக்காகக் காத்திருந்தான். தனது நீர்த்துப் போன மாயத் திரவத்தைப் பார்த்து ஸ்னேப் பரிகாசமாக அள்ளி வீசிவிட்டுச் சென்ற குத்தல் வார்த்தைகளை அவன் காதில் வாங்கிக் கொள்ளவே இல்லை. ஸ்னேப் அவனிடமிருந்து திரும்பி, நெவிலை அதட்டி உருட்டுவதற்காக அவனருகே சென்றபோது, ஹெர்மயனி ஹாரியைப் பார்த்துத் தலையசைத்தாள்.

ஹாரி வேகமாகத் தன்னுடைய கொப்பரைக்குப் பின்னால் குனிந்து, தனது பாக்கெட்டில் இருந்து ஃபிலிபஸ்டர் வாணவெடிகளில் ஒன்றை வெளியே எடுத்துத் தன்னுடைய மந்திரக்கோலால் அதை லேசாகத் தேய்த்தான். அந்த வெடி பற்றிக் கொண்டு சீறத் துவங்கியது. தனக்கு ஒருசில வினாடிகளே இருந்தன என்பதை அறிந்திருந்த ஹாரி, தன்னை நேராக்கிக் கொண்டு, குறி பார்த்து அதை உயரே எறிந்தான். அது நேராக காயலின் கொப்பரைக்குள் கச்சிதமாகப் போய் விழுந்தது.

காயலின் கொப்பரை வெடித்துச் சிதறி மொத்த வகுப்பையும் குளிப்பாட்டியது. உப்பல் மாயத் திரவம் தங்கள்மீது தெறித்ததால், மாணவர்கள் பெரும் கூச்சலிட்டனர். மால்ஃபாயின் முகம் முழுவதும் அது தெறித்திருந்ததால், அவனது மூக்கு ஒரு பலூன் மாதிரி வீங்கத் துவங்கியது. காயல் தனது கைகளால் தனது கண்களைப் பொத்தியபடி தாறுமாறாக அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்தான். அவை ஒரு சாப்பாட்டுத் தட்டு அளவுக்கு உப்பியிருந்தன. ஸ்னேப் அமைதியை நிலை நிறுத்தவும், என்ன நடந்தது என்பதைக் கண்டுபிடிக்கவும் முயன்று கொண்டிருந்தார். இந்த அமளி துமளிக்கிடையில் ஹெர்மயனி வாசல் வழியாக அங்கிருந்து நழுவியதை ஹாரி கவனித்தான்.

"அமைதி! அமைதி!" என்று ஸ்னேப் கர்ஜித்துக் கொண்டிருந்தார். "யார்மீதெல்லாம் மாயத் திரவம் தெறித்திருக்கிறதோ அவர்கள் எல்லோரும் இங்கு வந்து முறிமருந்தைப் பருகிக் கொள்ளுங்கள்! இதை யார் செய்தது என்பதை நான் கண்டுபிடிக்கும்போது . . ."

இப்போது மால்ஃபாயின் மூக்கு ஒரு சிறிய முலாம்பழம் அளவுக்கு உப்பியிருந்ததால், அதன் எடை தாங்காமல் அவனது முகம் முன்னால் சாய்ந்திருந்தது. அவன் அக்கோலத்தில் ஸ்னேப்பின் மேசையை நோக்கி வேகவேகமாக முன்னால் ஓடியதைப் பார்த்த

Scanned by CamScanner

ஹாரி தனது சிரிப்பை அடக்க மிகவும் சிரமப்பட்டான். வகுப்பில் இருந்த பாதி மாணவர்கள் கும்பலாக ஸ்னேப்பின் மேசையருகே முண்டியடித்துக் கொண்டு சென்றனர். சிலருடைய கைகள் பெரிய கட்டைகளைப்போல வீங்கியிருந்தன; சிலருடைய உதடுகள் மிகப் பெரிதாக வீங்கியிருந்ததால் அவர்கள் பேச முடியாமல் தவித்தனர். அப்போது ஹெர்மயனி மீண்டும் வகுப்பறைக்குள் புகுந்து கொண்டதை ஹாரி பார்த்தான். அவளுடைய அங்கியின் முன்புறம் நன்றாகப் புடைத்திருந்தது.

எல்லோரும் முறிமருந்துத் திரவத்தை வாங்கிக் குடித்தவுடன் அவர்களுடைய விதவிதமான உப்பல்கள் தணிந்தன. ஸ்னேப் காயலின் கொப்பரைக்குள் எட்டிப் பார்த்து, அதற்குள் வளைந்து நெளிந்து கிடந்த வெடியின் மிச்சங்களை வெளியே எடுத்தார். உடனே அங்கிருந்தவர்கள் தங்களுக்குள் பரபரப்பாகப் பேசிக் கொண்டனர்.

"இதை யார் எறிந்தார்கள் என்பதை நான் என்றாவது கண்டுபிடித்தால் . . . அந்த நபரை நான் இப்பள்ளியைவிட்டுக் கண்டிப்பாக வெளியேற்றாமல் விடமாட்டேன்," என்று ஸ்னேப் கண்டிப்பான குரலில் கூறினார்.

வகுப்பில் நிகழ்ந்து கொண்டிருந்த சம்பவத்திற்கும் தனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பது போலவும், அங்கு நிலவிய அமளி துமளி குறித்துத் தான் குழம்பிப் போயிருந்தது போலவும் ஒரு தோற்றத்தை வெளிக்காட்ட ஹாரி கடுமையாக முயற்சித்தான். ஸ்னேப் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார். பத்து நிமிடங்கள் கழித்து ஒலித்தப் பள்ளி மணியை அவன் ஆவலுடன் வரவேற்றான்.

அவர்கள் வேகவேகமாக முனகல் மர்ட்டிலின் குளியலறைக்குள் சென்று கொண்டிருந்தபோது, ஹாரி, "அது நான்தான் என்று அவருக்குத் தெரிந்துவிட்டது," என்று கூறினான். "நான் சத்தியமே செய்வேன்!"

ஹெர்மயனி புதிய இடுபொருட்களை அந்தக் கொப்பரைக்குள் தூக்கிப் போட்டுவிட்டு, பதற்றத்துடன் அதைக் கிளறிவிடத் துவங்கினாள்.

"இது இன்னும் பதினைந்து நாட்களில் தயாராகிவிடும்," என்று அவள் சந்தோஷமாகக் கூறினாள்.

ஹாரிக்கு உத்வேகம் அளிக்கும் விதமாக, ரான், "அது நீதான் என்று ஸ்னேப்பால் நிரூபிக்க முடியாது," என்று கூறினான். "அவரால் ஒன்றும் கிழித்துவிட முடியாது."

கொப்பரையில் இருந்த மாயத் திரவம் நுரையும் குமிழுமாகக் கொதித்துக் கொண்டிருந்தபோது, ஹாரி, "ஸ்னேப்பைப் பற்றி நான் நன்றாகவே அறிவேன். ஏதோ எங்கோ இடறுகிறது," என்று கூறினான்.

* * *

ஒரு வாரம் கழித்து, ஹாரி, ரான், ஹெர்மயனி ஆகிய மூவரும் வரவேற்பறையின் குறுக்காக நடந்து கொண்டிருந்தபோது, அங்கிருந்த அறிவிப்புப் பலகையில் அப்போதுதான் குத்தப்பட்டிருந்த ஒரு தோல்

Scanned by CamScanner

காகிதத்தைப் படித்தபடி ஒரு சிறு கும்பல் அப்பலகையின் அருகே குழுமியிருந்ததை அவர்கள் கண்டனர். உற்சாகமாகக் காட்சியளித்த சீமஸும் டீன் தாமஸும் தங்கள் பக்கம் வருமாறு அவர்களுக்குச் சாடை காட்டினர்.

"இங்கு **'ஒற்றைக்கு ஒற்றை மோதல் சங்கம்'** ஒன்றைத் துவக்கப் போகிறார்கள்," என்று சீமஸ் கூறினான். "இன்று இரவுதான் முதல் கூட்டம்! ஒற்றைக்கு ஒற்றைச் சண்டைப் பயிற்சிகளை எடுத்துக் கொள்ள நான் தயங்க மாட்டேன். இக்காலகட்டத்தில் கண்டிப்பாக அது உபயோகமாக இருக்கும் . . ."

"ஸ்லிதரினின் ராட்சஸ விலங்குடன் நம்மால் ஒற்றைக்கு ஒற்றையாகச் சண்டை போட முடியும் என்று நீ நினைக்கிறாயா?" என்று ரான் கேட்டான். ஆனால் அவனும் அந்த அறிவிப்பை ஆவலுடன் படித்தான்.

அவர்கள் மூவரும் இரவு உணவருந்தச் சென்று கொண்டிருந்தபோது, ரான் ஹாரியிடம், "இது உபயோகமாக இருக்கக்கூடும்," என்று கூறினான். "நாமும் போகலாமா?"

ஹாரியும் ஹெர்மயனியும் அதற்கு முழு ஆதரவு அளித்தனர். அதனால் அன்றிரவு எட்டு மணிக்கு அவர்கள் மீண்டும் பேரரங்கிற்கு விரைந்தனர். அங்கிருந்த நீண்ட மேசைகள் அனைத்தும் மாயமாய் மறைந்துவிட்டிருந்தன. ஒரு சுவரோரமாக ஒரு தங்க மேடை அமைக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலே தொங்கிக் கொண்டிருந்த ஆயிரக்கணக்கான மெழுவர்த்திகளின் வெளிச்சத்தில் அது தகதகத்துக் கொண்டிருந்தது. மேற்கூரை வழக்கம்போலக் கருப்பு வெல்வெட் நிறத்தில் இருந்தது. மொத்தப் பள்ளியுமே அங்கு குழுமியிருந்ததுபோலத் தோன்றியது. அவர்கள் எல்லோரும் தங்கள் கைகளில் மந்திரக்கோல்களை வைத்திருந்தனர். அவர்களிடம் உற்சாகம் கரைபுரண்டு ஓடிக் கொண்டிருந்தது.

ரானும் ஹாரியும் ஹெர்மயனியும் சலசலவெனப் பேசிக் கொண்டிருந்த கூட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்தபோது, ஹெர்மயனி, "நமக்கு யார் கற்றுக் கொடுக்கப் போகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள நான் மிகவும் ஆவலாக இருக்கிறேன்," என்று கூறினாள். "இளைஞராக இருந்தபோது ஒற்றைக்கு ஒற்றைச் சண்டையில் பேராசிரியர் ஃபிளிட்விக் வெற்றி வீரராகத் திகழ்ந்தார் என்று யாரோ என்னிடம் கூறினார்கள். ஒருவேளை அவர்தான் கற்றுக் கொடுக்கப் போகிறாரோ என்னவோ!"

"இது நான் நினைக்கும் ஒருவராக இல்லாதவரை நல்லது –" என்று ஹாரி தொடங்கினான். ஆனால் ஒரு பெருமூச்சுடன் அவன் அதை நிறுத்த வேண்டியதாகிவிட்டது. லாக்ஹார்ட், கருஞ்சிவப்பு நிற அங்கி ஜொலிக்க மேடையில் ஏறிக் கொண்டிருந்தார். அவருடன் வந்தது வேறு யாருமல்ல, ஸ்னேப்தான். ஸ்னேப் தனது வழக்கமான கருப்பு நிற ஆடையையே அணிந்திருந்தார்.

Scanned by CamScanner

அமைதி காக்குமாறு எல்லோருக்கும் தன் கையை உயர்த்திச் சமிக்கைக் காட்டிவிட்டு, லாக்ஹார்ட், "எல்லோரும் மேடைக்கு அருகே வாருங்கள்! முன்னே வாருங்கள்! எல்லோராலும் என்னைப் பார்க்க முடிகிறதா? எல்லோருக்கும் நான் பேசுவது கேட்கிறதா? பிரமாதம்!" என்று கூறினார்.

"ஒரு சிறிய அளவில் 'ஒற்றைக்கு ஒற்றை மோதல் சங்கம்' ஒன்றை நம் பள்ளியில் துவக்குவதற்குப் பேராசிரியர் டம்பிள்டோர் எனக்கு அனுமதி வழங்கியுள்ளார். நான் எண்ணற்றச் சந்தர்ப்பங்களில் செய்துள்ளதுபோல நீங்களும் உங்களைத் தற்காத்துக் கொள்ள இச்சங்கம் உங்களுக்குப் பயிற்சி அளிக்கும். நான் பல சூழ்நிலைகளில் எவ்வாறு என்னைத் தற்காத்துக் கொண்டேன் என்பது பற்றிய முழு விபரங்கள் என்னுடைய புத்தகப் படைப்புகளில் இடம்பெற்றுள்ளன."

லாக்ஹார்ட் ஒரு பெரிய புன்னகையைத் தன் உதடுகளில் படரவிட்டவாறு, "இப்போது, என்னுடைய உதவியாளரான பேராசிரியர் ஸ்னேப்பை உங்களுக்கு அறிமுகம் செய்து வைக்க என்னை அனுமதியுங்கள்," என்று கூறினார். "ஒற்றைக்கு ஒற்றைச் சண்டை பற்றித் தனக்கு ஓரளவு தெரியும் என்று அவர் என்னிடம் தெரிவித்ததோடு, நாம் இதைத் துவக்குவதற்கு முன்பாக, ஒரு செயல் விளக்கமாக, என்னுடன் ஒற்றைக்கு ஒற்றைச் சண்டை ஒன்றை நிகழ்த்திக் காட்டவும் பெருந்தன்மையுடன் ஒப்புக் கொண்டுள்ளார். இளைஞர்களே, நீங்கள் கவலைப்பட வேண்டாம்! உங்கள் மாயத் திரவ ஆசிரியர், சண்டை முடிந்ததும் உங்களிடம் முழுதாகத் திரும்பி வருவார். பயப்படாதீர்கள்!"

"அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் காலி செய்துவிட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்!" என்று ரான் ஹாரியின் காதில் கிசுகிசுத்தான்.

ஸ்னேப்பின் மேலுதடுகள் மடிந்தன. லாக்ஹார்ட் இன்னும் ஏன் புன்னகைத்துக் கொண்டிருந்தார் என்று ஹாரி யோசித்துக் கொண்டிருந்தான். ஸ்னேப் மட்டும் தன்னை இப்படிப் பார்த்துக் கொண்டிருந்தால், தான் இந்நேரம் எதிர்த்திசையில் தன்னால் முடிந்த அளவுக்கு வேகமாக ஓட்டமெடுத்திருக்கக்கூடும் என்று ஹாரி நினைத்துக் கொண்டான்.

லாக்ஹார்ட்டும் ஸ்னேப்பும் எதிரும் புதிருமாக நின்று கொண்டு, ஒருவருக்கு ஒருவர் வணக்கம் தெரிவித்துக் கொண்டனர் - குறைந்தபட்சம் லாக்ஹார்ட் தெரிவித்தார் என்று சொல்லலாம் - அவர் தன் கையை நன்றாகச் சுழற்றித் தன் வணக்கத்தைத் தெரிவித்தார். ஆனால் ஸ்னேப் எரிச்சலுடன் தன் தலையை லேசாகச் சாய்த்தார், அவ்வளவுதான். பின் அவர்கள் இருவரும், தங்கள் வாள்களை உருவுவதுபோலத் தங்கள் மந்திரக்கோல்களை உருவித் தங்களுக்கு முன்னால் நீட்டினர்.

மௌனமாகிவிட்டிருந்த கூட்டத்தினரைப் பார்த்து, லாக்ஹார்ட், "நாங்கள் எங்கள் மந்திரக்கோல்களை, மோதலைத் துவக்குவதற்கு

Scanned by CamScanner

முன் முறைப்படி எப்படிப் பிடித்திருக்க வேண்டுமோ அப்படிப் பிடித்திருப்பது உங்களுக்குத் தெரிகிறதா?" என்று கேட்டார். "மூன்று என்று சொல்லி முடித்ததும் நாங்கள் எங்களுடைய முதல் மந்திரத்தைப் பிரயோகிப்போம். கண்டிப்பாக நாங்கள் ஒருவரை ஒருவர் கொல்ல முயற்சிக்கப் போவதில்லை!"

தன் பற்களை நறநறவென்று கடித்துக் கொண்டிருந்த ஸ்னேப்பைக் கவனித்த ஹாரி, "எனக்கு அப்படித் தெரியவில்லை," என்று கூறினான்.

"ஒன்று – இரண்டு – மூன்று!"

இருவரும் தங்களுடைய மந்திரக்கோல்களைத் தங்களுடைய தோள்பட்டைகளுக்கு மேலாகத் தூக்கிச் சுழற்றினர். ஸ்னேப், **'எக்ஸ்பெல்லியார்மஸ்!"** என்று கத்தினார். கண்ணைப் பறிக்கும் ரத்தச் சிவப்பு நிற ஒளி ஒன்று வெளிப்பட்டது. லாக்ஹார்ட் பின்னால் தூக்கி எறியப்பட்டார். அவர் மேடையில் இருந்து பறந்து போய், பின்னால் இருந்த சுவரில் டமாலென்று மோதிச் சரிந்து, கை கால்களைப் பரப்பிக் கொண்டு தரையில் விழுந்தார்.

மால்ஃபாயும் இன்னும் சில் ஸ்லிதரின் அணியினரும் கரகோஷம் எழுப்பினர். ஹெர்மயனி தன் கைகளைப் பிசைந்தவாறே, "லாக்ஹார்ட்டுக்கு ஒன்றும் ஆகவில்லையே?" என்று கேட்டாள்.

"ஆனால்தான் என்ன?" என்று ஹாரியும் ரானும் ஒருசேரக் கேட்டனர்.

லாக்ஹார்ட் தள்ளாடியபடி எழுந்து நின்றார். அவரது தொப்பி கீழே விழுந்திருந்தது. அவருடைய சுருட்டை முடி குத்திட்டு நின்று கொண்டிருந்தது.

அவர் தள்ளாடியபடியே மேடைக்கு வந்து சேர்ந்த பிறகு, "எப்படி இருந்தது பார்த்தீர்களா?" என்று கேட்டார். "**அது நிராயுதபாணியாக்கும் மந்திரம்**. என்னுடைய மந்திரக்கோல் என்னிடமிருந்து எகிறிவிட்டது – ஸ்னேப், கூட்டத்தினருக்கு இந்த மந்திரத்தின் சக்தியை நீங்கள் நிரூபித்துக் காட்டியது நல்ல யோசனைதான். ஆனால் உங்களிடம் நான் ஒன்றைத் தெளிவுபடுத்திக் கொள்ள விரும்புகிறேன். நீங்கள் என்ன செய்யத் திட்டமிட்டிருந்தீர்கள் என்பது எனக்கு வெளிப்படையாகவே தெரிந்தது. நான் உங்களைத் தடுத்து நிறுத்த விரும்பியிருந்தால், அது எனக்கு மிகமிகச் சுலபமாக இருந்திருக்கும். ஆனால் இந்த மந்திரத்தின் சக்தியை இம்மாணவர்கள் கண்கூடாகப் பார்ப்பது அவர்களுக்கு நல்ல அறிவுறுத்தலாக இருக்கும் என்று நான் கருதியதால் அதை அனுமதித்தேன் . . ."

ஸனேப்பின் கண்களில் கொலை வெறி கூத்தாடிக் கொண்டிருந்தது. அதை லாக்ஹார்ட்டும் கவனித்திருக்க வேண்டும். ஏனெனில் அவர் உடனடியாக, "விளக்க நிகழ்ச்சி இதோடு போதும்," என்று அறிவித்தார். "உங்களை ஜோடி ஜோடியாகப் பிரிப்பதற்காக நான் இப்போது கீழே இறங்கி வரப் போகிறேன். ஸ்னேப், நீங்கள் எனக்கு உதவி செய்ய விரும்பினால் . . ."

Scanned by CamScanner

அவர்கள் இருவரும் கீழே இறங்கி வந்து, அங்கிருந்த மாணவர்களை ஜோடி ஜோடியாகப் பிரித்தனர். லாக்ஹார்ட் நெவிலையும் ஜஸ்டினையும் ஜோடி சேர்த்தார். ஸ்னேப் நேராக ஹாரியையும் ரானையும் நோக்கி வந்தார்.

"இணை பிரியாத ஜோடியைப் பிரிப்பதற்கான நேரம் வந்துவிட்டது என்று நான் நினைக்கிறேன்," என்று அவர் எக்காளமிட்டார். "ரான், நீ சீமஸுடன் ஜோடி சேர்ந்து கொள்."

ஹாரி ஹெர்மயனியை நோக்கி நகரத் துவங்கினான்.

"அது சரிப்பட்டு வரும் என்று எனக்குத் தோன்றவில்லை," என்று ஸ்னேப் விறைப்பாகப் புன்னகைத்துக் கொண்டே கூறினார். "மால்ஃபாய் இங்கே வா! நமது கதாநாயகன் ஹாரி பாட்டரை நீ எப்படிச் சமாளிக்கிறாய் என்று பார்க்கலாம். அப்புறம் ஹெர்மயனி, நீ மில்லிசென்ட்டோடு ஜோடி சேர்ந்து கொள்."

மால்ஃபாய் ஓர் ஏளனப் புன்னகையுடன் திமிராக அங்கு வந்தான். அவனுக்குப் பின்னால் ஒரு ஸ்லிதரின் மாணவி வந்தாள். அவளைக் கண்டதும், ஹாரிக்கு, லாக்ஹார்ட்டின் புத்தகமான 'யட்சினிப் பிசாசுகளுடன் ஓர் உல்லாசப் பயணம்' என்ற புத்தகத்தில் இருந்த ஒரு படம்தான் நினைவிற்கு வந்தது. அம்மாணவி, உருவத்தில் மிகப் பெரியவளாகவும் பலசாலியாகவும் இருந்தாள். அவளது வலுவான தாடை முரட்டுத்தனமாக நீட்டிக் கொண்டிருந்தது. ஹெர்மயனி அவளை நோக்கி ஒரு பலவீனமான புன்னகையை வீசினாள். ஆனால் பதிலுக்கு அம்மாணவி புன்னகைக்கவில்லை.

மீண்டும் மேடைக்குச் சென்றுவிட்டிருந்த லாக்ஹார்ட், "உங்களுடைய ஜோடிகளைப் பார்த்துத் திரும்பி நின்று தலை குனிந்து வணக்கம் தெரிவியுங்கள்!" என்று கூறினார்.

ஒருவரையொருவர் முறைத்தபடி நின்று கொண்டிருந்த ஹாரியும் மால்ஃபாயும் ஒப்புக்குத் தலைகளை அசைத்தனர்.

"மந்திரக்கோல்கள் தயாராக இருக்கட்டும்!" என்று லாக்ஹார்ட் கத்தினார். "நான் மூன்று எண்ணியதும் உங்களுடைய எதிரிகளை மந்திர சக்தியால் நிராயுதபாணியாக ஆக்குங்கள் – வெறுமனே நிராயுதபாணியாக மட்டுமே ஆக்க வேண்டும் – இங்கு விபத்து எதையும் நிகழ்த்திவிடாதீர்கள்! ஒன்று – இரண்டு – மூன்று!"

ஹாரி தன்னுடைய மந்திரக்கோலைத் தன் தோளுக்கு மேலாக உயர்த்திச் சுழற்றினான். ஆனால் மால்ஃபாய் இரண்டு என்று எண்ணப்பட்டபோதே ஆரம்பித்துவிட்டிருந்தான். மால்ஃபாயின் மந்திரம் ஹாரியைக் கடுமையாகத் தாக்கியது. தான் ஒரு தோசைக் கல்லால் தலையில் பலமாகத் தாக்கப்பட்டதுபோல அவன் உணர்ந்தான். ஹாரி தள்ளாடினான். ஆனால் தனது உடலுறுப்புகள் அனைத்தும் ஒழுங்காக வேலை செய்ததுபோலத்தான் அவனுக்குத் தோன்றியது. மேலும் நேரத்தை வீணாக்காமல், ஹாரி மால்ஃபாயை நோக்கித் தன் மந்திரகோலை நீட்டியவாறு, "ரிக்டுஸெம்ப்ரா!" என்று கத்தினான்.

Scanned by CamScanner

ஒரு வெள்ளி ஒளி மால்ஃபாயின் வயிற்றைத் தாக்கியது. அவன் மூச்சுத் திணறலுடன் வயிற்றைப் பிடித்துக் கொண்டு கீழே சுருண்டு விழுந்தான்.

சண்டை போட்டுக் கொண்டிருந்த கூட்டத்தினரைப் பார்த்து, லாக்ஹார்ட், **"நான் என்ன சொன்னேன்? நிராயுதபாணியாக மட்டுமே ஆக்க வேண்டும் என்றுதானே சொன்னேன்?"** என்று மேடையிலிருந்து கூச்சலிட்டார். மால்ஃபாய் கீழே விழுந்தபோது, கிச்சுகிச்சு மூட்டும் மந்திரத்தை ஹாரி அவன்மீது பிரயோகித்தான். தான் இருந்த நிலைமையில் மால்ஃபாயால் முழுமையாகச் சிரிக்கக்கூட முடியவில்லை. மால்ஃபாய் தரையில் விழுந்து கிடந்தபோது தான் அவனைத் தாக்குவது நியாயமாக இருக்காது என்று ஹாரி கொஞ்சம் தாமதித்தான். ஆனால் அது பெருந்தவறாகப் போய்விட்டது. மால்ஃபாய் மூச்சுத் திணறியவாறே, ஹாரியின் கால் மூட்டுக்களை நோக்கித் தன் மந்திரக்கோலை நீட்டி, "டரான்டலெக்ரா!" என்று முழங்கினான். அடுத்த நிமிடம் ஹாரியின் கால்கள் அவனது கட்டுப்பாட்டை மீறி வேகவேகமாகக் குதிக்கத் துவங்கின.

"நிறுத்துங்கள்! நிறுத்துங்கள்!" என்று லாக்ஹார்ட் கூச்சலிட்டார். ஆனால் ஸ்னேப் உடனடியாகச் செயலில் இறங்கினார்.

"ஃபினைட் இன்கேன்டேடம்!" என்று அவர் கத்தினார். ஹாரியின் கால்கள் நடனமாடுவதை நிறுத்திக் கொண்டன. மால்ஃபாய் சிரிப்பதை நிறுத்தினான். அவர்களால் நிமிர்ந்து பார்க்க முடிந்தது.

அந்த இடத்தை ஒரு பச்சை நிறப் புகை சூழ்ந்திருந்தது. நெவிலும் ஜஸ்டினும் மேல்மூச்சுக் கீழ்மூச்சு வாங்கத் தரையில் விழுந்து கிடந்தனர். சாம்பல் நிற முகத்தோடு இருந்த சீமஸை ரான் தாங்கிப் பிடித்துக் கொண்டு, உடைந்து போயிருந்த தனது மந்திரக்கோல் செய்த விஷயத்திற்காக அவனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டிருந்தான். ஆனால் ஹெர்மயனியும் மில்லிசென்ட்டும் இன்னும் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். ஹெர்மயனியின் தலை மில்லிசென்ட்டின் கிடுக்கிப் பிடியில் மாட்டியிருந்ததால், அவள் வலியால் சிணுங்கிக் கொண்டிருந்தாள். அவர்கள் இருவருடைய மந்திரக்கோல்களும் கேட்பாரற்றுத் தரையில் கிடந்தன. ஹாரி பாய்ந்து சென்று மில்லிசென்ட்டை ஹெர்மயனியிடம் இருந்து பிரித்தான். மில்லிசென்ட் ஹாரியைவிடப் பெரியவளாக இருந்ததால், அது அவனுக்கு மிகவும் சிரமமான காரியமாக இருந்தது.

லாக்ஹார்ட், ஒற்றைக்கு ஒற்றைச் சண்டையின் அலங்கோல விளைவை நோட்டம் விட்டவாறு, கூட்டத்தினருக்கு நடுவே மெதுவாக நடந்து கொண்டே, "அடப் பசங்களா!" என்று கத்தினார். "மேக்மில்லன், மெதுவாக எழுந்திரு! . . . பீட்டர், ஜாக்கிரதை! . . . பூட், வலுவாக அழுத்து, இன்னும் ஒரு நொடியில் ரத்தம் வடிவது நின்றுவிடும் . . ."

Scanned by CamScanner

கொஞ்சம் நிலை குலைந்தவர்போலக் காணப்பட்ட லாக்ஹார்ட், அப்பேரரங்கின் மத்தியில் நின்றவாறு, "உங்களுடைய எதிரி நட்புபூர்வமற்ற முறையில் வீசும் மந்திரப் பிரயோகங்களை எப்படித் தடுப்பது என்பதை நான் உங்களுக்குக் காட்டுவது நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது," என்று கூறிவிட்டு, ஸ்னேப்பைப் பார்த்தார். ஸ்னேப்பின் கருமை நிறக் கண்கள் பிரகாசமாயின. பின் லாக்ஹார்ட் தன் முகத்தை வேகமாக வேறு பக்கமாகத் திருப்பிக் கொண்டார். "எனக்கு ஒரு ஜோடி தேவை. யார் தாங்களாகவே முன்வரப் போகிறீர்கள்? நெவில், நீயும் ஜஸ்டினும் வருகிறீர்களா?" என்று லாக்ஹார்ட் கேட்டார்.

வஞ்சகமான ஒரு பெரிய வௌவால்போல அங்கு நழுவி வந்த ஸ்னேப், "லாக்ஹார்ட், அது மோசமான யோசனை," என்று கூறினார். "நெவில் சாதாரண மந்திரங்களை உபயோதித்தாலே பெரும் நாசத்தை ஏற்படுத்திவிடுவான். அப்புறம் நாம் ஜஸ்டினின் மீதமிருக்கும் உடலை ஒரு தீப்பெட்டியில் போட்டுத்தான் மருத்துவமனைக்கு அனுப்ப வேண்டியிருக்கும்." நெவிலின் உருண்டையான இளஞ்சிவப்பு நிற முகம் இன்னும் சிவந்தது. "ஹாரி பாட்டரையும் மால்ஃபாயையும் மோதவிட்டால் எப்படி இருக்கும்?" என்று அவர் ஒரு கோணல் புன்னகையுடன் கேட்டார்.

லாக்ஹார்ட் ஹாரியையும் மால்ஃபாயையும் அரங்கின் மையத்திற்கு வருமாறு சைகை செய்தவாறே, "பிரமாதமான யோசனை!" என்று கூறினார். கூட்டம் பின்னால் விலகியது.

லாக்ஹார்ட், "ஹாரி, இங்கே பார்," என்று துவக்கினார். "மால்ஃபாய் தன் மந்திரக்கோலை உன்னை நோக்கி நீட்டியதும் நீ இப்படிச் செய்!"

அவர் தன்னுடைய மந்திரக்கோலை உயர்த்தி, சற்றுச் சிக்கலான முறையில் அதைச் சுழற்றினார். அது அவரது கையிலிருந்து நழுவிக் கீழே விழுந்தது. அவர் தன் மந்திரக்கோலைத் தரையிலிருந்து எடுத்துக் கொண்டு, "அடடா! என் மந்திரக்கோல் மிகவும் உற்சாகமடைந்திருப்பதுபோலத் தெரிகிறது," என்று கூறிச் சமாளித்தபோது, ஸ்னேப் அவரை நோக்கி ஏளனப் புன்னகை ஒன்றை வீசினார்.

ஸ்னேப் மால்ஃபாயின் அருகே சென்று குனிந்து அவனது காதில் எதையோ ஓதினார். மால்ஃபாயின் உதடுகளிலும் ஓர் ஏளனப் புன்னகை ஒட்டிக் கொண்டது. ஹாரி பதற்றத்துடன் லாக்ஹார்ட்டை நோக்கி, "பேராசிரியரே, எப்படித் தடுக்க வேண்டும் என்பதை மீண்டும் ஒருமுறை எனக்குக் காட்ட முடியுமா?" என்று கேட்டான்.

லாக்ஹார்ட்டிற்குக் கேட்காதவாறு ஒரு மெல்லிய குரலில், மால்ஃபாய், "என்ன ஹாரி, பயந்துவிட்டாயா?" என்று கேட்டான்.

"உனக்குப் பேராசைதான்!" என்று ஹாரி உதட்டோரமாகப் பேசினான்.

Scanned by CamScanner

லாக்ஹார்ட் சந்தோஷமாக ஹாரியின் தோளைப் பிடித்தவாறே, "ஹாரி, நான் செய்ததை வெறுமனே அப்படியே செய்!" என்று கூறினார்.

"நானும் என் மந்திரக்கோலைக் கீழே போட வேண்டுமா என்ன?"

ஆனால் லாக்ஹார்ட் அதைக் கவனிக்கவில்லை.

"மூன்று – இரண்டு – ஒன்று – மோதுங்கள்!" என்று அவர் கத்தினார்.

மால்ஃபாய் தன் மந்திரக்கோலை வேகமாக உயர்த்தி, "செர்பென்ட்சார்டியா!" என்று முக்காரமிட்டான்.

அவனது மந்திரக்கோலின் முனை வெடித்தது. அதிலிருந்து ஒரு பெரிய பாம்பு வெளிப்பட்டு அவர்கள் இருவரும் நின்று கொண்டிருந்த இடத்திற்கு நடுவே வந்து விழுந்து, தன்னை உயர்த்திப் படமெடுத்துச் சீறியது. ஹாரி அதைத் திகைப்புடன் பார்த்தான். கூட்டம் பெருங்கூச்சல் போட்டுக் கொண்டே இன்னும் பின்னால் விலகியது.

ஹாரி அந்தப் பாம்பைக் கண்ணிமைக்காமல் பார்த்தபடி ஒரு சிலைபோல ஆடாமல் அசையாமல் நின்று கொண்டிருந்ததை ரசித்துக் கொண்டிருந்த ஸ்னேப், "ஹாரி, அசையாதே!" என்று விட்டேத்தியாகக் கூறினார்.

"என்னிடம் விட்டுவிடு!" என்று லாக்ஹார்ட் கத்தினார். அவர் தன் மந்திரக்கோலை அந்தப் பாம்பை நோக்கிச் சுழற்றினார். அப்போது ஒரு பயங்கரமான சத்தம் கேட்டது. பாம்பு மறைந்து போவதற்குப் பதிலாக, பத்தடி உயரம் அந்தரத்தில் பறந்து, தொப்பென்று கீழே வந்து விழுந்தது. கோபம் அடைந்திருந்த அப்பாம்பு, சீற்றத்துடன் சீறியது. அது நேராக ஜஸ்டினை நோக்கி வழுக்கிக் கொண்டு சென்றது. பின் படமெடுத்து, தன் விஷப் பற்கள் வெளியே தெரிய, தாக்குவதற்குத் தயாராக நின்றது.

எது தன்னை அவ்வாறு செய்யத் தூண்டியது என்று ஹாரிக்குத் தெரியவில்லை. அதைச் செய்ய வேண்டும் என்று தான் தீர்மானித்தது பற்றிய பிரக்ஞைகூட அவனுக்கு இருக்கவில்லை. அவனுக்குத் தெரிந்ததெல்லாம், தனது கால்களில் சக்கரங்கள் கட்டப்பட்டிருந்ததைப்போலத் தனது கால்கள் தன்னை நேராக அந்தப் பாம்பை நோக்கி இழுத்துச் சென்றதும், பிறகு தான் அந்தப் பாம்பைப் பார்த்து, முட்டாள்தனமாக, "அவனை விட்டுவிடு!" என்று கத்தியதும் மட்டும்தான். மாயாஜாலம்போல, விவரிப்பிற்கு அப்பாற்பட்ட விதத்தில், அப்பாம்பு, தோட்டத்திற்கு நீர்ப் பாய்ச்சும் தடிமனான கருப்பு நிற ரப்பர் குழாய்போல மிகவும் சாதுவாகத் தரையில் படுத்துக் கொண்டு ஹாரியையே பார்த்துக் கொண்டிருந்தது. ஹாரி தன்னிடமிருந்த பயம் முழுவதும் வடிந்துவிட்டாற்போல உணர்ந்தான். எப்படி என்பது அவனுக்குத் தெரியாமல் போனாலும்கூட, அப்பாம்பு இனி யாரையும் தாக்காது என்பது

Scanned by CamScanner

அவனுக்குத் தெரிந்தது. ஆனால் அதற்கு விளக்கமளிக்க முடியாத நிலையில் அவன் இருந்தான்.

அவன் ஜஸ்டினைப் பார்த்து வாயெல்லாம் பல்லாகக் கெஞ்சினான். பதிலுக்கு ஜஸ்டின் நிம்மதியடைவான் என்றோ, அல்லது தன்னைப் புதிராகப் பார்ப்பான் என்றோ, அல்லது நன்றியுணர்வு கொண்டிருப்பான் என்றோ ஹாரி எதிர்பார்த்தான். ஆனால் அவன் பயத்தோடும் கோபத்தோடும் இருப்பான் என்று ஹாரி தன் கனவிலும் எதிர்பார்த்திருக்கவில்லை.

ஜஸ்டின் ஹாரியைப் பார்த்து, "நீ உன் மனத்தில் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டுவிட்டு, ஹாரி தன் வாயைத் திறப்பதற்கு முன்பாகவே, கடுங்கோபத்துடன் அந்த அரங்கைவிட்டு வெளியேறினான்.

ஸ்னேப் முன்னால் வந்து தன் மந்திரக்கோலை அப்பாம்பை நோக்கி நீட்டினார். அது ஒரு கரிய நிறப் புகையில் மாயமாக மறைந்தது. ஸ்னேப்பும் ஹாரியை வித்தியாசமாகப் பார்த்தார். அது தன்னை அவர் எடைபோட்டதைப்போல ஹாரிக்குத் தோன்றியது. அதை அவன் துளிகூட விரும்பவில்லை. அதோடு, அந்த அரங்கு முழுவதும் எச்சரிக்கை முணுமுணுப்புகள் ஒலித்துக் கொண்டிருந்ததை அவன் லேசாக உணர்ந்தான். பின் யாரோ அவனது அங்கியை பின்னாலிருந்து பிடித்து இழுத்ததுபோல இருந்தது.

"வா, இங்கிருந்து போய்விடலாம் . . ." என்ற ரானின் குரல் அவனுக்குக் கேட்டது.

ரான் அவனை லாவகமாக அங்கிருந்து வெளியே வழிநடத்தினான். அவர்களுக்குப் பின்னால் ஹெர்மயனி ஓடி வந்து கொண்டிருந்தாள். அவர்கள் வாசலை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது, அங்கிருந்தவர்கள் எதற்காகவோ பயந்து போய் தன்னைக் கண்டு விலகி ஓடியதுபோல ஹாரிக்குத் தோன்றியது. அதற்கான காரணத்தை, காலியாக இருந்த கிரிஃபின்டார் பொது அறைக்கு அவனை இழுத்துச் செல்லும்வரை ரானோ அல்லது ஹெர்மயனியோ அவனிடம் சொல்லவில்லை. அறைக்குள் நுழைந்ததும் ரான் ஹாரியை ஒரு நாற்காலியில் தள்ளிவிட்டு, "உனக்கு **ஸர்ப்ப பாஷை** தெரியும்! நீ ஏன் அதை இதுவரை எங்களிடம் சொல்லவில்லை?" என்று கோபமாகக் கேட்டான்.

"எனக்கு என்ன தெரியுமென்று சொன்னாய்?" என்று ஹாரி கேட்டான்.

"**ஸர்ப்ப பாஷை!**" என்று ரான் கூறினான். "உன்னால் பாம்புகளுடன் பேச முடியும்!"

"எனக்குத் தெரியும்," என்று ஹாரி கூறினான். "நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால், நான் ஒரு பாம்புடன் பேசியது இதுதான் இரண்டாவது முறை. முன்பு ஒரு முறை ஒரு விலங்குக் காட்சிச்சாலையில் தவறுதலாக டட்லீயின்மீது ஒரு பிரேசில் நாட்டு மலைப்பாம்பை நான் ஏவி விட்டுவிட்டேன். அது ஒரு நீண்ட கதை

அப்பாம்பு, தான் ஒருபோதும் பிரேசில் நாட்டிற்குச் சென்றதில்லை என்று என்னிடம் கூறியது. நான் என்னை அறியாமலேயே அதைக் கண்டிலிருந்து விடுவித்துவிட்டேன். நான் ஒரு மந்திரவாதி என்று எனக்குத் தெரிவதற்கு முன்பு நடந்த கதை அது."

"என்ன? தான் பிரேசிலுக்குப் போனதே இல்லை என்று ஒரு மலைப்பாம்பு உன்னிடம் கூறியதா?" என்று ரான் மெல்லிய குரலில் கேட்டான்.

"ஆமாம்," என்று ஹாரி கூறினான். "இது என்ன பெரிய அதிசயமா? இங்குள்ளவர்களில் பலரால் அதைச் செய்ய முடியும் என்று நான் நினைக்கிறேன்."

"இல்லை. இல்லை. எல்லோராலும் அவ்வாறு செய்ய முடியாது," என்று ரான் தெரிவித்தான். "இது ஓர் அபூர்வமான திறமை. ஆனால் ஹாரி, இது பயங்கரப் பிரச்சனைக்கு வழி வகுக்கப் போகிறது."

கொஞ்சம் கோபமடையத் துவங்கியிருந்த ஹாரி, "ஏன் அப்படிக் கூறுகிறாய்?" என்று கேட்டான். "உங்கள் எல்லோருக்கும் என்னவாயிற்று? நான் மட்டும் அந்தப் பாம்பிடம் 'ஜஸ்டினைத் தாக்காதே' என்று கூறியிருக்காவிட்டால் –"

"ஆ! நீ அந்தப் பாம்பிடம் அப்படியா கூறினாய்?"

"நீ என்ன உளறுகிறாய்? நீயும் அங்கேதானே இருந்தாய்? . . . நான் பேசியதை நீயும்தானே கேட்டாய்?"

"நீ '**ஸர்ப்ப பாஷை**'யில் பேசியதைத்தான் நான் கேட்டேன்," என்று ரான் கூறினான். "அது பாம்புகளின் மொழி. நீ எதை வேண்டுமானாலும் கூறியிருக்கலாம். ஜஸ்டின் ஏன் அலறியடித்துக் கொண்டு ஓடினான் என்பது இப்போதுதான் எனக்குப் புரிகிறது. நீ அந்தப் பாம்பிற்கு ஏதோ கட்டளை இட்டதுபோலத்தான் எனக்குத் தோன்றியது. ஹாரி, உண்மையைச் சொல்ல வேண்டும் என்றால், அது பயமுறுத்துவதாகத்தான் இருந்தது!"

ஹாரி அவனைப் பார்த்து வாயைப் பிளந்தான்.

"என்ன சொன்னாய்? நான் வேறொரு மொழியைப் பேசினேனா? ஆனால் எனக்கு அந்த உணர்வே இல்லையே! என்னால் பேச முடியும் என்று தெரியாமலேயே என்னால் எப்படி ஒரு மொழியைப் பேச முடியும்?

ரான் நம்ப முடியாதவன்போலத் தலையை அசைத்தான். ராலும் ஹெர்மயனியும் துக்க வீட்டில் இருந்ததுபோல இருந்தனர். அப்படி என்ன மோசமாக நடந்துவிட்டது என்று ஹாரி யோசித்தான்.

"ஜஸ்டினை ஒரு படுபயங்கரமான பாம்பின் வாயிலிருந்து நான் காப்பாற்றியதில் நீங்கள் என்ன தவறைக் கண்டீர்கள் என்று எனக்குப் புரியவில்லை," என்று அவன் கூறினான். "நான் அதை எப்படிச் செய்திருந்தால் என்ன? ஜஸ்டின் 'ஹெட்லெஸ் ஹன்ட்'டில் சேராமல் நான் தடுத்துவிட்டேன் என்பதுதானே முக்கியம்?"

"செய்த விதமும் முக்கியம்தான்," என்று ஹெர்மயனி ஒருவழியாக வாயைத் திறந்தாள். அவளது குரல் மென்மையாக ஒலித்தது.

Scanned by CamScanner

"ஏனென்றால், பாம்புடன் பேசுவற்கு சலசார் ஸ்லிதரின் பேர் போனவன். அதனால்தான் பாம்பு ஸ்லிதரின் அணியின் சின்னமாக இருக்கிறது."

ஹாரி திறந்த வாயை மூடவேயில்லை.

"ஆமாம். ஹெர்மயனி கூறியது முழுக்க முழுக்கச் சரி," என்றுரான் கூறினான். "இப்போது மொத்தப் பள்ளியும் நீ ஸ்லிதரினின் எள்ளுப் பேரனின் கொள்ளுப் பேரன் என்றோ, அல்லது கொள்ளுப் பேரனின் எள்ளுப் பேரன் என்றோ முடிவு கட்டப் போகிறது."

"ஆனால் நான் அந்த வம்சாவழி இல்லை," என்று ஹாரி பெரும் திகிலுடன் கூறினான். தனக்கு ஏற்பட்ட பீதிக்கான காரணத்தை அவனால் விளக்க முடியவில்லை.

"அதை நீ நிரூபிப்பது மிகச் சிரமம்," என்று ஹெர்மயனி கூறினாள். "ஸ்லிதரின் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர். எங்களுக்குத் தெரிந்தவரை நீ அந்த வம்சாவழியில் வந்தவனாக இருப்பதற்கு நிறையவே வாய்ப்பிருக்கிறது."

* * *

அன்று இரவு வெகு நேரம்வரை ஹாரி தூங்கவில்லை. தனது படுக்கையின் திரைச்சீலையிலிருந்த ஒரு விரிசல் வழியாக, கோபுரத்தின் சன்னலின்மீது பனி படர்ந்து கொண்டிருந்ததைப் பார்த்தவாறு அவன் யோசித்துக் கொண்டிருந்தான்.

தான் சலசார் ஸ்லிதரினின் வாரிசாக இருக்க முடியுமா? அவனுக்குத் தனது அப்பாவின் குடும்பத்தைப் பற்றி எதுவுமே தெரியாது. தனது மந்திரவாதி உறவினர்களைப் பற்றிய பேச்சை டர்ஸ்லீ தம்பதியினர் எப்போதுமே தடை செய்து வந்திருந்தனர்.

ஹாரி பார்ஸேல்டங்கில் எதையோ சொல்ல முயற்சித்தான். ஆனால் எந்த வார்த்தையும் வெளிவரவில்லை. பாம்பை நேருக்கு நேர் அவன் எதிர்கொண்டால்தான் அது சாத்தியம்போலும்.

"ஆனால் நான் **கிரிஃபின்டார் அணியில்**தானே இருக்கிறேன்," என்று ஹாரி நினைத்துக் கொண்டான். "என்னுடைய உடம்பில் ஸ்லிதரினின் ரத்தம் ஓடிக் கொண்டிருந்தால், வகை பிரிக்கும் தொப்பி என்னை இதில் போட்டிருக்காதே! . . ."

அவனது மூளைக்குள்ளிருந்து ஒரு குட்டிக் குரல், "ஹா! ஆனால் வகை பிரிக்கும் தொப்பி உன்னை ஸ்லிதரின் அணியில் போடத்தானே விரும்பியது? அது உனக்கு மறந்து போய்விட்டதா?" என்று கேட்டது.

ஹாரி புரண்டு படுத்தான். அடுத்த நாள் மூலிகையியல் வகுப்பில் ஜஸ்டினைப் பார்த்து, தான் அந்தப் பாம்பை அங்கிருந்து போய்விடுமாறுதான் வேண்டிக் கொண்டதாகவும், அதற்குக் கட்டளை ஏதும் இடவில்லை என்றும் எடுத்துக் கூற வேண்டும் என்று அவன் நினைத்துக் கொண்டான். ஹாரி கோபமாகத் தன் தலையணையில் ஓங்கிக் குத்தியவாறே, இதை எந்தவொரு வடிகட்டிய மடையனும்கூடப் புரிந்து கொண்டிருக்க வேண்டும் என்று தனக்குள் அங்கலாய்த்துக் கொண்டான்.

Scanned by CamScanner

இரவு பெய்து கொண்டிருந்த பனி மறுநாள் காலையில் பெரிய பனிப்புயலாக உருவெடுத்ததால், அப்பருவத்தின் கடைசி முலிகையியல் வகுப்பு ரத்து செய்யப்பட்டிருந்தது. பேராசிரியர் ஸ்புரவுட், மன்ட்ரேக்குகளுக்குக் காலுறைகளும் கழுத்துக்குட்டைகளும் அணிவிக்க வேண்டும் என்று திட்டமிட்டிருந்தார். அது மிகவும் சிக்கலான, ஆபத்தான வேலையாக இருந்ததால் அதை அவர் பிறரிடம் ஒப்படைக்கத் தயங்கினார். ஆனால் காலினையும் நாரிஸ் பூனையையும் உயிர்த்தெழ வைப்பதற்கு மன்ட்ரேக்குகளை விரைவாக வளரச் செய்ய வேண்டியிருந்தது.

கிரிஃபின்டார் பொது அறையில் இருந்த கணப்படுப்பு அருகே, வகுப்பு ரத்து செய்யப்பட்டது குறித்து ஹாரி மருகிக் கொண்டிருந்தான். ரானும் ஹெர்மயனியும், வகுப்பு நடக்காததால் கிடைத்த ஓய்வு நேரத்தை மந்திரஜாலச் சதுரங்க விளையாட்டை விளையாடுவதற்குப் பயன்படுத்திக் கொண்டனர்.

ரானின் மந்திரி ஹெர்மயனியின் குதிரை வீரனைக் கீழே தள்ளி, அவனைச் சதுரங்கப் பலகைக்கு வெளியே தரதரவென்று இழுத்துச் சென்றது. அதனால் கடுப்படைந்திருந்த ஹெர்மயனி, ஹாரியைப் பார்த்து, "அடக் கடவுளே, நீ என்ன இப்படி இருக்கிறாய்? உனக்கு அது அந்த அளவுக்கு முக்கியம் என்றால், போய் ஜஸ்டினைத் தேடிக் கண்டுபிடி," என்று கூறினாள்.

ஹாரி எழுந்து, ஜஸ்டின் எங்கே இருந்தானோ என்று யோசித்துக் கொண்டே, ஓவியத்துளை வழியாக அந்த அறையைவிட்டு வெளியேறினான்.

அனைத்து சன்னல்களிலும் அடர்த்தியாகப் பனி படர்ந்திருந்ததால், கோட்டை வழக்கத்தைவிட இருட்டாக இருந்தது. ஹாரி, பாடம் நடைபெற்றுக் கொண்டிருந்த பல வகுப்புகளை, உள்ளே என்ன நடந்து கொண்டிருந்தது என்று நோட்டம்விட்டுக் கொண்டே கடந்து சென்றான். பேராசிரியர் மெக்கானகல் ஏதோ ஒரு மாணவனைத் திட்டித் தீர்த்துக் கொண்டிருந்தார். அவரது குரலிலிருந்து, அந்த மாணவன் தன்னுடைய நண்பனை ஒரு வளை எலியாக மாற்றியிருந்தான் என்பது ஹாரிக்குத் தெரிய வந்தது. உள்ளே எட்டிப் பார்க்க முளைத்தெழுந்த ஆவலைக் கட்டுப்படுத்திக் கொண்டு, ஹாரி மேலும் நடந்தான். ஜஸ்டின் இந்த ஓய்வு நேரத்தைப் பிற பாடங்களைப் படிப்பதற்கு உபயோகப்படுத்தக்கூடும் என்று யோசித்து, முதலில் நூலகத்தில் அவன் இருந்தானா என்று பார்ப்பதற்காக ஹாரி அதை நோக்கி நடந்தான்.

ஹாரி எதிர்பார்த்தபடி, ஹஃபில்பஃப் அணியினர் பலர் நூலகத்தின் பின்பகுதியில் இருந்தனர். ஆனால் அவர்கள் பாடம் எதையும் படித்துக் கொண்டிருக்கவில்லை. நீண்ட புத்தக அலமாரிகளுக்கு இடையே அவர்கள் நெருக்கமாக உட்கார்ந்து கொண்டு, தங்களுக்கிடையே கிசுகிசுப்பான குரலில் பேசிக் கொண்டிருந்தனர். அவர்களுக்கிடையே ஜஸ்டினும் இருந்தானா

Scanned by CamScanner

இல்லையா என்பதை ஹாரியால் கண்டுபிடிக்க முடியவில்லை. அவர்கள் அவர்களை நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தபோது, அவர்கள் கூறிக் கொண்டிருந்த வார்த்தைகளில் ஒன்று அவனது காதில் விழுந்ததால், ஹாரி அங்கிருந்த புத்தக அலமாரி ஒன்றின் பின்னால் மறைந்து நின்று கொண்டான்.

ஒரு குண்டுப் பையன் அந்த மாணவர்களிடம், "எனவே, நம்முடைய பொது அறையில் மறைந்து கொள்ளுமாறு நான் ஜஸ்டினிடம் கூறினேன்," என்று தெரிவித்துக் கொண்டிருந்தான். "ஹாரி பாட்டர் தன்னுடைய அடுத்த பலிகடாவாக அவனைக் குறி வைத்திருந்தால், கொஞ்ச காலத்திற்கு அவன் அடக்கி வாசிப்பது நல்லது. தான் மகுள்களுக்குப் பிறந்தவன் என்பதை ஜஸ்டின் ஹாரி பாட்டரிடம் உளறிக் கொட்டியிருந்த நாளிலிருந்தே இது போன்ற ஒன்றை ஜஸ்டின் எதிர்பார்த்து வந்திருந்தான். தான் ஈட்டன் பள்ளிக்குத் தேர்வு செய்யப்பட்டிருந்த தகவலை அவன் ஹாரி பாட்டரிடம் தெரிவித்திருந்தான். ஸ்லிதரினின் வாரிசு தறிகெட்டு அலைந்து கொண்டிருக்கும் இந்நேரத்தில், இது வம்பை விலை கொடுத்து வாங்குவதற்குச் சமானம்."

தங்க நிறத் தலைமுடியைச் சடையாகப் பின்னியிருந்த ஒரு மாணவி, "எர்னி, அப்படியானால், அது உறுதியாக ஹாரி பாட்டர்தான் என்று முடிவு கட்டிவிட்டாயா?" என்று கேட்டாள்.

"ஹானா," என்று எர்னி வருத்தமாகத் தொடர்ந்தான். "அவன் ஸர்ப்ப பாஷை அறிந்தவன். அது தீய மந்திரவாதிகளின் முக்கிய அடையாளம் என்பது எல்லோருக்கும் தெரியும். பாம்புடன் பேசக்கூடிய கண்ணியமான யாராவது ஒருவரை உனக்குத் தெரியுமா? ஸ்லிதரினே 'பாம்புவாயன்' என்றுதான் அழைக்கப்பட்டார்."

இதைக் கேள்விப்பட்டவுடன் அங்கு பலத்த முணுமுணுப்புகள் எழுந்தன. எர்னி தொடர்ந்து பேசினான். "அந்தச் சுவரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்பது உங்களுக்கு நினைவிருக்கிறதா? வாரிசுதாரர்களின் எதிரிகள் ஜாக்கிரதை! ஹாரி பாட்டருக்கும் ஃபில்ச்சுக்கும் இடையே ஏதாவது சச்சரவு மூண்டிருக்கும். அடுத்து என்ன நடந்தது? ஃபில்ச்சின் பூனை தாக்கப்பட்டது! அந்த முதல் வருட மாணவன் காலின், குவிடிச் போட்டியின்போது ஹாரி பாட்டர் தரையில் சகதியில் விழுந்து கிடந்த நேரத்தில் அவனைப் புகைப்படங்கள் எடுத்து அவனுக்கு எரிச்சலை ஏற்படுத்தினான். அடுத்து என்ன நிகழ்ந்தது? காலின் தாக்கப்பட்டான்."

"ஆனால் ஹாரி பாட்டர் எப்போதுமே நன்றாகத்தானே பழகி வந்தான்," என்று ஹானா உறுதியற்றக் குரலில் கூறினாள். "பெயர் சொல்லப்படக்கூடாதவனை மாயமாக மறையச் செய்தது அவன்தானே? பின் அவன் எப்படி இவ்வளவு மோசமானவனாக இருக்க முடியும்?"

எர்னி தன் குரலைத் தணித்துக் கொண்டான். அங்கு கூடியிருந்த ஹஃபில்பஃப் அணியினர் இன்னும் நெருங்கி உட்கார்ந்து

Scanned by CamScanner

கொண்டனர். அவனுடைய வார்த்தைகளைக் கேட்பதற்காக ஹாரியும் சற்று அருகே போனான்.

"பெயர் சொல்லப்படக்கூடாதவனின் தாக்குதலிலிருந்து அவன் எப்படித் தப்பினான் என்பது யாருக்கும் தெரியாது. அச்சயமத்தில் அவன் ஒரு கைக்குழந்தையாக இருந்தான். அவன் அத்தாக்குதலில் சுக்குநூறாகச் சிதறிப் போயிருக்க வேண்டும். மிக அதிக சக்திவாய்ந்த ஒரு தீய மந்திரவாதியால்தான் இப்படிப்பட்ட ஒரு தாக்குதலில் இருந்து தப்பித்திருக்க முடியும்." எர்னி தன்னுடைய குரலை இன்னும் தணித்துக் கொண்டான். இப்போது அது ஒரு கிசுகிசுப்புப்போல இருந்தது. "ஒருவேளை அதற்காகத்தான் பெயர் சொல்லப்படக்கூடாதவன் அவனைத் தீர்த்துக் கட்ட முயன்றிருக்க வேண்டும். தனக்குப் போட்டியாக இன்னொரு தீய மந்திரவாதி உருவெடுப்பதை அவன் விரும்பியிருக்க மாட்டான். ஹாரி பாட்டர் வேறு எந்தவிதமான சக்திகளை மறைத்து வைத்துக் கொண்டிருக்கிறானோ, யார் கண்டது?"

ஹாரிக்கு அதற்கு மேல் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அவன் சத்தமாகச் செருமிக் கொண்டு, புத்தக அலமாரிக்குப் பின்னாலிருந்து வெளிப்பட்டான். அவன் மட்டும் அப்போது அவ்வளவு கோபத்துடன் இல்லாமல் இருந்திருந்தால், அங்கு அவன் பார்த்தக் காட்சியைக் கண்டு அவன் நகைத்திருப்பான். அங்கிருந்த அனைவரும் அவனது பார்வையால் கல்லாக்கப்பட்டிருந்ததைப்போல உறைந்து போயிருந்தனர். எர்னியின் முகம் மெல்ல மெல்ல வெளிறிக் கொண்டிருந்தது.

ஹாரி, "ஹலோ," என்று கூறினான். "நான் ஜஸ்டினைத் தேடிக் கொண்டிருக்கிறேன்!"

தாங்கள் எதற்காகக் குலை நடுங்கிக் கொண்டிருந்தோமோ அது உண்மையாகிவிட்டது என்பதுபோல ஹஃபில்பஃப் அணியினர் உணர்ந்தனர். அவர்கள் எல்லோரும் எர்னியையே பயத்தோடு பார்த்துக் கொண்டிருந்தனர்.

"அவனை நீ எதற்காகத் தேடிக் கொண்டிருக்கிறாய்?" என்று எர்னி உதறலுடன் கேட்டான்.

"'ஒற்றைக்கு ஒற்றை மோதல்' சங்கத்தில் அந்தப் பாம்பு விவகாரத்தில் உண்மையிலேயே என்ன நிகழ்ந்தது என்பதை நான் அவனிடம் தெரிவிக்க விரும்புகிறேன்," என்று ஹாரி கூறினான்.

வெளிறிப் போய் வெள்ளையாக இருந்த தன்னுடைய உதடுகளை எர்னி கடித்துக் கொண்டான். ஆழமாக ஒரு முறை சுவாசித்துவிட்டு, "நாங்கள் எல்லோரும் அங்கு இருந்தோம். அங்கு என்ன நடந்தது என்பதை எங்களது இரண்டு கண்களாலும் நாங்கள் பார்த்தோம்," என்று கூறினான்.

"அப்படியானால், நான் அந்தப் பாம்புடன் பேசிய பிறகு அது பின்வாங்கியதையும் நீங்கள் பார்த்திருப்பீர்கள்," என்று ஹாரி கூறினான்.

Scanned by CamScanner

"நீ ஸர்ப்ப பாஷையில் பேசி அந்தப் பாம்பை ஜஸ்டினை நோக்கி விரட்டியடித்ததைத்தான் நான் பார்த்தேன்," என்று எர்னி விடாப்பிடியாகக் கூறினான். அவனது மொத்த உடலும் நடுங்கிக் கொண்டிருந்தது.

ஹாரி கோபத்தில் குமுறியவாறு, "நான் அதை அவனை நோக்கித் துரத்தவில்லை," என்று கூறினான். "அது அவனைத் தொடக்கூட இல்லை!"

"அவன் மயிரிழையில் தப்பினான்," என்று எர்னி கூறினான். "உன் மனத்தில் வேறு ஏதாவது எண்ணம் ஓடிக் கொண்டிருந்தால் நான் இதை உன்னிடம் கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஒன்பது தலைமுறைகளுக்குப் பின்னால் சென்றாலும் எங்கள் பரம்பரை மந்திரவாதிகள் மற்றும் மந்திரவாதினிகளைத்தான் கொண்டிருந்தது. அதனால் என்னுடைய உடலிலும் தூய ரத்தம்தான் ஓடிக் கொண்டிருக்கிறது –"

"உன் உடலில் எந்த ரத்தம் ஓடிக் கொண்டிருக்கிறது என்பதை பற்றி எனக்கு அக்கறை கிடையாது," என்று ஹாரி கோபமாக இரைந்தான். "மகுள்களுக்குப் பிறந்தவர்களை நான் ஏன் தாக்க வேண்டும்?"

"நீ இங்கு வருவதற்கு முன் யாருடன் வசித்து வந்தாயோ, அந்த மகுள்களை நீ மிகவும் வெறுத்து வந்தாய் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன்," என்று எர்னி உடனடியாக பதிலளித்தான்.

"டர்ஸ்லீ குடும்பத்தினருடன் வாழ்ந்து வந்தால் யாராலும் அவர்களை வெறுக்காமல் இருக்க முடியாது," என்று ஹாரி கூறினான். "வேண்டுமானால் நீ முயற்சி செய்து பாரேன்!"

பிறகு அவன் அங்கிருந்து திரும்பி, பயங்கரக் கோபத்துடன் நூலகத்தைவிட்டு வெளியேறினான். அப்போது அங்கு உட்கார்ந்து கொண்டு ஒரு வசியப் புத்தகத்தின் தங்க நிற அட்டையைப் பளிச்சூட்டிக் கொண்டிருந்த மேடம் பின்ஸ், அவனைக் குற்றம் சாட்டுவது போன்ற ஒரு பார்வையை அவன்மீது வீசினார்.

ஹாரி தான் எங்கு போய்க் கொண்டிருந்தோம் என்பதைக் கவனிக்காமல் தாழ்வாரத்தில் தன் கால்கள் போன போக்கில் நடந்து கொண்டிருந்தான். அதன் விளைவாக அவன் மிகப் பெரியதாகவும் வலுவானதாகவும் இருந்த ஏதோ ஒன்றின்மீது மோதினான். அது அவனைத் தரையில் உருட்டியது.

"ஓ! ஹலோ, ஹாக்ரிட்!" என்று ஹாரி கூறினான்.

ஹாக்ரிட்டின் முகம் முழுவதையும் பனியில் குளித்திருந்த அவரது குரங்குக் குல்லாய் மறைத்திருந்தது. ஆனால் அது வேறு யாராகவும் இருக்க முடியாது. மிருதுவான விலங்குத் தோலால் ஆன மேலங்கியில் இருந்த அவரது உருவம் அந்தத் தாழ்வாரத்தையே மறைத்துக் கொண்டிருந்தது. கையுறைகள் மாட்டப்பட்டிருந்த அவரது மிகப் பெரிய கைகளில் ஒன்றில் ஒரு செத்தச் சேவல் தொங்கிக் கொண்டிருந்தது.

Scanned by CamScanner

ஹாக்ரிட் தான் பேசுவதற்கு வசதியாகத் தனது குல்லாயை மேலே தூக்கிவிட்டுக் கொண்டு, "ஹலோ ஹாரி!" என்று கூறினார். "இந்த நேரத்தில் நீ ஏன் வகுப்பில் இருக்காமல் இங்கே சுற்றிக் கொண்டிருக்கிறாய்?"

ஹாரி தரையிலிருந்து எழுந்து கொண்டே, "வகுப்பு ரத்தாகிவிட்டது," என்று கூறினான். "ஆமாம், நீங்கள் இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?"

ஹாக்ரிட் தன் கையில் இருந்த செத்தச் சேவலைத் தூக்கிப் பிடித்தார்.

"இப்பருவத்தில் கொல்லப்பட்ட இரண்டாவது சேவல் இது," என்று அவர் விவரித்தார். "ஒன்று, நரிகள் இதைக் கொன்றிருக்க வேண்டும், அல்லது இது ரத்தத்தை உறிஞ்சும் அரக்கக் கரடி ஒன்றின் வேலையாக இருக்க வேண்டும். கோழிப் பண்ணையைச் சுற்றி ஒரு வசியத்தை ஏற்பாடு செய்து கொள்ள அனுமதி வேண்டி நான் தலைமையாசிரியரைப் பார்க்க வந்தேன்."

பனியால் மூடப்பட்டிருந்த தனது புருவத்தைச் சுருக்கி, ஹாக்ரிட், ஹாரியை இன்னும் உன்னிப்பாகப் பார்த்தார்.

"நீ ஏன் ஏதோ மாதிரி இருக்கிறாய்? உன்னை ஏதாவது தொந்தரவு செய்து கொண்டிருக்கிறதா?"

எர்னியும் மற்ற பிற ஹஃபில்பஃப் அணியினரும் தன்னைப் பற்றிக் கூறியிருந்ததைத் தன் சொந்த வார்த்தைகளில் மீண்டும் விவரிக்க ஹாரியால் முடியவில்லை.

"ஒன்றுமில்லை," என்று அவன் கூறினான். "நான் இப்போதே கிளம்புவது நல்லது. அடுத்தது உருவ மாற்ற வகுப்பு. அதற்குத் தேவையான புத்தகங்களை நான் எடுத்துக் கொண்டு போக வேண்டும்."

ஹாரி அங்கிருந்து நகர்ந்தான். எர்னி தன்னைப் பற்றிக் கூறியவையே அவனது மனத்தில் வளைய வளைய வந்து கொண்டிருந்தன.

"தான் மகுள்களுக்குப் பிறந்தவன் என்பதை ஜஸ்டின் ஹாரி பாட்டரிடம் உளறிக் கொட்டியிருந்த நாளில் இருந்தே இது போன்ற ஒன்றை ஜஸ்டின் எதிர்பார்த்து வந்திருந்தான் . . ."

ஹாரி பாட்டர் பூமி அதிரும்படி மாடிப்படிகளில் திம்திம்மென்று ஏறி இன்னொரு தாழ்வாரத்தை அடைந்தான். சரியாகப் பொருத்தப்படாமல் இருந்த சன்னல் கதவுகளுக்கு இடையே இருந்த இடைவெளி வழியாக வீசிய கடுங்குளிர்க்காற்று அத்தாழ்வாரத்தில் இருந்த தீப்பந்தங்களை அணைத்துவிட்டிருந்ததால் அத்தாழ்வாரம் மேலும் இருட்டாக இருந்தது. அவன் அத்தாழ்வாரத்தின் பாதியை அடைந்திருந்தபோது, தரையில் கிடந்த எதன்மீதோ இடறித் தலைகுப்புற விழுந்தான்.

Scanned by CamScanner

தான் எதன்மீது விழுந்திருந்தோம் என்று அவன் தன் கண்களை இடுக்கிக் கொண்டு பார்த்தான். அங்கு அவன் கண்ட காட்சி அவன் வயிற்றில் யாரோ ஈட்டியைப் பாய்ச்சியதுபோல இருந்தது.

அத்தரையில் உறைந்து போயிருந்த நிலையில் ஜஸ்டின் விழுந்து கிடந்தான். அவனது முகத்தில் அதிர்ச்சி உறைந்து போயிருந்தது. அவனது கண்கள் மேற்கூரையை வெறுமையாக வெறித்துக் கொண்டிருந்தன. அது மட்டுமல்ல. அவனுக்கு அருகே இன்னோர் உருவமும் கிடந்தது. ஹாரி தன் வாழ்நாளில் பார்த்த மிக வினோதமான காட்சி அதுவாகத்தான் இருக்க வேண்டும்.

அது கிட்டத்தட்டத் தலையில்லாத நிக். இப்போது அது வெள்ளை வெளேரென்றோ, அல்லது ஒளிபுகக்கூடிய ஒன்றாகவோ இருக்கவில்லை. அது கருப்பாகப் புகைபோல இருந்தது. அது தரையிலிருந்து ஆறு அங்குல உயரத்தில் தரைக்கு இணையாக உயிரற்று மிதந்து கொண்டிருந்தது. அதன் தலை, பாதி அறுந்த நிலையில் கழுத்தோடு ஒட்டிக் கொண்டிருந்தது. அதன் முகத்திலும் ஜஸ்டினின் முகத்தில் இருந்த அதே அதிர்ச்சி உறைந்திருந்தது.

ஹாரி எழுந்து நின்றான். அவனுக்கு வேகமாக மூச்சு வாங்கிக் கொண்டிருந்தது. அவனது இதயம் மத்தளம்போல முழங்கிக் கொண்டிருந்தது. ஆளரவமற்று இருந்த அத்தாழ்வாரத்தில் அவன் அங்குமிங்கும் பார்த்தான். ஒரு நீண்ட வரிசையில் சிலந்திப் பூச்சிகள் தங்களால் முடிந்த அளவுக்கு அந்த உடல்களிலிருந்து வேகவேகமாக வெளியேறிக் கொண்டிருந்தன. அங்கிருந்த ஒரே சத்தம் இரு பக்கங்களிலும் இருந்த வகுப்புகளில் பாடம் எடுத்துக் கொண்டிருந்த ஆசிரியர்களின் மட்டுப்படுத்தப்பட்டப் குரல்கள் மட்டுமே.

அவனால் இப்போது அங்கிருந்து ஓடியிருக்க முடியும். அவன் அங்கு இருந்தான் என்பது யாருக்கும் தெரிய வராது. ஆனால் ஜஸ்டினையும் நிக்கையும் இங்கு அம்போ என்று விட்டுவிட்டு அவனால் போக முடியாது . . . அவனுக்கு இப்போது உதவி தேவை. அவனுக்கும் இதற்கும் தொடர்பில்லை என்று யாராவது நம்புவார்களா?

என்ன செய்வது என்று பரிதவிப்புடன் ஹாரி அங்கு நின்று கொண்டிருந்தபோது, அவனுக்கு அடுத்து இருந்த ஒரு கதவு சத்தமாகத் திறக்கப்பட்டது. அதிலிருந்து பீவ்ஸ் படுவேகமாக வந்தது.

"ஹாரி பாட்டர், ஸூரி பாட்டர்!" என்று அது கொக்கரித்தது. அது அவனைக் கடந்து துள்ளிக் குதித்தபோது, அவனது மூக்குக்கண்ணாடியைத் தட்டிவிட்டது. "ஹாரி பாட்டருக்கு இங்கு என்ன வேலை? அவர் இங்கே எதற்காகப் பதுங்கி இருக்கிறார்?"

பீவ்ஸ் ஒரு குட்டிக்கரணம் அடித்துக் கொண்டிருந்தபோது, அந்தரத்தில் பாதியிலேயே அப்படியே ஸ்தம்பித்தது. தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருந்த நிலையில், அது ஜஸ்டினையும் நிக்கையும் பார்த்தது. அது தன்னை நேராக்கிக் கொண்டு, ஒரு முறை ஆழமாக சுவாசித்தது. ஹாரி அதைத் தடுத்து நிறுத்த முனைவதற்குள் அது

Scanned by CamScanner

பெருங்குரலெடுத்துக் கத்தத் துவங்கியது. "தாக்குதல்! தாக்குதல்! மறுபடியும் தாக்குதல்! மனிதர்களுக்கும் சரி, ஆவிகளுக்கும் சரி, இங்கு எந்தப் பாதுகாப்பும் இல்லை! உங்கள் உயிரைப் பாதுகாத்துக் கொள்ள ஓடிவிடுங்கள்! தாக்குதல்!"

கிறீச்! – கிறீச்! – கிறீச்! தாழ்வாரத்தில் இருந்த அறைகளில், கதவுகள் ஒவ்வொன்றாகத் திறந்தன. மக்கள் கூட்டமாக ஓடி வந்தனர். பல நீண்ட நொடிகளுக்கு அங்கு பயங்கரக் குழப்பமான சூழல் நிலவியது. அந்தக் களேபரத்தில், ஜஸ்டின், கூட்டத்தினரின் கால்களால் மிதித்துத் தள்ளப்படும் அபாயத்தில் இருந்தான். கிட்டத்தட்டத் தலையில்லாத நிக்கிற்கு உள்ளேயே பலர் நின்று கொண்டிருந்தனர். ஆசிரியர்கள் அமைதி காக்கும்படிச் சத்தம் போட்டுக் கொண்டிருந்தபோது, கூட்டத்தினர் தன்னைச் சுவரோடு சுவராக அமுக்கியிருந்ததை ஹாரி கண்டான். முதலில் பேராசிரியர் மெக்கானகல் அங்கு ஓடி வந்தார். அவருக்குப் பின்னால் அவரது வகுப்பு முழுவதும் ஓடி வந்தது. அக்கூட்டத்தில் இருந்த ஒரு மாணவியின் கூந்தல் கறுப்பு வெள்ளையில் பட்டை போட்ட மாதிரி இருந்தது. பேராசிரியர் மெக்கானகல் தன் மந்திரக்கோலை உபயோகித்து ஒரு பயங்கரச் சத்தத்தை ஏற்படுத்தினார். அங்கு உடனே மௌனம் அரங்கேறியது. எல்லோரும் உடனடியாக வகுப்பறைகளுக்கு உள்ளே செல்லுமாறு அவர் உத்தரவிட்டார். அக்கூட்டம் கலைந்து முடிந்த அடுத்தக் கணம், எர்னியும் பிற ஹஃபில்பஃப் அணியினரும் மூச்சு வாங்க அங்கு வந்து சேர்ந்தனர்.

"கையும் களவுமாகப் பிடிபட்டுவிட்டான்!" என்று எர்னி காட்டுக்கூச்சல் போட்டான். அவனது முகம் வெளுத்துப் போயிருந்தது. அவன் தனது விரல்களை ஹாரியை நோக்கிச் சற்று மிகையாகவே நீட்டிக் கொண்டிருந்தான்.

"போதும், எர்னி!" என்று பேராசிரியர் மெக்கானகல் கடுமையாகக் கூறினார்.

பீவ்ஸ் கொடூரமாகப் புன்னகைத்துக் கொண்டு, அந்த இடத்திற்கு மேலாக வட்டமிட்டுக் கொண்டிருந்தது. பீவ்ஸுக்கு அமளி துமளி என்றால் கொள்ளைப் பிரியம். ஆசிரியர்கள் ஜஸ்டின் மற்றும் நிக்கின் உடல்களை ஆராய்ந்து கொண்டிருந்தபோது, பீவ்ஸ் ஒரு பாடலைப் பாடியது.

"ஓ! ஹாரி பாட்டர்! ஓ! சூரிப் பாட்டர்!
அடடா, நீ என்ன காரியம் பண்ணிவிட்டாய்?
நீ மாணவர்களைக் கொன்று குவித்துக் கொண்டிருக்கிறாய்!
அது வேடிக்கை என்று நினைத்தாயோ கொடுங்கோலா!"

"போதும் நிறுத்து!" என்று பேராசிரியர் மெக்கானகல் சுள்ளேன்று விழுந்தார். பீவ்ஸ் தன் நாக்கை ஹாரியை நோக்கி நீட்டியவாறே பின்பக்கமாக நகர்ந்து மறைந்தது.

Scanned by CamScanner

பேராசிரியர் ஃபிளிட்விக்கும் வானவியல் துறைப் பேராசிரியரான சினிஸ்ட்ராவும் ஜஸ்டினை மருத்துவமனைக்குத் தூக்கிச் சென்றனர். ஆனால் நிக்கை என்ன செய்ய வேண்டும் என்று யாருக்கும் தெரியவில்லை. கடைசியில் பேராசிரியர் மெக்கானகல் மந்திரத்தில் ஒரு பெரிய விசிறியை வரவழைத்தார். அதை அவர் எர்னியிடம் கொடுத்து, நிக்கை மாடிப்படிகளில் காற்றில் அடித்துத் தள்ளிக் கொண்டே செல்லுமாறு உத்தரவிட்டார். அவன் நிக்கை அவ்வாறே தள்ளிச் சென்றான். இப்போது ஹாரியும் பேராசிரியர் மெக்கானகல்லும் தனியாக விடப்பட்டிருந்தனர்.

"ஹாரி, என்னுடன் வா!" என்று அவர் கூறினார்.

ஹாரி உடனடியாக, "பேராசிரியரே, நான் இதைச் செய்யவில்லை என்று சத்தியம் செய்கிறேன் –" என்று பதறினான்.

"ஹாரி, இப்போது இது என் கையை மீறிப் போய்விட்டது!" என்று பேராசிரியர் மெக்கானகல் கத்தரித்தாற்போலக் கூறினார்.

அவர்கள் இருவரும் அமைதியாக ஒரு முனை வரை சென்றனர். கோரமாகத் தோற்றமளித்த ஒரு பெரிய விசித்திர விலங்கின் சிலையருகே அவர் நின்றார்.

பின், "எலுமிச்சம்பழ மிட்டாய்!" என்று கூறினார். அது ஒரு சங்கேத வார்த்தை என்பது தெரிந்தது. ஏனெனில் அந்தச் சிலை திடீரென்று உயிர்ப்பெற்று ஒரு பக்கமாகத் தாவியது. அதன் பின்னாலிருந்த சுவர் ஒன்று இரண்டாகப் பிரிந்தது. அடுத்து என்ன பயங்கரம் நிகழவிருந்ததோ என்று ஹாரி பயந்து கொண்டிருந்தாலும் அவனால் வியக்காமல் இருக்க முடியவில்லை. இரண்டாகப் பிளந்த அந்தச் சுவருக்குப் பின்னால் ஒரு சுழல் படிக்கட்டு இருந்தது. அது ஒரு தானியங்கிப் படிக்கட்டைப்போல மேல் நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது. அவனும் பேராசிரியர் மெக்கானகல்லும் அதில் ஏறினர். அவர்களுக்குப் பின்னாலிருந்த சுவர் பலத்தச் சத்தத்துடன் மீண்டும் ஒன்றுசேர்ந்து கொண்டது. அவர்கள் வட்டமாகச் சுழன்றபடி மேலும் உயரே உயரே போய்க் கொண்டே இருந்ததில் ஹாரிக்குத் தலை சுற்றத் தொடங்கியது. கடைசியில், ஹாரி, பளபளத்துக் கொண்டிருந்த ஒரு கருவாலி மரக் கதவைக் கண்டான். அக்கதவில் இருந்த அழைப்புத் தட்டி, சிங்கத்தின் உடல், வால் மற்றும் பின்னங்கால்களும், பெரிய கழுகின் முகம், முன்னங்கால்கள் மற்றும் சிறகுகளும் ஒன்றாக இணைக்கப்பட்ட கிரிஃபான் என்ற மாயாஜால விலங்கின் உருவத்தில் இருந்தது.

தான் எங்கு அழைத்துச் செல்லப்பட்டுக் கொண்டிருந்தோம் என்பது ஹாரிக்குப் புரிந்துவிட்டது. இங்குதான் டம்பிள்டோர் வாழ்ந்து கொண்டிருக்க வேண்டும்.

Scanned by CamScanner

அத்தியாயம் பன்னிரண்டு

பலகூட்டுச்சாறு மாயத் திரவம்

அவர்கள் அந்த மாடிப்படியின் உச்சியிலிருந்த கற்படிக்கட்டிலிருந்து இறங்கினர். பேராசிரியர் மெக்கானகல் அக்கதவில் மென்மையாகத் தட்டினார். அக்கதவு சத்தமில்லாமல் திறந்ததும் அவர்கள் உள்ளே நுழைந்தனர். பேராசிரியர் மெக்கானகல் ஹாரியைக் காத்திருக்குமாறு பணித்துவிட்டு, அவனைத் தனியாக விட்டுவிட்டுச் சென்றார்.

ஹாரி சுற்றுமுற்றும் பார்த்தான். ஒன்று மட்டும் அவனுக்கு உறுதியாகத் தெரிந்தது. அவன் பார்த்திருந்த ஆசிரியர்களின் அலுவலகங்களிலேயே டம்பிள்டோரின் அலுவலகம்தான் மிகவும் சுவாரசியமானதாக இருந்தது. பள்ளியிலிருந்து தான் வெளியேற்றப்பட்டுவிடுவோம் என்ற பயம் அவனை பயங்கரமாகக் குடைந்து கொண்டிருக்காமல் இருந்திருந்தால், அந்த அலுவலகத்தைச் சுற்றிப் பார்க்கத் தனக்குக் கிடைத்த இந்தச் சந்தர்ப்பத்திற்காக அவன் மிகவும் மகிழ்ந்திருப்பான்.

அது ஒரு பெரிய வட்ட வடிவமான அறை. வேடிக்கையான மென்மையான சத்தங்களால் அது நிறைந்திருந்தது. ஏராளமான வெள்ளிக் கருவிகள் ஒல்லியான கால்களைக் கொண்டிருந்த மேசைகளின்மீது வைக்கப்பட்டிருந்தன. அவை 'விர்' என்ற ஒலியுடன் சுழன்று கொண்டிருந்தன. சிறிய புகையையும் அவை வெளிவிட்டுக் கொண்டிருந்தன. முந்தைய தலைமை ஆசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியைகளின் படங்கள் அங்கிருந்த சுவர்களை அலங்கரித்துக் கொண்டிருந்தன. அவர்கள் எல்லோரும் தங்களுடைய சட்டங்களுக்குள் குட்டித் தூக்கம் போட்டுக் கொண்டிருந்தனர். அங்கு பிரம்மாண்டமான மேசை ஒன்றும் இருந்தது. அதன் கால்களின் முனைகள் விலங்குகளின் கூரிய நகங்களின் வடிவில் இருந்தன. அதன் பின்னால் இருந்த ஓர் அலமாரியில் ஓர் அழுக்கான, நைந்து போயிருந்த, மந்திரவாதிகளின் தொப்பி ஒன்று அமர்ந்திருந்தது – வகை பிரிக்கும் தொப்பிதான் அது!

ஹாரி சிறிது தயங்கினான். பிறகு, சுவர்களில் தூங்கிக் கொண்டிருந்த மந்திரவாதிகள் மற்றும் மந்திரவாதினிகளை ஒரு நோட்டம் விட்டான். அந்தத் தொப்பியை எடுத்து ஒரு முறை தன்

Scanned by CamScanner

தலையில் போட்டுக் கொண்டால் ஒன்றும் குடிமூழ்கிப் போய்விடாது என்று அவன் நினைத்தான். தலையில் போட்டுப் பார்த்தால், அது தன்னைச் சரியான அணியில்தான் போட்டிருந்ததா என்பதை அவன் உறுதி செய்து கொள்ளலாமே!

அவன் சத்தமில்லாமல் அந்த மேசைக்கு அருகே சென்று, அத்தொப்பியை எடுத்து மெதுவாகத் தன் தன் தலையில் அணிந்து கொண்டான். அது மிகவும் பெரிதாக இருந்ததால், கடந்த முறைபோலவே இப்போதும் அது அவனது கண்களை மறைத்தது. இருட்டாக இருந்த அதன் உட்புறத்தை ஹாரி வெறித்துக் கொண்டிருந்தான். பின் ஒரு சிறிய குரல் அவனது காதுகளில் ஒலித்தது: "என்ன ஹாரி பாட்டர், உன் மண்டைக்குள் ஏதாவது குடைந்து கொண்டிருக்கிறதா?"

"ஆமாம்!" என்று ஹாரி முணுமுணுத்தான். "ம்ம் . . . உன்னைத் தொந்தரவு செய்வதற்கு மன்னிக்கவும் – நான் உன்னை ஒன்று கேட்கலாமா? –"

"நான் உன்னைச் சரியான அணியில்தான் போட்டிருக்கிறேனா என்று நீ உன் மூளையைக் குழப்பிக் கொண்டிருக்கிறாயா?" என்று அத்தொப்பி சாமர்த்தியமாகக் கேட்டது. "ஒன்றை ஒப்புக் கொண்டாக வேண்டும் . . . உன்னை எங்கு போடுவது என்பதைத் தீர்மானிப்பது எனக்குக் கடினமாகத்தான் இருந்தது. ஆனால் நான் முன்பு என்ன கூறினேனோ அதில் நான் உறுதியாக இருக்கிறேன் –" ஹாரியின் இதயம் படபடத்தது – நீ ஸ்லிதரின் அணியில் இருந்திருந்தால் நன்றாகவே இருந்திருப்பாய்!"

ஹாரிக்கு வயிற்றைப் புரட்டியது. அவன் அத்தொப்பியின் உச்சியைப் பிடித்து அதை வெளியே இழுத்தான். சாயம் போயிருந்த, அழுக்கான அத்தொப்பி அவனது கையில் துவண்டு போய்க் கிடந்தது. அவன் அதை மீண்டும் அந்த அலமாரிக்குள் திணித்து வைத்தான். அவனுக்குக் குமட்டிக் கொண்டு வருவதுபோல இருந்தது.

மௌனமாக இருந்த அத்தொப்பியைப் பார்த்து, ஹாரி, "நீ கூறியது தவறு," என்று சத்தமாகக் கூறினான். அது அசையவே இல்லை. அதைப் பார்த்தவாறே அவன் பின்னால் நகர்ந்தான். அப்போது வினோதமான, கரகரப்பான ஒரு சத்தம் அவனுக்குப் பின்னாலிருந்து கேட்டது. அவன் ஒரு வட்டமடித்துப் பின்னால் திரும்பினான்.

அவன் அங்கு தனியாக இருக்கவில்லை. கதவிற்கு பின்னால் இருந்த, தங்கத்தில் செய்யப்பட்ட, பறவைகள் உட்கார்வதற்கான இடத்தில், வயதான பறவை ஒன்று அமர்ந்திருந்தது. பாதி முடி பிடுங்கப்பட்ட ஒரு வான்கோழிபோல அது இருந்தது. ஹாரி அதை முறைத்துப் பார்த்தான். அது அவனை அச்சுறுத்துவதைப்போலப் பார்த்தது. பின் அது மீண்டும் அந்தக் கரகரப்பான சத்தத்தை ஏற்படுத்தியது. அது நோய்வாய்ப்பட்டிருக்க வேண்டும் என்று ஹாரி நினைத்தான். அதன் கண்கள் ஜீவனற்று இருந்தன. ஹாரி பார்த்துக்

Scanned by CamScanner

கொண்டிருந்தபோதே ஓரிரு இறகுகள் அதன் வாலில் இருந்து உதிர்ந்தன.

டம்பிள்டோரின் அலுவலகத்தில் அவரது செல்லப் பறவையோடு தான் தனியாக இருந்த சமயத்தில் அது இறந்து போவது ஒன்றுதான் தனக்கு இப்போது மிகவும் அவசியம் என்று ஹாரி நினைத்துக் கொண்டிருந்தபோதே அப்பறவையின்மீது திடீரென்று தீப்பற்றிக் கொண்டது.

ஹாரி அதிர்ச்சியில் கத்திவிட்டு, மேசையை நோக்கிப் பின்னால் நகர்ந்தான். அங்கு எங்காவது தண்ணீர் இருக்குமா என்று அவன் தேடித் தட்டழிந்தான். ஆனால் எதுவும் தட்டுப்படவில்லை. இதற்கிடையில் அப்பறவை ஒரு நெருப்புக் கோளமாக மாறியிருந்தது. பிறகு அது பலமாக ஒருமுறை கத்தியது. அடுத்தக் கணம், தரையில் புகைந்து கொண்டிருந்த ஒரு பிடிச் சாம்பலைத் தவிர வேறு எதுவும் மிச்சமிருக்கவில்லை.

அப்போது அலுவலகக் கதவு திறந்தது. டம்பிள்டோர் உள்ளே நுழைந்தார். அவரது முகத்தில் அருளே இருக்கவில்லை.

"பேராசிரியரே," என்று ஹாரி துவக்கினான். "உங்கள் பறவை – என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை – அது திடீரென்று ஒரு நெருப்புக் கோளமாக மாறிவிட்டது –"

ஹாரியை ஆச்சரியத்தில் மூழ்கடிக்கும் விதத்தில் அவர் அவனைப் பார்த்துப் புன்னகைத்தார்.

"அதனுடைய வேளை வந்துவிட்டது," என்று அவர் கூறினார். "அது பல நாட்களாகவே மிகவும் மோசமான நிலையில்தான் இருந்து வந்தது. ஆக வேண்டியதைப் பார்க்கும்படி நான் அதனிடம் பல முறை சொல்லி வந்துள்ளேன்."

ஹாரியின் முகத்தில் பரவியிருந்த பிரமிப்பைப் பார்த்து அவர் மென்மையாகச் சிரித்தார்.

"ஃபாக்ஸ் ஒரு பீனிக்ஸ் பறவை. இறப்பதற்கான வேளை வரும்போது பீனிக்ஸ் பறவைகள் நெருப்புக் கோளங்களாக மாறிவிடும். பின் தமது சாம்பலில் இருந்து அவை மீண்டும் உயிர்பெற்று எழுந்துவிடும். இப்போது அதைப் பார் . . ."

ஹாரி சரியான சமயத்தில் தன் தலையைத் திருப்பினான். அப்போதுதான் பிறந்திருந்த, சுருக்கங்களுடன் இருந்த ஒரு குட்டிப் பறவை அந்தச் சாம்பலில் இருந்து வெளியே வந்து கொண்டிருந்தது. அது அந்த வயதான பறவையைப்போலவே அவலட்சணமாக இருந்தது.

டம்பிள்டோர் தன் இருக்கையில் உட்கார்ந்து கொண்டு, "அது எரியும் தினத்தன்று நீ அதைப் பார்க்க நேர்ந்தது உன் துரதிர்ஷ்டம்தான்," என்று கூறினார். "இப்பறவை பெரும்பாலான சமயங்களில் தனது சிவப்பு மற்றும் தங்க நிறச் சிறகுகளோடு மிக மிக அழகாகவே இருக்கும். இந்த பீனிக்ஸ் பறவைகள் அதிஅற்புதமான ஜீவன்கள். அவற்றால் மிகவும் கனமான பொருட்களைக்கூட மிக

Scanned by CamScanner

எளிதாகச் சுமந்து செல்ல முடியும். அவற்றின் கண்ணீருக்கு நோய்களைக் குணப்படுத்தும் சக்தி உண்டு. அவை மிகவும் நன்றியுடைய செல்லப் பிராணிகள்."

ஹாரி, ஃபாக்ஸ் ஒரு நெருப்புக் கோளமாக ஆன அதிர்ச்சியில் இருந்ததால், தான் ஏன் அங்கு அழைத்து வரப்பட்டிருந்தோம் என்பதையே மறந்து போயிருந்தான். ஆனால் டம்பிள்டோர் தனது மேசைக்குப் பின்னால் இருந்த, உயரமான, முதுகுடன் இருந்த நாற்காலியில் வசதியாக உட்கார்ந்து கொண்டு தன்னுடைய நீல நிறக் கண்களால் தன்னைத் துளைத்துவிடுவதுபோலப் பார்த்தபோதுதான், ஹாரிக்கு எல்லாமே நினைவிற்கு வந்தது.

டம்பிள்டோர் தன் வாயைத் திறப்பதற்கு முன்னால், அவரது அலுவலகக் கதவு 'டமால்' என்று பெரும் சத்தத்துடன் திறந்தது. ஹாக்ரிட் அதிரடியாக உள்ளே நுழைந்தார். அவரது கண்கள் அலைபாய்ந்து கொண்டிருந்தன. அவர் தன்னுடைய குரங்குக் குல்லாயை, காட்டுத்தனமாக வளர்ந்திருந்த தனது கருந்தலைவரை மடித்து விட்டிருந்தார். அந்தச் செத்தச் சேவல் இன்னும் அவருடைய கையில் ஆடிக் கொண்டிருந்தது.

"பேராசிரியரே, அதைச் செய்தது ஹாரியல்ல," என்று ஹாக்ரிட் அவசர அவசரமாகக் கூறினார். "அந்தப் பையன் கல்லாக்கப்பட்டு இருந்தது கண்டுபிடிக்கப்படுவதற்கு ஒருசில வினாடிகளுக்கு முன்பு ஹாரி என்னுடன்தான் பேசிக் கொண்டிருந்தான். சார், அவனுக்கு அதற்கு நேரமே இருந்திருக்காது . . ."

டம்பிள்டோர் எதையோ கூற முயன்றார். ஆனால் ஹாக்ரிட் தனது புலம்பலை நிறுத்தவே இல்லை. அவர் கோபத்தில் தன் சேவலை ஆட்டி ஆட்டிப் பேசியதில், அதிலிருந்து சிறகுகள் எல்லா இடங்களிலும் விழுந்தன.

". . . அது கண்டிப்பாக அவனாக இருக்க முடியாது. தேவையானால் நான் மந்திரஜால அமைச்சகத்தின் முன்னால் வந்து சத்தியம் செய்யக்கூடத் தயார் . . ."

"ஹாக்ரிட், நான் –"

". . . சார், நாம் தவறான பையனைப் பிடித்து வைத்துள்ளோம்! ஹாரி ஒருபோதும் அப்படிச் செய்ய மாட்டான் என்பதை நான் அறிவேன் –"

"ஹாக்ரிட்!" என்று டம்பிள்டோர் சத்தமாகக் கூறினார். "அவர்களை ஹாரி தாக்கினான் என்று நானும் நினைக்கவில்லை."

"ஓ!" என்று ஹாக்ரிட் கூறினார். அவரது கையிலிருந்த அச்சேவல் நழுவித் தரையில் விழுந்தது. "தலைமையாசிரியரே, அப்படியானால், நான் வெளியே காத்திருக்கிறேன்."

ஹாக்ரிட் கொஞ்சம் சங்கடத்துடன் நெளிந்தவாறே வெளியே சென்றார்.

டம்பிள்டோர் தன் மேசையில் கிடந்த சேவல் இறகுகளைக் கீழே தட்டிவிட்டுக் கொண்டிருந்தபோது, ஹாரி, "பேராசிரியரே, அது

Scanned by CamScanner

நானல்ல என்று நீங்கள் நினைக்கிறீர்களா?" என்று நம்பிக்கையுடன் கேட்டான்.

"இல்லை ஹாரி, நீ அதைச் செய்தாய் என்று நான் நினைக்கவில்லை," என்று டம்பிள்டோர் கூறினார். ஆனாலும் அவரது முகம் மீண்டும் ஒளியிழந்தது. "ஆனால் நான் உன்னிடம் சிறிது பேச விரும்புகிறேன்."

டம்பிள்டோர் தனது நீண்ட விரல்களைக் கோர்த்தவாறு, ஹாரியை எடைபோட்டுக் கொண்டிருந்தார். ஹாரி பதற்றத்துடன் காத்திருந்தான்.

"நீ எதையாவது என்னிடம் கூற விரும்புகிறாயா என்று நான் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்," என்று அவர் மென்மையாகக் கூறினார். "எது வேண்டுமானாலும்!"

ஹாரிக்கு என்ன கூறுவதென்றே தெரியவில்லை. "அடுத்து நீங்கள்தான் ஈன ரத்தங்களே!" என்று மால்ஃபாய் கூறியதைப் பற்றியும், முனகல் மர்ட்டிலின் அறையில் காய்ச்சப்பட்டுக் கொண்டிருந்த பலகூட்டுச்சாறு மாயத் திரவத்தைப் பற்றியும் அவன் நினைத்துப் பார்த்தான். அதன் பிறகு, தன் காதுகளில் இருமுறை ஒலித்திருந்த உருவமற்றக் குரலைப் பற்றியும், ரான் அது குறித்து, **"ஆனால், மந்திரஜால உலகத்தில்கூட வேறு யாருக்கும் கேட்காத ஒரு குரல் ஒருவனுக்கு மட்டும் கேட்பது நல்ல அறிகுறி அல்ல,"** என்று கூறியதைக் குறித்தும் நினைத்துப் பார்த்தான். தன்னைப் பற்றி எல்லோரும் என்ன கூறிக் கொண்டிருந்தனர் என்பதைப் பற்றியும் அவன் நினைத்துப் பார்த்தான். அதோடு, தான் ஏதோ ஒரு வழியில் சலசார் ஸ்லிதரினோடு சம்பந்தப்பட்டிருக்கலாம் என்ற பயம் தனக்குள் அதிகரித்துக் கொண்டிருந்ததைப் பற்றியும் அவன் நினைத்துப் பார்த்தான்.

இறுதியில், "இல்லை," என்று அவன் கூறினான். "பேராசிரியரே, உங்களிடம் கூறுவதற்கு என்னிடம் எதுவுமில்லை."

* * *

ஜஸ்டின் மற்றும் நிக்மீது நடத்தப்பட்ட இரட்டைத் தாக்குதல், மக்களிடம் இதுவரை நிலவி வந்திருந்த பதற்றத்தைப் பீதியாக மாற்றியிருந்தது. ஆச்சரியப்படத்தக்க வகையில், நிக்கிற்கு நேர்ந்த கதிதான் மக்களை அதிகமாகக் கவலை கொள்ளச் செய்தது. ஆவியைப் போய் ஏதாவது ஒன்று இப்படிச் செய்யுமா என்று மக்கள் ஒருவருக்கு ஒருவர் கேட்டுக் கொண்டனர். ஏற்கனவே இறந்து போயிருந்த ஒருவரைத் தாக்க வேண்டும் என்றால் அதற்கு எவ்வளவு சக்தி இருக்க வேண்டும்? கிறிஸ்துமஸ் விடுமுறைக்கு வீட்டிற்குச் செல்வதற்காக ஹாக்வார்ட்ஸ் எக்ஸ்பிரஸ் ரயிலில் முன்பதிவு செய்து கொள்ள மிகவும் அடிதடியாக இருந்தது.

ரான் ஹாரியிடமும் ஹெர்மயனியிடமும், "இந்தப் போக்கில் போனால், நாமும், மால்ஃபாய், கிராப் மற்றும் காயலும் மட்டுமே இங்கிருப்போம் என்று தோன்றுகிறது. இது மிக ஜாலியான ஒரு விடுமுறையாக இருக்கப் போகிறது!" என்றான்.

Scanned by CamScanner

மால்ஃபாய் என்ன செய்தானோ அதையே கிராபும் காயலும் எப்போதும் செய்து வந்ததால், மால்ஃபாயைப் பின்பற்றி அவர்களும் அங்கேயே தங்கிக் கொள்வதென்று முடிவு செய்திருந்தனர். பெரும்பாலானவர்கள் தங்கள் வீட்டிற்குப் போக முடிவு செய்திருந்தது குறித்து ஹாரி மகிழ்ச்சியே கொண்டான். ஏனெனில், தனக்குத் திடீரென்று விஷப் பல் முளைத்துவிடும் என்பதுபோலவோ அல்லது தான் விஷத்தைக் கக்கிவிடுவோம் என்பதுபோலவோ மக்கள் தன்னைக் கண்டு பயந்து ஒதுங்கியதும், தான் அவர்களைக் கடந்து சென்றபோதெல்லாம் அவர்கள் தன்னைச் சுட்டிக்காட்டித் தங்களுக்குள் ரகசியக் குரல்களில் பேசிக் கொண்டதும் அவனுக்குச் சலிப்பை ஏற்படுத்தியிருந்தன.

ஆனால் ஃபிரெட்டுக்கும் ஜார்ஜுக்கும் இது வேடிக்கையாக இருந்தது. ஹாரி தாழ்வாரங்களில் நடந்து சென்றபோதெல்லாம் அவர்கள் அவனுக்கு முன்னால் சென்று, "தீய மந்திர சக்திகளின் சக்கரவர்த்தி, கீர்த்தி வாய்ந்த ஸ்லிதரினின் உண்மையான வாரிசு வந்து கொண்டிருக்கிறார், பராக்! பராக்! வழிவிடுங்கள், வழிவிடுங்கள்!" என்று கத்திக் கொண்டிருந்தனர்.

அவர்களுடைய இந்த நடவடிக்கை பெர்சிக்குச் சுத்தமாகப் பிடிக்கவில்லை.

"இது ஒன்றும் வேடிக்கையான விஷயமல்ல," என்று அவன் கறாராகக் கூறினான்.

"ஓ! அப்படியா? பரவாயில்லை. இப்போது வழியைவிட்டு விலகு. ஹாரி மகாராஜா அவசரமாக ஓரிடத்திற்குச் செல்ல வேண்டியிருக்கிறது," என்று ஃபிரெட் கூறினான்.

"ஆமாம்! அவர் தனது விஷப் பற்களுடன்கூடிய ஏவலாளுடன் தனது தர்பாரான ரகசியங்கள் அடங்கிய பாதாள அறைக்குத் தேநீர் குடிக்க விரைந்து கொண்டிருக்கிறார்!" என்று ஜார்ஜ் முழங்கினான்.

ஜின்னிக்கும் அவர்களது இச்செயல் கடுப்பையும் எரிச்சலையும் ஏற்படுத்தியது.

அடுத்து அவன் யாரைக் குறி வைத்திருந்தான் என்று நாலு பேருக்குக் கேட்கும்படி உரத்தக் குரலில் ஃபிரெட் ஹாரியிடம் கேட்ட ஒவ்வொரு முறையும், அல்லது ஜார்ஜ் ஹாரியை எதிர்கொண்டபோது ஒரு பெரிய வெள்ளைப் பூண்டை எடுத்து அவனை விரட்டுவதைப்போலப் பாசாங்கு செய்த ஒவ்வொரு முறையும், ஜின்னி, "அப்படிச் செய்யாதீர்கள்!" என்று ஒப்பாரி வைத்தாள்.

ஆனால் ஹாரி அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. தன்னை ஸ்லிதரினின் வாரிசாகப் பார்ப்பது நகைப்புக்குரிய விஷயம் என்று ஃபிரெட்டும் ஜார்ஜுமாவது கருதினர் என்பது அவனுக்குத் தெம்பூட்டியது. ஆனால் இவர்களின் கோமாளித்தனமான கூத்துக்கள் மால்ஃபாயைக் கொதிப்படைய வைத்தன. இவர்கள் இம்மாதிரி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததைப் பார்த்த ஒவ்வொரு முறையும் அவன் மிகவும் வெறுப்படைந்தான்.

Scanned by CamScanner

"ஏனென்றால், தான்தான் ஸ்லிதரினின் உண்மையான வாரிசு என்று கூற அவன் துடிதுடித்துக் கொண்டிருக்கிறான்," என்று ரான் தனக்கு எல்லாம் தெரியும் என்பதுபோலப் பேசினான். "தன்னை யார் எதில் தோற்கடித்தாலும் அவனுக்குப் பிடிக்காது என்பதுதான் நமக்குத் தெரியுமே. இப்போது என்னடாவென்றால் அவனது இருண்ட நடவடிக்கைகளுக்கு நீ சொந்தம் கொண்டாடிக் கொண்டிருக்கிறாய்."

"இது சீக்கிரம் ஒரு முடிவுக்கு வந்துவிடும்," என்று ஹெர்மயனி திருப்தியான குரலில் கூறினாள். "பலகூட்டுச்சாறு மாயத் திரவம் கிட்டத்தட்டத் தயாராகிவிட்டது. நாம் வெகு விரைவில் அவனுடைய வாயிலிருந்து உண்மையை வரவழைத்துவிடலாம்."

* * *

ஒருவழியாக அவ்வருடத்தின் முதல் பள்ளிப் பருவம் முடிவடைந்தது. கோட்டைக்கு வெளியே இருந்த மைதானத்தைப் போர்த்தியிருந்த பனியின் ஆழத்திற்கு, கோட்டைக்கு உள்ளேயும் மிக ஆழமான அமைதி படர்ந்திருந்தது. அது பொலிவின்றி இருந்ததாக ஹாரி கருதவில்லை. மாறாக, அந்த அமைதியை அவன் வரவேற்றான். தனக்கும் ரானுக்கும் ஹெர்மயனிக்கும் மட்டுமே கிரிஃபின்டார் கோபுரம் சொந்தமாக இருந்தது என்ற சௌகரியத்தை அவன் கொண்டாடினான். அதாவது, யாரையும் தொந்தரவு செய்யாமல், 'வெடித்துச் சிதறும் ஸ்னாப்' என்ற சீட்டு விளையாட்டை அவர்களால் சத்தமாக விளையாட முடியும். ஒற்றைக்கு ஒற்றைச் சண்டையையும் தனிமையில் அவர்களால் பயிற்சி செய்து பார்க்க முடியும். பில்லைப் பார்ப்பதற்காகத் தங்களது பெற்றோருடன் எகிப்திற்குப் போவதற்குப் பதிலாகப் பள்ளியிலேயே தங்கிவிடுவதென்று ஃபிரெட்டும் ஜார்ஜும் இன்னியும் முடிவு செய்திருந்தனர். அவர்கள் குழந்தைத்தனமாக நடந்து கொள்வதாகப் பெர்சி கருதியதால், அவன் தனது பெரும்பாலான நேரத்தை கிரிஃபின்டார் பொது அறையில் கழிப்பதைத் தவிர்த்தான். பிரச்சனையான இந்தக் காலகட்டத்தில், ஆசிரியர்களுக்கு ஆதரவு கொடுப்பது மாணவ அணித் தலைவன் என்ற முறையில் தனது கடமை என்ற ஒரே காரணத்திற்காக மட்டுமே தான் விடுமுறையில் அங்கு தங்கியிருந்ததாகத் தற்பெருமையுடன் அவன் ஏற்கனவே தனது சகோதரர்கள் ஜார்ஜ் மற்றும் ஃபிரெட்டிடம் கூறியிருந்தான்.

கடுங்குளிரோடு கிறிஸ்துமஸ் தினம் விடிந்தது. வெளியே வெண் கம்பளம் விரித்தாற்போலப் பனி படர்ந்திருந்தது. ஹாரியின் பொதுப் படுக்கையறையில் அவனும் ரானும் மட்டுமே இருந்தனர். அன்று அதிகாலையிலேயே ஹெர்மயனி அவர்களுடைய அறைக்குள் அதிரடியாக நுழைந்தாள். அவளுடைய கையில் அவர்கள் இருவருக்கும் பரிசப் பொருட்கள் இருந்தன.

சன்னலில் தொங்கிக் கொண்டிருந்த திரைச்சீலையை விலக்கியவாறு, "ம்ம் – எழுந்திருங்கள்!" என்று அவள் கத்தினாள்.

Scanned by CamScanner

ரான் தன் முகத்தில் விழுந்த வெளிச்சத்தைத் தன் கைகளால் மறைத்து கொண்டு, "ஹெர்மயனி, நீ இந்த அறைக்கு வரக்கூடாது," என்று கூறினான்.

"கிறிஸ்துமஸ் தின நல்வாழ்த்துக்கள்!" என்று கூறி ஹெர்மயனி ரானின் பரிசை அவனை நோக்கி எறிந்தாள். "நான் ஒரு மணிநேரம் முன்பாகவே எழுந்து போய், நம்முடைய மாயத் திரவத்தில் மேலும் கொஞ்சம் லேஸ் இறகுகளைப் போட்டுக் கிண்டிவிட்டு வந்துள்ளேன். பலகூட்டுச்சாறு மாயத் திரவம் தயார்!"

ஹாரி டக்கென்று எழுந்து உட்கார்ந்தான். திடீரென்று அவனது தூக்கம் சொல்லாமல் கொள்ளாமல் விடைபெற்றுக் கொண்டது.

"உண்மையாகவா சொல்கிறாய்?"

"ஆமாம்!" என்று ஹெர்மயனி கூறினாள். தான் அந்தப் படுக்கையின் ஓரமாக உட்கார்ந்து கொள்ள வசதியாக, அதிலிருந்த ஸ்கேபர்ஸ் எலியை அவள் வேறோர் இடத்திற்கு நகர்த்தினாள். "நாம் இதைச் செய்யப் போகிறோம் என்றால், அதை நாம் இன்றிரவே செய்து முடித்துவிடுவது நல்லது."

அக்கணத்தில் ஹெட்விக் உள்ளே பறந்து வந்தது. அது தன் அலகில் மிகச் சிறிய பொட்டலம் ஒன்றை வைத்திருந்தது.

அது தன் படுக்கையில் வந்து உட்கார்ந்ததும், "ஹலோ!" என்று ஹாரி சந்தோஷமாகக் கூறினான். "ஹெட்விக், நீ என்னுடன் மீண்டும் பேசப் போகிறாயா?"

அது செல்லமாக அவனது காதைக் கடித்தது. அது கொண்டு வந்திருந்த பரிசைவிட அதன் அச்செய்கை அவனுக்கு மேலான பரிசாகத் தெரிந்தது. அந்தப் பொட்டலம் டர்ஸ்லீ தம்பதியரிடம் இருந்து வந்திருந்தது. பல் குத்துவதற்குப் பயன்படுத்தப்படுகின்ற ஒரு குச்சியை அவர்கள் அவனுக்கு அனுப்பி வைத்திருந்தனர். அதோடு ஒரு குறிப்பும் இருந்தது. கோடை விடுமுறையிலும் அவனால் ஹாக்வார்ட்ஸிலேயே தங்கிக் கொள்ள முடியுமா என்று கண்டுபிடிக்குமாறு அதில் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது.

அவனுக்குக் கிடைத்த மற்றபிற கிறிஸ்துமஸ் பரிசுகள் அதைவிடத் திருப்திகரமானவையாக இருந்தன. ஹாக்ரிட் அவனுக்கு ஒரு பெரிய டின் நிறைய 'டிரெக்கிள் ஃபட்ஜ்' இனிப்புகளை அனுப்பியிருந்தார். நெருப்பில் காட்டி இளக்கி மிருதுவாக்கிய பிறகுதான் அவற்றைச் சாப்பிட வேண்டும் என்று ஹாரி முடிவு செய்தான். ரான் அவனுக்கு 'ஃபிளையிங் வித் த கேனன்ஸ்' என்ற புத்தகத்தைப் பரிசாகக் கொடுத்திருந்தான். ஹாரிக்கு விருப்பமான குவிடிச் அணியைக் குறித்த சுவாரசியமான தகவல்கள் அடங்கிய ஒரு புத்தகம் அது. ஹெர்மயனி அவனுக்காக ஆடம்பரமான கழுகு இறகுப் பேனா ஒன்றை வாங்கியிருந்தாள். அவன் தனக்கு வந்திருந்த கடைசிப் பரிசைப் பிரித்தான். கைகளால் பின்னப்பட்டிருந்த ஒரு புதிய ஸ்வெட்டரும் ஒரு பெரிய 'ப்ளம் கேக்'கும் அதில் இருந்தன. அதை ரானின் அம்மா அனுப்பியிருந்தார். ஆர்தர் வீஸ்லீயின் காரைப் பற்றி நினைத்துக்

Scanned by CamScanner

கொண்டே, ரானின் அம்மா அனுப்பியிருந்த வாழ்த்து அட்டையை அவன் குற்ற உணர்வோடு பார்த்தான். நையப் புடைக்கும் விந்தை மரத்தில் மோதிய பிறகு அந்தக் கார் யாருடைய கண்களிலும் தென்படவே இல்லை. அடுத்துப் பல விதிமுறைகளை மீறத் தானும் ரானும் திட்டமிட்டிருந்ததைப் பற்றியும் அவன் நினைத்துக் கொண்டான்.

* * *

பலகூட்டுச்சாறு மாயத் திரவத்தைக் குடிக்க அஞ்சி நடுங்கியவன் உட்பட, யாராலும் ஹாக்வார்ட்ஸின் கிறிஸ்துமஸ் தின விருந்தை உண்டு மகிழாமல் இருக்க முடியாது.

அப்பேரரங்கு பிரமாதமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. அங்கு பனியால் மூடப்பட்டிருந்த ஒரு டஜன் கிறிஸ்துமஸ் மரங்கள் இருந்தன. தாவர இலைதழைகளால் உருவாக்கப்பட்டிருந்த கொடி அலங்காரங்கள் மேற்கூரையில் குறுக்கும் நெடுக்குமாகச் சென்றன. மாயாஜாலத்தால் உருவாக்கப்பட்டிருந்த பனி மேற்கூரையிலிருந்து பொழிந்து கொண்டிருந்தது. அது ஈரமற்றும் இளஞ்சூடாகவும் இருந்தது. டம்பிள்டோர் தனக்குப் பிடித்தமான சில கிறிஸ்துமஸ் பாடல்களைப் பாடி, எல்லோரையும் தன்னுடன் சேர்ந்து பாட வைத்துக் கொண்டிருந்தார். பால், முட்டை, சீனி மற்றும் ரம் அல்லது பிரான்டி சேர்த்துத் தயாரிக்கப்பட்டிருந்த 'எக்நாக்' பானம் உள்ளே போகப் போக ஹாக்ரிட்டின் அடித் தொண்டையிலிருந்து கிளம்பிய சத்தங்களும் அதிகரிக்கத் துவங்கின. ஃபிரெட், பெர்சியின் மாணவ அணித் தலைவன் முத்திரையில் இருந்த எழுத்துக்களை மாயாஜாலம் மூலம் 'மரமண்டை' என்று மாற்றியிருந்ததைப் பெர்சி கவனித்திருக்கவில்லை. அதனால், ஏன் எல்லோரும் தன்னைப் பார்த்துச் சிரித்தனர் என்று பெர்சி அவர்களிடமே கேட்டுக் கொண்டிருந்தான். ஸ்லிதரின் பெஞ்சில் இருந்த மால்ஃபாய், உரத்தக் குரலில், தனது புதிய ஸ்வெட்டரைப் பற்றிக் கேவலமாகப் பேசியதை ஹாரி சிறிதுகூடப் பொருட்படுத்தவில்லை. அதிர்ஷ்டம் தங்கள் பக்கம் இருந்தால், இன்னும் ஒருசில மணிநேரத்தில் மால்ஃபாயைத் துரதிர்ஷ்டம் சூழ்ந்திருக்கும்; அவன் தன் கர்மவினைப் பயனை அனுபவித்துக் கொண்டிருப்பான் என்று ஹாரி நினைத்தான்.

ஹாரியும் ரானும் விருந்தின் மூன்றாவது சுற்றை முழுவதுமாக முடிப்பதற்கு முன்பாகவே, அன்றைய இரவு தாங்கள் மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தவற்றை முடிவு செய்வதற்காக, ஹெர்மயனி, அவர்களை அந்தப் பேரரங்கிலிருந்து வெளியே அழைத்துச் சென்றாள்.

"நமக்கு இப்போது தேவையானது ஒன்றே ஒன்றுதான். நாம் யாராக மாறவிருக்கிறோமோ, அவர்களுடைய உடலிலிருந்து ஏதாவது கொஞ்சம் நமக்கு வேண்டும்," என்று ஹெர்மயனி சர்வ சாதாரணமாகக் கூறினாள். அவள் அதைக் கூறிய விதம், ஒரு பேரங்காடிக்குச் சென்று சோப்புத் தூள் வாங்கி வருமாறு அவர்களைக் கேட்டுக் கொண்டதைப்போல இருந்தது. "கிராப் மற்றும்

Scanned by CamScanner

காயலின் உடல்களிலிருந்து நமக்கு ஏதேனும் கிடைத்தால் மிகவும் நல்லது. ஏனெனில் அவர்கள் மால்ஃபாயின் நெருங்கிய நண்பர்களாக இருப்பதால், அவன் அவர்களிடம் எதை வேண்டுமானாலும் கூறுவான். அதே சமயம், நாம் மால்ஃபாயைக் குறுக்கு விசாரணை செய்து கொண்டிருக்கும்போது, உண்மையான கிராபும் காயலும் அங்கு வந்துவிடாமல் பார்த்துக் கொள்ளவும் வேண்டும்."

வாயடைத்துப் போய் நின்று கொண்டிருந்த ஹாரியையும் ரானையும் கண்டு கொள்ளாமல் அவள் மேலும் தொடர்ந்து, "நான் இது குறித்து எல்லாவற்றையும் முன்பே நன்றாக யோசித்துவிட்டேன்," என்று கூறினாள். அவள் தன்முன் இரண்டு பெரிய சாக்லேட் கேக்குகளை உயர்த்திக் காட்டினாள். "தூங்க வைக்கும் மாயத் திரவத்தை நான் இவற்றில் கலந்திருக்கிறேன். இவற்றைக் கிராப் மற்றும் காயலின் கண்களில் படும்படிப் பார்த்துக் கொள்ள வேண்டியது உங்கள் பொறுப்பு. சாப்பாட்டைப் பொறுத்தவரை அவர்கள் எவ்வளவு பேராசை பிடித்தவர்கள் என்பது நமக்குத் தெரிந்ததுதானே! அதனால் அவர்கள் இந்தக் கேக்குகளைக் கண்டிப்பாக தின்றுவிடுவார்கள். அவர்கள் நன்றாகத் தூங்கியதும் அவர்களுடைய தலைகளிலிருந்து ஒருசில முடிகளைப் பிடுங்கி எடுத்துக் கொண்டு, பிறகு, துடப்பங்களை வைப்பதற்கான அறையில் அவர்களை மறைத்து வைத்துவிடுங்கள்."

தாங்கள் கேட்டதை நம்ப முடியாமல் ஹாரியும் ரானும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தனர்.

"ஹெர்மயனி, இது நடக்கிற காரியமா –"

"நாம் ஏடாகூடமாக மாட்டிக் கொள்ளப் போகிறோம் –"

ஆனால் ஹெர்மயனியின் கண்களில் கடும் உறுதி பளிச்சிட்டது. பேராசிரியர் மெக்கானகல்லின் கண்களில் சமயங்களில் தென்பட்ட உறுதியின் சாயல் அதில் அப்படியே பிரதிபலித்தது.

"கிராப் மற்றும் காயலின் தலைமுடி இல்லாவிட்டால் இந்த மாயத் திரவத்தால் எந்தப் பிரயோஜனமும் இல்லை," என்று ஹெர்மயனி திட்டவட்டமாகக் கூறினாள். "மால்ஃபாயைக் குறுக்கு விசாரணை செய்ய உங்களுக்கு ஆசை இருக்கிறதா, இல்லையா?"

"சரி, சரி," என்று ஹாரி கூறினான். "அப்புறம், நீ என்ன செய்யப் போகிறாய்? நீ யாருடைய தலைமுடியைப் பிடுங்கப் போகிறாய்?"

"எனக்குத் தேவையானது எனக்கு ஏற்கனவே கிடைத்துவிட்டது," என்று ஹெர்மயனி உற்சாகத்துடன் கூறினாள். அவள் தன்னுடைய பாக்கெட்டிலிருந்து ஒரு பாட்டிலை வெளியே எடுத்தாள். அதனுள் ஒரே ஒரு முடி இருந்தது. "ஒற்றைக்கு ஒற்றைச் சண்டையை நான் யாரோடு போட்டேன் என்பது உங்களுக்கு நினைவிருக்கிறதா? மில்லிசென்ட்டோடு! அவள் என் கழுத்தை நெறிக்க முயன்றபோது இதை என் அங்கியில் விட்டுவிட்டாள். ஆனால் அவள் கிறிஸ்துமஸ் விடுமுறைக்காக வீட்டிற்குப் போய்விட்டாள் – அதனால் ஸ்லிதரின்

Scanned by CamScanner

அணியினரிடம் 'நான்' திரும்பி வந்துவிட்டதாகக் கூற வேண்டும், அவ்வளவுதான்."

ஹெர்மயனி தடபுடலாக மீண்டும் அந்த மாயத் திரவத்தைச் சரிபார்க்கப் போனதும், ரான் ஹாரியை நோக்கித் திரும்பினான். அவனது முகம் இருளடைந்து இருந்தது.

"ஹாரி, ஏகப்பட்ட விஷயங்கள் தவறாகப் போவதற்கு வாய்ப்பிருக்கும் ஒரு திட்டத்தை நீ எப்போதாவது கேள்விப்பட்டிருக்கிறாயா?"

* * *

ஹாரிக்கும் ரானுக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தும் வகையில், திட்டத்தின் முதற்கட்டம், ஹெர்மயனி கூறியிருந்தபடியே இலகுவாக முடிந்தது. கிறிஸ்துமஸ் தேநீர் விருந்திற்குப் பிறகு அவர்கள் இருவரும் கிராபும் காயலும் வெளியே வருவதற்காக ஆளரவமற்றிருந்த வரவேற்பறையில் பதுங்கியிருந்தனர். அப்போது கிராபும் காயலும் ஸ்லிதரின் பெஞ்சில் தனியாக அமர்ந்து கொண்டு, நான்காவது சுற்று டிரிஃபிள் கேக்கைத் தங்கள் வாய்களில் திணித்துக் கொண்டிருந்தனர். ஹாரி அந்தச் சாக்லேட் கேக்குகளை மாடிப்படிக் கைப்பிடிகளின் முனையில் வைத்தான். கிராபும் காயலும் பேரரங்கைவிட்டு வெளியே வந்து கொண்டிருந்ததைப் பார்த்ததும், ஹாரியும் ரானும் முன்வாசல் கதவருகே இருந்த கவசச் சிலையின் பின்னால் வேகமாகச் சென்று மறைந்து கொண்டனர்.

கிராப் தன் கண்கள் பளபளக்க, படிக்கட்டில் இருந்த கேக்குகளை காயலிடம் சுட்டிக்காட்டிவிட்டு, அவற்றைப் பாய்ந்து எடுத்துக் கொண்டிருந்தபோது, "ஒருவனால் எவ்வளவுதான் உள்ளே தள்ள முடியும்?" என்று ரான் களிப்புடன் கிசுகிசுத்தான். கிராபும் காயலும் பல்லிளித்துக் கொண்டே, தங்களுடைய பெரிய வாய்களில் அந்தக் கேக்குளை அப்படியே திணித்துக் கொண்டனர். அவர்கள் இருவரும் வெற்றிப் புன்னகையோடு, பேராசையுடன் அதைத் தின்றனர். பின் திடீரென்று அவர்களது கால்மூட்டுக்கள் மடிந்தன. அவர்கள் தரையில் பின்னோக்கிச் சாய்ந்தனர்.

அந்த அறையிலிருந்த அலமாரியினுள் அவர்களை அடைப்பதுதான் இருப்பதிலேயே கடினமான காரியமாக இருந்தது. அவர்கள் இருவரையும் துடப்பங்களுக்கும் வாளிகளுக்கும் இடையில் பாதுகாப்பாகத் திணித்து வைத்தப் பிறகு, ஹாரி, காயலின் முன்னந்தலையில் இருந்து ஓரிரு முடிகளைப் பிடுங்கினான். ரான் கிராபின் முடிகள் பலவற்றைப் பிடுங்கினான். அவர்கள் கிராப் மற்றும் காயலின் காலணிகளையும் திருடினர். ஏனெனில் அவர்களுடைய காலணிகள் கிராப் மற்றும் காயலின் கால்களின் அளவைவிட மிகச் சிறியதாக இருந்தன. தாங்கள் அப்போது செய்திருந்த காரியம் குறித்துப் பெரும் ஆச்சரியமடைந்திருந்த அவர்கள் இருவரும் முனகல் மர்ட்டிலின் குளியலறைக்கு ஓடினர்.

Scanned by CamScanner

உள்ளே இருந்த தடுப்பறையில் ஹெர்மயனி கிளறிவிட்டுக் கொண்டிருந்த கொப்பரையில் இருந்து வந்த புகை அங்கேயே சுற்றிக் கொண்டிருந்ததால், அவர்களால் எதையுமே பார்க்க முடியவில்லை. அவர்கள் தங்களுடைய அங்கிகளைத் தங்கள் தலைகளுக்கு மேலாகப் போட்டுக் கொண்டு, அந்தத் தடுப்பறையின் கதவை மென்மையாகத் தட்டினர்.

"ஹெர்மயனி!"

தாழ்ப்பாள் விலக்கப்பட்டச் சத்தம் கேட்டது. பின் ஹெர்மயனி வெளிப்பட்டாள். அவளது முகம் பளபளப்பாகவும் எதிர்பார்ப்போடும் இருந்தது. அவளுக்குப் பின்னால் அடர்த்தியாக நுரைத்துக் கொதித்துக் கொண்டிருந்த மாயத் திரவத்திலிருந்து 'கிளக்' 'கிளக்' என்ற ஒரு சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. மூன்று டம்ளர்கள் அங்கிருந்த தொட்டியின் விளிம்பில் தயாராக இருந்தன.

ஹெர்மயனி மூச்சு வாங்க, "அது உங்களுக்குக் கிடைத்ததா?" என்று கேட்டாள்.

ஹாரி காயலின் முடியை அவளிடம் காட்டினான்.

ஹெர்மயனி தன் கையிலிருந்த ஒரு சிறு மூட்டையைச் சுட்டிக்காட்டியவாறு, "சலவை அறையில் இருந்து நான் இந்த அங்கிகளைத் திருடி வந்துள்ளேன்," என்று கூறினாள். "நீங்கள் கிராபாகவும் காயலாகவும் மாறிய பிறகு, உங்களுக்குப் பெரிய அங்கிகள் தேவைப்படுமே!"

அவர்கள் மூவரும் அந்தக் கொப்பரையினுள் உற்றுப் பார்த்தனர். அருகே பார்த்தபோது, அந்த மாயத் திரவம், மெதுவாக நுரைவிட்டுக் கொண்டிருந்த, அடர்த்தியான, இருண்ட சேறுபோல இருந்தது.

'அதிவீரிய மாயத் திரவம்' என்ற புத்தகத்திலிருந்த பக்கத்தை ஹெர்மயனி மறுபடியும் படித்துவிட்டு, "நான் எல்லாவற்றையும் சரியாகச் செய்திருக்கிறேன் என்றுதான் தோன்றுகிறது," என்று கூறினாள். "இது எப்படி இருக்க வேண்டும் என்று அப்புத்தகம் கூறுகிறதோ, அப்படியே இருக்கிறது . . . நாம் இதைக் குடித்து முடித்தப் பிறகு, சரியாக ஒரு மணிநேரத்தில் நாம் மீண்டும் நம்முடைய பழைய உருவத்தை அடைந்துவிடுவோம்."

"அடுத்தது என்ன?" என்று ரான் கேட்டான்.

"நாம் இத்திரவத்தை இந்த மூன்று டம்ளர்களிலும் ஊற்றி, நம்மிடம் இருக்கும் தலைமுடிகளை இவற்றில் போட வேண்டும்."

ஹெர்மயனி அந்த மாயத் திரவத்தைக் கரண்டியில் எடுத்து அந்த மூன்று டம்ளர்களிலும் ஊற்றினாள். பின் அவள் நடுங்கிய கைகளுடன், பாட்டிலில் இருந்த மில்லிசென்ட்டின் முடியை எடுத்து முதல் டம்ளரில் போட்டாள்.

அதிலிருந்த மாயத் திரவம், கொதித்துக் கொண்டிருக்கும் கெட்டிலைப்போல 'ஸ்ஸ்ஸ்' என்ற சத்தத்துடன் சீறியது. அது நுரைவிட்டுப் பொங்கியது. ஒரு நொடிக்குப் பிறகு, வயிற்றைப் பிரட்டும் ஒரு மஞ்சள் நிறத்திற்கு அது மாறியது.

Scanned by CamScanner

ரான் அதை அருவருப்புடன் பார்த்துக் கொண்டே "உவ்வே! கன்றாவி! மில்லிசென்ட்டின் சாறு!" என்று கூறினான். "அது குடலைப் புரட்டும் என்பதில் சந்தேகமே இல்லை."

"சரி, அடுத்து உங்களுடையதைப் போடுங்கள்," என்று ஹெர்மயனி கூறினாள்.

ஹாரி காயலின் முடியை நடுவில் இருந்த டம்ளரில் போட்டான். ரான் கிராபின் முடியைக் கடைசியில் இருந்த டம்ளரில் போட்டான். அந்த இரண்டு டம்ளர்களும் 'ஸ்ஸ்ஸ்' என்று சத்தம் போட்டன, நுரைத்துக் கொண்டு வந்தன. காயலினுடையது காக்கி நிறத்திற்கும், கிராபினுடையது இருண்ட பழுப்பு நிறத்திற்கும் மாறின.

ஹெர்மயனியும் ரானும் தங்களுடைய டம்ளர்களை எடுக்க முயன்றபோது, ஹாரி, "ஒரு நிமிடம்," என்று கூறினான். "நாம் எல்லோரும் இதே தடுப்பறையில் இருந்து கொண்டு குடிக்காமல் இருப்பது நல்லது. நாம் காயலாகவும் கிராபாகவும் மாறிய பிறகு இந்த இடம் நமக்குப் போதாது. மில்லிசென்ட்டைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்."

ரான் அந்தத் தடுப்பறையின் கதவைத் திறந்தவாறே, "பரவாயில்லையே, உனக்குக்கூட இப்படி உதிக்கிறதே!" என்று கூறினான். "நாம் வெவ்வேறு தடுப்பறைகளுக்குச் சென்றுவிடலாம்."

ஹாரி தன்னுடயை மாயத் திரவம் ஒரு துளிகூடக் கீழே சிந்தாத வண்ணம், அலுங்காமல் குலுங்காமல், நடுவிலிருந்த தடுப்பறைக்குள் நுழைந்தான்.

"நீங்கள் தயாரா?" என்று அவன் கேட்டான்.

"தயார்," என்று ரானும் ஹெர்மயனியும் கூறினர்.

"ஒன்று . . . இரண்டு . . . மூன்று . . ."

ஹாரி தன் மூக்கைப் பிடித்துக் கொண்டு இரண்டு மடக்கில் அதைக் குடித்து முடித்தான். அது அதிகமாக வேக வைக்கப்பட்ட முட்டைக்கோஸ்போல நாற்றமடித்தது.

உடனே, அவன் ஏதோ உயிருடன் இருந்த பாம்புகளை விழுங்கிவிட்டிருந்ததுபோல அவனது உடலின் உட்பகுதிகள் முறுக்கிக் கொள்ளத் துவங்கின. அவன் சுருண்டு கீழே விழுந்தான், தான் வாந்தி எடுக்கப் போகிறோம் என்று பயந்தான். பின் எரிச்சல்மிக்க ஓர் உணர்வு அவனது வயிற்றிலிருந்து அவனது கைவிரல்கள் மற்றும் கால்விரல்களின் நுனிகள்வரை பரவியது. அவன் தன் கால்களையும் கைகளையும் தரையில் ஊன்றிக் கொண்டிருந்தான். அடுத்துத் தனது உடல் முழுவதும் உருகியது போன்ற ஓர் உணர்வு அவனுக்கு ஏற்பட்டது. அவனது தோல் முழுவதும் சூடான மெழுகுபோலக் குமிழ்விட்டது. அவனது கண் முன்னாலேயே அவனுடைய கைகள் வளர்ந்தன, விரல்கள் தடிமனாயின, நகங்கள் அகலமாயின, கணுக்கள் தெறித்தன, தோள்பட்டை விரிவடைந்தது, தலைமுடியானது புருவம் வரை வளர்ந்தது, நெஞ்சு விம்மிப் புடைத்தது, அவனது அங்கி படாரென்று தெறித்தது. அவனது கால்கள் மிகப் பெரிதாக

Scanned by CamScanner

வளர்ந்திருந்ததால், நான்கு அளவு சிறியதாக இருந்த அவனது காலணிகளுக்குள் பிதுங்கிக் கொண்டு வலியேற்படுத்தின.

அது எப்படித் திடீரென்று ஆரம்பித்திருந்ததோ அதுபோலவே டக்கென்று நின்றும்விட்டது. ஹாரி அந்தக் குளிரான கருங்கல் தரையில் மூஞ்சிக் குப்புற விழுந்து கிடந்தான். கடைசித் தடுப்பு அறையில் மர்ட்டில் முனகிக் கொண்டிருந்தது அவனுக்குக் கேட்டது. மிகவும் சிரமப்பட்டு அவன் தன் காலணிகளை உதறிவிட்டு எழுந்து நின்றான். காயலாக இருந்தால் இப்படியா உணர்வோம் என்று அவன் எண்ணிக் கொண்டான். நடுங்கிக் கொண்டிருந்த தன் கைகளைக் கொண்டு, தன் மூட்டுக்கள்வரை மட்டுமே வந்திருந்த தன் பழைய அங்கியைக் கழற்றிவிட்டுப் புதிய அங்கியை அவன் அணிந்து கொண்டான். பிறகு, காயலின் படகுகள் போன்ற காலணிகளைத் தன் கால்களில் போட்டுக் கொண்டான். தன் நெற்றியில் படிந்திருந்த முடியை ஒதுக்கித் தள்ள அவன் முனைந்தபோது, அங்கு குட்டையாகவும் விறைப்பாகவும் இருந்த முடிதான் அவனது கைகளுக்குத் தட்டுப்பட்டது. பின் தனது மூக்குக்கண்ணாடி தன் பார்வையை மறைத்துக் கொண்டிருந்ததை அவன் கண்டான். ஏனெனில் காயலுக்கு மூக்குக்கண்ணாடி அணிய வேண்டிய தேவை இல்லாமல் இருந்தது. எனவே ஹாரி தனது மூக்குக்கண்ணாடியைக் கழற்றினான். பிறகு, "நீங்கள் இரண்டு பேரும் நன்றாக இருக்கிறீர்களா?" என்று கேட்டான். காயலின் கர்ண கடூரமான குரலில் அவன் கூறிய வார்த்தைகள் அவன் வாயிலிருந்து வெளிப்பட்டன.

அவனுக்கு வலப்பக்கம் இருந்த அறையிலிருந்து, "ஆமாம்," என்று கிராபின் அடித் தொண்டைக் குரல் கூறியது.

ஹாரி தான் இருந்த தடுப்பறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்து, உடைந்திருந்த கண்ணாடியின் முன் நின்றான். ஒளியற்று இருந்த தன் கண்களால் காயல் அவனை அக்கண்ணாடியின் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தான். ஹாரி தன் தலையைச் சொறிந்தான். காயலும் அவ்வாறே செய்தான்.

ரான் இருந்த அறைக் கதவு திறந்தது. அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் உற்றுப் பார்த்தனர். ரான் வெளுத்துப் போயும் அதிர்ச்சியுடனும் காணப்பட்டான். மற்றபடி, கிராபின் கோணல் தலைமுடியுடனும் கொரில்லாக் கைகளுடனும் இருந்த அவனை இனம் பிரித்துப் பார்க்க முடியவில்லை.

"இதை என்னால் நம்பவே முடியவில்லை," என்று கூறிய ரான், அந்த அறையிலிருந்த கண்ணாடி முன்பு போய், தட்டையாக இருந்த கிராபின் மூக்கை நோண்டினான். "நம்பவே முடியவில்லை!"

காயலின் மணிக்கட்டை இறுக்கிக் கொண்டிருந்த தன்னுடைய கைக்கடிகாரத்தைத் தளர்த்தியபடி, ஹாரி, "நாம் விரைவாக இங்கிருந்து கிளம்புவது நல்லது," என்று கூறினான். "ஸ்லிதரின் பொது அறை எங்கே இருக்கிறது என்பதை நாம் இன்னும் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது. நாம் பின்தொடர்ந்து செல்வதற்கு நமக்கு யாராவது கிடைத்தால் நல்லது . . ."

Scanned by CamScanner

ஹாரியையே பார்த்துக் கொண்டிருந்த ரான், "காயல் எப்படி யோசிப்பான் என்று சிந்திப்பது எவ்வளவு வினோதமாக இருக்கிறது தெரியுமா?" என்று கேட்டான். அவன் ஹெர்மயனியின் கதவை ஓங்கித் தட்டியவாறு, "சீக்கிரம் வா! நாம் போக வேண்டும் . . ." என்றான்.

"நான் உங்களுடன் வர முடியாது என்று நினைக்கிறேன். நீங்கள் தனியாகப் போய்க் கொள்ளுங்கள்," என்று உச்சஸ்தாயியில் ஒரு குரல் கேட்டது.

"ஹெர்மயனி, மில்லிசென்ட் எவ்வளவு அவலட்சணமானவள் என்பது எங்களுக்கும் தெரியும். அது நீ என்று யாருக்கும் தெரியப் போவதில்லை."

"முடியாது – உண்மையிலேயே என்னால் வர முடியாது. நீங்கள் இருவரும் உடனே புறப்படுங்கள். நீங்கள் உங்கள் நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிறீர்கள்."

ஹாரி தன் கண்களை உருட்டினான். ரானுக்கு ஆச்சரியத்தை அடக்கவே முடியவில்லை.

"இது அச்சசலாக காயலின் முழிபோலவே இருக்கிறது," என்று ரான் கூறினான். "ஆசிரியர்கள் அவனிடம் கேள்விகள் கேட்கும்போதெல்லாம் அவன் இப்படித்தான் முழிப்பான்."

"ஹெர்மயனி, உனக்கு என்ன ஆயிற்று?" என்று ஹாரி அவளது தடுப்பறைக் கதவுக்கு வெளியே இருந்து கேட்டான்.

"எனக்கு ஒன்றுமில்லை – நான் நன்றாகத்தான் இருக்கிறேன் – நீங்கள் போய் வாருங்கள் –"

ஹாரி தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தான். விலை மதிப்பிட முடியாத அறுபது நிமிடங்களில் ஏற்கனவே ஐந்து நிமிடங்கள் காலியாகியிருந்தன.

"அப்படியானால் நாங்கள் உன்னைப் பிறகு சந்திக்கிறோம்!" என்று அவன் கூறினான்.

ஹாரியும் ரானும் அந்தக் குளியலறையின் வெளியே யாரும் இருந்தார்களா என்று கவனமாகப் பார்த்துவிட்டுக் கதவைத் திறந்து வெளியே வந்து அங்கிருந்து நழுவினர்.

"உன்னுடைய கைகளை அப்படி ஆட்டாதே," என்று ஹாரி ரானிடம் முணுமுணுத்தான்.

"என்ன?"

"கிராப் அவற்றைக் கொஞ்சம் விறைப்பாக வைத்திருப்பான் . . ."

"இது எப்படி இருக்கிறது?"

"ம்ம் – இப்போது பரவாயில்லை."

அவர்கள் பளிங்குப் படிக்கட்டின் வழியாகக் கீழிறங்கினர். ஸ்லிதரின் அணியைச் சேர்ந்த யாராவது ஒருவர் இப்போது அவர்களுக்குத் தேவை. கிடைத்தால் அவர்கள் அவனைப் பின்தொடர்ந்து போய்விடலாம். ஆனால் யாருமே அவர்கள் பார்வைக்குத் தென்படவில்லை.

Scanned by CamScanner

"என்ன செய்யலாம்?" என்று ஹாரி கேட்டான்.

ரான், நிலவறைக்குச் செல்வதற்கான வாயிலைச் சுட்டிக்காட்டி, "ஸ்லிதரின் அணியினர் காலை உணவிற்கு எப்போதும் அந்த வழியாகத்தான் வருவார்கள்," என்று கூறினான். அவன் அதைச் சொல்லி முடிக்கவும் அந்த வாயிலில் இருந்து ஒரு மாணவி வெளிப்பட்டாள். அவளுக்கு நீண்ட சுருண்ட கூந்தல் இருந்தது.

அவளை நோக்கி விரைந்த ரான், "மன்னிக்கவும்," என்றான். "நம்முடைய பொது அறைக்குச் செல்லும் வழி எங்களுக்கு மறந்துவிட்டது."

"என்ன சொன்னாய்?" என்று அவள் விறைப்பாகக் கேட்டாள். "நம்முடைய பொது அறையா? நான் ரேவன்கிளா அணியைச் சேர்ந்தவள்."

அவள் அவர்களைச் சந்தேகக் கண்ணோடு பார்த்தபடி அங்கிருந்து அகன்றாள்.

ஹாரியும் ரானும் இருளில் அந்தப் படிக்கட்டுகளில் வேகவேகமாகக் கீழிறங்கினர். அவர்களுடைய காலடி ஓசை பயங்கரமாக எதிரொலித்தது. இது அவர்கள் எதிர்பார்த்திருந்ததுபோல அவ்வளவு சுலபமாக இருக்காதுபோலத் தோன்றியது.

குறுக்கும் நெடுக்குமாகச் சென்ற அவ்வழி வெறிச்சோடிக் கிடந்தது. இன்னும் எவ்வளவு நேரம் இருந்தது என்பதைத் தெரிந்து கொள்வதற்காக, அவர்கள் அடிக்கடி மணி பார்த்துக் கொண்டே, பள்ளிக்குக் கீழே மேலும் மேலும் ஆழமாகச் சென்று கொண்டிருந்தனர். கால் மணிநேரம் கழித்து, அவர்களின் பதற்றம் உச்சகட்டத்தை அடைவதற்குச் சிறிது முன்னால், அவர்களுக்கு முன்பாக ஏதோ ஓர் அசைவு தெரிந்தது.

"அப்பாடா!" என்று ரான் பரவசமாகக் கூறினான். "அவர்களில் ஒருவன்!"

அந்த உருவம் பக்கவாட்டு அறை ஒன்றிலிருந்து வெளியே வந்தது. அவர்கள் அதை நெருங்கியதும், அவர்களது முகம் தொங்கிப் போனது. அது ஸ்லிதரின் அணியைச் சேர்ந்த ஒருவன் அல்ல. அது பெர்சி.

ரான் ஆச்சரியத்துடன், "நீ இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டான்.

பெர்சி தான் அவமதிக்கப்பட்டதுபோலக் காணப்பட்டான்.

"அது உனக்குச் சம்பந்தம் இல்லாத விஷயம்! நீ கிராப்தானே?" என்று அவன் இறுகிய முகத்துடன் கேட்டான்.

"ம்ம் – ஆ – ஆமாம்," என்று ரான் கூறினான்.

"அப்படியானால் உங்களுடைய பொது அறைக்கு நடையைக் கட்டுங்கள்," என்று பெர்சி கண்டிப்பான குரலில் கூறினான். "இப்போது பள்ளி இருக்கும் நிலையில் இருண்ட தாழ்வாரங்களில் இப்படி அலைந்து கொண்டிருப்பது பாதுகாப்பானது அல்ல."

"நீ மட்டும் எப்படி?" என்று ரான் கேட்டான்.

Scanned by CamScanner

"நானா?" என்று கேட்டப் பெர்சி, தன்னை நன்றாக நிமிர்த்திக் கொண்டு, "நான் ஒரு மாணவ அணித் தலைவன். என்னை எதுவும் தாக்காது," என்று கூறினான்.

ஹாரிக்கும் ரானுக்கும் பின்னால் திடீரென்று ஒரு குரல் எதிரொலித்தது. மால்ஃபாய் அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தான். அவனைப் பார்த்ததில் ஹாரி தன் வாழ்க்கையில் முதன்முறையாக மகிழ்ச்சியடைந்தான்.

அவர்களைப் பார்த்த மால்ஃபாய், "அட, நீங்கள் இங்குதான் இருக்கிறீர்களா?" என்று இழுத்து இழுத்துப் பேசினான். "ஆமாம், நீங்கள் இரண்டு பேரும் இவ்வளவு நேரமும் பன்றிகள் மாதிரிப் பேரரங்கில் தின்று கொண்டிருந்தீர்களா? நான் உங்களைத் தேடிக் கொண்டிருந்தேன். வாருங்கள், வேடிக்கையான ஒன்றை நான் உங்களிடம் காட்டுகிறேன்."

மால்ஃபாய் பெர்சியை நக்கலாக ஓரக்கண்ணால் பார்த்தான். "பெர்சி, நீ இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று அவன் பரிகாசம் செய்தான்.

பெர்சிக்கு மூக்கிற்குமேல் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. "பள்ளியின் மாணவ அணித் தலைவனுக்கு நீ இன்னும் கொஞ்சம் மரியாதை கொடுக்கக் கற்றுக் கொள்வது நல்லது," என்று பெர்சி வெடித்தான். "உன்னுடைய நடவடிக்கை எனக்குப் பிடிக்கவில்லை."

மால்ஃபாய் அவனை இகழ்ச்சியாகப் பார்த்துவிட்டு, ஹாரியையும் ரானையும் தன்னுடன் வரும்படி சைகை காட்டினான். ஹாரி, பெர்சியிடம் மன்னிப்புக் கேட்கும் தொனியில் எதையோ சொல்ல வாயெடுத்தான். ஆனால் நல்லவேளையாகக் கடைசி நிமிடத்தில் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான். அவனும் ரானும் வேகவேகமாக மால்ஃபாயைப் பின்தொடர்ந்து சென்றனர். அவர்கள் அடுத்தப் பகுதியில் திரும்பியதும், மால்ஃபாய், "அது பீட்டர்," என்று கூறினான்.

"பெர்சி," என்று ரான் தன்னையறியாமலேயே அவனைத் திருத்தினான்.

"ஏதோ ஓர் இழவு!" என்று மால்ஃபாய் கூறினான். "அவன் கொஞ்ச காலமாக வேண்டாத விவகாரங்களில் மூக்கை நுழைத்துக் கொண்டு திரிகிறான். அவன் எதற்காக இப்படிக் குட்டி போட்டப் பூனை மாதிரிச் சுற்றிக் கொண்டு திரிகிறான் என்று எனக்குத் தெரியும். அவன் ஸ்லிதரினின் வாரிசைத் தனியொருவனாகவே பிடிக்கத் திட்டமிட்டுள்ளான்."

ஏளனம் தொக்கி நின்ற சிரிப்பொன்றை அவன் உதிர்த்தான். ஹாரியும் ரானும் பரவசமாக ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

மால்ஃபாய் ஈரப்பதத்துடன் இருந்த ஒரு வெற்றுச் சுவரின் அருகே வந்து நின்றான்.

Scanned by CamScanner

"நம்முடைய பொது அறைக்கான புதிய ரகசிய வார்த்தை எது?" என்று அவன் ஹாரியிடம் கேட்டான்.

"ம்ம் –" என்று ஹாரி இழுத்தான்.

மால்ஃபாய் அவன் இழுத்ததைக் காதில் போட்டுக் கொள்ளாமல், "ஓ, ஆமாம் – தூய ரத்தம்!" என்று கூறினான். அந்தச் சுவரில் மறைந்திருந்த ஒரு கதவு விலகித் திறந்தது. மால்ஃபாய் உள்ளே சென்றான். ஹாரியும் ரானும் அவனைப் பின்தொடர்ந்தனர்.

ஸ்லிதரினின் பொது அறை ஒரு நீண்ட, உயரம் குறைந்த நிலவறையாக இருந்தது. அதன் சுவர்களும் மேற்கூரையும் கரடுமுரடான கற்களால் ஆனவையாக இருந்தன. அதன் மேற்கூரையிலிருந்து சங்கிலிகளில் விளக்குகள் தொங்கிக் கொண்டிருந்தன. அவர்களுக்கு நேராக இருந்த கணப்படுப்பில் நெருப்பு அமர்க்களமாக எரிந்து கொண்டிருந்தது. அந்தக் கணப்படுப்பின் மேலே இருந்த மேடை மிகுந்த வேலைப்பாடுகளுடன் அழகாகச் செதுக்கப்பட்டிருந்தது. நன்றாக வடிவமைக்கப்பட்டிருந்த நாற்காலிகளில் ஒருசில ஸ்லிதரின் மாணவர்கள் நெருப்பிற்கு அருகே உட்கார்ந்திருந்தனர்.

மால்ஃபாய், நெருப்பிலிருந்து தள்ளி இருந்த ஒரு ஜோடி நாற்காலிகளைச் சுட்டிக்காட்டி, "இங்கே காத்திருங்கள்!" என்று கூறினான். "நான் போய் அதை எடுத்து வருகிறேன் – என் அப்பா அதை எனக்காக இப்போதுதான் அனுப்பி வைத்துள்ளார் –"

மால்ஃபாய் தங்களிடம் எதைக் கொண்டு வந்து காட்டப் போகிறானோ என்று வியந்து கொண்டு ஹாரியும் ரானும் உட்கார்ந்தனர். தாங்கள் இயல்பாக இருப்பதாகக் காட்டிக் கொள்ளத் தங்களால் முடிந்த அளவுக்கு அவர்கள் முயன்றனர்.

மால்ஃபாய் ஒரே நிமிடத்தில் திரும்பி வந்தான். கத்தரிக்கப்பட்டச் செய்தித்தாள் போன்ற ஏதோ ஒன்று அவனது கையில் இருந்தது. அதை அவன் ரானின் மூக்கிற்கு நேராக நீட்டினான்.

"இது கண்டிப்பாக உங்களைச் சிரிக்க வைக்கும்," என்று அவன் கூறினான்.

அதிர்ச்சியால் ரானின் கண்கள் அகலமாக விரிந்ததை ஹாரி கண்டான். ரான் அதை வேகமாகப் படித்துவிட்டு, வலுக்கட்டாயமாக ஒரு சிரிப்பை உதிர்த்துவிட்டு, ஹாரியிடம் கொடுத்தான்.

மந்திரஜால அமைச்சகத்தில் விசாரணை

மகுள் கலைப்பொருட்கள் துஷ்பிரயோக அலுவலகத்தின் தலைவரான ஆர்தர் வீஸ்லி, மகுள்களின் கார் ஒன்றை மந்திரக் காராக மாற்றியிருந்ததற்காக அவருக்கு இன்று ஐம்பது கேல்லியன்கள் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஒருசில மாதங்களுக்கு முன்பு, அந்த மந்திரக் கார் மோதி விழுந்த ஹாக்வார்ட்ஸ் மந்திர தந்திர மாயாஜாலப் பள்ளியின் நிர்வாகக் குழு

Scanned by CamScanner

உறுப்பினர்களில் ஒருவரான லூசியஸ் மால்ஃபாய், ஆர்தர் வீஸ்லி தன் பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார். "ஆர்தர் மந்திரஜால அமைச்சகத்திற்குக் களங்கத்தை ஏற்படுத்திவிட்டார்," என்று லூசியஸ் மால்ஃபாய் எமது நிருபரிடம் கூறினார். "கண்டிப்பாக நம்முடைய சட்டதிட்டங்களை வகுக்க அவர் தகுதியானவர் அல்ல. நகைப்புக்கு இடமான அவரது 'மகுள்கள் பாதுகாப்புச் சட்டம்' உடனடியாக விலக்கிக் கொள்ளப்பட வேண்டும்."

இது குறித்துக் கருத்துத் தெரிவிக்க ஆர்தர் வீஸ்லி கிடைக்கவில்லை. ஆனால் அவரது மனைவி, எமது நிருபர்களிடம், அவர்கள் உடனே அந்த இடத்தைக் காலி செய்ய வேண்டும் என்றும், இல்லையெனில் தன்னுடைய தோட்டப் பேய்களை அவர்கள்மீது ஏவிவிடப் போவதாகவும் அச்சுறுத்தினார்.

ஹாரி அதை மால்ஃபாயிடம் திருப்பிக் கொடுத்ததும், அவன் பொறுமையிழந்து, "இது வேடிக்கையாக இருப்பதாக நீங்கள் நினைக்கவில்லையா?" என்று கேட்டான்.

ஹாரி, "ஹா, ஹா," என்று பலவீனமாக நகைத்தான்.

"ஆர்தர் வீஸ்லீ மகுள்களை அவ்வளவு தூரம் விரும்புகிறார் என்றால், அவர் தன்னுடைய மந்திரக்கோலை இரண்டாக உடைத்துப் போட்டுவிட்டு, மகுள்களோடு போய்ச் சேர்ந்து கொள்ள வேண்டும்," என்று மால்ஃபாய் நக்கலாகக் கூறினான். "அவர்கள் நடந்து கொள்ளும் விதத்தைப் பார்த்தால், வீஸ்லீ குடும்பத்தினர் தூய ரத்தப் பரம்பரையைச் சேர்ந்தவர்களா என்பதே சந்தேகமாக இருக்கிறது."

ரானின் – அதாவது – கிராபின் முகம் கட்டுக்கடங்காத கோபத்தால் அஷ்டகோணலானது.

"கிராப், உனக்கு என்ன ஆயிற்று?" என்று மால்ஃபாய் கேட்டான்.

"வயிற்று வலி," என்று ரான் முனகினான்.

"அப்படியானால் மருத்துவமனைக்குச் சென்று, அங்குள்ள ஈன ரத்தப் பிறவிகளுக்கு என் சார்பில் ஆளுக்கு ஓர் உதை விடு," என்று மால்ஃபாய் ஏளனமாகச் சிரித்தபடி கூறினான். "பள்ளியில் நடைபெற்றுள்ள இந்தத் தாக்குதல்களைப் பற்றி 'டெய்லி புராஃபெட்' பத்திரிகை இன்னும் ஏன் செய்தி வெளியிடவில்லை என்பது எனக்கு வியப்பாக இருக்கிறது," என்று கூறிய அவன் யோசனையுடன் மேலும் தொடர்ந்தான். "டம்பிள்டோர் இதை மூடி மறைக்கச் சதி செய்து வருகிறார் என்று நான் நினைக்கிறேன். அதைச் சீக்கிரமாக ஒரு முடிவுக்குக் கொண்டுவராவிட்டால், அவரது பதவி பறி போய்விடும். டம்பிள்டோர் இந்த இடத்தின் சாபக்கேடு என்று என் அப்பா எப்போதுமே கூறி வந்திருக்கிறார். மகுள்களுக்குப் பிறந்தவர்களை டம்பிள்டோருக்கு மிகவும் பிடிக்கும். எந்தவொரு கண்ணியமான தலைமையாசிரியராவது காலின் போன்ற முதுகெலும்பில்லாத ஜீவன்களைப் பள்ளியில் சேர்த்துக் கொள்வாரா?"

Scanned by CamScanner

மால்ஃபாய் கற்பனையாகத் தன் கையில் வைத்திருந்த ஒரு கேமராவைக் கொண்டு புகைப்படம் எடுக்கத் துவங்கினான். அது கொடுமையானதாகத் தோன்றினாலும், அவன் துல்லியமாகக் காலினை அப்படியே பிரதிபலித்தான்: "ஹாரி பாட்டர், நான் உன்னைப் படம் எடுக்கலாமா? ஹாரி பாட்டர், எனக்கு ஒரு கையெழுத்துப் போட்டுத் தருவாயா? ஹாரி பாட்டர், தயவு செய்து நான் உன்னுடைய காலணிகளுக்கு முத்தமிடலாமா?"

புகைப்படம் எடுப்பதுபோல பாவனை செய்து கொண்டிருந்த மால்ஃபாய் தன் கைகளைக் கீழே போட்டுவிட்டு, ஹாரியையும் ரானையும் உற்றுப் பார்த்தான்.

"உங்கள் இரண்டு பேருக்கும் என்னவாயிற்று?"

காலம் கடந்து ஹாரியும் ரானும் வலுக்கட்டாயமாகச் சிரித்தனர். ஆனால் மால்ஃபாய்க்குத் திருப்தி ஏற்பட்டிருந்ததுபோலத் தோன்றியது. ஒருவேளை கிராப் மற்றும் காயலின் மரமண்டைகளுக்குள் எப்போதுமே இவ்வளவு தாமதமாகத்தான் விஷயங்கள் ஏறும்போலும்!

"புனித ஹாரி பாட்டர்! ஈன ரத்தப் பிறவிகளின் ஆபத்பாந்தவன்!" என்று மால்ஃபாய் மெதுவாகக் கூறினான். "மந்திரவாதிகளின் முழுமையான உணர்வுகள் இல்லாத பிறவி அவன். இல்லையென்றால் அவன் அந்த அற்பத்தனமான ஈன ரத்தப் பிறவி ஹெர்மயனியின் வாலைப் பிடித்துக் கொண்டு சுற்றிக் கொண்டிருக்க மாட்டான். ஆனால் பரிதாபம்! மக்கள் அவன் ஸ்லிதரினின் வாரிசு என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்."

ஹாரியும் ரானும் மூச்சைப் பிடித்துக் கொண்டு காத்திருந்தனர். தான்தான் ஸ்லிதரினின் வாரிசு என்று மால்ஃபாய் எக்கணமும் சொல்லிவிடக்கூடும். ஆனால் –

"அது யாரென்று எனக்குத் தெரிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்," என்று மால்ஃபாய் எரிச்சலுடன் கூறினான். "அவனுக்கு நான் உதவலாம்."

ரானின் தாடை இறங்கியது. அது கிராபை இன்னும் வடிகட்டிய மடையனாகத் தோன்றச் செய்தது. அதிர்ஷ்டவசமாக மால்ஃபாய் அதைக் கவனிக்கவில்லை. வேகமாகச் சிந்தித்த ஹாரி, "ஆனால் இவை அனைத்திற்கும் பின்னால் யார் இருக்கிறார்கள் என்று உனக்குக் கண்டிப்பாகத் தெரிந்திருக்கும், இல்லையா?" என்று கேட்டான்.

"காயல், அது எனக்குத் தெரியாது. சொன்னதையே நான் உனக்கு எத்தனை முறை சொல்லிக் கொண்டிருக்க வேண்டும்?" என்று மால்ஃபாய் ஹாரியிடம் எரிந்து விழுந்தான். "கடந்த முறை ரகசியங்கள் அடங்கிய பாதாள அறை திறக்கப்பட்டது குறித்து என் அப்பாவும் என்னிடம் எதையும் கூற மறுக்கிறார். அது ஐம்பது வருடங்களுக்கு முன்பு நடந்த விஷயம். அதனால் அது அவருடைய காலகட்டத்திற்கு முந்தைய நிகழ்வு. ஆனாலும் அவருக்கு அது குறித்த அனைத்து விஷயங்களும் தெரியும். அவை எல்லாம் பரம ரகசியமாக வைக்கப்பட்டுள்ளன என்பதால், அது குறித்து எனக்கு அளவுக்கு

Scanned by CamScanner

அதிகமாகத் தெரிந்திருந்தால், என்மீது சந்தேகம் வரும். ஆனால் ஒரே ஒரு விஷயம் மட்டும் எனக்கு உறுதியாகத் தெரியும். கடந்த முறை ரகசியங்கள் அடங்கிய பாதாள அறை திறக்கப்பட்டபோது ஓர் ஈன ரத்தப் பிறவியின் உயிர் காவு கொடுக்கப்பட்டது. அதனால் இம்முறையும் வெகு விரைவிலேயே அவர்களில் ஒருவர் பலியாகப் போவது உறுதி . . . அது ஹெர்மயனியாக இருந்தால் நன்றாக இருக்கும்," என்று அவன் குரூரத் திருப்தியுடன் கூறினான்.

ரான் கிராபின் பிரம்மாண்டமான கை முஷ்டியை மடக்கிக் கொண்டிருந்தான். ரான் மால்ஃபாயைக் குத்தினால் தங்கள் சாயம் வெளுத்துவிடும் என்று பயந்த ஹாரி, ரானின் பக்கம் ஓர் எச்சரிக்கைப் பார்வையை வீசிவிட்டு, "கடந்த முறை ரகசியங்கள் அடங்கிய பாதாள அறையைத் திறந்தவன் பிடிபட்டானா என்று உனக்குத் தெரியுமா?" என்று கேட்டான்.

"ஓ! தெரியுமே! . . . அது யாரென்று எனக்குத் தெரியாது, ஆனால் பள்ளியிலிருந்து அவன் வெளியேற்றப்பட்டான். அவன் இன்னும் அஸ்கபானில்தான் இருந்தாக வேண்டும்," என்று மால்ஃபாய் கூறினான்.

"அஸ்கபான்?" என்று ஹாரி குழப்பத்துடன் கேட்டான்.

"அஸ்கபான் – மந்திரவாதிகளின் சிறைச்சாலை," என்று மால்ஃபாய் கூறிவிட்டு, ஹாரியை நம்ப முடியாமல் பார்த்தவாறு, "காயல், நீ இதைவிட மந்தமாக இருந்தால், நீ பின்னோக்கித்தான் வளரப் போகிறாய்," என்று கூறினான்.

பின் அவன் தன் இருக்கையில் அமைதியற்று நெளிந்தவாறு மேலும் தொடர்ந்தான். "என் அப்பா என்னைக் கொஞ்சம் அடக்கி வாசிக்குமாறு கூறியிருக்கிறார். ஸ்லிதரினின் வாரிசு தன் வேலையைப் பார்த்துக் கொள்ளட்டும் என்று அவர் என்னிடம் கூறியுள்ளார். பள்ளியில் இருக்கும் ஈன ரத்தக் கழிசடைகள் ஒழித்துக்கட்டப்பட வேண்டும் என்பதில் சந்தேகமில்லை, ஆனால் நான் இதில் மூக்கை நுழைக்க வேண்டாம் என்று அவர் என்னிடம் கூறியுள்ளார். அவருக்கு இச்சமயத்தில் தலைக்கு மேல் வேலை இருக்கிறது. எங்களுடைய மாளிகையில் கடந்த வாரம் மந்திரஜால அமைச்சகம் அதிரடிச் சோதனை ஒன்றை நடத்தியிருந்ததைப் பற்றி நான் உங்களிடம் கூறினேனா?"

காயலின் அழுது வடிந்த முகத்தில் கொஞ்சம் கவலையை வெளிப்பட வைக்க ஹாரி முயன்றான்.

"அதிர்ஷ்டவசமாக அவர்களால் பெரிதாக எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை. விலை மதிப்பிட முடியாத தீய மந்திர சக்திச் சமாச்சாரங்கள் என் தந்தையிடம் நிறையவே உள்ளன. ஆனால் அதிர்ஷ்டவசமாக, எங்களுடைய வீட்டு வரவேற்பறைக்குக் கீழே எங்களுக்கு ஒரு ரகசிய அறை இருக்கிறது –"

"ஆ!" என்று ரான் கத்தினான்.

Scanned by CamScanner

மால்ஃபாய் அவனைப் பார்த்தான். ஹாரியும் அவனைப் பார்த்தான். ரானின் முகம் சிவந்து கொண்டிருந்தது. அவனது மூக்கும் மெதுவாக நீளத் துவங்கியிருந்தது. அவர்களுடைய ஒரு மணிநேரம் முடிவடைய இருந்தது. ரான் மீண்டும் தனது பழைய உருவத்திற்கு மாறத் துவங்கியிருந்தான். ரானின் முகத்தில் திடீரென்று தென்பட்ட அதிர்ச்சியை வைத்துப் பார்த்தபோது, தானும் மாறத் துவங்கியிருக்க வேண்டும் என்று ஹாரி நினைத்தான்.

அவர்கள் இருவரும் துள்ளி எழுந்தனர்.

"என் வயிற்றுக்கு மருந்து வேண்டும்," என்று ரான் முனகினான். அவர்கள் மறுபேச்சின்றி ஸ்லிதரினின் பொது அறையின் குறுக்காக ஓடி, அந்தக் கற்சுவரில் தங்களைத் தூக்கி எறிந்து, வெளியே போய் அங்குள்ள பாதையில் சிட்டாகப் பறந்தனர். இதற்கிடையே, மால்ஃபாய் எதையும் கவனித்திருக்க மாட்டான் என்று அவர்கள் நம்பினர். காயலின் பெரிய காலணிகளிலிருந்து தன்னுடைய கால்கள் கழன்று கொண்டிருந்ததை ஹாரி உணர்ந்தான். அதோடு, அவன் சுருங்கிக் கொண்டும் இருந்ததால், தன் அங்கியை உயரே தூக்கிப் பிடித்துக் கொண்டான். வெறிச்சோடிக் கிடந்த வரவேற்பறைக்கு அவர்கள் வந்து சேர்ந்தபோது, அங்கிருந்த துடப்ப அலமாரியில் இருந்த கிராபும் காயலும் தங்கள் கால்களால் அந்த அலமாரியை உதைத்துக் கொண்டிருந்ததால் ஏற்பட்ட அடக்கமான சத்தத்தைத் தவிர வேறு எந்தச் சத்தமும் கேட்கவில்லை. தங்களுடைய காலணிகளை அந்த அலமாரிக்கு வெளியே விட்டுவிட்டு, ரானும் ஹாரியும் தங்கள் காலுறைகளுடன் பளிங்குப் படிக்கட்டுகளில் தாவி ஏறி முனகல் மர்ட்டிலின் குளியலறைக்குத் தலைதெறிக்க ஓடினர்.

ரான் தங்களுக்குப் பின்னால் அந்தக் குளியலறையின் கதவை மூடியவாறு, "மொத்த நேரமும் விரயமாகிவிட்டது என்று சொல்லிவிட முடியாது," என்று மூச்சிரைத்துக் கொண்டே கூறினான். "யார் இந்தத் தாக்குதல்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் இன்னும் கண்டுபிடிக்கவில்லை என்பது உண்மைதான் என்றாலும், மால்ஃபாயின் வீட்டு வரவேற்பறையின் கீழே தேடும்படி நான் என்னுடைய அப்பாவுக்கு ஒரு கடிதம் எழுதப் போகிறேன்."

ஹாரி, அந்த அறையிலிருந்த உடைந்த கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்தான். அவன் மறுபடியும் பழைய நிலைக்கு வந்திருந்தான். அவன் தன்னுடைய மூக்குக்கண்ணாடியை எடுத்து அணிந்து கொண்டிருந்தபோது, ஹெர்மயனி இருந்த தடுப்பறைக் கதவை ரான் பலமாகத் தட்டினான்.

"ஹெர்மயனி, வெளியே வா! உன்னிடம் சொல்வதற்கு எங்களிடம் கொள்ளை கொள்ளையாக விஷயம் இருக்கிறது –"

"இங்கிருந்து போய்விடுங்கள்!" என்று ஹெர்மயனி கீச்சிட்டாள்.

ஹாரியும் ரானும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"ஹெர்மயனி, உனக்கு என்னவாயிற்று?" என்று ரான் கேட்டான். "இந்த நேரத்தில் நீ பழைய நிலைமைக்கு வந்திருக்க வேண்டும். நாங்கள் –"

Scanned by CamScanner

திடீரென்று, முனகல் மர்ட்டில், ஹெர்மயனி இருந்த தடுப்பறைக் கதவின் ஊடாகப் புகுந்து வெளியே வந்தது. முனகல் மர்ட்டில் இவ்வளவு சந்தோஷமாக இருந்து ஹாரி பார்த்ததில்லை.

"ஊஊஊஊஊஊ, காத்திருந்து பார்," என்று அது கூறியது. "படுபயங்கரமாக இருக்கிறது."

அந்தத் தடுப்பறையின் தாழ்ப்பாள் விலகியது. ஹெர்மயனி அழுது கொண்டே வெளியே வந்தாள். அவள் தன்னுடைய அங்கியைக் கொண்டு தன் தலையில் முக்காடிட்டு இருந்தாள்.

"என்ன ஆயிற்று?" என்று ரான் சந்தேகமாகக் கேட்டான். "மில்லிசென்ட்டின் மூக்கு ஏதாவது உன்னிடம் மிச்சமிருக்கிறதா?"

ஹெர்மயனி தன் அங்கியை நழுவவிட்டாள். ரான் பின்வாங்கி அங்கிருந்த தொட்டியில் சாய்ந்தான்.

கருப்பு முடியால் அவளது முகம் முழுவதும் மூடப்பட்டிருந்தது. அவளது கண்கள் மஞ்சள் நிறத்தில் இருந்தன. இரண்டு நீண்ட காதுகளின் முனைகள் அவளது தலைமுடியின் ஊடாகத் துருத்திக் கொண்டிருந்தன.

"அது ஒரு பூனையின் முடி," என்று ஹெர்மயனி அலறினாள். "மில்லி – மில்லிசென்ட் – ஒரு பூனையை வளர்த்து வந்திருக்க வேண்டும். நாம் தயாரித்த மாயத் திரவத்தை நாம் விலங்குகளின் உருவத்திற்கு மாற உபயோகிக்கக்கூடாது."

"ஐயோ!" என்று ரான் அலறினான்.

"உன்னை எல்லோரும் கிண்டலடித்துக் காய்ச்சி எடுக்கப் போகிறார்கள்," என்று முனகல் மர்ட்டில் சந்தோஷமாகக் கூறியது.

"ஹெர்மயனி, ஒன்றும் பிரச்சனையில்லை," என்று ஹாரி அவசர அவசரமாகக் கூறினான். "நாங்கள் உன்னை மருத்துவமனைக்குக் கூட்டிச் செல்கிறோம். மேடம் பாம்ஃபிரே ஒருபோதும் அளவுக்கு அதிகமான கேள்விகளைக் கேட்பதில்லை . . ."

ஹெர்மயனியை அந்தக் குளியலறையைவிட்டு வெளியே கூட்டிவர, அவர்கள் அவளை வெகு நேரம் தாஜா செய்ய வேண்டியிருந்தது. முனகல் மர்ட்டில் அவர்களை பயங்கரச் சிரிப்புடன் வழியனுப்பி வைத்தது.

"உனக்கு ஒரு வால் இருப்பதை எல்லோரும் கண்டுபிடித்தவுடன் என்ன நடக்கிறது என்று பார்!"

Scanned by CamScanner

அத்தியாயம் பதிமூன்று

ரகசிய நாட்குறிப்புப் புத்தகம்

ஹெர்மயனி மருத்துவமனையில் பல வாரங்கள் தங்கியிருக்க நேர்ந்தது. கிறிஸ்துமஸ் விடுமுறை முடிந்து மற்றவர்கள் திரும்பி வந்தபோது, ஹெர்மயனி யார் கண்ணிலும் தட்டுப்படாமல் இருந்தது பல வதந்திகளுக்குத் தீனி போட்டது. ஏனெனில், அவள் தாக்கப்பட்டிருந்ததாக எல்லோரும் நினைத்தனர். அவளை லேசாகவாவது பார்க்கலாம் என்ற எண்ணத்தில் பல மாணவர்கள் அவள் படுத்திருந்த மருத்துவமனைப் பகுதி வழியாக அலைந்து கொண்டிருந்ததால், மேடம் பாம்ஃபிரே, முகத்தில் பயங்கர முடியுடன் பிறர் பார்வையில் பட்டு அவள் அவமானப்பட்டுவிடக்கூடாது என்பதற்காக அவளது படுக்கையைச் சுற்றி ஒரு திரைச்சீலையைத் தொங்கவிட்டார்.

ஹாரியும் ரானும் ஒவ்வொரு மாலையிலும் அங்கு சென்று அவளைப் பார்த்தனர். பள்ளியின் புதிய பருவம் துவங்கியதும், அவளுடைய வீட்டுப்பாடங்களை அவர்கள் அவளிடம் எடுத்து வந்தனர்.

ஒரு நாள் மாலையில், அவளது படுக்கைக்கு அருகில் இருந்த மேசையின்மீது ஒரு வண்டிப் புத்தகங்களை அடுக்கியவாறு, ரான், "எனக்கு மட்டும் பூனையின் நீண்ட மீசை முளைத்திருந்தால், படிப்பை ஏறக்கட்டி இருந்திருப்பேன்," என்று கூறினான்.

"ரான், முட்டாள்தனமாகப் பேசாதே. படிப்பில் நான் பின்தங்கிவிடக்கூடாது," என்று ஹெர்மயனி சுறுசுறுப்பாகக் கூறினாள். தனது முகத்திலிருந்த முடி அனைத்தும் மறைந்துவிட்டிருந்தது குறித்தும், மஞ்சள் நிறத்தில் இருந்த கண்கள் பழையபடி மெதுவாகப் பழுப்பு நிறத்திற்கு மாறிக் கொண்டிருந்தது குறித்தும் அவள் மிகவும் சந்தோஷமாக இருந்தாள். மேடம் பாம்ஃபிரேயின் காதுகளில் விழுந்துவிடக்கூடாது என்பதற்காக ஹெர்மயனி தன் குரலைத் தாழ்த்திக் கொண்டு, "புதிய துப்புகள் எதுவும் கிடைக்கவில்லை என்று நான் நினைக்கிறேன், சரிதானே?" என்று கேட்டாள்.

"ஆமாம், எதுவுமே கிடைக்கவில்லை," என்று ஹாரி உற்சாகமின்றிக் கூறினான்.

Scanned by CamScanner

ஹெர்மயனியின் தலையணைக்கு அடியில் லேசாக நீட்டிக் கொண்டிருந்த, தங்க நிறத்தில் இருந்த ஒன்றைச் சுட்டிக்காட்டி, "அது என்ன?" என்று ஹாரி கேட்டான்.

"அது ஒன்றுமில்லை. நான் சீக்கிரமாகக் குணமாக வேண்டும் என்று என்னை வாழ்த்தி எனக்கு வந்த இன்னொரு வாழ்த்து அட்டை," என்று மழுப்பிவிட்டு, அதை அவள் அவசர அவசரமாக அவர்கள் பார்வையிலிருந்து மறைக்க முயன்றாள். ஆனால் ரானின் வேகத்திற்கு அவளால் ஈடு கொடுக்க முடியவில்லை. அவன் அதை அவளிடமிருந்து பிடுங்கி, அதைப் பிரித்துத் திறந்து, உரத்தக் குரலில் படித்தான்:

"ஹெர்மயனிக்கு: நீ விரைவில் குணமடைய என் வாழ்த்துக்கள்! உன்மீது அக்கறை கொண்டுள்ள ஆசிரியர் – பேராசிரியர் கில்டராய் லாக்ஹார்ட், மூன்றாம் நிலை மெர்லின் பதக்கம், தீய மந்திர சக்திகள் பாதுகாப்புச் சங்கத்தில் கௌரவ உறுப்பினர், 'மந்திரவாதினி வாராந்திர'ப் பத்திரிக்கையில் தொடர்ந்து ஐந்து வாரங்களுக்குப் 'புன்னகை மன்னன்' பட்டம்."

ரான் ஹெர்மயனியை வெறுப்புடன் பார்த்தான்.

"இதைப் போய்த் தலையணைக்கு அடியில் வைத்துக் கொண்டு நீ தூங்குகிறாயா?"

அப்போது, மேடம் பாம்ஃபிரே, ஹெர்மயனிக்கு இரவு கொடுக்கப்பட வேண்டியிருந்த மருந்துகளை எடுத்துக் கொண்டு அங்கு வந்ததால், ரானின் கேள்விக்கு பதிலளிக்க வேண்டிய தர்மசங்கடத்தில் இருந்து ஹெர்மயனி தப்பினாள்.

ஹாரியும் ரானும் அங்கிருந்து கிளம்பி கிரிஃபின்டார் கோபுரத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது, ரான் ஹாரியிடம், "நீ சந்தித்துள்ளதிலேயே லாக்ஹார்ட்தான் மிகவும் சாமர்த்தியசாலியான ஆளா என்ன?" என்று கேட்டான். ஸ்னேப் அவர்களுக்கு ஏகப்பட்ட வீட்டுப்பாடங்களைக் கொடுத்திருந்தார். அவற்றைச் செய்து முடிப்பதற்குள் தான் ஆறாம் ஆண்டிற்குப் போய்விடுவோம் என்று ஹாரி நினைத்துக் கொண்டான். முடியைச் செங்குத்தாக நிற்க வைக்கும் மாயத் திரவத்தில் எத்தனை எலி வால்களைப் போட வேண்டும் என்பதைத் தான் ஹெர்மயனியிடம் கேட்க மறந்துவிட்டிருந்ததைப் பற்றி ரான் புலம்பிக் கொண்டிருந்தான். அப்போது அவர்கள் இருந்த தளத்திற்கு மேற்தளத்தில் கோபமான கத்தல் சத்தம் ஒன்று கேட்டது.

"அது ஃபில்ச்," என்று ஹாரி முணுமுணுத்தான். அவர்கள் வேகமாக மாடிப்படிகளில் ஏறி, மறைவாக நின்றுகொண்டு, கவனமாகக் காதுகொடுத்துக் கேட்டனர்.

ரான் பதற்றத்துடன், "வேறு யாராவது தாக்கப்பட்டிருப்பார்கள் என்று நீ நினைக்கிறாயா?" என்று ஹாரியிடம் கேட்டான். அவர்கள் ஆடாமல் அசையாமல், ஃபில்ச்சின் சத்தம் வந்து கொண்டிருந்த

Scanned by CamScanner

திசையை நோக்கித் தங்களுடைய தலைகளைச் சாய்த்து வைத்துக் கொண்டு, காதுகளைத் தீட்டிக் கொண்டு நின்றனர். ஃபில்ச் கன்னாபின்னாவென்று கத்திக் கொண்டிருந்தார்.

". . . தலையெழுத்து! எனக்கு இருக்கிற வேலை போதாதா? இந்த வேலை வேறு எனக்கு வேண்டுமா? துடைத்துப் பெருக்குவதாவது பரவாயில்லை. இதற்குமேல் தாங்காதடா சாமி! நான் இப்போதே டம்பிள்டோரிடம் போகப் போகிறேன் . . ."

அவரது காலடி ஓசை தேய்ந்து மறைந்தது. தூரத்தில் ஒரு கதவு படாரென்று ஓங்கி மூடப்பட்டச் சத்தமும் கேட்டது.

அவர்கள் எட்டிப் பார்த்தனர். ஃபில்ச் அங்கிருந்து போவதற்கு முன், தனது வழக்கமான கண்காணிப்பு இடத்தில் காவல் காத்துக் கொண்டு இருந்து கொண்டிருந்தார் என்பது அவர்களுக்கு உறுதியாகத் தெரிந்தது. அவர்கள் நாரிஸ் பூனை தாக்கப்பட்ட இடத்திற்கு மறுபடியும் வந்தனர். ஃபில்ச் எதைப் பற்றிக் காச்சுமூச்சென்று கத்திக் கொண்டிருந்தார் என்பதை அவர்கள் அந்த இடத்தை ஒரு பார்வை பார்த்தவுடனேயே கண்டுபிடித்துவிட்டனர். பாதித் தாழ்வாரத்தில் நீர் வாரி இறைக்கப்பட்டிருந்தது. அது முனகல் மர்ட்டிலின் குளியலறைக் கதவின் வழியாக இன்னும் கசிந்து கொண்டு இருந்ததுபோலத் தோன்றியது. ஃபில்ச்சின் காட்டுக்கத்தல் இப்போது நின்றுவிட்டிருந்ததால், குளியலறைச் சுவர்களில் எதிரொலித்துக் கொண்டிருந்த முனகல் மர்ட்டிலின் தேம்பல்களை அவர்களால் தெளிவாகக் கேட்க முடிந்தது.

"இப்போது முனகல் மர்ட்டிலுக்கு என்ன பிரச்சனையாக இருக்கும்?" என்று ரான் கேட்டான்.

"நாம் உள்ளே போய் என்னவென்று பார்க்கலாம்," என்று ஹாரி கூறினான். அவர்கள் தங்களுடைய அங்கிகளைத் தங்கள் கணுக்கால்களுக்கு மேலே தூக்கிப் பிடித்துக் கொண்டு, அந்தத் தாழ்வாரத்தில் கொட்டிக் கிடந்த தண்ணீரின் வழியாக நடந்து சென்று குளியலறைக் கதவை அடைந்தனர். அங்கு மாட்டப்பட்டிருந்த 'உபயோகத்தில் இல்லை' என்ற அறிவிப்புப் பலகையை அவர்கள் வழக்கம்போல அலட்சியம் செய்துவிட்டு உள்ளே சென்றனர்.

முனகல் மர்ட்டில் அழுது கொண்டிருந்தது. முன்பு எப்போதையும்விட அது அதிகச் சத்தத்துடனும் அதிக வலியுடனும் அழுது கொண்டிருந்தது. அது தனது வழக்கமான தண்ணீர்த் தொட்டிக்குள் மூழ்கியிருந்ததுபோலத் தோன்றியது. அந்தக் குளியலறைச் சுவர்களையும் தரையையும் தொப்பலாக நனைத்திருந்த தண்ணீர் அங்கிருந்த மெழுகுவர்த்திகளையும் அணைத்து விட்டிருந்ததால் அந்த அறை இருட்டாக இருந்தது.

"மர்ட்டில், என்னவாயிற்று?" என்று ஹாரி கேட்டான்.

"யார் அது?" என்று மர்ட்டில் பரிதாபமாகக் கேட்டது. "வேறு எதையாவது என்மீது எறிய வந்திருக்கிறாயா?"

Scanned by CamScanner

அங்கு கொட்டிக் கிடந்த தண்ணீரின் ஊடாக மர்ட்டில் இருந்த நடுப்பு அறையை நோக்கி நடந்து சென்ற ஹாரி, "நான் ஏன் உன்மீது எதையாவது எறிய வேண்டும்?" என்று கேட்டான்.

"எனக்கென்ன தெரியும்?" என்று முனகல் மர்ட்டில் கத்தியது. அது வெளியே வந்தபோது, இன்னும் அதிகமான தண்ணீர் அத்தரையில் கொட்டியது. "இங்கு நான் பாட்டுக்கு, நான் உண்டு, என் வேலை உண்டு என்று இருந்து வருகிறேன். ஆனால் வேடிக்கை என்று நினைத்துக் கொண்டு யாரோ என்மீது ஒரு புத்தகத்தை எறிகிறார்கள் . . ."

"யாராவது எதையாவது உன்மீது எறிந்தாலும் அதுதான் உன்னைத் தாக்காதே," என்று ஹாரி கூறினான். "அதாவது, அது உன் ஊடாக உன்னைக் கடந்து சென்றுவிடுமே என்று நான் சொல்ல வந்தேன்."

அவன் சொல்லக்கூடாததைச் சொல்லிவிட்டிருந்தான். மர்ட்டில் மேல் நோக்கிப் பறந்து கொண்டே கத்தியது: "நாம் எல்லோரும் மர்ட்டில்மேல் புத்தகங்களை எறியலாம். ஏனென்றால் அதை அவளால்தான் உணர முடியாதே! அவளுடைய வயிற்றின் ஊடாகச் செல்லும்படி எறிந்தால் பத்துப் புள்ளிகள்! அது அவளுடைய தலை வழியாகச் சென்றால் ஐம்பது புள்ளிகள். ஹா, ஹா, ஹா! இது என்னவொரு வேடிக்கையான விளையாட்டாக இருக்கும்? ஹா, ஹா, ஹா! ஆனால் நான் அப்படி நினைக்கவில்லை."

"ஆமாம், புத்தகத்தை உன்மீது யார் எறிந்தார்கள்?" என்று ஹாரி கேட்டான்.

மர்ட்டில் அவர்களை உற்றுப் பார்த்துக் கொண்டே, "எனக்குத் தெரியாது. சாவைப் பற்றி அசை போட்டுக் கொண்டு, நான் பாட்டுக்கு அத்தொட்டியின் முனையில் உட்கார்ந்திருந்தேன். ஒரு புத்தகம் நேராக என் உச்சந்தலையின் ஊடாகப் போய் விழுந்தது," என்று கூறியது. "அது, அதோ அங்கே கிடக்கிறது. அது நீரில் நனைந்து போயிருக்கிறது."

தொட்டிக்கு அடியில் மர்ட்டில் காட்டிய இடத்தை ஹாரியும் ரானும் குனிந்து பார்த்தனர். அங்கு ஒரு சிறிய புத்தகம் கிடந்தது. அதன் கருப்பு அட்டை மிகவும் அழுக்காக இருந்தது. அந்த அறையில் இருந்த பிற அனைத்தையும்போல அதுவும் தொப்பலாக நனைந்திருந்தது. ஹாரி அதை எடுப்பதற்காகக் குனிந்தான். ஆனால் திடீரென்று ரான் தன் கையை நீட்டி அவனைத் தடுத்தான்.

"ஏன் தடுக்கிறாய்?" என்று ஹாரி கேட்டான்.

"உனக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதா?" என்று ரான் கேட்டான். "அது அபாயகரமான ஒன்றாக இருக்கக்கூடும்."

"அபாயகரமானதா?" என்று ஹாரி நகைத்தான். "இதில் என்ன அபாயம் இருந்துவிடப் போகிறது?"

ரான் அந்தப் புத்தகத்தை சந்தேகக் கண்ணோடு பார்த்துக் கொண்டே, "இதைக் கேட்டால் நீ ஆச்சரியப்படுவாய்," என்று

Scanned by CamScanner

கூறினான். "மந்திரஜால அமைச்சகம் கைப்பற்றியுள்ள சில புத்தகங்களைப் பற்றி என் அப்பா என்னிடம் கூறியிருக்கிறார். சில புத்தகங்கள் ஒருவரது கண்களைக் குருடாக்கிவிடும். 'சோனட்ஸ் ஆஃப் ஏ சார்சரர்' என்ற புத்தகத்தைப் படித்தவர்கள் தங்களுடைய மீதி வாழ்நாள் முழுவதும் கவிதை நடையிலேயே பேசினர். பாத் என்ற இடத்தைச் சேர்ந்த ஒரு மந்திரவாதினி ஒரு புத்தகத்தை வைத்திருந்தாள். அதைப் படிக்கத் துவங்கினால், படிப்பதை உன்னால் நிறுத்தவே முடியாது. நீ எப்போதும் அதை உன் மூக்கின் அருகே பிடித்துக் கொண்டுதான் அலைய வேண்டிருக்கும், ஒரே ஒரு கையைக் கொண்டு மட்டுமே நீ மற்ற வேலைகளைச் செய்து கொள்ள வேண்டியிருக்கும். அப்புறம் –."

"சரி, சரி, நிறுத்தித் தொலை! நீ என்ன சொல்ல வருகிறாய் என்பது எனக்குப் புரிந்துவிட்டது," என்று ஹாரி கூறினான்.

தொப்பலாக நனைந்த நிலையில் அந்தக் குட்டிப் புத்தகம் தரையில் கிடந்தது. என்ன புத்தகம் என்று எளிதில் வகைப்படுத்தப்பட முடியாத ஒன்றாக அது இருந்தது.

"ஆனால் அது என்னவென்று பார்க்காமல் அதை நம்மால் கண்டுபிடிக்க முடியாது, இல்லையா?" என்று கேட்டுவிட்டு, ஹாரி கீழே குனிந்து அதைத் தரையிலிருந்து எடுத்தான்.

அது ஒரு நாட்குறிப்புப் புத்தகம் என்பது ஹாரிக்கு உடனே தெரிந்துவிட்டது. அதன் அட்டையில், மங்கிப் போன நிலையில் தெரிந்த வருடம், அப்புத்தகம் ஐம்பது வருடங்கள் பழமையானது என்பதை எடுத்துரைத்தது. அவன் அதை ஆவலுடன் பிரித்தான். அதன் முதல் பக்கத்தில், 'நார்ட்டன்' என்ற பெயர் எழுதப்பட்டிருந்ததை ஹாரி கண்டுபிடித்தான். அந்த எழுத்துக்களின்மீது மை ஆங்காங்கே திட்டுத்திட்டாகக் கசிந்திருந்தது.

ரான் ஹாரியை எச்சரிக்கையுடன் அணுகி அவனது தோளுக்கு மேலாக எட்டிப் பார்த்து, "ஒரு நிமிடம் பொறு," என்று கூறினான். "எனக்கு அந்தப் பெயரைத் தெரியும் . . . நார்ட்டன், ஐம்பது வருடங்களுக்கு முன்பு, பள்ளிக்குச் சிறப்பான சேவை புரிந்ததற்காக ஒரு விருதைப் பெற்றான்."

"இதைப் பற்றி உனக்கு எப்படித் தெரியும்?" என்று ஹாரி ஆச்சரியத்தில் வாய் பிளந்தான்.

"ஒழுங்கு நடவடிக்கைத் தண்டனையின்போது, ஃபில்ச், நார்ட்டனின் கேடயத்தை என்னை ஐம்பது முறை பளிச்சூட்ட வைத்தார் என்பதால் எனக்குத் தெரியும்," என்று ரான் ஆத்திரத்தோடு கூறினான். "நான் அதன்மீதுதான் நத்தைகளை வாந்தியெடுத்தேன். நீயும் ஒரு மணிநேரம் ஒரே பெயரையே தேய்த்துத் தேய்த்துப் பளிச்சூட்டி மெருகேற்றிக் கொண்டிருந்தால், உனக்கும் அது கண்டிப்பாக நினைவிற்கு வரும்."

நனைந்து போயிருந்த அதன் பக்கங்களை ஹாரி பிரித்தெடுத்தான். அவை காலியாக இருந்தன. அப்புத்தகத்தின் எந்தவொரு பக்கத்திலும்

Scanned by CamScanner

எதுவும் எழுதப்பட்டிருந்ததற்கான சுவடே இருக்கவில்லை. 'மேபல் அத்தையின் பிறந்தநாள்' என்றோ, அல்லது 'பல் மருத்துவரை மூன்றரை மணிக்குப் பார்க்க வேண்டும்' என்றோகூட அதில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

"அவர் இதில் எதையுமே எழுதவில்லைபோலத் தெரிகிறது," என்று ஹாரி, ஏமாற்றம் கலந்த ஒரு குரலில் கூறினான்.

"அப்படியானால் இதைப் போய் ஏன் ஒருவர் கழிவு நீரில் தூக்கிப் போட வேண்டும்?" என்று ரான் ஆச்சரியத்துடன் கேட்டான்.

ஹாரி அப்புத்தகத்தைத் திருப்பி அதன் பின்னட்டையைப் பார்த்தான். லண்டனில் உள்ள வாக்ஸ்ஹால் சாலையில் அமைந்த ஒரு புத்தக விற்பனைக் கடையின் முகவரி அதில் அச்சிடப்பட்டிருந்ததை அவன் கண்டான்.

ஹாரி சிந்தனையுடன், "ஒருவர் வாக்ஸ்ஹால் சாலையிலிருந்து ஒரு நாட்குறிப்புப் புத்தகத்தை வாங்கியிருக்க வேண்டும் என்றால், அவர் மகுள்களுக்குப் பிறந்தவராகத்தான் இருக்க வேண்டும்," என்று கூறினான்.

"இந்தப் புத்தகம் உனக்கு எவ்விதத்திலும் பிரயோஜனப்படாது," என்று ரான் கூறினான். பிறகு தன் குரலைத் தாழ்த்திக் கொண்டு, "அதனால், அது மர்ட்டிலின் மூக்கு வழியாகப் போகுமாறு உன்னால் அதை எறிய முடிந்தால் உனக்கு ஐம்பது புள்ளிகள்," என்று வேடிக்கையாகக் கூறினான்.

ஆனால் ஹாரி அதைத் தன் பாக்கெட்டுக்குள் வைத்துக் கொண்டான்.

• • •

பிப்ரவரி மாதத் துவக்கத்தில், ஹெர்மயனி, பூனை மீசையின்றி, வாலின்றி, உடல் முழுவதும் விலங்கு முடியின்றி மருத்துவமனையிலிருந்து வெளியேறினாள். மருத்துவமனையில் இருந்து வெளியே வந்த முதல் நாள் மாலைப் பொழுதில் அவள் கிரிஃபின்டார் பொது அறையில் உட்கார்ந்திருந்தபோது, ஹாரி அவளிடம் நார்ட்டனின் நாட்குறிப்புப் புத்தகத்தைக் காட்டினான். அதோடு, அது தங்களுக்குக் கிடைத்தக் கதையையும் அவன் கூறினான்.

ஹெர்மயனி அந்த நாட்குறிப்பை வாங்கிப் புரட்டிப் பார்த்தபடி, "ஓ! இது ரகசிய மந்திர சக்திகளைக் கொண்டிருக்கலாம்," என்று உற்சாகமாகக் கூறினாள்.

"தப்பித் தவறி அப்படி ஏதாவது இருந்தால், இந்த நாட்குறிப்பு அதைச் சாமர்த்தியமாக மறைத்து வைத்திருக்கிறது என்று நினைக்கிறேன்," என்று ரான் கூறினான். "ஒருவேளை அது வெட்கப்பட்டுக் கொண்டு அதை வெளிப்படுத்தாமல் இருக்கலாம். ஹாரி, நீ ஏன் அதைத் தூக்கி எறியவில்லை என்று எனக்குப் புரியவில்லை."

"இதை ஏன் ஒருவர் ஒழித்துக்கட்ட முயற்சித்தார் என்பது தெரிந்தால் நன்றாக இருக்கும்," என்று ஹாரி கூறினான். "அதேபோல,

Scanned by CamScanner

நார்ட்டன், நம் பள்ளிக்கு எந்தச் சிறப்பான சேவை புரிந்ததற்காக ஒரு விருதைப் பெற்றான் என்பதைத் தெரிந்து கொள்ளவும் நான் விரும்புகிறேன்."

"அதற்குப் பல காரணங்கள் இருக்கலாம்," என்று ரான் கூறினான். "ஐந்தாம் வருட இறுதித் தேர்வில் முப்பது பாடங்களில் அவன் தேர்ச்சி பெற்றிருக்கலாம் அல்லது பிரம்மாண்டமான கணவாய் மீனின் வாயிலிருந்து ஒரு பேராசிரியரைக் காப்பாற்றியிருக்கலாம். அல்லது பலருக்குப் பேருதவி செய்யும் விதத்தில், அவன் மார்ட்டிலைக் கொலை செய்திருக்கலாம் . . ."

ஹெர்மயனியின் முகத்தில் குடி கொண்டிருந்த தீர்க்கமான பார்வையைப் பார்த்த ஹாரி, தான் நினைத்துக் கொண்டிருந்ததையே அவளும் நினைத்துக் கொண்டிருந்தாள் என்ற முடிவுக்கு வந்தான்.

ரான் அவர்கள் இருவரையும் மாறி மாறிப் பார்த்தபடி, "என்ன?" என்று கேட்டான்.

"ரகசியங்கள் அடங்கிய பாதாள அறை ஐம்பது வருடங்களுக்கு முன்புதானே திறக்கப்பட்டது?" என்று ஹாரி கேட்டான். "மால்ஃபாய் அப்படித்தானே சொன்னான்?"

"ஆமாம்," என்று ரான் இழுத்தான்.

ஹெர்மயனி அந்த நாட்குறிப்பின்மீது உற்சாகமாகத் தாளமிட்டபடி, "இந்த நாட்குறிப்பும் ஐம்பது வருடங்களுக்கு முந்தையது," என்று கூறினாள்.

"அதனால்?"

"ஏய், ரான்! கொஞ்சம் விழித்துக் கொள்!" என்று ஹெர்மயனி செல்லமாகக் கடிந்து கொண்டாள். "ரகசியங்கள் அடங்கிய பாதாள அறையைக் கடந்த முறை திறந்தவன் ஐம்பது வருடங்களுக்கு முன்பு பள்ளியைவிட்டு நீக்கப்பட்டான் என்பது நமக்குத் தெரியும். அதேபோல, நார்ட்டனும் தனது பள்ளிக்குத் தான் ஆற்றியிருந்த சிறப்பான சேவைகளுக்காக ஐம்பது வருடங்களுக்கு முன்புதான் விருது வாங்கினான். ஒருவேளை ஸ்லிதரினின் வாரிசைப் பிடித்ததற்காக அவனுக்கு அந்த விருது வழங்கப்பட்டிருந்தால்? ரகசியங்கள் அடங்கிய பாதாள அறை எங்கே இருக்கிறது, அதைத் திறந்தது யார், அதனுள் எப்படிப்பட்ட ராட்சஸ விலங்கு வசித்து வருகிறது போன்றவை குறித்தப் பல விஷயங்களை அவனது நாட்குறிப்பு நமக்கு வெளிப்படுத்தக்கூடும். அப்படி இருக்கும்போது, இம்முறை தாக்குதலில் ஈடுபட்டு வருபவன் இப்புத்தகம் யார் கைக்கும் கிடைக்காமல் இருக்க வேண்டும் என்று நினைப்பான், இல்லையா?"

"ஹெர்மயனி, உன்னுடைய ஊகம் அபாரமானது என்பதில் சந்தேகமில்லை," என்று ரான் கூறினான். "ஆனால் அதில் ஒரு பெரிய ஓட்டை இருக்கிறது. இந்த நாட்குறிப்பில் எதுவுமே எழுதப்பட்டிருக்கவில்லை!"

Scanned by CamScanner

ஆனால் ஹெர்மயனி தன்னுடைய பையிலிருந்து தனது மந்திரக்கோலை வெளியே எடுத்துக் கொண்டிருந்தாள்.

"தன்னுக்குப் புலப்படாத பையினால் எழுதப்பட்டிருக்கலாம்," என்று அவள் முணுமுணுத்தாள். அது அவள் அந்த நாட்குறிப்பை மூன்று முறை தட்டியவாறு, 'அபரேஷியம்!" என்று கூறினாள்.

எதுவும் நிகழவில்லை. ஆனால் ஹெர்மயனி அலட்டிக் கொள்ளாமல் தன் மந்திரக்கோலைத் தன் பையினுள் போட்டுவிட்டு, அதிலிருந்து இன்னொரு பொருளை வெளியே எடுத்தாள். பிரகாசமான சிவப்பு நிறத்தில் இருந்த ஓர் அழிப்பான்போல அது இருந்தது.

"இதற்கு **'வெளிப்படுத்து'** என்று பெயர். இதை நான் டயகான் சந்தில் வாங்கினேன்," என்று அவள் கூறினாள்.

அவள் அதைக் கொண்டு 'ஜனவரி முதல் நாள்'மீது நன்றாக அழுத்தித் தேய்த்தாள். அப்போதும் எதுவும் நிகழவில்லை.

"அதில் எதுவும் கிடையாது என்று நான்தான் முதலிலேயே கூறினேனே," என்று ரான் கூறினான். "நார்ட்டனுக்கு அது ஒரு கிறிஸ்துமஸ் பரிசாகக் கிடைத்திருக்கும் என்று நினைக்கிறேன். அவன் அதில் எழுத யோசித்துக்கூட இருந்திருக்க மாட்டான்."

* * *

நார்ட்டனின் நாட்குறிப்புப் புத்தகத்தைத் தான் ஏன் தூர எறிந்திருக்கவில்லை என்று ஹாரியும் யோசித்துக் கொண்டிருந்தான். அதன் பக்கங்கள் காலியாக இருந்தன என்ற உண்மை அவனுக்குத் தெரிந்திருந்த போதிலும், அதில் இடம்பெற்றிருந்த கதையைத் தான் படிப்பதுபோல அவன் அதன் பக்கங்களைக் குருட்டாம்போக்காகப் புரட்டிக் கொண்டிருந்தான். நார்ட்டன் என்ற பெயரைத் தான் அதற்கு முன்பு ஒருபோதும் கேள்விப்பட்டிருக்கவில்லை என்பது அவனுக்கு உறுதியாகத் தெரிந்திருந்தாலும், அப்பெயர் அவனுக்கு எதையோ உணர்த்தியது. தான் மிக மிகச் சிறியவனாக இருந்தபோது தனக்கு நார்ட்டன் என்றொரு நண்பன் இருந்ததுபோலவும் அதைத் தன்னால் நினைவுக்குக் கொண்டுவர முடியவில்லை என்பதுபோலவும் அவனுக்குத் தோன்றியது. ஆனால் அது அபத்தம். ஹாரி ஹாக்வார்ட்ஸுக்கு வருவதற்கு முன்பு, பெயருக்குக்கூட அவனுக்கு எந்தவொரு நண்பனும் இருந்ததில்லை. அவனுக்கு நண்பர்களே இல்லாதபடி டர்ஸ்லீ தம்பதியினர் பார்த்துக் கொண்டனர்.

ஆனாலும், நார்ட்டனைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ள ஹாரி முடிவு செய்தான். அதனால் அடுத்த நாள் அதிகாலையிலேயே, நார்ட்டனுக்குக் கிடைத்தச் சிறப்பு விருதை ஆராய, வெற்றிக் கோப்பைகள் வைக்கப்பட்டிருந்த அறைக்கு அவன் சென்றான். அதில் ஆர்வம் காட்டிய ஹெர்மயனியும், முழுக்க முழுக்க நம்பிக்கையற்று இருந்த ரானும் அவனுடன் வந்தனர். வெற்றிக் கோப்பைகள்

Scanned by CamScanner

வைக்கப்பட்டிருந்த அறையில் தான் பார்த்தது ஒரு ஜென்மத்திற்கு போதும் என்று ரான் கூறினான்.

நார்ட்டனின் பளிச்சூட்டப்பட்டிருந்த தங்க வெற்றிக் கேடயம் மூலையில் இருந்த ஓர் அலமாரியில் திணித்து வைக்கப்பட்டிருந்தது அது ஏன் அவனுக்கு வழங்கப்பட்டது என்பதற்கான விளக்கம் அதில் இடம்பெற்றிருக்கவில்லை. "நல்லவேளை. இல்லையென்றால் அது இன்னும் பெரிதாக இருந்திருக்கும். அதை நான் இன்னும் பளிச்சூட்டிக் கொண்டு இருந்திருப்பேன்," என்று ரான் கூறினான். ஆனால் முந்தைய தலைமை மாணவர்களின் பட்டியலிலும், மந்திரத்தில் சாதனைப் பதக்கம் வாங்கியிருந்தவர்களின் பட்டியலிலும் நார்ட்டனின் பெயர் இடம்பெற்றிருந்ததை அவர்கள் கண்டுபிடித்தனர்.

ரான் தன் மூக்கைத் திருகியவாறு, அதிருப்தியுடன், "அவனது கதை பெர்சியினுடையதைப் போலவே இருக்கிறது," என்று கூறினான். "மாணவ அணித் தலைவன், தலைமை மாணவன் – ஒருவேளை, ஒவ்வொரு வகுப்பிலும் அவன்தான் முதலிடம் வகித்தான்போலும்?"

"படிப்பில் முதலிடத்தைப் பெறுவது என்னவோ செய்யப்படக்கூடாத ஒரு காரியம் என்பதுபோலக் கூறுகிறாயே?" என்று ஹெர்மயனி அலுத்துக் கொண்டாள். ரான் கூறியது அவளைக் காயப்படுத்தியிருந்ததுபோல இருந்தது அவளது குரல்.

* * *

இப்போது ஹாக்வார்ட்ஸ் கோட்டைமீது சூரியன் தன் கருணைக் கண்ணைத் திறந்திருந்தான். வெயில் மீண்டும் பலவீனமாக அடிக்கத் துவங்கியிருந்தது. கோட்டைக்குள் இருந்தவர்களின் மனநிலையிலும் நம்பிக்கை அதிகரிக்கத் துவங்கியிருந்தது. ஜஸ்டின் மற்றும் நிக்கிற்குப் பிறகு வேறு யார்மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கவில்லை. மன்ட்ரேக்குகளின் மனநிலை ஏற்ற இறக்கங்களுடன் இருந்ததாலும், அவை அமுக்கமாக இருந்ததாலும், அவை வெகுவேகமாகத் தமது குழந்தைப் பருவத்தைக் கடந்து வந்து கொண்டிருந்தன என்று மேடம் பாம்ஃபிரே மகிழ்ச்சியுடன் அறிவித்தார்.

ஒரு நாள் மதியம், "மன்ட்ரேக்குகளின் முகங்களின்மீது இருக்கின்ற பருக்களும் வடுக்களும் மறைந்துவிட்டால் வேளை நெருங்கிவிட்டது என்று அர்த்தம்," என்று மேடம் பாம்ஃபிரே, கனிவுடன் ஃபில்ச்சிடம் கூறிக் கொண்டிருந்ததை ஹாரி கேட்க நேர்ந்தது. "அதன் பிறகு, அவற்றை வெட்டியெடுத்துக் காய்ச்ச வெகுகாலம் பிடிக்காது. உங்களுடைய நாரிஸ் பூனையும் உங்களிடம் மீண்டும் திரும்பி வந்துவிடும்."

ஒருவேளை ஸ்லிதரினின் வாரிசு தன் தைரியத்தை இழந்திருக்கக்கூடும் என்று ஹாரி நினைத்தான். இப்போது பள்ளி மிகுந்த கண்காணிப்புடனும் எச்சரிக்கையுடனும் இருந்ததால், ரகசியங்கள் அடங்கிய அறையைத் திறப்பது மேலும் மேலும் அபாயகரமானதாக ஆகியிருக்கக்கூடும். அதனுள் என்ன

Scanned by CamScanner

அடைக்கப்பட்டிருந்ததோ, அது, ஒருவேளை மேலும் ஐம்பது வருடங்களுக்குத் தூங்குவதற்குத் தன்னைத் தயார்படுத்திக் கொண்டிருக்கக்கூடும் . . .

ஆனால் ஹஃபில்பஃப் அணியைச் சேர்ந்த மாணவனான எர்னியால் மகிழ்ச்சியாக இருக்க முடியவில்லை. ஹாரிதான் குற்றவாளி என்றும், தான் தன் கருத்துக்களைத் தேவையில்லாமல் வெளிப்படையாகப் பேசிவிட்டிருந்தோம் என்றும் அவன் இன்னும் நம்பிக் கொண்டிருந்தான். பீவ்ஸும் நிலைமையை மோசமாக்கிக் கொண்டிருந்தது. கூட்டமாக இருந்த தாழ்வாரங்களில் அது திடீரென்று தோன்றி, "ஹாரி பாட்டர், சூரப்புலி பாட்டர் . . ." என்று பாடிக் கொண்டிருந்தது. அதற்கேற்ற ஒரு நடனத்தையும் அது இப்போது கண்டுபிடித்திருந்தது.

அந்தத் தாக்குதல்கள் நிறுத்தப்பட்டதற்குத் தான்தான் காரணம் என்று லாக்ஹார்ட் நினைத்துக் கொண்டிருந்தார். கிரிஃபின்டார் மாணவர்கள் உருவமாற்று வகுப்பிற்குப் போவதற்காக நின்று கொண்டிருந்தபோது, லாக்ஹார்ட், பேராசிரியர் மெக்கானகல்லிடம் கூறிக் கொண்டிருந்ததை ஹாரி கேட்க நேர்ந்தது.

அவர் எல்லாம் தெரிந்தவர்போலத் தன் மூக்கை லேசாகத் தட்டிக் கொண்டும் கண்ணடித்துக் கொண்டும், "மெக்கானகல், இனி தாக்குதல் எதுவும் நடக்கும் என்று நான் நினைக்கவில்லை," என்று கூறினார். "ரகசியங்கள் அடங்கிய அறை இம்முறை ஒரேயடியாக மூடப்பட்டுவிட்டது என்று நான் நினைக்கிறேன். நான் அவனை வெகு விரைவில் பிடித்துவிடுவேன் என்பதைக் குற்றவாளி உணர்ந்திருக்க வேண்டும். நான் அவன்மீது பாய்ந்து அவனைத் துவம்சம் செய்வதற்கு முன்பு, இதோடு நிறுத்திக் கொள்வது புத்திசாலித்தனம் என்று அவன் முடிவு செய்திருக்க வேண்டும்.

"இப்போது நமக்குத் தேவை, மக்களை உற்சாகப்படுத்தும் ஒன்றுதான். கடந்த பருவத்தின் கசப்பான நினைவுகளை அடித்துச் செல்லும் விதத்தில் அது இருக்க வேண்டும்! இப்போது நான் இதற்கு மேல் எதையும் கூற மாட்டேன். ஆனால் என்ன செய்ய வேண்டும் என்று எனக்குத் தெரியும் . . ."

அவர் மீண்டும் தன் மூக்கைத் தட்டியவாறு நடையைக் கட்டினார்.

மக்களை உற்சாகப்படுத்துவதற்கு லாக்ஹார்ட் யோசித்து வைத்திருந்தது என்னவென்று பிப்ரவரி பதினான்காம் நாளன்று பேரரங்கில் காலை உணவைச் சாப்பிடச் சென்றபோது தெளிவானது. அதற்கு முந்தைய நாள், ஒரு குவிடிச் பயிற்சி இரவு வெகுநேரம் வரை நீடித்ததால் ஹாரி சரியாகத் தூங்கியிருக்கவில்லை. அதனால் அவன் பேரரங்கிற்கு அரக்கப் பரக்க வந்தபோது சற்றுத் தாமதமாகி இருந்தது. தான் ஒரு தவறான அறையில் நுழைந்துவிட்டிருந்ததாக ஒரு கணம் அவன் நினைத்தான்.

Scanned by CamScanner

இளஞ்சிவப்பு நிறத்திலிருந்த மிகப் பெரிய மலர்களால் அந்த அரங்கின் சுவர்கள் முழுவதும் நெருக்கமாக அலங்கரிக்கப்பட்டு இருந்தன. வெளிறிய நீல நிற மேற்கூரையிலிருந்து, இதய வடிவில் இருந்த காகிதத் துண்டுகள் கொட்டிக் கொண்டிருந்தன. ஹாரி நேராக கிரிஃபன்டார் அணியினர் இருந்த பெஞ்சை நோக்கிச் சென்றான். அங்கு ரான் நிலை கொள்ளாமல் தவித்துக் கொண்டிருந்தான். ஹெர்மயனி உற்சாகமாக இருந்தாள்.

ஹாரி தன் இடத்தில் உட்கார்ந்து கொண்டு, தன்னுடைய தட்டின்மீது விழுந்திருந்த காகிதத் துண்டுகளைப் பொறுக்கியவாறு, "இங்கு என்னதான் நடந்து கொண்டிருக்கிறது?" என்று கேட்டான்.

வெறுப்பின் உச்சகட்டத்தில் இருந்த ரான், ஆசிரியர்கள் அமர்ந்திருந்த திசையை நோக்கிக் கை காட்டினான். அறையின் அலங்காரத்திற்குப் பொருத்தமாக, கவர்ச்சியான இளஞ்சிவப்பு நிற அங்கியுடன் இருந்த லாக்ஹார்ட், அமைதியாக இருக்குமாறு கூட்டத்தினரை நோக்கிக் கை காட்டினார். அவருக்கு இருபுறமும் இருந்த ஆசிரியர்கள் எவர் முகத்திலும் ஈயாடவில்லை. பேராசிரியர் மெக்கானகல்லின் கன்னத்தில் ஒரு தசை இழுத்துக் கொண்டிருந்ததை ஹாரி கவனித்தான். அப்போதுதான் ஒரு பெரிய கோப்பை 'எலும்பு–விளைவிப்பி'யை யாரோ தன்னைக் குடிக்க வைத்திருந்தது மாதிரியான முகத்தோற்றத்துடன் ஸ்னேப் உட்கார்ந்திருந்தார்.

"காதலர் தின நல்வாழ்த்துக்கள்!" என்று லாக்ஹார்ட் சத்தமாகக் கூறினார். "எனக்கு வாழ்த்து அட்டைகள் அனுப்பிய நாற்பத்து ஆறு பேருக்கு நான் நன்றி கூறிக் கொள்கிறேன். ஆம்! உங்களைத் திக்குமுக்காட வைத்திருக்கும் இந்த அலங்காரத்தைச் செய்தது நான்தான். ஆனால் இது – இது ஒரு தொடக்கம்தான்!"

லாக்ஹார்ட் தன் கைகளைத் தட்டினார். வரவேற்பறை வாசற்கதவின் வழியாக, கடுகடுப்புடன் இருந்த ஒரு டஜன் சித்திரக் குள்ளர்கள் உள்ளே நுழைந்தனர். அவர்கள் சாதாரணமாக வரவில்லை. அவர்கள் எல்லோரும் தங்க நிற இறக்கைகளை அணிந்து கொண்டு கையில் யாழ் இசைக் கருவியுடன் வந்தனர்.

"இவர்கள் என்னுடைய மன்மதத் தூதுவர்கள்!" என்று லாக்ஹார்ட் வாயெல்லாம் பல்லாகக் கூறினார். "இவர்கள் இன்று பள்ளி நெடுகிலும் காதலர் தின வாழ்த்து அட்டைகளை வினியோகித்துக் கொண்டு திரிந்து கொண்டிருப்பார்கள். வேடிக்கைகள் அதோடு முடிந்துவிடாது! என்னுடைய சக ஆசிரியர்கள் இதில் கலந்து கொள்ள விரும்புவார்கள் என்று நான் நினைக்கிறேன். காதல் மாயத் திரவத்தை எப்படிக் காய்ச்சுவது என்று நீங்கள் ஏன் பேராசிரியர் ஸ்னேப்பைக் கேட்கக்கூடாது? அதேபோல, நான் இதுவரை சந்தித்துள்ளதிலேயே, காதல் வசியங்கள் பற்றி மிக அதிகமாகத் தெரிந்து வைத்துள்ளவர் பேராசிரியர் ஃபிளிட்விக்தான். வயதானாலும் அவர் ஒரு கில்லாடியான பேர்வழி!"

Scanned by CamScanner

பேராசிரியர் ஃபிளிட்விக் தன் முகத்தைத் தன் கைகளுக்குள் புதைத்துக் கொண்டார். தப்பித்தவறி எவனாவது தன்னைக் காதல் மாயத் திரவம் பற்றிக் கேட்டால் அவனுடைய தொண்டைக்குழி வழியாக வலுக்கட்டாயமாக விஷத்தைத் திணித்துவிடத் தயாராக இருந்தவர்போல ஸ்னேப் காணப்பட்டார்.

தங்களுடைய முதல் வகுப்பிற்காக ஹாரியும் ரானும் ஹெர்மயனியும் அந்தப் பேரரங்கைவிட்டு வெளியேறியபோது, ரான், ஹெர்மயனியிடம், "அந்த நாற்பத்தாறு பேரில் நீயும் ஒருத்தி இல்லை என்று கூறு," என்று கூறினான். ஹெர்மயனி திடீரென்று தனது வகுப்பு அட்டவணையைத் தன்னுடைய பையில் தேடுவதில் மும்முரமாக ஆனாள். அவள் எதுவும் பேசவில்லை.

அன்று முழுவதும் காதலர் தின அட்டைகளைக் கொடுப்பதற்காகச் சித்திரக் குள்ளர்கள் எல்லா வகுப்புகளிலும் அனுமதியின்றிப் புகுந்து கொண்டிருந்தனர். அது ஆசிரியர்களுக்கு மிகவும் எரிச்சலை ஏற்படுத்தியது. அன்று மதியம் கிரிஃபின்டார் அணியினர் தங்களுடைய வசிய வகுப்பிற்காக மேற்தளத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது, ஒரு சித்திரக் குள்ளன் ஹாரியைப் பிடித்துக் கொண்டான்.

"ஏய்! உன்னைத்தான்! ஆரி பாட்டர்!" என்று ஒரு சித்திரக் குள்ளன் கூப்பிட்டான். அவனது முகத்தை ஒரு விரிவான புன்னகை அலங்கரித்திருந்தது. அவன் மற்றவர்களை இடித்துத் தள்ளிக் கொண்டு ஹாரியை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

ஜின்னி உட்படப் பல முதல் வருட மாணவர்கள் நிறைந்திருந்த ஒரு கூட்டத்திற்கு நடுவே காதலர் தின வாழ்த்து அட்டையைப் பெற்றுக் கொள்வது என்ற யோசனையே ஹாரியை வியர்த்துப் போகச் செய்தது. அவன் அங்கிருந்து தப்பித்து ஓட முயன்றான். அவன் ஓட்டமெடுப்பதற்குள் அந்தச் சித்திரக் குள்ளன், மற்றவர்களின் கணுக்கால்களை மிதித்துத் தள்ளி, கூட்டத்தை விலக்கிவிட்டு அவனை அணுகியிருந்தான்.

"ஒரு சங்கீத வாழ்த்துச் செய்தியை ஆரிப் பாட்டருக்கு நான் நேரில் கொடுக்க வேண்டும்," என்று கூறிவிட்டு, அவன் தன் யாழை ஒருவிதமான அச்சுறுத்தும் தொனியில் மீட்டத் துவங்கினான்.

ஹாரி அங்கிருந்து தப்பிக்க முயன்று கொண்டே, "இங்கு வேண்டாம்," என்று கிசுகிசுத்தான்.

அவன் ஹாரியின் புத்தகப் பையைப் பிடித்துப் பின்னால் இழுத்தவாறு, "அப்படியே நில்லுங்கள்!" என்று உறுமினான்.

ஹாரி தன் பையை இழுத்துக் கொண்டே, "என்னை விட்டுவிடு!" என்று இரைந்தான்.

பெரும் சத்தத்துடன் அவனது பை இரண்டாகக் கிழிந்து அதிலிருந்த அவனது புத்தகங்கள், மந்திரக்கோல், இறகுப் பேனா ஆகிய அனைத்தும் தரையில் கொட்டின. அவனது மைப்புட்டி உடைந்து அவை எல்லாவற்றின்மீதும் மையால் அபிஷேகம் செய்தது.

Scanned by CamScanner

அந்தச் சித்திரக் குள்ளன் பாடத் துவங்குவதற்கு முன்பாக எல்லாவற்றையும் பொறுக்கிவிட வேண்டும் என்று ஹாரி போராடினான். அதனால் அந்தத் தாழ்வாரத்தில் ஒரு நெரிசல் ஏற்பட்டது.

"இங்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது?" என்று, இழுத்து இழுத்துப் பேசிய ஜீவனற்ற ஒரு குரல் கேட்டது. அது மால்ஃபாய். ஹாரி, கிழிந்து போயிருந்த தனது பையில் அவசர அவசரமாக எல்லாவற்றையும் அள்ளிப் போட்டுக் கொண்டிருந்தான். தனக்கு வந்திருந்த காதலர் தின சங்கீத வாழ்த்துச் செய்தியை மால்ஃபாய் கேட்பதற்கு முன்பு அந்த இடத்தைத் தான் காலி செய்துவிட வேண்டும் என்று அவன் தவியாய்த் தவித்தான்.

"இங்கு என்ன களேபரம்?" என்று ஹாரிக்குப் பரிச்சயமான இன்னொரு குரல் கேட்டது. பெர்சி அங்கு தோன்றினான்.

இதனால் இன்னும் தடுமாற்றம் அடைந்த ஹாரி அங்கிருந்து ஓடத் தலைப்பட்டான். ஆனால் அந்தச் சித்திரக் குள்ளன் ஹாரியின் முழங்கால்களை இறுகக் கட்டிப் பிடித்தான். ஹாரி தரையில் தடுமாறி விழுந்தான்.

அவன் ஹாரியின் கணுக்கால்களின்மீது ஏறி உட்கார்ந்து கொண்டு, "சரி, உன்னுடைய காதலர் தின சங்கீத வாழ்த்துச் செய்தி இதோ!" என்று கூறினான்.

புதிதாகப் போடப்பட்டிருக்கும் தவளை ஊறுகாயின்
பசுமை நிறத்தில் இருக்கும் அவனது கண்கள்!
கரும்பலகையின் நிறத்தில் இருக்கும் அவனது தலைமுடி!
உண்மையிலேயே தெய்வீகமாகத் தோன்றும் அவன்
என்னுடையவனாக இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!
தீய மந்திரவாதிகளின் சக்கரவர்த்தியை வெற்றி கொண்டக்
கதாநாயகன் நீ!

ஹாரியால் அந்த இடத்திலிருந்து மாயமாய் மறைய முடியும் என்றால், கிரிங்காட்ஸ் வங்கியில் இருந்த தனது அனைத்துத் தங்கத்தையும் அவன் அதற்காகக் கொடுத்திருப்பான். மற்ற எல்லோருடனும் சேர்ந்து தானும் சிரிக்க முயற்சித்தவாறே அவன் எழ முயற்சித்தான். சித்திரக் குள்ளன் அவன்மீது ஏறி உட்கார்ந்திருந்த இடம் மரத்துப் போயிருந்தது. பெர்சி கூட்டத்தினரைக் கலைக்கத் தன்னால் முடிந்ததைச் செய்தான். கூட்டத்தினரில் சிலர் களிப்புடன் சிரித்துக் கொண்டே சென்றனர்.

"எல்லோரும் கலைந்து செல்லுங்கள்! எல்லோரும் கலைந்து செல்லுங்கள்! மணியடிக்க இன்னும் ஐந்து நிமிடங்கள்தான் இருக்கின்றன," என்று பெர்சி ஒருசில இளம் மாணவர்களை விரட்டிக் கொண்டிருந்தான். "மால்ஃபாய், நீயும்தான்!"

ஹாரி திரும்பிப் பார்த்தான். மால்ஃபாய் கீழே குனிந்து எதையோ பொறுக்கி, பிறகு தன் பல்லைக் காட்டிக் கொண்டே அதைக்

Scanned by CamScanner

இராபிடமும் காயலிடமும் காட்டியதை ஹாரி கண்டான். நார்ட்டனின் நாட்குறிப்புப் புத்தகத்தை மால்ஃபாய் எடுத்து வைத்திருந்தான் என்பது ஹாரிக்குப் புரிந்தது.

"அதை என்னிடம் கொடுத்து விடு!" என்று ஹாரி அமைதியாகக் கூறினான்.

"இதில் ஹாரி பாட்டர் என்ன எழுதியிருக்கிறான் என்று நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்," என்று மால்ஃபாய் கூறினான். அவன் அந்த நாட்குறிப்பின் அட்டையில் இருந்த வருடத்தைப் பார்க்கவில்லை என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. அவன் அது ஹாரியின் நாட்குறிப்பு என்று நினைத்திருக்க வேண்டும். அங்கு வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் திடீரென்று மௌனமானார்கள். ஜின்னி நடுங்கிப் போய் அந்த நாட்குறிப்பையும் ஹாரியையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"அதை ஹாரியிடம் கொடுத்துவிடு!" என்று பெர்சி கண்டிப்புடன் கூறினான்.

மால்ஃபாய் அந்த நாட்குறிப்பை, ஹாரியை வெறுப்பேற்றும் விதமாக அவனை நோக்கி ஆட்டிக் கொண்டே, "இதைப் பார்த்து முடித்தவுடன் கொடுத்துவிடுகிறேன்," என்று கூறினான்.

பெர்சி, "பள்ளியின் மாணவ அணித் தலைவன் என்ற முறையில் –" என்று ஆரம்பித்த நேரத்தில் ஹாரி தன் பொறுமையை இழந்திருந்தான். அவன் தன் மந்திரக்கோலை வெளியே எடுத்து, **"எக்ஸ்பெல்லியார்மஸ்!"** என்று கத்தினான். ஸ்னேப் எப்படி லாக்ஹார்ட்டை நிராயுதபாணியாக ஆக்கினாரோ, துல்லியமாக அதேபோல, தன்னுடைய கையிலிருந்த நாட்குறிப்புப் புத்தகம் தன் கையைவிட்டு எகிறிக் காற்றில் பறந்ததை மால்ஃபாய் பார்த்தான். வாயெல்லாம் பல்லாக ரான் அதைப் பிடித்துக் கொண்டான்.

பெர்சி, "ஹாரி!" என்று சத்தமாகக் கூப்பிட்டான். "பள்ளியின் தாழ்வாரங்களில் மந்திரவித்தைகளைப் பயன்படுத்தக்கூடாது. நான் இதைப் பற்றிப் புகார் செய்ய வேண்டியிருக்கும்!"

ஆனால் ஹாரி அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. அவன் மால்ஃபாயை முறியடித்திருந்தான். அது போதும். அதற்காக கிரிஃபின்டார் அணி ஐந்து புள்ளிகளை இழக்க நேரிட்டாலும் பரவாயில்லை. மால்ஃபாய் கடுங்கோபத்தில் சீறிக் கொண்டிருந்தான். ஜின்னி தனது வகுப்பிற்குச் செல்வதற்காக மால்ஃபாயைக் கடந்து சென்றபோது, அவன் அவளைப் பார்த்து, "உன்னுடைய காதலர் தின வாழ்த்து ஹாரி பாட்டருக்குப் பிடித்திருந்ததுபோலத் தெரியவில்லை," என்று வஞ்சகமாகக் கூறினான்.

ஜின்னி தன் முகத்தை மூடிக் கொண்டே வகுப்பிற்குள் ஓடினாள். ரான் உறுமிக் கொண்டே தனது மந்திரக்கோலை வெளியே உருவினான். ஆனால் ஹாரி உடனடியாக அவனைத் தள்ளிக் கொண்டு சென்றான். ரான் தன்னுடைய வசிய வகுப்பு முழுவதும்

Scanned by CamScanner

நத்தைகளை வாந்தி எடுத்துக் கொண்டு கழிக்க வேண்டியிருக்கவில்லை.

அவர்கள் இருவரும் பேராசிரியர் ஃபிளிட்விக்கின் வகுப்பைச் சென்றடையும்வரை, நார்ட்டனின் நாட்குறிப்புப் புத்தகம் ஒரு விஷயத்தில் மிகவும் வித்தியாசப்பட்டு இருந்ததை ஹாரி கவனிக்கவில்லை. அவனுடைய மற்றப் புத்தகங்கள் எல்லாம் ரத்தச் சிவப்பு மையில் குளித்திருந்தன. ஆனால் அந்த நாட்குறிப்புப் புத்தகம் மட்டும் மை கொட்டுவதற்கு முன்பு இருந்ததைப்போலவே சுத்தமாக இருந்தது. அதை அவன் ரானிடம் சொல்ல முன்வந்தான். ஆனால் ரானின் மந்திரக்கோல் மீண்டும் தகராறு செய்து கொண்டிருந்தது. அதன் ஒரு முனையிலிருந்து பெரிய ஊதா நிற நீர்க்குமிழிகள் வெளிப்பட்டுக் கொண்டிருந்ததால், அவனுக்கு வேறு எதிலும் நாட்டம் இருக்கவில்லை.

* * *

அன்றிரவு, ஹாரி, தனது பொதுப் படுக்கையறையில் எல்லோருக்கும் முன்னதாகவே படுக்கச் சென்றான். ஃபிரெட்டும் ஜார்ஜும் மீண்டும் ஒருமுறை, "புதிதாகப் போடப்பட்டிருக்கும் தவளை ஊறுகாயின் பசுமை நிறத்தில் இருக்கும் அவனது கண்கள்!" என்ற வரிகளைப் பாடுவதை அவனால் சகித்து கொள்ள முடியாது என்பது அதற்கு ஒரு காரணம். அதோடு, அவன் நார்ட்டனின் நாட்குறிப்புப் புத்தகத்தை மீண்டும் ஒருமுறை ஆராய விரும்பினான். ஆனால் ரான் அதை வெட்டி வேலையாகக் கருதினான் என்பதை அவன் அறிந்திருந்தான்.

ஹாரி தன்னுடைய படுக்கையில் ஏறி உட்கார்ந்து கொண்டு, அந்த நாட்குறிப்பின் காலியான பக்கங்களைப் புரட்டினான். அவற்றில் ஒன்றில்கூட ரத்தச் சிவப்பு மையின் அறிகுறி இருக்கவில்லை. பின் அவன் தன் படுக்கைக்கு அருகே இருந்த தனது சிறிய அலமாரியில் இருந்து ஒரு புதிய மை பாட்டிலை எடுத்து, அதில் தன் இறகுப் பேனாவை முக்கி வெளியே எடுத்து, அந்த நாட்குறிப்பின் முதல் பக்கத்தில் ஒரு சொட்டு மையை வடியவிட்டான்.

அந்த மை ஒரு நொடி அந்தக் காகிதத்தில் பிரகாசமாக மிளிர்ந்தது. அடுத்தக் கணம், அதை அந்தத் தாள் அப்படியே உறிஞ்சிக் கொண்டதுபோல அது மாயமாய் மறைந்தது. பரவசமடைந்த ஹாரி, தன் இறகுப் பேனாவை மீண்டும் அந்த மையில் முக்கி, 'என் பெயர் ஹாரி பாட்டர்' என்று எழுதினான்.

அந்த எழுத்துக்களும் ஒரு கணம் அந்தப் பக்கத்தில் தங்கியிருந்துவிட்டுப் பிறகு மாயமாய் மறைந்தன. பின் திடீரென்று ஒன்று நிகழ்ந்தது.

ஹாரி பயன்படுத்தியிருந்த அதே மையில், அவன் எழுதியிராத வார்த்தைகள் அப்பக்கத்திலிருந்து கசிந்தன.

"ஹலோ, ஹாரி பாட்டர்! என் பெயர் நார்ட்டன். என் நாட்குறிப்புப் புத்தகம் உனக்கு எப்படிக் கிடைத்தது?"

Scanned by CamScanner

அந்த வார்த்தைகளும் மெதுவாக மறைந்தன. ஆனால் அதற்கு முன்பாக ஹாரி அதற்கு பதிலளிக்கத் துவங்கியிருந்தான்.

"யாரோ அதைக் கழிவுத் தொட்டியில் தூக்கி எறிந்து அழிக்கப் பார்த்திருக்கிறார்கள்."

அவன் நார்ட்டனின் பதிலுக்காக ஆவலுடன் காத்திருந்தான்.

"அதிர்ஷ்டவசமாக, என்னுடைய நினைவலைகளை, சாதாரண மையைவிட அதிக காலம் நீடித்து நிலைத்து இருக்கக்கூடிய ஒரு வழியில் நான் பதிவு செய்து வைத்துள்ளேன். ஆனால் இந்த நாட்குறிப்பு யாராலும் படிக்கப்பட்டுவிடக்கூடாது என்று சிலர் விரும்புவார்கள் என்பதை நான் எப்போதும் அறிந்திருந்தேன்."

தன்னுடைய ஆர்வமிகுதியால் அப்பக்கத்தில் மையைச் சிதறவிட்டிருந்த ஹாரி, "நீ என்ன சொல்கிறாய்?" என்று சிறுக்கினான்.

"இந்த நாட்குறிப்பு மிகவும் பயங்கரமான நினைவலைகளை உள்ளடக்கியுள்ளது. மூடி மறைக்கப்பட்ட உண்மைகள். ஹாக்வார்ட்ஸ் மந்திர தந்திர மாயாஜாலப் பள்ளியில் நடந்த விஷயங்கள்."

"நான் தற்சமயம் அங்குதான் படித்துக் கொண்டிருக்கிறேன்," என்று ஹாரி அவசர அவசரமாக பதிலளித்தான். "இங்கு இப்போது படுபயங்கரமான விஷயங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. ரகசியங்கள் அடங்கிய பாதாள அறை குறித்து உனக்கு ஏதாவது தெரியுமா?"

ஹாரியின் இதயம் படபடத்துக் கொண்டிருந்தது. நார்ட்டனின் பதில் விரைவாக வந்தது. நார்ட்டனின் கையெழுத்து இப்போது கோழிக் கிறுக்கலாக மாறியிருந்தது. அவன் தனக்குத் தெரிந்த எல்லாவற்றையும் சொல்வதற்கு அவசரப்பட்டதுபோலத் தெரிந்தது.

"ரகசியங்கள் அடங்கிய பாதாள அறை பற்றி எனக்கு நன்றாகவே தெரியும். என்னுடைய காலகட்டத்தில் அது ஒரு கட்டுக்கதை என்றும், அப்படிப்பட்ட ஒன்று நிஜத்தில் கிடையாது என்றும் எங்களிடம் கூறப்பட்டது. ஆனால் அது ஒரு கடைந்தெடுத்தப் பொய். என்னுடைய ஐந்தாவது வருடத்தில், ரகசியங்கள் அடங்கிய பாதாள அறை திறக்கப்பட்டது. அந்த ராட்சஸ விலங்கு பல மாணவர்களைத் தாக்கியது. ஒரு மாணவி கொல்லப்பட்டாள். ரகசியங்கள் அடங்கிய அறையைத் திறந்தவனை நான் கையும் களவுமாகப் பிடித்தேன். அவன் பள்ளியில் இருந்து நீக்கப்பட்டான். ஹாக்வார்ட்ஸில் இப்படிப்பட்ட ஒரு சம்பவம் நிகழ்ந்திருந்தது குறித்து அவமானமடைந்த தலைமையாசிரியர் பேராசிரியர் டிப்பட், உண்மையை வெளியே சொல்ல என்னைத் தடை செய்துவிட்டார். இறந்து போன அந்த மாணவி எதிர்பாராத ஒரு விபத்தில் இறந்துவிட்டாள் என்ற கதை பரப்பப்பட்டது. நான் பட்டச் சிரமங்களுக்காக அவர்கள் ஓர் அழகான, பளபளப்பான, என் பெயர் பொறிக்கப்பட்டக் கேடயத்தை எனக்குத் தந்து, நான் என் வாயை மூடிக் கொண்டிருக்க வேண்டும் என்று என்னை எச்சரித்தனர். ஆனால் இது மீண்டும் நிகழக்கூடும் என்பதை நான் அறிந்திருந்தேன். அந்த ராட்சஸ விலங்கு தொடர்ந்து

Scanned by CamScanner

வாழ்ந்து வந்தது. அதனைத் திறந்துவிடக்கூடிய சக்தி படைத்தவர்கள் சிறையில் அடைக்கப்படவில்லை."

ஹாரி வேகமாக பதிலெழுத வேண்டும் என்ற முனைப்பில் தன்மை பாட்டிலைக் கிட்டத்தட்டக் கொட்டிக் கவிழ்த்திருந்தான்.

"அது இப்போது நிகழ்ந்து கொண்டிருக்கிறது. மூன்று தாக்குதல்கள் நிகழ்த்தப்பட்டுள்ளன. அதற்குப் பின்னால் யார் இருக்கிறார்கள் என்று எவருக்கும் தெரியவில்லை. கடந்த முறை அதைச் செய்தது யார்?"

"நீ விரும்பினால் அதை என்னால் உனக்குக் காட்ட முடியும்," என்று பதில் வந்தது. **"நீ வெறுமேன என் வார்த்தையை நம்ப வேண்டாம். நான் அவனைக் கையும் களவுமாகப் பிடித்த இரவு தொடர்பான என் நினைவிற்குள் உன்னை என்னால் கூட்டிச் செல்ல முடியும்."**

ஹாரி தயங்கினான். அவனது இறகுப் பேனா, நாட்குறிப்புப் புத்தகத்திற்குச் சிறிது உயரே அந்தரத்தில் நின்று கொண்டிருந்தது. நார்ட்டன் என்ன கூற வந்தான்? வேறோருவருடைய ஞாபகத்திற்குள் எப்படித் தன்னால் செல்ல முடியும்? ஹாரி அந்தப் பொதுப் படுக்கையறையின் வாசற்கதவைப் பதற்றத்துடன் பார்த்தான். அறைக்குள் இருள் கவிழ்ந்து கொண்டிருந்தது. அவன் மீண்டும் அப்புத்தகத்தைப் பார்த்தபோது அதில் புதிய வார்த்தைகள் தோன்றியிருந்தன.

"அதை உனக்குக் காட்ட என்னை அனுமதி!"

ஹாரி ஒரு சொடுக்குப் போடும் நேரம் தயங்கினான். பின் ஒரே ஒரு வார்த்தையை அதில் எழுதினான்.

"சரி."

திடீரென்று அந்த நாட்குறிப்புப் புத்தகத்தின் பக்கங்கள், வேகமாக அடிக்கும் காற்றில் பறப்பதுபோலப் பறந்து ஜூன் மாதத்தின் பாதியில் வந்து நின்றது. ஜூன் பதிமூன்றாம் நாள் என்று எழுதப்பட்டிருந்த சதுரக் கட்டம் ஒரு குட்டித் தொலைக்காட்சித் திரைபோல மாறியதை, ஹாரி, திறந்த வாய் மூடாமல் பார்த்துக் கொண்டிருந்தான். கைகள் லேசாக நடுங்க, அவன் அந்த நாட்குறிப்பைத் தன் கைகளால் எடுத்து, அச்சிறிய தொலைக்காட்சிக் கட்டத்தைத் தன் கண்களுக்கு மிக அருகில் வைத்துக் கொண்டான். தனக்கு என்ன நேர்ந்து கொண்டிருந்தது என்பதை அவன் உணர்ந்து கொள்வதற்கு முன்பாகவே அவன் முன்னோக்கிச் சரிந்து கொண்டிருந்தான்; அந்தக் கட்டமும் பெரிதாகிக் கொண்டிருந்தது. தனது உடல் தான் படுத்திருந்த படுக்கையைவிட்டுப் புறப்பட்டதையும், அந்த நாட்குறிப்புப் புத்தகத்தின் பதிமூன்றாம் நாள் பக்கத்தில் இருந்த துளை வழியாக, வண்ணங்கள் மற்றும் இருளால் நிரம்பியிருந்த ஒரு சுழலுக்குள் தான் தலைகுப்புறச் சரிந்ததையும் அவன் உணர்ந்தான்.

சிறிது நேரத்தில், தனது கால்கள் திடமான பகுதி ஒன்றைத் தொட்டதை அவன் உணர்ந்தான். பிறகு, நடுங்கிக் கொண்டே அவன்

Scanned by CamScanner

நிமிர்ந்து நின்றான். அவனைச் சுற்றித் தெளிவற்று இருந்த உருவங்கள் திடீரென்று தெளிவாயின.

தான் எங்கு இருந்தோம் என்பதை ஹாரி உடனடியாக உணர்ந்து கொண்டான். வட்ட வடிவமாக இருந்த அந்த அறையில் இருந்த புகைப்படங்களில் இருந்தவர்கள் தூங்கிக் கொண்டிருந்தனர். அது டம்பிள்டோரின் அறை. ஆனால் அந்த மேசைக்குப் பின்னால் இருந்தது டம்பிள்டோர் அல்ல. அறிவார்ந்த, ஒல்லியான ஒரு மந்திரவாதி அங்கு அமர்ந்திருந்தார். ஒருசில வெள்ளை முடிக் கற்றைகளைத் தவிர அவரது தலை முழு வழுக்கையாக இருந்தது. மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் அவர் ஒரு கடிதத்தைப் படித்துக் கொண்டிருந்தார். ஹாரி அந்த மனிதரை அதற்கு முன்பு ஒருபோதும் சந்தித்திருக்கவில்லை.

ஹாரி நடுங்கிக் கொண்டே, "மன்னிக்க வேண்டும். நான் உங்களைத் தொந்தரவு செய்யும் எண்ணத்தோடு . . ." என்று தட்டுத் தடுமாறிக் கூறினான்.

ஆனால் அந்த மந்திரவாதி நிமிரக்கூட இல்லை. அவர் தொடர்ந்து படித்துக் கொண்டிருந்தார். ஹாரி அவரது மேசைக்கு அருகில் சென்று, "ம்ம் – நான் இங்கிருந்து போய்விடுகிறேன் – நான் போகலாமா?" என்று கேட்டான்.

அப்போதும் அந்த மந்திரவாதி அவனை அலட்சியம் செய்தார். அவர் அவன் கூறியதைக் கேட்ட மாதிரிகூடத் தெரியவில்லை. ஒருவேளை அந்த மந்திரவாதி காது கேளாதவராக இருக்கக்கூடும் என்று நினைத்து ஹாரி தன் குரலை உயர்த்தினான்.

"உங்களைத் தொந்தரவு செய்வதற்கு மன்னிக்கவும். இப்போது நான் போய்விடுகிறேன்," என்று அவன் கத்தினான்.

அந்த மந்திரவாதி ஒரு பெருமூச்சுடன் அந்தக் கடிதத்தை மடித்து வைத்துவிட்டு, எழுந்து நின்று, ஹாரியை ஏறிட்டுக்கூடப் பார்க்காமல் அவனைக் கடந்து சென்று, தனது சன்னலின் திரைச்சீலையை விலக்கினார்.

சன்னலுக்கு வெளியே இருந்த வானம் பிரகாசமான சிவப்பு நிறத்தில் இருந்தது. அது அந்தி வேளைபோலத் தெரிந்தது. அந்த மந்திரவாதி மீண்டும் தன் மேசைக்குச் சென்று அமர்ந்தார். அவர் தன்னுடைய பெருவிரலைத் திருகிக் கொண்டு, வாசற்கதவையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

ஹாரி சுற்றுமுற்றும் பார்த்தான். அங்கு ஃபாக்ஸ் பீனிக்ஸ் பறவை இருக்கவில்லை. 'விர்' என்ற ஒலியுடன் சுழன்று கொண்டிருந்த வெள்ளிக் கருவிகளும் அங்கு இருக்கவில்லை. இது நார்ட்டன் காலத்திய ஹாக்வார்ட்ஸ். அதனால் ஹாரிக்கு யாரென்று தெரியாத இந்த மந்திரவாதி அப்போதைய தலைமையாசிரியராக இருந்திருக்க வேண்டும். ஆனால் அவர் டம்பிள்டோர் அல்ல. ஹாரி இப்போது கிட்டத்தட்ட ஒரு மாயாவியைப்போல இருந்தான். ஐம்பது

Scanned by CamScanner

வருடங்களுக்கு முந்தைய மனிதர்களின் கண்களுக்கு அவன் தென்படவில்லை.

அவரது அலுவலகத்தின் கதவு தட்டப்பட்டது.

அந்த முதிய மந்திரவாதி, பலவீனமான குரலில், "உள்ளே வா!" என்று கூறினார்.

தன்னுடைய கூம்புத் தொப்பியைக் கழற்றியபடியே, பதினாறு வயது மதிக்கத்தக்க ஒரு மாணவன் உள்ளே வந்தான். மாணவ அணித் தலைவனின் வெள்ளி முத்திரை அவனது ஆடையின் நெஞ்சுப் பகுதியில் மின்னிக் கொண்டிருந்தது. அவன் ஹாரியைவிட நல்ல உயரமாக இருந்தான். ஆனால் அவனது முடியும் ஹாரியின் தலைமுடியைப்போலவே சுருப்பாக இருந்தது.

"ஓ, நார்ட்டன்!" என்று அந்தத் தலைமையாசிரியர் கூறினார்.

"பேராசிரியர் டிப்பட் அவர்களே, நீங்கள் என்னைப் பார்க்க விரும்பியதாக என்னிடம் தெரிவிக்கப்பட்டது," என்று நார்ட்டன் கூறினான். அவன் பதற்றமாகக் காணப்பட்டான்.

"உட்கார்!" என்று டிப்பட் கூறினார். "நீ எனக்கு அனுப்பியிருந்த கடிதத்தை நான் படித்தேன்."

"ஓ!" என்று கூறிபடி அவன் உட்கார்ந்தான். அவன் தன் இரு கைகளையும் இறுகச் சேர்த்துப் பற்றிக் கொண்டான்.

"நார்ட்டன்," என்று டிப்பட் கனிவாகக் கூறினார். "கோடை விடுமுறையின்போது உன்னை இங்கு தங்க என்னால் அனுமதிக்க முடியாது. விடுமுறைக்கு நீ வீட்டிற்குப் போக விரும்பவில்லையா?"

"எனக்கு அதில் விருப்பமில்லை," என்று நார்ட்டன் கூறினான். "நான் அங்கு – அந்த இடத்திற்குத் திரும்பிப் போவதைவிட இங்கு ஹாக்வார்ட்ஸில் தங்கியிருப்பதையே பெரிதும் விரும்புகிறேன் –"

"நீ விடுமுறையில் சென்றால் மகுள்களின் அனாதை விடுதி ஒன்றில் தங்க வேண்டியிருக்கும் என்பது சரிதானா?" என்று டிப்பட் ஆர்வமாகக் கேட்டார்.

"ஆமாம், சார்," என்று நார்ட்டன் கூறினான். அவனது முகம் லேசாகச் சிவந்திருந்தது.

"நீ மகுள்களுக்குப் பிறந்தவனா?"

"சார், நான் அரை ரத்தப் பிறவி!" என்று நார்ட்டன் கூறினான். "அப்பா ஒரு மகுள், அம்மா ஒரு மந்திரவாதினி."

"உன்னுடைய அம்மாவும் அப்பாவும் என்ன ஆனார்கள்?"

"சார், என்னுடைய அம்மா, நான் பிறந்த சிறிது நாட்களுக்குள் இறந்துவிட்டார்கள். எனக்குப் பெயர் சூட்டும்வரை என் அம்மா உயிரோடு இருந்ததாக நான் இருந்த அனாதை விடுதியில் இருந்தவர்கள் என்னிடம் தெரிவித்திருந்தனர். நான் என் அம்மாவின் வயிற்றில் இருந்தபோதே என் அப்பா என் அம்மாவைக் கைவிட்டுவிட்டுப் பிரிந்து சென்றுவிட்டார்."

டிப்பட் தனது அனுதாபத்தை வெளிப்படுத்தும் விதமாக 'உச்' கொட்டினார்.

Scanned by CamScanner

"நார்ட்டன், நீ இங்கு தங்குவதற்கு உனக்காக நான் சிறப்பு ஏற்பாடுகளைச் செய்திருக்கக்கூடும், ஆனால் இப்போதுள்ள சூழலில் . . ." என்று கூறி அவர் பெருமூச்செறிந்தார்.

"சார், நீங்கள் இந்தத் தாக்குதல்களைப் பற்றிக் குறிப்பிடுகிறீர்களா?" என்று நார்ட்டன் கேட்டான். ஹாரியின் இதயம் படபடவெனத் துடித்தது. அவர்கள் பேசிக் கொண்டிருந்த விஷயங்களில் எதையேனும் தான் கேட்காமல் விட்டுவிடுவோமா என்று பயந்து, ஹாரி இன்னும் அருகே சென்றான்.

"ஆம், அதைத்தான் நான் குறிப்பிட்டேன்," என்று தலைமையாசிரியர் கூறினார். "கோடை விடுமுறையின்போது நீ பள்ளியில் தங்கியிருக்க நான் உன்னை அனுமதிப்பது எப்பேற்பட்ட முட்டாள்தனமானதொரு காரியமாக இருக்கும் என்பதை நீ புரிந்து கொள்ள வேண்டும். குறிப்பாக, சமீபத்தில் நடந்த துயரச் சம்பவத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்ளும்போது – இறந்து போன அந்த மாணவியைப் பற்றித்தான் நான் சொல்கிறேன் – நீ இங்கிருப்பதைவிட உன்னுடயை அனாதை விடுதியில் அதிகப் பாதுகாப்பாக இருப்பாய். இப்போதுகூட மந்திரஜால அமைச்சகம் நம் பள்ளியை இழுத்து மூடுவது பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறது என்பதை நான் உன்னிடம் கூறியாக வேண்டும். இந்தத் தகாத செயல்களைச் செய்து கொண்டிருப்பது யார் என்பது குறித்து எங்களுக்குச் சிறு துப்புக்கூடக் கிடைக்கவில்லை . . ."

நார்ட்டனின் கண்கள் விரிந்தன.

"சார் . . . இந்த நபரை நாம் பிடித்துவிட்டால் . . . இச்செயல்கள் நடைபெறுவது நின்றுவிட்டால் . . ."

தலைமையாசிரியர் டிப்பட் தன் நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு, "நீ என்ன சொல்ல வருகிறாய்?" என்று கீச்சொலியுடன் கேட்டார். "நார்ட்டன், உனக்கு இந்தத் தாக்குதல்கள் தொடர்பாக ஏதாவது தெரியுமா?"

"இல்லை சார்," என்று நார்ட்டன் அவசர அவசரமாகக் கூறினான்.

ஆனால், தான் டம்பிள்டோரிடம் கூறிய அதே விதமான 'இல்லை'தான் இது என்பதை ஹாரி அறிந்தான்.

டிப்பட் லேசான ஏமாற்றத்துடன் தன் இருக்கையில் பின்னோக்கிச் சாய்ந்தார்.

"சரி, நார்ட்டன், நீ இப்போது போகலாம் . . ."

நார்ட்டன் தன் நாற்காலியைவிட்டு எழுந்து விறைப்பாக வெளியே சென்றான். ஹாரியும் அவனைப் பின்தொடர்ந்தான்.

அவர்கள் அந்தச் சுழல் படிக்கட்டு வழியாகக் கீழே இறங்கி, கோரமாகத் தோற்றமளித்த அந்த பெரிய விசித்திர விலங்கின் சிலையருகே இருண்ட தாழ்வாரத்தில் வெளிப்பட்டனர். நார்ட்டன் நின்றான். அதனால் ஹாரியும் நின்றான். ஹாரி அவனையே பார்த்துக் கொண்டிருந்தான். நார்ட்டன் தீவிரமாக எதையோ யோசித்துக்

Scanned by CamScanner

கொண்டிருந்ததாக ஹாரிக்குத் தோன்றியது. நார்ட்டன் தன் உதடுகளைக் கடித்துக் கொண்டிருந்தான். அவனது நெற்றி சுருங்கியிருந்தது.

பின், திடீரென்று ஒரு முடிவுக்கு வந்தவன்போல நார்ட்டன் அங்கிருந்து விரைந்தான். ஹாரியும் அவனைச் சத்தமில்லாமல் பின்தொடர்ந்தான். வரவேற்பறையை அடைவதுவரை அவர்கள் வேறு யாரையும் எதிர்கொள்ளவில்லை. உயரமாக இருந்த ஒரு மந்திரவாதி அங்கிருந்த பளிங்குப் படிக்கட்டில் நின்று கொண்டிருந்தார். அவருக்கு நீண்ட செம்பழுப்பு நிறத் தலைமுடியும் தாடியும் இருந்தன. அவர் நார்ட்டனைக் கூப்பிட்டார்.

"நார்ட்டன், இவ்வளவு நேரம் கழித்து நீ இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?"

ஹாரி அந்த மந்திரவாதியைப் பார்த்ததும் வியப்பில் வாயைப் பிளந்தான். அவர் வேறு யாருமல்ல, ஐம்பது வயது குறைந்திருந்த டம்பிள்டோர்தான்!

"சார், நான் தலைமையாசிரியரைப் பார்க்கச் சென்றிருந்தேன்," என்று நார்ட்டன் கூறினான்.

ஹாரிக்கு நன்கு பழக்கமான, துளைத்துவிடுவது போன்ற பார்வையை நார்ட்டனை நோக்கி வீசிய டம்பிள்டோர், "சரி, இப்போது உடனடியாக உன் படுக்கைக்குச் செல்," என்று கூறினார். "இந்நாட்களில் தாழ்வாரங்களில் தேவையில்லாமல் அலைந்து கொண்டிருப்பது நல்லதல்ல. குறிப்பாக, அந்த நிகழ்விற்குப் பிறகு . . ."

அவர் ஆழமாகப் பெருமூச்சு ஒன்றை விட்டபடி நார்ட்டனுக்கு இரவு வணக்கம் ஒன்றை உதிர்த்துவிட்டு அங்கிருந்து அகன்றார். அவர் தன் பார்வையிலிருந்து மறையும்வரை நார்ட்டன் பார்த்துக் கொண்டிருந்தான். பின் நேராக நிலவறைகளுக்குச் செல்வதற்கான கற்படிக்கட்டுகளை நோக்கி அவன் சென்றான். ஹாரி அவனைப் பின்தொடர்ந்தான்.

ஆனால் அவன் ஹாரி எதிர்பார்த்திருந்தபடி மறைவான ஒரு வழிக்கோ அல்லது ரகசியச் சுரங்கப் பாதை ஒன்றிற்கோ செல்லவில்லை. மாறாக, ஸ்னேப் மாயத் திரவ வகுப்பை நடத்தும் நிலவறைக்கு அவன் நேராகச் சென்றான். அங்கு தீப்பந்தங்கள் ஏற்றப்பட்டிருக்கவில்லை. நார்ட்டன் அந்த அறைக் கதவைத் தள்ளியபோது அது கிட்டத்தட்ட மூடிக் கொண்டது. அதில் ஒரே ஒரு சிறு இடைவெளி மட்டும் இருந்தது. அதன் வழியாக ஹாரியால் நார்ட்டனை மட்டுமே பார்க்க முடிந்தது. நார்ட்டன் அந்த அறையில் ஆடாமல் அசையாமல் கதவருகே நின்று கொண்டு, வெளியே இருந்த நடைபாதையையே கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

தாங்கள் இருவரும் குறைந்தது ஒரு மணிநேரமாவது அங்கு இருந்திருப்போம் என்று ஹாரிக்குத் தோன்றியது. சிலைபோல நின்று கொண்டு, கதவின் சிறு இடைவெளி வழியாக வெளியே பார்த்துக் கொண்டிருந்த நார்ட்டனை மட்டும்தான் ஹாரி மொத்த நேரமும்

Scanned by CamScanner

பார்த்துக் கொண்டிருந்தான். ஹாரியின் எதிர்பார்ப்பும் பதற்றமும் குறைந்து, இங்கிருப்பதைவிட நிகழ்காலத்திற்குத் திரும்பினால் நன்றாக இருக்குமே என்று அவன் யோசித்துக் கொண்டிருந்தபோது, கதவுக்கு வெளியே எதுவோ நகர்ந்து கொண்டிருந்த சத்தம் அவனுக்குக் கேட்டது.

அந்த நடைபாதையில் யாரோ பதுங்கிப் பதுங்கிச் சென்று கொண்டிருந்தனர். அந்த உருவம் அவனும் நார்ட்டனும் இருந்த அறையைக் கடந்து சென்றது. நார்ட்டன் அந்த அறைக் கதவைத் திறந்து வெளியேறி அந்த உருவத்தை ஒரு நிழல்போலப் பின்தொடர்ந்தான். தன் சத்தம் கேட்காது என்பதை மறந்துவிட்ட ஹாரி, ஓசையேற்படுத்தாத வண்ணம், நார்ட்டனைப் பின்தொடர்ந்து குதிங்கால்களில் நடந்து சென்றான்.

சுமார் ஐந்து நிமிடங்கள் அவர்கள் இருவரும் அந்தக் காலடிச் சத்தத்தையே பின்தொடர்ந்தனர். பின் நார்ட்டன் திடீரென்று நின்றான். இப்போது புதிய சத்தங்கள் வந்த திசையை நோக்கி அவனது தலை சாய்ந்திருந்தது. ஒரு கதவு கிறீச்சென்று திறந்த சத்தம் ஹாரிக்குக் கேட்டது. பின் யாரோ கரடுமுரடான குரலில் கிசுகிசுத்தனர்.

"வா, வா! . . . நான் உன்னை இங்கேயிருந்து வெளியேற்றியாக வேண்டும் . . . இந்தப் பெட்டிக்குள் வா . . . சீக்கிரம் வா!"

ஹாரிக்கு அந்தக் குரல் பரிச்சயமான ஒன்றாகத் தோன்றியது.

நார்ட்டன் திடீரென்று அந்த மறைவிலிருந்து துள்ளினான். ஹாரி அவனுக்குப் பின்னால் வெளியே வந்தான். அங்கு மிகப் பெரிய உருவத்தைக் கொண்ட ஒரு மாணவன் நின்று கொண்டிருந்தான். திறந்திருந்த ஒரு கதவிற்கு முன்னால் அவன் குனிந்து உட்கார்ந்திருந்தான். அக்கதவின் அருகே ஒரு பெரிய பெட்டி இருந்தது.

"ஹாக்ரிட், மாலை வணக்கம்," என்று நார்ட்டன் முரட்டுத்தனமாகக் கூறினான்.

அந்தப் பையன் தனக்குப் பின்னால் அக்கதவை ஓங்கிச் சாத்திவிட்டு எழுந்து நின்றான்.

"நார்ட்டன், நீ இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறாய்?"

நார்ட்டன் அவனை நெருங்கினான்.

"எல்லாம் முடிந்துவிட்டது," என்று நார்ட்டன் கூறினான். "ஹாக்ரிட், நான் அவர்களிடம் உன்னை ஒப்படைக்கப் போகிறேன். தாக்குதல்கள் நிற்காவிட்டால் அவர்கள் ஹாக்வார்ட்ஸையே இழுத்து மூடப் போவதாகக் கூறிக் கொண்டிருக்கிறார்கள்."

"நீ என்ன சொல்கிறாய்? –"

"நீ யாரையும் கொல்ல நினைக்கவில்லை என்று எனக்குத் தெரியும். ஆனால் அரக்கத்தனமான விலங்குகளைச் செல்லப் பிராணிகளாக வளர்க்க முடியாது. நீ அதை உடற்பயிற்சிக்காக வெளியே விட்டிருக்கக்கூடும் என்று நான் நினைக்கிறேன், ஆனால் –"

Scanned by CamScanner

மூடப்பட்டிருந்த கதவின்மீது சாய்ந்து கொண்டு, "இது யாரையும் ஒருபோதும் கொன்றதில்லை," என்று அந்தப் பெரிய பையன் கூறினான். அக்கதவிற்குப் பின்னால், விநோதமான பிராண்டல் ஒலி வந்து கொண்டிருந்தது ஹாரிக்குக் கேட்டது.

"போதும், ஹாக்ரிட்," என்று கூறியவாறு, நார்ட்டன் அவனை இன்னும் நெருங்கினான். "இறந்து போன மாணவியின் பெற்றோர்கள் நாளை இங்கு வரப் போகிறார்கள். அவர்களது மகளை எது கொன்றதோ அதை அழிப்பதுதான் ஹாக்வார்ட்ஸ் அவர்களுக்குச் செலுத்தக்கூடிய குறைந்தபட்ச மரியாதையாக இருக்கும்."

"அவளைக் கொன்றது இதுவல்ல," என்று அந்தப் பையன் கர்ஜித்தான். அவனது குரல் அந்த இருண்ட நடைபாதையில் எதிரொலித்தது. "இது அதைச் செய்யவில்லை! இது அப்படிப்பட்டச் செயல்களில் ஒருபோதும் ஈடுபடாது!"

நார்ட்டன் தன் மந்திரக்கோலை உருவியவாறு, "வழியைவிட்டு விலகு!" என்று கூறினான்.

அவன் உச்சரித்த மந்திரம் அப்பகுதியைத் திடீர் வெளிச்சத்தில் மூழ்கடித்தது. அந்தப் பெரிய பையனுக்குப் பின்னால் இருந்த கதவு எகிறிப் பறந்தது. அது பறந்த வேகத்தில் அந்தப் பெரிய பையன் எதிர்ச் சுவரில் போய் விழுந்தான். அந்த அறையினுள் இருந்து வந்த ஒன்றைக் கண்ட ஹாரி, நீண்ட, காதைச் செவிடாக்கும் அலறல் ஒன்றை வெளியிட்டான். அது அவனைத் தவிர வேறு யாருக்கும் கேட்கவில்லை.

முதுகு வளைந்திருந்த பெரிய உருவம் ஒன்று அந்த அறையிலிருந்து வெளிப்பட்டது. அதன் உடல் முழுவதும் முடியால் மூடப்பட்டிருந்தது. அதன் கருப்பு நிறக் கால்கள் பின்னிப் பிணைந்திருந்தன. அதனுடைய பல கண்கள் பளிச்சிட்டன. மிகக் கூரான, இடுக்கியைப் போன்ற இரண்டு கொடுக்குகள் அதற்கு இருந்தன. நார்ட்டன் தன் மந்திரக்கோலை மீண்டும் உயர்த்தினான். ஆனால் அதற்குள் காலம் கடந்துவிட்டிருந்தது. அது அவனைத் தூக்கி எறிந்துவிட்டு, அந்தத் தாழ்வாரத்தை இடித்து நொறுக்கிக் கொண்டு அங்கிருந்து ஓடியது. நார்ட்டன் தட்டுத் தடுமாறி எழுந்தான். அது போன திசையைப் பார்த்துத் தனது மந்திரக்கோலை உயர்த்தினான். ஆனால் அந்தப் பெரிய பையன், நார்ட்டன்மீது பாய்ந்து, அவனது மந்திரக்கோலைப் பிடுங்கிக் கொண்டு, அவனை மீண்டும் கீழே தள்ளியபடியே, **"வேண்டாம்!"** என்று கத்தினான்.

அக்காட்சிச் சுழன்றது. இருள் முழுவதுமாகச் சூழ்ந்து கொண்டது. தான் கீழே விழுந்து கொண்டிருந்ததுபோல ஹாரி உணர்ந்தான். அவன் கிரிஃபின்டார் பொதுப் படுக்கையறையில் இருந்த தனது படுக்கையில் வந்து 'டமால்' என்று விழுந்தான். நார்ட்டனின் நாட்குறிப்புப் புத்தகம் அவனுடைய வயிற்றின்மேல் விரிந்து கிடந்தது.

அவன் தன் மூச்சைச் சமநிலைக்குக் கொண்டு வருவதற்குள் அந்த அறையின் கதவு திறந்தது. ரான் உள்ளே வந்தான்.

Scanned by CamScanner

"நீ இங்கேதான் இருக்கிறாயா?" என்று அவன் கேட்டான். ஹாரி நிமிர்ந்து உட்கார்ந்தான். அவனுக்கு வியர்த்துக் கொட்டிக் கொண்டிருந்தது. அவன் நடுங்கிக் கொண்டிருந்தான். ரான் அவனைக் கரிசனத்துடன் பார்த்துக் கொண்டே, "உனக்கு என்ன ஆயிற்று?" என்று கேட்டான்.

"ரான், அது ஹாக்ரிட். ஹாக்ரிட்தான் ஐம்பது வருடங்களுக்கு முன்பு ரகசியங்கள் இருந்த அறையைத் திறந்தார்," என்று ஹாரி கூறினான்.

Scanned by CamScanner

அத்தியாயம் பதினான்கு

கார்னிலியஸ் ஃபட்ஜ்

மிகப் பெரிய, ராட்சஸத்தனமான விலங்குகளைப் பெரிதும் விரும்பும் வினோதப் பழக்கம் ஹாக்ரிட்டிற்கு இருந்தது என்பதை ஹாரி, ரான், ஹெர்மயனி ஆகிய மூவரும் எப்போதும் அறிந்திருந்தனர். ஹாக்வார்ட்ஸில் அவர்களுடைய முதல் வருடத்தின்போது ஹாக்ரிட் தன்னுடைய மரக் குடிலுக்குள் ஒரு டிராகனை வளர்க்க முயன்றிருந்தார். 'ஃபிளஃபி' என்று அவர் செல்லமாக அழைத்த அந்த ராட்சஸ மூன்று தலை நாயை மறக்க அவர்கள் மூவருக்கும் வெகு காலம் ஆகும். ஹாக்ரிட் சிறுவனாக இருந்தபோது கோட்டைக்குள் எங்கேனும் ஒரு ராட்சஸ விலங்கு ஒளித்து வைக்கப்பட்டிருந்ததாகக் கேள்விப்பட்டிருந்தால், அதை ஒரு முறையாவது பார்த்துவிட அவர் என்ன வேண்டுமானாலும் செய்திருப்பார் என்று ஹாரி உறுதியாக நம்பினான். அந்த அரக்கத்தனமான விலங்கை வெகு காலம் அடைந்து வைத்திருந்தது தவறு என்றும் அதைக் கொஞ்சம் காலாற நடக்க விடுவதில் தவறில்லை என்றும் அவர் நினைத்திருந்திருப்பார். பதிமூன்று வயது ஹாக்ரிட் அதற்கு ஒரு பெரிய கழுத்துச் சங்கிலியை மாட்ட முனைவது பற்றி ஹாரி கற்பனை செய்து பார்த்தான். ஆனால் அதே சமயம், ஹாக்ரிட் யாரையும் ஒருபோதும் கொல்ல நினைத்திருக்க மாட்டார் என்றும் ஹாரி உறுதியாக நம்பினான்.

நார்ட்டனின் நாட்குறிப்புப் புத்தகத்தை எவ்வாறு படிப்பது என்பதைத் தான் கண்டுபிடிக்காமல் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்றுகூட ஹாரி நினைத்தான். நடந்த விஷயங்கள் பற்றி மீண்டும் மீண்டும் அவனிடம் துருவித் துருவிக் கேள்விகள் கேட்டு ரானும் ஹெர்மயனியும் அவனைப் பாடாய்ப் படுத்தினர். அதோடு, அவற்றைத் தொடர்ந்து நிகழ்ந்த உரையாடல்களும் திரும்பத் திரும்ப ஒரே பாதையில் முடிவே இல்லாமல் சுற்றிக் கொண்டிருந்ததைக் கண்டும் ஹாரி வெறுத்துப் போயிருந்தான்.

"நார்ட்டன் தவறான ஆளைப் பிடித்திருக்கக்கூடும்," என்று ஹெர்மயனி கூறினாள். "ஒருவேளை வேறு ஏதாவது ஒரு ராட்சஸ விலங்கு மக்களைத் தாக்கிக் கொண்டிருந்திருக்கலாம்."

"இந்த இடத்தில் எத்தனை ராட்சஸ விலங்குகளைப் பிடித்து வைக்க முடியும் என்று நீ நினைக்கிறாய்?" என்று ரான் மந்தமாகக் கேட்டான்.

Scanned by CamScanner

"ஹாக்ரிட் இப்பள்ளியிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்தார் என்பது நமக்கு ஏற்கனவே தெரிந்த விஷயம்தான்," என்று ஹாரி பரிதாபமாகக் கூறினான். "ஹாக்ரிட் வெளியேற்றப்பட்டவுடன் தாக்குதல்கள் நின்று போயிருந்திருக்க வேண்டும். இல்லையென்றால், நார்ட்டனுக்கு விருது கிடைத்திருக்காது."

ரானின் கண்ணோட்டம் வேறாக இருந்தது.

"நார்ட்டன் அப்படியே பெர்சி போலவே பேசுகிறான். ஹாக்ரிட்மீது சேற்றை வாறி இறைக்க அவனைத் தூண்டியது யார்?"

"ஆனால் ரான், அந்த ராட்சஸ விலங்கு யாரையோ கொன்றிருக்கிறது," என்று ஹெர்மயனி சுட்டிக்காட்டினாள்.

"ஹாக்வார்ட்ஸை இழுத்து மூடினால் ஏதோ ஒரு மகுளின் அனாதை விடுதிக்குச் செல்ல வேண்டிய நிலையில் நார்ட்டன் இருந்தான்," என்று ஹாரி கூறினான். "அதனால் அவன் ஹாக்வார்ட்ஸிலேயே தொடர்ந்து தங்க விரும்பியதற்காக அவனைக் குற்றம் சொல்ல முடியாது . . ."

ரான் தன்னுடயை உதட்டைக் கடித்தான். பின் மெதுவாக, "நீ ஹாக்ரிட்டை நாக்டர்ன் சந்தில் வைத்துச் சந்தித்தாய் இல்லையா?" என்று கேட்டான்.

"ஆனால் அவர் 'மாமிசம் தின்னும் நத்தை விரட்டி'யை வாங்குவதற்காக அங்கு வந்திருந்தார்," என்று ஹாரி அவசரமாகக் கூறினான்.

அவர்கள் மூவரும் மௌனமாயினர். நீண்ட இடைவெளிக்குப் பிறகு, தங்களைக் குடைந்து கொண்டிருந்த மிகச் சிக்கலான அந்தக் கேள்வியை ஹெர்மயனி தயங்கியபடியே கேட்டாள்: "நாம் இவை எல்லாவற்றையும் பற்றி ஹாக்ரிட்டிடமே நேராகக் கேட்கலாமா?"

"அந்தச் சந்திப்பு மிகவும் சந்தோஷமான ஒன்றாக இருக்கும்," என்று ரான் கிண்டலடித்தான். "ஹலோ ஹாக்ரிட், உடலெல்லாம் முடியாக இருக்கும் படுபயங்கரமான ஏதாவது ஒன்றைச் சமீபத்தில் நீங்கள் இக்கோட்டைக்குள் கட்டவிழ்த்துவிட்டுள்ளீர்களா?"

அடுத்து ஒரு தாக்குதல் ஏற்பட்டாலொழிய ஹாக்ரிட்டிடம் எதையும் கேட்கப் போவதில்லை என்று இறுதியில் அவர்கள் முடிவு செய்தனர். உருவமற்றக் குரலின் கிசுகிசுப்பு இல்லாமல் பல வாரங்கள் ஓடிப் போனதால், ஹாக்ரிட்டிடம் அவர் ஏன் பள்ளியில் இருந்து துரத்தப்பட்டார் என்பதைக் கேட்க வேண்டிய அவசியம் ஏற்படாது என்று அவர்கள் நம்பத் தலைப்பட்டனர். ஜஸ்டினும் நிக்கும் கல்லாக்கப்பட்டுக் கிட்டத்தட்ட நான்கு மாதங்கள் ஆகியிருந்தன. தாக்குதல் நடத்தியவன், அதற்கு முழுக்குப் போட்டுவிட்டான் என்றே எல்லோரும் நினைத்தனர். பீவ்ஸ்கூட ஹாரி பாட்டரைக் கிண்டல் செய்து பாடிய பாடலை நிறுத்திக் கொண்டது. மூலிகையியல் வகுப்பில் ஒரு நாள் எர்னிகூட, தாவிப் பாயும் தவளைகளின் கழிவுகள் இருந்த ஒரு வாளியைத் தன்னிடம் எடுத்துத் தர முடியுமா என்று ஹாரியிடம் கேட்டான். மார்ச் மாதத்தில் ஒரு நாள், மன்ட்ரேக்குகள்,

Scanned by CamScanner

மூன்றாவது பசுமைக் குடிலில் ஒரு கொண்டாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன. அது பேராசிரியர் ஸ்புரவுட்டிற்குப் பெருமகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

"மன்ட்ரேக்குகள் ஒரு தொட்டியிலிருந்து மற்றொரு தொட்டிக்குத் தாவ முயன்றால், அவை முழுமையாக வளர்ந்துவிட்டதற்கான அறிகுறி அது," என்று அவர் ஹாரியிடம் கூறினார். வெகு விரைவில், மருத்துவமனையில் இருக்கும் அந்தப் பரிதாபமான ஜீவன்களை நம்மால் உயிர்த்தெழ வைக்க முடியும்."

* * *

ஈஸ்டர் விடுமுறையின்போது இரண்டாவது வருட மாணவர்கள் ஒரு புதிய விஷயத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டியிருந்தது. அவர்கள் தங்கள் மூளைகளுக்கு வேலை கொடுத்து, மூன்றாம் வருடத்தில் தாங்கள் கற்றுக் கொள்ள விரும்பிய பாடங்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வேளை வந்திருந்தது. அதைக் குறைந்தபட்சம் ஹெர்மயனி மிகத் தீவிரமாக எடுத்துக் கொண்டாள்.

அவர்கள் புதிய பாடங்களின் பட்டியலைப் பார்த்து அதில் தங்களுக்குப் பிடித்தப் பாடங்களைக் குறித்துக் கொண்டிருந்தபோது, அவள் ஹாரியிடமும் ரானிடமும், "இது நம்முடைய மொத்த வருங்காலத்தையே தீர்மானிக்கின்ற விஷயம்," என்று கூறினாள்.

"நான் மாயத் திரவப் பாடத்தைக் கழற்றிவிட்டுவிட விரும்புகிறேன்," என்று ஹாரி கூறினான்.

"அது நம்மால் முடியாது," என்று ரான் வருத்தத்துடன் கூறினான். "நாம் நம்முடைய பழைய பாடங்கள் எல்லாவற்றையும் அப்படியே வைத்துக் கொள்ள வேண்டும். இல்லையென்றால், நான் தீய மந்திர சக்திகளுக்கு எதிரான பாதுகாப்புப் பாடத்தைக் கழற்றிவிட்டிருப்பேன்."

"ஆனால் அது மிகவும் முக்கியமானது," என்று ஹெர்மயனி அதிர்ந்து போய்க் கூறினாள்.

"லாக்ஹார்ட் கற்றுக் கொடுக்கும் விதத்தில் அது நிச்சயமாக முக்கியமானதே அல்ல," என்று ரான் கூறினான். "பிக்ஸிகளை வெளியே விடக்கூடாது என்பதைத் தவிர உருப்படியான எதையும் நான் அவரிடமிருந்து கற்றுக் கொள்ளவில்லை."

நெவிலுக்கு அவனது வீட்டில் இருந்த ஒவ்வொரு மந்திரவாதியும் மந்திரவாதினியும் கடிதம் எழுதியிருந்தனர். அக்கடிதங்களில், அவன் எதைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தி, ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான அறிவுரையை அவனுக்குக் கொடுத்திருந்தனர். குழப்பமும் கவலையும் அடைந்த நெவில், தன் நாக்குச் சற்று வெளியே துருத்திக் கொண்டிருக்க, பாடங்கள் அடங்கிய பட்டியலைப் படித்து கொண்டிருந்தான். பழங்காலச் சித்திர எழுத்துக்கள் பாடம் எண்மந்திரம் பாடத்தைவிடச் சுலபமானதாக இருக்குமா என்று போவோர் வருவோரிடமெல்லாம் அவன் கேட்டுக் கொண்டிருந்தான். ஹாரியைப்போல மகுள்களுடன் வளர்ந்திருந்த டீன் தாமஸ், தன்

Scanned by CamScanner

கண்களை மூடிக் கொண்டு அப்பட்டியலைத் தன் மந்திரக்கோலால் தொட்டான். அது எந்தப் பாடங்களிலெல்லாம் போய் நின்றதோ, அவன் அவற்றைத் தேர்ந்தெடுத்தான். ஹெர்மயனி யாருடைய அறிவுரையையும் நாடவில்லை. அவள் எல்லாப் பாடங்களையும் தேர்வு செய்து கொண்டாள்.

படிப்பு முடிந்ததும் மந்திரஜால உலகில் தான் எந்த மாதிரியான வேலையைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று தான் தனது பெரியப்பா வெர்னனிடமும் பெரியம்மா பெட்டூனியாவிடமும் கேட்டால் அவர்கள் என்ன பதில் சொல்வார்கள் என்று யோசித்துப் பார்த்தபோது ஹாரியின் உதடுகளில் சோகமான புன்முறுவல் படர்ந்தது. அவனுக்கு வழிகாட்டுதல் கிடைக்கவே இல்லை என்று கூறிவிட முடியாது. பெர்சி தன்னுடைய அனுபவங்களை அவனுடன் பகிர்ந்து கொள்ளத் தயாராக இருந்தான்.

"நீ எங்கு போக விரும்புகிறாய் என்பதைப் பொறுத்தது அது," என்று பெர்சி கூறினான். "வருங்காலத்தைப் பற்றிச் சிந்திப்பதற்குச் சரியான நேரம் என்று ஒன்று உண்டு என்றால், அது இக்கணம்தான். எனவே, வருங்காலவியலைப் படிக்குமாறு நான் உனக்குப் பரிந்துரைப்பேன். மகுள்கள் குறித்த ஆய்வு அவ்வளவு தீவிரமானது அல்ல என்று மக்கள் கூறுவர். ஆனால் என்னைப் பொறுத்தவரை, மந்திரவாதிகளுக்கு, மந்திரஜாலமற்றப் பிற சமூகங்களைப் பற்றிய முழுமையான புரிதல் இருக்க வேண்டும், அதிலும் குறிப்பாக, அவர்களோடு நெருங்கி வேலை செய்ய விரும்பும் பட்சத்தில்! என்னுடைய அப்பாவை எடுத்துக் கொள்ளேன். பொழுது விடிந்தால் மகுள்கள் தொடர்பான விஷயங்களைத்தான் அவர் கையாள வேண்டியுள்ளது. என்னுடைய அண்ணன் சார்லி எப்போதுமே வெளியே இயற்கையோடு இருக்கவே விரும்புவான். அதனால் அவன் மந்திரஜால விலங்குகளின் பராமரிப்பு என்ற பாடத்தை எடுத்துப் படித்தான். ஹாரி, உன் வலிமை எதுவோ அதில் புகுந்து விளையாடு!"

ஆனால் தான் திறமைசாலியாக இருந்ததாக ஹாரி கருதிய ஒரே விஷயம் குவிடிச் விளையாட்டுதான். இறுதியில், ரான் தேர்வு செய்த பாடங்களையே அவனும் தேர்வு செய்தான். தான் எந்தப் பாடத்திலாவது மிகவும் மோசமாக இருந்தால், அதில் தனக்கு உதவுவதற்குத் தனக்குத் தெரிந்தவன் ஒருவன் இருப்பான் என்ற காரணத்தால் ஹாரி அப்படிச் செய்தான்.

* * *

கிரிஃபின்டார் அணியின் அடுத்தக் குவிட்டிச் போட்டி ஹஃபில்பஃப் அணியினருடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஒவ்வொரு நாளும் இரவு உணவிற்குப் பிறகு தமது அணியினர் அனைவரும் குவிட்டிச் பயிற்சியில் பங்கு கொள்ள வேண்டும் என்று உட் வலியுறுத்தினான். அதனால் ஹாரிக்கு வீட்டுப்பாடங்கள் மற்றும் குவிடிச் பயிற்சியைத் தவிர வேறு எதற்கும் நேரமிருக்கவில்லை. ஆனால் பயிற்சி வகுப்புகள் நாளுக்கு நாள் மேம்பாடு அடைந்து

Scanned by CamScanner

கொண்டே வந்தன. சனிக்கிழமையன்று நடைபெறவிருந்த அப்போட்டிக்கு முந்தைய நாள் மாலையில் அவன் தன்னுடைய மந்திரத் துடப்பத்தை வைத்துவிட்டு வருவதற்காகத் தனது பொதுப் படுக்கையறைக்குச் சென்றபோது, கிரிஃபின்டார் அணி குவிடிச் கோப்பையை வெல்வதற்கான வாய்ப்பு அதிகம் இருந்ததாக அவன் உணர்ந்தான்.

ஆனால் அவனது சூதாகலமான மனநிலை வெகுநேரம் நீடிக்கவில்லை. அவனது பொதுப் படுக்கையறைக்குச் செல்வதற்கான படிக்கட்டுகளின் மேற்படியின்மீது நெவில் அவனுக்காகக் காத்துக் கொண்டிருந்தான். அவன் மிகுந்த பதற்றத்துடன் காணப்பட்டான்.

"ஹாரி, இதைச் செய்தது யார் என்று தெரியவில்லை. ஆனால் நான் வந்து பார்த்தபோது –"

அவன் ஹாரியை பயத்துடன் பார்த்துக் கொண்டே கதவைத் திறந்தான்.

ஹாரியின் டிரங்குப் பெட்டியில் இருந்த அனைத்தும் எல்லா இடங்களிலும் விசிறியடிக்கப்பட்டு இருந்தது. அவனுடைய அங்கி கிழிக்கப்பட்ட நிலையில் தரையில் கிடந்தது. அவனுடைய படுக்கை விரிப்புகள் அவனுடைய கட்டிலிலிருந்து இழுத்துக் கீழே தள்ளப்பட்டிருந்தன. அவனுடைய படுக்கைக்கு அருகிலிருந்த குட்டி அலமாரியின் இழுப்பறை வெளியே இழுக்கப்பட்டு அதிலிருந்த எல்லாம் மெத்தையின்மீது கொட்டப்பட்டிருந்தது.

ஹாரி திறந்த வாய் மூடாமல் தன்னுடைய படுக்கையை நோக்கிச் சென்றான். அப்போது அவன், 'அரக்கப் பேயுடன் ஒரு பிரயாணம்' புத்தகத்திலிருந்து கழன்று வெளியே வந்திருந்த ஒருசில பக்கங்களைத் தாண்டிக் கொண்டு செல்ல வேண்டியிருந்தது.

அவனும் நெவிலும் படுக்கை விரிப்புகளை அவனது மெத்தையின்மீது விரித்துக் கொண்டிருந்தபோது, ரான், டீன் தாமஸ், சீமஸ் ஆகிய மூவரும் உள்ளே வந்தனர். டீன் தாமஸ் சத்தமாகத் திட்டத் துவங்கினான்.

"ஹாரி, என்ன ஆயிற்று?"

"ஒன்றும் புரியவில்லை," என்று ஹாரி கூறினான். ஆனால் ரான் ஹாரியின் அங்கியை ஆராய்ந்து கொண்டிருந்தான். அந்த அங்கியின் எல்லாப் பாக்கெட்டுகளும் வெளிப்புறமாகத் தொங்கிக் கொண்டிருந்தன.

"யாரோ எதையோ தேடியிருக்கின்றனர்," என்று ரான் கூறினான். "ஏதாவது காணாமல் போயிருக்கிறதா என்று பாரேன்."

ஹாரி தன்னுடைய பொருட்களைச் சேகரித்து அவற்றைத் தனது டிரங்குப் பெட்டிக்குள் தூக்கி எறிந்தான். அவன் லாக்ஹார்ட்டின் கடைசிப் புத்தகத்தை அதனுள் தூக்கி எறிந்தபோதுதான் எது காணாமல் போயிருந்தது என்பது அவனுக்கு உறைத்தது.

"நார்ட்டனின் நாட்குறிப்புப் புத்தகத்தைக் காணவில்லை," என்று அவன் ரானிடம் மெதுவாகக் கூறினான்.

Scanned by CamScanner

"என்ன சொன்னாய்?"

ஹாரி தன் தலையை வாசலை நோக்கி ஆட்டினான். அவர்கள் இருவரும் வேகமாக கிரிஃபின்டார் பொது அறைக்கு மீண்டும் வந்தனர். அது பாதி காலியாக இருந்தது. அங்கு அவர்கள் ஹெர்மயனியுடன் இணைந்து கொண்டனர். அவள் தனியாக உட்கார்ந்து கொண்டு, 'சுலபமாக்கப்பட்டுள்ள பழங்காலச் சித்திர எழுத்துக்கள்' என்ற புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாள்.

செய்தியைக் கேள்விப்பட்டதும் ஹெர்மயனி அதிர்ச்சியால் வாயடைத்துப் போனாள்.

"ஆனால் இதை ஒரு கிரிஃபின்டார்தான் திருடியிருக்க வேண்டும் - நம்மைத் தவிர வேறு யாருக்கும் இந்த அறைக்கு வருவதற்கான நுழைவுச் சங்கேத வார்த்தை தெரியாது . . ."

"நீ சொல்வது சரிதான்," என்று ஹாரி கூறினான்.

* * *

அதற்கு அடுத்த நாள் காலையில் அவர்கள் எழுந்தபோது சூரியன் அற்புதமாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. புத்துணர்வூட்டிய தென்றல் வீசிக் கொண்டிருந்தது.

"குவிடிச் விளையாட்டிற்கு ஏற்ற வானிலை," என்று உட் உற்சாகமாகக் கூறினான். அவன் தன் அணியினரின் தட்டுகளில் முட்டை வறுவலைப் போட்டுக் கொண்டிருந்தான். "ஹாரி, நன்றாகச் சாப்பிடு. இன்று நாம் வெளுத்துக் கட்டலாம்!"

கூட்டமாக இருந்த கிரிஃபின்டார் அணியின் பெஞ்சை ஹாரி உற்றுப் பார்த்தான். நார்ட்டனின் நாட்குறிப்புப் புத்தகத்தின் புதிய சொந்தக்காரன் இங்கு தன் கண் முன்னாலேயே இருந்தானா என்று அவன் யோசித்தான். அத்திருட்டைப் பற்றி ஒரு புகார் கொடுக்குமாறு ஹெர்மயனி அவனை நச்சரித்துக் கொண்டிருந்தாள். ஆனால் ஹாரிக்கு அந்த யோசனை பிடிக்கவில்லை. அப்படிச் செய்தால் அவன் அந்த நாட்குறிப்புப் புத்தகத்தைப் பற்றிய எல்லா விஷயங்களையும் கூற வேண்டி வரும். ஐம்பது வருடங்களுக்கு முன்பாக ஹாக்ரிட் எதற்காகப் பள்ளியில் இருந்து வெளியேற்றப்பட்டார் என்பது எத்தனை ஆசிரியர்களுக்குத் தெரியும்? அதை மீண்டும் நடுச்சந்திக்குக் கொண்டு வருபவனாக அவன் இருக்க விரும்பவில்லை.

அவன் ரானுடனும் ஹெர்மயனியுடனும் பேரரங்கைவிட்டு வெளியே வந்து தன்னுடைய குவிடிச் பொருட்களை எடுத்துக் கொள்வதற்காகச் சென்று கொண்டிருந்தபோது, ஹாரியின் கவலைப் பட்டியலில் இன்னொரு முக்கியமான கவலையும் சேர்ந்து கொண்டது. பளிங்குப் படிக்கட்டில் அவன் தன் காலை வைத்தக் கணத்தில் அக்குரல் அவனது காதுகளில் மீண்டும் ஒலித்தது.

"இம்முறை கொன்றுவிட வேண்டும் . . . நான் குதறப் போகிறேன் . . . நான் குத்திக் கிழிக்கப் போகிறேன் . . ."

Scanned by CamScanner

அவன் திடீரென்று சத்தமாகக் கத்தினான். ரானும் ஹெர்மயனியும் பயந்து போய்த் துள்ளிக் குதித்தனர்.

ஹாரி தன் தோளுக்கு மேலாகப் பார்த்துவிட்டு, "அதே குரல்," என்று கூறினான். "அதை நான் மீண்டும் கேட்டேன் – உங்களுக்கு எதுவும் கேட்கவில்லையா?"

வியப்பில் வாயைப் பிளந்தபடி ரான் இல்லையென்று தலையசைத்தான். ஆனால் ஹெர்மயனி தனது ஒரு கையைக் கொண்டு தன் நெற்றியில் படீரென்று அடித்தாள்.

"ஹாரி, எனக்கு ஒரு விஷயம் புரிந்துவிட்டது! நான் நூலகத்திற்கு உடனடியாகப் போயாக வேண்டும்!"

அவள் படிக்கட்டுகளில் தாவி ஏறி ஓடினாள்.

"அவளுக்கு என்ன புரிந்துள்ளதாம்?" என்று ஹாரி வெறுமனே கேட்டுவிட்டு, அந்தக் குரல் எங்கிருந்து வந்தது என்பதைக் கண்டுபிடிப்பதற்காகச் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டிருந்தான்.

"கண்டிப்பாக என்னைவிடப் பல மடங்கு அதிகமாக அவளுக்குப் புரிந்திருக்கும்!" என்று ரான் தன் தலையை ஆட்டியபடி கூறினான். "ஆனால் அவள் எதற்காக நூலகத்திற்குப் போக வேண்டும்?"

ரான் தன் தோள்களைக் குலுக்கியவாறு, "ஏனெனில் அதுதான் ஹெர்மயனியின் வழக்கம்," என்று கூறினான். "எதிலேனும் சந்தேகமா? நூலகத்திற்கு ஓடு!"

ஹாரி அக்குரலை மீண்டும் கேட்பதற்காகக் குழப்பத்துடன் அங்கு நின்று கொண்டிருந்தான். ஆனால் இப்போது அவனுக்குப் பின்னால், பேரரங்கிலிருந்து மக்கள் சத்தமாகப் பேசிக் கொண்டு வெளியேறி, வாசலைக் கடந்து, குவிடிச் மைதானத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.

"குவிடிச் போட்டிக்கு நீ இப்போதே கிளம்பினால்தான் சரியாக இருக்கும்," என்று ரான் கூறினான். "மணி பதினொன்றை நெருங்கிக் கொண்டிருக்கிறது."

ஹாரி படுவேகமாக கிரிஃபின்டார் கோபுரத்திற்கு ஓடி, தன்னுடைய நிம்பஸ் 2000 மந்திரத் துடப்பத்தை எடுத்துக் கொண்டு, விளையாட்டைப் பார்ப்பதற்காகப் படையெடுத்துக் கொண்டிருந்த கும்பலின் ஊடாகப் புகுந்து புறப்பட்டுக் கொண்டிருந்தான். ஆனால் அவனது மனம் இன்னும் அந்த உருவமற்றக் குரலையே சுற்றிக் கொண்டிருந்தது. உடை மாற்றும் அறையில் அவன் தங்கள் அணியின் ரத்தச் சிவப்புச் சீருடைக்கு மாறிக் கொண்டிருந்தபோது, அவனுக்கு இருந்த ஒரே ஆறுதல், விளையாட்டுப் போட்டியைப் பார்ப்பதற்காக மொத்தப் பள்ளியுமே மைதானத்தில் இருந்தது என்பதுதான்.

ஆரவாரக் கைதட்டல்களுக்கு இடையே விளையாட்டு வீரர்கள் மைதானத்திற்குள் நுழைந்தனர். உட் கோல்போஸ்ட்டுகளைச் சுற்றி ஒரு வட்டமடித்தான். பின் மேடம் ஹூச் பந்துகளை விடுவித்தார். வெளிறிய மஞ்சள் நிறச் சீருடை அணிந்திருந்த ஹஃபில்பஃப்

Scanned by CamScanner

குழுவினர் கடைசி நிமிடத் தந்திரோபாயத் திட்டம் ஒன்றிற்காகக் குழுமியிருந்தனர்.

ஹாரி தன்னுடைய மந்திரத் துடப்பத்தில் ஏற ஆயத்தமாகிக் கொண்டிருந்தபோது, பேராசிரியர் மெக்கானகல், ஓட்டமும் நடையுமாக மைதானத்திற்குள் வந்து கொண்டிருந்தார். அவரது கையில் ஒரு பெரிய ஊதா வண்ண ஒலிபெருக்கி இருந்தது.

ஹாரியின் இதயம் கனத்தது.

பேராசிரியர் மெக்கானகல் அங்கு கூடியிருந்த மக்களைப் பார்த்து, "இப்போட்டி ரத்து செய்யப்படுகிறது," என்று அந்த ஒலிபெருக்கி மூலம் அறிவித்தார். அங்கு கத்தல்களும் எதிர்ப்புக் கோஷங்களும் கிளம்பின. மனமொடிந்து போன உட், வேகமாகக் கீழே பறந்து வந்து, தன் மந்திரத் துடப்பத்திலிருந்து கீழே இறங்காமலேயே பேராசிரியர் மெக்கானகல்லை நோக்கி விரைந்தான்.

"ஆனால் பேராசிரியரே!" என்று அவன் கத்தினான். "நாங்கள் விளையாட வேண்டும் . . . கோப்பை . . . கிரிஃபின்டார் . . ."

பேராசிரியர் மெக்கானகல் அவனைக் கண்டுகொள்ளவே இல்லை. அவர் தொடர்ந்து ஒலிபெருக்கியில் அறிவித்துக் கொண்டிருந்தார். "எல்லா மாணவர்களும் அவரவரது அணிகளின் பொது அறைகளுக்கு நேராகச் செல்லும்படிக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அங்கு உங்களுடைய குழுத் தலைவர்கள் உங்களுக்கு மேலும் தகவல்களை வழங்குவர். இப்போது தயவு செய்து எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக இங்கிருந்து கலைந்து செல்லுங்கள்!"

பின் அவர் தன்னுடைய ஒலிபெருக்கியைத் தாழ்த்திக் கொண்டு, ஹாரியை நோக்கிச் சைகை காட்டினார்.

"ஹாரி, நீ என்னுடன் வா!"

இம்முறை அவரால் எப்படித் தன்னைச் சந்தேகிக்க முடியும் என்று அவன் வியந்து கொண்டிருந்தான். அவர்கள் கோட்டையை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது, ரான் அங்கிருந்த கூட்டத்தில் இருந்து விலகித் தங்களை நோக்கி ஓடி வந்து கொண்டிருந்ததை ஹாரி கண்டான். பேராசிரியர் மெக்கானகல் அதற்கு ஆட்சேபம் தெரிவிக்காதது ஹாரிக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

"ரான், நீயும் எங்களுடன் வருவது நல்லதுதான்."

அவர்களை மொய்த்துக் கொண்டிருந்தவர்களில் ஒருசில மாணவர்கள், போட்டி ரத்து செய்யப்பட்டிருந்தது குறித்து முணுமுணுத்துக் கொண்டிருந்தனர். வேறு சிலர், கவலையோடு காணப்பட்டனர். ஹாரியும் ரானும் பேராசிரியர் மெக்கானகல்லைப் பின்தொடர்ந்து பள்ளிக்குள் நுழைந்து பளிங்கு மாடிப்படி வழியாக ஏறினர். ஆனால் இம்முறை, பேராசிரியர் மெக்கானகல், அவர்களை யாருடைய அலுவலகத்திற்கும் கூட்டிச் செல்லவில்லை.

அவர்கள் மூவரும் மருத்துவமனைப் பகுதியை அணுகிக் கொண்டிருந்தபோது, பேராசிரியர் மெக்கானகல், "இது உங்களுக்கு

Scanned by CamScanner

மிகவும் அதிர்ச்சி அளிக்கக்கூடும்," என்று அவர்கள் வியக்கும் விதத்தில் ஒரு மென்மையான குரலில் கூறினார். "மேலும் ஒரு தாக்குதல் நடந்துள்ளது . . . இம்முறை அது ஓர் இரட்டைத் தாக்குதல்."

ஹாரிக்கு வயிற்றைப் புரட்டிக் கொண்டு வந்தது. மருத்துவமனையின் கதவைத் திறந்து கொண்டு பேராசிரியர் மெக்கானகல் உள்ளே போனார். ரானும் ஹாரியும் கூடவே சென்றனர்.

மேடம் பாம்ஃபிரே, நீண்ட சுருள் முடியுடன் இருந்த ஓர் ஆறாவது வருட மாணவியின் அருகே குனிந்து கொண்டிருந்தார். ரானும் ஹாரியும் கிராப் மற்றும் காயலின் உருவத்தில் இருந்தபோது ஸ்லிதரின் பொது அறைக்குச் செல்வதற்கான வழியை ரேவன்கிளா அணியைச் சேர்ந்த எந்தச் மாணவியிடம் கேட்டனரோ, அவள்தான் இவள் என்பதை ஹாரி அடையாளம் கண்டுகொண்டான். அவளுடைய படுக்கைக்கு அடுத்தப் படுக்கையில் –

"ஹெர்மயனி!" என்று ரான் கத்தினான்.

ஹெர்மயனி ஆடாமல் அசையாமல் படுத்திருந்தாள். அவளது கண்கள் திறந்திருந்தன. அவை கண்ணாடிபோல மினுமினுத்தன.

"அவர்கள் இருவரும் நூலகத்திற்கு அருகே கண்டுபிடிக்கப்பட்டனர்," என்று பேராசிரியர் மெக்கானகல் தெரிவித்தார். "உங்களால் இதைப் பற்றி விவரிக்க முடியுமா? இது அவர்களுக்கு அருகே தரையில் கிடந்தது . . ."

அவர் தன் கையில் ஒரு சிறிய வட்ட வடிவக் கண்ணாடியை வைத்திருந்தார்.

ஹாரியும் ரானும் இல்லையென்று தங்கள் தலைகளை அசைத்தனர். அவர்கள் இருவரும் ஹெர்மயனியையே வெறித்துக் கொண்டிருந்தனர்.

"நான் உங்களுடன் கிரிஃபின்டார் கோபுரம்வரை துணைக்கு வருகிறேன்," என்று பேராசிரியர் மெக்கானகல் கனத்த இதயத்துடன் கூறினார். "நான் எப்படியும் அங்கு இருக்கும் மாணவர்களிடம் ஒருசில விஷயங்களைக் கூற வேண்டியுள்ளது."

* * *

"எல்லா மாணவர்களும் மாலை ஆறு மணிக்குள் அவரவர்களுடைய அணிகளின் பொது அறைகளுக்கு வந்து சேர்ந்துவிட வேண்டும். அதன் பிறகு எவரும் பொது அறைகளைவிட்டு வெளியே செல்லக்கூடாது. உங்களுடைய ஒவ்வொரு வகுப்பிற்கும் உங்களை ஓர் ஆசிரியர் வந்து அழைத்துச் செல்வார். அடுத்து நடக்கவிருக்கும் அனைத்துக் குவிடிச் போட்டிகளும் ஒத்தி வைக்கப்படுகின்றன. இனி மாலை நடவடிக்கைகள் எதுவும் இருக்காது."

கிரிஃபின்டார் பொது அறையில் நெருக்கியடித்துக் கொண்டு நின்று கொண்டிருந்தவர்கள் அவருடைய பேச்சை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தனர். அவர் அவற்றை ஒரு தோல் காகிதம்

Scanned by CamScanner

ஒன்றிலிருந்து படித்துக் கொண்டிருந்தார். அவர் அதைச் சுருட்டிக் கொண்டே, தொண்டை அடைக்க, "நான் இவ்வளவு துயரத்துடன் ஒருபோதும் இருந்ததில்லை என்பதைத் தனியாக எடுத்துக்கூற வேண்டியதில்லை. இதற்குப் பின்னால் உள்ள கயவன் பிடிபடாவிட்டால், இப்பள்ளி இழுத்து மூடப்பட்டுவிடும். இது குறித்து யாருக்காவது ஏதாவது தெரிந்தால் அவர்கள் அதைத் தெரிவிக்க முன்வருமாறு அவர்களை நான் அழைக்கிறேன்," என்றார்.

அவர் அந்த ஓவியத் துளை வழியாகத் தட்டுத் தடுமாறி வெளியே சென்ற உடனேயே கிரிஃபின்டார் அணியினர் தங்களுக்குள் சலசலவெனப் பேசிக் கொள்ளத் துவங்கினர்.

"அப்படியானால் இதுவரை தாக்கப்பட்டிருப்பவர்களில் மூன்று பேர் கிரிஃபின்டார் அணியைச் சேர்ந்தவர்கள் – கிரிஃபின்டார் ஆவியான நிக் தனிக் கணக்கு – ஒருவர் ரேவன்கிளா உறுப்பினர், ஒருவர் ஹஃபில்பஃப் உறுப்பினர்," என்று வீஸ்லீ இரட்டையர்களின் நண்பனான லீ ஜோர்டன் தன் விரல்களை மடக்கி எண்ணிக் கொண்டே கூறினான். "ஸ்லிதரின் அணியினர் எவருமே தாக்கப்படாமல் இருப்பதை எந்தவோர் ஆசிரியராவது கவனித்திருக்கிறாரா? ஸ்லிதரினின் வாரிசு, ஸ்லிதரினின் ராட்சஸ விலங்கு என்று, இவை எல்லாமே ஸ்லிதரின் அணியிலிருந்துதான் வருகின்றன என்பது தெள்ளத் தெளிவாகத் தெரியவில்லையா? அவர்கள் ஏன் ஒட்டுமொத்தமாக ஸ்லிதரின் அணியினர் எல்லோரையும் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளக்கூடாது?" என்று அவன் முழங்கினான். அவன் கூறியதை ஆமோதித்துப் பலர் தங்களுடைய தலைகளை அசைத்தனர், ஆங்காங்கே கைதட்டல்களும் கேட்டன.

பெர்சி, ஜோர்டனுக்குப் பின்னால் இருந்த ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தான். அவன் தன் கருத்தை ஒருமுறைகூட வெளியே சொல்லவில்லை. அவனது முகம் வெளுத்துப் போயிருந்தது; அவன் நிலைகுலைந்து போயிருந்தான்.

"அவன் அதிர்ச்சியில் இருக்கிறான்," என்று ஜார்ஜ் ஹாரியிடம் மெதுவாகக் கூறினான். "அந்த ரேவன்கிளா பெண் – பெனலோப் கிளியர்வாட்டர் – ஒரு மாணவ அணித் தலைவி. ஒரு மாணவ அணித் தலைவனோ அல்லது தலைவியோ தாக்கப்படுவார்கள் என்று பெர்சி எதிர்பார்த்திருக்கவில்லை என்று நான் நினைக்கிறேன்."

ஆனால் ஹாரி அவன் கூறியதை அரைகுறையாகத்தான் கேட்டுக் கொண்டிருந்தான். ஹெர்மயனி ஒரு கற்சிலைபோல மருத்துவமனையில் படுத்திருந்த காட்சியை அவனால் தன் மனத்திலிருந்து களைந்தெறிய முடியவில்லை. குற்றவாளி சீக்கிரமாகப் பிடிபடவில்லை என்றால் அவன் மீண்டும் டர்ஸ்லீ தம்பதியினருடன்தான் காலம் தள்ள வேண்டி வரும். பள்ளி மூடப்பட்டால் தான் அனாதை விடுதிக்குச் செல்ல நேரிடும் என்ற காரணத்தினால் நார்ட்டன் ஹாக்ரிட்டைப் பிடித்துக்

Scanned by CamScanner

கொடுத்திருந்தான். நார்ட்டனின் மனநிலை எப்படி இருந்திருக்கும் என்பதை ஹாரியால் இப்போது நன்றாகவே உணர முடிந்தது.

"நாம் இப்போது என்ன செய்யப் போகிறோம்?" என்று ரான் ஹாரியின் காதில் கிசுகிசுத்தான். "அவர்கள் ஹாக்ரிட்டைச் சந்தேகிக்கிறார்கள் என்று நீ நினைக்கிறாயா?"

ஹாரி ஒரு தீர்மானத்திற்கு வந்தவனாக, "நாம் ஹாக்ரிட்டிடம் போய்ப் பேசலாம்," என்று கூறினான். "இம்முறை அது அவராக இருக்காது என்று நான் நம்புகிறேன். ஆனால் கடந்த முறை அவர் அந்த ராட்சஸ விலங்கைத் திறந்துவிட்டிருந்தார் எனில், ரகசியங்கள் அடங்கிய அறைக்குள் எப்படிப் போவது என்பது அவருக்குத் தெரிந்திருக்கும். அது ஒரு தொடக்கமாக இருக்கும்."

"ஆனால் வகுப்பு நேரம் தவிர மற்ற எல்லாச் சமயங்களிலும் நாம் நமது பொது அறையில்தான் இருக்க வேண்டும் என்று பேராசிரியர் மெக்கானகல் கூறியிருக்கிறாரே? –"

"என் அப்பாவின் பழைய மறைய வைக்கும் அங்கியை வெளியே எடுப்பதற்கான வேளை வந்துவிட்டது," என்று ஹாரி கூறினான். அவனது முகம் இறுகிப் போயிருந்தது.

* * *

ஹாரி தன் தந்தையிடம் இருந்து ஒன்றே ஒன்றை மட்டும்தான் சுவீகரித்திருந்தான். அது ஒரு நீண்ட, மிருதுவான, மறைய வைக்கும் அங்கி. வேறு யாருக்கும் தெரியாமல் ஹாக்ரிட்டைப் போய்ப் பார்க்க அவர்களுக்கு இருந்த ஒரே வழி அதுதான். அவர்கள் இருவரும் வழக்கமான நேரத்தில் படுக்கைக்குச் சென்றனர். பிறகு நெவில், டீன் தாமஸ், சீமஸ் ஆகிய மூவரும் ரகசியங்கள் அடங்கிய பாதாள அறை குறித்து விவாதிப்பதை நிறுத்திவிட்டுக் கடைசியில் ஒருவழியாகத் தூங்கச் செல்வதற்காக அவர்கள் காத்திருந்தனர். பிறகு, ஹாரியும் ரானும் தங்கள் உடைகளை மாற்றிக் கொண்டு, அந்த மறைய வைக்கும் அங்கியைத் தங்கள் தலைகளையும் உடல்களையும் சுற்றிப் போர்த்திக் கொண்டனர்.

இருண்ட தாழ்வாரங்களின் ஊடாக நடந்து சென்றது ரசிக்கும்படியாக இருக்கவில்லை. ஹாரி இதற்கு முன்பு பல முறை இரவு வேளைகளில் கோட்டையில் அலைந்திருந்தான். ஆனால் அந்தி சாய்ந்த பிறகு தாழ்வாரங்களில் இவ்வளவு கூட்டத்தை அவன் ஒருபோதும் பார்த்திருக்கவில்லை. ஏதேனும் அசாதாரணமான நடவடிக்கைகள் நிகழ்ந்தனவா என்று பார்ப்பதற்காக ஆசிரியர்களும் மாணவ அணித் தலைவர்களும் ஆவிகளும் ஜோடி ஜோடியாக ரோந்து சுற்றிக் கொண்டிருந்தனர். ரானும் ஹாரியும் ஏதாவது சத்தம் போட்டால், மறைய வைக்கும் அங்கியால் அதைத் தடுத்து நிறுத்த முடியாது. ஸ்னேப் காவல் காத்துக் கொண்டிருந்த ஓரிடத்தில் ரான் தன்னுடைய கால்விரலை இடித்துக் கொண்டபோது, அவர்கள் பதற்றமடைந்தனர். நல்ல வேளையாக, ரான் தன்னைத் தானே திட்டிக்

Scanned by CamScanner

கொண்ட அதே கணத்தில் எங்களைப் ஒரு துர்பயம் பீடித்தது. அவர்கள் தங்களை ஆசுவாசப்படுத்திக் கொண்டு, ஒருவழியாக முன்வாசல் கதவை அடைந்து, அதை மெதுவாகத் திறந்தனர்.

அன்று வானம் தெளிவாக நட்சத்திரங்களுடன் இருந்தது. சன்னல் வழியாக வெளிச்சம் வந்து கொண்டிருந்த ஹாக்ரிட்டின் குடிலை நோக்கி அவர்கள் விரைந்தனர். அவரது குடிலின் முன்வாசல் கதவை அடைந்த பிறகுதான் மறைய வைக்கும் அங்கியை அவர்கள் கழற்றினர்.

அவர்கள் அக்கதவைத் தட்டிய சில கணங்களுக்குப் பிறகு ஹாக்ரிட் அதைத் திறந்தார். நாணேற்றப்பட்டிருந்த ஒரு வில்லை அவர் அவர்களுடைய முகத்திற்கு நேராக நீட்டிக் கொண்டிருந்தார். அவருக்குப் பின்னால் அவருடைய வேட்டை நாயான ஃபேங் பலமாகக் குரைத்துக் கொண்டிருந்தது.

"ஓ!" என்று கூறியவாறு அவர் தன்னுடைய ஆயுதத்தைக் கீழே இறக்கினார். பிறகு அவர்களை உற்றுப் பார்த்துக் கொண்டே, "நீங்கள் இருவரும் இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

அவர்கள் உள்ளே சென்றதும், ஹாரி, ஹாக்ரிட்டின் வில்லைச் சுட்டிக்காட்டி, "அது எதற்காக?" என்று கேட்டான்.

"ஒன்றுமில்லை . . . ஒன்றுமில்லை . . ." என்று ஹாக்ரிட் முணுமுணுத்தார். "நான் – நான் – வேறு யாரையோ எதிர்பார்த்துக் . . . அதை விட்டுத் தள்ளு . . . உட்காருங்கள் . . . நான் தேநீர் தயாரிக்கிறேன் . . ."

அவர் நடந்து கொண்ட விதம், தான் என்ன செய்து கொண்டிருந்தோம் என்று தனக்கே தெரியவில்லை என்பதுபோல இருந்தது. கெட்டிலில் இருந்த நீரை அடுப்பில் கொட்டி, அவர் அந்த அடுப்பை அணைத்தார். பிறகு, நடுக்கத்துடன் இருந்த தனது பிரம்மாண்டமான கைகளைக் கொண்டு அந்தக் கெட்டிலை நொறுக்கினார்.

"ஹாக்ரிட், உங்களுக்கு ஏதேனும் பிரச்சனையா?" என்று ஹாரி கேட்டான். "நீங்கள் ஹெர்மயனி பற்றிக் கேள்விப்பட்டீர்களா?"

"ஆமாம், கேள்விப்பட்டேன்," என்று ஹாக்ரிட் கூறினார். அவரது குரல் உடைந்திருந்தது.

அவர் பதற்றத்துடன் சன்னல் வழியாக அடிக்கடி வெளியே பார்த்துக் கொண்டிருந்தார். அவர்களுடைய பெரிய டம்ளர்களில் தேநீர் பாக்கெட்டுகளைப் போடாமலேயே அவற்றில் அவர் வெந்நீரை ஊற்றினார். அவர் ஒரு கேக்கை ஒரு தட்டில் போட்டுக் கொண்டிருந்தபோது, வாசல் கதவு பலமாகத் தட்டப்பட்டச் சத்தம் கேட்டது.

ஹாக்ரிட் அந்தக் கேக்கை கீழே போட்டார். ஹாரியும் ரானும் பெரும் அச்சத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்தனர். பிறகு, மறைய வைக்கும் அங்கியை அவர்கள் தங்கள்மீது போர்த்திக் கொண்டு ஒரு மூலைக்குச் சென்றனர். அவர்கள் பாதுகாப்பாக இருந்ததை உறுதி

Scanned by CamScanner

செய்து கொண்ட ஹாக்ரிட், தன் வில்லை எடுத்துக் கொண்டு வாசற்கதவை விரியத் திறந்தார்.

"ஹாக்ரிட், மாலை வணக்கம்!"

அங்கு வந்திருந்தது டம்பிள்டோர். அவர் ஹாக்ரிட்டின் குடிலுக்குள் நுழைந்தார். அவர் கடுமையான முகபாவத்துடன் இருந்தார். அவரைத் தொடர்ந்து மிக மிக வித்தியாசமாகக் காட்சியளித்த மனிதர் ஒருவரும் உள்ளே நுழைந்தார்.

அந்த அன்னியர் குள்ளமாகவும் குண்டாகவும் இருந்தார். அவருடைய வெள்ளை நிறத் தலைமுடி கலைந்து கிடந்தது. அவரது முகத்தில் கவலை குடி கொண்டிருந்தது. அவர் ஒரு விநோதமான வண்ணக் கலவையில் உடையணிந்திருந்தார். ஒரு சூட், ரத்தச் சிவப்பு நிறத்தில் ஒரு டை, ஒரு நீண்ட கருப்பு அங்கி, கூராக இருந்த ஊதா நிறக் காலணி ஆகியவை அவரை அலங்கரித்தன. பசுமை கலந்த மஞ்சள் நிறத்தில் இருந்த தன்னுடைய வட்ட வடிவத் தொப்பியை அவர் தன்னுடைய கைக்கு அடியில் இடுக்கிக் கொண்டிருந்தார்.

"அது என் அப்பாவின் மேலதிகாரி," என்று ரான் கிசுகிசுத்தான். "கார்னிலியஸ் ஃபட்ஜ். மந்திரஜால அமைச்சர்."

அவனை வாயை மூடிக் கொண்டிருக்கும்படி ஹாரி தன் முழங்கையால் பலமாக இடித்தான்.

ஹாக்ரிட்டின் முகம் பேயறைந்தாற்போலக் காணப்பட்டது. அவருக்கு வியர்த்துக் கொட்டியது. அவர் ஒரு நாற்காலியில் தொப்பென்று அமர்ந்து கொண்டு, அவர்கள் இருவரையும் மாறி மாறிப் பார்த்தார்.

"ஹாக்ரிட், நிலைமை மோசமாகப் போய்விட்டது," என்று ஃபட்ஜ் அதிகாரமாகக் கூறினார். "நிலைமை உண்மையிலேயே மிகமிக மோசமாகப் போய்விட்டதால் நானே நேரில் இங்கு வர வேண்டியதாயிற்று. மகுள்களுக்குப் பிறந்த நான்கு பேரின்மீது தாக்குதல் நிகழ்த்தப்பட்டுள்ளதால் மந்திரஜால அமைச்சகம் நேரடி நடவடிக்கையில் இறங்கியுள்ளது."

ஹாக்ரிட் டம்பிள்டோரை மன்றாடும் நோக்கில் பார்த்துக் கொண்டே, "நான் ஒருபோதும் . . ." என்று தடுமாறினார். "பேராசிரியரே, உங்களுக்கு நன்றாகவே தெரியும். நான் ஒருபோதும் அதைச் செய்யவில்லை!"

டம்பிள்டோர் ஃப்ட்ஜை நோக்கித் தன் புருவத்தை உயர்த்தியவாறு, "ஹாக்ரிட்மீது எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கிறது என்பதை நான் இங்கு வலியுறுத்த விரும்புகிறேன்," என்று கூறினார்.

ஃபட்ஜ் அசௌகரியமாக உணர்ந்தவாறே, "டம்பிள்டோர், இங்கே பாருங்கள்," என்று துவக்கினார். "ஹாக்ரிட்டின் கடந்தகால நடவடிக்கைகள் அவருக்கு எதிராக இருக்கின்றன. என் அமைச்சகம் ஏதாவது நடவடிக்கை எடுத்தாக வேண்டும். பள்ளியின் நிர்வாகக் குழு என்னுடன் தொடர்பு கொண்டுள்ளது."

Scanned by CamScanner

"என்ன, மீண்டுமா? ஹாக்ரிட்டை அப்புறப்படுத்துவது எந்த விதத்திலும் பிரயோஜனப்படாது," என்று டம்பிள்டோர் கூறினார். அவரது நீல நிறக் கண்கள் அனலைக் கக்கிக் கொண்டிருந்தன. ஹாரி அவரை அப்படி ஒருபோதும் பார்த்ததில்லை.

ஃபட்ஜ் தன்னுடைய தொப்பியை நோண்டியவாறே, "இதை என்னுடைய கோணத்திலிருந்து பாருங்கள்," என்று கூறினார். "அவர்கள் என்னை நெருக்குகின்றனர். நான் ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விரும்புகின்றனர்.

"அது ஹாக்ரிட் இல்லை என்று முடிவாகிவிட்டால், அவர் திரும்பி வந்துவிடுவார். அதைப் பற்றி மேலே எதுவும் பேசப்படாது. ஆனால் அவரை நான் கூட்டிச் சென்றுதான் ஆக வேண்டும். கண்டிப்பாக நான் அதைச் செய்துதான் ஆக வேண்டும். நான் என் கடமையைச் செய்ய –"

நடுங்கிக் கொண்டிருந்த ஹாக்ரிட், "என்னைக் கூட்டிச் செல்லப் போகிறீர்களா?" என்று கேட்டார். "என்னை எங்கே கூட்டிச் செல்லப் போகிறீர்கள்?"

ஃபட்ஜ் ஹாக்ரிட்டின் கண்களைப் பார்ப்பதைத் தவிர்த்தவாறே, "அருகில்தான்," என்று கூறினார். "தண்டனையாக இல்லை, முன்னெச்சரிக்கையாக. வேறு யாராவது பிடிக்கப்பட்டுவிட்டால், நீங்கள் எங்களுடைய மனமார்ந்த மன்னிப்புடன் விடுவிக்கப்படுவீர்கள் . . ."

"அஸ்கபானுக்கு இல்லையே?" என்று ஹாக்ரிட் நம்பிக்கை இழந்த குரலில் கேட்டார்.

ஃபட்ஜ் அதற்கு பதிலளிக்கும் முன்பாக வாசற்கதவு மீண்டும் பலமாகத் தட்டப்பட்டது.

டம்பிள்டோர் போய்க் கதவைத் திறந்தார். இப்போது முழங்கையால் இடி வாங்கியது ஹாரி. அவன் கொஞ்சம் சத்தமாகவே முனகினான்.

லூசியஸ் மால்ஃபாய் ஹாக்ரிட்டின் குடிலுக்குள் வந்து கொண்டிருந்தார். பயணங்களின்போது அணிவதற்கான நீண்ட கருப்பு நிற அங்கி ஒன்றை அவர் அணிந்திருந்தார். அவரது உதடுகளில் ஒரு குரூரமான, திருப்தியான புன்னகை படர்ந்திருந்தது. ஃபேங் உறுமியது.

"ஃபட்ஜ், நீங்கள் இங்கு ஏற்கனவே வந்துவிட்டீர்களா?" என்று அவர் ஆமோதிக்கும் விதமாகக் கேட்டார். "நல்லது, நல்லது . . ."

"நீங்கள் இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?" என்று ஹாக்ரிட் கொதிப்புடன் கேட்டார். "என் வீட்டிலிருந்து வெளியே போங்கள்!"

லூசியஸ் அந்தச் சிறிய குடிலை இகழ்ச்சி ததும்பப் பார்த்துக் கொண்டே, "இதை என்னவென்று அழைத்தாய் – வீடு என்றா? என்னை நம்பு, எனக்கு மட்டும் இங்கு வர ஆசையா என்ன?" என்று கேட்டார். "நான் பள்ளிக்குத்தான் வந்தேன். ஆனால் தலைமையாசிரியர் இங்கு இருப்பதாக அவர்கள் தெரிவித்தனர்."

Scanned by CamScanner

"என்னிடம் உங்களுக்கு என்ன வேலை?" என்று டம்பிள்டோர் கேட்டார். அவர் மரியாதையுடன்தான் பேசினார், ஆனால் அவரது நீல நிறக் கண்களில் இன்னும் அனல் பறந்து கொண்டிருந்தது.

லூசியஸ் ஒரு தோல் காகிதத்தை விரித்தவாறு, "டம்பிள்டோர், இது ஒன்றும் மகிழ்ச்சியான வேலை அல்ல," என்று விட்டேத்தியாகக் கூறினார். "நீங்கள் உங்கள் பதவியிலிருந்து விலகிக் கொள்வதற்கான வேளை வந்துவிட்டது என்று பள்ளியின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் முடிவு செய்துள்ளனர். இது உங்களுடைய தற்காலிக வேலை நீக்க உத்தரவு. இதில் குழுவில் உள்ள பன்னிரண்டு உறுப்பினர்களின் கையெழுத்துக்களும் இருக்கின்றன. நீங்கள் உங்களுடைய பிடிமானத்தை இழந்துவிட்டீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம். இதுவரை எத்தனைத் தாக்குதல்கள் நிகழ்ந்துள்ளன? இன்று மாலையில் மட்டும் இரண்டு தாக்குதல்கள், சரிதானே? இந்த வேகத்தில் போனால், விரைவில் ஹாக்வார்ட்ஸில் மகுள்களுக்குப் பிறந்தவர்கள் யாருமே படித்துக் கொண்டிருக்க மாட்டார்கள். அது பள்ளிக்கு எவ்வளவு கடுமையான இழப்பை ஏற்படுத்தும் என்பதைச் சொல்லத் தேவையில்லை."

"லூசியஸ், இங்கே பாருங்கள்," என்று ஃபட்ஜ் கூறினார். அவர் கலவரமடைந்திருந்தார். "என்ன சொன்னீர்கள்? டம்பிள்டோரை வீட்டுக்கு அனுப்புவது என்றா? வேண்டாம், வேண்டாம்! . . . இப்போது இருக்கும் களேபரச் சூழலில் இதுவும் சேர்ந்து கொள்ள வேண்டாம் . . ."

"ஃபட்ஜ், பள்ளித் தலைமையாசிரியரின் நியமனமும் நீக்கலும் பள்ளி நிர்வாகக் குழுவின் பொறுப்பு," என்று லூசியஸ் கூறினார். "டம்பிள்டோர் இத்தாக்குதல்களை நிறுத்தத் தவறிவிட்டக் காரணத்தால் . . . "

"லூசியஸ், இங்கே பாருங்கள், இந்தத் தாக்குதல்களை டம்பிள்டோராலேயே நிறுத்த முடியாவிட்டால், அவற்றை வேறு யாராலும் நிறுத்த முடியாது," என்று ஃபட்ஜ் கூறினார். இப்போது அவரது மேலுதடுகளில் வியர்வை அரும்பியிருந்தது.

"அதைப் பொறுத்திருந்து பார்க்கலாம்," என்று லூசியஸ் குரூரமான புன்னகையுடன் கூறினார். "ஆனால் இப்போது நாங்கள் பன்னிரண்டு பேரும் இதற்கு ஆதரவாக வாக்களித்துள்ளோம் . . ."

ஹாக்ரிட் துள்ளி எழுந்தார். அவரது கரடுமுரடான தலைமுடி மேற்கூரையைத் தொட்டுக் கொண்டிருந்தது.

"லூசியஸ், இதில் கையெழுத்துப் போட அவர்களை ஒப்புக் கொள்ள வைக்க அவர்களில் எத்தனைப் பேரை நீங்கள் மிரட்டவும் அச்சுறுத்தவும் வேண்டியிருந்தது?"

"கொஞ்சம் அடக்கி வாசி, ஹாக்ரிட்! உன்னுடைய இந்தக் கோபம்தான் ஒருநாள் உனக்கு எமனாக வந்து வாய்க்கப் போகிறது," என்று லூசியஸ் கொக்கரித்தார். "அஸ்கபான் காவலாளிகளைப் பார்த்து நீ இப்படிக் கத்தாமல் இருப்பது நல்லது என்று நான் உனக்கு

Scanned by CamScanner

அறிவுரை கூற விரும்புகிறேன். அவர்கள் இதைச் சகித்துக் கொள்ள மாட்டார்கள்."

"நீங்கள் டம்பிள்டோரை வெளியேற்றக்கூடாது," என்று ஹாக்ரிட் கத்தினார். அவரது ஆக்ரோஷத்தைப் பார்த்து ஃபேங் தன்னுடைய கூடைக்குள் பம்மிப் பதுங்கிக் கொண்டது. "அவரை அப்புறப்படுத்திவிட்டால், மகுள்களுக்குப் பிறந்தவர்களுக்கு எந்தவிதப் பாதுகாப்பும் இருக்காது. அடுத்துக் கண்டிப்பாகப் பல தலைகள் உருளும்!"

"ஹாக்ரிட், உன்னைக் கொஞ்சம் சாந்தப்படுத்திக் கொள்," என்று டம்பிள்டோர் உறுதியாகக் கூறினார். பின்னர் அவர் லூசியஸ் பக்கம் திரும்பினார்.

"லூசியஸ், பள்ளியின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் நான் விலக வேண்டும் என்று விரும்பினால், நான் விலகிக் கொள்கிறேன்."

"ஆனால் –" என்று ஃபட்ஜ் தடுமாறினார்.

"முடியாது," என்று ஹாக்ரிட் இரைந்தார்.

லூசியஸின் ஜீவனற்றச் சாம்பல் நிறக் கண்களிலிருந்து டம்பிள்டோர் தன்னுடைய பிரகாசமான நீல நிறக் கண்களை அகற்றவேயில்லை.

"ஆனால்," என்று டம்பிள்டோர் தொடர்ந்தார். கேட்டுக் கொண்டிருந்தவர்கள் தனது வாயிலிருந்து வெளிப்பட்ட ஒவ்வொரு வார்த்தையையும் தவறாமல் கேட்கும் விதத்தில் அவர் மிக மெதுவாகவும் தெளிவாகவும் பேசினார். "இங்கு இருப்பவர்கள் என்மீது வைத்துள்ள விசுவாசத்தை நான் இழக்கும்போதுதான் நான் இப்பள்ளியிலிருந்து உண்மையிலேயே விலகியிருப்பேன். அதோடு, இங்கு ஹாக்வார்ட்ஸில், உதவி கேட்பவர்களுக்குக் கண்டிப்பாக உதவி கிடைக்கும் என்பதையும் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்."

ஒருசில கணங்களுக்கு டம்பிள்டோரின் கண்கள் தாங்கள் ஒளிந்திருந்த மூலையை நோக்கி மின்னியதாக ஹாரி உறுதியாக நம்பினான்.

"போற்றப்பட வேண்டிய உணர்வுகள்," என்று கூறி லூசியஸ் தலை வணங்கினார். "நாங்கள் எல்லோருமே உங்களுடைய – ம்ம் – உங்களது தனித்துவமான தலைமைத்துவத்தை என்றுமே மறக்க மாட்டோம். டம்பிள்டோர், உங்களுக்கு அடுத்ததாக வருபவர் – கொலைகளைத் தடுத்து நிறுத்துவார் என்று –"

அவர் அக்குடிலின் வாசற்கதவை திறந்து, டம்பிள்டோரைப் பார்த்து மீண்டும் தலை வணங்கி, அவரை வெளியே வழியனுப்பி வைத்தார். தன்னுடைய தொப்பியை நோண்டிக் கொண்டிருந்த ஃபட்ஜ், ஹாக்ரிட் தனக்கு முன்னால் செல்வதற்காகக் காத்திருந்தார். ஆனால் ஹாக்ரிட் தான் இருந்த இடத்தைவிட்டு அசையவில்லை. அவர் ஆழமாக ஒரு முறை சுவாசித்துவிட்டு, கவனமாக, "யாராவது எதையாவது கண்டுபிடிக்க விரும்பினால், அவர்கள் செய்ய வேண்டியதெல்லாம் சிலந்திப் பூச்சிகளைப் பின்தொடர்ந்து செல்ல

Scanned by CamScanner

வேண்டும், அவ்வளவுதான். அது அவர்களைத் தாங்கள் விரும்பும் இடத்திற்குக் கொண்டு சேர்க்கும். நான் கூற வேண்டிய எல்லாவற்றையும் நான் கூறிவிட்டேன்," என்று கூறினார்.

ஃபட்ஜ் அவரை வியப்புடன் பார்த்தார்.

ஹாக்ரிட், மிருதுவான விலங்குத் தோலால் செய்யப்பட்டிருந்த தன்னுடைய மேலங்கியை எடுத்துக் கொண்டு, "சரி, நான் வருகிறேன்," என்று கூறினார். அவர் ஃபட்ஜைப் பின்பற்றி வாசற்கதவை நோக்கி நடந்து கொண்டிருந்தபோது மீண்டும் ஒரு முறை நின்றார். பிறகு, "நான் இல்லாதிருக்கும் சமயத்தில் யாராவது ஃபேங்கைக் கவனித்துக் கொள்ள வேண்டும்," என்று சத்தமாகக் கூறினார்.

வாசற்கதவு அறைந்து சாத்தப்பட்டது. ரான் மறைய வைக்கும் அங்கியை உருவினான்.

"நாம் இப்போது பெரும் பிரச்சனையில் மாட்டிக் கொண்டுள்ளோம்," என்று அவன் கம்மிய குரலில் கூறினான். "டம்பிள்டோர் கிடையாது. இதற்குப் பதிலாக அவர்கள் இப்பள்ளியையே இழுத்து மூடியிருக்கலாம். அவர் இல்லையென்றால் தினம் ஒரு தாக்குதல் நடைபெறும்."

மூடியிருந்த வாசற்கதவைப் பிராண்டியவாறு ஃபேங் ஊளையிடத் துவங்கியது.

Scanned by CamScanner

அத்தியாயம் பதினைந்து

அரகாக்

கோட்டையைச் சுற்றி இருந்த மைதானங்களில் கோடையின் ஆட்சி துவங்கியிருந்தது. வானமும் ஏரியும் நீலப் போர்வையைப் போர்த்தியிருந்தன. பசுமைக்குடிலில் முட்டைக்கோஸ் அளவிலான மலர்கள் பூத்துக் குலுங்கின. ஃபேங் தன் கால்களைச் சுற்றித் துள்ளிக் குதித்து வர, ஹாக்ரிட் அந்த மைதானங்களை வலம் வந்து கொண்டிருந்த காட்சி இப்போது கோட்டையின் சன்னல்களின் வழியாகத் தென்படாமல் போனது ஹாரிக்கு என்னவோபோல இருந்தது. கோட்டைக்கு உள்ளேயும் நிலைமை மிக மோசமாக ஆகியிருந்தது.

ஹாரியும் ரானும் மருத்துவமனைக்குச் சென்று ஹெர்மயனியைப் பார்த்து வர முயன்றனர். ஆனால் இப்போது மருத்துவமனையில் பார்வையாளர்கள் தடை செய்யப்பட்டிருந்தனர்.

மருத்துவமனையின் கதவில் இருந்த ஒரு விரிசல் வழியாக, மேடம் பாம்ஃபிரே, "நாங்கள் எல்லா முன்னெச்சரிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது," என்று கூறினார். "மன்னிக்க வேண்டும், ஆனால் உங்களை உள்ளே விட முடியாது. தாக்குதல் நடத்தும் நபர் மீண்டும் வந்து இவர்களைக் காலி செய்துவிடுவதற்கு வாய்ப்பிருக்கிறது . . ."

டம்பிள்டோர் போனவுடன், முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு பயம் எல்லோரையும் ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தது. கோட்டைக்கு வெளியே தகதகத்துக் கொண்டிருந்த சூரியனைகூட அளிக்கம்பிகள் போடப்பட்டிருந்த சன்னல்களை மீறி உள்ளே வர பயந்ததுபோல இருந்தது. கவலையும் மன இறுக்கமும் தாண்டவமாடாத ஒரு முகம்கூட அங்கு காணப்படவில்லை. தப்பித்தவறிக் கேட்டச் சிரிப்பொலிகள்கூட, இறீச்சென்று நாராசாரமாகவும் மிகவும் செயற்கையாகவும் ஒலித்ததால், சிரித்தவர்கள் தாங்களாகவே தங்கள் சிரிப்பை அடக்கிக் கொண்டனர்.

ஹாரி டம்பிள்டோரின் கடைசி வார்த்தைகளைத் தனக்குள் தொடர்ந்து முணுமுணுத்து வந்தான். "இங்கு இருப்பவர்கள் என்மீது வைத்துள்ள விசுவாசத்தை நான் இழக்கும்போதுதான் நான் இப்பள்ளியிலிருந்து உண்மையிலேயே விலகியிருப்பேன். அதோடு,

Scanned by CamScanner

இங்கு ஹாக்வார்ட்ஸில், உதவி கேட்பவர்களுக்குக் கண்டிப்பாக உதவி கிடைக்கும் என்பதையும் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்." ஆனால் வெற்று வார்த்தைகளால் என்ன பிரயோஜனம்? அவர்கள் யாரிடம் போய் உதவி கேட்பது? அதுவும், அவர்களைச் சுற்றி இருந்த எல்லோருமே அவர்களைப் போலவே குழம்பிப் போயும் பயந்து போயும் இருந்தபோது, யாரிடம் போய் உதவி கேட்பது?

சிலந்திப் பூச்சிகளைப் பற்றிய ஹாக்ரிட்டின் துப்பாவது புரிந்து கொள்வதற்கு எளிதாக இருந்தது. ஆனால் பிரச்சனை என்னவென்றால், கோட்டையில் இருந்த அனைத்துச் சிலந்திகளும் திடீரென்று மாயமாய் மறைந்துவிட்டதுபோலத் தோன்றியது. ஹாரி தான் சென்ற இடங்களிலெல்லாம் சிலந்திப் பூச்சிகளைத் தேடினான். அவனுக்கு ரான் தயக்கத்தோடு உதவி செய்தான். அவர்கள் எங்கும் தனியாகச் செல்ல அவர்களுக்கு அனுமதி இல்லாமல் போனதும் அவர்களுக்கு எவ்விதத்திலும் உதவவில்லை. அவர்கள் எங்கு செல்ல வேண்டியிருந்தாலும், கிரிஃபின்டார் அணியைச் சேர்ந்த பிற மாணவர்களோடு ஒரு குழுவாகவே செல்ல வேண்டும் என்று அவர்களுக்குக் கட்டளையிடப்பட்டு இருந்தது. தாங்கள் ஒரு வகுப்பிலிருந்து மற்றொரு வகுப்பிற்கு ஆசிரியர்களால் வழிநடத்திச் செல்லப்பட்டதைப் பெரும்பாலான மாணவர்கள் வரவேற்றதுபோலத் தெரிந்தது. ஆனால் ஹாரிக்கு அந்த எண்ணம் வேப்பங்காயாகக் கசந்தது.

பயமும் சந்தேகமும் தலைவிரித்துக் கோரத் தாண்டவமாடிக் கொண்டிருந்த அந்தச் சூழ்நிலையை முழுக்க முழுக்க ரசித்த ஒரு ஜீவனும் அங்கு இருந்தது. அது மால்ஃபாய். புதிதாக நியமிக்கப்பட்டப் பள்ளித் தலைமை மாணவன்போல அவன் திமிராக வளைய வந்து கொண்டிருந்தான். மால்ஃபாய் எது குறித்து அவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தான் என்பது அடுத்த மாயத் திரவ வகுப்பு வரும்வரை ஹாரிக்குப் புரியவில்லை. டம்பிள்டோரும் ஹாக்ரிட்டும் அப்புறப்படுத்தப்பட்டுப் பதினைந்து தினங்கள் கழித்து நடைபெற்ற மாயத் திரவ வகுப்பில், ஹாரி, மால்ஃபாய்க்குப் பின்னால் உட்கார்ந்திருந்தான். அப்போது மால்ஃபாய், கிராபிடமும் காயலிடமும் பீற்றிக் கொண்டிருந்தான்.

"டம்பிள்டோரைத் தூக்கியெறிந்தது என்னுடைய அப்பாவாகத்தான் இருக்கும் என்று நான் எப்போதுமே நினைத்தேன்," என்று அவன் கூறினான். தன் குரல் சற்று உயர்ந்திருந்ததை அவன் பொருட்படுத்தவில்லை. "இப்பள்ளியில் இதுவரை பணிபுரிந்துள்ள தலைமையாசிரியர்களில் டம்பிள்டோர்தான் மிகமிக மோசமான தலைமையாசிரியர் என்று என் அப்பா நினைப்பதாக நான் உங்களிடம் ஏற்கனவே கூறினேன், இல்லையா? ஒருவேளை இப்போது நமக்கு ஒரு பாங்கான தலைமையாசிரியர் கிடைக்கலாம். ரகசியங்கள் அடங்கிய பாதாள அறையை மூட விரும்பாத ஒருவராக அவர் இருந்தால் நல்லது! மெக்கானகல் தற்காலிகமாகத்தான்

Scanned by CamScanner

தலைமையாசிரியர் பதவியை வகித்து வருகிறார். அவர் அதிக நாட்கள் அப்பதவியில் நீடிக்க மாட்டார் . . ."

ஸ்னேப் ஹாரியைக் கடந்து வேகமாகச் சென்றார். பக்கத்தில் காலியாக இருந்த ஹெர்மயனியின் இடத்தையும் கொப்பரையையும் பார்த்தும்கூட ஸ்னேப் எதுவும் கூறவில்லை.

"சார்," என்று மால்ஃபாய் அழைத்தான். "சார், நீங்கள் ஏன் தலைமையாசிரியர் பதவிக்கு விண்ணப்பிக்கக்கூடாது?"

"மால்ஃபாய், உட்கார்," என்று ஸ்னேப் கூறினார். ஆனால் தனது உதடுகளில் பரவிய மெல்லிய புன்னகையை அவரால் மறைக்க முடியவில்லை. "பேராசிரியர் டம்பிள்டோர், பள்ளி நிர்வாகக் குழுவினரால் தற்காலிகமாகத்தான் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். என்னைக் கேட்டால் அவர் எந்த நேரமும் திரும்பி வந்துவிடுவார் என்றுதான் சொல்வேன்."

மால்ஃபாய் இகழ்ச்சிப் புன்முறுவல் பூத்தவாறு, "சார், ஆனால் நீங்கள் இதற்கு விண்ணப்பிக்க விரும்பினால், என்னுடைய அப்பாவின் ஆதரவு நிச்சயமாக உங்களுக்குத்தான் இருக்கும் என்று நான் நம்புகிறேன். இங்கு இருப்பதிலேயே மிகச் சிறந்த ஆசிரியர் நீங்கள்தான் என்று நான் என் அப்பாவிடம் கூறுவேன்," என்று கூறினான்.

ஸ்னேப்பும் கர்வமாக நகைத்தவாறு அந்த வகுப்பைச் சுற்றி வந்தார். நல்லவேளையாக, சீமஸ் தன்னுடைய கொப்பரைக்குள் வாந்தி எடுத்துக் கொண்டிருந்ததைப்போல பாவனை செய்ததை அவர் பார்க்கவில்லை.

"இன்னும் ஏன் ஈன ரத்தப் பிறவிகள் தங்கள் பெட்டிப் படுக்கைகளைக் கட்டிக் கொண்டு இந்த இடத்தைக் காலி செய்யவில்லை என்று எனக்குப் புரியவில்லை," என்று மால்ஃபாய் தொடர்ந்து பேசிக் கொண்டே போனான். "அடுத்து ஈன ரத்தப் பிறவிகளில் ஒருவர் கொல்லப்படப் போவது உறுதி. அது ஹெர்மயனியாக இல்லாமல் போனது துரதிர்ஷ்டமானது . . ."

நல்லவேளையாக, சரியாக அக்கணத்தில் மணி அடித்தது. மால்ஃபாயின் கடைசி வார்த்தையைக் கேட்டதும் ரான் தன்னுடைய முக்காலியில் இருந்து ஆவேசமாக எழுந்திருந்தான். மாணவர்கள் தங்களுடைய பைகளையும் புத்தகங்களையும் எடுத்துக் கொண்டு வெளியேற முயன்ற களேபரத்தில் அவன் மால்ஃபாயை அணுக முயன்றதை யாரும் கவனிக்கவில்லை.

"நான் அவனை ஒரு வழி பண்ணப் போகிறேன்," என்று ரான் வானத்துக்கும் பூமிக்குமாகக் குதித்துக் கொண்டிருந்தான். ஹாரியும் டீன் தாமஸும் அவனை இரு பக்கங்களிலும் பிடித்திருந்தனர். "எனக்கு எதைப் பற்றியும் கவலையில்லை. எனக்கு என்னுடைய மந்திரக்கோல்கூட வேண்டாம். நான் அவனை என் வெறும் கைகளாலேயே கழுத்தை நெறித்துக் கொல்லப் போகிறேன் –"

Scanned by CamScanner

"வேகமாகக் கிளம்புங்கள், நான் உங்கள் எல்லோரையும் மூலிகையியல் வகுப்பிற்கு அழைத்துச் செல்ல வேண்டும்," என்று ஸ்னேப் குரைத்தார். அவர்கள் இரண்டிரண்டு பேராக வரிசையாக வெளியேறினர். அந்த வரிசையின் கடைசியில் ஹாரி, ரான், டீன் தாமஸ் ஆகிய மூவரும் சென்றனர். ரான் இன்னும் திமிறிக் கொண்டிருந்தான். ஸ்னேப் அந்த மொத்த வகுப்பையும் கோட்டைக்கு வெளியே அழைத்துச் சென்று விட்டுவிட்டு அகன்றதும்தான் ஹாரியும் டீன் தாமஸும் ரானைப் பிடித்திருந்த பிடியை விட்டனர். அவர்கள் காய்கறித் தோட்டங்களின் வழியாகப் பசுமைக்குடிலை நோக்கிச் சென்றனர்.

மூலிகையியல் வகுப்பு முற்றிலும் களையிழந்து போயிருந்தது. தங்கள் வகுப்பைச் சேர்ந்த ஹெர்மயனியையும் ஜஸ்டினையும் அவர்கள் இழந்திருந்தனர்.

பேராசிரியர் ஸ்புரவுட், அபீசீனிய உலர் அத்திகளைக் கத்தரித்து ஒழுங்குபடுத்தும் வேலையை அந்த வகுப்பினரிடம் ஒப்படைத்திருந்தார். வாடி வதங்கிப் போயிருந்த அச்செடியின் சில தண்டுகளை, ஹாரி, குப்பைக் குவியலில் போடச் சென்றபோது, அவன் நேருக்கு நேராக எர்னியைச் சந்திக்க நேர்ந்தது. எர்னி ஒரு முறை ஆழமாக சுவாசித்துவிட்டு, மிகவும் விட்டேத்தியாக, "ஹாரி, உன்னைச் சந்தேகித்ததற்காக என்னை மன்னித்து விடு. நீ கண்டிப்பாக ஹெர்மயனியைத் தாக்கியிருக்க மாட்டாய். நான் உன்னிடம் கூறியவற்றிற்காக உன்னிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். இப்போது நம் எல்லோருடைய நிலையும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது," என்று உணர்ச்சி ஏதுமற்றக் குரலில் கூறினான்.

அவன் தனது குட்டையான கையை நீட்டினான். ஹாரி அதைப் பிடித்துக் குலுக்கினான். ஹாரியும் ரானும் வேலை செய்து கொண்டிருந்த அதே உலர் அத்திச் செடிகள் பகுதியில், அவர்களோடு சேர்ந்து வேலை செய்ய எர்னியும் ஹானாவும் அவர்களோடு இணைந்து கொண்டனர்.

எர்னி, காய்ந்து போயிருந்த சிறு கிளைகளைப் பிய்த்தெறிந்து கொண்டே, "மால்ஃபாய் இவை எல்லாவற்றையும் குறித்து சந்தோஷமாக இருப்பதுபோலத் தெரிகிறது. நீ என்ன சொல்கிறாய்? அவன்தான் ஸ்லிதரினின் உண்மையான வாரிசாக இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன்," என்று கூறினான்.

"எர்னி, நீ மகா புத்திசாலிதான்!" என்று ரான் கூறினான். ஹாரியைப்போல் எர்னியை அவ்வளவு சுலபத்தில் ரான் மன்னித்திருக்கவில்லை என்று தோன்றியது.

"ஹாரி, இது மால்ஃபாயாக இருக்கும் என்று நீ நினைக்கிறாயா?" என்று எர்னி கேட்டான்.

"இல்லை," என்று ஹாரி கூறினான். அவன் குரலில் இருந்த உறுதியைக் கண்டு எர்னியும் ஹானாவும் வெறித்துப் பார்த்தனர்.

Scanned by CamScanner

ஒருகணம் கழித்து ஹாரி பார்த்த ஒரு விஷயம் அவனைத் தன் பெரிய தோட்டக் கத்திரிக்கோலைக் கொண்டு ரானின் கையை இடிக்க வைத்தது.

"ஆ! நீ என்ன செய்கிறாய்? –"

நிலத்தில் ஒருசில அடிகள் தள்ளி இருந்த ஒரு பகுதியை ஹாரி ரானுக்குச் சுட்டிக்காட்டினான். பல பெரிய சிலந்திகள் அங்கு ஊர்ந்து கொண்டிருந்தன.

"அடக் கடவுளே," என்று ரான் கூறினான். அவன் தன் சந்தோஷத்தை மறைக்க முடியாமல் தவித்தான். "ஆனால் இவற்றை நாம் இப்போது பின்பற்றிச் செல்ல முடியாது . . ."

அவர்கள் பேசியதை எர்னியும் ஹானாவும் ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருந்தனர்.

அந்தச் சிலந்திகள் வேகமாக ஓடிக் கொண்டிருந்ததை ஹாரி பார்த்தான்.

"தடை செய்யப்பட்டக் காட்டை நோக்கி அவை செல்வதுபோலத் தோன்றுகிறது . . ."

ரான் அது குறித்து அதிருப்தி அடைந்தவன்போலக் காணப்பட்டான்.

வகுப்பு முடிந்ததும், பேராசிரியர் ஸ்புரவுட், தீய மந்திர சக்திகளுக்கு எதிரான பாதுகாப்பு வகுப்பிற்கு அவர்கள் அனைவரையும் அழைத்துச் சென்றார். ஹாரியும் ரானும் மற்றவர்களின் காதுகளில் விழாதபடித் தங்களுக்குள் பேசிக் கொள்வதற்காகக் கொஞ்சம் பின்னால் தள்ளி நடந்து வந்தனர்.

"மறைய வைக்கும் அங்கியை நாம் மீண்டும் உபயோகப்படுத்த வேண்டியிருக்கும்," என்று ஹாரி ரானிடம் கூறினான். "நாம் ஃபேங்கை நம்முடன் அழைத்துச் செல்லலாம். அது ஹாக்ரிட்டுடன் தடை செய்யப்பட்டக் காட்டிற்குள் சென்று பழக்கப்பட்டுள்ளதால், அது நமக்கு உதவியாக இருக்கக்கூடும்."

தன்னுடைய மந்திரக்கோலைத் தன் கையில் கழற்றிக் கொண்டிருந்த ரான், "சரி," என்று கூறினான். அவர்கள் லாக்ஹார்ட்டின் வகுப்பில் தங்களுடைய வழக்கமான இடமான வகுப்பின் பின் பகுதியில் அமர்ந்ததும், ரான், "ம்ம் – அங்கு – அந்தக் காட்டினுள் – ஓநாய்மனிதர்கள் இருப்பதாகக் கூறப்படுகிறதே?" என்று கேட்டான்.

அவனுடைய கேள்விக்கு பதிலளிப்பதைத் தவிர்த்த ஹாரி, "அங்கு நல்ல விஷயங்களும் இருக்கின்றன. அங்கு இருக்கும் குதிரை மனிதர்கள் நல்லவர்கள். அதேபோலத்தான் ஒற்றைக் கொம்புக் குதிரைகளும்," என்று கூறினான்.

தடை செய்யப்பட்டக் காட்டிற்குள் ரான் அதற்கு முன்பு ஒருபோதும் சென்றிருந்ததில்லை. ஹாரி ஒரே ஒரு முறை சென்றிருந்தான். ஆனால் தான் மீண்டும் அங்கு செல்ல வேண்டிய அவசியம் ஏற்படாது என்று அவன் நம்பியிருந்தான்.

Scanned by CamScanner

லாக்ஹார்ட் துள்ளல் நடையுடன் வகுப்பிற்குள் நுழைந்தார். மொத்த வகுப்பும் அவரை வெறித்துப் பார்த்தது. கோட்டையில் இருந்த மற்ற எல்லா ஆசிரியர்களும் அழுது வடிந்து கொண்டு இருந்தனர். ஆனால் லாக்ஹார்ட் மட்டும் உற்சாகம் கொப்பளிக்க வலம் வந்து கொண்டிருந்தார்.

"உங்கள் அனைவருக்கும் என்னவாயிற்று?" என்று அவர் கத்தினார். "ஏன் துக்க வீட்டில் இருப்பதுபோல இடிந்து போய் உட்கார்ந்திருக்கிறீர்கள்?"

அங்கிருந்தவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர், ஆனால் யாரும் வாயைத் திறக்கவில்லை.

அவர்கள் அனைவரும் மந்தபுத்திக்காரர்கள் என்பதுபோல அவர் மிகமிக மெதுவாக, "குற்றவாளி பிடிபட்டுவிட்டான். இனி ஆபத்து எதுவுமில்லை. உங்களுக்கு ஏன் இது இன்னும் புரியவில்லை?" என்று கேட்டார்.

"இனி ஆபத்து இல்லை என்று யார் சொன்னார்கள்?" என்று டீன் தாமஸ் சத்தமாகக் கேட்டான்.

"என் இளம் சிங்கமே, ஹாக்ரிட்தான் குற்றவாளி என்று நூறு சதவீதம் உறுதியாகத் தெரிந்திருக்காவிட்டால் மந்திரஜால அமைச்சர் அவரைச் சிறைக்கு அனுப்பியிருக்க மாட்டார்," என்று லாக்ஹார்ட் கூறினார். அவரது குரல், 'ஒன்றும் ஒன்றும் இரண்டு' என்று விளக்கும் ஒருவரது குரலை ஒத்திருந்தது.

"இல்லை. நூறு சதவீதம் உறுதியாகத் தெரிந்திருக்காவிட்டாலும் அவர் அதைச் செய்திருப்பார்," என்று ரான் டீனைவிடச் சத்தமான குரலில் கூறினான்.

"ஹாக்ரிட்டின் கைது பற்றி உங்களைவிட எனக்கு அதிகமான தகவல்கள் தெரியும் என்பதை நான் பெருமையுடன் கூறிக் கொள்கிறேன்," என்று லாக்ஹார்ட், சுயதிருப்திப் பொங்கி வழிந்த ஒரு குரலில் கூறினார்.

தான் அப்படி நினைக்கவில்லை என்று கூற ரான் வாயெடுத்தான். ஆனால் ஹாரி அவனைப் பெஞ்சுக்கு அடியில் பலமாக உதைத்ததால், அப்படியே நிறுத்திக் கொண்டான்.

"நாம் அங்கு இருக்கவில்லை என்பது உனக்கு நினைவிருக்கிறதா?" என்று ஹாரி கேட்டான்.

ஆனால் லாக்ஹார்ட்டின் வெறுப்பூட்டும் உற்சாகமிகுதியும், ஹாக்ரிட் எதற்கும் லாயக்கற்றவர் என்று தான் எப்போதுமே கருதி வந்திருந்தது குறித்து அவர் கூறிய ஜாடைமாடையான வார்த்தைகளும், இந்த விவகாரம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டது என்பதுபோல அவர் அடாவடியாக நடந்து கொண்ட விதமும், 'கோரைப் பல் ராட்சஸப் பேய்க்குச் சாவு மணி அடித்தல்' புத்தகத்தை நேராக லாக்ஹார்ட்டின் முகத்தின்மீது தூக்கியெறிய வேண்டும் என்ற அடக்க முடியாத கோபத்தை ஹாரிக்குள் தோற்றுவித்தன. அதற்கு

Scanned by CamScanner

பதிலாக, ரானுக்கு ஒரு குறிப்பு எழுதியதோடு அவன் திருப்திப்பட்டுக் கொண்டான்: **"இன்று இரவு நாம் அதைச் செய்யலாம்!"**

ரான் அதைப் படித்துவிட்டு மென்று விழுங்கினான். தங்களுக்கு அருகே ஹெர்மயனி வழக்கமாக உட்கார்ந்த இடத்தை அவன் ஓரக் கண்ணால் பார்த்தான். அது தனக்குத் துணிச்சலைக் கொடுத்ததுபோல அவன் உணர்ந்தான். பிறகு அவன் ஹாரியை நோக்கித் தலையை அசைத்தான்.

* * *

இப்போதெல்லாம் கிரிஃபின்டார் பொது அறை மிகவும் கூட்டமாக இருந்தது. ஆறு மணிக்குப் பிறகு அவர்கள் வேறு எங்கும் போக முடியாது என்பதுதான் அதற்குக் காரணம். அதோடு, வாயில் போட்டு மெல்லுவதற்கு அவர்களுக்கு ஏகப்பட்ட அவலும் இருந்தது. அதனால் நள்ளிரவு வரை அந்த அறை காலியாகாமலேயே இருந்தது.

ஹாரி இரவு உணவிற்குப் பிறகு நேராகத் தனது பொதுப் படுக்கையறைக்குச் சென்று, மறைய வைக்கும் அங்கியைத் தனது டிரங்குப் பெட்டியிலிருந்து எடுத்து வந்து, கிரிஃபின்டார் பொது அறை காலியாவதற்காக அவ்வளவு நேரமும் அந்த அங்கியின்மீது உட்கார்ந்தபடியே அந்த மாலைப் பொழுது முழுவதையும் கழித்தான். ஃபிரெட்டும் ஜார்ஜும், 'வெடித்துச் சிதறும் ஸ்னாப்' சீட்டு விளையாட்டு விளையாட ஹாரியையும் ரானையும் அழைத்தனர். ஜின்னி, ஹெர்மயனி வழக்கமாக உட்கார்ந்த இடத்தில் உட்கார்ந்து கொண்டு, எவ்வித ஆரவாரமும் இன்றி, அவர்கள் விளையாடியதைப் பார்த்துக் கொண்டிருந்தாள். விளையாட்டைச் சீக்கிரமாக முடிப்பதற்காக ஹாரியும் ரானும் வேண்டுமென்றே தோற்றுக் கொண்டிருந்தனர். ஆனாலும் கடைசியில் ஒரு வழியாக, ஃபிரெட்டும் ஜார்ஜும் ஜின்னியும் படுக்கப் போனபோது நள்ளிரவு கடந்திருந்தது.

இரண்டு பொதுப் படுக்கையறைக் கதவுகள் சாத்தப்படுவதுவரை காத்திருந்த ஹாரியும் ரானும், மறைய வைக்கும் அங்கியைத் தங்கள் மேல் போட்டுக் கொண்டு, ஓவியத் துளை வழியாக வெளியேறினர்.

ஆசிரியர்களை ஏய்த்துவிட்டுக் கோட்டையைவிட்டு வெளியேறுவது இம்முறையும் கடினமாக இருந்தது. அவர்கள் ஒருவழியாக வரவேற்பறையை அடைந்து, அந்தக் கருவாலி மரக் கதவின் தாழ்ப்பாளை விலக்கி, கதவைச் சிறியதாகத் திறந்து, சத்தம் ஏதும் வராமல் அதன் வழியாக நுழைந்து, நிலவொளி படர்ந்திருந்த மைதானத்திற்குள் அடியெடுத்து வைத்தனர்.

அவர்கள் புற்களின் ஊடாக நடந்து சென்று கொண்டிருந்தபோது, ரான் திடீரென்று, "நாம் தடை செய்யப்பட்டக் காட்டினுள் நுழைந்த பிறகு பின்தொடர்ந்து செல்வதற்கு நமக்கு எதுவும் இல்லாமல் போகலாம். ஒருவேளை அந்தச் சிலந்திப் பூச்சிகள் அங்கு செல்லாமலேயேகூட இருந்திருக்கலாம். அவை அந்தத் திசையை நோக்கித்தான் ஊர்ந்து கொண்டிருந்தன என்பதை நான் அறிவேன். இருந்தாலும், . . ." என்று இழுத்தான்.

Scanned by CamScanner

அவர்கள் ஹாக்ரிட்டின் குடிலை அடைந்தனர். அது சோகமாகவும் பரிதாபமாகவும் காட்சியளித்தது. ஹாரி அதன் கதவைத் திறந்ததும், அவர்களைக் கண்ட மகிழ்ச்சியில் ஃபேங்கிற்குத் தலைகால் புரியவில்லை. கோட்டையில் இருந்த எல்லோரையும் அது விழிக்க வைத்துவிடும் என்று பயந்த அவர்கள், கணப்படுப்பிற்கு மேலே இருந்த தடுப்பில் வைக்கப்பட்டிருந்த ஒரு கேக்கை அதற்குக் கொடுத்தனர். அந்த நாயின் பற்கள் ஒன்றோடு ஒன்று ஒட்டிக் கொண்டன.

மறைய வைக்கும் அங்கியை ஹாரி ஹாக்ரிட்டின் மேசைமீது வைத்தான். கும்மிருட்டாக இருந்த காட்டில் அது கண்டிப்பாக அவர்களுக்குத் தேவைப்படாது.

"ஃபேங், வா! நாம் காலாற ஒரு நடை நடந்துவிட்டு வரலாம்," என்று கூறி, ஹாரி அந்த நாயின் கால்களைத் தட்டிக் கொடுத்தான். அது சந்தோஷமாக அவர்களுக்குப் பின்னால் வீட்டைவிட்டு ஓடி வந்தது. அது வேகமாகக் காட்டின் எல்லைக்கு ஓடி, அங்கிருந்த ஒரு பெரிய அத்தி மரத்தின் அருகே சென்று தனது ஒரு காலைத் தூக்கியது.

ஹாரி தன் மந்திரக்கோலை வெளியே எடுத்து, **"லூமோஸ்!"** என்று கூறினான். ஒரு சிறிய வெளிச்சம் அதன் முனையில் தோன்றியது. சிலந்திப் பூச்சிகள் ஏதேனும் அங்கு சென்று கொண்டிருந்ததற்கான அடையாளம் அந்தப் பாதையில் தென்பட்டதா என்பதைப் பார்ப்பதற்குப் போதுமான வெளிச்சத்தை அது கொடுத்தது.

"நல்ல யோசனைதான்," என்று ரான் கூறினான். "நானும் என்னுடையதை ஏற்றலாம். ஆனால் என் மந்திரக்கோல் எதையாவது பற்ற வைத்துவிட்டால்? . . ."

ஹாரி ரானின் தோளைத் தட்டிக் கீழே இருந்த புல்லைச் சுட்டிக்காட்டினான். தனியாக இருந்த இரண்டு சிலந்திகள் மந்திரக்கோலின் விளக்கு வெளிச்சத்திலிருந்து விலகி ஒரு மரத்தின் நிழலை நோக்கி ஓடின.

ரான், எது நடந்தாலும் நடக்கட்டும் என்று தன் மனத்தைத் தேற்றிக் கொண்டவன்போல, "சரி," என்று கூறினான். "நான் தயார். வா, போகலாம்."

ஃபேங், மரத்தின் வேர்ப் பகுதிகளையும் இலைதழைகளையும் மோப்பம் பிடித்தவாறு பின்னே உற்சாகமாக வர, அவர்கள் இருவரும் காட்டுக்குள் நுழைந்தனர். அவர்கள் எதுவும் பேசாமல் சுமார் இருபது நிமிடங்கள் நடந்திருப்பர். தங்கள் கால்களில் மிதிபட்டச் சுள்ளிகள் மற்றும் சருகுகளின் ஓசையைத் தவிர வேறு ஏதாவது சத்தம் கேட்டதா என்று தங்களது காதுகளைத் தீட்டிக் கொண்டே அவர்கள் சென்றனர். மரங்களின் அடர்த்தி அதிகரித்ததும் மேலே இருந்த நட்சத்திரங்கள் அவர்களது பார்வையில் இருந்து மறைந்தன. ஹாரியின் மந்திரக்கோல் அள்ளித் தெளித்த வெளிச்சம் மட்டுமே அந்த இருட்டுக் கடலில் தென்பட்டுக் கொண்டிருந்தது. அப்போது தங்களது சிலந்திப் பூச்சி

Scanned by CamScanner

வழிகாட்டிகள் ஒழுங்கான பாதையைவிட்டு விலகிச் சென்றதை அவர்கள் கண்டனர்.

சிலந்திப் பூச்சிகள் இப்போது எங்கே போய்க் கொண்டிருந்தன என்பதைப் பார்ப்பதற்காக ஹாரி நின்றான். ஆனால் அவனது மந்திரக்கோலின் சிறு ஒளி வட்டத்திற்கு வெளியே இருந்த அனைத்தும் கும்மிருட்டில் மூழ்கிக் கிடந்தன. அவன் இதற்கு முன்பு அக்காட்டினுள்ளே இவ்வளவு தூரம் வந்திருக்கவில்லை. கடந்த முறை அவன் இங்கு வந்தபோது, பாதையைவிட்டு ஒருபோதும் விலகக்கூடாது என்று ஹாக்ரிட் தன்னிடம் கூறியிருந்தது அவனது ஞாபகத்திற்கு வந்தது. ஆனால் இப்போது ஹாக்ரிட் பல மைல்கள் தொலைவில் இருந்தார். அவர் ஒருவேளை அஸ்கபானில் இருக்கலாம். ஆனால் சிலந்திப் பூச்சிகளைப் பின்தொடர்ந்து செல்லும்படி அவர்தான் கூறியிருந்தார்.

ஈரமான ஏதோ ஒன்று ஹாரியின் கையைத் தொட்டது. ஹாரி பயத்தில் பின்னால் துள்ளிக் குதித்து ரானின் காலைப் பதம் பார்த்தான். ஆனால் ஃபேங்கின் மூக்குதான் அது.

"நீ என்ன நினைக்கிறாய்?" என்று ஹாரி ரானிடம் கேட்டான். தனது மந்திரக்கோலின் வெளிச்சத்தின் பிரதிபலிப்பில் அவனால் ரானின் கண்களை லேசாகப் பார்க்க முடிந்தது.

"நாம் ஏற்கனவே இவ்வளவு தூரம் உள்ளே வந்துவிட்டோம்," என்று ரான் கூறினான்.

எனவே, மரங்களை நோக்கி ஊர்ந்து கொண்டிருந்த சிலந்திப் பூச்சிகளை அவர்கள் பின்தொடர்ந்தனர். இப்போது அவர்களால் வேகமாகப் போக முடியவில்லை. அவர்களுடைய வழியில் மரங்களின் வேர் முடிச்சுகளும் மரத் தண்டுகளும் இருந்தன. ஆனால் இருட்டில் அவற்றை அவர்களால் சரியாகப் பார்க்க முடியவில்லை. ஃபேங்கின் சூடான மூச்சுக் காற்று ஹாரியின் கையில் பட்டுக் கொண்டிருந்தது. சிலந்திப் பூச்சிகள் எங்கே போய்க் கொண்டிருந்தன என்பதை மந்திரக்கோலின் சிறிய வெளிச்சத்தில் பார்ப்பதற்காக அவன் குனிய வேண்டியிருந்ததால், ஒரு முறைக்கு மேல் அவர்கள் இருவரும் நிற்க வேண்டியதாயிற்று.

அவர்கள் மேலும் ஓர் அரை மணிநேரம் நடந்திருப்பர். அவர்களது அங்கிகள் வெகு கீழே தொங்கிக் கொண்டிருந்த மரக் கிளைகளிலும் புதர்ச் செடிகளிலும் மாட்டிக் கொள்ளத் துவங்கின. அதற்குப் பிறகு நிலம் கீழ்நோக்கிச் சரிந்து கொண்டு சென்றதை அவர்கள் கவனித்தனர். ஆனாலும் மரங்கள் முன்பு இருந்ததைப்போலவே அடர்த்தியாக இருந்தன.

திடீரென்று ஃபேங் பெரிதாக ஊளையிட்டது. பயத்தில் ஹாரியும் ரானும் துள்ளிக் குதித்தனர்.

ரான் ஹாரியின் முழங்கையை இறுகப் பற்றியபடி, தங்களைச் சுற்றியிருந்த கும்மிருட்டைப் பார்த்தபடி, "என்னது?" என்று கேட்டான்.

Scanned by CamScanner

"அதோ, அங்கே ஏதோ நகர்ந்து கொண்டிருக்கிறது," என்று ஹாரி சுட்டிக்காட்டினான். "நன்றாகக் கவனி. அது மிகப் பெரிதாக இருப்பதுபோலத் தெரிகிறது."

அவர்கள் தங்கள் காதுகளைத் தீட்டிக் கொண்டனர். அவர்களுக்கு வலப்பக்கம் பெரிதாகத் தோன்றிய ஏதோ ஒன்று, மரக் கிளைகளை ஒடித்துத் தள்ளிக் கொண்டு, மரங்களின் ஊடாக வேகமாக வந்து கொண்டிருந்தது.

"ஐயோ!" என்று ரான் அலறினான். "ஐயோ! ஆ! ஊ!"

"வாயை மூடு!" என்று ஹாரி பதற்றத்துடன் கூறினான். "அதற்கு உன் குரல் கேட்டுவிடும்."

ரான், வழக்கத்திற்கு மாறான உச்சஸ்தாயிக் குரலில், "என்ன சொன்னாய்? என் குரல் கேட்டுவிடுமா? அதற்கு ஏற்கனவே ஃபேங்கின் குரல் கேட்டுவிட்டது!"

அவர்கள் குலை நடுங்கிக் கொண்டு, பயத்தில் உறைந்து போய்க் காத்துக் கொண்டிருந்தனர். இருட்டு அவர்களுடயை கருவிழிகளை அழுத்திக் கொண்டிருந்ததுபோலத் தோன்றியது. ஏதோ உருண்டோடியது போன்ற ஒரு வினோதமான சத்தம் கேட்டது. பிறகு அமைதி நிலவியது.

"அது என்ன செய்து கொண்டிருக்கிறது என்று நீ நினைக்கிறாய்?" என்று ஹாரி கேட்டான்.

"பாய்ந்து தாக்குவதற்காகத் தன்னைத் தயார்படுத்திக் கொண்டிருக்கலாம்," என்று ரான் கூறினான்.

அவர்கள் அசைய பயந்து போய், நடுநடுங்கிக் கொண்டு காத்திருந்தனர்.

"அது போய்விட்டிருக்கும் என்று நீ நினைக்கிறாயா?" என்று ஹாரி கிசுகிசுத்தான்.

"தெரியவில்லை –"

பிறகு அவர்களுடைய வலப்பக்கத்தில் திடீரென்று பயங்கரப் பிரகாசமான ஒரு வெளிச்சம் தோன்றியது. அந்தக் கும்மிருட்டில் திடீரென்று தோன்றிய அந்த வெளிச்சத்தின் தாக்குதலைத் தவிர்க்க அவர்கள் இருவரும் தங்களுடைய கைகளைக் கொண்டு தங்களது கண்களை மறைத்துக் கொண்டனர். ஃபேங் குறைத்துவிட்டு அங்கிருந்து ஓட முயன்றது. ஆனால் அங்கிருந்த முட்புதர் ஒன்றில் மாட்டிக் கொண்டு அது மேலும் குரைத்தது.

"ஹாரி!" என்று ரான் கத்தினான். அவனுடைய குரலில் நிம்மதி வெளிப்பட்டது. "ஹாரி, அது நம்முடைய கார்!"

"என்ன?"

"வா!"

ஹாரி கீழே விழுந்து எழுந்திருந்து, தட்டுத் தடுமாறி, ரானைப் பின்தொடர்ந்து அந்த வெளிச்சத்தை நோக்கிச் சென்றான். ஒரு கணத்திற்குப் பிறகு, மரங்கள் இல்லாமல் இருந்த ஒரு திட்டை அவர்கள் அடைந்திருந்தனர். அடர்த்தியான மரங்கள் வட்டமாகச்

Scanned by CamScanner

ஆழ்ந்திருக்க, ஆர்தர் வீஸ்லீயின் கார் அங்கு காலியாக நின்று கொண்டிருந்தது. அதற்கு மேலே கிளைகள் தொங்கிக் கொண்டிருந்தன. அதன் முகப்பு விளக்குகள் பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தன. ரான் திறந்த வாய் மூடாமல் அதை நோக்கி நடந்தபோது, ஒருவரது செல்ல வளர்ப்பு நாய் தனது எஜமானரைக் கண்டவுடன் எப்படி அவரை வரவேற்குமோ, அதைப்போல அந்தக் காரும் அவனை நோக்கி மெல்ல நகர்ந்து வந்தது.

ரான் அந்தக் காரைச் சுற்றி நடந்தவாறே, "இது இவ்வளவு காலமும் இங்குதான் இருந்திருக்கிறது," என்று குதூகலமாகக் கூறினான். "இதைப் பார், இந்தக் காடு இதை எவ்வளவு தூரம் சேதப்படுத்தியிருக்கிறது . . ."

அதன் உடலில் ஏராளமான சிராய்ப்புகள் இருந்ததில் ஆச்சரியம் இல்லை. அது சகதியில் தாராளமாகக் குளித்திருந்தது. அது தானாகவே அந்தக் காட்டிற்குள் அங்குமிங்கும் போய்க் கொண்டும் வந்து கொண்டும் இருந்திருந்தது. ஃபேங் அதன் அருகே வரவேயில்லை. அது ஹாரிக்கு அருகிலேயே நின்று கொண்டது. அது பயத்தில் நடுங்கிக் கொண்டிருந்ததை ஹாரியால் உணர முடிந்தது. அதன் மூச்சு மெதுவாகச் சீரானது. ஹாரி தன் மந்திரக்கோலைத் தன் அங்கிக்குள் போட்டுக் கொண்டான்.

ரான் அந்தக் காரின்மீது சாய்ந்து கொண்டு, அதைத் தட்டிக் கொடுத்தவாறு, "நாம் என்னடாவென்றால், இது நம்மைத் தாக்க வருவதாக நினைத்து பயந்துவிட்டோம்," என்று கூறினான். "இது எங்கே போயிருந்தது என்று நான் யோசித்தேன்."

காரின் முன்விளக்குகளின் வெளிச்சத்தில் குளித்திருந்த தரையில் மேலும் சிலந்திப் பூச்சிகள் இருந்தனவா என்று ஹாரி தனது கண்களை இடுக்கிக் கொண்டு பார்த்தான். ஆனால் அவை வெளிச்சத்தைப் பார்த்துவிட்டு நாலாப் புறங்களிலும் சிதறி ஓடியிருந்தன.

"நாம் சிலந்திப் பூச்சிகளின் பாதையைத் தவறவிட்டுவிட்டோம்," என்று ஹாரி கூறினான். "வா, நாம் போய் அவற்றை மீண்டும் கண்டுபிடிக்கலாம்."

ஆனால் ரான் அதற்கு பதிலளிக்கவில்லை. அவன் அசையவும் இல்லை. அவனது கண்கள், ஹாரிக்குப் பின்னால், காட்டின் தரையிலிருந்து பத்தடி உயரத்தில் நிலை கொண்டிருந்தன. அவனது முகம் பீதியில் உறைந்திருந்தது.

ஹாரிக்குத் திரும்பக்கூட அவகாசம் கிடைக்கவில்லை. 'கிளக்' என்று பெரிய சத்தம் ஒன்று கேட்டது. நீளமாகவும் உடல் முழுவதும் முடியாகவும் இருந்த ஏதோ ஒன்று அவனைப் பிடித்துத் தூக்கியது. அவன் தலைகுப்புறத் தொங்கிக் கொண்டிருந்தான். குலை நடுங்கிக் கொண்டும் போராடிக் கொண்டும் இருந்த ஹாரி, மேலும் சில 'கிளக்' சத்தங்களைக் கேட்டான். பின் ரானின் கால்களும் நிலத்தைவிட்டு மேலே எழும்பியதைக் கண்டான். ஃபேங் குரைத்துக் கொண்டும் ஊளையிட்டுக் கொண்டும் இருந்தது. அடுத்தக் கணம், இருண்ட

Scanned by CamScanner

மரங்களின் ஊடாக அவன் தூக்கிச் செல்லப்பட்டுக் கொண்டிருந்தான்.

தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருந்த ஹாரி, எது தன்னைத் தூக்கிக் கொண்டு சென்றது என்று பார்த்தான். முடியால் மூடப்பட்டிருந்த ஆறு நீண்ட கால்களால் அது நடந்து கொண்டிருந்தது. முன்னால் இருந்த இரண்டு கால்கள் அவனை இறுகப் பிடித்திருந்தன. அவற்றுக்கு நேர் மேலே பளபளவென்று ஒரு ஜோடிக் கொடுக்குகள் அதற்கு இருந்தன. அந்த ஜந்துவிற்குப் பின்னால் இன்னொன்று நடந்து வந்து கொண்டிருந்தது. அது ரானைத் தூக்கிக் கொண்டு வந்து கொண்டிருக்க வேண்டும் என்று ஹாரி நினைத்தான். ஃபேங் மூன்றாவதாக வந்த ஒன்றின் பிடியிலிருந்து விடுபடப் போராடிக் கொண்டிருந்தது; கூடவே அது சத்தமாகக் குரைத்துக் கொண்டும் இருந்தது. ஹாரி விரும்பியிருந்தால்கூட அவனால் கத்தியிருக்க முடியாது. அவன் தன்னுடைய குரலை அந்தக் காரிலேயே விட்டுவிட்டு வந்துவிட்டதுபோல இருந்தது.

தான் அந்த விலங்கின் பிடியில் எவ்வளவு நேரம் இருந்தோம் என்பது ஹாரிக்குத் தெரியவில்லை. ஆனால் கீழே இலைகளால் மூடப்பட்டிருந்த தரையில் மொய்த்துக் கொண்டிருந்த சிலந்திப் பூச்சிகளை எளிதாகக் காணும் அளவுக்கு, இருட்டு, திடீரென்று விலகியிருந்ததை ஹாரி கண்டான். அவன் தன் தலையை ஒரு பக்கமாக வளைத்துப் பார்த்தபோது, மரங்கள் அனைத்தும் அப்புறப்படுத்தப்பட்டிருந்த ஒரு பெரிய குழியின் விளிம்பைத் தாங்கள் அடைந்திருந்ததைப் பார்த்தான். மரங்கள் இல்லாததால் அங்கு நட்சத்திரங்கள் பிரகாசமாக ஒளி வீசிக் கொண்டிருந்தன. அங்கு அவன் தன் வாழ்நாளிலேயே கண்டிராத மிக மோசமான ஒரு காட்சியைக் கண்டான்.

சிலந்திப் பூச்சிகள்! மரங்களின் இலைகளில் ஊர்ந்து கொண்டிருந்த சிறிய சிலந்திப் பூச்சிகள் அல்ல அவை, மாறாக, வண்டிக் குதிரைகள் அளவு பெரியவை. எட்டுக் கண்களையும் எட்டுக் கால்களையும் கொண்டிருந்த, உடலெல்லாம் முடியால் நிறைந்திருந்த, கருப்பு நிற ராட்சஸச் சிலந்திகள். ஹாரியைத் தூக்கிக் கொண்டு சென்ற அந்த ராட்சஸச் சிலந்தி, அந்தச் சரிவான பகுதி வழியாக, அந்தக் குழியின் மையத்தில் குவிந்த நிலையிலிருந்த ஒரு வெள்ளை நிறச் சிலந்தி வலைக்கு அவனைத் தூக்கிச் சென்றது. அதைச் சுற்றி இருந்த சிலந்திகள், அவனைத் தூக்கி வந்து கொண்டிருந்த சிலந்தியின் பிடியிலிருந்த சுமையைப் பார்த்து உற்சாகமாகத் தமது கொடுக்குகளைக் கடகடவென ஆட்டியபடி அச்சிலந்தியை நெருங்கின.

ஹாரியைத் தூக்கிச் சென்ற சிலந்தி அவனை விடுவித்ததும், தனது கை கால்களை அகலப் பரப்பிக் கொண்டு அவன் நிலத்தில் வந்து விழுந்ததான். ஃபேங் குரைப்பதை நிறுத்தியிருந்தது. ஆனால் அது பம்மிக் கொண்டு, தரையோடு தரையாகப் படுத்திருந்தது. ரானும்

Scanned by CamScanner

ஹாரி உணர்ந்ததுபோலவே உணர்ந்தான். அவனது வாய் மௌனமான அலறலில் உறைந்து போயிருந்ததுபோலக் கோணலாக இருந்தது. அவனது கண்கள் வெளியே வந்து விழுந்துவிடுவதுபோலத் துருத்திக் கொண்டு நின்றன.

தன்னைத் தூக்கிச் சென்ற சிலந்தி ஏதோ கூறியதை ஹாரி திடீரென்று உணர்ந்தான். ஆனால் அது பேசிக் கொண்டிருந்தபோது ஒவ்வொரு வார்த்தைக்கும் இடையே தன்னுடைய கொடுக்குகளை அடித்துக் கொண்டே பேசியதால், அது கூறியதைப் புரிந்து கொள்வது கடினமாக இருந்தது.

"அரகாக்!" என்று அது அழைத்தது. "அரகாக்!"

மையத்தில் குவிந்த நிலையில் இருந்த வெள்ளை நிறச் சிலந்தி வலையின் மையத்திலிருந்து, ஒரு குட்டி யானையின் அளவிலிருந்த ஒரு சிலந்தி மெதுவாக வெளிப்பட்டது. அதன் கருப்பு நிற உடலிலும் காலிலும் சாம்பல் நிறம் கலந்திருந்தது. மிகவும் அவலட்சணமாக இருந்த அதன் தலையில் இருந்த எட்டுக் கண்களும் பால் வெண்மையில் இருந்தன. அது பார்வையற்றதாக இருந்தது.

அது தன்னுடைய கொடுக்குகளைக் கடகடவென்று அடித்தவாறு, "என்ன?" என்று கேட்டது.

ஹாரியைத் தூக்கி வந்த சிலந்தி, "மனிதர்கள்," என்று கூறியது.

"அது ஹாக்ரிட்டா?" என்று அரகாக் கேட்டது. அது இன்னும் அருகே வந்தது. அதன் எட்டுக் கண்களும் வெறுமையாக அலைந்து கொண்டிருந்தன.

ரானைத் தூக்கிக் கொண்டு வந்த சிலந்தி, "அன்னியர்கள்," என்று கூறியது.

"கொன்றுவிடுங்கள்," என்று அரகாக் எரிச்சலுடன் கூறியது. "நான் தூங்கிக் கொண்டிருந்தேன் . . ."

அந்தக் குழியில் இருந்த எல்லாச் சிலந்திகளும் தம்முடைய கொடுக்குகளைக் கடகடவென அடித்தன.

அரகாக் நின்றது.

"ஹாக்ரிட் இதற்கு முன்பு நம்முடைய குழிக்கு மனிதர்களை ஒருபோதும் அனுப்பியதே இல்லை," என்று அது மெதுவாகக் கூறியது.

ஹாரி, வேகமாக மூச்சிழுத்தபடி, "ஹாக்ரிட் பிரச்சனையில் மாட்டிக் கொண்டுள்ளார்," என்று கூறினான். "அதனால்தான் நாங்கள் இங்கே வந்தோம்."

"பிரச்சனையிலா?" என்று அந்த வயதான சிலந்தி கேட்டது. அதன் கொடுக்குகளின் ஆட்டல் சத்தத்திற்கு இடையே அதனிடமிருந்து கொஞ்சம் அக்கறை வெளிப்பட்டதுபோல ஹாரிக்குத் தோன்றியது.

முதலில் எழுந்து நிற்கலாமா என்று ஹாரி நினைத்தான். பின் தன் நினைப்பை மாற்றிக் கொண்டான். தனது கால்கள் தன்னைத் தாங்குமா என்று அவனுக்குச் சந்தேகமாக இருந்தது. அதனால் அவன்

Scanned by CamScanner

தரையில் கிடந்தபடி, தன்னால் முடிந்த அளவு அமைதியாகப் பேசினான்.

"மாணவர்கள்மீது ஹாக்ரிட் எதையோ ஏவிவிட்டுள்ளதாகப் பள்ளி நிர்வாகிகள் கருதுகின்றனர். அதனால் அவர்கள் அவரை அஸ்கபானுக்குக் கொண்டு சென்றுள்ளனர்."

அரகாக் தன்னுடைய கொடுக்குகளைக் கோபமாகக் கடகடவென்று ஆட்டியது. அங்கிருந்த மற்றச் சிலந்திகளும் அதேபோல எழுப்பிய சத்தம் அந்தக் குழியெங்கும் எதிரொலித்தது. அது ஒரு கரகோஷம்போல ஒலித்தது. ஆனால் இந்தக் கரகோஷம் அவனை பயத்தில் குளிப்பாட்டியது.

"அது பல வருடங்களுக்கு முன்பு நடந்தது," என்று அரகாக் வேதனையுடன் கூறியது. "பலப் பல ஆண்டுகளுக்கு முந்தைய விஷயம் அது. ஆனாலும் எனக்கு அது நன்றாக நினைவிருக்கிறது. அதனால்தான் அவர்கள் அவரை அப்பள்ளியில் இருந்து துரத்தினார்கள். ரகசியங்கள் அடங்கிய பாதாள அறை என்று அவர்கள் கருதும் இடத்தில் வசித்து வந்தது நான்தான் என்று அவர்கள் நம்பினார்கள். ஹாக்ரிட் அந்தப் பாதாள அறையைத் திறந்து என்னை விடுவித்துவிட்டதாக அவர்கள் எண்ணினார்கள்."

"அப்படியானால் . . . நீ ரகசியங்கள் அடங்கிய பாதாள அறையில் இருந்து வரவில்லையா?" என்று ஹாரி கேட்டான். தனது நெற்றியில் வியர்வை அரும்பிக் கொண்டிருந்ததை அவன் உணர்ந்தான்.

"நானா!" என்று அரகாக் தன் கொடுக்குகளைக் கோபமாகத் தட்டியவாறு கூறியது. "நான் இக்கோட்டையில் பிறக்கவில்லை. நான் தூர தேசம் ஒன்றிலிருந்து வந்தேன். நான் ஒரு முட்டையாக இருந்தபோது, ஒரு வழிப்போக்கர் என்னை ஹாக்ரிட்டிடம் கொடுத்தார். ஹாக்ரிட் அப்போது ஒரு சிறுவனாக இருந்தார். ஆனாலும் அவர் என்மீது அக்கறை காட்டினார். கோட்டையில் இருந்த ஓர் அலமாரியில் அவர் என்னை ஒளித்து வைத்தார். மேசையின் துண்டுகளை அவர் எனக்குச் சாப்பிடக் கொடுத்தார். ஹாக்ரிட் ஒரு நல்ல நண்பர், ஒரு நல்ல மனிதர். நான் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, இறந்து போன மாணவியைக் கொன்றது நான்தான் என்று குற்றம் சாட்டப்பட்டபோது என்னை அவர் பாதுகாத்தார். அதிலிருந்து நான் இந்தக் காட்டில்தான் வசித்து வருகிறேன். ஹாக்ரிட் தொடர்ந்து என்னைப் பார்க்க வந்து கொண்டிருந்தார். அவர்தான் என் மனைவியான மோஸாக்கையும் எனக்குக் கண்டுபிடித்துக் கொடுத்தார். ஹாக்ரிட்டின் கருணையால் இன்று என் குடும்பம் எவ்வளவு பல்கிப் பெருகிப் போய் இருக்கிறது என்று பார்த்தாயா! . . ."

ஹாரி தன்னிடம் மீதமிருந்த எல்லாத் துணிச்சலையும் ஒன்றுதிரட்டினான்.

"அப்படியானால் நீ எவரையும் ஒருபோதும் தாக்கியதில்லையா?"

Scanned by CamScanner

"இல்லை. ஒருபோதும் இல்லை," என்று அந்த முதிய சிலந்தி கூறியது. "அது என் உள்ளுணர்வில் இருக்கலாம். ஆனால் ஹாக்ரிட்மீது நான் வைத்துள்ள மரியாதை காரணமாக நான் மனிதர்களுக்கு ஒருபோதும் தீங்கு விளைவித்தது இல்லை. கொல்லப்பட்ட அந்த மாணவியின் உடல் ஒரு குளியலறையில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டது. நான் வளர்ந்து வந்த அலமாரி தவிர, கோட்டையின் வேறு எந்தப் பகுதியையும் எனக்குத் தெரியாது. எங்களைப் போன்ற பூச்சிகளுக்கு இருட்டும் அமைதியும்தான் பிடிக்கும் . . ."

"உனக்கு . . . அந்த மாணவியை உண்மையில் கொன்றது எது என்று தெரியுமா?" என்று ஹாரி கேட்டான். "அது எதுவென்று எனக்குத் தெரியாது. ஆனால் அது இப்போது மீண்டும் வந்து மக்களைத் தாக்கிக் கொண்டிருக்கிறது –"

அவனைச் சுற்றி எழுந்த கொடுக்குகள் அடிக்கப்பட்ட ஓசையிலும், அவை தமது கால்களைக் கோபமாகத் தரையில் இடம் மாற்றியதால் ஏற்பட்டச் சலசலப்புச் சத்தத்திலும், ஹாரியின் வார்த்தைகள் மூழ்கடிக்கப்பட்டன. அவனைச் சுற்றிப் பெரிய பெரிய கருப்பு உருவங்கள் நகரத் துவங்கின.

"கோட்டையில் வசிக்கும் அந்த ராட்சஸ விலங்கு," என்று அரகாக் துவங்கியது. "ஒரு புராதன விலங்கு. சிலந்திகளாகிய நாங்கள், எல்லாவற்றையும்விட அதற்குத்தான் அதிகமாக பயப்படுகிறோம். அந்த விலங்கு ஹாக்வார்ட்ஸில் அலைந்து கொண்டிருந்ததை உணர்ந்த நான், என்னைப் போக விட்டுவிடும்படி ஹாக்ரிட்டிடம் கெஞ்சியது எனக்கு நன்றாகவே நினைவிருக்கிறது."

"அது என்ன?" என்று ஹாரி அவசரமாகக் கேட்டான்.

மேலும் கொடுக்குகளின் சத்தம்; மேலும் கால்கள் நகர்த்தப்படும் சலசலப்பு; அந்தச் சிலந்திகள் அவனை இன்னும் நெருங்கி வந்ததுபோலத் தோன்றியது.

"நாங்கள் அதைப் பற்றிப் பேசுவதில்லை," என்று அரகாக் கோபமாகக் கூறியது. "நாங்கள் அதன் பெயரைச் சொல்வதில்லை. ஹாக்ரிட் பல முறை என்னிடம் கேட்டபோதும்கூட, நான் அந்த பயங்கரமான விலங்கின் பெயரை ஒருபோதும் அவரிடம் சொன்னதில்லை."

ஹாரி அது குறித்து அதற்கு மேல் வற்புறுத்த விரும்பவில்லை. அதிலும், நாலாப் பக்கங்களில் இருந்தும் சிலந்திகள் அவனைச் சூழ்ந்து கொண்டிருந்தபோது! அரகாக் அதற்கு மேல் பேச விரும்பவில்லை என்பதுபோலத் தோன்றியது. அது மெதுவாகத் தன்னுடைய வலைக்குத் திரும்பிக் கொண்டிருந்தது. ஆனால் மற்றச் சிலந்திகள் ஹாரியையும் ரானையும் நோக்கி நகர்ந்து கொண்டிருந்தன.

தனக்கு வெகு அருகே இலைகள் மிதிபட்டச் சத்தம் கேட்டதும், ஹாரி, "அப்படியானால், நாங்கள் கிளம்புகிறோம்," என்று கூறினான்.

Scanned by CamScanner

"எங்கே கிளம்பப் போகிறீர்கள்?" என்று அரகாக் கேட்டது. "நான் அப்படி நினைக்கவில்லை . . ."

"ஆனால் . . . ஆனால் . . ."

"என்னுடைய குழந்தைகள் என் உத்தரவின் பேரில் ஹாக்ரிட்டிற்குத் தீங்கு விளைவிப்பதில்லை. ஆனால் புதிய இறைச்சி அவர்களிடம் தானாகவே வலிய வந்து மாட்டிக் கொள்ளும்போது, என்னால் அவர்களுக்கு அதை மறுக்க முடியாது. ஹாக்ரிட்டின் நண்பனே, இறுதி வணக்கம்!"

அவன் தன் மந்திரக்கோலை எடுக்க முனைந்தான். ஆனால் அதனால் எந்தப் பிரயோஜனமும் இருக்கப் போவதில்லை என்பதை அவன் அறிந்தான். சிலந்திகளின் கூட்டம் மிகமிக அதிகமாக இருந்தது. அவன் எழுந்து நின்று, வீரமாகப் போராடிச் சாவது என்று முடிவு செய்தபோது, நீண்டு ஒலித்த ஒரு பலமான சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து ஒரு வெளிச்சம் அந்தக் குழியை ஒளி வெள்ளத்தில் மூழ்கடித்தது.

ஹாரன் ஒலி இடியென முழங்க, முன் விளக்குகள் ஜகஜோதியாக எரிய, வழியில் இருந்த சிலந்திகளை இடித்துத் தள்ளிக் கொண்டு, ரானின் கார் அந்தச் சரிவில் படுவேகமாக வந்து கொண்டிருந்தது. இடிபட்டச் சிலந்திகள் மல்லாந்து விழுந்தன. எண்ணற்றக் கால்கள் வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தன. அந்தக் கார் ஹாரிக்கும் ரானுக்கும் அருகே வந்து கிறீச்சென்ற சத்தத்துடன் நின்றது. அதன் கதவுகள் சடாரென்று திறந்தன.

ஹாரி முன்னிருக்கையில் பாய்ந்தவாறு, "ஃபேங்கைத் தூக்கிக் கொள்!" என்று கத்தினான். ரான் அந்த நாயின் வயிற்றைப் பிடித்துப் பின்னிருக்கையில் தூக்கி எறிந்துவிட்டுத் தானும் காருக்குள் பாய்ந்தான். உடனே காரின் கதவுகள் ஒங்கிச் சாத்திக் கொண்டன. ரான் ஆக்ஸிலரேட்டரைத் தொடக்கூட இல்லை. ஆனால் அக்காருக்கு அவன் தேவைப்படவில்லை. அதன் எஞ்சின் உறுமியது. அவர்கள் வேகமெடுத்தனர். மேலும் பல சிலந்திகள் அடிபட்டு விழுந்தன. அவர்கள் அந்தக் குழியிலிருந்து படுவேகமாக வெளியேறி, காட்டிற்குள் புகுந்தனர். அந்தக் கார், இருப்பதிலேயே அகலமாக இருந்த வழிகள் வழியாக வளைந்து நெளிந்து சென்றபோது மரக் கிளைகள் அதன் சன்னல்களைப் படுவேகத்தில் உரசிச் சென்றன. கார் ஒரு குறிப்பிட்டப் பாதை வழியாகச் சென்றது. அது தான் போக வேண்டிய வழியை அறிந்திருந்தது என்பது வெளிப்படையாகத் தெரிந்தது.

ஹாரி ஓரக்கண்ணால் ரானைப் பார்த்தான். அவனது வாய் மௌனமான அலறலில் உறைந்து போயிருந்ததுபோலக் கோணலாக இருந்தது. ஆனால் அவனது கண்கள் வெளியே வந்து விழுந்து விடுவதுபோலத் துருத்திக் கொண்டிருக்கவில்லை.

"நீ எப்படி இருக்கிறாய்?"

ரான் தனக்கு முன்னால் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனால் பேச முடியவில்லை.

Scanned by CamScanner

அவர்கள் காட்டின் ஊடாகப் படுவேகமாகப் பயணித்துக் கொண்டிருந்தனர். பின்னிருக்கையில் ஃபேங் சத்தமாகக் குரைத்துக் கொண்டே இருந்தது. ஒரு பெரிய கருவாலி மரத்தை உரசிக் கொண்டு அவர்கள் சென்றபோது, பின்னால் வருவதைப் பார்க்க வைக்கப்பட்டிருந்த கண்ணாடி உடைந்து தொங்கியதை ஹாரி பார்த்தான். சத்தமாகவும் பயங்கரக் குலுக்கலாகவும் இருந்த அடுத்தப் பத்து நிமிடங்களுக்குப் பிறகு, மரங்களின் அடர்த்திக் குறைந்தது. ஹாரியால் மீண்டும் வானத்தைப் பார்க்க முடிந்தது.

கார் திடீரென்று நின்றதில் அவர்கள் இருவரும் முன்னால் தூக்கி எறியப்பட்டனர். அவர்கள் அந்தக் காட்டின் முனையை அடைந்திருந்தனர். ஃபேங் வெளியே போக வேண்டும் என்ற பதற்றத்தில் காரின் சன்னல்மீது மோதியது. ஹாரி காரின் கதவைத் திறந்துவிட்டதும், அது தன் வாலைத் தன் பின்னங்கால்களுக்கு இடையை செருகிக் கொண்டு, மரங்களின் வழியாகப் பாய்ந்தோடி, ஹாக்ரிட்டின் குடிலை அடைந்தது. ஹாரியும் வெளியே வந்தான். ரான் ஒருசில நிமிடங்களுக்குப் பிறகு தன் கை கால்களின் உணர்வு வரப் பெற்றவனாகக் காரிலிருந்து இறங்கினான். இப்போதும் அவன் வெறித்துக் கொண்டுதான் இருந்தான். அவனுக்குக் கழுத்துப் பிடிப்பு ஏற்பட்டிருந்ததுபோல இருந்தது. ஹாரி அந்தக் காரை நன்றியுடன் செல்லமாகத் தட்டிக் கொடுத்தான். அது பின்னோக்கிக் காட்டிற்குள் வேகமாகச் சென்று மறைந்தது.

மறைய வைக்கும் அங்கியை எடுப்பதற்காக, ஹாரி, ஹாக்ரிட்டின் குடிலுக்குள் சென்றான். ஃபேங், தன்னுடைய கூடைக்குள்ளிருந்த ஒரு போர்வைக்குள் போய்ப் பதுங்கிக் கொண்டது. ஹாரி மீண்டும் வெளியே வந்தபோது, ரான், பூசணித் தோட்டத்தில் மிக மோசமாக வாந்தியெடுத்துக் கொண்டிருந்தான்.

ரான் தன்னுடைய வாயைத் தன் சட்டையின் கையோரமாகத் துடைத்துக் கொண்டு, "சிலந்திகளைப் பின்தொடர்ந்து செல்லுங்கள்!" என்று பலவீனமாகச் சொன்னான். "நான் ஹாக்ரிட்டை ஒருபோதும் மன்னிக்கப் போவதில்லை. நாம் உயிர் தப்பியது அதிசயம்தான்."

"அரகாக் தன்னுடைய நண்பர்கள்மீது கை வைக்காது என்று ஹாக்ரிட் நம்பியிருப்பார்," என்று ஹாரி கூறினான்.

ரான் தன் கையை அக்குடிலின் சுவரில் ஓங்கிக் குத்தியவாறு, "அதுதான் ஹாக்ரிட்டின் பிரச்சனை," என்று கூறினான். "ராட்சஸ விலங்குகள், அவற்றைப் பற்றி எழுப்பப்பட்டுள்ள கதைகள் அளவுக்கு பயங்கரமானவை அல்ல என்றே ஹாக்ரிட் எப்போதும் சிந்தித்து வந்துள்ளார். அது இப்போது அவரை எங்கு கொண்டுப் போய்ச் சேர்த்துள்ளது என்று பார்த்தாயா? அஸ்கபான் சிறைச்சாலையில்!" ரான் இப்போது கட்டுப்படுத்த முடியாதபடி நடுங்கிக் கொண்டிருந்தான். "ஹாக்ரிட் நம்மை அங்கு எதற்காக அனுப்ப வேண்டும்? அப்படி நாம் என்னதான் கண்டுபிடித்துவிட்டோம்? அதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்."

Scanned by CamScanner

"ரகசியங்கள் அடங்கிய பாதாள அறையை ஹாக்ரிட் ஒருபோதும் திறக்கவில்லை என்பதை நாம் தெரிந்து கொண்டுள்ளோம்," என்று ஹாரி கூறினான். பிறகு, மறைய வைக்கும் அங்கியை அவன் தங்கள் இருவர்மீதும் போர்த்திவிட்டு, முன்னால் நடக்கும்படி ரானின் கையில் இடித்தான். "ஹாக்ரிட் நிரபராதி!"

ரான் சத்தமாகப் பெருமூச்சுவிட்டான். ஓர் அலமாரிக்குள் அரகாக்கை வளர்த்து வந்த செயல் அவனைப் பொறுத்தவரை ஒரு நிரபராதியின் செயல் அல்ல.

அவர்கள் இருவரும் கோட்டையை நெருங்கியதும், தங்களது கால்களை நன்றாக மறைக்கும் வண்ணம், மறைய வைக்கும் அங்கியை ஹாரி நன்றாக இழுத்துவிட்டுக் கொண்டான். அவர்கள் லேசாகத் திறந்திருந்த வாசற்கதவு வழியாக உள்ளே நுழைந்து, வரவேற்பறை வழியாக மிகவும் கவனமாக நடந்து, பளிங்குப் படிக்கட்டு வழியாக மேலே ஏறினர். தாழ்வாரங்களில் எச்சரிக்கையுடன் காவல் வேலையில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு அருகே அவர்கள் சென்றபோது, தங்கள் மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டனர். கடைசியில் அவர்கள் ஒருவழியாக கிரிஃபின்டார் பொது அறையை அடைந்தபோது பாதுகாப்பாக உணர்ந்தனர். கணப்படுப்பு அங்கு கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது. மறைய வைக்கும் அங்கியைக் கழற்றிவிட்டு, சுழல் படிக்கட்டு வழியாகத் தங்களுடைய பொதுப் படுக்கையறையை அவர்கள் அடைந்தனர்.

ரான் தன் உடையைக்கூட மாற்றாமல் அப்படியே படுக்கையில் விழுந்தான். ஆனால் ஹாரிக்குத் தூக்கம் வரவில்லை. அவன் தன்னுடைய கட்டிலில் உட்கார்ந்து கொண்டு, அரகாக் கூறிய ஒவ்வொன்றைக் குறித்தும் தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தான்.

அந்த ராட்சஸ விலங்கு அக்கோட்டைக்குள் எங்கோ பதுங்கி இருந்தது. அது வோல்டமார்ட்போலத் தோன்றியது. மற்றபிற ராட்சஸ விலங்குகள்கூட அதன் பெயரைச் சொல்லப் பயப்படுகின்றன. அது என்ன என்பது குறித்தும், அது எப்படித் தான் தாக்கியவர்களைக் கல்லாக்கியது என்பது குறித்தும் அவனுக்கும் ரானுக்கும் எதுவும் தெரிந்திருக்கவில்லை. ரகசியங்கள் அடங்கிய அறைக்குள் என்ன இருந்தது என்பதை ஹாக்ரிட்டும் ஒருபோதும் அறிந்திருக்கவில்லை.

ஹாரி தன்னுடைய கால்களைக் கட்டிலின்மேலே தூக்கி வைத்துக் கொண்டு தலையணையின்மீது சாய்ந்து, சன்னல் வழியாக உள்ளே வந்து கொண்டிருந்த நிலா வெளிச்சம் தன்மீது பட்டதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

தங்களால் மேற்கொண்டு என்ன செய்ய முடியும் என்று அவனுக்குத் தெரியவில்லை. அவர்கள் பின்தொடர்ந்து சென்ற பாதை எதுவும் அவர்களுக்கு எதையும் தெளிவுபடுத்தியிருக்கவில்லை. நார்ட்டன் தவறான நபரைப் பிடித்திருந்தான். ஸ்லிதரினின் வாரிசு எப்படியோ தப்பி ஓடியிருந்தான். ரகசியங்கள் அடங்கிய அறையை இம்முறை திறந்தது அதே நபரா அல்லது வேறு நபரா என்பதை

Scanned by CamScanner

யாராலும் சொல்ல முடியவில்லை. கேட்பதற்கும் வேறு யாரும் இருக்கவில்லை. அரகாக் கூறியவற்றைப் பற்றி யோசித்துக் கொண்டே ஹாரி படுத்திருந்தான்.

அவனுடைய தூக்கக் கலக்கம் முற்றியபோது, அவர்களது கடைசி நம்பிக்கையாகத் தென்பட்ட ஒன்று அவனுக்குத் தோன்றியது. அவன் சடாரென்று நிமிர்ந்து உட்கார்ந்தான்.

"ரான்!" என்று அவன் இருட்டில் கிசுகிசுத்தான். "ரான்!"

ரான் ஃபேங்போல லேசாகக் குரைத்துக் கொண்டே கண்விழித்து, சுற்றுமுற்றும் திரும்பி, ஹாரியைப் பார்த்தான்.

அறையின் ஒரு மூலையிலிருந்து வந்த நெவிலின் குறட்டைச் சத்தத்தை அலட்சியம் செய்தவாறு, ஹாரி, "ரான் – இறந்து போன அந்தப் பெண்! ஒரு குளியலறையில் அவளது உடல் கண்டுபிடிக்கப்பட்டதாக அரகாக் கூறியதல்லவா?" என்று கேட்டான். "அவள் அந்தக் குளியலறையைவிட்டு ஒருபோதும் வெளியே போகாமலேயே இருந்திருந்தால்? அவள் அந்தக் குளியலறையிலேயே இன்னும் இருந்து கொண்டிருந்தால்?"

ரான் தன் கண்களைத் துடைத்தான். நிலா வெளிச்சத்தில் அவன் தன் நெற்றியைச் சுருக்கினான். பின் அவனுக்குப் புரிந்தது.

"அது மர்ட்டிலாக இருக்கும் என்று நீ நினைக்கிறாயா?"

Scanned by CamScanner

அத்தியாயம் பதினாறு

பாதாள அறை ரகசியங்கள்

"நாம் எவ்வளவு காலம் அந்தக் குளியலறையிலேயே தவம் கிடந்தோம்! மர்ட்டில் அங்கு வெறும் மூன்று தடுப்பறைகள் தள்ளி இருந்திருக்கிறது," என்று ரான் அடுத்த நாள் காலை உணவின்போது ஏக்கத்துடன் கூறினான். "அப்போதே நாம் அதை ஒரு வார்த்தைக் கேட்டிருக்கலாம். இப்போது . . ."

சிலந்திப் பூச்சிகளைக் கண்டுபிடிக்க அலைந்ததே பெரிய பிரச்சனையாக இருந்தது. ஆசிரியர்களின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு மாணவியரின் குளியலறைக்குள் புகுவது என்பது, அதுவும், முதல் தாக்குதல் நடந்த இடத்திற்கு அடுத்து இருந்த மாணவியரின் குளியலறைக்குள் செல்வது என்பது கிட்டத்தட்ட இயலாத காரியம்.

ஆனால் அவர்களுடைய முதல் வகுப்பான உருவமாற்ற வகுப்பில் நிகழ்ந்த ஒன்று, பல வாரங்களில் முதன்முறையாக அவர்களுடைய கவனத்தை, ரகசியங்கள் அடங்கிய பாதாள அறையிலிருந்து வேறு பக்கமாகத் திருப்பியது. வகுப்புத் துவங்கிப் பத்து நிமிடங்கள் ஆகியிருந்தபோது, பேராசிரியர் மெக்கானகல், அவர்களுடைய தேர்வுகள் ஜூன் முதல் தேதியன்று, அதாவது, அன்றிலிருந்து ஒரு வாரத்தில் துவங்கவிருந்ததாக அறிவித்தார்.

"தேர்வுகளா?" என்று சீமஸ் ஊளையிட்டான். "இந்த நிலைமையிலும்கூட நமக்குத் தேர்வுகள் உண்டா என்ன?"

நெவிலின் மந்திரக்கோல் கீழே நழுவி விழுந்தபோது, ஹாரிக்குப் பின்னால் ஒரு பெரிய சத்தம் கிளம்பியது. அவனது மேசையின் ஒரு கால் காணாமல் போனது. பேராசிரியர் மெக்கானகல் தன்னுடைய மந்திரக்கோலை லேசாக ஆட்டியதும் அது மீண்டும் வந்துவிட்டது. அவர் முகம் சுளித்தவாறே சீமஸை நோக்கித் திரும்பினார்.

"இந்த நேரத்தில் பள்ளியைத் திறந்து வைத்திருப்பது ஒரே ஒரு காரணத்திற்காகத்தான். அது உங்களுடைய படிப்பு," என்று அவர் கண்டிப்பாகக் கூறினார். "அதனால் தேர்வுகள் வழக்கம்போல நடைபெறும். இந்நேரத்திற்குள் நீங்கள் உங்களை நன்றாகத் தயார்படுத்திக் கொண்டிருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன்."

நன்றாகத் தயார்படுத்திக் கொள்வதா? கோட்டை இருந்த நிலைமையில் தேர்வுகள் நடைபெறக்கூடும் என்று ஹாரிக்கு

Scanned by CamScanner

ஒருபோதும் தோன்றியிருக்கவில்லை. கீழ்ப்படிய மறுக்கும் விதத்தில் ஏகப்பட்ட முணுமுணுப்புகள் அந்த அறையை நிறைத்தன. அதனால் பேராசிரியர் மெக்கானகல் மேலும் நெருப்பை உமிழ்ந்தார்.

"பள்ளியை முடிந்த அளவு இயல்பாக நடத்த வேண்டும் என்பது பேராசிரியர் டம்பிள்டோரின் உத்தரவு," என்று அவர் கூறினார். "நீங்கள் இந்த வருடம் எவ்வளவு தூரம் கற்றுக் கொண்டுள்ளீர்கள் என்பதைக் கண்டுபிடிப்பதும் அதில் அடங்கும் என்பதை நான் தனியாகக் குறிப்பிட வேண்டியதில்லை என்று நினைக்கிறேன்."

ஒரு ஜோடிக் காலணிகளாக மாற்றப்படுவதற்காகத் தனது மேசையின்மீது நின்று கொண்டிருந்த இரண்டு முயல்களை ஹாரி பார்த்தான். இந்த வருடம் அவன் இதுவரை என்ன கற்றுக் கொண்டிருந்தான்? தேர்வுக்கு உபயோகமான எதையும் தான் கற்றுக் கொண்டிருந்ததாக அவனுக்குத் தோன்றவில்லை.

ரானின் முகம், இப்போதே இங்கிருந்து புறப்பட்டுச் சென்று, தடை செய்யப்பட்டுள்ள காட்டில் அவன் வசிக்க வேண்டும் என்று யாரோ அவனிடம் கூறியிருந்ததுபோல வாடிப் போயிருந்தது.

ரான் ஹாரியிடம் தன்னுடைய மந்திரக்கோலைத் தூக்கிக் காண்பித்துக் கொண்டே, "இதை வைத்துக் கொண்டு நான் தேர்வு எழுத வேண்டும் என்பதை உன்னால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா?" என்று கேட்டான். அப்போது அவனது மந்திரக்கோல் சத்தமாக விசிலடித்தது.

* * *

தேர்வுக்கு மூன்று நாட்களுக்கு முன்பாக, அவர்கள் காலை உணவருந்திக் கொண்டிருந்தபோது பேராசிரியர் மெக்கானகல் மற்றுமோர் அறிவிப்பை வெளியிட்டார்.

"உங்களுக்கு ஒரு நல்ல செய்தி!" என்று அவர் துவக்கியதும், அப்பேரரங்கு மௌனமாவதற்குப் பதிலாக, சலசலப்பால் நிரம்பி வழிந்தது.

"டம்பிள்டோர் இங்கு திரும்புகிறார்!" ஏராளமான பேர் சந்தோஷக் கூக்குரல் எழுப்பினர்.

"ஸ்லிதரினின் வாரிசைப் பிடித்துவிட்டீர்களா?" என்று ஒரு மாணவி ரேவன்கிளா உணவு மேசையில் இருந்து கீச்சிட்டாள்.

"குவிடிச் போட்டிகள் மீண்டும் துவங்கும்!" என்று உட் பரவசமாகக் கத்தினான்.

சலசலப்பு அடங்கியதும், பேராசிரியர் மெக்கானகல் தொடர்ந்தார். "மன்ட்ரேக்குகள் வெட்டப்படுவதற்குத் தயாராக இருப்பதாகப் பேராசிரியர் ஸ்புரவுட் என்னிடம் கூறினார். கல்லாக்கப்பட்டுள்ளவர்களை இன்றிரவு நம்மால் மீட்டுவிட முடியும். அவர்களில் ஒருவர், தங்களைத் தாக்கியது எது அல்லது யார் என்பதை நமக்குத் தெரிவிக்கக்கூடும் என்பதை நான் உங்களுக்கு நினைவுபடுத்தத் தேவையில்லை. நம்முடைய இந்தப் படுபயங்கரமான

Scanned by CamScanner

வருடம் குற்றவாளியைப் பிடிப்பதுடன் நிறைவு பெறும் என்று நான் நம்புகிறேன்."

அங்கு கரகோஷம் விண்ணைப் பிளந்தது. ஹாரி ஸ்லிதரின் அணியினரின் பெஞ்சைப் பார்த்தான். அங்கு மால்ஃபாய் அந்த அறையின் சந்தோஷக் கூச்சலில் பங்கேற்றிருக்கவில்லை என்பது ஹாரியை ஆச்சரியப்படுத்தவில்லை. ஆனால் ரான் பல நாட்களுக்குப் பின் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தான்.

"நாம் மர்ட்டிலிடம் கேட்காமல் விட்டது இப்போது ஒரு பெரிய பிரச்சனை அல்ல," என்று அவன் ஹாரியிடம் கூறினான். "இன்றிரவு அவர்கள் ஹெர்மயனியை எழுப்பும்போது அவளிடம் எல்லா விடைகளும் இருக்கலாம். இன்னும் மூன்று நாட்களில் தேர்வு என்று கேள்விப்பட்டவுடன் அவள் வானத்திற்கும் பூமிக்குமாகக் குதிக்கப் போகிறாள். ஏற்கனவே நடத்தப்பட்டிருக்கும் பாடங்களைக்கூட அவன் மீண்டும் படித்திருக்கவில்லை. தேர்வு முடியும்வரை அவளை இப்போது இருக்கும் நிலையில் அப்படியே விட்டு வைத்திருப்பது அவளுக்குச் செய்யும் உபகாரமாக இருக்கும்!"

அப்போது ஜின்னி அங்கு வந்து ரானின் பக்கத்தில் உட்கார்ந்தாள். அவள் இறுக்கமாகவும் பதற்றமாகவும் இருந்தாள். அவள் தனது மடியில் வைத்திருந்த தனது கைகளைப் பிசைந்து கொண்டிருந்ததை ஹாரி கவனித்தான்.

ரான் தனக்கு மேலும் கொஞ்சம் கஞ்சியை ஊற்றிக் கொண்டவாறு, "என்ன ஆயிற்று?" என்று கேட்டான்.

ஜின்னி பதிலேதும் சொல்லவில்லை. ஆனால் கிரிஃபின்டார் அணியினர் உட்கார்ந்திருந்த உணவு மேசையை அவள் மேலும் கீழும் பார்த்தாள். அவளது முகத்தில் உறைந்திருந்த பயம் ஹாரிக்கு யாரையோ ஞாபகப்படுத்தியது. ஆனால் அது யாரென்று அவனுக்குச் சட்டென்று நினைவுக்கு வரவில்லை.

ரான் அவளையே கவனித்துக் கொண்டு, "உன் மனத்தில் உள்ளதைச் சொல்லிவிடு!" என்று கூறினான்.

ஜின்னி யாரைத் தனக்கு நினைவுபடுத்தினாள் என்பதை ஹாரி திடீரென்று உணர்ந்தான். அவள் தான் உட்கார்ந்திருந்த நாற்காலியில் முன்னும் பின்னும் ஆடிக் கொண்டிருந்தாள். தடை செய்யப்பட்டத் தகவல்களை வெளிப்படுத்துவதற்கு முன்பாக டாபி எவ்வாறு தள்ளாடிக் கொண்டிருந்ததோ, நாற்காலியில் ஜின்னி முன்னும் பின்னும் ஆடிக் கொண்டிருந்ததும் அச்சசலாக அதேபோல இருந்தது.

"நான் உன்னிடம் ஒரு விஷயத்தைக் கூறியாக வேண்டும்," என்று ஜின்னி முணுமுணுத்தாள். அவள் ஹாரியைப் பார்ப்பதைக் கவனமாகத் தவிர்த்தாள்.

"என்ன விஷயம்?" என்று ஹாரி கேட்டான்.

தனக்குச் சரியான வார்த்தைகள் கிடைக்காததுபோல அவள் தவித்தாள்.

Scanned by CamScanner

"என்ன?" என்று ரான் கேட்டான்.

ஜின்னி தன் வாயைத் திறந்தாள், ஆனால் அவளது வாயிலிருந்து எந்த வார்த்தையும் வரவில்லை. ஹாரி முன்னால் குனிந்து, ரானுக்கும் ஜின்னிக்கும் மட்டும் கேட்கும் விதத்தில் மிகவும் மெதுவாகப் பேசினான்.

"இது ரகசியங்கள் அடங்கிய பாதாள அறையைப் பற்றியதா? நீ எதையாவது பார்த்தாயா? யாராவது வினோதமாக நடந்து கொள்கிறார்களா?"

ஜின்னி ஆழமாக சுவாசித்தாள். சரியாக அக்கணத்தில் பெர்சி அங்கு வந்து சேர்ந்தான். அவன் சோர்வாகவும் கவலையாகவும் தோற்றமளித்தான்.

"ஜின்னி, நீ சாப்பிட்டு முடித்துவிட்டிருந்தால், கொஞ்சம் எழுந்திரு. எனக்கு அகோரப் பசி. இரவு நேர ரோந்துப் பணியிலிருந்து நான் நேராக இங்குதான் வருகிறேன்," என்று பெர்சி கூறினான்.

ஜின்னி தான் உட்கார்ந்திருந்த நாற்காலியில் திடீரென்று மின்சாரம் பாய்ச்சப்பட்டதைப்போலப் பதறி எழுந்தாள். அவள் ஒரு கணம் பெர்சியை பயத்துடன் பார்த்துவிட்டு அங்கிருந்து ஓட்டமெடுத்தாள்.

"பெர்சி!" என்று ரான் கோபமாக இரைந்தான். "அவள் எங்களிடம் ஏதோ ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றிக் கூற இருந்தாள்."

தேநீரைக் குடித்துக் கொண்டிருந்த பெர்சிக்குப் பொறை ஏறியது.

"எதைப் பற்றி?" என்று அவன் இருமியபடியே கேட்டான்.

"அவள் வித்தியாசமாக எதையாவது பார்த்தாளா என்று நான் அவளிடம் கேட்டேன். அதற்கு அவள் பதிலளிக்க முன்வந்தபோது – "

"ஓ – அது – அது ஒன்றும் ரகசியங்கள் அடங்கிய பாதாள அறையைப் பற்றியது அல்ல," என்று பெர்சி உடனடியாகக் கூறினான்.

ரான் தன் புருவங்களை உயர்த்தியவாறு, "உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டான்.

"நீங்கள் கண்டிப்பாகத் தெரிந்து கொள்ள விரும்பினால், அதைச் சொல்வதில் எனக்கு ஆட்சேபனை இல்லை – அன்றொரு நாள் ஜின்னி என்னிடம் வந்து – சரி, அதை விட்டுத்தள்ளு – இங்கு முக்கியமான விஷயம் என்னவென்றால், நான் ஏதோ ஒன்றைச் செய்து கொண்டிருந்ததை அவள் பார்த்துவிட்டாள் – ம்ம் – நான் – அவள் பார்த்த விஷயத்தை வேறு யாரிடமும் கூற வேண்டாம் என்று நான் அவளிடம் கேட்டுக் கொண்டேன். அவள் தன் வாக்கைக் காப்பாற்றுவாள் என்று நான் நினைத்திருந்தேன். அது ஒன்றும் முக்கியமானதல்ல – அது வந்து –"

பெர்சி இவ்வளவு அசௌகரியமாக உணர்ந்து ஹாரி பார்த்திருக்கவில்லை.

Scanned by CamScanner

ரான் பெரிதாகப் புன்னகைத்துக் கொண்டே, "பெர்சி, நீ என்ன செய்து கொண்டிருந்தாய்?" என்று கேட்டான். "நாங்கள் சிரிக்க மாட்டோம்."

ஆனால் பெர்சி பதிலுக்குப் புன்னகைக்கவில்லை.

"ஹாரி, அந்த ரொட்டியை இங்கே தள்ளு. எனக்கு பயங்கரப் பசி."

* * *

மொத்த மர்மமும் அவர்களுடைய உதவியில்லாமல் அடுத்த நாள் வெளிப்பட்டுவிடும் என்பதை ஹாரி அறிந்திருந்தாலும், மர்ட்டிலுடன் பேச ஒரு வாய்ப்புக் கிடைத்தால் அதைத் தவறவிடக்கூடாது என்று நினைத்துக் கொண்டான். அப்படிப்பட்ட ஒரு வாய்ப்பு, நண்பகலுக்குச் சற்று முன்பு, மந்திரஜாலத்தின் வரலாறு வகுப்பிற்காக லாக்ஹார்ட் அவர்களை அழைத்துச் சென்று கொண்டிருந்தபோது அவனுக்குக் கிடைத்தது.

லாக்ஹார்ட் கூறியிருந்தவை அனைத்தும் தவறு என்பதை நிரூபிப்பதுபோல நிகழ்வுகள் நடந்து கொண்டிருந்த போதிலும், எல்லா ஆபத்துக்களும் கரைந்து போய்விட்டதாக அவர் அவர்களிடம் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டே இருந்தார். மாணவர்களைத் தாழ்வாரங்களில் மேய்த்துக் கொண்டு திரிவது ஒரு வெட்டி வேலை என்பதில் அவர் உறுதியாக இருந்தார். அன்று அவரது தலைமுடி வழக்கத்திற்கு மாறாகச் சீரற்றும் நேர்த்தியற்றும் இருந்தது. அவர் முழு இரவும் நான்காவது மாடியில் ரோந்து சுற்றிக் கொண்டிருந்தவர்போலக் காணப்பட்டார்.

அவர்களை ஒரு திருப்பம் வரை அழைந்து வந்த அவர், "நான் சொல்வதைக் கவனமாகக் குறித்து வைத்துக் கொள்ளுங்கள்," என்று துவக்கினார். "கல்லாக்கப்பட்டவர்கள் விழித்து எழுந்ததும், அவர்களின் வாய்களிலிருந்து வரவிருக்கும் முதல் வாக்கியம், 'இதைச் செய்தது ஹாக்ரிட்' என்பதாகத்தான் இருக்கும். இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் எல்லாம் தேவை என்று பேராசிரியர் மெக்கானகல் நினைக்கிறார் என்பது என்னை மிகவும் ஆச்சரியத்திற்கு உள்ளாக்குகிறது."

"சார், நீங்கள் சொல்வதை நான் ஒப்புக் கொள்கிறேன்," என்று ஹாரி கூறினான். ஆச்சரியத்தில் ரான் தன்னுடைய புத்தகங்களைக் கீழே தவறவிட்டான்.

ஒரு நீண்ட வரிசையில் சென்று கொண்டிருந்த ஹஃபில்பஃப் அணியினர் கடந்து செல்வதற்காக அவர்கள் காத்துக் கொண்டிருந்தபோது, "நன்றி, ஹாரி," என்று லாக்ஹார்ட் கனிவுடன் கூறினார். "ஆசிரியர்களாகிய எங்களுக்கு நிறைய வேலைகள் இருக்கின்றன. இரவில் ரோந்து சுற்றுவதும் மாணவர்களை மேய்த்துக் கொண்டிருப்பதும் –"

"நீங்கள் சொல்வது சரிதான் சார்!" என்று ரானும் ஒத்து ஊதினான். "நீங்கள் ஏன் எங்களை இங்கேயை விட்டுவிடக்கூடாது? இன்னும் ஒரே ஒரு தாழ்வாரம்தான் இருக்கிறது."

Scanned by CamScanner

"ரான், நீ கூறுவது சரிதான்," என்று லாக்ஹார்ட் கூறினார். "என்னுடைய அடுத்த வகுப்பிற்கு நான் தயார் செய்ய வேண்டும். நான் போகிறேன்."

உடனே அவர் அங்கிருந்து வேகமாக மறைந்தார்.

"அடுத்த வகுப்பிற்குத் தயார் செய்ய வேண்டுமாம்!" என்று ரான் அவரை எள்ளி நகையாடினான். "அவர் தன் தலைமுடியைச் சுருட்டிவிடத்தான் போயிருப்பார்."

மற்ற மாணவர்கள் தங்களை முந்திச் செல்ல அவர்கள் அனுமதித்தனர். பிறகு, பக்கத்திலிருந்த ஒரு பாதை வழியாக முனகல் மர்ட்டிலின் குளியலறையை நோக்கி அவர்கள் ஓடினர். அவர்கள் தங்களுடைய சாமர்த்தியமான திட்டம் குறித்து ஒருவரையொருவர் பாராட்டிக் கொண்டிருந்தபோது . . .

"ஹாரி! ரான்! நீங்கள் இருவரும் இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?"

அது பேராசிரியர் மெக்கானகல். அவரது உதடுகள் இறுகிப் போயிருந்தன.

"நாங்கள் – நாங்கள்," என்று ரான் தடுமாறினான். "நாங்கள் போய் . . . நாங்கள் போய் . . ."

"ஹெர்மயனி!" என்று ஹாரி கூறினான். ரானும் பேராசிரியர் மெக்கானகல்லும் ஒருசேர அவனை ஏறிட்டுப் பார்த்தனர்.

ஹாரி ரானின் காலில் மிதித்தவாறு, "பேராசிரியரே, நாங்கள் அவளைப் பார்த்து மாமாங்கம் ஆகியிருக்கும்," என்று அவசரமாகக் கூறினான். "அதனால் நாங்கள் ரகசியமாக நழுவி, மருத்துவமனைக்குச் சென்று, மன்ட்ரேக்குகள் கிட்டத்தட்டத் தயாராகிவிட்டதால் அவள் இனி கவலைப்பட வேண்டாம் என்று அவளிடம் கூறி வரலாம் என்று நினைத்திருந்தோம்."

பேராசிரியர் மெக்கானகல் அப்போதும் அவனை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் தங்கள் மேல் பாயப் போவதாக ஹாரி ஒரு கணம் நினைத்தான். ஆனால் அவர் பேசியபோது, அவரது குரல் வினோதமாகக் கரகரப்பாக இருந்தது.

"எனக்குப் புரிகிறது," என்று அவர் கூறினார். அவரது சிறிய உருண்டையான கண்களில் ஒரு துளிக் கண்ணீர் துளிர்த்திருந்ததைக் கண்டு ஹாரி அசந்து போனான். "எனக்குப் புரிகிறது. இது நெருங்கிய நண்பர்களை எவ்வளவு தூரம் பாதித்திருக்கும் என்பது எனக்கு நன்றாகவே புரிகிறது. சரி, நீங்கள் இருவரும் போய் ஹெர்மயனியைப் பார்த்து வாருங்கள். நீங்கள் எங்கே போயிருக்கிறீர்கள் என்று பேராசிரியர் பின்ஸிடம் நான் சொல்லிவிடுகிறேன். ஹெர்மயனியைச் சந்திக்க உங்களுக்கு நான் அனுமதி கொடுத்துள்ளதாக மேடம் பாம்ஃபிரேயிடம் கூறுங்கள்."

தங்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுவதிலிருந்து தாங்கள் எப்படித் தப்பித்தோம் என்று வியந்து கொண்டே ஹாரியும் ரானும் அங்கிருந்து அகன்றனர். அவர்கள் ஒரு மூலையில் திரும்பியதும்,

Scanned by CamScanner

பேராசிரியர் மெக்கானகல் தன்னுடைய மூக்கைச் சிந்தும் சத்தம் தெள்ளத் தெளிவாக அவர்களுக்குக் கேட்டது.

"ஹாரி," என்று ரான் அழைத்தான். "நீ இதுவரை எடுத்துவிட்டக் கதைகளிலேயே இதை மிஞ்ச ஒரு கதை கிடையாது."

இப்போது அவர்களுக்கு மருத்துவமனைக்குப் போவதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை. அங்கு போய், ஹெர்மயனியைப் பார்ப்பதற்குப் பேராசிரியர் மெக்கானகல் தங்களுக்கு அனுமதி அளித்திருந்ததாக மேடம் பாம்ஃபிரேயிடம் அவர்கள் கூறியாக வேண்டியிருந்தது.

மேடம் பாம்ஃபிரே அவர்களை உள்ளே அனுமதித்தாலும் அதைத் தயக்கத்துடனேயே செய்தார்.

"கல்லாக்கப்பட்டுள்ளவர்களிடம் பேசுவது வெட்டி வேலை," என்று அவர் கூறினார். ஹெர்மயனியின் பக்கத்தில் இருந்த இருக்கைகளில் அவர்கள் இருவரும் அமர்ந்தபோது, மேடம் பாம்ஃபிரே கூறியது சரிதான் என்பதை அவர்களும் ஒப்புக் கொள்ள வேண்டியிருந்தது. தன்னைப் பார்க்கப் பார்வையாளர்கள் வந்திருந்தனர் என்ற உணர்வு ஹெர்மயனிக்குத் துளிகூட இருக்கவில்லை. கவலைப்பட வேண்டாம் என்று ஹெர்மயனியிடம் கூறுவதும் அவளுக்குப் பக்கத்தில் இருந்த அலமாரியிடம் கூறுவதும் ஒன்றுதான் என்பதுபோல நிலைமை இருந்தது.

ரான், பாறைபோல இறுகிப் போயிருந்த ஹெர்மயனியின் முகத்தைப் பார்த்தவாறு, "அவள் தன்னைத் தாக்கியது யார் என்பதைப் பார்த்திருப்பாளா என்று நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்," என்று கூறினான். "தாக்கியவன் இவர்கள் அனைவரையும் பதுங்கியிருந்து ரகசியமாகத் தாக்கியிருந்தால், யாருக்கும் எதுவும் தெரிந்திருக்காது . . ."

ஆனால் ஹாரி, ஹெர்மயனியின் முகத்தைப் பார்க்கவில்லை. உறைந்து போயிருந்த அவளது வலது கையையே அவன் பார்த்துக் கொண்டிருந்தான். முஷ்டி மடங்கிய நிலையில் அந்தக் கை அவளது போர்வையின்மீது கிடந்தது. அவன் அதனருகே குனிந்து பார்த்தபோது, அவளது மூடிய கைக்குள் கசங்கிய நிலையில் ஒரு துண்டுக் காகிதம் இருந்ததைக் கண்டான்.

பக்கத்தில் மேடம் பாம்ஃபிரே இல்லையென்பதை உறுதி செய்து கொண்ட ஹாரி, அந்தத் துண்டுக் காகிதத்தை ரானுக்குச் சுட்டிக்காட்டினான்.

"அதை வெளியே எடுக்க முயன்று பார்," என்று ரான் கிசுகிசுத்தான். மேடம் பாம்ஃபிரேயின் பார்வையை மறைக்கும் விதமாக, அவன் தன்னுடைய நாற்காலியைச் சிறிது நகர்த்திக் கொண்டான்.

அக்காகிதத்தை ஹெர்மயனி தன் கையில் இறுக்கமாகப் பிடித்திருந்ததால், அதை அவளது கையிலிருந்து விடுவிப்பது அவ்வளவு சுலபமான காரியமாக இருக்கவில்லை. அதை விடுவிக்கும்

Scanned by CamScanner

முயற்சியில் தான் அதைக் கிழித்துவிடுவோமோ என்று ஹாரி பயந்தான். ரான் கண்காணிப்பு வேலையைச் செய்து கொண்டிருந்தபோது, ஹாரி அக்காகிதத்தை வளைத்துத் திருகினான், இழுத்துப் பார்த்தான். இறுதியில், சில பதற்றமான நிமிடங்களுக்குப் பிறகு அக்காகிதம் அவளது கையிலிருந்து விடுபட்டது.

அது ஒரு பழைய நூலகப் புத்தகத்திலிருந்து கிழிக்கப்பட்டிருந்த ஒரு காகிதம். ஹாரி அதன் சுருக்கங்களை ஆர்வத்துடன் நீவிவிட்டான். ரானும் அவனருகே சாய்ந்து அதைப் படிக்கத் துவங்கினான்.

நம்முடைய நாட்டில் அலைந்து திரியும் பயங்கரமான ராட்சஸ விலங்குகளிலேயே, பேசிலிஸ்க்கைவிட அதிக ஆவலைத் தூண்டுகின்ற, நிச்சயம் மரணத்தை விளைவிக்கின்ற ஒன்றைக் காண முடியாது. அது ராஜ ஸர்ப்பம் என்றும் அழைக்கப்படுகிறது. இந்தப் பாம்பு அசுரத்தனமான வளர்ச்சியை அடைய வல்லது. அதோடு பல நூறு ஆண்டுகள் உயிர்வாழக்கூடியது. இது தவளையால் அடைகாக்கப்படுகின்ற கோழி முட்டையிலிருந்து பிறப்பெடுக்கும். இதன் சாகடிக்கும் முறைகள் அற்புதமானவை. பயங்கர நஞ்சுள்ள விஷப்பற்களைத் தவிர அதனிடம் வேறோர் ஆயுதமும் உள்ளது. சுட்டெரிக்கும் பார்வையும் இந்த ராஜ ஸர்ப்பத்திற்கு உண்டு. அதன் பார்வையின் ஒளிக் கற்றையின் பாதையில் இருக்கும் எவரொருவருக்கும் உடனடி மரணம்தான். சிலந்திகள் இதைக் கண்டால் ஓட்டமெடுக்கும். ஏனெனில் இவை சிலந்திகளின் பரம எதிரி. இந்த ராஜ ஸர்ப்பம் சேவற்கோழியின் கூவலைக் கேட்டால் மட்டுமே ஓடி ஒளிந்து கொள்ளும். ஏனெனில் அச்சத்தம் இந்த ராஜ ஸர்ப்பத்தைக் கொன்றுவிடும்.

அதற்குக் கீழே ஒரே ஒரு வார்த்தை எழுதப்பட்டிருந்தது. அது ஹெர்மயனியின் கையெழுத்து என்பதை ஹாரி கண்டுகொண்டான். **குழாய்கள்.**

யாரோ தனது மூளைக்குள் விளக்கு ஒன்றை எரிய வைத்ததுபோல ஹாரி உணர்ந்தான்.

"ரான்," என்று அவன் அழைத்தான். "இதுதான். இதுதான் விடை. பாதாள அறையில் இருக்கும் ராட்சஸ விலங்கு **ராஜ ஸர்ப்பம்தான்.** அது ஒரு பாம்பு. **அதனால்தான் நான் அதன் குரலை எல்லா இடங்களிலும் கேட்கிறேன்.** அதனால்தான் அக்குரலை வேறு யாராலும் கேட்க முடியவில்லை. இதற்குக் காரணம், எனக்கு ஸர்ப்ப பாஷை தெரியும் . . ."

ஹாரி தன்னைச் சுற்றி இருந்த படுக்கைகளைப் பார்த்தான்.

"ராஜ ஸர்ப்பம் தன் பார்வையால் மக்களைக் கொல்கிறது. இங்குள்ள எவரும் இறந்து போகாததற்குக் காரணம் இவர்கள் யாருமே அதை நேரடியாகப் பார்க்கவில்லை என்பதுதான். காலின் அதைத் தன் கேமரா வழியாகப் பார்த்திருக்கிறான். ராஜ ஸர்ப்பம் அந்தக்

Scanned by CamScanner

கேமராவின் உள்ளே இருந்த ஃபிலிமைப் பொசுக்கிவிட்டது, ஆனால் காலின் கல்லாக்கப்பட்டுவிட்டான். ஜஸ்டின் . . . ஜஸ்டின் அதை நிக்கின் ஊடாகப் பார்த்திருக்க வேண்டும். நிக் அப்பாம்பின் பார்வையின் முழு வீச்சையும் எதிர்கொண்டிருக்கிறது. ஆனால் நிக்கால் மீண்டும் இறக்க இயலாது . . . ஹெர்மயனியும் அந்த ரேவன்கிளா மாணவ அணித் தலைவியும் ஒரு கண்ணாடியின் அருகே கண்டுபிடிக்கப்பட்டனர். அந்த ராட்சஸ விலங்கு ஒரு ராஜ ஸர்ப்பம் என்பதை ஹெர்மயனி அப்போதுதான் உணர்ந்திருந்தாள். அதனால் அவள் தான் சந்தித்த முதல் நபரிடம், அதாவது, அந்த ரேவன்கிளா மாணவ அணித் தலைவியிடம், எந்தவொரு மூலையிலும் திரும்பும் முன்பாக அந்த மூலையை முதலில் ஒரு கண்ணாடியின் ஊடாகப் பார்த்தப் பிறகே திரும்ப வேண்டும் என்று எச்சரித்தாள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். எனவே, அந்த ரேவன்கிளா மாணவி தன்னுடைய கண்ணாடியை வெளியே எடுத்திருக்க வேண்டும் – அப்புறம் –"

ரானின் தாடை கீழிறங்கியது.

"நாரிஸ் பூனை?" என்று அவன் ஆர்வமாகக் கிசுகிசுத்தான்.

ஹாரி தீவிரமாக யோசித்தான். அந்த ஹாலோவீன் தினத்தை அவன் தன் கண் முன்னால் கொண்டுவர முயன்றான்.

"தண்ணீர் . . ." என்று மெதுவாகக் கூறினான். "முனகல் மர்ட்டிலின் குளியலறையிலிருந்து வெள்ளமாய் வந்த தண்ணீர். நாரிஸ் பூனை அப்பாம்பின் பிரதிபலிப்பை மட்டுமே பார்த்திருக்கும் என்று நான் உன்னிடம் பந்தயம் கட்டத் தயார் . . ."

அவன் தன் கையிலிருந்த காகிதத்தை மீண்டும் நோட்டம் விட்டான். அவன் அதை அதிகமாகப் பார்க்கப் பார்க்க, அது அவனுக்கு அதிக அர்த்தம் வாய்ந்ததாக ஆனது.

"இந்த ராஜ ஸர்ப்பம் சேவற்கோழியின் கூவலைக் கேட்டால் ஓடி ஒளிந்து கொள்ளும். ஏனெனில் அச்சத்தம் இந்த ராஜ ஸர்ப்பத்தைக் கொன்றுவிடும்!" அவன் அதைச் சத்தமாகப் படித்தான். ஹாக்ரிட்டின் சேவல்கள் கொல்லப்பட்டன! பாதாள அறை திறக்கப்பட்டவுடன், ஸ்லிதரினின் வாரிசு, இச்சேவல்களில் ஒன்று கோட்டைக்கு அருகே எங்கேனும் இருப்பதை விரும்பவில்லை! **சிலந்திகள் இதைக் கண்டால் ஓட்டமெடுக்கும்!** இவை எல்லாமே கச்சிதமாகப் பொருந்துகின்றன!"

"ஆனால் ராஜ ஸர்ப்பம் எப்படி இந்த இடத்தில் சுற்றிக் கொண்டிருக்கிறது?" என்று ரான் கேட்டான். "ஒரு பயங்கர ராட்சஸப் பாம்பு . . . யாராவது கண்டிப்பாகப் பார்த்திருப்பார்கள் . . ."

ஆனால் ஹாரி, அந்தப் பக்கத்தின் அடியில் ஹெர்மயனி எழுதியிருந்த வார்த்தையைச் சுட்டிக்காட்டினான்.

"குழாய்கள்," என்று கூறினான். "குழாய்கள், ரான். அது இங்குள்ள குழாய்களை உபயோகித்துக் கொண்டிருக்கிறது. அதனால்தான் நான் சுவர்களுக்கு உள்ளே இருந்தும் அதன் குரலைக் கேட்கிறேன் . . ."

Scanned by CamScanner

ரான் திடீரென்று ஹாரியின் கைகளைப் பற்றினான்.

"ரகசியங்கள் அடங்கிய பாதாள அறைக்கான நுழைவு வழி," என்று ரான் கரகரப்பான் குரலில் கேட்டான். "அது ஒரு குளியலறையாக இருந்தால்? அது –"

"முனகல் மர்ட்டிலின் குளியலறை!" என்று ஹாரி கூறினான்.

அங்கு உட்கார்ந்திருந்த அவர்களிடம் உற்சாகமும் பரவசமும் பரவிக் கொண்டிருந்தன. அவர்களால் இதை நம்பவே முடியவில்லை.

"அப்படியானால்," என்று ஹாரி துவக்கினான். "பள்ளியில் ஸர்ப்ப பாஷை தெரிந்தவன் நான் ஒருவன் மட்டும் அல்ல. ஸ்லிதரினின் வாரிசும் ஸர்ப்ப பாஷை தெரிந்த ஒருவனாகத்தான் இருக்க வேண்டும். அப்படித்தான் அவர்கள் அந்த ராஜ ஸர்ப்பத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்."

ரான் தன் கண்கள் பிரகாசிக்க, "இப்போது நாம் என்ன செய்யப் போகிறோம்?" என்று கேட்டான். "நாம் நேரடியாகப் பேராசிரியர் மெக்கானகல்லிடம் போகலாமா?"

ஹாரி துள்ளி எழுந்தவாறு, "நாம் ஆசிரியர்களின் அறைக்குச் செல்லலாம்," என்று கூறினான். "அவர் இன்னும் ஒரு பத்து நிமிடங்களில் அங்கு இருப்பார். அடுத்தது இடைவேளை நேரம்."

அவர்கள் கீழே ஓடினர். ஏதாவது ஒரு தாழ்வாரத்தில் தாங்கள் அலைந்து கொண்டிருப்பதை யாராவது பார்த்து, அதனால் தாங்கள் வம்பில் மாட்டிக் கொள்வதைத் தவிர்ப்பதற்காக, அவர்கள் நேரடியாக, ஆளரவமற்று இருந்த ஆசிரியர்களின் அறைக்குச் சென்றனர். அது ஒரு பெரிய அறை. அங்கு ஏராளமான மர நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. ஹாரிக்கும் ரானுக்கும் இருந்த உற்சாகத்தில் அவர்களால் அங்கு உட்கார முடியவில்லை. அவர்கள் அந்த அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தனர்.

ஆனால் இடைவேளையை அறிவிக்கும் மணி ஒலிக்கவேயில்லை.

அதற்கு பதிலாக, பேராசிரியர் மெக்கானகல்லின் குரல் மந்திரஜாலத்தால் பெரிதுபடுத்தப்பட்டு அந்தத் தாழ்வாரத்தில் எதிரொலித்தது.

"எல்லா மாணவர்களும் உடனடியாகத் தங்களுடைய பொது அறைகளுக்குச் செல்லுமாறு உத்தரவிடப்படுகிறார்கள். எல்லா ஆசிரியர்களும் உடனடியாக ஆசிரியர்களின் பொது அறைக்கு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்."

ஹாரி ரானை நோக்கித் திரும்பினான்.

"இன்னொரு தாக்குதலா? அதுவும் இப்போது பார்த்தா?"

திகைத்துப் போன ரான், "நாம் இப்போது என்ன செய்வது?" என்று கேட்டான். "நம்முடைய பொது அறைக்குப் போய்விடலாமா?"

ஹாரி சுற்றுமுற்றும் பார்த்தவாறு, "வேண்டாம்," என்று கூறினான். சற்று அழுக்காக இருந்த ஓர் அலமாரி அவனுடைய இடது பக்கத்தில் இருந்தது. அதில் ஆசிரியர்களின் அங்கிகள் வைக்கப்பட்டிருந்தன.

Scanned by CamScanner

"நாம் இதற்குள் ஒளிந்து கொள்ளலாம். ஆசிரியர்களின் இந்தச் சந்திப்புக்கூட்டம் எதைப் பற்றியது என்பதை முதலில் நாம் கேட்கலாம். பிறகு நாம் கண்டுபிடித்துள்ளவற்றைப் பற்றி அவர்களிடம் கூறலாம்."

ஹாரியும் ரானும் அந்த அலமாரிக்குள் புகுந்து கொண்டனர். மேற்தளத்தில் நூற்றுக்கணக்கானவர்கள் நடந்து சென்ற சத்தம் அவர்களின் காதுகளைத் துளைத்துக் கொண்டிருந்தது. ஆசிரியர்களின் அறைக் கதவு விரியத் திறந்தது. அவ்வறைக்குள் ஆசிரியர்கள் ஒவ்வொருவராக வந்து கொண்டிருந்ததை அவர்கள் அந்த அலமாரியினுள் இருந்து பார்த்துக் கொண்டிருந்தனர். அதில் சிலரின் முகத்தில் வியப்புக் குறி குடி கொண்டிருந்தது. மற்றவர்கள் மிகவும் பயந்து போய் இருந்தனர். பின் பேராசிரியர் மெக்கானகல் வந்து சேர்ந்தார்.

பேராசிரியர் மெக்கானகல், அமைதியாக இருந்த அந்த ஆசிரியர்களிடம், "அது நடந்துவிட்டது," என்று கூறினார். "அந்த ராட்சஸ விலங்கு ஒரு மாணவியைப் பாதாள அறைக்கே எடுத்துச் சென்றுவிட்டது."

பேராசிரியர் ஃபிளிட்விக் கீச்சென்று சத்தமாகக் கத்தினார். பேராசிரியர் ஸ்புரவுட் தன் கைகளைக் கொண்டு தன் வாயைப் பொத்திக் கொண்டார். ஸ்னேப் ஒரு நாற்காலியின் பின்புறத்தை இறுக்கமாகப் பற்றிக் கொண்டு, "நீங்கள் எப்படி இவ்வளவு உறுதியாகக் கூறுகிறீர்கள்?" என்று கேட்டார்.

"ஸ்லிதரினின் வாரிசு இன்னொரு தகவலை வெளியிட்டிருக்கிறான்," என்று பேராசிரியர் மெக்கானகல் கூறினார். அவரது முகம் வெளுத்துப் போயிருந்தது. "முதல் தகவலுக்குக் கீழேயே அது எழுதப்பட்டுள்ளது. **அவளுடைய எலும்புக்கூடு என்றென்றும் பாதாள அறையிலேயே இருக்கும்.**"

பேராசிரியர் ஃபிளிட்விக்கின் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வடிந்தது.

தனது கால்கள் குழலாட ஒரு நாற்காலியில் புதைந்து கொண்ட மேடம் ஹூச், "அது யார்?" என்று கேட்டார். "எந்த மாணவி?"

"ஜின்னி!" என்று பேராசிரியர் மெக்கானகல் கூறினார்.

ரான் மௌனமாக அந்த அலமாரியின் அடிப்பாகத்தில் சரிந்ததை ஹாரி உணர்ந்தான்.

"நாம் நாளை எல்லா மாணவர்களையும் வீட்டிற்குத் திருப்பி அனுப்ப வேண்டும்," என்று பேராசிரியர் மெக்கானகல் கூறினார். "இதோடு ஹாக்வார்ட்ஸ் இழுத்து மூடப்பட்டுவிடும். டம்பிள்டோர் எப்போதுமே கூறி வந்துள்ளார் . . ."

ஆசிரியர்களின் அறை மறுபடியும் டமாலென்று திறந்தது. அது டம்பிள்டோராகத்தான் இருக்க வேண்டும் என்று ஹாரி ஒரு கணம் நினைத்தான். ஆனால் நுழைந்தது லாக்ஹார்ட். அவர் பெரிதாகப் புன்னகை புரிந்து கொண்டிருந்தார்.

Scanned by CamScanner

"மன்னிக்கவும் – நான் தூங்கிவிட்டேன் – நீங்கள் இதுவரை என்ன கூறியிருந்தீர்கள்?"

மற்ற ஆசிரியர்கள் அவரை வெறுப்புடன் பார்த்துக் கொண்டிருந்ததை அவர் கவனித்த மாதிரித் தெரியவில்லை. ஸ்னேப் முன்னால் வந்தார்.

"லாக்ஹார்ட், இந்த நேரத்தில் எங்களுக்குத் தேவையான ஆள் நீங்கள்தான்! மிகச் சரியான ஆள்! அந்த ராட்சஸ விலங்கு ஒரு மாணவியைப் பாதாள அறைக்கே எடுத்துச் சென்றுவிட்டது. இறுதியில் உங்களுக்கான வேளை வந்துவிட்டது."

லாக்ஹார்ட்டின் முகத்தில் இருந்த ரத்தமெல்லாம் வற்றிப் போனது.

"லாக்ஹார்ட், ஸ்னேப் கூறுவது சரிதான்," என்று பேராசிரியர் ஸ்புரவுட் உள்ளே புகுந்தார். "நேற்று இரவுகூட, ரகசியங்கள் அடங்கிய பாதாள அறையின் வாசல் எங்கிருக்கிறது என்று உங்களுக்குத் தெரியும் என்று நீங்கள் கூறிக் கொண்டிருந்தீர்கள், இல்லையா?"

"நான் – வந்து – நான் –" என்று லாக்ஹார்ட் தடுமாறினார்.

"ஆமாம், பாதாள அறைக்கு உள்ளே என்ன இருந்தது என்று உங்களுக்கு உறுதியாகத் தெரியும் என்று நீங்கள் என்னிடம் கூறவில்லை?" என்று பேராசிரியர் ஃபிளிட்விக்கும் கச்சேரியில் சேர்ந்து கொண்டார்.

"நானா சொன்னேன்? எப்போது? எனக்கு நினைவே இல்லையே? . . ."

"'ஹாக்ரிட் கைது செய்யப்படுவதற்கு முன்பே அந்த ராட்சஸ விலங்கை நான் அடக்கியிருக்க வேண்டும்,' என்று நீங்கள் கூறியது எனக்கு நன்றாகவே நினைவிருக்கிறது," என்று ஸ்னேப் கூறினார். "இந்த விவகாரம் ஒட்டுமொத்தமாக ஒழுங்காகக் கையாளப்பட்டிருக்கவில்லை என்றும், முதலிலிருந்தே உங்களுக்கு முழுச் சுதந்திரம் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் நீங்கள் என்னிடம் கூறினீர்கள், இல்லையா?"

இறுகிப் போன முகத்தோடு இருந்த தன்னுடைய சக ஆசிரியர்களை லாக்ஹார்ட் உற்றுப் பார்த்தார்.

"நான் . . . நான் ஒருபோதும் . . . அப்படிச் சொல்லவில்லை . . . நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டுள்ளீர்கள் . . ."

"லாக்ஹார்ட், அப்படியானால், அதை எப்படிச் செய்வது என்பதை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்," என்று பேராசிரியர் மெக்கானகல் கூறினார். "அதைச் செய்வதற்கு இன்று இரவு ஏற்ற நேரம். எவரும் உங்கள் வழியில் குறுக்கிடாமல் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். அந்த ராட்சஸ விலங்கை நீங்கள் தனியாகவே சமாளித்துக் கொள்ளலாம். நீங்கள் விரும்பிய முழுச் சுதந்திரம் கடைசியில் உங்களுக்குக் கிடைத்துள்ளது."

லாக்ஹார்ட் பரிதவிப்புடன் சுற்றுமுற்றும் பார்த்தார். ஆனால் எவரும் அவரைக் காப்பாற்ற முன்வரவில்லை. அவருடைய அழகான

Scanned by CamScanner

தோற்றம் திடீரென்று காணாமல் போய்விட்டிருந்தது. அவரது உதடுகளில் நடுக்கம் குடியேறியிருந்தது. பற்கள் வெளியே தெரியும்படி சிரிக்கும் அவரது வழக்கமான புன்னகை இல்லாமல் அவர் கோழையாகவும் பலவீனமானவராகவும் தெரிந்தார்.

"அப்படியானால் சரி," என்று கூறினார். "என்னைத் தயார்படுத்திக் கொள்வதற்காக நான் என் அலுவலகத்திற்குச் செல்கிறேன்!"

அத்துடன் அவர் அந்த அறையைவிட்டு வெளியேறினார்.

"சரி," என்று பேராசிரியர் மெக்கானகல் கூறினார். அவரது மூக்குச் சிவந்திருந்தது. "இப்போது நாம் அவரை நம்மிடமிருந்து கழற்றி விட்டுவிட்டோம். அணிகளுக்குத் தலைமை வகிக்கும் ஆசிரியர்கள் மாணவர்களிடம் சென்று நடந்த விஷயத்தைக் கூறுங்கள். நாளை காலையில் முதல் வேலையாக ஹாக்வார்ட்ஸ் எக்ஸ்பிரஸ் அவர்கள் அனைவரையும் வீட்டிற்கு அழைத்துச் செல்லும் என்று கூறுங்கள். மற்ற ஆசிரியர்கள் எந்தவொரு மாணவனும் பொது அறைக்கு வெளியே இல்லாமல் இருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்."

பிறகு ஆசிரியர்கள் அனைவரும் எழுந்து ஒருவர் பின் ஒருவராக வெளியேறினர்.

* * *

அதுதான் ஹாரியின் வாழ்க்கையிலேயே மிக மோசமான நாளாக இருந்திருக்க வேண்டும். அவனும், ரான், ஃபிரெட், ஜார்ஜ் ஆகியோரும் ஒருவரிடம் மற்றொருவர் என்ன சொல்லிக் கொள்வது என்று தெரியாமல் அந்தப் பொது அறையின் மூலையில் ஒன்றாக அமர்ந்திருந்தனர். பெர்சி அங்கு இருக்கவில்லை. அவன் ஆர்தர் வீஸ்லீக்கு ஓர் ஆந்தையை அனுப்புவதற்காகச் சென்றிருந்தான். பின் அவன் தனது பொதுப் படுக்கையறையினுள் சென்று அடைந்து கொண்டான்.

அன்றைய மதிய வேளையைப்போல வேறு எந்த மதிய வேளையும் அவ்வளவு அதிக நேரம் நீடித்ததில்லை. அதேபோல, கிரிஃபின்டார் பொது அறையில் இவ்வளவு கூட்டம் இருந்தும்கூட, அது இவ்வளவு அமைதியாக இருந்தது அதுதான் முதன்முறை. அந்தி நெருங்கியபோது, மேலும் உட்கார்ந்திருக்கப் பிடிக்காமல், ஃபிரெட்டும் ஜார்ஜும் தங்களது படுக்கைக்குப் போய்விட்டனர்.

"ஹாரி, அவளுக்கு ஏதோ விஷயம் தெரிந்திருக்கிறது," என்று ரான் கூறினான். அவர்கள் அந்த அலமாரிக்குள் சென்றதிலிருந்து அவன் பேசிய முதல் வார்த்தை அதுதான். "அதனால்தான் அவள் பாதாள அறைக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறாள். அது பெர்சி குறித்த ஏதோ உருப்படாத விஷயம் அல்ல. ரகசியங்கள் அடங்கிய பாதாள அறை குறித்த எதையோ அவள் கண்டுபிடித்திருக்கிறாள். அதனால்தான் அவள் –" ரான் தன் கண்களை வேகமாகத் துடைத்துக் கொண்டான். "அவள் தூய ரத்தப் பிறவி. எனவே, அவள் பாதாள அறைக்குள் கொண்டு செல்லப்பட்டுள்ளதற்கு வேறு எந்தக் காரணமும் இருக்க வழியில்லை."

Scanned by CamScanner

வெளியே அந்திச் சூரியன் ரத்த நிறத்தில் வேகமாகச் சரிந்து கொண்டிருந்ததை ஹாரி பார்த்தான். அவன் இவ்வளவு மோசமாக இதுவரை உணர்ந்ததில்லை. அவர்களால் எதையாவது செய்ய முடிந்தால்? அது எதுவாக இருந்தாலும் பரவாயில்லை!

"ஹாரி," என்று ரான் அழைத்தான். "அவளுக்கு – அவளுக்கு – ஏதாவது வாய்ப்பிருக்கிறது என்று நீ நினைக்கிறாயா? நான் என்ன சொல்ல வருகிறேன் என்று உனக்குத் தெரிகிறதா?"

அவனுக்கு என்ன பதில் சொல்வதென்று ஹாரிக்குத் தெரியவில்லை. ஜின்னி இன்னும் எப்படி உயிரோடு இருக்கக்கூடும் என்று அவனுக்குத் தெரியவில்லை.

"ஹாரி, எனக்கு ஒன்று தோன்றுகிறது," என்று ரான் கூறினான். "நாம் போய் லாக்ஹார்ட்டைப் பார்க்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். நமக்குத் தெரிந்ததையெல்லாம் அவரிடம் சொல்லிவிடலாம். அவர் எப்படியும் பாதாள அறைக்குச் செல்ல முயற்சிப்பார். நாம் அது எங்கே இருக்கிறது என்று நினைத்துள்ளோம் என்பதை அவரிடம் கூறிவிடலாம். அங்கு இருப்பது ஒரு ராஜ ஸர்ப்பம் என்பதையும் அவருக்குத் தெரியப்படுத்திவிடலாம்."

ஹாரிக்கு வேறு என்ன செய்வது என்பது தெரியாமல் இருந்ததாலும், அவன் எதையாவது செய்ய விரும்பியதாலும், அவன் அதற்கு ஒப்புக் கொண்டான். அவர்களைச் சுற்றி இருந்த கிரிஃபின்டார் அணியினர் மிகவும் பரிதாபமாக இருந்தனர். அவர்கள் வீஸ்லீ சகோதரர்கள்மீது பச்சாதாபம் கொண்டிருந்ததால், ரானும் ஹாரியும் எழுந்து சென்று அந்த ஓவியத் துவாரம் வழியாக வெளியேறியபோது எவரும் அவர்களைத் தடுக்கவில்லை.

அவர்கள் லாக்ஹார்ட்டின் அலுவலகத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தபோது, இருள் கவியத் தொடங்கியிருந்தது. அந்த அலுவலகத்திற்கு உள்ளே ஏகப்பட்ட நடவடிக்கைகள் நடந்து கொண்டிருந்ததுபோல இருந்தது. ஏதோ இழுபட்டச் சத்தமும், எதுவோ தூக்கிப் போடப்பட்டச் சத்தமும், வேகமாக அங்குமிங்கும் நடந்த காலடிச் சத்தமும் கேட்டன.

ஹாரி அந்த அலுவலகத்தின் கதவைத் தட்டினான். உடனே டக்கென்று அமைதி நிலவியது. பின் கதவு மிக மிகச் சிறியதாகத் திறந்தது. அதன் வழியாக லாக்ஹார்ட்டின் ஒரே ஒரு கண் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தது.

லாக்ஹார்ட், கதவை முன்பிருந்ததைவிடச் சிறிதளவு அதிகமாகத் திறந்தவாறு, "ஓ, ஹாரியும் ரானுமா?" என்று கூறினார். "நான் இப்போது ஒரு வேலையில் மும்முரமாக இருக்கிறேன். நீங்கள் வந்த காரியத்தை வேகமாகக் கூறினால் . . . "

"பேராசிரியரே, எங்களிடம் சில தகவல்கள் இருக்கின்றன," என்று ஹாரி கூறினான். "அது உங்களுக்கு உதவக்கூடும் என்று நாங்கள் நினைக்கிறோம்."

Scanned by CamScanner

"ம்ம் – நான் அப்படி நினைக்கவில்லை –" என்று அவர் தடுமாறினார். தங்கள் பார்வைக்குத் தென்பட்ட லாக்ஹார்ட்டின் முகம் சற்று அசௌகரியமாக இருந்ததாக அவர்களுக்குத் தோன்றியது.

"சரி, பரவாயில்லை. உள்ளே வாருங்கள்!"

பிறகு அவர் தன் அறைக் கதவைத் திறந்தார். ஹாரியும் ரானும் உள்ளே நுழைந்தனர்.

அந்த அலுவலகம் சுத்தமாகத் துடைக்கப்பட்டிருந்தது. இரண்டு பெரிய டிரங்குப் பெட்டிகள் திறந்த நிலையில் தரையில் கிடந்தன. பல்வேறு நிறங்களில் இருந்த அவரது அங்கிகள் அவசரக் கோலத்தில் மடிக்கப்பட்டு ஒரு பெட்டியில் வைக்கப்பட்டிருந்தன. இன்னொரு பெட்டியில் புத்தகங்கள் தாறுமாறாகப் போடப்பட்டிருந்தன. சுவர்களை அலங்கரித்துக் கொண்டிருந்த புகைப்படங்கள் மேசைமீது இருந்த ஒரு பெட்டிக்குள் திணிக்கப்பட்டிருந்தன.

"நீங்கள் எங்கேயாவது கிளம்பிக் கொண்டிருக்கிறீர்களா?" என்று ஹாரி கேட்டான்.

"ம்ம் – ஆமாம்," என்று லாக்ஹார்ட் கூறினார். அவர் பேசிக் கொண்டே, கதவின் பின்புறம் ஒட்டப்பட்டிருந்த, ஆளுயரத்திற்கு இருந்த தனது புகைப்படத்தை எடுத்துச் சுருட்டி மடக்கிக் கொண்டிருந்தார். "திடீர் அழைப்பு . . . தவிர்க்க முடியவில்லை . . . போயே ஆக வேண்டும் . . ."

ரான் அதிர்ந்து போய், "அப்படியானால் என் தங்கை?" என்று கேட்டான்.

"அது வந்து . . . மிகவும் துரதிர்ஷ்டவசமானது," என்று லாக்ஹார்ட் கூறினார். அவர்களுடைய கண்களை நேருக்கு நேராகப் பார்ப்பதைத் தவிர்த்தவாறே, தன்னுடைய மேசையின் இழுப்பறை ஒன்றை வெளியே இழுத்து அதிலிருந்தவற்றை எல்லாம் அவர் ஒரு பையில் கொட்டிக் கொண்டிருந்தார். "உன் தங்கைக்காக என்னைப்போல் யாரும் வருத்தப்பட்டிருக்க மாட்டார்கள் –"

"நீங்கள்தான் தீய மந்திர சக்திகளுக்கு எதிரான பாதுகாப்பு ஆசிரியர்!" என்று ஹாரி கூறினான். "நீங்கள் இப்போது போகக்கூடாது. குறிப்பாக, இப்போது இங்கு நடந்து கொண்டிருக்கும் தீய நிகழ்வுகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளும்போது, நீங்கள் இங்கிருந்து போகவே கூடாது!"

"நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால்," என்று லாக்ஹார்ட் ஆரம்பித்தார். தன்னுடைய காலுறைகளை அங்கிகளின் மேல் அடுக்கியவாறு, "நான் இந்த வேலையை ஏற்றுக் கொண்டபோது, வேலை விபரங்களில் . . . நான் இதை எதிர்பார்க்கவில்லை . . ."

"நீங்கள் ஓடிப் போகப் போகிறீர்களா?" என்று ஹாரி நம்ப முடியாமல் கேட்டான். "நீங்கள் உங்கள் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ள அவ்வளவு விஷயங்களையும் செய்த பிறகுமா ஓடிப் போகப் போகிறீர்கள்?"

Scanned by CamScanner

"புத்தகங்கள் சமயங்களில் நம்மை ஏமாற்றக்கூடும்," என்று அவர் பட்டும் படாமலும் கூறினார்.

"நீங்கள்தானே அவற்றை எழுதினீர்கள்?"

லாக்ஹார்ட் தன்னை நிமிர்த்திக் கொண்டு, ஹாரியை நோக்கித் தன் நெற்றியைச் சுருக்கியவாறு, "இதோ பார், ஹாரி. நீ உன் புத்தியைக் கொஞ்சம் உபயோகப்படுத்து," என்று கூறினார். "என் புத்தகங்களில் கூறப்பட்டிருப்பவை எல்லாவற்றையும் நான்தான் செய்தேன் என்று மக்கள் நம்பியிருக்காவிட்டால், என் புத்தகம் இப்போது விற்றுள்ளதில் பாதி அளவுகூட விற்றிருக்காது. ஒரு பழைய அவலட்சணமான அர்மீனிய நாட்டு மந்திரவாதியைப் பற்றிப் படிக்க யாருக்குமே விருப்பம் கிடையாது – ஓநாய்மனிதர்களிடமிருந்து ஒரு கிராமத்தை அவர் உண்மையிலேயே காப்பாற்றி இருந்தும்கூட! புத்தகத்தின் முகப்பு அட்டையில் அவர் பரிதாபமாகக் காட்சியளிப்பார். அவருக்கு உடையலங்கார அறிவு துளிகூடக் கிடையாது. அதேபோல, பான்டன் பன்ஷி மோகினிப் பிசாசை ஒழித்துக் கட்டிய அந்த மந்திரவாதினிக்குத் தாடியும் மீசையும் இருந்தன . . . "

"அப்படியானால், ஏகப்பட்டப் பேர் செய்துள்ள விஷயங்களை நீங்களே செய்துள்ளதாக நீங்கள் பெருமையடித்துக் கொண்டுள்ளீர்கள், அப்படித்தானே?" என்று ஹாரி நம்ப முடியாதவனாகக் கேட்டான்.

லாக்ஹார்ட் தன் தலையைப் பொறுமையின்றி அசைத்தவாறே, "ஹாரி, ஹாரி," என்று கூறினார். "இதில் குழப்பத்திற்கே இடமில்லை. இதில் நிறைய வேலை இருக்கிறது. நான் இப்படிப்பட்ட மக்களைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். பிறகு, தாங்கள் அவற்றைச் சாதித்த விதத்தை விலாவாரியாக விளக்க அவர்களை நான் ஒப்புக் கொள்ளச் செய்ய வேண்டும். அதன் பிறகு, அவர்கள் அதை ஞாபகம் வைத்துக் கொள்ளாதவாறு அவர்கள்மீது ஞாபகமறதி மந்திரத்தைப் பிரயோகிக்க வேண்டும். ஹாரி, இதில் நிறைய வேலை இருக்கிறது. இது வெறும் புத்தக வெளியீட்டு விழாக்களில் கையெழுத்துப் போட்டுக் கொடுக்கும் விஷயமோ அல்லது விளம்பரப் புகைப்படங்களை வெளியிடுவதோ மட்டும் அல்ல. உனக்குப் புகழ் வேண்டும் என்றால் நீண்ட நாட்கள் மாடாகத் தேய நீ தயாராக இருக்க வேண்டும்."

அவர் தன் டிரங்குப் பெட்டிகளை மூடிவிட்டு அவற்றைப் பூட்டினார்.

"மொத்தம் அவ்வளவுதான் என்று நினைக்கிறேன். இல்லையில்லை, ஒரே ஒரு விஷயம் மட்டும் பாக்கியிருக்கிறது," என்று அவர் கூறினார்.

அவர் தன் மந்திரக்கோலை எடுத்து அவர்களை நோக்கி நீட்டினார்.

"பையன்களா, என்னை மன்னித்துவிடுங்கள். நான் இப்போது உங்கள்மீது ஒரு **ஞாபகமறதி மந்திரத்தை** ஏவ வேண்டியிருக்கிறது. நீங்கள் என்னுடைய ரகசியங்களை எல்லா இடங்களிலும் உளறிக்

Scanned by CamScanner

கொண்டிருப்பதை என்னால் அனுமதிக்க முடியாது. அப்புறம் என்னால் என்னுடைய அடுத்தப் புத்தகத்தை விற்கவே முடியாது . . ."

ஹாரி சரியான நேரத்தில் தன்னுடைய மந்திரக்கோலை எடுத்திருந்தான். லாக்ஹார்ட் தனது மந்திரக்கோலை உயர்த்துவதற்கு முன்பாகவே, அவன் **"எக்ஸ்பெல்லியார்மஸ்!"** என்று முழங்கினான்.

லாக்ஹார்ட் படுவேகமாகப் பின்னால் தூக்கி எறியப்பட்டு அவருடைய டிரங்குப் பெட்டிகளின்மீது விழுந்தார். அவரது மந்திரக்கோல் அவரது கையைவிட்டு உயரமாகப் பறந்தது. ரான் அதைப் பிடித்து, திறந்திருந்த ஒரு சன்னல் வழியாக வேளியே தூக்கி எறிந்தான்.

ஹாரி கோபமாக லாக்ஹார்ட்டின் டிரங்குப் பெட்டியை எட்டி உதைத்து அதை ஓர் ஓரமாகத் தள்ளியவாறே, "இந்த வித்தையைப் பேராசிரியர் ஸ்னேப் எங்களுக்குக் கற்றுக் கொடுக்க நீங்கள் அனுமதித்திருக்கக்கூடாது," என்று கூறினான். லாக்ஹார்ட் ஹாரியையே பார்த்துக் கொண்டிருந்தார். அவர் மறுபடியும் மிகவும் பலவீனமாகத் தெரிந்தார். ஹாரி இன்னும் தன்னுடைய மந்திரக்கோலை அவரை நோக்கி நீட்டிக் கொண்டிருந்தான்.

"நான் இப்போது என்ன செய்ய வேண்டும்?" என்று அவர் பலவீனமாகக் கேட்டார். "ரகசியங்கள் அடங்கிய பாதாள அறை எந்தத் திசையில் இருக்கிறது என்றுகூட எனக்குத் தெரியாது. என்னால் எதுவும் செய்ய முடியாது."

"உங்களுக்கு அதிர்ஷ்டம் அடித்துள்ளது," என்று ஹாரி கூறினான். அவனது கையில் மந்திரக்கோல் இருந்ததால், லாக்ஹார்ட் அவன் சொல்லுக்குக் கட்டுப்பட்டு வலுக்கட்டாயமாக எழுந்து நின்றார். "பாதாள அறை எங்கிருக்கிறது என்று எங்களுக்குத் தெரியும் என்று நாங்கள் நினைக்கிறோம். அதற்கு உள்ளே என்ன இருக்கிறது என்பதும் எங்களுக்குத் தெரியும். வாருங்கள். போகலாம்."

அவர்கள் லாக்ஹார்ட்டை அவரது அலுவலகத்தைவிட்டு வெளியே தள்ளிக் கொண்டு வந்தனர். அருகிலிருந்த படிக்கட்டின் வழியாக இறங்கி, இருண்டு கிடந்தத் தாழ்வாரங்களின் வழியாக நடந்து சென்று, சுவரில் மினுமினுத்துக் கொண்டிருந்த புதிய தகவலைக் கடந்து, முனகல் மர்ட்டிலின் குளியலறையின் கதவை அடைந்தனர்.

அதனுள் அவர்கள் லாக்ஹார்ட்டை முதலில் அனுப்பினர். அவர் நடுங்கிக் கொண்டிருந்ததைப் பார்க்க ஹாரிக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

முனகல் மர்ட்டில் கடைசித் தொட்டியின் அருகே உட்கார்ந்திருந்தது.

அது ஹாரியைப் பார்த்ததும், "ஓ, நீயா?" என்று கேட்டது. "இப்போது எதற்காக வந்தாய்?"

"நீ எப்படி இறந்தாய் என்று கேட்க வந்தேன்," என்று ஹாரி கூறினான்.

Scanned by CamScanner

உடனடியாக மர்ட்டிலின் மொத்த அம்சமும் மாறியது. அது போன்ற முகஸ்துதியான ஒரு கேள்வியை இதற்கு முன்பு வேறு யாரும் அதனிடம் ஒருபோதும் கேட்டிருக்கவில்லை என்பதுபோல அது காணப்பட்டது.

"ஓ! அதுவா? அது மிகவும் பயங்கரமான ஓர் அனுபவமாக இருந்தது," என்று மர்ட்டில் ரசித்துக் கூறியது. "அது இதே இடத்தில்தான் நிகழ்ந்தது. இதே தடுப்பு அறையில்தான் நான் இறந்து போனேன். அது எனக்குத் தெள்ளத் தெளிவாக நினைவிருக்கிறது. நான் போட்டிருந்த மூக்குக்கண்ணாடி குறித்து ஆலிவர் ஹார்ன்பி என்னைக் கிண்டல் செய்ததால், நான் இங்கு வந்து ஒளிந்து கொண்டிருந்தேன். என்னுடைய தடுப்புக் கதவு தாழ்ப்பாள் போடப்பட்டிருந்தது. நான் அழுது கொண்டிருந்தேன். பின் குளியலறைக்கு உள்ளே யாரோ நுழைந்த சத்தம் கேட்டது. அவர்கள் விநோதமாக எதையோ கூறினர். அது வேறு மொழியில் இருந்தது. எனக்கு அப்படித்தான் தோன்றியது. ஆனால் உண்மையில் என்னை ஆச்சரியத்திற்கு உள்ளாக்கிய விஷயம் என்னவென்றால், இங்கு நின்று பேசிக் கொண்டிருந்தது ஒரு மாணவன். மாணவர்களுக்கான குளியலறையை உபயோகித்துக் கொள்ளுமாறு அவனிடம் கூறுவதற்காக என்னுடைய தடுப்பு அறையின் தாழ்ப்பாளைத் திறந்து கொண்டு நான் வெளியே வந்தேன். அப்புறம் –" மர்ட்டிலின் முகம் தன்னை முக்கியப்படுத்திக் கொள்ளும் விதத்தில் வீங்கியது. பிறகு அதன் முகம் பிரகாசமடைந்தது. **"நான் இறந்து போனேன்."**

"எப்படி?" என்று ஹாரி கேட்டான்.

"எனக்குத் தெரியாது," என்று மர்ட்டில் கிசுகிசுப்பான குரலில் கூறியது. "மஞ்சள் நிறத்தில் இருந்த பிரம்மாண்டமான ஒரு ஜோடிக் கண்களை நான் பார்த்தது எனக்கு நினைவிருக்கிறது. என்னுடைய மொத்த உடலும் ஸ்தம்பித்துவிட்டது. அப்புறம் நான் அங்கிருந்து மிதக்கத் துவங்கினேன் . . ." அது ஹாரியைக் கனவு மயக்கத்தோடு பார்த்தது. "அப்புறம் நான் மீண்டும் இங்கு வந்துவிட்டேன். நான் ஆலிவர் ஹார்ன்பியைப் பயமுறுத்துவது என்று தீர்மானமாக இருந்தேன். ஓ, என் மூக்குக்கண்ணாடி பற்றிக் கிண்டல் செய்தது குறித்து அவள் வருத்தப்பட்டாள்."

"அந்தக் கண்களைத் துல்லியமாக எங்கு நீ பார்த்தாய்?" என்று ஹாரி கேட்டான்.

மர்ட்டில், தன் தடுப்பு அறையிலிருந்த தண்ணீர்த் தொட்டியைச் சுட்டிக்காட்டியவாறு, "அங்கே எங்கேயோ," என்று கூறியது.

ஹாரியும் ரானும் வேகமாக அங்கே ஓடினர். லாக்ஹார்ட் நன்றாகவே பின்னால் தள்ளி நின்று கொண்டார். அவரது முகத்தில் பீதி தாண்டவமாடிக் கொண்டிருந்தது.

அது மற்ற பிற தண்ணீர்த் தொட்டிகளைப்போலவே இருந்தது. அவர்கள் அதன் உட்புறம் மற்றும் வெளிப்புறத்தின் ஒவ்வோர்

Scanned by CamScanner

அங்குலத்தையும் பரிசோதித்தனர். அதன் கீழே இருந்த குழாயையும் அவர்கள் விட்டுவைக்கவில்லை. திடீரென்று ஹாரி அதைப் பார்த்தான். அங்கிருந்த செப்புக் குழாய்களில் ஒன்றின் ஒரு பக்கத்தில் மிகச் சிறிய பாம்பின் உருவம் ஒன்று சுரண்டி வரையப்பட்டிருந்தது.

ஹாரி அதைத் திருப்ப முனைந்தபோது, மர்ட்டில், "அந்தக் குழாய் ஒருபோதும் வேலை செய்ததே இல்லை," என்று கூறியது.

"ஹாரி," என்று ரான் அழைத்தான். "எதையாவது சொல்லு, எதையாவது ஸர்ப்ப பாஷையில் கூறு!"

"ஆனால் –" ஹாரி தீவிரமாக யோசித்தான். அவன் ஸர்ப்ப பாஷையில் பேசியிருந்த சமயங்களில் எல்லாம், அவன் நிஜப் பாம்புடன் மட்டுமே பேசியிருந்தான். அவன் அந்தப் பாம்பின் உருவம் உண்மையிலேயே ஒரு நிஜமான பாம்பு என்பதுபோலக் கற்பனை செய்து கொண்டு அதையே தீவிரமாக உற்றுப் பார்த்தான்.

"திற," என்று கூறினான்.

பின் அவன் ரானைத் திரும்பிப் பார்த்தான். அவன் இல்லையென்பதுபோலத் தலையை அசைத்தான்.

"நீ பேசியது நம்முடைய மொழி!" என்று ரான் கூறினான்.

ஹாரி மீண்டும் அந்தப் பாம்பு உருவத்தையே பார்த்தான். அது உயிரோடு இருந்ததாக நம்புவதற்கு அவன் தன்னைத் தயார்படுத்திக் கொண்டான். அவன் தன் தலையை அசைத்தபோது, மெழுகுவர்த்தி வெளிச்சம், அந்தக் குழாயின்மீது சுரண்டப்பட்டிருந்த பாம்பு நகர்ந்ததுபோலத் தோன்றச் செய்தது.

"திற!" என்று கூறினான்.

ஆனால் அவனது காதுகளில் விழுந்தது அந்த வார்த்தை அல்ல. ஒரு வினோதமான 'ஸ்ஸ்ஸ்' என்ற சீற்றொலி அவனிடமிருந்து வெளிப்பட்டது. உடனடியாக அந்தக் குழாய் பிரகாசமான வெள்ளை ஒளியில் மின்னியது. பிறகு அது சுற்றத் துவங்கியது. அடுத்தக் கணம், அந்தத் தண்ணீர்த் தொட்டி நகரத் துவங்கியது. உண்மையில் அது பார்வையிலிருந்து முழுவதுமாக மறைந்து போனது. அதற்கு பதிலாக அங்கு ஒரு பெரிய குழாய் இருந்தது. ஒரு சராசரி நபர் சுலபமாக உள்ளே நுழையக்கூடிய அளவுக்கு அது பெரிதாக இருந்தது.

ரான் வியப்பில் வாயைப் பிளந்தான். ஹாரி மீண்டும் அதைப் பார்த்தான். தான் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து ஒரு திட்டவட்டமான முடிவுக்கு அவன் வந்திருந்தான்.

"நான் இதன் வழியாகக் கீழே போகப் போகிறேன்," என்று அவன் கூறினான்.

பாதாள அறைக்குச் செல்வதற்கான வழியை அவர்கள் இப்போது கண்டுபிடித்திருந்ததால், ஜின்னி உயிருடன் இருப்பதற்கான மிகச் சிறிய, மிகவும் அபூர்வமான, மிக மங்கலான ஒரு வாய்ப்பு இருந்தால்கூட அதைத் தவறவிட ஹாரி விரும்பவில்லை.

"நானும் வருகிறேன்," என்று ரான் கூறினான்.

ஒரு கண நேரம் அங்கு அமைதி நிலவியது.

Scanned by CamScanner

"என் தேவை உங்களுக்குத் துளிகூட இருப்பதாக எனக்குத் தெரியவில்லை," என்று லாக்ஹார்ட் கூறினார். அவரது உதடுகளில் பழைய புன்னகையின் பலவீனமாக சாயல் தெரிந்தது. "அதனால், நான் –"

அவர் தன்னுடைய கையை அக்குளியலறையின் கதவின் பிடியில் வைத்தார். ஹாரியும் ரானும் ஒரே நேரத்தில் தங்களுடைய மந்திரக்கோல்களை அவரை நோக்கி நீட்டினர்.

"நீங்கள் முதலில் குழாயினுள் இறங்குங்கள்," என்று ரான் உறுமினான்.

மந்திரக்கோலற்றுச் சவக்களையுடன் இருந்த லாக்ஹார்ட் அந்தக் குழாயை அணுகினார்.

"பையன்களா," என்று அவர் அழைத்தார். அவரது குரல் பலவீனமாக ஒலித்தது. "இதனால் என்ன பிரயோஜனம்?"

ஹாரி தன்னுடைய மந்திரக்கோலால் அவரது பின்புறத்தில் குத்தினான். லாக்ஹார்ட் தன்னுடைய காலை அக்குழாய்க்குள் விட்டார்.

"இது உண்மையிலேயே தேவையா –" என்று அவர் சொல்லத் துவங்கினார். அதற்குள் ரான் அவரைப் பிடித்து அக்குழாயினுள் தள்ளினான். அவர் சறுக்கிக் கொண்டு பார்வையிலிருந்து மறைந்தார். ஹாரியும் உடனடியாக அவரைப் பின்தொடர்ந்து அக்குழாய்க்குள் மெதுவாக இறங்கினான். பின் தன் பிடியை விட்டான்.

முடிவேயில்லாத, இருண்ட, கொழகொழவென்று இருந்த ஒரு சறுக்கில் சறுக்கிச் செல்வதுபோல அது இருந்தது. எல்லாத் திசைகளிலும் பல குழாய்கள் அதிலிருந்து கிளைவிட்டுச் சென்றதை ஹாரியால் பார்க்க முடிந்தது. ஆனால் எந்தக் குழாயும் இவ்வளவு பெரிதாக இருக்கவில்லை. அது வளைந்து நெளிந்து கீழ்நோக்கிச் செங்குத்தாகச் சென்றது. பள்ளிக்கு அடியில், பள்ளியின் நிலவறைகளுக்கு வெகுகீழே தாங்கள் விழுந்து கொண்டிருந்தோம் என்பதை அவனால் உணர முடிந்தது. அவனுக்குப் பின்னால் வந்த ரான், மூலைகளில் லேசாக இடிபட்டுக் கொண்டும் சறுக்கிக் கொண்டும் வந்து கொண்டிருந்தான்.

தரையை அடைந்த பிறகு என்ன நடக்கும் என்று ஹாரி கவலைப்படத் துவங்கிய கணத்தில் அவன் நிலத்தைத் தொட்டான். குழாய் நிலத்தோடு நிலமாக முடிந்திருந்தது. அவன் அதன் முனையிலிருந்து வெளிவந்து ஓர் இருண்ட சுரங்கப் பாதையின் ஈரத் தரையில் போய்த் 'தொப்' என்று விழுந்தான். அது ஒரு நபர் நிமிர்ந்து நிற்கும் அளவுக்கு உயரமாக இருந்தது. அவனுக்குக் கொஞ்சம் முன்னால் தள்ளி, லாக்ஹார்ட் தட்டுத் தடுமாறி எழுந்து கொண்டிருந்தார். அவரது உடம்பெல்லாம் பிசுபிசுப்பாக இருந்தது. அவரது முகம் பேயறைந்தாற்போல இருந்தது. ரான் விர்ரென்று அந்தக் குழாயின் முனையிலிருந்து வெளிப்பட்டபோது ஹாரி கொஞ்சம் தள்ளி நின்று கொண்டான்.

Scanned by CamScanner

"நாம் பள்ளிக்குப் பல மைல்கள் கீழே இருக்கிறோம் என்று நினைக்கிறேன்," என்று ஹாரி கூறினான். அவனது குரல் அந்த இருண்ட சுரங்கப் பாதையில் எதிரொலித்தது.

ரான் தங்களைச் சுற்றிலும் இருந்த பிசுபிசுப்பான இருண்ட சுவர்களைத் தனது கண்களைச் சுருக்கி உற்றுப் பார்த்தபடி, "ஒருவேளை ஏரிக்கு கீழே இருக்கலாம்," என்று கூறினான்.

அவர்கள் மூவரும் தங்களுக்கு முன்னால் இருந்த இருட்டை வெறித்துக் கொண்டிருந்தனர்.

ஹாரி தன்னுடைய மந்திரக்கோலிடம், **"லூமோஸ்!"** என்று முணுமுணுத்தான். அது மீண்டும் ஒளிவிடத் துவங்கியது. "வாருங்கள், போகலாம்," என்று அவன் ரானிடமும் லாக்ஹார்ட்டிடமும் கூறினான். அவர்கள் நடக்கத் துவங்கினர். அந்த ஈரத் தரையில் அவர்களுடைய காலடி ஓசை சத்தமாகக் கேட்டது.

அந்தச் சுரங்கம் கும்மிருட்டாக இருந்ததால், ஒருசில அடிகள் தூரமே அவர்களால் பார்க்க முடிந்தது. மந்திரக்கோலின் விளக்கு வெளிச்சத்தில் அவர்களுடைய நிழல்களே அவர்களை அச்சுறுத்துவதுபோல இருந்தன.

அவர்கள் எச்சரிக்கையுடன் முன்னோக்கி நடந்து கொண்டிருந்தபோது, ஹாரி, "இதைக் கவனமாக ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்," என்று அமைதியாகக் கூறினான். "ஏதாவது அசைந்தால் உடனடியாகக் கண்களை இறுக்கமாக மூடிக் கொள்ளுங்கள்."

ஆனால் அந்தச் சுரங்கத்தில் மயான அமைதி நிலவியது. அவர்கள் கேட்ட முதல் எதிர்பாராத சத்தம், ரான் எதையோ மிதித்தபோது ஏற்பட்டது. கடைசியில் அது ஓர் எலியின் மண்டை ஓடு என்பது தெரிய வந்தது. ஹாரி தன் மந்திரக்கோலைத் தரைக்கு அருகில் கொண்டு சென்று பார்த்தபோது தரையெங்கும் சிறிய விலங்கெலும்புகள் சிதறிக் கிடந்தது தெரிய வந்தது. தாங்கள் ஜின்னியைக் கண்டுபிடித்தால், அவள் எப்படிக் காட்சியளிப்பாள் என்று கற்பனை செய்யாமலிருக்க ஹாரி கடினமாக முயன்று கொண்டே முன்னே நடந்து கொண்டிருந்தான். அவர்களுக்கு முன்னால் சுரங்கத்தில் ஒரு திருப்பம் இருந்தது.

ரான் ஹாரியின் தோளைப் பற்றியவாறு, "ஹாரி, அங்கே ஏதோ இருக்கிறது . . ." என்று கரகரப்பான குரலில் கூறினான்.

அவர்கள் உறைந்து போய் அதைப் பார்த்துக் கொண்டு நின்றனர். மிகப் பெரிதாகவும் வளைந்து சுருண்டும் இருந்த ஏதோ ஒன்று சுரங்கப் பாதையின் குறுக்காகப் படுத்திருந்தது. அது அசையவே இல்லை.

"அது ஒருவேளை தூங்கிக் கொண்டிருக்கலாம்," என்று கூறி ஹாரி பெருமூச்சு விட்டான். அவன் பின்னால் திரும்பி மற்ற இருவரையும் பார்த்தான். லாக்ஹார்ட்டின் கைகள் அவரது கண்களின் மேல் இருந்தன. ஹாரி தன் பார்வையைத் திருப்பி அதை மீண்டும்

Scanned by CamScanner

பார்த்தான். அவனுடைய இதயம் அவனது தொண்டைக்குள் அடித்துக் கொண்டிருந்தது.

ஹாரி தன்னுடைய கண்களை எவ்வளவு சிறியதாகச் சுருக்கிக் கொள்ள முடியுமோ அவ்வளவு சிறியதாகச் சுருக்கிக் கொண்டு, உயர்த்திய மந்திரக்கோலுடன் அதை நோக்கி மிக மெதுவாக முன்னேறினான்.

அவனது மந்திரக்கோலின் வெளிச்சம் ஒரு மாபெரும் பாம்புச்சட்டையின்மீது பட்டுத் தெறித்தது. அது பச்சை நிறத்தில் இருந்தது. அது அந்தச் சுரங்கத்தின் தரையில் சுருண்டு கிடந்தது. கழற்றிப் போடப்பட்டிருந்த அந்தச் சட்டையை வைத்துப் பார்த்தால், அப்பாம்பு, குறைந்தபட்சம் இருபதடி நீளமாவது இருக்கும் என்று தோன்றியது.

"அடக் கடவுளே!" என்று ரான் பலவீனமாகக் கூறினான்.

அவர்களுக்குப் பின்னால் திடீரென்று ஓர் அசைவு ஏற்பட்டது. லாக்ஹார்ட் துவண்டு விழுந்து கிடந்தார்.

ரான் தன்னுடைய மந்திரக்கோலை லாக்ஹார்ட்டை நோக்கி நீட்டியபடி, "எழுந்திருங்கள்!" என்று அதட்டினான்.

லாக்ஹார்ட் எழுந்தார் – பிறகு ரானின்மீது பாய்ந்து அவனைக் கீழே தள்ளினார். ஹாரி முன்னால் பாய்ந்தான். ஆனால் அதற்குள் நேரம் கடந்துவிட்டிருந்தது. லாக்ஹார்ட் மூச்சிரைக்க எழுந்தார். அவரது கையில் ரானின் மந்திரக்கோலும், அவரது முகத்தில் புன்னகையும் இருந்தன.

"பையன்களா, உங்களுடைய சாகசப் பயணம் இதோடு முடிவடைகிறது!" என்று அவர் கூறினார். "நான் இந்தப் பாம்புச்சட்டையிலிருந்து கொஞ்சத்தைப் பள்ளிக்கு எடுத்துச் செல்லப் போகிறேன். அந்த மாணவியைக் காப்பாற்ற எனக்குச் சிறிது தாமதமாகிவிட்டது என்றும், அவளுடைய சிதைந்து போன உடலைப் பார்த்ததும் அநியாயமாக உங்கள் இருவருக்கும் புத்திப் பேதலித்துவிட்டது என்றும் அவர்களிடம் நான் கூறுவேன். உங்களுடைய ஞாபகங்களுக்கு இப்போது விடைகொடுங்கள்!"

ஸ்பெல்லாடேப் கொண்டு ஒட்டப்பட்டிருந்த ரானின் மந்திரக்கோலை எடுத்துத் தன் தலைக்கு மேலே உயர்த்தி, "ஆப்லிவியேட்!" என்று அவர் கத்தினார்.

ஒரு சிறு வெடிகுண்டின் ஆற்றலுடன் அந்த மந்திரக்கோல் வெடித்தது. இடியெனக் கீழே விழுந்து கொண்டிருந்த சுரங்க மேற்கூரையின் இடிபாடுகளில் இருந்து தப்பி, ஹாரி தன் கைகளைத் தலைக்கு மேல் தூக்கிப் பிடித்தவாறு அந்தப் பாம்புச்சட்டையின்மீது வழுக்கி விழுந்து எழுந்து ஓடினான். அடுத்தக் கணம் அவன் தனியாக நின்று கொண்டிருந்தான். உடைந்து விழுந்திருந்த கனமான பாறைகளால் உருவாக்கப்பட்டச் சுவர் ஒன்று அவனுக்கு முன்னால் நின்று கொண்டிருந்தது.

Scanned by CamScanner

"ரான்," என்று அவன் கத்தினான். "உனக்கு ஒன்றும் ஆகவில்லையே?"

"நான் இங்கிருக்கிறேன்," என்று ரானின் குரல் அப்பாறைகளின் இடிபாடுகளின் மறுபுறத்தில் இருந்து மெல்லியதாகக் கேட்டது. "எனக்கு ஒன்றும் ஆகவில்லை. அந்தக் கசவாளிக்குத்தான் நல்ல அடி. மந்திரக்கோலின் வெடிப்பு அவரை நன்றாகவே பதம் பார்த்துவிட்டது."

மிக மெல்லியதாக யாரோ மிதித்தச் சத்தமும், 'ஐயோ!' என்ற பலமான சத்தமும் கேட்டன. ரான் லாக்ஹார்ட்டை அவரது முழங்காலில் எட்டி உதைத்திருக்க வேண்டும் என்று ஹாரிக்குத் தோன்றியது.

"அடுத்து என்ன?" என்று ரான் கேட்டான். அவனது குரலில் ஒரு பரிதவிப்பு இருந்தது. "இந்த இடிபாடுகளைத் தாண்டி எங்களால் வர முடியாது. அதற்கு மாமாங்கம் ஆகும் . . ."

ஹாரி சுரங்கத்தின் மேற்கூரையைப் பார்த்தான். அதில் பெரிதாக விரிசல்கள் தோன்றியிருந்தன. இப்பாறைகள் அளவுக்குப் பெரிய பொருட்கள் எதையும் அவன் தனது மந்திரசக்தியை உபயோகித்து அதுவரை ஒருபோதும் தகர்த்திருக்கவில்லை. அதைப் பரிசோதித்துப் பார்ப்பதற்கு அது சரியான தருணமாக அவனுக்குத் தோன்றவுமில்லை. ஒருவேளை மொத்தச் சுரங்கமுமே சரிந்து விழுந்துவிட்டால்?

மற்றுமோர் உதைச் சத்தமும், இன்னோர் 'ஐயோ!' என்ற முனகலும் கேட்டன. நேரத்தை அவர்கள் வீணாக்கிக் கொண்டிருந்தனர். ஜின்னி இந்தப் பாதாள அறைக்குள் கொண்டு வரப்பட்டு ஏற்கனவே பல மணிநேரம் ஆகியிருந்தது. இப்போது செய்யப்பட வேண்டியது ஒன்றே ஒன்றுதான் என்பதை ஹாரி அறிந்திருந்தான்.

"இங்கு காத்திரு!" என்று அவன் ரானிடம் கூறினான். "லாக்ஹார்ட்டுடன் நீ இங்கேயே காத்திரு. நான் தனியாகப் போகிறேன். நான் ஒரு மணிநேரத்திற்குள் திரும்பி வராவிட்டால் . . ."

அங்கு ஒரு நீண்ட மௌனம் நிலவியது.

"நான் இப்பாறைகளில் ஒருசிலவற்றை நகர்த்த முயல்கிறேன்," என்று ரான் கூறினான். அவன் தன் குரலை ஒரே சீராக வைத்துக் கொள்ளத் தத்தளித்துக் கொண்டிருந்தான். "நீ திரும்பி வரும்போது – இதன் வழியாகப் புகுந்து வர வசதியாக இருக்கும். அப்புறம் ஹாரி –"

ஹாரி, நடுங்கிக் கொண்டிருந்த தனது குரலில் வலுக்கட்டாயமாக தைரியத்தைத் திணித்துக் கொண்டே, "உன்னை விரைவில் சந்திக்கிறேன்," என்று கூறினான்.

அவன் அந்த பிரம்மாண்டமான பாம்புச்சட்டையைத் தாண்டித் தனியாக நடக்கத் துவங்கினான்.

Scanned by CamScanner

பாறைகளை அப்புறப்படுத்த ரான் முனகிக் கொண்டிருந்த சத்தம் விரைவில் மறைந்து போனது. அந்தச் சுரங்கம் வளைந்து வளைந்து சென்றது. ஹாரியின் நாடி நரம்புகள் அத்தனையும் ஆட்டம் கண்டிருந்தன. அச்சுரங்கம் ஒரு முடிவுக்கு வந்தால் நன்றாக இருக்கும் என்று அவன் எண்ணினான். ஆனால் அதே சமயம், அது முடிவடையும்போது தான் அங்கு எதைக் கண்டுபிடிப்போமோ என்றும் அவன் மனம் அலைபாய்ந்து கொண்டிருந்தது. கடைசியில் அவன் மெதுவாக மற்றொரு திருப்பத்தைக் கடந்ததும் தனக்கு நேரெதிரே ஒரு சுவர் இருந்ததைக் கண்டான். அந்தச் சுவரில் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்திருந்த இரண்டு நாகங்கள் செதுக்கப்பட்டிருந்தன. அவற்றின் கண்கள், மின்னிக் கொண்டிருந்த பச்சை நிற மரகதக் கற்களால் உருவாக்கப்பட்டிருந்தன.

ஹாரி அதை அணுகினான். அவனது தொண்டை வறண்டு போயிருந்தது. கற்களில் செதுக்கப்பட்டிருந்த அப்பாம்புகள் உண்மையானவை என்று கற்பனை செய்ய வேண்டிய அவசியம் அவனுக்கு இருக்கவில்லை. அவற்றின் கண்கள் விநோதமாக உயிருடன் இருந்ததுபோல ஜொலித்துக் கொண்டிருந்தன.

தான் என்ன செய்ய வேண்டும் என்பதை அவனால் எளிதாக ஊகிக்க முடிந்தது. அவன் தன் தொண்டையைச் செருமிக் கனைத்தான். அப்போது அந்த மரகதப் பச்சைக் கற்கள் லேசாக மின்னியதுபோல அவனுக்குத் தோன்றியது.

ஒரு மெல்லிய 'ஸ்ஸ்ஸ்' ஒலியுடன், **"திற!"** என்று ஹாரி கூறினான்.

அப்பாம்புகள் விலகிக் கொண்டன. சுவர் இரண்டாகப் பிளவுபட்டது. அந்த இரண்டு பகுதிகளும் சத்தமில்லாமல் பார்வையில் இருந்து மறைந்தன. பாதாதிகேசம் நடுங்க ஹாரி உள்ளே நுழைந்தான்.

Scanned by CamScanner

அத்தியாயம் பதினேழு

ஸ்லிதரினின் வாரிசு

மெலிதாக வெளிச்சம் வந்து கொண்டிருந்த மிக நீளமான ஓர் அறையின் முனையில் ஹாரி நின்று கொண்டிருந்தான். நெடிதுயர்ந்திருந்த கற்தூண்கள் வெகு உயரத்தில் இருட்டில் மறைந்திருந்த மேற்கூரையைத் தாங்கிப் பிடித்துக் கொண்டிருந்தன. பின்னிப் பிணைந்திருந்த இன்னும் ஏராளமான பாம்பு உருவங்கள் அத்தூண்களில் செதுக்கப்பட்டிருந்தன.

ஹாரி, வேகமாகத் துடித்துக் கொண்டிருந்த இதயத்துடன், உடலையும் மனத்தையும் உறைய வைத்த மௌனத்தின் சத்தத்தைக் கேட்டுக் கொண்டிருந்தான். ஏதாவது ஒரு தூணுக்குப் பின்னால் ஓர் இருண்ட மூலையில் அந்த ராஜ ஸர்ப்பம் பதுங்கி இருக்குமோ? ஜின்னி எங்கே இருந்தாள்?

அவன் தன்னுடைய மந்திரக்கோலை உருவிக் கொண்டு அந்தப் பாம்புத் தூண்களுக்கு இடையே நடக்கத் துவங்கினான். எச்சரிக்கையுடன் அவன் எடுத்து வைத்த ஒவ்வோர் அடியும் அந்த அறையின் இருண்ட சுவர்களில் பட்டு எதிரொலித்தது. திடீரென்று ஏதாவது அசைவு ஏற்பட்டால் உடனடியாக மூடக்கூடிய விதத்தில் அவன் தன் கண்களை இடுக்கிக் கொண்டான். சில பாம்புச் சிலைகளில் வெறுமையாக இருந்த கண்குழிகள் தன்னைப் பின்தொடர்ந்ததுபோல அவனுக்குத் தோன்றியது. ஏதோ அசைந்தது போன்ற ஓர் உணர்வு ஒரு முறைக்கு மேல் அவனுக்கு ஏற்பட்டது. அப்போதெல்லாம் பயத்தால் அவனது வயிறு சுண்டி இழுத்தது.

பிறகு, அவன் கடைசி ஜோடித் தூணுக்கு நேராக வந்தபோது, அந்தப் பாதாள அறையின் பின்பக்கச் சுவரில், அந்த அறையின் உயரத்திற்கு ஒரு மந்திரவாதியின் சிலை வியாபித்து நின்று கொண்டிருந்ததைப் பார்த்தான். அதன் பிரம்மாண்டமான முகத்தைப் பார்க்க ஹாரி மிகவும் அண்ணாந்து பார்க்க வேண்டியிருந்தது. அதன் முகம் பழமையானதாகவும் குரங்கின் முகத்தைப்போலவும் இருந்தது. அதன் நீண்ட மெல்லிய தாடி அந்த மந்திரவாதியின் அங்கி வரை நீண்டிருந்தது. அதன் வழுவழுப்பான பிரம்மாண்டமான இரண்டு கால்கள் அந்த அறையின் தரையில் பதிந்திருந்தன. அதன் இரண்டு பாதங்களுக்கு இடையே, கருப்பு அங்கி அணிந்திருந்த ஒரு சிறிய

Scanned by CamScanner

உருவம் முகம் குப்புற விழுந்து கிடந்தது. அதன் தலைமுடி செக்கச் செவேல் என்றிருந்தது.

"ஜின்னி!" என்று முணுமுணுத்தபடி ஹாரி அவளை நோக்கி வெகு வேகமாக ஓடி, அவளருகே மண்டியிட்டான். "ஜின்னி, செத்துப் போய்விடாதே! தயவு செய்து செத்துப் போய்விடாதே!" என்று அவன் பதறினான. பிறகு அவன் தன் மந்திரக்கோலை ஒருபுறமாக வைத்துவிட்டு, ஜின்னியின் தோளைப் பற்றி அவளைத் திருப்பினான். அவளது முகம் பளிங்குச் சிலைபோல வெளுத்தும் குளிராகவும் இருந்தது. ஆனால் அவளது கண்கள் மூடியிருந்தன. அப்படியானால் அவள் கற்சிலையாக ஆக்கப்பட்டிருக்கவில்லை. ஆனால் அவள் . . .

ஹாரி அவளை உலுக்கிக் கொண்டே, "ஜின்னி, தயவு செய்து எழுந்திரு!" என்று பரிதாபமாக முணுமுணுத்தான். ஜின்னியின் தலை ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கத்திற்குச் சரிந்தது.

"அவள் எழுந்திருக்க மாட்டாள்," என்று ஒரு மிருதுவான குரல் கூறியது.

ஹாரி துள்ளிக் குதித்து, மண்டியிட்டபடியே ஒரு வட்டமடித்தான்.

ஓர் உயரமான, கருத்தத் தலைமுடியுடன்கூடிய ஓர் இளைஞன், அருகே இருந்த ஒரு தூணில் சாய்ந்து கொண்டு ஹாரியைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனது தோற்றம் சற்றுத் தெளிவற்று இருந்ததுபோல ஹாரிக்குத் தோன்றியது. மூடுபனி படிந்திருந்த ஒரு கண்ணாடியின் வழியாகத் தான் அவனைப் பார்த்தது போன்ற உணர்வு அவனுக்கு ஏற்பட்டது. ஆனால் அவன் யாரென்பதில் ஹாரிக்கு எந்தவிதமான சந்தேகமும் இருக்கவில்லை.

"நார்ட்டன்?"

நார்ட்டன் அதை ஆமோதித்துத் தன் தலையை அசைத்தான். அவன் தன் கண்களை ஹாரியின் முகத்திலிருந்து அகற்றவேயில்லை.

"அவள் எழுந்திருக்க மாட்டாள் என்று நீ சொன்னதற்கு என்ன அர்த்தம்?" என்று ஹாரி பரிதாபமாகக் கேட்டான். "அவள் – அவள்? –"

"அவள் இன்னும் உயிரோடுதான் இருக்கிறாள்," என்று நார்ட்டன் கூறினான். "ஆனால் அவளது உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது."

ஹாரி அவனை வெறித்துப் பார்த்தான். நார்ட்டன் ஐம்பது வருடங்களுக்கு முன்பு ஹாக்வார்ட்ஸில் இருந்திருந்தான். ஆனால் இங்கு இப்போது, வினோதமாக, பனி போன்ற ஓர் ஒளி தன்மீது படர்ந்திருக்க, பதினாறு வயதிற்குரிய தோற்றத்துடன் அவன் நின்று கொண்டிருந்தான்.

"நீ ஓர் ஆவியா?" என்று ஹாரி உறுதியில்லாமல் கேட்டான்.

"ஒரு நினைவு," என்று நார்ட்டன் அமைதியாகக் கூறினான். "ஐம்பது வருடங்களாக ஒரு நாட்குறிப்புப் புத்தகத்தில் பாதுகாக்கப்பட்டிருந்த ஒரு நினைவு."

Scanned by CamScanner

அவன் அந்த பிரம்மாண்டமான சிலையின் கால் விரல்களைச் சுட்டிக்காட்டினான். முனகல் மர்ட்டிலின் குளியலறையில் ஹாரி கண்டுபிடித்தக் கருப்பு நிற நாட்குறிப்புப் புத்தகம் அங்கே கிடந்தது. அது இங்கே எப்படி வந்தது என்று ஒரு கணம் ஹாரி வியந்தான். ஆனால் கையாள்வதற்கு அதைவிட முக்கியமான விஷயங்கள் இருந்தன.

ஹாரி ஜின்னியின் தலையை மீண்டும் ஒரு முறை தூக்கியவாறு, "நார்ட்டன், நீ எனக்கு உதவி செய்ய வேண்டும்," என்று கூறினான். "நாம் இவளை இங்கிருந்து வெளியே கொண்டு செல்ல வேண்டும். இங்கு ஒரு ராஜ ஸர்ப்பம் இருக்கிறது . . . அது இப்போது எங்கே இருக்கிறது என்று எனக்குத் தெரியாது. ஆனால் அது எக்கணமும் இங்கே வரக்கூடும். நார்ட்டன், தயவு செய்து நீ எனக்கு உதவி செய் . . ."

நார்ட்டன் தான் நின்று கொண்டிருந்த இடத்தைவிட்டு அசையவே இல்லை. ஹாரி வியர்வையில் நனைந்தவாறு, ஜின்னியைத் தரையிலிருந்து தூக்கித் தன் தோளின்மீது போட்டுக் கொண்டு, தன் மந்திரக்கோலை எடுப்பதற்காக மீண்டும் குனிந்தான்.

ஆனால் அவனது மந்திரக்கோல் அங்கிருந்து மறைந்துவிட்டிருந்தது.

"நார்ட்டன், என்னுடைய மந்திரக்கோலை நீ பார்த்தாயா –"

ஹாரி நிமிர்ந்து பார்த்தான். நார்ட்டன் இன்னும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தான். அவனது நீண்ட விரல்களில் ஹாரியின் மந்திரக்கோல் தவழ்ந்து கொண்டிருந்தது.

"நன்றி!" என்று கூறிவிட்டு, அதை வாங்குவதற்காக ஹாரி தனது கையை நீட்டினான்.

நார்ட்டனின் உதட்டின் ஒரு முனையில் ஒரு புன்னகை அரும்பியிருந்தது. அவன் ஹாரியின் மந்திரக்கோலைத் தன் விரல்களுக்கிடையே சுழற்றியவாறு ஹாரியைத் தொடர்ந்து வெறித்துக் கொண்டிருந்தான்.

"நார்ட்டன்," என்று ஹாரி அவசரமாகக் கூறினான். ஜின்னியின் எடையால் அவனது முழங்கால் வளைந்து கொண்டிருந்தது. **"நாம் இங்கிருந்து கிளம்பியே ஆக வேண்டும். ராஜ ஸர்ப்பம் வந்துவிட்டால் . . ."**

"கூப்பிட்டாலொழிய அது வராது!" என்று நார்ட்டன் அமைதியாகக் கூறினான்.

ஜின்னியை அதற்கு மேலும் தூக்கிக் கொண்டிருக்க முடியாததால், ஹாரி அவளை மீண்டும் தரையில் கிடத்தினான்.

"நீ என்ன சொல்கிறாய்?" என்று அவன் கேட்டான். "என் மந்திரக்கோலை என்னிடம் கொடுத்துவிடு. அது எனக்குத் தேவைப்படக்கூடும்."

நார்ட்டனின் புன்னகை விரிந்தது.

"அது உனக்குத் தேவைப்படாது," என்று அவன் கூறினான்.

Scanned by CamScanner

ஹாரி அவனை உற்றுப் பார்த்தான்.

"நீ என்ன சொல்ல வருகிறாய்? அது ஏன் எனக்குத் தேவைப்படாது?"

"ஹாரி பாட்டர், நான் இதற்காக வெகு காலம் காத்திருந்தேன்," என்று நார்ட்டன் கூறினான். "உன்னைப் பார்ப்பதற்காக. உன்னுடன் பேசுவதற்காக."

ஹாரி பொறுமையிழந்தவனாக, "இங்கே பார்!" என்று கூறினான். "உனக்கு நிலைமை புரியவில்லை என்று நினைக்கிறேன். **நாம் ரகசியங்கள் அடங்கிய பாதாள அறையில் இருக்கிறோம்**. நாம் பின்னர் பேசிக் கொள்ளலாம்."

இன்னும் புன்னகைத்துக் கொண்டிருந்த நார்ட்டன், "இல்லை, நாம் இப்போது பேசப் போகிறோம்," என்று கூறினான். அவன் ஹாரியின் மந்திரக்கோலைத் தன் பாக்கெட்டிற்குள் போட்டுக் கொண்டான்.

ஹாரி அவனை மீண்டும் உற்றுப் பார்த்தான். இங்கு வினோதமாக ஏதோ நடந்து கொண்டிருந்ததாக ஹாரி நினைத்தான்.

"ஜின்னி ஏன் இப்படி ஆனாள்?" என்று ஹாரி கேட்டான்.

"அது ஒரு சுவாரசியமான கேள்வி," என்று நார்ட்டன் இனிமையாகக் கூறினான். "அது ஒரு நீண்ட கதை. ஜின்னி இங்கு இருப்பதற்கான உண்மையான காரணம், உருவமற்ற அன்னியன் ஒருவனிடம் அவள் தன் மனத்தைத் திறந்து அதிலிருந்த ரகசியங்கள் அனைத்தையும் கொட்டியதுதான்."

"நீ என்ன உளறிக் கொண்டிருக்கிறாய்?" என்று ஹாரி கேட்டான்.

"நாட்குறிப்புப் புத்தகம்," என்று நார்ட்டன் கூறினான். "என்னுடைய நாட்குறிப்புப் புத்தகம். ஜின்னி பல மாதங்களாக என்னுடைய நாட்குறிப்புப் புத்தகத்தில் எழுதி வந்திருந்தாள். தன்னுடைய மனத்தில் இருந்த கவலைகளையும் துக்கங்களையும் அவள் என்னிடம் கூறி வந்தாள். அவளை அவளுடைய சகோதரர்கள் எவ்வாறு கேலி செய்தனர் என்பது பற்றியும், பழைய புத்தகங்கள் மற்றும் பழைய அங்கிகளோடு தான் பள்ளிக்கு வர நேர்ந்தது பற்றியும், அப்புறம் –" நார்ட்டனின் கண்கள் மின்னின. "– பிரபலமான, நல்லவனான, புகழ்மிக்க ஹாரி பாட்டர் தன்னை ஒருபோதும் ஏன் விரும்ப மாட்டான் என்பது பற்றி . . ."

அவன் பேசிக் கொண்டிருந்த நேரம் முழுவதும் அவனுடைய கண்கள் ஹாரியின் முகத்தைவிட்டு அகலவில்லை. அவற்றில் ஒருவித ஏக்கம் ஒளிந்து கொண்டிருந்தது.

"ஒரு பதினோரு வயதுப் பெண்ணின் சிறுபிள்ளைத்தனமான பிதற்றல்களைக் கேட்டுக் கொண்டிருப்பது சுவாரசியமற்றதாக இருந்தது," என்று அவன் தொடர்ந்து பேசிக் கொண்டே போனான். "ஆனால் நான் பொறுமையாகக் காத்திருந்தேன். நான் அவள்மீது அனுதாபம் கொண்டிருந்ததாகவும் நான் அன்பானவன் என்றும் அவளுக்கு பதில் எழுதினேன். ஜின்னிக்கு என்னை மிகவும் பிடித்துப்

Scanned by CamScanner

போய்விட்டது. **நார்ட்டன், உன்னைப்போல வேறு எவரும் என்னை ஒருபோதும் புரிந்து கொண்டதில்லை . . . என் மனத்தில் இருப்பதைக் கொட்டித் தீர்ப்பதற்கு இந்த நாட்குறிப்புப் புத்தகம் எனக்குக் கிடைத்ததற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன் . . . என் பாக்கெட்டிலேயே ஒரு நண்பனைச் சுமந்து திரிவதைப்போல இருக்கிறது இது . . .**"

நார்ட்டன் சிரித்தான். உச்சஸ்தாயியில் உயிரற்றிருந்த பெருஞ்சிரிப்பாக அது இருந்தது. அது அவனுக்குப் பொருந்தவில்லை. ஹாரியின் பின்னங்கழுத்து முடிகள் குத்திட்டு நின்றன.

"ஹாரி, என்னைப் பற்றி நானே பெருமையாகச் சொல்லிக் கொள்ளக்கூடாது. ஆனால் எனக்குத் தேவைப்படும் மக்களை என் வசம் கவர்ந்திழுக்க நான் ஒருபோதும் தவறியதே இல்லை. அதனால் ஜின்னி தன் ஆத்மாவை என்னிடம் கொட்டித் தீர்த்ததில் வியப்பில்லை. எனக்குத் துல்லியமாக ஜின்னியுடையது போன்ற ஓர் ஆத்மாதான் தேவைப்பட்டது. அவளுடைய ஆழமான பயங்கள் மற்றும் இருண்ட ரகசியங்களின் போஷாக்கால் நான் மேலும் மேலும் வலுவாக வளர்ந்து கொண்டிருந்தேன். நான் ஜின்னியைவிட அதிக வலிமையானவனாக வளர்ந்து கொண்டிருந்தேன். என்னுடைய ரகசியங்களில் சிலவற்றை அவளுக்குள் புகுத்தும் அளவுக்கு, என்னுடைய ஆத்மாவிலிருந்து கொஞ்சத்தை அவளுடைய ஆத்மாவிற்குள் கொட்டும் அளவுக்கு . . ."

"நீ என்ன சொல்கிறாய்?" என்று ஹாரி கேட்டான். அவனது வாய் உலர்ந்து போயிருந்தது.

"ஹாரி பாட்டர், உன்னால் இன்னும் ஊகிக்க முடியவில்லையா என்ன?" என்று நார்ட்டன் மென்மையாகக் கேட்டான். "ஜின்னிதான் ரகசியங்கள் அடங்கிய பாதாள அறையைத் திறந்துவிட்டாள். அவள்தான் பள்ளியின் சேவல்களின் கழுத்துக்களைத் திருகி அவற்றைக் கொன்றாள். அச்சுறுத்தும் வாசகங்களைச் சுவரில் எழுதியது அவள்தான். அவள்தான் ஸ்லிதரினின் ராஜ ஸர்ப்பத்தை நான்கு ஈன ரத்தப் பிறவிகளின்மீதும் ஸ்குவிப்பான ஃபில்ச்சின் பூனையின்மீதும் ஏவினாள்."

"இல்லை," என்று ஹாரி முணுமுணுத்தான்.

"ஆமாம்," என்று நார்ட்டன் அமைதியாகக் கூறினான். "ஆனால் அவளுக்குத் தான் என்ன செய்து கொண்டிருந்தோம் என்பது முதலில் தெரிந்திருக்கவில்லை. அதுவும் சுவாரசியமாகத்தான் இருந்தது. அவளுடைய சமீபத்திய நாட்குறிப்புப் பதிவுகளை நீ பார்த்தால் நன்றாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். அவை மிக சுவாரசியமானவையாக ஆகியிருந்தன." பீதியடைந்திருந்த ஹாரியின் முகத்தைப் பார்த்தபடியே நார்ட்டன் அந்தப் பதிவுகளை ஒப்பித்தான்: **"அன்புள்ள நார்ட்டன், நான் என்னுடைய நினைவை இழந்து கொண்டிருக்கிறேன் என்று நினைக்கிறேன். சேவற்கோழியின் சிறகுகள் என்னுடைய அங்கி முழுவதும் பரவிக் கிடக்கின்றன. என் அங்கியில்**

Scanned by CamScanner

அந்த இறகுகள் எப்படி வந்தன என்று எனக்குத் தெரியவில்லை. அன்புள்ள நார்ட்டன், ஹாலோவீன் தினத்தன்று இரவில் நான் என்ன செய்தேன் என்று எனக்கு நினைவில்லை. ஆனால் அன்றிரவு ஒரு பூனை தாக்கப்பட்டது, என் உடையின் முன்பக்கம் முழுவதிலும் ஏகப்பட்டப் பெயின்ட் கொட்டியிருந்தது. அன்புள்ள நார்ட்டன், என் முகம் வெளுத்துக் கொண்டே வருவதாகவும், நான் நானாக இல்லை என்றும் பெர்சி தொடர்ந்து கூறி வருகிறான். பெர்சி என்னைச் சந்தேகிக்கிறான் என்று நான் நினைக்கிறேன் . . . இன்று மற்றொரு தாக்குதல், ஆனால் நான் எங்கு இருந்தேன் என்று எனக்குத் தெரியவில்லை. நார்ட்டன், நான் என்ன செய்யப் போகிறேன்? எனக்குப் பைத்தியம் பிடித்துக் கொண்டிருக்கிறது என்று நான் நினைக்கிறேன் . . . நார்ட்டன், நான்தான் எல்லோரையும் தாக்கிக் கொண்டிருக்கிறேன் என்று எனக்குத் தோன்றுகிறது."

ஹாரி தன் கை முஷ்டிகளை மடக்கியிருந்தான். அவனது நகங்கள் அவனது உள்ளங்கைகளை ஆழமாகக் கீறிக் கொண்டிருந்தன.

"தன்னுடைய நாட்குறிப்புப் புத்தகத்தை நம்புவதை நிறுத்துவதற்கு முட்டாள் ஜின்னிக்கு வெகு காலம் பிடித்தது," என்று நார்ட்டன் கூறினான். "இறுதியில் அவளுக்குச் சந்தேகம் வந்ததால் அவள் அதைத் தலைமுழுக முயன்றாள். ஹாரி, கதையில் நீ அங்குதான் நுழைகிறாய். நீ அப்புத்தகத்தைக் கண்டுபிடித்தாய். அது உனக்குக் கிடைத்தது குறித்து எனக்கு மிகவும் சந்தோஷம். எல்லோரையும் விட்டுவிட்டு அது உனக்குக் கிடைத்திருந்தது! நான் சந்திக்க மிகமிக ஆவலாக இருந்த ஒரு நபரிடம் அது சென்றடைந்திருந்தது . . ."

"என்னை ஏன் நீ சந்திக்க விரும்பினாய்?" என்று ஹாரி கேட்டான். கோபம் அவனுக்குத் தலைக்கு ஏறிக் கொண்டிருந்தது. தன் குரலை ஒரே சீராக வைத்துக் கொள்வதற்கு அவன் மிகவும் சிரமப்பட்டான்.

"உன்னைப் பற்றிய எல்லா விபரங்களையும் ஜின்னி என்னிடம் கூறிவிட்டாள்," என்று நார்ட்டன் கூறினான். "பிரமிக்க வைக்கும் உன் முழுக் கதையையும் அவள் என்னிடம் பகிர்ந்து கொண்டாள்." நார்ட்டனின் பார்வை ஹாரியின் நெற்றியிலிருந்த மின்னல் கீற்று வடிவத் தழும்பின்மீது அலைபாய்ந்து கொண்டிருந்தது. "உன்னைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ளவும், உன்னிடம் பேசவும், முடிந்தால் உன்னைப் பார்க்கவும் நான் விரும்பினேன். அதனால் உன்னுடைய நம்பிக்கையைப் பெறுவதற்காக, என்னுடைய மிகப் பெரிய வெற்றிக் கதையான, அந்த சைத்தான் ஹாக்ரிட் பிடிபட்டக் கதையை உனக்குக் காட்டுவதென்று நான் தீர்மானித்தேன்."

"ஹாக்ரிட் என்னுடைய நண்பர்," என்று ஹாரி கூறினான். அவனது குரல் இப்போது நடுங்கிக் கொண்டிருந்தது. "நீதான் அவரை மாட்டிவிட்டிருக்கிறாய், இல்லையா? நீ தவறாக அவரைப் பிடித்துக் கொடுத்திருந்ததாக நான் நினைத்திருந்தேன். ஆனால் –"

நார்ட்டன் மீண்டும் உச்சஸ்தாயியில் சிரித்தான்.

Scanned by CamScanner

"என் வார்த்தையைக் கணக்கில் எடுத்துக் கொள்வதா அல்லது ஹாக்ரிட்டின் வார்த்தையைக் கணக்கில் எடுத்துக் கொள்வதா என்பதில் போய் அது நின்றது. ஹாரி, அது அந்த வயதான தலைமையாசிரியர் அர்மான்டோ டிப்பட்டுக்கு எப்படி இருந்திருக்கும் என்பதை நீ கற்பனை செய்து பார். ஒரு பக்கம் நார்ட்டன். ஏழை என்றாலும் அபாரமான புத்திசாலி, அனாதை என்றாலும் தைரியசாலி, பள்ளியின் மாணவ அணித் தலைவன், எல்லோரும் பின்பற்ற வேண்டிய முன்மாதிரி மாணவன். மறுபுறம் மடத்தனமான ஹாக்ரிட். ஒவ்வொரு வாரமும் பிரச்சனையில் மாட்டிக் கொண்ட பேர்வழி, தன்னுடைய படுக்கைக்குக் கீழே ஓநாய்க் குட்டிகளை வளர்க்க முனைந்தவன், அரக்கர்களுடன் மற்போர் புரிவதற்காகத் தடை செய்யப்பட்டக் காட்டிற்குள் சென்றவன். ஆனால் நான் போட்டத் திட்டம் எவ்வளவு அழகாக வேலை செய்தது என்பதைக் கண்டு நானே அசந்து போனேன் என்பதை ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். ஹாக்ரிட் கண்டிப்பாக ஸ்லிதரினின் வாரிசாக இருக்க முடியாது என்பதை யாராவது புரிந்து கொள்வார்கள் என்று நான் நினைத்தேன். ரகசியங்கள் அடங்கிய பாதாள அறை குறித்த அனைத்து விஷயங்களையும் அறிந்து கொள்ளவும், அதன் ரகசிய நுழைவு வழியைக் கண்டுபிடிக்கவும் எனக்கே முழுதாக ஐந்து வருடங்கள் தேவைப்பட்டன . . . ஹாக்ரிட்டுக்கு அந்த அளவு மூளையும் ஆற்றலும் இருந்ததாக அவர்கள் எண்ணியதை நினைத்தால்!

"உருவமாற்று ஆசிரியர் டம்பிள்டோர் மட்டுமே ஹாக்ரிட் நிரபராதி என்று எண்ணினார். அதனால் ஹாக்ரிட்டைத் தக்க வைத்துக் கொண்டு, அவரைக் கோட்டைப் பாதுகாவலராகத் தயார்படுத்த, டம்பிள்டோர், டிப்பரை ஒப்புக் கொள்ள வைத்துவிட்டார். நடந்த உண்மையை டம்பிள்டோர் சரியாக ஊகித்திருக்கக்கூடும் என்று நான் நினைக்கிறேன். மற்ற ஆசிரியர்கள் என்னை விரும்பிய அளவுக்கு, டம்பிள்டோர் ஒருபோதும் என்னை விரும்பியதில்லை . . ."

"டம்பிள்டோர் உன்னை நன்றாக ஊடுருவிப் பார்த்திருந்திருப்பார் என்று நான் நினைக்கிறேன்," என்று ஹாரி தன் பற்களைக் கடித்தபடி கூறினான்.

"ஹாக்ரிட் ஹாக்வார்ட்ஸிலிருந்து வெளியேற்றப்பட்டப் பிறகு, டம்பிள்டோர் என்மீது ஒரு கண் வைத்திருந்தார்," என்று நார்ட்டன் விட்டேத்தியாகக் கூறினான். "நான் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும்வரை ரகசியங்கள் அடங்கிய பாதாள அறையை மீண்டும் திறப்பது பாதுகாப்பானது அல்ல என்பதை நான் அறிந்தேன். ஆனால் அந்த அறையைக் கண்டுபிடிப்பதற்கு நான் செலவழித்த நீண்ட வருடங்களின் உழைப்பு வீணாவதை நான் விரும்பவில்லை. அதனால் நான் எனக்குப் பின்னால் ஒரு நாட்குறிப்புப் புத்தகத்தை விட்டுச் செல்லவும், அதன் பக்கங்களில் பதினாறு வயது 'நார்ட்டனை,' அதாவது 'என்னை'ப் பாதுகாத்து வைக்கவும் நான்

Scanned by CamScanner

தீர்மானித்தேன். அதிர்ஷ்டம் என் பக்கம் இருந்தால், என்றாவது ஒரு நாள், என்னுடைய காலடிச் சுவடைப் பின்பற்றி சலசார் ஸ்லிதரினின் உன்னதமான நோக்கங்களை நிறைவேற்ற இன்னொருவரை வழிநடத்துவதற்கு அந்த நாட்குறிப்புப் புத்தகம் எனக்கு உதவக்கூடும் என்று நான் நினைத்தேன்."

"இம்முறையும் அதை உன்னால் நிறைவேற்ற முடியாது," என்று ஹாரி வெற்றி முழக்கத்தோடு கூறினான். "இம்முறை யாரும் இறக்கவில்லை, ஃபில்ச்சின் பூனை உட்பட. இன்னும் சில மணிநேரத்தில் மன்ட்ரேக் மாயத் திரவம் தயாராகிவிடும். கல்லாக்கப்பட்ட அனைவரும் மீட்டெடுக்கப்படுவார்கள்."

"நான் இதைப் பற்றி ஏற்கனவே உன்னிடம் கூறியிருக்கிறேன்," என்று நார்ட்டன் அமைதியாகக் கூறினான். "ஈன ரத்தப் பிறவிகளைக் கொல்வது எனக்கு இப்போது முக்கியமாகப் படவில்லை. பல மாதங்களாக என்னுடைய புதிய இலக்காக இருந்து வந்துள்ளது – நீதான்!"

ஹாரி அவனையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"அடுத்த முறை என்னுடைய நாட்குறிப்புப் புத்தகம் திறக்கப்பட்டபோது நான் கோபத்தின் உச்சிக்கே சென்றுவிட்டேன். அதில் எழுதிக் கொண்டிருந்தது நீ அல்ல. அது ஜின்னி. அந்த நாட்குறிப்புப் புத்தகம் உன்னிடம் இருந்ததை ஜின்னி பார்த்திருந்ததால் அவள் பீதியடைந்தாள். அதை எப்படி வேலை செய்ய வைப்பது என்பதை நீ கண்டுபிடித்து, அவளுடைய ரகசியங்கள் அனைத்தையும் நான் உன்னிடம் சொல்லிவிட்டால் என்ன செய்வது? அதைவிட மோசமாக, சேவற்கோழிகளின் கழுத்துக்களை நெறித்துக் கொன்றது யார் என்பதை நான் உன்னிடம் கூறிவிட்டால்? அதனால் அந்த முட்டாள் பெண் உன்னுடைய பொதுப் படுக்கையறை காலியாவதற்காகக் காத்திருந்து அப்புத்தகத்தை உன்னிடமிருந்து திருடினாள். ஆனால் நான் என்ன செய்ய வேண்டும் என்பதை நான் அறிந்திருந்தேன். ஸ்லிதரினின் வாரிசு யார் என்பதைக் கண்டுபிடிப்பதில் நீ மும்முரமாக இருந்தாய் என்பதை நான் தெளிவாக அறிந்திருந்தேன். ஜின்னி என்னிடம் கூறியிருந்ததை வைத்துப் பார்த்தபோது, அந்தப் புதிரை அவிழ்க்க நீ எதற்கும் துணிவாய் என்பது எனக்குப் புரிந்தது – குறிப்பாக, உன்னுடைய நெருங்கிய நண்பர்களில் ஒருவர் தாக்கப்பட்டால்! உன்னால் ஸர்ப்ப பாஷையில் உரையாட முடியும் என்பது குறித்து மொத்தப் பள்ளியும் பேசிக் கொண்டிருந்ததாக ஜின்னி என்னிடம் கூறியிருந்தாள் . . .

"அதனால், சுவரில் தனது சொந்தப் பிரியாவிடையைத் தன் கையாலேயே ஜின்னியை எழுத வைத்துவிட்டு, நான் இங்கு வந்து உனக்காகக் காத்திருந்தேன். அவள் போராடினாள், அழுது ஆர்ப்பாட்டம் செய்தாள், எனக்குச் சலிப்பூட்டினாள். ஆனால் அவளுடைய உயிர் ஏற்கனவே ஊசலாடிக் கொண்டிருந்தது. அவள் அளவுக்கதிகமாகத் தன் ஜீவனை அந்த நாட்குறிப்புப் புத்தகத்தில்

Scanned by CamScanner

வடித்துவிட்டிருந்தாள், எனக்குள் கொட்டியிருந்தாள். நான் அதன் பக்கங்களிலிருந்து வெளியேறுவதற்கு அது போதுமானதாக இருந்தது! நாங்கள் இங்கு வந்ததிலிருந்தே நான் உனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன். நீ கண்டிப்பாக வருவாய் என்று எனக்குத் தெரியும். ஹாரி பாட்டர், உன்னிடம் கேட்பதற்கு என்னிடம் நிறையக் கேள்விகள் இருக்கின்றன."

"எந்த மாதிரியான கேள்விகள்?" என்று ஹாரி வெறுப்பாகக் கேட்டான். அவனது கைமுஷ்டிகள் இன்னும் இறுக்கமாக மூடியபடியே இருந்தன.

"நல்லது," என்று நார்ட்டன் இனிமையாகத் துவக்கினான். "உலகில் இதுவரை தோன்றியுள்ள மந்திரவாதிகளிலேயே மிகச் சிறந்து விளங்கிய ஒரு மந்திரவாதியை எந்தவித மந்திர சக்திகளும் இல்லாதிருந்த ஒரு குழந்தையால் எப்படி முறியடிக்க முடிந்தது? வோல்டமார்ட்டின் மொத்த சக்தியும் அழிக்கப்பட்ட அதே சமயத்தில், வெறும் ஒரு தழும்போடு மட்டும் உன்னால் எப்படித் தப்பிக்க முடிந்தது?"

நார்ட்டனின் வெறி பிடித்தக் கண்களில் வினோதமான சிவப்பு ஒன்று இப்போது பளபளத்தது.

"நான் எப்படித் தப்பினேன் என்று நீ எதற்காகக் கவலைப்படுகிறாய்?" என்று ஹாரி மெதுவாகக் கேட்டான். "வோல்டமார்ட் உன் காலத்திற்குப் பிறகு வந்தவன்."

"வோல்டமார்ட்," என்று நார்ட்டன் மென்மையாகக் கூறினான். "ஹாரி பாட்டர், வோல்டமார்ட் என்னுடயை கடந்தகாலம், நிகழ்காலம், மற்றும் எதிர்காலம் . . ."

நார்ட்டன் தன்னுடைய பாக்கெட்டிலிருந்து ஹாரியின் மந்திரக்கோலை எடுத்து, அதைக் கொண்டு, மினுக் மினுக் என்று ஒளிர்ந்து கொண்டிருந்த இரண்டு வார்த்தைகளைக் காற்றில் எழுதினான்:

நார்ட்டன் மால்வோ

பிறகு அவன் அந்த மந்திரக்கோலை ஒருமுறை அசைத்தான். அவனுடைய பெயரில் இருந்த எழுத்துக்கள் தம்மைத் தாமே இடம் மாற்றிக் கொண்டு இவ்வாறு காட்சியளித்தன:

நான் வோல்டமார்ட்

"பார்த்தாயா?" என்று அவன் கிசுகிசுத்தான். "ஹாக்வார்ட்ஸில் என்னுடைய மிக நெருங்கிய நண்பர்களிடம் மட்டும் நான் ஏற்கனவே உபயோகித்து வந்திருந்த ஒரு பெயர்தான் அது. என்னுடைய கழிசடை மகுள் அப்பாவின் பெயரையை நான் எப்போதும் உபயோகித்துக் கொண்டிருப்பேன் என்று நீ நினைத்தாயா? என் அம்மாவின் வம்சாவழியினர் மூலமாக என்னுடைய உடலில் சலசார்

Scanned by CamScanner

ஸ்லிதரினின் சொந்த ரத்தம் ஓடிக் கொண்டிருக்கிறது. தன்னுடைய மனைவி ஒரு மந்திரவாதினி என்பதைக் கண்டுபிடித்துவிட்டதால், நான் பிறப்பதற்கு முன்பே என்னை உதறித் தள்ளிவிட்டுச் சென்ற ஒரு சாதாரணமான, கேடுகெட்ட மகளின் பெயரை நான் வைத்துக் கொண்டிருப்பேனா? கண்டிப்பாக இல்லை. அதனால் நான் எனக்காக ஒரு புதுப் பெயரை உருவாக்கிக் கொண்டேன். என்றேனும் ஒருநாள் இவ்வுலகிலேயே மிகச் சிறந்த மந்திரவாதியாக நான் உருவாகியிருக்கும்போது, மற்ற எல்லா மந்திரவாதிகளும் உச்சரிக்க மிகவும் பயப்படுகின்ற ஒரு பெயராக அது இருக்கும் என்பதை நான் அறிந்திருந்தேன்."

ஹாரியின் மூளை ஸ்தம்பித்துவிட்டதுபோலத் தோன்றியது. ஓர் அனாதைச் சிறுவனாக இருந்து, தன்னுடைய பெற்றோர்களையும் இன்னும் ஏராளமானவர்களையும் ஈவிரக்கமின்றிக் கொன்று குவித்த ஒரு மனிதனாக வளர்ந்திருந்த நார்ட்டனை ஹாரி உணர்ச்சியற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான் . . . கடைசியில் அவன் தன்னைத் தேற்றிக் கொண்டு பேசினான்.

"நீ இல்லை," என்று ஹாரி கூறினான். அவனுடைய அமைதியான குரல் வெறுப்பால் பொங்கி வழிந்து கொண்டிருந்தது.

"நான் என்ன இல்லை?" என்று நார்ட்டன் பட்டென்று கேட்டான்.

"இவ்வுலகிலேயே சிறந்த மந்திரவாதி நீ இல்லை," என்று ஹாரி கூறினான். அவனுக்கு மூச்சு வேகமாக வந்து கொண்டிருந்தது. "உன்னை ஏமாற்றத்திற்கு உள்ளாக்குவதற்கு மன்னிக்கவும். உலகிலேயே மிகச் சிறந்த மந்திரவாதி டம்பிள்டோர்தான். எல்லோருமே அப்படித்தான் கூறுகின்றனர். நீ வலுவாக இருந்த காலத்தில்கூட, ஹாக்வார்ட்ஸை உன் கையில் எடுத்துக் கொள்ள நீ துணியவில்லை. நீ பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோதே உன் உண்மை சொரூபத்தை அவர் உணர்ந்து கொண்டுவிட்டார். இன்றும்கூட, நீ எங்கு மறைந்து கொண்டிருந்தாலும், அவருக்கு நீ பயப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறாய். "

நார்ட்டனின் முகத்தில் இருந்த புன்னகை மறைந்தது. அதன் இடத்தை ஓர் அவலட்சணமான பார்வை எடுத்துக் கொண்டது.

"என்னுடைய வெறும் நினைவினாலேயே டம்பிள்டோர் இந்த இடத்திலிருந்து விரட்டியடிக்கப்பட்டு இருக்கிறார்!" என்று அவன் சீறினான்.

"உன் நினைப்புத் தவறு! அவர் எங்கும் போய்விடவில்லை," என்று ஹாரியும் பதிலுக்குச் சீறினான். அவன் நார்ட்டனை பயமுறுத்தும் நோக்கத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பேசினான். தான் கூறிக் கொண்டிருந்த விஷயங்களில் அவனுக்கே நம்பிக்கை இருக்கவில்லை. அவை உண்மையாக இருக்கக்கூடாதா என்று அவன் ஏங்கினான்.

நார்ட்டன் பேசுவதற்காகத் தன் வாயைத் திறந்தான், ஆனால் அப்படியே உறைந்து போய் நின்றான்.

Scanned by CamScanner

எங்கிருந்தோ ஓர் இசை மிதந்து வந்து கொண்டிருந்தது. நார்ட்டன் வேகமாக வட்டமடித்து, காலியாக இருந்த அந்தப் பாதாள அறையை உற்று நோக்கினான். அந்த இசையின் ஒலி அதிகரித்துக் கொண்டிருந்தது. அது முதுகெலும்பை உறைய வைப்பதாக இருந்தது, அமானுஷமாக இருந்தது. இவ்வுலகிற்கு அப்பாற்பட்ட ஒன்றுபோல அது ஒலித்தது. அது ஹாரியின் தலைமுடியைக் குத்திட்டு நிற்க வைத்தது. தனது இதயம் இரண்டு மடங்கானதுபோல ஹாரிக்குத் தோன்றியது. அந்த இசை தனது விலா எலும்புகளுக்குள் அதிர்ந்து கொண்டிருந்ததுபோல அவனுக்குத் தோன்றும் அளவுக்கு அதன் ஒலி உச்சஸ்தாயியை அடைந்தபோது, அவனுக்கு அருகே இருந்த தூணின் உச்சியில் ஒரு நெருப்பு வெடித்துக் கிளம்பியது.

ஓர் அன்னப் பறவையின் அளவில் இருந்த, ரத்தச் சிவப்பு நிறப் பறவை ஒன்று அங்கு தோன்றியது. அது ஒரு வினோதமான இசையை வெளிப்படுத்தியது. அப்பறவைக்கு மயிலின் வால் நீளத்திற்கு, தகதகத்துக் கொண்டிருந்த ஒரு தங்க வால் இருந்தது. பளபளத்துக் கொண்டிருந்த அதன் கூரிய நகங்களின் பிடியில் ஒரு கந்தலான பொட்டலம் இருந்தது.

அடுத்தக் கணம், அப்பறவை ஹாரியை நோக்கி நேராகப் பறந்து வந்தது. தான் சுமந்து கொண்டிருந்த பொட்டலத்தை அது ஹாரியின் காலடியில் போட்டது. பிறகு அழுத்தமாக அவனுடைய தோளின்மீது வந்து அமர்ந்தது. ஹாரி நிமிர்ந்து பார்த்தான். அதற்கு ஒரு நீண்ட, கூரான, தங்க நிற அலகு இருந்ததையும், மின்னிக் கொண்டிருந்த கருகமணிக் கண்கள் இருந்ததையும் அவன் கவனித்தான்.

அப்பறவை தான் பாடுவதை நிறுத்தியது. அது ஆடாமல் அசையாமல் ஹாரியின் கன்னத்தைச் சூடாக உரசிக் கொண்டு உட்கார்ந்திருந்தது. வைத்தக் கண் வாங்காமல் அது நார்ட்டனையே பார்த்துக் கொண்டிருந்தது.

பதிலுக்கு அப்பறவையை விவேகத்துடன் உற்றுப் பார்த்தபடியே, நார்ட்டன், "அது ஒரு பீனிக்ஸ் பறவை . . ." என்று கூறினான்.

"ஃபாக்ஸ்?" என்று ஹாரி நிம்மதிப் பெருமூச்சுடன் கூறினான். அந்தப் பறவையின் தங்க நிற நகங்கள் தன்னுடைய தோள்பட்டையை மென்மையாக அழுத்தியதை ஹாரி உணர்ந்தான்.

ஃபாக்ஸ் கீழே போட்டிருந்த கந்தலான பொட்டலத்தைச் சுட்டிக்காட்டி, நார்ட்டன், "பள்ளியின் பழைய வகை பிரிக்கும் தொப்பி அது!" என்று கூறினான்.

அது வகை பிரிக்கும் தொப்பிதான். அது ஒட்டுப் போடப்பட்டு, மிகவும் அழுக்காகவும் நைந்து போயும் இருந்தது. அத்தொப்பி அசையாமல் ஹாரியின் காலடியில் விழுந்து கிடந்தது.

நார்ட்டன் மீண்டும் சிரிக்கத் துவங்கினான். அவன் பலமாகச் சிரித்தச் சிரிப்பில் அந்த மொத்த அறையும் அதிர்ந்ததில், பத்து நார்ட்டன்கள் ஒன்றாகச் சேர்ந்து சிரித்ததுபோல இருந்தது.

Scanned by CamScanner

"தனக்கு வக்காலத்து வாங்கும் ஒருவனுக்கு, போயும் போயும் இதையா டம்பிள்டோர் அனுப்புவார்? **ஒரு பாடும் பறவையும் ஒரு பழைய தொப்பியும்!** ஹாரி பாட்டர், இப்போது நீ தைரியமாக உணர்கிறாயா? இப்போது பாதுகாப்பாக உணர்கிறாயா?"

ஹாரி பதிலேதும் பேசவில்லை. இக்கணத்தில் ஃபாக்ஸாலோ அல்லது வகை பிரிக்கும் தொப்பியாலோ என்ன பிரயோஜனம் என்பதை அவனால் பார்க்க முடியாவிட்டாலும், தான் இனியும் தனியாக இருக்கவில்லை என்ற உணர்வு அவனுக்கு ஏற்பட்டது. நுரைத்துப் பொங்கிக் கொண்டிருந்த தைரியத்துடன், நார்ட்டன் தன் சிரிப்பை நிறுத்துவதற்காக ஹாரி காத்திருந்தான்.

இன்னும் பெரிதாகப் புன்னகைத்துக் கொண்டிருந்த நார்ட்டன், "நாம் நமது கதைக்கு வரலாம்," என்று கூறினான். **"நாம் இரு முறை சந்தித்திருக்கிறோம் – முதலில், உன் கடந்தகாலத்தில் – இரண்டாவதாக, என்னுடைய எதிர்காலத்தில்! இரண்டு முறையும் என்னால் உன்னைக் கொல்ல முடியவில்லை. நீ எப்படி உயிர் தப்பினாய்? என்னிடம் எல்லாவற்றையும் கூறிவிடு."** பின் நார்ட்டன் மெதுவாகத் தொடர்ந்தான். "ஹாரி பாட்டர், நீ எவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருக்கிறாயோ அவ்வளவு நேரம் உன்னால் உயிர் பிழைத்திருக்க முடியும்."

ஹாரி வேகமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தான். அவன் தனக்கு முன்னால் இருந்த வழிகளைச் சீர்தூக்கிப் பார்த்துக் கொண்டிருந்தான். ஹாரியின் மந்திரக்கோல் நார்ட்டனிடம் இருந்தது. ஹாரியிடம் ஃபாக்ஸும் வகை பிரிக்கும் தொப்பியும் இருந்தன. ஆனால் ஒற்றைக்கு ஒற்றைச் சண்டையில் அவற்றால் பெரிய பிரயோஜனம் கிடையாது. நிலைமை மோசமாக இருந்தது என்பது உண்மைதான். ஆனால் நார்ட்டன் நேரம் கடத்தக் கடத்த, ஜின்னியின் உயிர்ச்சக்தி அவளிடமிருந்து மேலும் மேலும் கரைந்து கொண்டிருந்தது . . . இதற்கிடையை நார்ட்டனின் உருவம் தெளிவாகவும் உறுதியாகவும் ஆகிக் கொண்டு வந்ததை ஹாரி திடீரென்று கவனித்தான். கடைசியில் அவனுக்கும் நார்ட்டனுக்கும் இடையே ஒற்றைக்கு ஒற்றைச் சண்டைதான் ஒரே வழி என்று ஆகிவிட்டால், அதைத் தள்ளிப் போடுவதைவிட உடனடியாக முடிப்பதே நல்லது என்று அவனுக்குத் தோன்றியது.

"நீ என்னைத் தாக்கியபோது, உன் சக்தியனைத்தும் மாயமாய் மறைந்து போனதற்கு என்ன காரணம் என்பது யாருக்கும் தெரியாது," என்று ஹாரி திடுமெனத் துவக்கினான். "அது எனக்கும் தெரியாது. ஆனால் உன்னால் என்னை ஏன் கொல்ல முடியவில்லை என்பது எனக்குத் தெரியும். ஏனெனில் என் அம்மா என்னைக் காப்பாற்றும் முயற்சியில் இறந்து போனார். மிகச் சாதாரணமான மகுளுக்குப் பிறந்த எனது அம்மாதான் உன்னால் என்னைக் கொல்ல முடியாமல் போனதற்குக் காரணம்!" ஹாரி தன்னுள் அடக்கி வைத்திருந்த பெருங்கோபத்தினால் ஏற்பட்டப் படபடப்புடன்

Scanned by CamScanner

மேலும் தொடர்ந்தான். "நீ என்னைக் கொல்வதை அவர் தடுத்து நிறுத்தினார். உன்னுடைய உண்மையான சொரூபத்தை நான் பார்த்திருக்கிறேன். நான் உன்னைக் கடந்த வருடம் சந்தித்தேன். நீ முற்றிலும் சிதிலமடைந்துள்ள ஒருவன். நீ ஒரு நடைப்பிணம். உன் சக்தியெல்லாம் உன்னை அங்குதான் கொண்டு போய் நிறுத்தியுள்ளது. நீ ஓடி ஒளிந்து கொண்டுள்ளாய். நீ அருவருப்பானவன். நீ ஓர் ஏமாற்றுக்காரன்!"

நார்ட்டனின் முகம் அஷ்டகோணலானது. பின் அவன் வலுக்கட்டாயமாக ஒரு பரிதாபமான புன்னகையைத் தன் உதட்டில் படரவிட்டான்.

"உன் அம்மா உன்னைக் காப்பாற்றுவதற்காக உயிர் நீத்தார் என்பது உண்மைதான். அது சாபத்திற்கு எதிரான ஒரு பலமான கவசம் என்பதை மறுப்பதற்கில்லை. ஒரு விஷயம் இப்போது எனக்குப் புரிகிறது – உன்னிடம் தனித்துவமான சிறப்பு எதுவும் கிடையாது. நான் இதுநாள்வரை அது குறித்துத் தீவிரமாக யோசித்து வந்திருந்தேன். ஹாரி பாட்டர், வினோதமாக, நம் இருவருக்கும் இடையே நிறைய ஒற்றுமைகள் இருக்கின்றன. நீயும் அதைக் கவனித்திருக்கக்கூடும். நாம் இருவரும் அரை ரத்தப் பிறவிகள், அனாதைகள், மகுள்களால் வளர்க்கப்பட்டவர்கள். மாபெரும் சலசார் ஸ்லிதரினுக்குப் பிறகு, ஹாக்வார்ட்ஸில் ஸர்ப்ப பாஷையில் பேசத் தெரிந்தவர்கள் நாம் இருவராக மட்டும்தான் இருக்க வேண்டும். நம் இருவரின் சாயலும்கூட ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது . . . ஆனால் என்னிடமிருந்து நீ தப்பியது வெறும் அதிர்ஷ்டத்தால்தான். நான் அதைத்தான் தெரிந்து கொள்ள விரும்பினேன்."

நார்ட்டன் தன் மந்திரக்கோலை எந்நேரத்திலும் உயர்த்தக்கூடும் என்று எதிர்பார்த்து ஹாரி பதற்றத்துடன் காத்துக் கொண்டிருந்தான். ஆனால் நார்ட்டனின் புன்னகை மீண்டும் பெரிதாகியது.

"ஹாரி, நான் உனக்கு இப்போது ஒரு சிறு பாடத்தைக் கற்றுக் கொடுக்கப் போகிறேன். சலசார் ஸ்லிதரினின் வாரிசான வோல்டமார்ட்டின் சக்தி பெரிதா, டம்பிள்டோரால் கொடுக்க முடிந்த மிகச் சிறந்த ஆயுதங்களின் துணையுடன் இருக்கும் பிரபலமான ஹாரி பாட்டரின் சக்தி பெரிதா என்பதை நாம் இப்போது பார்க்கலாம்."

நார்ட்டன் தன் குறுகுறுப்பான பார்வையை ஃபாக்ஸ்மீதும் வகை பிரிக்கும் தொப்பியின்மீதும் வீசிவிட்டு அங்கிருந்து நடந்து சென்றான். ஹாரி, மரத்துப் போன தன் கால்களை அகலப் பரப்பி வைத்துக் கொண்டு நார்ட்டன் என்ன செய்தான் என்று பார்த்துக் கொண்டிருந்தான். நார்ட்டன், நெடிதுயர்ந்திருந்த இரண்டு தூண்களுக்கு நடுவே நின்று கொண்டு, அந்த அரையிருட்டில், ஸ்லிதரின் கற்சிலையின் முகத்தை அண்ணாந்து பார்த்தான். பின் அவன் தன் வாயை அகலமாகத் திறந்து 'ஸ்ஸ்ஸ்' என்று சீறினான். ஆனால் அவன் என்ன பேசினான் என்பது ஹாரிக்குப் புரிந்தது.

Scanned by CamScanner

"நான்கு ஹாக்வார்ட்ஸ் மந்திரவாதிகளிலும் மிகச் சிறந்த ஸ்லிதரினே, என்னிடம் பேசுங்கள்."

ஹாரி ஒரு வட்டமடித்துத் திரும்பி, அச்சிலையை ஏறிட்டுப் பார்த்தான். ஃபாக்ஸ் அவனுடைய தோளில் லேசாக ஆடியது.

ஸ்லிதரினின் பிரம்மாண்டமான முகம் அசைந்தது. அதனுடைய வாய் திறந்து கொஞ்சம் கொஞ்சமாக விரிந்து கொண்டே வந்தது. அதனுள்ளே மிகப் பெரிய இருண்ட துவாரம் ஒன்று தோன்றியது.

அச்சிலையின் வாயில் ஏதோ நெளியத் துவங்கியது. அச்சிலையின் அடியாழத்தில் இருந்து ஏதோ ஒன்று வழுக்கிக் கொண்டு வெளியே வந்தது.

ஹாரி பின்னால் நகர்ந்து கொண்டே இருந்தான். இறுதியில், அந்த இருண்ட அறையின் சுவரில் சென்று முட்டி நின்றான். அவன் தன் கண்களை இறுகப் பொத்திக் கொண்டபோது, ஃபாக்ஸ் தனது கன்னத்தில் படும்படியாகத் தன் இறக்கையை விரித்துத் தனது தோளைவிட்டுப் பறந்து போனதை அவன் உணர்ந்தான். "என்னைவிட்டுப் போகாதே!" என்று அவன் கத்த விரும்பினான். ஆனால் ராஜ ஸர்ப்பத்தை எதிர்த்துச் சண்டையிட்டு வெற்றி பெற பீனிக்ஸ் பறவைக்கு எவ்வளவு வாய்ப்பிருந்தது?

அந்த அறையின் கற்தரையில் மிகப் பெரியதாக ஏதோ ஒன்று வந்து விழுந்தது. அது தன்னை பலமாக உலுப்பிக் கொண்டதை ஹாரி உணர்ந்தான். அங்கு என்ன நடந்து கொண்டிருந்தது என்பதை அவன் அறிந்தான். அவனால் அதை உணர முடிந்தது. அந்த மாபெரும் பாம்பு ஸ்லிதரின் சிலையின் வாயிலிருந்து வெளியேறியதை ஹாரியால் துல்லியமாகக் கற்பனை செய்ய முடிந்தது. பின்னர், நார்ட்டனின் சீறும் வார்த்தைகள் அவனது காதுகளில் விழுந்தன: "அவனைக் கொல்!"

அந்த ராஜ ஸர்ப்பம் ஹாரியை நோக்கி வந்து கொண்டிருந்தது. தூசி படிந்திருந்த அந்தத் தரையில் அப்பாம்பு திடமாக ஊர்ந்து வந்து கொண்டிருந்த சத்தம் ஹாரிக்குக் கேட்டது. ஹாரி தன் கண்களை இறுக்கமாக மூடிய நிலையில் தன் கைகளைத் தனக்கு முன்னால் விரித்துத் தடவியபடி, பக்கவாட்டில் நகரத் துவங்கினான். நார்ட்டன் அதைக் கண்டு நகைத்தான் . . .

ஹாரி தடுமாறிக் கீழே விழுந்தான். கற்தரையில் அவன் பலமாக விழுந்ததில் அவனது வாயிலிருந்து ரத்தம் கசிந்தது. அந்த ராஜ ஸர்ப்பம் அவனுக்கு ஒருசில அடிகள் தள்ளி இருந்தது. அது தன்னை நெருங்கிக் கொண்டிருந்ததை ஹாரியால் உணர முடிந்தது.

அப்போது தனக்கு நேர் மேலே ஏதோ வெடித்தது போன்ற ஒரு பெரும் சத்தம் ஹாரிக்குக் கேட்டது. பலமான ஏதோ ஒன்று அவனது தலையின்மீது விழுந்ததில் அவன் அங்கிருந்த சுவர்மீது மோதினான். ராஜ ஸர்ப்பத்தின் விஷப் பற்கள் தன் உடலுக்குள் இறங்கவிருந்ததை எதிர்பார்த்து அவன் காத்திருந்தபோது, மூர்க்கத்தனமான 'ஸ்ஸ்ஸ்' ஒலி மேலும் அதிகமாகக் கேட்டது.

Scanned by CamScanner

தூண்களின்மீது ஏதோ வேகமாகத் தூக்கியடிக்கப்பட்டது போன்ற ஓர் ஓசையும் ஹாரியின் காதுகளில் விழுந்தது.

அவனால் அதற்கு மேல் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. என்ன நிகழ்ந்து கொண்டிருந்தது என்பதைப் பார்க்கப் போதுமான அளவுக்கு அவன் தன் கண்களை இடுக்கிக் கொண்டு பார்த்தான். ஒரு பெரிய கருவாலி மரக் கிளையின் அளவுக்குத் தடிமனாக இருந்த அந்த பிரம்மாண்டமான, பிரகாசமான, பச்சை நிறப் பாம்பு அங்கு படமெடுத்து நின்று கொண்டிருந்தது. அதனுடைய தலை அத்தூண்களுக்கு இடையே அங்குமிங்கும் ஆடிக் கொண்டிருந்தது. அது தன் பக்கம் திரும்பினால் தன் கண்களை மூடிக் கொள்ளத் தயாராக இருந்த ஹாரி, அப்பாம்பின் கவனத்தை எது கவர்ந்திருந்தது என்பதைக் கண்டான்.

ஃபாக்ஸ் அதன் தலையைச் சுற்றிப் பறந்து கொண்டிருந்தது. அந்த ராஜ ஸர்ப்பம், பட்டாக்கத்திகளைப் போன்று நீளமாகவும் மெலிதாகவும் இருந்த தனது விஷப் பற்களை அப்பறவையை நோக்கி நீட்டி அதைத் தாக்க முயன்றது.

ஃபாக்ஸ் சடாரென்று கீழே பாய்ந்தது. அதனுடைய நீண்ட தங்க நிற அலகு ஒரு கணம் பார்வையில் இருந்து மறைந்தது. திடீரென்று கருநிற ரத்தம் தரையில் அருவியெனக் கொட்டியது. அப்பாம்பு தன் வாலைத் தூக்கித் தரையில் ஓங்கி அடித்தது. ஹாரி மயிரிழையில் தப்பினான். ஹாரி தன் கண்களை மூடுவதற்குள் அது அவனை நோக்கித் திரும்பியது. ஹாரி நேருக்கு நேராக அதன் முகத்தைப் பார்த்தான். அதன் குழிவான மஞ்சள் நிறக் கண்கள் இரண்டும் அந்த பீனிக்ஸ் பறவையால் கொத்திக் குதறப்பட்டிருந்தன. அதன் கண்களிலிருந்து ரத்தம் தரையில் கொட்டிக் கொண்டிருந்தது. அப்பாம்பு வலியால் துடித்துக் கொண்டிருந்தது.

"ஐயோ!" என்று நார்ட்டன் அலறியது ஹாரிக்குக் கேட்டது. **"அந்தப் பறவையை விட்டுவிடு! அந்தப் பறவையை விட்டுவிடு! அந்தப் பையன் உனக்குப் பின்னால்தான் இருக்கிறான். உன்னால் அவனை நுகர முடியும். அவனைக் கொல்!"**

குருடாகிப் போயிருந்த அந்த ராஜ ஸர்ப்பம் குழப்பத்தில் அங்குமிங்கும் ஆடியது. நாசமாக்கப்பட்டிருந்த அதன் கண்களிலிருந்து ரத்தம் அருவியெனக் கொட்டிக் கொண்டிருக்க, ஃபாக்ஸ் தன்னுடைய அமானுஷமான பாடலைப் பாடியபடி அப்பாம்பின் தலையைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டு, அந்த ராஜ ஸர்ப்பத்தின் செதில்கள் நிறைந்த மூக்கை அங்குமிங்கும் கொத்திக் கொண்டிருந்தது.

"யாராவது உதவுங்கள், யாராவது உதவுங்கள்!" என்று ஹாரி காட்டுத்தனமாகக் கத்தினான். "யாராவது உதவுங்கள்!"

அந்த ராஜ ஸர்ப்பம் மீண்டும் தன் வாலை அத்தரையின் குறுக்காக ஒரு சுழற்றுச் சுழற்றியது. அதிலிருந்து தன்னைக் காத்துக்

Scanned by CamScanner

கொள்வதற்காக ஹாரி குனிந்தபோது, மென்மையான ஏதோ ஒன்று தனது முகத்தின்மீது வந்து விழுந்ததை அவன் உணர்ந்தான்.

அந்த ராஜ ஸர்ப்பம் தன் வாலைச் சுழற்றிய சுழற்றலில், வகை பிரிக்கும் தொப்பி ஹாரியின் கையில் வந்து விழுந்திருந்தது. ஹாரி அதைப் பிடித்துக் கொண்டான். அது மட்டும்தான் இப்போது அவனிடம் மிச்சமிருந்தது. அவனுக்குக் கிடைத்திருந்த கடைசி வாய்ப்பு அதுதான். அவன் அதைத் தன் தலையில் திணித்துக் கொண்டு தரையில் நெடுஞ்சாண்கிடையாகத் தாவி விழுந்தான். அந்த ராஜ ஸர்ப்பத்தின் வால் மீண்டும் ஒரு முறை அவனுக்கு மேலாகச் சுழன்று சென்றது.

"எனக்கு உதவு! எனக்கு உதவு!" என்று ஹாரி தன் மனத்திற்குள் நினைத்தான். அந்தத் தொப்பியின் உள்ளே அவன் தனது கண்களை இறுக்கமாக மூடியிருந்தான். **"தயவு செய்து, எனக்கு உதவு!"**

அதற்கு அந்தத் தொப்பியிடமிருந்து பதில் எதுவும் வரவில்லை. அதற்குப் பதிலாக, கண்ணுக்குப் புலப்படாத ஏதோ ஒரு கை அத்தொப்பியை மிகவும் அழுத்திப் பிடித்து நெருக்கியதுபோல அது அவனை நெறித்தது. கனமான, கடினமான ஏதோ ஒன்று அவனுடைய தலையில் வந்து விழுந்து அவனைக் கிட்டத்தட்டக் கீழே தள்ளியது. எதிர்பாராத அந்தத் தாக்குதலால் தனது கண்களுக்கு முன்னால் நட்சத்திரங்கள் மினுமினுக்க, அவன் தன் கையால் அத்தொப்பியின் உச்சத்தைப் பிடித்து அதைத் தன் தலையிலிருந்து கழற்ற முனைந்தபோது, அதனடியில் நீளமான, உறுதியான ஏதோ ஒன்று இருந்ததை அவன் உணர்ந்தான்.

பளபளத்துக் கொண்டிருந்த ஒரு வெள்ளி வாள் அத்தொப்பிக்குள் தோன்றியது. அதன் கைப்பிடியில் முட்டைகளின் அளவில் இருந்த சிவப்புக் கற்கள் ஜொலித்துக் கொண்டிருந்தன.

"அந்தப் பையனைக் கொல்! அந்தப் பறவையை விட்டுவிடு! அந்தப் பையன் உனக்குப் பின்னால்தான் இருக்கிறான். முகர்ந்து பார்! அவனை முகர்ந்து பார்!" என்று நார்ட்டன் கத்தினான்.

ஹாரி ஏற்கனவே தயாராக நின்று கொண்டிருந்தான். அந்த ராஜ ஸர்ப்பம் தன் தலையைக் கீழிறக்கிக் கொண்டிருந்தது. அதன் உடல் சுருண்டு கொண்டிருந்தது. அது அவனை நோக்கித் திரும்பியபோது, அங்கிருந்த தூண்களைத் தாக்கியது. முன்பு அதன் கண்கள் இருந்த இடத்தில் இப்போது ரத்தக் களரியாக இருந்த குழிகளை ஹாரியால் பார்க்க முடிந்தது. அந்த ராஜ ஸர்ப்பம் தன் வாயைப் பெரிதாகப் பிளந்து கொண்டிருந்தது. அதன் வாய் அவனை ஒரேயடியாக விழுங்கிவிடக்கூடிய அளவுக்குப் பெரியதாக இருந்தது. அதன் வாயிலிருந்த விஷப் பற்களை ஹாரி பார்த்தான். அவை அவனுடைய வாள் அளவுக்கு நீளமாகவும் ஒல்லியாகவும் பளபளப்பாகவும் விஷத்தன்மையோடும் இருந்தன . . .

அந்த ராஜ ஸர்ப்பம் குருட்டாம்போக்காகப் பாய்ந்தது. ஹாரி அதைச் சமாளித்துக் குனிந்து கொண்டான். அது அந்த அறையின்

Scanned by CamScanner

சுவரைத் தாக்கியது. பிறகு அது மீண்டும் தாக்கியது. பிளவுபட்டிருந்த தன் நாக்கைக் கொண்டு அது ஹாரியின் பக்கத்தில் பலமாக அடித்தது. ஹாரி அந்த வாளைத் தன் இரு கைகளாலும் உயரே தூக்கினான்.

அந்த ராஜ ஸர்ப்பம் மீண்டும் தாக்கியது. இம்முறை அதன் குறி துல்லியமாக இருந்தது. ஹாரி தன் பலம் முழுவதையும் பிரயோகித்து அந்த வாளின் கைப்பிடிவரை உள்ளே செல்லுமாறு, அதை அந்த ராஜ ஸர்ப்பத்தின் வாயினுள் செருகினான்.

ஹாரியின் கைகள் சூடான ரத்தத்தில் குளித்துக் கொண்டிருந்தபோது, அவன் தனது முழங்கைக்குச் சற்று மேலே ஒரு கடுமையான வலியை உணர்ந்தான். ஒரு நீண்ட விஷப் பல் அவனுடைய கையில் மேலும் மேலும் ஆழமாகப் புதைந்து கொண்டிருந்தது. பின் அந்த ராஜ ஸர்ப்பம் பக்கவாட்டில் சரிந்து, தரையில் விழுந்து துடித்தபோது அதன் விஷப் பல் உடைந்து சிதறியது.

ஹாரி சுவரில் சரிந்தபடியே சாய்ந்தான். தன் உடல் முழுவதும் விஷத்தைப் பரப்பிக் கொண்டிருந்த அந்த விஷப் பல்லை அவன் தன் கையிலிருந்து பிடுங்கினான். ஆனால் காலம் கடந்துவிட்டிருந்ததை அவன் அறிந்தான். அந்தக் காயத்திலிருந்து பயங்கரமான வலி மெதுவாகவும் சீராகவும் பரவிக் கொண்டிருந்தது. அவன் அந்த விஷப் பல்லைக் கீழே போட்டுவிட்டு, தனது ரத்தம் தன்னுடைய அங்கியை நனைத்துக் கொண்டிருந்ததைப் பார்த்துக் கொண்டிருந்தபோதே அவனுடைய பார்வை மங்கிக் கொண்டு வந்தது. அந்தப் பாதாள அறை வேகமாகக் கரைந்து கொண்டிருந்ததுபோல அவனுக்குத் தோன்றியது.

அப்போது ரத்தச் சிவப்பு நிறத்தில் ஏதோ ஒன்று அவனுக்கு அருகே கடந்து சென்றது. தனக்குப் பக்கத்தில் கூரிய நகங்களின் மெதுவான பிராண்டல் ஒலியும் அவனுக்குக் கேட்டது.

"ஃபாக்ஸ்," என்று ஹாரி கூப்பிட்டான். அவனது வாய் குழறிக் கொண்டிருந்தது. "ஃபாக்ஸ், நீ அபாரமாகச் செயல்பட்டாய் . . . " அப்பாம்பின் விஷப்பல் தனது கையில் பதிந்திருந்த இடத்தில் அந்தப் பறவை தனது அழகான தலையை வைத்ததை அவன் உணர்ந்தான்.

எதிரொலி எழுப்பிக் கொண்டிருந்த காலடிச் சத்தங்கள் ஹாரிக்குக் கேட்டன. பின் ஓர் இருண்ட நிழல் அவனுக்கு முன்னால் வந்து நின்றது.

"ஹாரி பாட்டர், உன் கதை முடிந்துவிட்டது," என்று அவனுக்கு மேலேயிருந்து நார்ட்டனின் குரல் வந்தது. "நீ இறந்துவிட்டாய். அதை டம்பிள்டோரின் பறவையும் அறிந்திருக்கிறது. ஹாரி பாட்டர், அது என்ன செய்து கொண்டிருக்கிறது தெரியுமா? உனக்காக அழுது கொண்டிருக்கிறது!"

ஹாரி தன் கண்களைத் திறந்து மூடினான். ஃபாக்ஸின் தலை அவனுக்குத் தெளிவாகத் தெரிவதும் மறைவதுமாக இருந்தது.

Scanned by CamScanner

அதனுடைய பளபளப்பான சிறகுகளில், அடர்த்தியான வெண் முத்துக்கள் போன்ற கண்ணீர்த் துளிகள் சொட்டிக் கொண்டிருந்தன.

"ஹாரி பாட்டர், நான் இங்கே உட்கார்ந்து நீ இறந்து கொண்டிருப்பதை வேடிக்கைப் பார்க்கப் போகிறேன். உனக்கு எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் நீ தாராளமாக எடுத்துக் கொள்ளலாம். எனக்கு அவசரமில்லை."

ஹாரிக்கு மயக்கமாக வந்தது. அவனைச் சுற்றி இருந்த எல்லாமே சுற்றுவதுபோல இருந்தது.

"ஹாரி பாட்டரின் கதை இப்படியா முடிய வேண்டும்?" என்ற நார்ட்டனின் குரல் வெகு தொலைவிலிருந்து கேட்பதுபோலக் கேட்டது. "ரகசியங்கள் அடங்கிய பாதாள அறையில், நண்பர்களால் கைவிடப்பட்ட நிலையில், தன்னந்தனியாக, தீய மந்திர சக்தியின் சக்கரவர்த்தியை முட்டாள்தனமாகச் சவாலுக்கு அழைத்து அவரால் முறியடிக்கப்பட்டுவிட்டான் ஹாரி பாட்டர்! வெகு விரைவில், ஈன ரத்தப் பிறவியான உன் அம்மாவுடன் போய் நீ சேர்ந்து கொள்வாய் . . . ஹாரி, உன்னுடைய அம்மா உனக்குப் பன்னிரண்டு வருட வாழ்க்கையைக் கடன் வாங்கிக் கொடுத்தாள், அவ்வளவுதான். ஆனால் வோல்டமார்ட் கடைசியில் உன்னைத் தீர்த்துக் கட்டிவிட்டார். இறுதியில் இது இப்படித்தான் முடியும் என்பது உனக்கே தெரிந்த விஷயம்தான்."

"இறப்பது என்பது இதுதான் என்றால்," என்று ஹாரி யோசித்தான், "இது ஒன்றும் அவ்வளவு மோசமில்லை." வலிகூட அவனிடமிருந்து விடைபெற்றுக் கொண்டிருந்தது . . .

ஆனால் இதுதான் இறத்தலா? பாதாள அறை இருளடைவதற்கு பதிலாகத் தெளிவாகிக் கொண்டிருந்தது. ஹாரி தன் தலையை லேசாக அசைத்தான். ஃபாக்ஸ் பறவை ஹாரியின் கையில் தன் தலையைச் சாய்த்து வைத்துக் கொண்டு இன்னும் அங்கு உட்கார்ந்திருந்தது. அவனுடைய காயத்தைச் சுற்றி எல்லா இடங்களிலும் அதன் வெண்முத்துக் கண்ணீர் பளபளத்துக் கொண்டிருந்தது – ஆனால் அவனது காயம் மட்டும் காணாமல் போயிருந்தது.

"ஏய், பறவையே! அவனிடமிருந்து போய்விடு," என்று நார்ட்டன் திடீரென்று கூறியது ஹாரிக்குக் கேட்டது. "அவனிடமிருந்து ஓடிப் போய்விடு! நான் கூறுகிறேன், ஓடிப் போய்விடு!"

ஹாரி தன் தலையைத் தூக்கினான். நார்ட்டன் ஹாரியின் மந்திரக்கோலை ஃபாக்ஸை நோக்கி நீட்டிக் கொண்டிருந்தான். துப்பாக்கி வெடித்ததுபோல ஒரு சத்தம் கேட்டது. ஃபாக்ஸ் மீண்டும் பறந்தது.

நார்ட்டன் ஹாரியின் கையை வெறித்துப் பார்த்தபடி, "பீனிக்ஸ் பறவையின் கண்ணீர்," என்று வெறுப்புடன் கூறினான். "குணமாக்கும் சக்தி அதற்கு உண்டு . . . நான் மறந்துவிட்டேன் . . ."

Scanned by CamScanner

அவன் ஹாரியின் முகத்தை ஊடுருவிப் பார்த்தான். "ஆனால் அது எந்த வித்தியாசத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை. உண்மையில், இந்த வழி எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது – நீயும் நானும் மட்டும் . . . ஹாரி பாட்டர், நீயும் நானும் ஒற்றைக்கு ஒற்றை . . ."

நார்ட்டன் ஹாரியின் மந்திரக்கோலை மீண்டும் உயர்த்தினான்.

அப்போது சிறகடிப்புச் சத்தத்தின் ஊடாக, ஃபாக்ஸ் மீண்டும் ஹாரியின் தலைக்கு மேலாகப் பறந்து வந்தது. அப்போது ஏதோ ஒன்று ஹாரியின் மடியில் வந்து விழுந்தது – நார்ட்டனின் நாட்குறிப்புப் புத்தகம்!

ஹாரியின் மந்திரக்கோல் உயர்த்தப்பட்ட நிலையில் நார்ட்டனின் கையில் இருக்க, ஹாரியும் நார்ட்டனும் அந்த நாட்குறிப்புப் புத்தகத்தை ஒரு கணம் உற்றுப் பார்த்தனர். உடனே ஹாரி எந்தவித யோசனையும் இன்றி, எதைப் பற்றியும் கவலைப்படாமல், அது தான் கட்டாயமாகச் செய்ய வேண்டிய ஒரு வேலை என்பதுபோல, தனக்கு அருகில் தரையில் கிடந்த விஷப் பல்லை எடுத்து, அப்புத்தகத்தின் இதயப் பகுதியில் செருகினான்.

ஒரு நீண்ட, ரத்தத்தை உறைய வைக்கும் கத்தல் அங்கு கேட்டது. அந்த நாட்குறிப்புப் புத்தகத்திலிருந்து நீரூற்றுப் போல மை பீய்ச்சியடித்து ஹாரியின் கையை நனைத்துத் தரையில் வெள்ளமெனக் கொட்டியது. நார்ட்டன் துடித்துக் கொண்டும், வளைந்து நெளிந்து கொண்டும், பெருங்கூச்சலிட்டுக் கொண்டும் இருந்தான். அதற்குப் பிறகு . . .

அவன் மறைந்துவிட்டான். ஹாரியின் மந்திரக்கோல் சிறு சத்தத்துடன் தரையில் வந்து விழுந்தது. அதன் பின் அமைதி நிலவியது. தொடர்ந்து அந்த நாட்குறிப்புப் புத்தகத்திலிருந்து கசிந்து கீழே சொட்டிக் கொண்டிருந்த மையின் சத்தத்தைத் தவிர வேறு எந்தச் சத்தமும் அங்கு கேட்கவில்லை. ராஜ ஸர்ப்பத்தின் விஷம் அந்த நாட்குறிப்புப் புத்தகத்தின் முன்னட்டையில் இருந்து பின்னட்டைவரை ஒரு பெரிய ஓட்டையைப் போட்டிருந்தது.

ஹாரி தனது உடல் முழுவதும் நடுங்கியவாறு எழுந்து நின்றான். அவன் ஃபுளூ பவுடரை உபயோகித்துப் பல மைல் தூரம் பறந்து வந்திருந்ததைப்போல அவனது தலை பயங்கரமாகச் சுற்றிக் கொண்டிருந்தது. அவன் மெதுவாகத் தன்னுடைய மந்திரக்கோலையும் வகை பிரிக்கும் தொப்பியையும் எடுத்துக் கொண்டான். ஒரு பெரிய இழுப்பு இழுத்து அந்த வாளை அப்பாம்பின் வாயிலிருந்து பிடுங்கினான்.

அப்போது அந்தப் பாதாள அறையின் ஒரு முனையிலிருந்து ஒரு மெல்லிய முனகல் ஒலி வந்தது. ஹாரி ஜின்னியை நோக்கி விரைந்தான். அவள் எழுந்து உட்கார்ந்திருந்தாள். அவளுடைய பிரமிப்பான பார்வை தரையில் இறந்து கிடந்த அந்த பிரம்மாண்டமான ராஜ ஸர்ப்பத்தின் உடலிலிருந்து, ரத்தத்தில்

Scanned by CamScanner

குளித்திருந்த அங்கியுடன் நின்று கொண்டிருந்த ஹாரியை நோக்கியும், பின் அவனது கையிலிருந்த நாட்குறிப்புப் புத்தகத்தை நோக்கியும் பயணித்தது. அவள் நடுக்கமான பெருமூச்சு ஒன்றை விட்டாள். அவளுடைய கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் கொட்டத் துவங்கியது.

"ஹாரி – ஓ – ஹாரி – நாம் காலை உணவு அருந்திக் கொண்டிருந்தபோது நான் உன்னிடம் சொல்ல முயன்றேன் – ஆனால் பெர்சியின் முன்னிலையில் அதை என்னால் கூற முடியவில்லை. அது நான்தான்! ஹாரி – ஆனால் நான் – நான் சத்தியம் செய்கிறேன் – நான் வேண்டுமென்றே அவற்றைச் செய்யவில்லை – நார்ட்டன் என்னைச் செய்ய வைத்தான் — அவன் என்னை ஆட்கொண்டுவிட்டான் – இதோ விழுந்து கிடக்கிறதே, இதை நீ எப்படிக் கொன்றாய் – நார்ட்டன் எங்கே? அவன் அந்த நாட்குறிப்புப் புத்தகத்தின் உள்ளேயிருந்து வந்ததுதான் கடைசியாக எனக்கு ஞாபகம் இருக்கிறது –"

ஹாரி, அந்த நாட்குறிப்புப் புத்தகத்தைத் தூக்கிப் பிடித்து, அதில் அந்த ராஜ ஸர்ப்பத்தின் விஷப்பல் ஏற்படுத்தியிருந்த துளையைக் காட்டி, "இப்போது ஒன்றும் பிரச்சனை இல்லை," என்று கூறினான். "நார்ட்டனின் கதை முடிந்துவிட்டது. இந்த ராஜ ஸர்ப்பமும் காலி! வா! இப்போது நாம் இங்கிருந்து கிளம்பலாம் – "

ஜின்னி எழுந்திருக்க அவன் அவளுக்கு உதவிக் கொண்டிருந்தபோது, "என்னைப் பள்ளியிலிருந்து தூக்கியெறியப் போகிறார்கள்," என்று அவள் அழத் துவங்கினாள். "ஹாக்வார்ட்ஸுக்கு என் அண்ணன் பில் – வந்த நாளில் இருந்தே – நான் – நானும் இங்கு வர வேண்டும் என்று கனவு கண்டு கொண்டிருந்தேன். இப்போது – இப்போது – நான் இங்கிருந்து துரத்தப்படப் போகிறேன் – அம்மாவும் அப்பாவும் என்ன சொல்லப் போகிறார்களோ?"

ஃபாக்ஸ் அந்தப் பாதாள அறையின் வாசலில் வட்டமிட்டுக் கொண்டு அவர்களுக்காகக் காத்திருந்தது. ஹாரி ஜின்னியை முன்னால் வருமாறு ஊக்கப்படுத்தினான். இறந்து கிடந்த அந்த ராஜ ஸர்ப்பத்தின் உடலின்மீது ஏறி, அந்த இடத்தில் எதிரொலித்துக் கொண்டிருந்த துக்கத்தின் ஊடாக நடந்து அவர்கள் அச்சுரங்கத்திற்குள் நுழைந்தனர். தங்களுக்குப் பின்னால் அந்தக் கற்கதவு மிருதுவான 'ஸ்ஸ்ஸ்' என்ற ஒலியுடன் மூடிக் கொண்டது ஹாரிக்குக் கேட்டது.

அந்த இருண்ட சுரங்கத்தின் வழியாக அவர்கள் ஒருசில நிமிடங்கள் நடந்ததும், எங்கோ தொலைதூரத்தில் பாறைகள் நகர்த்தப்பட்டச் சத்தம் ஹாரிக்குக் கேட்டது.

ஹாரி வேகமாக நடந்து கொண்டே, "ரான்!" என்று கத்தினான். "ஜின்னி நலமாக இருக்கிறாள். அவள் என்னுடன் வந்து கொண்டிருக்கிறாள்!"

Scanned by CamScanner

நிம்மதியும் மகிழ்ச்சியும் ஒருசேர வெளிப்பட்ட ரானின் குரலை ஹாரி கேட்டான். ஹாரியும் ஜின்னியும் அடுத்த முனையை கடந்ததும், அங்கு விழுந்து கிடந்த பாறைக் குவியல்களின் ஊடாக ரான் கஷ்டப்பட்டுத் தோண்டியிருந்த ஒரு பெரிய துவாரத்தின் வழியாக அவனது ஆவலான முகம் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்ததை அவர்கள் கண்டனர்.

"ஜின்னி!" என்று சந்தோஷக் கூச்சலிட்ட ரான், அந்தத் துவாரத்தின் வழியாகத் தன் கையை நீட்டி அவளை முதலில் தன் பக்கமாக இழுத்துக் கொண்டான். "நீ உயிரோடு இருக்கிறாய்! என்னால் நம்பவே முடியவில்லை! என்ன நடந்தது?"

அவன் அவளை அணைத்துக் கொள்ள முனைந்தான். ஆனால் அவள் அவனைத் தள்ளிவிட்டுவிட்டு அழத் துவங்கினாள்.

மலர்ச்சியான முகத்துடன் ரான் அவளைப் பார்த்து, "அழாதே. நீ இப்போது நலமாகத்தானே இருக்கிறாய்!" என்று கூறினான். "இப்போது எல்லாம் முடிந்துவிட்டது – ஆமாம், இந்தப் பறவை எங்கிருந்து வந்தது?"

ஜின்னியைத் தொடர்ந்து ஃபாக்ஸ் அந்தத் துவாரத்தின் வழியாகப் பாய்ந்து வந்திருந்தது.

ஹாரியும் அந்தத் துவாரத்தின் வழியாக நுழைந்து வந்து, "அது டம்பிள்டோருடையது," என்று கூறினான்.

ஹாரியின் கையில் பளபளத்துக் கொண்டிருந்த வாளைப் பார்த்து வாயைப் பிளந்த ரான், "உனக்கு எப்படி ஒரு வாள் கிடைத்தது?"

ஹாரி ஜின்னியைப் பக்கவாட்டில் பார்த்தபடி, "நாம் இங்கிருந்து வெளியேறியவுடன் எல்லாவற்றையும் விளக்குகிறேன்," என்று கூறினான்.

"ஆனால் –"

ஹாரி அவசரமாக, "அப்புறம்," என்று கூறினான். ரகசியங்கள் அடங்கிய பாதாள அறையைத் திறந்தது யார் என்பதை ரானிடம் தெரிவிக்க அவன் இன்னும் தயாராக இருக்கவில்லை – குறிப்பாக, ஜின்னியின் முன்பாக! "லாக்ஹார்ட் எங்கே?"

குழாய் இருந்த இடத்தை நோக்கித் தன் தலையைத் திருப்பி, தன் பல்லைக் காட்டியவாறே, "அங்கே பின்னால் இருக்கிறார்," என்று ரான் கூறினான். "அவர் மோசமான நிலைமையில் இருக்கிறார். வா, வந்து பார்."

ஃபாக்ஸ் அவர்களை வழிநடத்திச் சென்றது. அதனுடைய பெரிய ரத்தச் சிவப்பு நிற இறக்கைகள் அந்த இருட்டில் மெல்லிய தங்க நிற வெளிச்சத்தை ஒளிர்ந்து கொண்டிருந்தன. அவர்கள் அந்தக் குழாயின் வாய் இருந்த இடம்வரை நடந்து சென்றனர். அங்கு லாக்ஹார்ட் தனக்குத் தானே ஏதோ பாட்டை முணுமுணுத்துக் கொண்டு சாந்த சொரூபனாக உட்கார்ந்திருந்தார்.

Scanned by CamScanner

"அவருடைய நினைவுகள் மறைந்துவிட்டன," என்று ரான் கூறினான். "ஞாபகமறதி மந்திரம் பின்னோக்கி வேலை செய்துவிட்டது. நம்மைத் தாக்குவதற்குப் பதிலாக அது அவரையே தாக்கிவிட்டது. தான் யார் என்றோ, தான் எங்கிருக்கிறோம் என்றோ, அல்லது நாம் யார் என்றோ அவருக்குத் இப்போது சுத்தமாகத் தெரியாது. இங்கே வந்து காத்திருக்குமாறு நான் கூறினேன். இப்போது தனக்குத் தானே ஆபத்தை ஏற்படுத்திக் கொள்ளக்கூடிய ஒரு நிலையில் அவர் இருக்கிறார்."

லாக்ஹார்ட் அவர்கள் எல்லோரையும் அன்பொழுகப் பார்த்தார்.

"ஹலோ! என்று அவர் கூறினார். "வினோதமான இடம். நீங்கள் இங்கு வசிக்கிறீர்களா?"

ரான் ஹாரியை நோக்கித் தன் புருவங்களை உயர்த்தியவாறே, "இல்லை," என்று கூறினான்.

ஹாரி குனிந்து அந்த இருண்ட, நீண்ட குழாயைப் பார்த்தான்.

அவன் ரானிடம், "நாம் இதன் வழியாக மேலே எப்படிப் போகப் போகிறோம் என்று நீ யோசித்து வைத்திருக்கிறாயா?" என்று கேட்டான்.

ரான் இல்லையென்று தலையசைத்தான். ஆனால் ஃபாக்ஸ் ஹாரியைக் கடந்து பறந்து வந்து அவன் முன்னால் சிறகடித்துக் கொண்டு நின்றது. பளபளத்துக் கொண்டிருந்த அதன் சிறிய கண்கள் அந்த இருட்டில் பிரகாசமாக இருந்தன. அது தங்க நிறத்தில் இருந்த தன்னுடைய நீண்ட வால் இறகுகளை ஆட்டியது. ஹாரி அதைக் குழப்பத்துடன் பார்த்தான்.

குழம்பிப் போயிருந்த ரானும், "நீ அதன் வாலைப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்று அது கூறுவதுபோலத் தெரிகிறது . . ." என்று கூறினான். "ஆனால் உன் எடையை எப்படி ஒரு பறவையால் சுமக்க முடியும்?"

"ஃபாக்ஸ் ஒரு சாதாரணப் பறவை கிடையாது," என்று ஹாரி கூறினான். அவன் மற்றவர்களை நோக்கித் திரும்பினான். "நாம் ஒருவரையொருவர் பிடித்துக் கொள்ள வேண்டும். ஜின்னி, நீ ரானின் கையைப் பிடித்துக் கொள். பேராசிரியர் லாக்ஹார்ட் –"

ரான் லாக்ஹார்ட்டிடம், "அவன் உங்களைத்தான் கூப்பிடுகிறான்," என்று அதிகாரமாகக் கூறினான்.

"நீங்கள் ஜின்னியின் மற்றொரு கையைப் பிடித்துக் கொள்ளுங்கள்."

ஹாரி அந்த வாளையும் வகை பிரிக்கும் தொப்பியையும் தன்னுடைய பெல்ட்டில் செருகிக் கொண்டான். ரான் ஹாரியின் அங்கியின் பின்புறத்தைப் பிடித்துக் கொண்டான். வினோதமாகச் சூடாக இருந்த ஃபாக்ஸின் வால் இறகுகளை ஹாரி இறுகப் பற்றிக் கொண்டான்.

Scanned by CamScanner

மிகமிக அபூர்வமான எடையின்மை தனது மொத்த உடலிலும் பாய்ந்ததுபோல ஹாரி உணர்ந்தான். அடுத்தக் கணம், 'விஷ்' என்று அவர்கள் அந்தக் குழாயின் ஊடாக மேல்நோக்கிப் பறந்து கொண்டிருந்தனர். தனக்குக் கீழே தொங்கிக் கொண்டிருந்த லாக்ஹார்ட், "அற்புதம்! அதிஅற்புதம்! இது மாயாஜாலம்தான்!" என்று கூறியதை ஹாரி கேட்டான். குளிர்ந்த காற்று ஹாரியின் தலைமுடியை விளாசிக் கொண்டு சென்றது. அவன் அந்தப் பயணத்தை ரசிக்கத் துவங்குவதற்குள் அது முடிந்துவிட்டிருந்தது. அவர்கள் நால்வரும் முனகல் மர்ட்டிலின் குளியலறையின் ஈரத் தரையை அடைந்திருந்தனர். லாக்ஹார்ட் தன்னுடைய தொப்பியைச் சரி செய்து கொண்டிருந்தபோது, அந்தத் தண்ணீர்த் தொட்டி மீண்டும் நகர்ந்து அந்தக் குழாயை மறைத்துக் கொண்டது.

மர்ட்டில் தனது விழிகளை உருட்டி அவர்களைப் பார்த்தது.

"நீ உயிருடன் இருக்கிறாயா?" என்று அது ஹாரியைப் பார்த்து வெறுமையாகக் கூறியது.

ஹாரி தன்னுடைய மூக்குக்கண்ணாடியின்மீது தெறித்திருந்த ரத்தத்தைத் துடைத்துக் கொண்டே, "மர்ட்டில், நான் உயிருடன் மீண்டு வந்ததற்கு நீ இவ்வளவு தூரம் ஏமாற்றமடைய வேண்டிய தேவையில்லை," என்று கூறினான்.

"இல்லையில்லை . . . நான் யோசித்துக் கொண்டிருந்தேன். நீ இறந்து போயிருந்தால், என்னுடைய குளியலறையைப் பகிர்ந்து கொள்ள நான் உன்னை அனுமதித்திருப்பேன்," என்று மர்ட்டில் வெள்ளி நிறத்தில் வெட்கப்பட்டுக் கொண்டே கூறியது.

அவர்கள் அந்தக் குளியலறையைவிட்டு வெளியே வந்து, இருட்டாகவும் வெறிச்சோடியும் கிடந்த தாழ்வாரத்திற்குள் நுழைந்தபோது, "அஹ்ஹ்!" என்று ரான் முனகினான். "ஹாரி, மர்ட்டிலுக்கு உன்னைப் பிடித்துப் போய்விட்டது என்று நான் நினைக்கிறேன். ஜின்னி, உனக்குப் போட்டி முளைத்திருக்கிறது!"

ஆனால் இன்னும் ஜின்னியின் முகத்தில் மௌனமாகக் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது.

"இப்போது நாம் எங்கே போகப் போகிறோம்?" என்று ரான் கேட்டான். ஜின்னியின் முகத்தில் எதிர்பார்ப்புப் படர்ந்திருந்தது. ஹாரி ஃபாக்ஸைச் சுட்டிக்காட்டினான்.

அந்தத் தாழ்வாரத்தில் தங்க நிறத்தில் மினுமினுத்துக் கொண்டிருந்த ஃபாக்ஸ் அவர்களை வழிநடத்திக் கொண்டிருந்தது. அவர்கள் அதைப் பின்தொடர்ந்து சென்றனர். ஒருசில கணங்களுக்குப் பிறகு அவர்கள் பேராசிரியர் மெக்கானகல்லின் அலுவலகத்திற்கு முன்னால் நின்று கொண்டிருந்தனர்.

ஹாரி அதன் கதவைத் தட்டிவிட்டு உள்ளே நுழைந்தான்.

Scanned by CamScanner

அத்தியாயம் பதினெட்டு

டாபியின் விமோசனம்

ஹாரி, ரான், ஜின்னி, லாக்ஹார்ட் ஆகிய நால்வரும் தங்கள்மீது கொழகொழப்பான பொருட்கள் (ஹாரியைப் பொறுத்தவரை, அதோடு ரத்தமும் சேர்ந்திருந்தது) வழிந்தோட அந்த அறையின் வாசல் வழியாக நுழைந்தபோது, ஒருகணம் அங்கு மௌனம் நிலவியது. அடுத்து ஓர் அலறல் வெளிப்பட்டது.

"ஜின்னி!"

அது மோலி. அவர் அந்த அறையில் இருந்த கணப்படுப்பின் அருகே உட்கார்ந்து அழுது கொண்டிருந்தார். ஜின்னியைக் கண்டதும் அவர் துள்ளி எழுந்தார். அவருக்கு வெகு அருகாமையில் ஆர்தர் வீஸ்லீயும் நின்று கொண்டிருந்தார். இருவரும் பாய்ந்தோடி வந்து ஜின்னியைக் கட்டிப் பிடித்துக் கொண்டனர்.

ஆனால் ஹாரி அவர்களைத் தாண்டி என்ன இருந்தது என்று பார்த்தான். கணப்படுப்பின் மேடை அருகே நிறைவான புன்னகையுடன் பேராசிரியர் டம்பிள்டோர் நின்று கொண்டிருந்தார். அவருக்கு அருகே பேராசிரியர் மெக்கானகல் தன் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு, தன் சுவாசத்தைச் சீராக்கிக் கொண்டு பெருமிதமாக நின்று கொண்டிருந்தார். ஃபாக்ஸ், ஹாரியின் காதோரம் உரசிக் கொண்டு சென்று டம்பிள்டோரின் தோளில் அமர்ந்து கொண்டபோது, தானும் ரானும் மோலியின் அரவணைப்பிற்குள் சிக்குண்டு கிடந்ததை ஹாரி கண்டான்.

"நீ அவளைக் காப்பாற்றிவிட்டாய்! நீ அவளைக் காப்பாற்றிவிட்டாய்! ஹாரி, நீ எப்படி அதைச் செய்தாய்?"

"நாங்கள் எல்லோரும் அதைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறோம்," என்று பேராசிரியர் மெக்கானகல் பலவீனமாகக் கூறினார்.

மோலி ஹாரியை விடுவித்தார். ஹாரி ஒரு கணம் தயங்கினான். பின் அவன் நேராக அங்கிருந்த மேசைக்குச் சென்று தன்னிடம் இருந்த சிவப்புக் கற்கள் பதிக்கப்பட்டிருந்த வாள், வகை பிரிக்கும் தொப்பி, நார்ட்டனின் நாட்குறிப்புப் புத்தகத்தின் மிச்சசொச்சங்கள் ஆகியவற்றை எடுத்து அதன்மீது வைத்தான்.

Scanned by CamScanner

பின் அவன் எல்லாவற்றையும் கூறத் துவங்கினான். சுமார் கால் மணி நேரம் அங்கு நிலவிக் கொண்டிருந்த அமைதியின் ஊடாக அவன் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தான். அவ்வப்போது தனக்குக் கேட்டுக் கொண்டிருந்த உருவமற்றக் குரலைப் பற்றியும், தான் கேட்டுக் கொண்டிருந்தது ஒரு ராஜ ஸர்ப்பத்தின் குரல் என்பதைக் கடைசியில் ஹெர்மயனி எவ்வாறு கண்டுபிடித்திருந்தாள் என்பதைப் பற்றியும், தானும் ரானும் சிலந்திப் பூச்சிகளைப் பின்தொடர்ந்து தடை செய்யப்பட்டக் காட்டிற்குள் சென்றதைப் பற்றியும், கடந்த முறை ராஜ ஸர்ப்பம் எந்த இடத்தில் ஒரு மாணவியைப் பலி வாங்கியது என்பதை அரகாக் கூறியதைப் பற்றியும், அப்படிப் பலியானது முனகல் மர்ட்டில்தான் என்பதையும், ரகசியங்கள் அடங்கிய பாதாள அறையின் நுழைவு வழி முனகல் மர்ட்டிலின் குளியலறைக்குள் இருக்கக்கூடும் என்பதைத் தான் ஊகித்ததைப் பற்றியும் ஹாரி கூறினான் . . .

அவன் மூச்சுவிட நிறுத்தியபோது, பேராசிரியர் மெக்கானகல் அவனிடம், "நல்லது," என்று கூறினார். "ரகசியங்கள் அடங்கிய பாதாள அறையின் நுழைவு வழியை நீ கண்டுபிடித்துவிட்டாய் – அதோடு கூடவே, குறைந்தபட்சம், பள்ளியின் நூறு விதிமுறைகளையாவது நீ மீறியிருக்கிறாய் என்பதை நான் இங்கு குறிப்பிட்டாக வேண்டும் – ஹாரி, எல்லாம் சரிதான், ஆனால் அங்கிருந்து நீங்கள் எல்லோரும் எப்படி உயிரோடு திரும்பி வந்தீர்கள்?"

இவ்வளவு நேரம் பேசியிருந்ததால் தொண்டை வறண்டு போயிருந்த ஹாரி, ஃபாக்ஸ் சரியான சமயத்தில் அங்கு வந்தது பற்றியும், வகை பிரிக்கும் தொப்பி தனக்கு அந்த வாளைக் கொடுத்தது பற்றியும் அவர்களிடம் கூறினான். அதற்குப் பிறகு அவன் திக்கித் திணறினான். அவன் இதுவரை நார்ட்டனின் நாட்குறிப்புப் புத்தகத்தைப் பற்றிக் குறிப்பிடுவதைத் தவிர்த்து வந்திருந்தான் – ஜின்னியைப் பற்றியும்தான்! அவள் தன் அம்மாவின் தோள்களில் சாய்ந்து நின்று கொண்டிருந்தாள். அவளது கண்களிலிருந்து இன்னும் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. அவர்கள் அவளைப் பள்ளியிலிருந்து துரத்திவிட்டால் என்ன செய்வது? ஹாரிக்கு உதறல் எடுக்க ஆரம்பித்தது. நார்ட்டனின் நாட்குறிப்புப் புத்தகம் இனியும் வேலை செய்யாது. அப்படியிருக்கும்போது, அவ்வளவையும் அவளைச் செய்யத் தூண்டியது நார்ட்டன்தான் என்பதை எவ்வாறு நிரூபிப்பது?

உள்ளுணர்வு உந்த அவன் டம்பிள்டோரை நிமிர்ந்து பார்த்தான். அவர் லேசாகப் புன்னகைத்துக் கொண்டிருந்தார். கணப்படுப்பின் நெருப்பு வெளிச்சம் அவரது பிறை நிலவு மூக்குக்கண்ணாடியில் பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

"நான் தெரிந்து கொள்ள ஆவலாக இருப்பது, வோல்டமார்ட் ஜின்னியை எப்படி வசியப்படுத்தினான் என்பதைத்தான்," என்று

Scanned by CamScanner

டம்பிள்டோர் மென்மையாகத் துவக்கினார். "இப்போது அவன் அல்பேனியக் காடுகளில் ஒளிந்து கொண்டிருக்கிறான் என்று எனக்குத் தெரிந்த தகவல்கள் தெரிவிக்கின்றன."

நிம்மதி – அற்புதமான, இளஞ்சூடான, எல்லாவற்றையும் அரவணைத்துக் கொள்கின்ற ஒரு நிம்மதி – ஹாரியை ஆட்கொண்டது.

"என்ன – என்ன சொன்னீர்கள்?" என்று மோலி அதிர்ச்சியடைந்த குரலில் கேட்டார். **"பெயர் சொல்லப்படக்கூடாதவன் – என்னுடைய ஜின்னியை – வசியப்படுத்தினானா? ஜின்னி எப்படி இதை . . . அவள் . . ."**

"இந்த நாட்குறிப்புப் புத்தகம்தான் அதற்குக் காரணம்," என்று ஹாரி அவசர அவசரமாகக் கூறிவிட்டு, அதை எடுத்து டம்பிள்டோரிடம் காட்டினான். "நார்ட்டன் தனக்குப் பதினாறு வயதாக இருந்தபோது இதை எழுதினான்."

டம்பிள்டோர் அந்த நாட்குறிப்புப் புத்தகத்தை ஹாரியிடமிருந்து வாங்கி, கருகியும் நனைந்தும் போயிருந்த அதன் பக்கங்களைத் தனது கோணலான நீண்ட மூக்கின் வழியாக உற்றுப் பார்த்தார்.

"அபாரம்!" என்று அவர் மென்மையாகக் கூறினார். "ஹாக்வார்ட்ஸின் சரித்திரத்திலேயே மிகவும் புத்திசாலியான மாணவன் அவன்தான் என்பதில் சந்தேகமே கிடையாது." எதையும் நம்ப முடியாமல் திகைத்துப் போய் உட்கார்ந்திருந்த வீஸ்லீ தம்பதியினரை நோக்கி அவர் திரும்பினார்.

"வோல்டமார்ட் முன்பு நார்ட்டன் மால்வோ என்று அழைக்கப்பட்டான் என்பதை மிக மிகச் சிலரே அறிவர். இங்கு ஹாக்வார்ட்ஸில் ஐம்பது வருடங்களுக்கு முன்பு நானே அவனுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தேன். பள்ளிப் படிப்பை முடித்ததும் அவன் மறைந்துவிட்டான் . . . பல இடங்களுக்கும் தூர தேசங்களுக்கும் அவன் பயணித்தான் . . . தீய மந்திர சக்திக் கலையில் அவன் ஆழமாக இறங்கினான். மோசமானவர்களுடன் அவன் கூட்டு வைத்துக் கொண்டான். பலப் பல மாயாஜாலமான, ஆபத்தான உருமாற்றங்களை அவன் எடுத்தான். பின் வோல்டமார்ட்டாக மீண்டும் உதயமானபோது யாராலும் அடையாளம் காண முடியாதபடி அவன் முற்றிலும் மாறிப் போயிருந்தான். முன்பு இப்பள்ளியில் பள்ளித் தலைமை மாணவனாக இருந்த, புத்திசாலித்தனமான, வசீகரமான ஒருவனை எவரும் வோல்டமார்ட்டோடு தொடர்புபடுத்திப் பார்க்கவில்லை."

"ஆனால், ஜின்னி," என்று மோலி கேட்டார். "ஜின்னிக்கும் அவனுக்கும் என்ன தொடர்பு?"

"அவனுடைய நாட்குறிப்புப் புத்தகம்," என்று ஜின்னி அழுதாள். "இந்த வருடம் முழுவதும் நான் அதில் எழுதிக் கொண்டிருந்தேன். அவனும் பதிலுக்கு எழுதிக் கொண்டிருந்தான் –"

Scanned by CamScanner

திகைப்பின் உச்சிக்கே சென்ற ஆர்தர், "ஜின்னி!" என்று இரைந்தார். "நான் உனக்கு எதையுமே கற்றுக் கொடுத்திருக்கவில்லையா? நான் உன்னிடம் எப்போதும் என்ன கூறி வந்திருக்கிறேன்? தனக்குத் தானே சிந்தித்துக் கொள்ளும் எதுவொன்றையும் நம்பக்கூடாது என்று நான் உன்னிடம் கூறியது உனக்கு நினைவிருக்கவில்லையா? **ஒன்றின் மூளை எங்கே இருக்கிறது என்பதை உன்னால் பார்க்க முடியாவிட்டால், அதை ஒருபோதும் நம்பாதே என்று நான் உனக்குப் படித்துப் படித்துச் சொல்லியிருக்கிறேனே?** அந்த நாட்குறிப்புப் புத்தகத்தை நீ ஏன் என்னிடமோ அல்லது உன் அம்மாவிடமோ காட்டவில்லை? **அதைப் போன்ற சந்தேகத்திற்கிடமான ஒரு பொருள், கண்டிப்பாகத் தீய மந்திர சக்தி தொடர்பான ஒன்றாகத்தானே இருக்க முடியும்?"**

"எனக்குத் தெரியாது," என்று ஜின்னி தேம்பினாள். "நீங்கள் எனக்கு வாங்கிக் கொடுத்த ஒரு புத்தகத்தின் உள்ளே அதை நான் கண்டெடுத்தேன். யாரோ அதை அதில் தவறுதலாகப் போட்டுவிட்டுப் பிறகு மறந்துவிட்டனர் என்று நான் நினைத்தேன் . . . "

டம்பிள்டோர் இடையில் குறுக்கிட்டு, "ஜின்னி இப்போது நேராக மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும்," என்று கண்டிப்பான குரலில் கூறினார். "இது அவளுக்கு ஒரு பயங்கரமான அனுபவமாக இருந்திருக்கும். நான் அவளுக்குத் தண்டனைகள் எதுவும் வழங்கப் போவதில்லை. தன்னைவிட அதிக அறிவார்ந்த, வயது முதிர்ந்த மந்திரவாதியான வோல்டமார்ட்டால் அவள் வஞ்சிக்கப்பட்டிருக்கிறாள்." அவர் எழுந்து சென்று வாசற்கதவைத் திறந்தார். பிறகு ஜின்னியைக் கனிவாகப் பார்த்தபடி, "உனக்குக் கொஞ்சம் ஓய்வு தேவை. ஆவி பறக்கும் ஒரு பெரிய கோப்பை சாக்லேட் பானத்தைக் கேட்டு வாங்கிக் குடி. அதை நான் எப்போது குடித்தாலும் அது எனக்குத் தெம்பூட்டத் தவறுவதில்லை," என்று கூறிவிட்டு அவர் மேலும் தொடர்ந்தார். "மேடம் பாம்ஃபிரே இன்னும் விழித்துக் கொண்டுதான் இருக்கிறார். கல்லாக்கப்பட்டுள்ளவர்களுக்கு அவர் இப்போது மன்ட்ரேக் மாயத்திரவத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். ராஜ ஸர்ப்பத்தின் தாக்குதலுக்கு உள்ளானவர்கள் எந்த நேரத்திலும் விழித்தெழக்கூடும் என்று நான் நினைக்கிறேன்."

"அப்படியானால், ஹெர்மயனி நன்றாக இருக்கிறாளா?" என்று ரான் மலர்ச்சியாகக் கேட்டான்.

"நீடித்திருக்கும் பாதிப்பு எதுவும் ஏற்பட்டுவிடவில்லை," என்று டம்பிள்டோர் கூறினார்.

மோலி ஜின்னியை வழிநடத்திச் சென்றார். ஆர்தரும் உடன் சென்றார். ஆனால் அவர் இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீண்டிருக்கவில்லை.

Scanned by CamScanner

டம்பிள்டோர் யோசனையுடன் பேராசிரியர் மெக்கானகல்லிடம், "இதை நாம் ஒரு சிறப்பான விருந்தின் மூலம் கொண்டாட வேண்டும் என்று நான் நினைக்கிறேன். நீங்கள் போய் சமையலறையை உஷார்ப்படுத்துகிறீர்களா?" என்று கேட்டார்.

"சரி," என்று தயங்காமல் கூறிய பேராசிரியர் மெக்கானகல், எழுந்து வாசலுக்குச் சென்றார். "அப்படியானால் ஹாரியையும் ரானையும் கையாளும் பொறுப்பை நீங்கள் எடுத்துக் கொள்கிறீர்களா?"

"கண்டிப்பாக," என்று டம்பிள்டோர் கூறினார்.

பிறகு பேராசிரியர் மெக்கானகல் அந்த அறையைவிட்டு வெளியேறினார். ஹாரியும் ரானும் உறுதியில்லாமல் டம்பிள்டோரையே பார்த்துக் கொண்டிருந்தனர். 'தங்களைக் கையாள்வது' என்று பேராசிரியர் மெக்கானகல் எந்த அர்த்தத்தில் கூறினார்? தங்களுக்கு நிச்சயமாகத் தண்டனை எதுவும் கிடைக்காது, இல்லையா?

"நீங்கள் இனியொருமுறை பள்ளி விதிமுறைகளை மீறினால் உங்களைப் பள்ளியைவிட்டு வெளியேற்றுவதைத் தவிர எனக்கு வேறு வழியிருக்காது என்று உங்களை நான் முன்பு எச்சரித்திருந்தது எனக்கு இப்போது நினைவிற்கு வருகிறது," என்று டம்பிள்டோர் கூறினார்.

ரான் பயத்தில் வாயைப் பிளந்தான்.

"பெரியவர்கள்கூடத் தாங்கள் கூறியதைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டிய தருணங்கள் தோன்றுவதுண்டு என்பதைத்தான் இது காட்டுகிறது," என்று டம்பிள்டோர் புன்னகையுடன் கூறினார். "பள்ளிக்குச் சிறப்பான சேவை புரிந்ததற்கான சிறப்பு விருது உங்கள் இருவருக்கும் வழங்கப்படும். அப்புறம் உங்களுக்கு வேறு என்ன கொடுக்கலாம்? சரி – கிரிஃபின்டார் அணிக்குத் தலைக்கு இருநூறு புள்ளிகள்!"

ரான், லாக்ஹார்ட்டின் காதலர் தினப் பூக்களின் நிறத்திற்குச் சிவந்தான். பிறகு அவன் தன் வாயை மீண்டும் மூடிக் கொண்டான்.

"ஆனால் இங்கிருக்கும் ஒருவர் இந்த ஆபத்தான சாகசத்தில் தன்னுடைய பங்கு குறித்து மிகவும் அடக்கமாக இருக்கிறார்," என்று டம்பிள்டோர் கூறினார். "லாக்ஹார்ட், நீங்கள் ஏன் இவ்வளவு அடக்கமாக இருக்கிறீர்கள்?"

ஹாரிக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவன் லாக்ஹார்ட்டைப் பற்றிச் சுத்தமாக மறந்து போயிருந்தான். அவன் திரும்பிப் பார்த்தபோது, லாக்ஹார்ட் அந்த அறையின் ஒரு மூலையில் நின்று கொண்டிருந்தார். அவரது முகத்தில் தெளிவில்லாத புன்னகை ஒன்று தொக்கி நின்றது. டம்பிள்டோர் லாக்ஹார்ட்டிடம் பேசியபோது, அவர் யாரோடு பேசிக் கொண்டிருந்தார் என்று லாக்ஹார்ட் தனக்குப் பின்னால் திரும்பிப் பார்த்தார்.

Scanned by CamScanner

"பேராசிரியர் டம்பிள்டோர் அவர்களே," என்று ரான் அவசரமாக அழைத்தான். "கீழே ரகசியங்கள் அடங்கிய பாதாள அறையில் நாங்கள் இருந்தபோது ஒரு விபத்து ஏற்பட்டது. பேராசிரியர் லாக்ஹார்ட் –"

"என்ன நான் ஒரு பேராசிரியரா?" என்று லேசான ஆச்சரியத்துடன் லாக்ஹார்ட் கேட்டார். "நான் ஓர் உதவாக்கரை என்றுதான் என்னைப் பற்றி நினைத்திருந்தேன். நான் ஒரு பேராசிரியரா?"

"அவர் எங்கள்மீது ஒரு ஞாபகமறதி மந்திரத்தைப் பிரயோகிக்க முனைந்தார். ஆனால் என்னுடைய மந்திரக்கோல் அதை அவர்மீதே பிரயோகித்துவிட்டது," என்று ரான் அமைதியாக டம்பிள்டோரிடம் எடுத்துரைத்தான்.

"அடப் பாவமே!" என்று டம்பிள்டோர் தன் தலையை ஆட்டியவாறு கூறினார். அவரது நீண்ட வெண்தாடி லேசாகக் குலுங்கியது. "லாக்ஹார்ட், உங்கள் வாளே உங்களுக்கு எமனாகிவிட்டதா?"

"வாளா?" என்று லாக்ஹார்ட் அப்பாவித்தனமாகக் கேட்டார். "என்னிடம் வாள் எதுவும் இல்லை." அவர் ஹாரியைச் சுட்டிக்காட்டி, "அதோ, அந்தப் பையனிடம் பெரிய வாள் ஒன்று இருக்கிறது. அவன் வேண்டுமானால் அதை உங்களுக்குக் கடனாகக் கொடுப்பான்," என்று கூறினார்.

டம்பிள்டோர் ரானிடம், "ரான், நீ பேராசிரியர் லாக்ஹார்ட்டையும் மருத்துவமனைக்குக் கூட்டிச் செல்கிறாயா?" என்று கேட்டார். "நான் ஹாரியுடன் ஒருசில வார்த்தைகள் பேச வேண்டியுள்ளது."

லாக்ஹார்ட் கவலையில்லாமல் வெளியே நடந்தார். ரான் கதவைச் சாத்துவதற்கு முன்பாக ஹாரியையும் டம்பிள்டோரையும் நோக்கி வியப்பான ஒரு பார்வையை வீசிவிட்டுச் சென்றான்.

டம்பிள்டோர் நெருப்புக்குப் பக்கத்தில் இருந்த ஒரு நாற்காலிக்கு இடம் மாறினார்.

"உட்கார், ஹாரி," என்று அவர் கூறினார். ஹாரி உட்கார்ந்தான். ஓர் இனம் புரியாத பதற்றம் அவனுக்கு ஏற்பட்டது.

"முதல் காரியமாக, நான் உனக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்," என்று டம்பிள்டோர் கூறினார். அவரது கண்கள் மீண்டும் பிரகாசித்தன. "நீ கீழே பாதாள அறையில் இருந்தபோது என்மீது அபாரமான நன்றியுணர்வை வெளிப்படுத்தியிருந்திருக்க வேண்டும். வேறு எதுவும் ஃபாக்ஸை உன்னிடம் அழைத்து வந்திருக்காது."

அவர் அந்த பீனிக்ஸ் பறவையைத் தடவிக் கொடுத்தார். அது அவரது கால்மூட்டிற்குத் தாவியது. டம்பிள்டோர் அவனை உற்றுப் பார்த்ததால் ஹாரி அசௌகரியமாகப் புன்னகைத்தான்.

Scanned by CamScanner

"அப்படியானால் நீ நார்ட்டனை நேரில் சந்தித்துவிட்டாய், இல்லையா?" என்று டம்பிள்டோர் யோசனையுடன் கேட்டார். "அவன் உன்மீதுதான் அதிக நாட்டம் கொண்டிருந்திருப்பான் என்று நான் நம்புகிறேன்."

அவனை அரித்துக் கொண்டிருந்த ஒன்று, திடீரென்று, அவனைக் கேட்காமலேயே அவனது வாயிலிருந்து வெளியே துள்ளிக் குதித்தது.

"பேராசிரியரே . . . நான் தன்னைப்போலவே இருப்பதாக நார்ட்டன் என்னிடம் கூறினான். . . அது ஏதோ ஒரு வினோதமான ஒற்றுமை என்று அவன் கூறினான் . . ."

"அப்படியா சொன்னான்?" என்று டம்பிள்டோர் கேட்டார். அவர் ஹாரியை யோசனையுடன் பார்த்துக் கொண்டே, "ஹாரி, நீ என்ன நினைக்கிறாய்?" என்று வினவினார்.

"நான் அவனைப்போல இல்லை என்றுதான் நினைக்கிறேன்," என்று ஹாரி கூறினான். அவனது குரல் அவன் நினைத்திருந்ததைவிட அதிகச் சத்தமாக ஒலித்தது. "நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால் . . . நான் கிரிஃபின்டார் அணியில் இருக்கிறேன் . . . நான் . . . "

ஆனால் அவன் மௌனத்தில் ஆழ்ந்தான். அவனது மனத்தில் புதைந்திருந்த சந்தேகம் மீண்டும் தலைகாட்டியது.

ஒரு கண நேரம் கழித்து அவன், "பேராசிரியரே," என்று அழைத்தான். "வகை பிரிக்கும் தொப்பி, நான் ஸ்லிதரின் அணியில் இருந்தால் என்னால் மிகச் சிறந்தவனாக ஆக முடியும் என்று கூறியது. என்னால் ஸர்ப்ப பாஷையில் பேச முடியும் என்பதால். . . நான்தான் ஸ்லிதரினின் வாரிசு என்று கொஞ்ச காலத்திற்கு எல்லோரும் நினைத்தனர் . . ."

"ஹாரி, உன்னால் ஸர்ப்ப பாஷையில் பேச முடிவதற்கு என்ன காரணம் தெரியுமா?" என்று டம்பிள்டோர் அமைதியாகக் கேட்டார். "சலசார் ஸ்லிதரினின் மிச்சமிருக்கும் ஒரே வாரிசான வோல்டமார்ட்டாலும் ஸர்ப்ப பாஷை பேச முடியும் என்பதுதான் அதற்குக் காரணம். என் கணக்குச் சரியாக இருந்தால், எந்த இரவில் அந்த நெற்றித் தழும்பு உனக்குக் கிடைத்ததோ, அதே இரவில் அவன் தன்னுடைய சக்திகளில் சிலவற்றை உனக்குக் கொடுத்துவிட்டான். அதை அவன் வேண்டுமென்றே செய்யவில்லை என்று நான் நினைக்கிறேன் . . ."

ஹாரி இடி விழுந்தவன்போல, "என்ன சொன்னீர்கள்? வோல்டமார்ட் தன்னுடைய சில சக்திகளை எனக்குக் கொடுத்துவிட்டானா?" என்று கேட்டான்.

"அப்படித்தான் தெரிகிறது."

ஹாரி பரிதாபமாக டம்பிள்டோரின் முகத்தையே பார்த்தபடி, "அப்படியானால் நான் ஸ்லிதரின் அணியில்தான் இருக்க வேண்டும்," என்று கூறினான். "வகை பிரிக்கும் தொப்பி, என்னுள்

Scanned by CamScanner

இருக்கும் ஸ்லிதரினின் சக்தியை உணர்ந்திருக்க வேண்டும். அதனால்தான் அது –"

"ஆனாலும் அது உன்னை கிரிஃபின்டார் அணியில்தான் போட்டுள்ளது, இல்லையா?" என்று டம்பிள்டோர் கேட்டார். "ஹாரி, நான் சொல்வதை மிகவும் கவனமாகக் கேள். சலசார் ஸ்லிதரின் தானாகவே தேர்ந்தெடுத்த வெகுசில மாணவர்களிடம் இருந்த அரிய சக்திகள் பல உன்னிடமும் குடி கொண்டுள்ளன. அவருக்கே சொந்தமான ஸர்ப்ப பாஷை அறிவு . . . இக்கட்டான சூழல்களைத் திறமையாகக் கையாளும் குணநலன் . . . எடுத்த முடிவில் அசைக்க முடியாத நம்பிக்கை . . . அப்புறம், சமயங்களில் விதிகளை மதிக்காதிருத்தல் . . . இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம்." அவரது மீசை மீண்டும் துடித்தது. "ஆனாலும் வகை பிரிக்கும் தொப்பி உன்னை கிரிஃபின்டார் அணியில் போட்டிருக்கிறது. அது ஏன் என்று உன்னால் ஊகிக்க முடிகிறதா? யோசித்துப் பார்."

தான் வீழ்த்தப்பட்டிருந்தது போன்ற ஒரு குரலில், ஹாரி, "அது என்னை கிரிஃபின்டார் அணியில் போட்டதற்குக் காரணம் . . ." என்று இழுத்தான். "என்னை ஸ்லிதரின் அணியில் போட வேண்டாம் என்று நான் அதை வற்புறுத்தினேன் . . ."

"ஹாரி, மிகச் சரியாகச் சொன்னாய்," என்று கூறிய டம்பிள்டோர் மீண்டும் பிரகாசமாகப் புன்னகைத்தார். "அதுதான் உன்னை நார்ட்டனிடமிருந்து முற்றிலுமாக வேறுபடுத்துகிறது. **ஹாரி, நம்முடைய திறமைகளைவிட, நாம் தேர்ந்தெடுக்கும் விஷயங்கள்தான் நாம் உண்மையிலேயே யார் என்பதைப் படம் போட்டுக் காட்டுகின்றன.**" ஹாரி பிரமிப்படைந்தவனாய் ஆடாமல் அசையாமல் தன் நாற்காலியில் உட்கார்ந்திருந்தான். "ஹாரி, நீ கிரிஃபின்டார் அணிக்குத்தான் சொந்தமானவன் என்பதற்கு உனக்கு நிரூபணம் வேண்டுமென்றால், நீ இதைப் பார்க்க வேண்டும் என்று நான் பரிந்துரைக்கிறேன்."

டம்பிள்டோர், ரத்தம் தோய்ந்திருந்த அந்த வெள்ளி வாளை, பேராசிரியர் மெக்கானகல்லின் மேசையிலிருந்து எட்டி எடுத்து ஹாரியின் கையில் கொடுத்தார். ஹாரி சுவாரசியமின்றி அதைத் திருப்பினான். அதிலிருந்த சிவப்புக் கற்கள் கணப்படுப்பின் நெருப்பு ஒளியில் தீயெனத் தகித்தன. பின் அதன் கைப்பிடிக்குச் சற்றுக் கீழே பொறிக்கப்பட்டிருந்த பெயரை அவன் பார்த்தான்.

கோட்ரிக் கிரிஃபின்டார்.

"ஹாரி, ஓர் உண்மையான கிரிஃபின்டாரால்தான் அந்தத் தொப்பியிலிருந்து இதை வரவழைத்திருக்க முடியும்," என்று டம்பிள்டோர் மிகச் சாதாரணமாகக் கூறினார்.

ஒரு நிமிடத்திற்கு அவர்கள் இருவருமே பேசவில்லை. பிறகு, டம்பிள்டோர், பேராசிரியர் மெக்கானகல்லின் மேசை

Scanned by CamScanner

இழுப்பறையைத் திறந்து ஒரு மை பாட்டிலையும் ஓர் இறகுப் பேனாவையும் வெளியே எடுத்தார்.

"ஹாரி, இப்போது உனக்கு உடனடியாகத் தேவைப்படுபவை சாப்பாடும் தூக்கமும்தான். நீ நேராக விருந்திற்குச் செல். நான் அஸ்கபான் சிறைக்குக் கடிதம் எழுதப் போகிறேன் – நம்முடைய கோட்டைப் பாதுகாவலரை அங்கிருந்து விடுவிக்க வேண்டும். அதோடு, டெய்லி புராஃபெட் பத்திரிகைக்கு ஒரு விளம்பர வாசகத்தையும் நான் தயாரிக்க வேண்டியிருக்கிறது," என்று அவர் சிந்தனையோடு கூறினார். "'தீய மந்திர சக்திகளுக்கு எதிரான பாதுகாப்பு' ஆசிரியர் ஒருவர் நமக்கு மீண்டும் தேவைப்படுகிறார். இந்தப் பாடத்தை எடுக்கும் ஆசிரியர்கள் நம்மோடு அதிக நாட்கள் தங்குவதில்லை என்பதுபோலத் தெரிகிறது."

ஹாரி எழுந்து வாசற்கதவை நோக்கிச் சென்றான். அவன் அதைத் திறப்பதற்காக அதன் கைப்பிடியில் தன் கையை வைத்தபோது, அது வெளியே இருந்து பலமாகத் திறக்கப்பட்டது. திறந்த வேகத்தில் அக்கதவு உள்ளே இருந்த சுவரில் வந்து மோதியது.

லூசியஸ் மால்ஃபோய் அங்கு நின்று கொண்டிருந்தார். அவரது முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்துக் கொண்டிருந்தது. அவரது கையைப் பிடித்துக் கொண்டு, ஏகப்பட்டக் கட்டுக்கள் போடப்பட்டிருந்த நிலையில் டாபி கூனிக் குறுகித் தொங்கிக் கொண்டிருந்தது.

"லூசியஸ், மாலை வணக்கம்," என்று டம்பிள்டோர் இனிமையாகக் கூறினார்.

லூசியஸ் உள்ளே வேகமாக நுழைந்ததில் ஹாரியைக் கிட்டத்தட்டக் கீழே தள்ளிவிட்டிருந்தார். அவருக்குப் பின்னால் அவருடைய அங்கியின் முனையைப் பிடித்துக் கொண்டு, டாபி, கூன் போட்ட நிலையில் ஓடி வந்தது. அதன் முகத்தில் பயமும் பீதியும் படர்ந்திருந்தன.

லூசியஸ் தனது ஜீவனற்றக் கண்களை டம்பிள்டோரின்மீது பதித்தவாறு, "நீங்கள் மீண்டும் இங்கே வந்துவிட்டதாகத் தெரிகிறது," என்று கூறினார். "பள்ளியின் நிர்வாகக் குழு உங்களைத் தற்காலிகமாக வேலையில் இருந்து நீக்கியிருந்ததாக எனக்கு ஞாபகம். நீங்கள் எப்படி இங்கே?"

டம்பிள்டோர் சாந்தமாகப் புன்னகைத்துக் கொண்டே, "லூசியஸ், இங்கே பாருங்கள்," என்று துவக்கினார். "இன்று மற்றப் பதினோரு நிர்வாகக் குழு உறுப்பினர்களும் என்னைத் தொடர்பு கொண்டனர். உண்மையில் ஆந்தை மழையே பொழிந்தது என்றுதான் கூற வேண்டும். ஆர்தர் விஸ்லீயின் பெண் கொல்லப்பட்டதாகத் தாங்கள் கேள்விப்பட்டதால் நான் உடனே இங்கே செல்ல வேண்டும் என்று அவர்கள் என்னைக் கேட்டுக் கொண்டனர். இந்த வேலைக்கு நான்தான் சிறந்த நபர் என்று அவர்கள் கருதுவதுபோலத் தெரிகிறது. விநோதமான கதைகள்

Scanned by CamScanner

சிலவற்றையும் அவர்கள் என்னிடம் கூறினர். என்னைத் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யத் தாங்கள் சம்மதிக்காவிட்டால், தங்களுடைய குடும்பங்களின்மீது சாபங்களையும் மாய மந்திரங்களையும் ஏவிவிடப் போவதாக நீங்கள் மிரட்டியதாக அவர்கள் நினைப்பதுபோலத் தெரிகிறது."

லூசியஸின் முகம் வழக்கத்தைவிட அதிகமாக வெளுத்தது. ஆனால் அவரது கண்களில் கோபம் இன்னும் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது.

"அப்படியானால், நீங்கள் தாக்குதல்களை நிறுத்திவிட்டீர்கள்? குற்றவாளியைப் பிடித்துவிட்டீர்கள்? அப்படித்தானே?" என்று அவர் ஏளனமாகக் கேட்டார்.

"ஆமாம்," என்று டம்பிள்டோர் புன்னகையுடன் கூறினார்.

"என்ன?" என்று லூசியஸ் அதிர்ந்து போய்க் கேட்டார். "யார் அது?"

"லூசியஸ், கடந்த முறை எவன் குற்றம் புரிந்தானோ, அவனேதான் இம்முறையும் குற்றம் புரிந்திருக்கிறான். ஆனால் இம்முறை வோல்டமார்ட் வேறொரு நபர் மூலம் தன்னுடைய நாட்குறிப்புப் புத்தகத்தின் ஊடாக அதை நிகழ்த்தியுள்ளான்!"

டம்பிள்டோர், மத்தியில் பெரிய ஓட்டை இருந்த அந்த நாட்குறிப்புப் புத்தகத்தை எடுத்து லூசியஸிடம் காட்டினார். அவர் லூசியஸை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தார். ஆனால் ஹாரியோ டாபியை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அந்த எல்ஃப் வினோதமான ஒன்றைச் செய்து கொண்டிருந்தது. அதனுடைய பெரிய கண்கள் அர்த்தபுஷ்டியுடன் ஹாரியின்மீது நிலைத்திருந்தன. அது முதலில் அந்த நாட்குறிப்புப் புத்தகத்தைச் சுட்டிக்காட்டியது. பிறகு லூசியஸைச் சுட்டிக்காட்டியது. பிறகு தன் தலையில் தன் முஷ்டியால் பலமாக அடித்துக் கொண்டது. அது இவற்றைத் திரும்பத் திரும்பச் செய்து கொண்டிருந்தது.

"அப்படியா?" என்று லூசியஸ் மெதுவாக டம்பிள்டோரிடம் கேட்டார்.

டம்பிள்டோர், லூசியஸின் கண்களை நேருக்கு நேராக உற்றுப் பார்த்தபடி, "ஒரு புத்திசாலித்தனமான திட்டம்," என்று ஏற்ற இறக்கமற்ற ஒரு குரலில் கூறினார். "இங்கிருக்கும் ஹாரியும் –" லூசியஸ் ஹாரியை நோக்கித் திரும்பி உன்னிப்பாக அவனைப் பார்த்தார், "– அவனது நண்பன் ரான் வீஸ்லீயும் இப்புத்தகத்தைக் கண்டுபிடித்திருக்காவிட்டால், ஜின்னியின்மீது எல்லாப் பழியும் விழுந்திருக்கும். அவள் தானாகவே இச்செயல்களில் ஈடுபட்டிருக்கவில்லை என்பதை நிரூபிப்பது இயலாத காரியமாக ஆகியிருக்கும் . . ."

லூசியஸ் எதுவும் பேசவில்லை. திடீரென்று அவரது முகம் கல்லாக இறுகிப் போனது.

Scanned by CamScanner

"லூசியஸ், இதைக் கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள்," என்று டம்பிள்டோர் கூறினார். "அப்படி மட்டும் நடந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்? தூய ரத்தப் பரம்பரையைச் சேர்ந்த, மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த குடும்பங்களில் வீஸ்லீ குடும்பத்தினரும் அடங்குவர். ஆர்தர் வீஸ்லீயின் சொந்தப் பெண்ணே மகுள்களுக்குப் பிறந்தவர்களைத் தாக்கி, அவர்களைக் கொன்று குவித்துக் கொண்டிருந்தாள் என்று தெரிய வரும்போது, இது ஆர்தர் வீஸ்லீமீதும் அவருடைய மகுள்கள் பாதுகாப்புச் சட்டத்தின்மீதும் எப்படிப்பட்டப் பாதிப்புகளை ஏற்படுத்தியிருக்கும்? அதிர்ஷ்டவசமாக, இந்த நாட்குறிப்புப் புத்தகம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நார்ட்டனின் நினைவுகளும் இதிலிருந்து துடைத்தெறியப்பட்டுள்ளன. இல்லையென்றால், என்ன நடந்திருக்கும் என்பதை யாரால் ஊகிக்க முடியும் . . ."

லூசியஸுக்கு வாயைத் திறந்தாக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

"ஆமாம், அதிர்ஷ்டவசமானதுதான்," என்று அவர் இறுக்கமாகக் கூறினார்.

அவருக்குத் தெரியாமல், டாபி, மீண்டும் முதலில் அந்த நாட்குறிப்பைச் சுட்டிக்காட்டியது. பின்னர் லூசியஸைச் சுட்டிக்காட்டியது. பிறகு தன் தலையில் பலமாக அடித்துக் கொண்டது.

ஹாரிக்குத் திடீரென்று எல்லாம் தெளிவானது. அவன் டாபியை நோக்கித் தன் தலையை அசைத்தான். டாபி ஒரு மூலைக்குச் சென்று, தனக்குத் தானே தண்டனை கொடுத்துக் கொள்வதற்காகத் தன் காதுகளைத் திருகிக் கொண்டிருந்தது.

"திருவாளர் லூசியஸ் மால்ஃபாய் அவர்களே, அந்த நாட்குறிப்புப் புத்தகம் ஜின்னியை எப்படி வந்தடைந்தது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள விரும்புகிறீர்களா?" என்று ஹாரி கேட்டான்.

லூசியஸ் அவனை நோக்கித் திரும்பினார்.

"அந்த முட்டாள் பெண்ணுக்கு அது எப்படிக் கிடைத்தது என்று எனக்கு எப்படித் தெரியும்?" என்று அவர் கேட்டார்.

"ஏனென்றால், நீங்கள்தான் அதை அவளிடம் சேர்ப்பித்தீர்கள்," என்று ஹாரி கூறினான். 'ஃப்ளரிஷ் & பிளாட்ஸ்' புத்தகக் கடையில் வைத்து நீங்கள் அதைச் செய்தீர்கள். நீங்கள் அவளுடைய பழைய உருவமாற்றப் புத்தகத்தை எடுத்து அதனுள் அந்த நாட்குறிப்புப் புத்தகத்தைத் திருட்டுத்தனமாக நுழைத்துவிட்டீர்கள், அப்படித்தானே?"

அவர் வெளுத்துப் போயிருந்த தன் கை முஷ்டியை மடக்குவதும் விரிப்பதுமாக இருந்தார்.

"அதை நிரூபித்துக் காட்டு," என்று அவர் சீறினார்.

Scanned by CamScanner

டம்பிள்டோர் ஹாரியைப் பார்த்துப் புன்னகைத்தபடி, "ஓ, அதை யாராலும் நிரூபிக்க முடியாது," என்று கூறினார். "அதுவும் இப்போது நார்ட்டன் இந்த நாட்குறிப்புப் புத்தகத்திலிருந்து மாயமாய் மறைந்துவிட்டப் பிறகு அது சாத்தியமே இல்லை. ஆனால் லூசியஸ், வோல்டமார்ட்டின் பழைய பள்ளிப் பொருட்கள் எதையும் இனிமேலும் யாருக்கும் விநியோகித்துக் கொண்டு திரிய வேண்டாம் என்று நான் உங்களுக்கு அறிவுரை கூறுகிறேன். அவற்றில் ஏதாவது ஒன்று எந்தப் பாவமும் அறியாத இளம்பிஞ்சுகளின் கைகளை இனி வந்தடைந்ததோ, அது உங்களிடம் இருந்துதான் வந்தது என்பதை நிரூபிப்பதற்கு ஆர்தர் வீஸ்லீ முன்னணியில் இருப்பார் என்று நான் நினைக்கிறேன் . . ."

லூசியஸ் எழுந்து நின்றார். அவரது வலது கை துடித்துக் கொண்டிருந்ததை ஹாரி கண்டான். அவர் தன்னுடைய மந்திரக்கோலை வெளியே எடுக்க முனைந்ததுபோல அவனுக்குப் பட்டது. மாறாக, அவர் தன்னுடைய எல்ஃபின் பக்கம் திரும்பினார்.

"டாபி, நாம் போகலாம்," என்று கூறினார்.

அவர் அந்த அறைக் கதவை இழுத்துத் திறந்தார். டாபி அதை நோக்கி வேகமாக வந்தபோது அவர் டாபியை ஓங்கி ஓர் உதை விட்டார். அது வெளியே போய் விழுந்தது. வலியால் அது தாழ்வாரம் நெடுகிலும் ஊளையிட்டுக் கொண்டே சென்றது ஹாரிக்கும் டம்பிள்டோருக்கும் கேட்டது. ஹாரி தீவிரமாக யோசித்துக் கொண்டு ஒரு நிமிடம் நின்றான். பின் அவனுக்கு ஒரு யோசனை பளிச்சிட்டது.

அவன் டம்பிள்டோரிடம் அவசரமாக, "பேராசிரியரே, நான் அந்த நாட்குறிப்புப் புத்தகத்தை லூசியஸ் அவர்களிடம் திருப்பிக் கொடுக்கலாமா?" என்று கேட்டான்.

"கண்டிப்பாக, ஹாரி," என்று டம்பிள்டோர் கூறினார். "சீக்கிரமாக வந்துவிடு. விருந்து காத்துக் கொண்டிருக்கிறது என்பது நினைவிருக்கட்டும்!"

ஹாரி அந்த நாட்குறிப்புப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு அந்த அலுவலகத்தைவிட்டு மின்னலெனப் பாய்ந்து வெளியே ஓடினான். டாபியின் வலி மிகுந்த ஊளைச் சத்தம் அடுத்த முனையில் கேட்டது. இந்தத் திட்டம் வேலை செய்யுமா என்று வியந்து கொண்டே அவன் தன்னுடைய ஒரு காலணியைக் கழற்றி, அக்காலில் இருந்த அழுக்கான, நாற்றமடித்துக் கொண்டிருந்த காலுறையை உருவி அதனுள் அந்த நாட்குறிப்புப் புத்தகத்தைத் திணித்தான். பின் அந்த இருண்ட தாழ்வாரத்தின் வழியாக அவன் ஓடினான்.

மாடிப்படிகளின் மேலே அவன் அவர்களைப் பிடித்துவிட்டான்.

சறுக்கிக் கொண்டே அங்கு வந்து சேர்ந்த ஹாரி, "லூசியஸ் அவர்களே," என்று மூச்சு வாங்க அவரை அழைத்தான். "இதை நான் உங்களிடம் கொடுக்க விரும்புகிறேன்."

Scanned by CamScanner

பின் அவன் அந்த நாற்றமெடுத்தக் காலுறையை அவரது கையில் திணித்தான்.

"என்ன இழவு இது?"

லூசியஸ் அந்த காலுறையைக் கிழித்து அதனுள் இருந்த நாட்குறிப்புப் புத்தகத்தை வெளியே எடுத்துவிட்டு, அந்தக் காலுறையைத் தூக்கி எறிந்தார். பிறகு, பாழாக்கப்பட்டிருந்த அந்த நாட்குறிப்புப் புத்தகத்தின்மீதிருந்து தனது கோபப் பார்வையை விலக்கி அதை ஹாரியின்மீது நிலைக்கச் செய்தார்.

"ஹாரி பாட்டர், வெகு விரைவில், உன்னுடைய பெற்றோர்களுக்கு நேர்ந்த அதே கதிதான் உனக்கும் நேரப் போகிறது," என்று அவர் கூறினார். "அவர்களும் உன்னைப் போலவே தேவையில்லாத விஷயங்களில் தங்களுடைய மூக்கை நுழைத்தவர்கள்தான்."

அவர் அங்கிருந்து போவதற்காகத் திரும்பினார்.

"டாபி, வா! நான் 'வா' என்று சொன்னேன்!"

ஆனால் டாபி தான் இருந்த இடத்தைவிட்டு அசையவில்லை. குடலைப் பிரட்டும் நாற்றமடித்த, பிசுபிசுப்பான, அழுக்கான, ஹாரியின் அந்தக் காலுறையை அது தன் கையில் வைத்துக் கொண்டிருந்தது. அக்காலுறை ஏதோ விலை மதிக்க முடியாத ஒரு பொக்கிஷம் என்பதுபோல டாபி அதையே பார்த்துக் கொண்டிருந்தது.

"டாபிக்கு அதன் எஜமான் ஒரு காலுறையைக் கொடுத்திருக்கிறார்," என்று அந்த எல்ஃப் வியப்புடன் கூறியது. "என் எஜமான் எனக்குக் கொடுத்திருக்கிறார்!"

"என்ன?" என்று லூசியஸ் வெடித்தார். "நீ என்ன சொன்னாய்?"

டாபி, நம்ப முடியாமல், "டாபிக்கு ஒரு காலுறை கிடைத்துள்ளது," என்று கூறியது. "எஜமான் அதை எறிந்தார், டாபி அதைப் பிடித்துக் கொண்டது. **இப்போது டாபி சுதந்திரம் பெற்றுவிட்டது!"**

லூசியஸ் அந்த எல்ஃபையே பார்த்துக் கொண்டு உறைந்து போய் நின்றார். பின் அவர் ஹாரியின்மீது பாய்ந்தார்.

"உருப்படாத பயலே, உன்னால் நான் என்னுடைய வேலைக்காரனை இழந்துவிட்டேன்!"

அப்போது டாபி கத்தியது. "நீங்கள் ஹாரி பாட்டரின்மீது கை வைக்காதீர்கள்!"

ஒரு பெரிய வெடிச் சத்தம் கேட்டது. லூசியஸ் பின்னால் தூக்கியெறியப்பட்டார். அவர் மூன்று மூன்று படிகளாக உருண்டு ஒரு குவியலாகக் கீழே போய் விழுந்தார். பின் எழுந்து நின்றார். அவரது முகம் கோபத்தில் கொதித்துக் கொண்டிருந்தது. அவர் தன் மந்திரக்கோலை உருவினார். ஆனால் டாபி அச்சுறுத்தும் விதமாகத் தன் நீண்ட விரலை அவரை நோக்கி நீட்டியது.

Scanned by CamScanner

டாபி லூசியஸை நோக்கி, "நீங்கள் இப்போது போகலாம்," என்று உக்கிரமாகக் கூறியது. "நீங்கள் ஹாரி பாட்டரைத் தொடக்கூடாது. இப்போது இங்கிருந்து போய்விடுங்கள்."

லூசியஸுக்கு வேறு வழி இருக்கவில்லை. கடைசி முறையாக அவர் அவர்கள் இருவரையும் எரித்துவிடுவதுபோலப் பார்த்துவிட்டு, தன்னுடைய அங்கியைத் தன்னைச் சுற்றிப் போட்டுக் கொண்டு அங்கிருந்து வேகமாக வெளியேறினார்.

டாபி ஹாரியை உற்றுப் பார்த்தவாறு, "ஹாரி பாட்டர் டாபியை விடுவித்துவிட்டார்!" என்று கீச்சிட்டது. அதனுடைய கோள வடிவக் கண்கள் பக்கத்து சன்னலில் இருந்து வந்த நிலவொளியைப் பிரதிபலித்தன. "ஹாரி பாட்டர் டாபியை விடுதலை செய்துவிட்டார்!"

ஹாரி வாயெல்லாம் பல்லாக, "என்னால் செய்ய முடிந்த சிறு உதவி," என்று கூறினான். "பதிலுக்கு என்னுடைய உயிரைக் காக்க மீண்டும் முயற்சிக்க மாட்டேன் என்று நீ எனக்கு வாக்குக் கொடுத்தால் போதும்."

அந்த எல்ஃபின் அவலட்சணமான பழுப்பு நிற முகத்தில், முழுப்பற்களையும் வெளிப்படுத்திய அகலமான புன்னகை ஒன்று வெடித்தது.

நடுங்கிக் கொண்டிருந்த தன்னுடைய கைகளால், டாபி, ஹாரியின் காலுறையை நீவிவிட்டுக் கொண்டிருந்தபோது, ஹாரி அதனிடம், "டாபி, நான் உன்னிடம் ஒரே ஒரு விஷயத்தைப் பற்றி மட்டும் கேட்டாக வேண்டும்," என்று கூறினான். "இதற்கும் பெயர் சொல்லப்படக்கூடாதவனுக்கும் எந்தவிதத் தொடர்பும் கிடையாது என்று நீ என்னிடம் கூறியிருந்தது உனக்கு நினைவிருக்கிறதா? ஆனால் –"

"சார், நான் உங்களுக்கு ஒரு துப்புக் கொடுத்தேன்," என்று டாபி கூறியது. அது ஏதோ சாதாரணமாகக் கண்டுபிடிக்கப்படக்கூடிய ஒன்றுதான் என்பதுபோல அதன் கண்கள் விரிந்தன. "அந்தக் கொடூரமான மந்திரவாதி, தன் பெயரை மாற்றிக் கொள்வதற்கு முன்பு, எளிதாகப் பெயர் சொல்லப்படக்கூடியவனாகத்தானே இருந்தான்? இப்போது உங்களுக்குப் புரிகிறதா?"

"சரிதான்," என்று ஹாரி பலவீனமாகக் கூறினான். "நான் இங்கிருந்து கிளம்புவது நல்லது. எனக்காக ஒரு விருந்து காத்துக் கொண்டிருக்கிறது. இந்நேரத்திற்கு என் தோழி ஹெர்மயனியும் கண்விழித்திருப்பாள் . . . "

டாபி தன் கைகளால் ஹாரியின் இடுப்பைச் சுற்றி அவனைக் கட்டிப் பிடித்தது. "ஹாரி பாட்டர் டாபி நினைத்திருந்ததைவிடவும் மகத்துவமானவர்!" என்று கூறி அது தேம்பியது. "ஹாரி பாட்டர், நான் விடைபெறுகிறேன்!"

ஒரு பலத்தச் சத்தத்துடன் டாபி அங்கிருந்து மறைந்தது.

* * *

Scanned by CamScanner

ஹாரி ஹாக்வார்ட்ஸில் இதுவரை பல விருந்துகளில் கலந்து கொண்டிருந்திருக்கிறான். ஆனால் எதுவும் இதைப்போல இருந்ததில்லை. எல்லோரும் தங்களுடைய பைஜாமாக்களில் இருந்தனர். கொண்டாட்டம் இரவு முழுவதும் நீடித்தது. அங்கு நிகழ்ந்தவற்றிலேயே எது மிகவும் சிறப்பாக இருந்தது என்பதை ஹாரியால் தீர்மானிக்க முடியவில்லை. "நீ பிரச்சனையைத் தீர்த்துவிட்டாய்! நீ பிரச்சனையைத் தீர்த்துவிட்டாய்!" என்று கத்திக் கொண்டே ஹெர்மயனி ஓடி வந்ததா? அல்லது ஜஸ்டின் தன்னுடைய ஹஃபில்பஃப் பெஞ்சிலிருந்து வேகவேகமாக ஓடி வந்து தனது கையைப் பிடித்துக் குலுக்கோ குலுக்கென்று குலுக்கி, தன்னைச் சந்தேகித்ததற்காக மீண்டும் மீண்டும் தன்னிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டதா? அல்லது மூன்று மணிக்கு அங்கு வந்து சேர்ந்த ஹாக்ரிட் தன்னுடைய பிரம்மாண்டமான கைகளால் தனது தோளையும் ரானின் தோளையும் அழுத்தியதில், தாங்கள் தங்கள் முன்னால் இருந்த கேக்கின்மீது போய் விழுந்ததா? அல்லது தானும் ரானும் சேர்ந்து கிரிஃபின்டார் அணிக்கு நானூறு புள்ளிகளை ஈட்டிக் கொடுத்ததன் மூலம் தொடர்ந்து இரண்டாம் முறையாகத் தங்களது அணி ஹாக்வார்ட்ஸ் பள்ளிக் கோப்பையைக் கைப்பற்றுவதைச் சாத்தியம் ஆக்கியதா? அல்லது பேராசிரியர் மெக்கானகல், பள்ளியின் பரிசாக, அந்த வருடத் தேர்வுகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டுவிட்டதாக அறிவித்ததா? ('ஐயோ!' என்று ஹெர்மயனி கூச்சலிட்டாள்) அல்லது பேராசிரியர் லாக்ஹார்ட், தான் இழந்திருந்த தன்னுடைய ஞாபக சக்தியைத் திரும்பப் பெறுவதற்காகச் சென்றிருந்ததால், துரதிர்ஷ்டவசமாக, அடுத்த வருடம் அவரால் பள்ளிக்கு வர முடியாது என்று டம்பிள்டோர் அறிவித்ததா? இச்செய்திக்குக் கிடைத்த பலத்தக் கரகோஷத்தில் ஒருசில ஆசிரியர்களும் சேர்ந்து கொண்டனர்.

ரான் ஒரு 'ஜாம் டோனட்' இனிப்பைக் கையில் எடுத்துக் கொண்டு, "வெளியே சொல்லவே வெட்கமாக இருக்கிறது," என்று கூறினான். "எனக்கு அதற்குள்ளாகவே அவரைத் தேடுகிறது."

* * *

மிச்சமிருந்த பள்ளிப் பருவம் வெகு வேகமாக ஓடி மறைந்தது. ஹாக்வார்ட்ஸ் ஒருசில வித்தியாசங்களைத் தவிரப் பழைய நிலைக்குத் திரும்பியிருந்தது. தீய மந்திர சக்திகளுக்கு எதிரான பாதுகாப்பு வகுப்புகள் ரத்து செய்யப்பட்டன ('ஆனால் அதில்தான் நமக்கு ஏற்கனவே ஏகப்பட்டப் பயிற்சி அனுபவம் கிடைத்துவிட்டதே' என்று ரான், அதிருப்தியுடன் இருந்த ஹெர்மயனியிடம் கூறினான்). லூசியஸ் மால்ஃபாய், பள்ளியின் நிர்வாகக் குழு உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருந்தார். பள்ளியையே தான் விலைக்கு வாங்கியிருந்ததுபோல மால்ஃபாய் இனியும் நடந்து கொள்ளவில்லை. மாறாக, அவன் எப்போதும்

Scanned by CamScanner

ஆத்திரத்துடனும் சிடுசிடுவென்றும் காணப்பட்டான். அதே சமயம், ஜின்னி மறுபடியும் மகிழ்ச்சியாக வளைய வந்தாள்.

ஹாக்வார்ட்ஸ் எக்ஸ்பிரஸில் மாணவர்கள் அனைவரும் மீண்டும் தங்கள் வீட்டிற்குத் திரும்புவதற்கான வேளை சீக்கிரமாகவே வந்துவிட்டிருந்தது. ஹாரி, ரான், ஹெர்மயனி, ஃபிரெட், ஜார்ஜ், ஜின்னி ஆகியோருக்குத் தனியாக ஒரு ரயில்பெட்டி கிடைத்தது. பள்ளி விடுமுறையில் மாயாஜாலங்களில் ஈடுபட அவர்களுக்கு அனுமதி கிடையாது என்பதால், தங்களுக்குக் கிடைத்திருந்த கடைசி மணித்துளிகளை அவர்கள் முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டனர். 'வெடித்துச் சிதறும் ஸ்னாப்' சீட்டு விளையாட்டை அவர்கள் விளையாடினர். ஃபிரெட்டும் ஜார்ஜும் தங்களிடம் மீதமிருந்த ஃபிலிபஸ்டர் வாணவெடிகளைப் போட்டுக் காலி செய்தனர். மந்திரஜாலத்தின் மூலம் ஒருவரையொருவர் நிராயுதபாணியாக ஆக்கினர். ஹாரி அதில் கைதேர்ந்தவனாக ஆனான்.

அவர்கள் கிட்டத்தட்டக் கிங்ஸ் கிராஸ் ரயில் நிலையத்தை வந்தடைந்தபோது ஹாரிக்கு ஒரு விஷயம் நினைவிற்கு வந்தது.

"ஜின்னி, தான் செய்த ஏதோ ஒன்றை நீ யாரிடமும் கூறக்கூடாது என்று பெர்சி உன்னிடம் கேட்டுக் கொண்டது உனக்கு நினைவிருக்கிறதா? அவன் அப்படி என்னதான் செய்தான்?"

"ஓ, அதுவா?" என்று கேட்டுவிட்டு, ஜின்னி கிளுகிளுவென்று சிரித்தாள். "பெர்சிக்கு ஒரு காதலி கிடைத்திருக்கிறாள்."

ஃபிரெட்டின் கைகளில் இருந்த ஒரு கட்டுப் புத்தகங்கள் அவனது கைகளிலிருந்து நழுவின. அவை நேராக ஜார்ஜின் தலையின்மீது வந்து விழுந்தன.

"என்ன?"

"அது ரேவன்கிளா மாணவ அணித் தலைவியான பெனலோப் கிளியர்வாட்டர்," என்று ஜின்னி கூறினாள். "கடந்த கோடை விடுமுறை முழுவதும் அவன் அவளுக்குத்தான் கடிதம் எழுதிக் கொண்டிருந்திருக்கிறான். அவன் அவளைப் பள்ளியின் பல இடங்களில் ரகசியமாகச் சந்தித்துக் கொண்டிருந்தான். ஒரு நாள், காலியாக இருந்த ஒரு வகுப்பறையில் அவர்கள் இருவரும் முத்தம் கொடுத்துக் கொண்டிருந்ததை நான் பார்த்துவிட்டேன். அதனால்தான் அவள் தாக்கப்பட்டதும் அவன் மிகவும் மனமொடிந்து போனான்." பின் அவள் அவர்களைப் பார்த்து, "அவனை நீங்கள் கிண்டல் செய்ய மாட்டீர்களே?" என்று கேட்டாள்.

தனது பிறந்தநாள் முன்னதாகவே வந்துவிட்டது போன்ற ஒரு குதூகலமான பார்வையை வீசிய ஃபிரெட், "கனவில்கூட அப்படிச் செய்ய மாட்டேன்," என்று நமுட்டுச் சிரிப்புடன் கூறினான்.

"நானும் கண்டிப்பாக அவனைக் கேலி செய்ய மாட்டேன்," என்று ஜார்ஜ் சிரித்தபடியே கூறினான்.

Scanned by CamScanner

ஹாக்வார்ட்ஸ் எக்ஸ்பிரஸின் வேகம் படிப்படியாகக் குறைந்தது. பின் அது நின்றது.

ஹாரி தன்னுடைய இறகுப் பேனாவையும் தோல் காகிதத்தையும் கையில் எடுத்துக் கொண்டு, ரானையும் ஹெர்மயனியையும் நோக்கித் திரும்பினான்.

அவன் அந்தத் தோல் காகிதத்தில் இரு முறை எதையோ கிறுக்கி, அதை இரண்டாகக் கிழித்து அவர்கள் இருவரிடமும் கொடுத்துவிட்டு, ரானிடம், "இதைத் தொலைபேசி எண் என்று கூறுவார்கள்," என்று கூறினான். " ஒரு தொலைபேசியை எப்படிப் பயன்படுத்துவது என்பது பற்றிக் கடந்த விடுமுறையின்போது நான் உன் அப்பாவிடம் கூறியிருந்தேன். அதனால் அவருக்கு அதைப் பற்றித் தெரியும். இது என் பெரியப்பா டர்ஸ்லீ வீட்டின் தொலைபேசி எண். நீ இதில் என்னைக் கூப்பிடு. புரிகிறதா? அடுத்த இரண்டு மாதங்களையும் வெறுமனே டட்லீயிடம் மட்டும் பேசிக் கொண்டு என்னால் ஓட்ட முடியாது . . ."

அவர்கள் அனைவரும் ரயிலிலிருந்து இறங்கி, அங்கிருந்த மந்திரஜாலத் தடுப்புச் சுவரை நோக்கிக் கூட்டத்தோடு கூட்டமாகச் சென்று கொண்டிருந்தபோது, ஹெர்மயனி, ஹாரியிடம், "உன் பெரியம்மாவும் பெரியப்பாவும் உன்னைக் குறித்து கண்டிப்பாகப் பெருமைப்படப் போகிறார்கள்," என்று கூறினாள்.

"பெருமைப்படப் போகிறார்களா?" என்று ஹாரி கேட்டான். "உனக்குப் பைத்தியம்தான் பிடித்திருக்கிறது. நான் இறந்து போயிருக்கக்கூடிய சமயங்களில் எல்லாம் நான் தப்பித்து வந்துவிட்டது குறித்து உண்மையில் அவர்கள் கடும் கோபத்தில் இருப்பார்கள் . . ."

அவர்கள் ஒன்றாகச் சேர்ந்து அந்தத் தடுப்புச் சுவர் வழியாக மகுள்களின் உலகிற்குள் மீண்டும் காலெடுத்து வைத்தனர்.

Scanned by CamScanner

PSV குமாரசாமி

மொழிபெயர்ப்பாளர்

கவிஞர். மொழிபெயர்ப்பாளர், பதிப்பாளர். சுற்றுச்சூழல் ஆர்வலர். மலையேற்றப் பயிற்சியாளர். புகைப்படம் எடுப்பதில் அலாதி ஆர்வம் உடையவர். ஊர் சுற்றுவதில் ஏக விருப்பமுடையவர்.

தனக்குத் தெரிய வரும் நல்ல விஷயங்களை, அவற்றைத் தெரிந்து கொள்ள வாய்ப்பு இல்லாதவர்களுடன் பகிர்ந்து கொள்வதை லட்சியமாகக் கொண்டவர். மொழிபெயர்ப்பின்மீது நாட்டம் வந்ததற்கு இப்பின்னணிதான் காரணம்.

இவரது இருபத்தைந்து ஆண்டுகால மொழிபெயர்ப்பு அனுபவத்தில் எண்பதுக்கும் மேற்பட்ட நூல்கள், எண்ணற்றக் கட்டுரைகள் மற்றும் கவிதைகள் வெளிவந்துள்ளன. இலக்கியம், சுயமுன்னேற்றம், சுற்றுச்சூழல், பொருளாதாரம், அறிவியல் போன்ற துறைகள் அதில் அடங்கும்.

உலகின் பிற மொழிகளில் வெளிவரும் தலைசிறந்த நூல்கள் மற்றும் தகவல்கள், தமிழில் உடனுக்குடன், தமிழ் அறிந்த அனைவருக்கும் எளிதாய், மலிவாய்க் கிடைத்திடும் நாள் வெகுதூரத்தில் இல்லை என்று உறுதியாக நம்புகிறவர். அக்கனவு மெய்ப்பட இன்று பலர் களத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். தனக்கும் அதில் ஒரு சிறு பங்கு இருப்பதில் இவருக்குத் திருப்தி.

தற்போது இவர் தனது மனைவியுடனும் இரு குழந்தைகளுடனும் மும்பையில் வசித்து வருகிறார்.

Scanned by CamScanner